ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:



ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

# தத்வ த்ரயம்

# (மூன்று ப்ரகரணங்களும்)

## இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச்செய்த வ்யாக்யானம்

(மூலம், எளிய தமிழ்நடை)


நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)


www.namperumal.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:



ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

# தத்வ த்ரயம்

## (சித் ப்ரகரணம்)

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச்செய்த
வ்யாக்யானம்
(மூலம், எளிய தமிழ்நடை)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## தனியன்

1. ஸ்ரீசைலேச தயா பாத்ரம் தீபக்தியாதி குணார்ணவம்
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாத்ரம் முநிம்

**பொருள்** - (ஸ்ரீரங்கநாதன் அருளிச்செய்தது) திருமலையாழ்வாரின் கடாக்ஷத்திற்கு இலக்கானவரும், ஞானம் முதலான எண்ணற்ற குணங்களின் கடலாக விளங்குபவரும், உடையவரிடம் மிகுந்த அன்பு கொண்டவரும், அழகியமணவாளன் என்ற திருநாமம் கொண்டவரும் ஆகிய ஸ்வாமி மணவாளமாமுனிகளை நான் வணங்குகிறேன்.

## வ்யாக்யான அவதாரிகை

**மூலம்** - "அநாதிமாயயா ஸுப்த:" என்கிறபடியே அநாத்யசித்ஸம்பந்த நிபந்தனமான அஜ்ஞாநாந்தகாரத்தாலே அபிபூதராய், ஆத்ம ஸ்வரூபம் ப்ரக்ருதே பரமாய், ஜ்ஞாநாநந்த மயமாய், பகவதநந்யார்ஹ சேஷமாயிருக்கும்படியை அறியப் பெறாதே, "தேவோஹம், மநுஷ்யோஹம்" என்று ஜடமான தேஹத்திலே அஹம் புத்தியைப் பண்ணியும், தேஹாதிரிக்தாத்ம ஜ்ஞானம் பிறந்ததாகில் "ஈச்வரோஹமஹம் போகி" என்று ஸ்வதந்த்ர புத்தியைப் பண்ணியும், சேஷத்வ ஜ்ஞாநமுண்டாய்த்ததாகில் அப்ராப்த விஷயங்களிலே அத்தை விநியோகித்தும், இப்படி "யோந்யதா ஸந்தமாத்மாநம் அந்யதா ப்ரதிபத்யதே, கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மா பாப ஹாரிணா" என்கிறபடியே ஆத்ம ஸ்வரூபத்தில் அந்யதா ப்ரதிபத்தி ரூபமாய், அகில பாப மூலமான ஆத்மாபஹாரத்தைப் பண்ணி, அல்பாஸ்திரதவாதி தோஷ துஷ்டமான சப்தாதி போகைக தத்பரராய்; "விசித்ரா தேஹ ஸம்பத்திரீச்வராய நிவேதிதும், பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்த பாதாதி ஸம்யுதா" என்கிறபடியே கரணகளேபர விதுரமாய், போக மோக்ஷ சூந்யமாய், அசிதவிசேஷிதமாய்க் கிடக்கிற தசையிலே பரமதயாளுவான ஸர்வேச்வரன், ஸ்வசரணகமல ஸமாச்ரயணோபகரணமாகக் கொடுத்த சரீரத்தைக் கொண்டு தத் ஸமாச்ரயணத்தைப் பண்ணி யுஜ்ஜீவிக்கலாயிருக்க, அத்தைச் செய்யாதே "அந்நாள நீ தந்தவாக்கையின் வழியுழல்வேன்" என்கிறபடியே, அதின் வழியே போய், ஆறு நீஞ்சக் கொடுத்த

தெப்பத்தைக் கொண்டு அக்கரையேறலா யிருக்க நீர்வாக்காலே யொழுகிக் கடலிலே புகுவாரைப் போலே, ஸம்ஸார நிஸ்தரணத்துக் குடலானவற்றையும் ஸம்ஸரணத்துக்குடலாக்கி,

**விளக்கம்** - மாண்டுக்ய உபநிஷத் (2-2) - அநாதிமாயயா ஸுப்த: - எல்லையற்ற காலமாகத் தொடர்ந்து வரும் மாயை என்பதான ப்ரக்ருதியின் தொடர்பு காரணமாக ஜீவாத்மா உறங்கிய நிலையிலேயே உள்ளான் - என்பதற்கு ஏற்ப எல்லையற்ற காலமாக உள்ள அசித் வஸ்துக்களுடைய ஸம்பந்தத்தின் விளைவாக அறியாமை என்ற இருளில் ஈடுபட்டவர்களாக, "ஆத்மாவின் ஸ்வரூபம் என்பது இந்த அசித் வஸ்துக்களைக் காட்டிலும் வேறுபட்டது. அது ஞானம் மற்றும் ஆனந்தமயமாக உள்தாகும். அது பகவானுக்கு மட்டுமே வசப்பட்டது. அது அவனுக்கு மட்டுமே அடிமையானது" என்பது போன்ற விவரங்கள் ஏதும் அறியாதவர்களாக இந்த உலகினர் உள்ளனர். மேலும், "தேவோஹம் மநுஷ்யோஹம் - நான் தேவன், நான் மனிதன்'" என்பதாக, ஜடப்பொருளாக உள்ள இந்தச் சரீரத்தை, "நான்" என்பதான ஆத்மாவாக உணர்கிறார்கள். ஒரு சிலருக்கு ஆத்மாவானது சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டது என்று ஞானம் ஏற்பட்டாலும், "ஈச்வரோ அஹம் போகி - நானே ஈச்வரன், நானே இன்பத்தில் உள்ளவன்" என்று தங்களைக் குறித்து சுதந்திரமானவர்கள் என்ற எண்ணம் கொள்கிறார்கள். ஒரு சிலருக்குத் தாங்கள் சுதந்திரமானவர்கள் அல்லர் என்றும், பகவானுக்கே அடிமைப்பட்டவர்கள் என்றும் உள்ளதான ஞானம் ஏற்பட்டாலும், பகவான் அல்லாமல் இந்த உலகியல் விஷயங்களில் எப்போதும் ஈடுபட்டு நிற்கிறார்கள். இப்படியாக மஹாபாரதம் உத்யோகபர்வம் (41-34) - யோந்யதா ஸந்தமாத்மாநம் அந்யதா ப்ரதிபத்யதே, கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மா பாப ஹாரிணா - பகவானுக்கு மட்டுமே உடைமையானது என்றுள்ள இந்த ஆத்மாவாது தனக்கே உரியது என்று எண்ணியபடி, அனைத்து பாபங்களுக்கும் காரணமாக உள்ள "ஆத்மாவைக் களவு செய்தல்" என்பதைச் செய்கிறார்கள். அற்பமானதும், நிலையற்றதும், தோஷங்களுடன் கூடியதும் ஆகிய புலன் விஷயங்களில் ஈடுபட்டு நிற்கிறார்கள்.

ஸ்ரீவிஷ்ணுதத்வம் - விசித்ரா தேஹ ஸம்பத்திரீச்வராய நிவேதிதும், பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்த பாதாதி ஸம்யுதா - ஸர்வேச்வரனுக்கு அனைத்து கைங்கர்யங்களையும் செய்வதற்காகவே கைகால்களுடன் கூடியதான இந்த விசித்ரமான சரீரம் நமக்கு, முன்பே நான்முகனால் தரப்பட்டது - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ளதான உடல் உறுப்புகள் ஏதும் அற்றவர்களாக, இன்பம் மற்றும் மோக்ஷம் ஆகியவற்றை அனுபவிப்பதற்கு இயலாமல்,

அசித் பொருள்களுடன ஒன்றாகவே ப்ரளயகாலத்தில் அனைத்து ஆத்மாக்கள் உள்ளன. இதனைக் கண்டு வருந்தும் ஸர்வேச்வரன், தனது எல்லையற்ற கருணையின் விளைவாக, தனது தாமரை போன்ற திருவடிகளை இவை அனைத்தும் பற்றவேண்டும் என்பதற்கு உதவுவதற்காக, அவரவர்களுக்கு ஏற்ற சரீரங்களை அளிக்கிறான். அதனைக் கொண்டு கரையேற உதவுகிறான். ஆனால் அவ்விதம் சரீரங்களைப் பெற்ற பின்னர், அவனுடைய திருவடிகளை அண்டாமல், திருவாய்மொழி (3-2-1) - அந்நாள் நீ தந்த ஆக்கை வழி உழல்வேன் - என்பதற்கு ஏற்ப, சரீரத்தின் இன்ப துன்பங்களையே பெரிதும் மதித்தபடி, ஒரு ஆற்றைக் கடக்க அளிக்கப்பட்ட படகைக் கொண்டு அக்கரை சென்று சேராமல் அந்த நீர் போகும் வழியே சென்று ஸமுத்ரத்தில் கலப்பது போன்று, ஸம்ஸாரம் என்னும் ஸமுத்ரத்தைக் கடக்க உதவுகின்ற சரீரத்தை ஸம்ஸாரத்திலேயே ஈடுபடுவதற்குக் காரணமாக்குகிறார்கள்.

**வ்யாக்யானம் -** அநாத்யவித்யா ஸஞ்சித அநந்த புண்ய பாபரூப கர்மாநுகுணமாக "மாறி மாறிப் பல பிறப்பு"ம் பிறந்து, பிறந்த ஜந்மந்தோறும் துரந்த தாபத்ரய தவாநல தஹ்யமாநராய் இப்படி அநாதிகாலம் போரா நிற்கச் செய்தேயும், அதீதாநாகதமறியாமை யாலே, அதிலே ஒரு க்லேசமின்றிக்கே கர்ப்ப ஜந்ம பால்ய யௌவக வார்த்தக மரண நரக ரூபாவஸ்தா ஸப்தகத்தை ப்ராபித்து, து:க்க பரம்பரைகளை யநுபவித்து, இப்படி அநந்த க்லேச பாஜநமான ஸம்ஸார ஸாகரத்திலே அழுந்திக் கிடந்தலைகிற சேதநருடைய அநர்த்த விசேஷத்தை யநுஸந்தித்து, இவர்களுடைய உஜ்ஜீவநத்துக்கு க்ருஷி பண்ணிக் கொணடு போருகிற ஸர்வபூத ஸுஹ்ருத்தான ஸர்வேச்வரன்,

**விளக்கம்** – மேலும், எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ளதான அவித்யையின் ஸம்பந்தம் காரணமாக, எண்ணற்ற புண்ணியபாப கர்மங்களைச் செய்கிறார்கள். இதன் விளைவாக திருவாய்மொழி (2-6-8) - மாறி மாறி பல பிறப்பு – என்பதற்கு ஏற்ப பல பிறவிகள் எடுக்கிறார்கள். அவ்விதம் பிறந்த ஒவ்வொரு பிறவியிலும் மூன்றுவிதமான துன்பங்கள் என்னும் காட்டுத்தீயால் எரிக்கப்பட்டபடி உள்ளனர். இப்படியாக எல்லையற்ற காலங்கள் கழிகின்றன. இதுவரை கடந்து சென்ற காலமானது மீண்டும் திரும்புவதில்லை என்பது அறியாமல், அதன் காரணமாக எந்தவிதமான துக்கத்தையும் அடையாமல் கர்ப்பம், பிறப்பு, பால்யம், யௌவநம், வியோதிகம், மரணம், நரகம் என்பதான ஏழு வகையாக உள்ள நிலைகளை அடைகிறார்கள். அதனால் ஏற்படும் துன்பங்களைத் தொடர்ச்சியாக அனுபவிக்கிறார்கள். இப்படியாக அளவற்ற துன்பங்களுக்கு இருப்பிடமாக உள்ள ஸம்ஸாரம் என்ற ஸமுத்திரத்தில் அழுந்தியபடி கிடத்து அலையும் சேதநர்கள் அடையும் இன்னல்களை ஸர்வேச்வரன் எண்ணிப்

பார்க்கிறான். இவர்களுடைய கரையேறுதல் என்பதற்காக எப்போதும் முயற்சிகள் எடுத்தபடி, அனைத்திற்கும் நண்பனாக அவன் உள்ளான்.

**வ்யாக்யானம்** - "ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்த்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:, ஜீவே துக்காகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயகே" என்கிறபடியே, தன்னுடைய திருவுள்ளத்திற் பிறந்த அபாரகாருண்யத்தாலே, "ஜாயமாநம் ஹி புருஷம் யம பச்யேந் மதுஸூதந: ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த சிந்தக:" என்கிறபடியே, ஜாயமாந காலத்திற் பண்ணின விசேஷ கடாக்ஷத்தாலே, நிரஸ்த ரஜஸ் தமஸகனாய், ப்ரவ்ருத்த ஸத்வ குணகனாய் முமுக்ஷுவான சேதநனுக்கு தத்வ ஜ்ஞாநம் பிறந்தாலல்லது மோக்ஷ ஸித்தியில்லாமையாலே, தத்வ ஜ்ஞாநம் ஸம்பாத்யமாமளவில், அது சாஸ்த்ர ஜந்யமாதல், உபதேசகம்யமாதலாக வேண்டுகையாலும்; சாஸ்த்ர ஜந்யமாமளவில் "சாஸ்த்ர ஜ்ஞாநம் பஹுக்லேசம்" என்கிறபடியே, பஹுக்லேச ஸாத்யமாகையாலே துஸ்ஸாதமாகையாலும், வருந்தி ஸாதிக்கப் பார்த்ததாலும் "அநந்தபாரம் பஹுவேதி தவ்யம் அல்பச்ச காலோ பஹுவச்ச விக்நா:" என்கிறபடியே, சேதநர் மந்தமதிகளுமாய், மந்தாயுஸ்ஸுக்களுமாய், அதுக்கு மேலே விக்நங்களும் அநந்தங்களாயிருக்கையாலே எல்லார்க்குமொக்க ஸித்திக்கை யரிதாகையாலும்; இனித்தான சாஸ்த்ராப்யாஸத்துக்கு அநதிகாரிகளான ஸ்த்ரீ சூத்ராதிகளுக்கு முமுக்ஷுத்வமுண்டானாலும் நிஷ்ப்ரயோஜநமாம்படி யிருக்கையாலும்; உபதேசகம்யமாமளவில, உக்த தோஷமொன்று மில்லாமையாலும்; இந்த விசேஷத்தைத் திருவுள்ளம்பற்றி, ஸகல சாஸ்த்ர நிபுணராய் ஸகல சேதநோஜ் ஜீவநகாமராய், பரமகாருணிகரான பிள்ளை லோகாசார்யர், ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணாதிகளிலே துரவகாஹமாம்படி பரக்கச் சொல்லப்படுகிற சிதசிதீச்வர தத்வங் களினுடைய ஸ்வரூப ஸ்வபாவ விசேஷங்களை, அகில சேதநர்க்கும ஸுக்ரஹமாகவும் ஸுவ்யக்தமாகவும் இப்ப்ரபந்தமுகேந வருளிச் செய்கிறார்.

**விளக்கம்** – அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (14) - ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்த்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:, ஜீவே துக்காகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயகே – இப்படியாக ஸம்ஸாரம் என்ற சக்கரத்திலிருந்தபடி, தங்களுடைய ஆழ்ந்த வினைகளால் சுழன்றபடி துன்பத்தில் கலங்கி நிற்கும் ஜீவாத்மா குறித்து மஹாவிஷ்ணுவிற்கு கருணை ஏற்படுகிறது - என்பதற்கு ஏற்ப அவர்கள் மீது எல்லையற்ற கருணையானது தாராளமாகப் பிறக்கிறது. மஹாபாரதம் மோக்ஷபர்வம் (349-72) - ஜாயமாநம் ஹி புருஷம் யம பச்யேந் மதுஸூதந: ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த சிந்தக: - யார் ஒருவன் பிறக்கும்

போதே அவனை மதுஸூதநன் பார்க்கிறானோ, அவன் ஸத்வகுணங்கள் நிறைந்த, மோக்ஷம் குறித்து சிந்திக்கிறான் - என்பதற்கு ஏற்ப, பிறக்கும்போதே ஸர்வேச்வரன் ஒருவிதமான சிறப்பான கடாக்ஷத்தை அருள்கிறான். இதன் விளைவாக, அனைத்து விதமான ரஜஸ் மற்றும் தமஸ் குணங்கள் ஏதும் இன்றி, ஓங்கி வளர்ந்தபடி உள்ள ஸத்வகுணம் பெற்று, மோக்ஷத்தில் ஆர்வம் கொண்டவனாக ஒருவன் விளங்கக்கூடும். ஆனால் அவனுக்கு உண்மையான ஞானம் ஏற்பட்டால் அல்லாமல், மோக்ஷம் கிட்டுவதில்லை. ஆகவே அத்தகைய உண்மையான ஞானத்தைப் பெறுவதற்கு அவன் முயல்கிறான். ஆனால் அத்தகைய ஞானமோ சாஸ்த்ரங்கள் அல்லது உபதேசம் மூலம் மட்டுமே பெறத்தக்கதாக உள்ளது. ஆனால், சாஸ்த்ர ஞானம் என்பது உத்தவகீதை - சாஸ்த்ர ஜ்ஞாநம் பஹுக்லேசம் – சாஸ்த்ரம் மூலம் பெற வேண்டிய ஞானம் மிகுந்த துன்பத்திற்கு பின்னரே கிட்டும் - என்று கூறுவதற்கு ஏற்ப, மிகுந்த துன்பத்திற்குப் பின்னரே அடையப்படுவதாக உள்ளது; அதனையும் கடந்து, அத்தகைய சாஸ்த்ர ஞானத்தை அடைய முயற்சித்தாலும், அநந்தபாரம் பஹுவேதி தவ்யம் அல்பச்ச காலோ பஹுவச்ச விக்நா: - சாஸ்த்ரங்கள் எல்லையற்றவை, அறியவேண்டிய விஷயங்கள் எண்ணற்றவை, ஆனால் காலமோ மிகவும் குறுகியது, தடைகளோ பல உள்ளன - என்பதற்கு ஏற்ப, சேதநர்களுடைய மதியானது மந்தமாக உள்ளதாலும், குறைவான ஆயுளே உள்ளதாலும், எண்ணற்ற தடைகள் காணப்படுவதாலும், எல்லாருக்கும் ஒரே போன்று சாஸ்த்ர ஞானம் கிட்டுவதில்லை. மேலும் சாஸ்த்ரங்களைக் கற்பதற்கான தகுதி இல்லாதவர்களாகிய பெண்கள் போன்றவர்களுக்கு, மோக்ஷத்தில் விருப்பம் ஏற்பட்டாலும், அத்தகைய விருப்பமான பயனற்றே போகிறது. உண்மையான ஞானத்தை உபதேசம் மூலம் அடையலாம் என்று முயற்சி செய்யும்போது, அத்தகைய முயற்சியில் மேலே கூறப்பட்ட தடைகள் ஏதும் இல்லை. இதனைத் திருவுள்ளம் கொண்டவரும், அனைத்து சாஸ்த்ரங்களையும் நன்றாக அறிந்தவரும், அனைத்து சேதநர்களையும் கரையேற்றவேண்டும் என்ற விருப்பம் கொண்டவரும், மிகுந்த கருணை உள்ளவரும் ஆகிய ஸ்வாமி பிள்ளைலோகாசார்யார் செய்தது என்னவென்றால் : ச்ருதிகள், ஸ்ம்ருதிகள், இதிகாசங்கள், புராணங்கள் போன்றவற்றில், மிகவும் கடினமான விதத்தில் கூறப்படுகின்ற “சித், அசித், ஈச்வரன்” என்னும் தத்வங்களுடைய ஸ்வரூபம் மற்றும் இயல்பு ஆகியவற்றின் சிறப்புக்களை, அனைத்து சேதநர்களும் எளிதாக அறியலாம்படி சுருக்கமாகவும், தெளிவாகவும் இந்த நூலில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** நடுவில்திருவீதிப்பிள்ளை பட்டர், ஆச்சான்பிள்ளை முதலான பூர்வாசார்யர்களுடைய ப்ரபந்த நிர்மாணத்துக்கும் கருத்திதுவிறே. நிரஹங்காரராய், பரஸம்ருத்தி ப்ரியராய், க்யாதிலாபாதி நிரபேக்ஷராயிருக்கிறவர்கள் பலரும் ப்ரபந்தமிட வேண்டுவானென்? ஒருவரிட்ட ப்ரபந்தத்தை மற்றுமுள்ளவர்கள் பரிபாலநம் பண்ண வமையாதோ? என்னில்; ஆழ்வார்கள் பலரும் ஏககண்ட்டராயருளிச் செய்கையாலே அர்த்தத்துக்கு ஆப்ததை ஸித்தித்தாப்போலே, ஆசார்யர்கள் பலரும் ஏககண்டமாக அருளிச்செய்த அர்த்தமென்று மந்தமதிகளும் விச்வஸிக்கைக்காக. இன்னமும் ஓரொன்றில் அவிசதமான அர்த்த விசேஷங்கள் ஓரொன்றிலே விசதமாயிருக்கும்; அதுக்கடி ஸூக்தி விசேஷங்களும், ஸங்கோச விஸ்தரங்களும். இது ஏக கர்த்ருகங்களான ப்ரபந்த விசேஷங்களுக்குமொக்கும்.

**விளக்கம்** – ஆனால் நடுவில் திருவீதிப்பிள்ளை, பட்டர், ஆச்சான்பிள்ளை போன்ற பல பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த ப்ரபந்தங்களுடைய மூலக் கருத்து இதுவேயாக உள்ளது. இப்படி உள்ளபோது, அஹங்காரம் அற்றவர்களாக, மற்றவர்களுடைய வாழ்க்கை என்பதையே பெரிதும் விரும்புபவர்களாக, புகழ் மற்றும் பொருள் முதலானவற்றில் எதிர்பார்ப்பு அற்றவர்களாக உள்ள இவர்கள் பலரும் தனித்தனியே ஏன் ப்ரபந்தம் செய்யவேண்டும்? ஒருவர் செய்தருளிய ப்ரபந்தத்தைப் பாதுகாத்தபடி இருந்தால் போதுமானது அல்லவோ என்று சந்தேகம் ஏற்படலாம். இது ஏனென்றால், ஆழ்வார்கள் அனைவரும் ஒரே போன்று சிந்தனை கொண்டவர்களாக இருந்து அருளிச்செய்த ஆழ்பொருளானது, அனைவருடைய நம்பிக்கைக்கும் பாத்ரமாக உள்ளது; இதே போன்று பல ஆசார்யர்களும் ஒரே சிறப்பையே அருளிச்செய்துள்ளனர் என்பது, குறைந்த புத்தி கொண்டவர்கள் உணர்வதற்காகவே ஆகும். மேலும் ஒருவர் அருளிச்செய்த ப்ரபந்தத்தில் சுருக்கமாகக் காணப்படும் சில விஷயங்கள், மற்றொருவர் அருளிச்செய்த ப்ரபந்தத்தில் விரிவாகக் காணப்படும்; இதன் காரணம், அவர்களுடைய ப்ரபந்தங்களில் உள்ள சொற்களுடைய சிறப்பு, விரிவாகவும் சுருக்கமாகவும் உரைக்கும் தன்மைகள் போன்றவையே ஆகும். இந்த நிலையானது ப்ரபந்தங்கள் இயற்றிய அனைவருக்குமே பொருந்தும் என்று அறியவேண்டும்

வ்யாக்யான அவதாரிகை ஸம்பூர்ணம்

1. முமுக்ஷுவான சேதநனுக்கு மோக்ஷமுண்டாம்போது தத்வத்ரய ஜ்ஞாநமுண்டாக வேணும்.

**வ்யாக்யானம் -** "முமுக்ஷுவான சேதநனுக்கு மோக்ஷமுண்டாம்போது தத்வத்ரய ஜ்ஞாந முண்டாகவேணும்"; முமுக்ஷுவாகிறான் மோக்ஷத்தில் இச்சையுடையவன். ஸம்ஸார விமோசநத்தில் இச்சையுடையவனென்றபடி. "முமுக்ஷுவான" என்கையாலே, ஸம்ஸார நிவ்ருத்தியில் இச்சை ஒருவனுக்குண்டாகையிலுள்ள அருமை தோற்றுகிறது. இந்த இச்சை பிறவாமையிறே அநாதிகாலம் ஸம்ஸரித்தது. உஜ்ஜிஜீவயிஷுவான ஸர்வேச்வரனும் இந்த இச்சை பிறக்குமளவுமிறே பார்த்திருக்கிறது. ஸம்ஸாரத்தைப் பூண்கட்டிக் கொள்ள இச்சிக்கக் கடவ ஆத்மாவுக்கு தந்நிவ்ருத்தியில் இச்சை பிறக்கை துர்லபமிறே. இப்போது இவர், "சேதநன்" என்றதும் ஸாபிப்ராயம். அதாவது, சைதந்ய ப்ரயோஜநமுண்டாகத் தொடங்குகிறதும் இப்போதென்கை. அநாதிகாலம் வ்யர்த்தமே போய்த்ததித்தனையிறே சைதந்யம்; அதாவது, உஜ்ஜீவநத்துக்கு உறுப்பாகாமை. இனித்தான் ஸம்ஸார நிவ்ருத்தியை இச்சிக்கிறது, நிரஸ்தாதிசய ஆஹ்லாத ஸுக பாவைக லக்ஷணையான பகவத் ப்ராப்திக்கு உறுப்பாகவிறே. தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமதிறே யுணர்வாவது. ஆத்மப்ராப்திக்கு உறுப்பாக ஸம்ஸார நிவ்ருத்தியை இச்சித்தாலும் விபரீத ஜ்ஞாந கார்யமாமித்தனை. ஆகையால், பகவத் ப்ராப்திக்கு விரோதியான ஸம்ஸாரத்தினுடைய விமோசனத்தில் இச்சையுடையவனான அதிகாரிக்கு, அப்படியிருந்துள்ள மோக்ஷமாகிற புருஷார்த்தம் ஸித்திக்கும்போது தத்வ த்ரய ஜ்ஞாநமுண்டாக வேணுமென்கை.

**விளக்கம்** -மோக்ஷத்தில் விருப்பம் உள்ளவன் முமுக்ஷு எனப்படுகிறான். அதாவது ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை பெறுவதில் ஆசை கொண்டவன் என்று பொருள். முமுக்ஷு என்று கூறுவதன் மூலம், ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற ஆசை ஏற்படுவதில் ஒருவனுக்கு உள்ள கடினம் புலப்படுகிறது. இத்தகைய ஆசை ஏற்படாத காரணத்தால்தான் ஒருவன் எல்லையற்ற காலமாக ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ளான். ஒருவனைக் கரையேற்றுவதில் தனது எண்ணத்தை எப்போதும் கொண்டுள்ள ஸர்வேச்வரன் கூட, இத்தகைய ஆசை ஒருவனுக்குப் பிறக்கவேண்டும் என்பதற்காகவே காத்திருக்கிறான். ஸம்ஸாரத்தில் மிகவும் விருப்பமாகப் பிடித்தபடி இருப்பதற்கு ஆசை கொள்ளும் ஒருவன், தனது ஆத்மாவை அதிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கு விரும்புதல்

என்பது மிகவும் அரியதே ஆகும். "சேதநன் - அறிவுள்ளவன்" என்று இங்கு சூர்ணையில் கூறப்பட்டதும் ஒருவிதமான கருத்தைத் திருவுள்ளத்தில் கொண்டே ஆகும். அது என்ன என்பதைக் கூறுவோம். அதாவது, "அறிவின் பயன் ஏற்படத்தொடங்குதல் என்பது இப்போது", என்று கருத்து. எல்லையற்ற காலமாக இந்த அறிவு என்பது வீணாகவே கிடந்துள்ளது; அதாவது, ஸம்ஸாரத்திலிருந்து கரையேறுவதற்குப் பயன்படாமல் கிடந்துள்ளது. ஆனால் இப்போதுதான் ஸம்ஸாரம் விலகுதல் என்பதைக் குறித்து விரும்புகிறது; ஏனென்றால், எல்லையற்ற ஸுகத்தை அளிக்கவல்லதான "பகவானை அடைதல்" என்னும் நிலைக்கு அடிப்படையாக உள்ளதால் ஆகும். உண்மையான ஞானம் என்பது, மஹாலக்ஷ்மியின் நாயகனை ஒருவனை மட்டுமே நோக்குவது ஒன்றே ஆகும். ஆத்ம அனுபவம் என்பதான கைவல்யத்தை விரும்புவதால் இந்த ஸம்ஸார விலகுதல் என்பதை எதிர்நோக்குவதும் கூட விபரீதமான ஞானமே ஆகும். எனவே பகவானை அடைதல் என்பதற்குத் தடையாக உள்ள ஸம்ஸாரத்திலிருந்து விடுபடவேண்டும் என்ற ஆசை கொண்ட ஒருவனுக்கு, அவ்விதமாகவே அமைந்துள்ள மோக்ஷம் என்ற ஒரு புருஷார்த்தம் கிட்டும்போது தத்வ த்ரயம் குறித்த ஞானம் ஏற்படவேண்டும்.

**வ்யாக்யானம் -** தத்வ ஜ்ஞாநோத்பத்திக்கு முன்னே முமுக்ஷை ஜநிக்கக்கூடுமோவென்னில்; "பரீக்ஷ்ய லோகாந்", "ஜாயமாநம்" இத்யாதி ச்ருதி ஸ்ம்ருதிகளிற் சொல்லுகிற ப்ரகரியையாலே கூடும். "உண்டாக வேணும்" என்று அவச்யாபேக்ஷிதத்வம் தோற்ற அருளிச்செய்கையாலே, "தத்வ ஜ்ஞாநாந் மோக்ஷ லாபம்" என்கிற நியமம் தோற்றுகிறது. "தத்வ ஜ்ஞாநாந் மோக்ஷம்" என்கிற இது ஸகல ஸித்தாந்த ஸாதாரணமிறே. மோக்ஷத்திலும் தத்வத்திலுமிறே விப்ரதிபத்தியுள்ளது. ஆனால், "ஜ்ஞாநாந் மோக்ஷம்" என்கிற நியமம் கொள்ளும்போது, "பசுர் மநுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவ ஸம்ச்ரயா:, தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத் விஷ்ணோ பரமம் பதம்", "யம் யம் ஸ்ப்ருசதி பாணிப்யாம் யம் யம் பச்யதி சக்ஷுஷா, ஸ்தாவராண்யபி முச்யந்தே கிம் புநர் பாந்தவா ஜநா" என்று ஜ்ஞாந யோக்யதையில்லாத திர்யக் ஸ்தாவரங்களுக்கும் வைஷ்ணவ ஸம்பந்தத்தாலே மோக்ஷ ஸித்தியைச் சொல்லுகிற வசனங்களுக்கு வையர்த்யம் வாராதோவென்னில், வாராது. அவற்றுக்கு முமுக்ஷுத்வம் தானும் இல்லையிறே. இங்கு, முமுக்ஷுவான சேதநனுக்கிறே மோக்ஷ ஸித்திக்கு தத்வ ஜ்ஞாநமுண்டாக வேணுமென்கிறது. அங்குத் தானும் முமுக்ஷுத்வமும் தத்வ ஜ்ஞாநமும் இரண்டும் இவற்றின் பக்கலின்றிக்கேயிருக்கச் செய்தேயும், இவையிரண்டாலும் பூர்ணனாயிருப்பானொரு வைஷ்ணவனுடைய அபிமாநமேயிறே கார்யகரமாகச் சொல்லுகிறது. ஆகையாலே அபிமாநியானவனுடைய

ஜ்ஞாந விசேஷத்தைக் கடாக்ஷித்தே, அபிமாநாந்தர்ப்பூதமான விவற்றுக்கும் ஈச்வரன் கார்யம் செய்கையாலே. தத்வ ஜ்ஞாநாந் மோக்ஷமென்கிறவிது அவ்விடத்திலும் ஸத்வாரகமாக ஸித்திக்கும். தத்வ ஜ்ஞாநமென்னாதே, தத்வ த்ரய ஜ்ஞானமென்கையாலே தத்வங்களை அதிகமாகவும் ந்யூநமாகவும் கொள்ளுகிற பாஹ்ய குத்ருஷ்டி மதங்கள் அர்த்தாத் ப்ரதிக்ஷிப்தங்கள்.

**விளக்கம்** - ஆனால், "தத்துவங்களைக் குறித்த ஞானம் ஏற்படுவதற்கு முன்பாகவே மோக்ஷம் குறித்த ஆசை ஒருவனுக்கு ஏற்படுமோ?", என்று கேட்கலாம். இதற்கு விடை அளிப்போம். முண்டக உபநிஷத் (1-2-12) – பரீக்ஷ்ய லோகாந் – புண்ணியம் போன்ற வினைகளால் கிட்டப்படும் உலகம் – என்றும், ஜாயமாநாம் – பிறக்கும்போதே - என்றும் உள்ள ச்ருதி ஸ்ம்ருதி வாக்கியங்களின்படி இத்தகைய நிலை கைகூடும். சூர்ணையில் "உண்டாக வேணும்" என்று அவசியமாக உள்ள ஒன்றாகக் கூறப்படுவதால், "தத்வ ஜ்ஞாநாந் மோக்ஷ லாபம் – தத்வம் குறித்த ஞானத்தால் மோக்ஷம் கிட்டுகிறது" என்னும் விதிமுறை உண்டாகிறது. "தத்வ ஜ்ஞாநாந் மோக்ஷம்" என்பது அனைத்து ஸித்தாந்தங்களிலும் பொதுவாகக் காணப்படும் கருத்து அல்லவோ? ஆனால் மோக்ஷம் மற்றும் தத்வம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் மட்டுமே ஸித்தாந்தங்களுக்கு இடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. ஆனால் "ஞானத்தால் மோக்ஷம்" என்று கொள்ளும்போது, பசுர் மநுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவ ஸம்ச்ரயா:, தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத் விஷ்ணோ பரமம் பதம் – பசு, மனிதன், பக்ஷி போன்றவைகளாக உள்ளபோதிலும், அவை ஒரு வைஷ்ணவனை அடைந்தால், அந்தத் தொடர்பு காரணமாகவே அவை விஷ்ணுவின் உயர்ந்த இடத்தை அடைகின்றன – என்றும், யம் யம் ஸ்ப்ருசதி பாணிப்யாம் யம் யம் பச்யதி சக்ஷுஷா, ஸ்தாவராண்யபி முச்யந்தே கிம் புநர் பாந்தவா ஜநா - ஒரு வைஷ்ணவன் எவற்றைத் தனது கைகள் கொண்டு தொடுகிறானோ, எவற்றைத் தனது கண்களால் காண்கிறானோ, அவைகள் தாவரங்களாக இருந்தாலும் மோக்ஷம் அடைகின்றன என்னும்போது, மற்ற மனிதர்கள் குறித்து தனித்து மீண்டும் உரைக்கவேண்டுமோ – என்றும் உள்ள வாக்கியங்களில், ஞானம் பெறுவதற்குத் தகுதி அற்றதான விலங்குகள் மற்றும் தாவரங்கள் ஆகியவற்றுக்கு வைஷ்ணவனுடைய ஸம்பந்தம் காரணமாக மோக்ஷம் உண்டாகிறது என்று கூறும் வாக்கியங்களுக்கு, இவை வீணாகப்போகும் என்ற நிலை ஏற்படாதோ என்று கேட்கலாம். இப்படி ஒரு நிலை ஏற்படாது. ஏனென்றால் அவற்றுக்கு மோக்ஷம் அடைவதில் விருப்பம் என்பது ஏற்படுவது

கிடையாது. இங்கு மோக்ஷத்தில் விருப்பம் கொண்ட சேதநன் ஒருவனுக்கே மோக்ஷம் பெறவேண்டும் என்பதற்காக தத்வஞானம் ஏற்படவேண்டும் என்றாகிறது. ஆனால் விலங்குகள் முதலானவை விஷயத்தில், அவற்றுக்கு மோக்ஷம் குறித்த விருப்பம் மற்றும் தத்வஞானம் ஆகிய இரண்டுமே இல்லை என்றாலும், இவை இரண்டும் பூர்ணமாக பெற்றுள்ள ஒரு வைஷ்ணவனுடைய ஸம்பந்தம் என்பதே மோக்ஷத்தை ஏற்படுத்தக் கூடியது என்று அல்லவோ கூறப்பட்டது? எனவே அவை எந்த ஒருவனுடைய ஸம்பந்தம் பெற்றுள்ளனவோ அவனுடைய ஞானத்தின் சிறப்பை நோக்கியே, அந்த ஸம்பந்தம் அடைந்துள்ள இவற்றுக்கு ஈச்வரன் மோக்ஷம் அளித்தல் என்ற செயலைச் செய்கிறான்; எனவே "ஞானத்தால் மோக்ஷம்" என்ற நிலையானது, விலங்குகள் முதலானவற்றின் விஷயத்திலும் ஏற்படுகிறது. ஆனால் "தத்வ ஞானம்" என்று கூறாமல், "தத்வ த்ரய ஞானம்" என்று உரைப்பதால், தத்வங்களை அதிகமாகவும் குறைவாகவும் கைக்கொள்ளுகின்ற வேதபாஹ்ய மதங்கள் அனைத்தும் தள்ளப்பட்டன.

**வ்யாக்யானம் -** இவர் தாம், தத்வ த்ரயமென்று நிர்ணயிக்கைக்கு ப்ரமாணமென? என்னில்; நிர்தோஷ ப்ரமாணமான வேதாந்தம், "போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா" என்று போக்த்ரு சப்தத்தாலும், போக்ய சப்தத்தாலும், ப்ரேரயித்ரு சப்தத்தாலும் சிதசிதீச்வர தத்வங்கள் மூன்றையுமிறே சொல்லுகிறது. ஆகையாலே, வேதாந்த ப்ரதிபாத்யம் தத்வத்ரயமுமே யென்று நிச்சயித்து, "மோக்ஷமுண்டாம்போது தத்வ த்ரய ஜ்ஞாநமுண்டாக வேணும்" என்கிறார்.

**விளக்கம் -** ஆனால் இங்கு இவர் தத்வங்கள் என்பது மூன்றுதான் என்று நிர்ணயம் செய்வதற்கான ப்ரமாணம் என்ன என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அளிப்போம். எந்தவிதமான தோஷங்களும் அற்றதான ப்ரமாணமாக வேதாந்தம் உள்ளது. இத்தகைய வேதாந்தத்தில், ச்வே. (1-12) - போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா - அனுபவிக்கும் சேதனன், அனுபவிக்கப்படும் வஸ்து, இதனை அனுபவிக்கும்படியாகச் செய்யும் ஸர்வேச்வரன் ஆகியவற்றை எண்ணியபடி - என்ற வாக்கியத்தில் "போக்த்ரு – அனுபவிப்பவன், போக்யம் – அனுபவிக்கப்படும் வஸ்து, ப்ரேரயித்ரு – அனுபவிக்கும்படிச் செய்பவன்" என்னும் சொற்கள் மூலம் சித், அசித் மற்றும் ஈச்வரன் ஆகிய மூன்றே கூறப்படுவதால் ஆகும். இதனால்தான் வேதாந்தம் மூலம்

வெளிப்படுகின்ற தத்வங்கள் மூன்றே ஆகும் எனத் தீர்மானித்து, "மோக்ஷம் உண்டாகும் போது தத்வத்ரயம் குறித்த ஞானம் ஏற்படவேண்டும்", என்கிறார்.

**வ்யாக்யானம் -** ஆனால், "தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி நாந்ய பந்த்தா அயநாய வித்யதே" என்று வேதாந்தங்கள் பகவத் தத்வ ஜ்ஞாநமொன்றுமே மோக்ஷ ஸாதநமென்னா நிற்க, தத்வாந்தர பரிஜ்ஞாநத்தையும் இவர் மோக்ஷ ஸாதநமாக அருளிச செய்வானென்? என்னில, பகவத் தத்வத்தை அறியும்போது ஸகல சேதநாசேதந விலக்ஷணமாகவும், இவற்றுக்குக் காரணமாகவும், வ்யாபகமாகவும், தாரகமாகவும், நியாமகமாகவும், சேஷியாகவும் அறியவேண்டுகையாலும், தத்வாந்தரங்களை யறியாதபோது இப்படி அறிய விரகில்லாமையாலும் "தத்வ த்ரய ஜ்ஞாநமுண்டாக வேணும்" என்னக் குறையில்லை. "போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா", "ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா ஜுஷ்டஸ் ததஸ் தேநாம்ருதத்வமேதி" என்கிற ச்ருதிக்கும் ஹ்ருதயம் இதுவிறே. இங்ஙனன்றாகில், "தமேவம் வித்வாந்" இத்யாதி ச்ருதியோடு இதற்கு விரோதம் வரும். ஆகையால், இந்த ச்ருதிச்சாயையாலே இவருமருளிச் செய்தாராகையாலே வேதாந்த விரோத ப்ரஸங்கமேயில்லை.

**விளக்கம் -** ஆனால், தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி நாந்ய பந்த்தா அயநாய வித்யதே – ஸர்வேச்வரனை அறிந்து கொண்டவன் இந்த உலகிலேயே முக்தன் ஆகிறான், மோக்ஷத்திற்கு வேறு பாதை இல்லை - என்ற வாக்கியம் மூலமாக, வேதாந்தங்கள் கூறுவது, "பகவத் தத்வ ஞானம் ஒன்றே மோக்ஷத்திற்கான ஸாதனம்" என்று கூறும்போது, மற்ற தத்வங்கள் குறித்த ஞனத்தையும் மோக்ஷ ஸாதநமாக இவர் ஏன் கூறுகிறார்? இதற்கு விடை அளிப்போம். பகவத் தத்வத்தை அறியும்போது, "அனைத்து சேதநம் மற்றும் அசேதனம் ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்டதாகவும், அவற்றுக்குக் காரணமாகவும், அவற்றுள் நிறைந்துள்ளதாகவும், அவற்றைத் தாங்குவதாகவும், அவற்றை நியமிப்பதாகவும், அவற்றின் எஜமானனாகவும் பகவத் தத்வமே உள்ளது" என்று அறியவேண்டும்; மற்ற தத்வங்களான சித் மற்றும் அசித் குறித்து அறியவில்லை என்றால், இவ்விதம் அறிவதற்கான வழியில்லை; இந்தக் காரணத்தினால், "மூன்று தத்வங்கள் குறித்து ஞானம் ஏற்படவேண்டும்", என்று கூறினார். மேலும் ச்வே. (1-12) - போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா - அனுபவிக்கும் சேதனன், அனுபவிக்கப்படும் வஸ்து, இதனை அனுபவிக்கும்படியாகச் செய்யும் ஸர்வேச்வரன் ஆகியவற்றை எண்ணியபடி -

என்றும், ச்வே. (1-6) – ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா ஜுஷ்டஸ் ததஸ் தேநாம்ருதத்வமேதி - ஜீவாத்மா மற்றும் பரமாத்மா ஆகிய இருவரும் வெவ்வேறு என்று தெளிந்து, அத்தகைய ஞானம் பெற்ற ஒருவனைக் குறித்து பரமாத்மா மகிழ்வதன் விளைவாக, அவனால் அன்புடன் ஏற்கப்படும் ஒருவன் மோக்ஷம் பெறுகிறான் - என்றும் உள்ள ச்ருதி வாக்கியங்களுடைய கருத்தும் இதுவே ஆகிறது. இவ்விதம் பொருள் கொள்ளவில்லையென்றால், “தமேவம் வித்வாந் - இவ்விதம் அறிந்த ஒருவன்” என்பதுடன் முரண்பாடு ஏற்படும். ஆகவே இந்த ச்ருதியின் நிழலிலேயே இவரும் அருளிச்செய்ததால், வேதாந்த விரோதம் ஏற்பட வாய்ப்பே இல்லை.

## 2. தத்வ த்ரயமாவது – சித்தும், அசித்தும், ஈச்வரனும்.

**அவதாரிகை -** தத்வத்ரயந்தான் ஏதென்னும் ஆகாங்க்ஷையிலே அருளிச் செய்கிறார் “தத்வ த்ரயமாவது சித்தும் அசித்தும ஈச்வரனும்” என்று.

**விளக்கம் -**“மூன்று தத்வங்கள் என்பவை எவை?”, என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் -** சித்தாவது சைதந்யாதாரமான வஸ்து. அசித்தாவது சைதந்ய அநாதாரமான வஸ்து. ஈச்வரனாகிறான் யோக வைசேஷிகாதி தந்தரத்திலுள்ளார் சொல்லுகிற கணக்கிலே ஒரு புருஷ விசேஷமன்றிகேகே, வேதாந்திகள் சொல்லுகிற சிதசிந்தி யந்தா. “க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக:”, “ப்ரதாந க்ஷேத்ரஜ்ஞ பதிர் குணேச:” என்னக் கடவதிறே.

**விளக்கம் -** சித் என்பது ஞானத்தை ஆதாரமாகக் கொண்ட வஸ்து, அசித் என்பது ஞானம் அற்ற வஸ்து ஆகும். ஈச்வரன் என்பவன் யோகசாரர் மற்றும் வைசேஷிகர்கள் கூறுவது போன்று ஒரு சாதாரண புருஷன் அல்லன்; வேதாந்திகள் கூறுவது போன்று சித் மற்றும் அசித் ஆகியவற்றை நியமிப்பவன் ஆகிறான். ச்வே. (1-10) - க்ஷரம் ப்ரதாநம் அம்ருத அக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவிசதே தேவ ஏக: - ப்ரதானம் என்பது க்ஷரம் (அழியக்கூடியது) எனப்படும். இதனைத் தனது இன்பத்திற்காக கொள்பவன் அக்ஷரம் (ஜீவாத்மா, அழிவற்றவன்) ஆவான். ஒரே தேவன் இந்த இரண்டையும் நியமித்தபடி

உள்ளான் – என்றும், ச்வே. (6-16) - ப்ரதாந க்ஷேத்ரஜ்ஞ பதிர் குணேச: - ப்ரதானத்திற்கும் க்ஷேத்ரஜ்ஞனுக்கும் (ஜீவாத்மா) அவனே தலைவன், அவனே குணங்களை நியமிப்பவன் ஆவான் – என்றும் கூறுவது காண்க.

3. சித்தென்கிறது - ஆத்மாவை.

**அவதாரிகை** – உத்தேச க்ரமத்திலே, தத்வத்ரயத்தினுடையவும் ஸ்வரூப ஸ்வபாவ விசேஷங்களை உபபாதிப்பதாகத் திருவுள்ளம் பற்றி, ப்ரதமம் சித் தத்வத்தை உபபாதிக்க உபக்ரமிக்கிறார், "சித்தென்கிறது ஆத்மாவை" என்று.

**விளக்கம்** - இவற்றைக் குறித்து வரிசையாக விளக்கும்விதமாக, இந்த மூன்று தத்வங்களுடைய இயல்பு மற்றும் தன்மைகளுடைய சிறப்புகளை வெளியிடத் திருவுள்ளம் கொண்டவர், அவற்றில் முதலில் சித் தத்வத்தை விளக்கும் பொருட்டுத் தொடங்குகிறார்.

**வ்யாக்யானம்** - நடுவில் திருவீதிப் பிள்ளை பட்டரும், ஆச்சான் பிள்ளையும் முதலான ஆசார்யர்கள தத்வத்ரயமருளிச் செய்கிறவிடத்தில், அசிதுபக்ரமமாக அருளிச் செய்தார்கள். இவர் சிதுபக்ரமமாக அருளிச்செய்தார். இதுக்குக் கருத்து, அசித் தத்வம் ஹேயதயா ஜ்ஞாதவ்யமாகையாலும், ஈச்வரன் உபாதேயதயா ஜ்ஞாதவ்யனாகையாலும், இப்படி இரண்டு தத்வத்தையும் அறிகைக்கு அதிகாரியான சேதநனுடைய ஸ்வரூபந் தன்னை முதலிலே அறிந்து கொள்ள வேணுமிறேயென்று. அவர்கள் தானப்படியருளிச் செய்வானென்? என்னில்; ஆத்மாவினுடைய ப்ரக்ருதே: பரத்வ ஜ்ஞாநம் ப்ரக்ருதியை அறியாதபோது கூடாமையாலே, முந்துற ப்ரக்ருதி தத்வத்தையறிந்து, அநந்தரம் தத்வ்யதிரிக்தனாய் ததந்தர்வர்த்தியான ஆத்மாவை அறிந்து, அநந்தரம் ஆத்மாவுக்கு அந்தர்யாமியாய் சரீரத்துகது ஆத்மாவைப் போலே உபயத்துக்கும் அபிமாநியாயிருக்கிற பரமாத்மாவினுடைய ஸ்வரூபத்தை அறிகை புத்த்யாரோஹ க்ரமமாகையாலே அருளிச்செய்தார்கள்.

**விளக்கம்** -நடுவில் திருவீதிப் பிள்ளை பட்டர் மற்றும் ஆச்சான்பிள்ளை முதலான ஆசார்யர்கள், தத்வத்ரயம் குறித்த விளக்கம் அளித்தபோது, அசித் தத்வம் தொடக்கமாக அருளிச்செய்தார்கள். ஆனால் இவர் சித் தத்வம் தொடங்கி அருளிச்செய்கிறார். இதன் காரணம் என்ன? அசித் தத்வமாவது தாழ்ந்தது என்பதால் கைவிடத்தக்கது என்று

அறியப்படுவதாலும், ஈச்வரனே கைக்கொள்ளத்தக்கவன் ஆவான் என்று அறியப்படுவதாலும், இவ்விதம் உள்ள இரண்டு தத்வங்களையும் அறிவதற்குத் தகுதி கொண்டவனாக உள்ள சேதநனுடைய ஸ்வரூபத்தை முதலில் அறியவேண்டும் அல்லவோ? அதனால் இவ்விதம் சித் தத்வத்தை முதலில் உரைத்தார். ஆனால் மற்ற சில ஆசார்யர்கள் அசித் தத்வத்தை ஏன் முதலில் அருளிச்செய்தார்கள்? ஆத்மவானது சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டது என்ற அறிவானது சரீரம் குறித்து அறியாமல் ஏற்படாது என்பதால், முதலில் சரீரம் குறித்து அறிந்து கொண்டு, அதன் பின்னர் அத்தகைய சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டவனாகவும் அந்தச் சரீரத்தில் உள்ளவனும் ஆகிய ஆத்மாவை அறிந்து கொண்டு, அதன் பின்னர் ஆத்மாவிற்கு அந்தர்யாமியாகவும், சரீரத்திற்கு ஆத்மாவைப் போன்று சித் மற்றும் அசித் ஆகிய இரண்டிற்கும் தேவதையாக உள்ள பரமாத்மாவின் ஸ்வரூபத்தை அறிதல் என்பது கீழிருந்து மேலே அறிவது போன்று உள்ளதால், இவ்விதமாக அசித்தை முதலில் அருளிச்செய்தனர்.

**வ்யாக்யானம் -** அசிதுபக்ரமமாகச் சொல்லுகிறவிது, “அந்நமயம்” தொடங்கி, “ஆநந்தமய”னளவும் ஆரோஹித்த ச்ருதி மர்யாதைக்குச் சேரும். சிதுபக்ரமமாகச் சொல்லுகிறவிது, “போக்தா போக்யம் ப்ரேரிதாரம்” இத்யாதி ச்ருதிக்குச் சேரும்; ஆகையால் இரண்டு க்ரமமும் வேதாந்த ஸித்தம். “சிதசிதீச்வர தத் ஸ்வபாவ” என்று ஆளவந்தாரும், “அசேஷ சிதசித வஸ்து சேஷிணே” எனறு பாஷ்யகாரருமருளிச் செய்த வசநங்கள் உபய கோடியிலும் சேரும். எங்ஙனேயென்னில்; சிதுபக்ரம யோஜநைக்குத் தானே ஸ்வரஸமாயிருந்ததிறே. அசிதுபக்ரம யோஜநையில் வந்தால் க்ரம விவக்ஷயா அன்று அவர்களப்படியருளிச் செய்தது; ஸமஸ்த பதமாக அருளிச்செய்கையாலே ஸமாஸத்தில் அப்யர்ஹிதமாதல், அல்பாச்தரமாதல் முற்படக் கடவதென்கிற ந்யாயத்தைப் பற்ற அல்பாச்தரமான சிச்சப்தம் முன்னாக அருளிச்செய்தார்களித்தனை அப்யர்ஹிதனான ஈச்வரன்றன்னை முதலிலெடாதே, சிச்சப்தததாலே சேதநனைச் சொல்லிற்று “அல்பாச்தரம் பூர்வம்” என்கிற அநுசாஸந பலத்தாலே. இப்படி இரண்டு க்ரமமும் வேத வைதிக பரிக்ருஹீதமாகையாலே இரண்டும் முக்யமென்று கொள்ளக் குறையில்லை.

**விளக்கம் -**அசித் தொடக்கமாக உள்ள கருத்தானது “அந்நமயன்” என்று தொடங்கி, “ஆநந்தமயன்” என்று ச்ருதி முடிக்கின்ற வரிசையை ஏற்பது போன்றதாகும். சித் தொடக்கமாக உள்ள கருத்தானது, “போக்த போக்யம் ப்ரேரிதாரம்” என்று ச்ருதி கூறுவதை ஏற்பது போன்றதாகும். ஆகவே இந்த இரண்டு வரிசைகளுமே

வேதாந்தந்தின்படி பொருத்தமே ஆகும். ஸ்தோத்ரரத்நத்தில் (4) - சித் அசித் ஈச்வர தத் ஸ்வபாவ - என்று ஸ்வாமி ஆளவந்தார் அருளிச்செய்த கருத்தும், வேதார்த்த ஸங்க்ரஹத்தில் - அசேஷ சித் அசித் வஸ்து சேஷிணே - என்று பாஷ்யகாரர் அருளிச் செய்த கருத்தும், இந்த இரண்டு வரிசைகளிலுமே சேரும். எப்படி? சித்தை முதலில் உரைத்தல் என்பது இயல்பாகவே பொருத்தமாக உள்ளது. அசித்தை முதலில் கூறியது என்பது வரிசையைக் கருத்தில் கொண்டு அல்ல; உம்மைத் தொகை கொண்டு பல சொற்களைச் சேர்க்க முற்படும்போது (உதாரணமாக "யானையும் குதிரையும்" என்பது காணலாம்), அவற்றில் சிறந்த பொருளை முதலில் கூறுதல் அல்லது குறைந்த எழுத்துக்கள் கொண்ட பொருளை முதலில் கூறுதல் என்னும் ந்யாயத்தின்படி, குறைந்த எழுத்துக்கள் கொண்டதான சித் என்பதை முதலில் கூறினர். இங்கு சிறந்த வஸ்துவாகிய ஈச்வரனை முதலில் உரைக்காமல், சித் என்ற சொல்லால் ஆத்மாவை முதலில் கூறியது ஏனென்றால், அல்பாச்தரம் பூர்வம் - குறைந்த எழுத்துக் கூட்டம் முதலில் வரும் - என்ற கட்டளையின் வலிமை காரணமாக ஆகும். இவ்விதம் இந்த இரண்டு வரிசைகளுமே வேதவைதிகர்களால் ஏற்படுவதால், இரண்டுமே முக்கியமானது என்று ஏற்பதில் தவறில்லை.

**வ்யாக்யானம் -** சிச்சப்தம், "ப்ரேக்ஷோபலப்திச் சித் ஸம்வித ப்ரதிபத் ஜ்ஞப்தி சேதநா" என்று, ஜ்ஞாநவாசி சப்தங்களோடே ஸஹபடிதமாகையாலும், ஜ்ஞாநாச்ரய வஸ்துவில் இதுக்கு ப்ரஸித்தி ப்ராசுர்யமில்லாமையாலும், "க்ஷர ஆத்மாநௌ ஈசதே தேவ ஏக:", "ய ஆத்மாநமந்தரோ யமயதி யமாத்மா ந வேத யஸ்யாத்மா சரீரம்", "ஆத்மா ஜ்ஞாநமயோமல:" என்று, இப்படி ச்ருதி ஸ்ம்ருதிகளிலே பலவிடங்களிலும் சொல்லுகையாலே, ஆத்மசப்தத்துக்கு ஜீவவிஷயத்தில ப்ரஸித்தி ப்ராசுர்ய முண்டாகையாலும் "சித்தென்கிறது ஆத்மாவை" என்று ஸ்புடமாக அருளிச்செய்கிறார்.

**விளக்கம்** -சித் என்ற சொல்லானது, ப்ரேக்ஷோபலப்திச் சித் ஸம்வித ப்ரதிபத் ஜ்ஞப்தி சேதநா - ப்ரேக்ஷா, உபலப்தி , சித், ஸம்வித், ப்ரதிபத்தி, ஜ்ஞப்தி, சேதந ஆகிய சொற்கள் அனைத்தும் புத்தியைக் குறிக்கின்றன - என்பதற்கு ஏற்ப ஞானத்தைக் கூறும் சொற்களுடன் சேர்த்துப் படிக்கப்பட்டது; மேலும் ஞானத்திற்கு இருப்பிடமாக உள்ள வஸ்துவிற்கு ஞானத்தைக் காட்டிலும் சிறப்பு இல்லை; ச்வே. (1-10) – க்ஷர ஆத்மாநௌ ஈசதே தேவ ஏக: - அழியாமல் மரணம் அடையாமல் உள்ளது க்ஷரம் (ஜீவாத்மா),

ஒருவனாகிய தேவனே அழியக்கூடிய ப்ரதாநத்தையும், ஆத்மாவையும் ஆள்கிறான் - என்னும், ய ஆத்மாநமந்தரோ யமயதி யமாத்மா ந வேத யஸ்யாத்மா சரீரம் – யார் ஆத்மாவின் உள்ளில் உள்ளானோ யார் இவ்விதம் உள்ளதை ஆத்மா அறியாதோ - என்றும், ஆத்மா ஜ்நாநம் யோ மல: - ஆத்மா ஞானமயமாகவும் தூய்மையாகவும் உள்ளவன் – என்றும் ச்ருதி ஸ்ம்ருதிகளில் பல இடங்களில் கூறப்பட்டது; ஆகவே, ஆத்மா என்ற சொல்லிற்கு ஜீவ விஷயத்தில் ப்ரஸித்தி உள்ளது; இந்தக் காரணங்களால் “சித் என்பது ஆத்மா” என்று தெளிவாக உரைக்கிறார்.

4. ஆத்மஸவரூபம் “சென்று சென்று பரம்பரமாய்" என்கிறபடியே தேஹேந்த்ரிய மந: ப்ராண புத்தி விலக்ஷணமாய், அஜடமாய், ஆநந்தருபமாய், நித்யமாய், அணுவாய், அவ்யகதமாய், அசிந்த்யமாய், நிரவயவமாய், நிர்விகாரமாய், ஜ்ஞாநாச்ரயமாய், ஈச்வரனுக்கு நியாமயமாய் தார்யமாய் சேஷமாயிருக்கும்.

**அவதாரிகை -** இனி, இந்த ஆத்மாவினுடைய ஸ்வரூபமிருக்கும்படி எங்ஙனே? என்கிற சங்கையிலே, ஆத்ம ஸ்வரூப லக்ஷணத்தை அருளிச்செய்கிறார் “ஆத்ம ஸ்வருபம் சென்று சென்று பரம்பரமாய்” என்று தொடங்கி.

**விளக்கம் -**அடுத்து, “இவ்விதமாக உள்ள ஆத்மாவின் ஸ்வரூபம் எவ்விதம் உள்ளது?”, என்ற சந்தேகம் எழலாம். இதனை நீக்கும்விதமாக, ஆத்மாவின் இலக்கணத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** ச்ருதி ஸ்ம்ருத்யாதிகளிலே ஒன்றைச சொல்லலாயிருக்க, இப்போது ஆழ்வாரருளிச் செய்த சந்தையை எடுத்தது, தத்வ ப்ரதிபாதகங்களான ச்ருத்யாதிகளிலும் காட்டில் தத்வதர்களில் ப்ரதாநரான ஆழ்வாருடைய வசநமே தத்வ நிர்ணயத்துக்கு முக்ய ப்ரமாணமென்று தோற்றுகைக்காக. “விதயச்ச வைதிகாஸ் த்வதீயகம்பீர மநோநுஸாரிண:” என்றிறே பரமாசார்யருமருளிச் செய்தது. ஸ்வரூபமாவது ஸ்வம்மான ரூபம், அதாவது அஸாதாரணாகாரம். “சென்று சென்று பரம்பரமாய்” என்றது போய்ப்போய் ஒன்றுக்கொன்று மேலாயிருக்கிற அந்தமய ப்ராணமய மநோமயங்களுக்கு அவ்வருகாய் என்றபடி. “தேஹேந்த்ரிய மந: ப்ராண புத்தி விலக்ஷணமாய்” என்கிற இடத்தில், புத்தி சப்தத்தால், மஹதநுக்ருஹீதமான அந்த:கரணத்தைச் சொல்லுகிறதோ?

ஜ்ஞாநத்தைச் சொல்லுகிறதோ? என்னில்; இவருக்கு இங்கு விவக்ஷிதம் ஜ்ஞாநமாக வேணும்; தத்வசேகரத்தில் தேஹாதி வைலக்ஷண்யமருளிச் செய்கிறவிடத்தில் அப்படியருளிச் செய்கையாலே; “தேஹேந்த்ரிய மந: ப்ராண தீப்யோந்ய:” என்றிறே ஆளவந்தாரும் அருளிச் செய்தது.

**விளக்கம் -**ச்ருதி மற்றும் ஸ்ம்ருதி ஆகியவற்றிலிருந்து ஆத்ம ஸ்வரூபம் இன்னது என்று ப்ரமாணம் கூறாமல், ஆழ்வார் அருளிச்செய்ததான “சென்று சென்று பரம்பரமாய்” என்பதை இங்கு ஏன் எடுத்தார்? ஏனென்றால், தத்வத்தை வெளிப்படுத்தக் கூடிய ச்ருதி முதலானவற்றைக் காட்டிலும், அத்தகைய தத்துவத்தை நேரடியாக அறிந்தவர்களில் முதன்மையாக உள்ளவராகிய ஆழ்வாருடைய சொற்களே தத்வத்தை நிர்ணயம் செய்வதற்கான முக்கியமான ப்ரமாணமாக இருக்கமுடியும் என்று வெளிப்படுத்தவே இவ்விதம் செய்கிறார். ஸ்தோத்ரரத்னத்தில் (20) - விதயச்ச வைதிகாஸ் த்வதீயகம்பீர மநோநுஸாரிண: – வேத விதிகள் கூட உனது அடியார்கள் செலுத்தியபடி உள்ள கம்பீரமான திருவுள்ளத்தைப் பின்பற்றி அல்லவோ செல்கின்றன - என்று உயர்ந்த ஆசார்யராகிய ஸ்வாமி ஆளவந்தார் அருளிச்செய்தார். ஸ்வரூபம் என்றால் தன்மை, அதாவது ஆத்மாவிற்கே உரிய ரூபம். “சென்று சென்று பரம்பரமாய்” என்றால், ஒன்றுக்கொன்று மேலாக உள்ளதான அன்னமயம், ப்ராணமயம், மநோமயம் ஆகியவற்றைக் காட்டிலும் வேறாக உள்ள ஆத்மா என்று கருத்து. சூர்ணையின் உள்ள “தேஹேந்த்ரிய மந: ப்ராண புத்தி விலக்ஷணமாய்” என்ற இடத்தில், “புத்தி” என்பதன் மூலம் “மஹாந்” என்று தத்வத்தால் நிலைநாட்டப்படும் அந்தகரணம் கூறப்படுகிறதா அல்லது ஞானம் கூறப்படுகிறதா என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். இங்கு ஞானம் என்பதே இவருடைய திருவுள்ளமாக இருத்தல் வேண்டும்; ஏனென்றால் தத்வசேகரம் என்று நூலில், சரீரம் முதலானவற்றுக்கு உள்ள வேறுபாட்டை அருளிச்செய்யும்போது இவ்விதமே உரைத்தார் மேலும் ஆத்மஸித்தியில் - தேஹேந்த்ரிய மந: ப்ராண தீப்யோந்ய: – சரீரம், இந்த்ரியம், மனம், ப்ராணன், ஞானம் ஆகியவற்றைக் காட்டிலும் ஆத்மா வேறுபட்டது – என்று ஆளவந்தார் அருளிச்செய்தார்.

5. ஆத்ம ஸ்வரூபம் தேஹாதி விலக்ஷணமானபடியென்? என்னில்;

**அவதாரிகை -** உத்தேசம், லக்ஷணம், பரீக்ஷை என்று மூன்று வகைப்பட்டிறே தத்வ நிர்ணய க்ரமமிருப்பது; அதில் "சித்துமசித்துமீச்வரனும்" என்று தத்வ த்ரயத்தையு முத்தேசித்து, உத்தேச க்ரமத்திலே அவற்றினுடைய ஸ்வரூப சோதநம் பண்ணுவதாக நினைத்து, ப்ரதமத்திலே சிச்சப்தோத்திஷ்டனான ஆத்மாவினுடைய ஸ்வரூப சோதநம் பண்ணுவதாக உபக்ரமித்து "தேஹேந்த்ரியமந: ப்ராண புத்தி விலக்ஷணமாய்" என்று தொடங்கி "சேஷமாயிருக்கும்" என்னுமளவாக ஸ்வரூப லக்ஷணத்தை அருளிச்செய்தார். அத்தைப் பரீக்ஷிக்கிறார் மேல். அதில் ப்ரதமத்திலே ஆத்ம ஸ்வரூபத்தினுடைய தேஹாதி வைலக்ஷண்யத்தை சோதிப்பதாக தஜ்ஜிஜ்ஞாஸுக்களுடைய ப்ரச்நத்தை அநுபாஷிக்கிறார்; (ஆத்மஸ்வரூபம் தேஹாதி விலக்ஷணமானபடியென்? என்னில்) என்று.

**விளக்கம் -** ஒரு பெயர் மூலம் ஒரு பொருளை உணர்த்தல், இலக்கணம் மூலம் உணர்த்துதல், சோதித்துப் பார்த்து உணர்த்துதல் என மூன்று வகையாக தத்வமானது நிர்ணயம் செய்யப்படுகிறது. அவற்றில், "சித், அசித், ஈச்வரன்" என்றுள்ள மூன்று தத்வங்களையும் பெயர் கொண்டு உணர்த்தி, அதே வரிசையில் அவற்றின் ஸ்வரூபம் இன்னது என்று உரைப்பதற்காக, முதலில் சித் என்ற சொல் மூலம் கூறப்படும் ஆத்மாவின் ஸ்வரூபத்தை உரைக்கத் திருவுள்ளம் பற்றினார். ஆகவே கடந்த சூர்ணையில், "தேஹேந்த்ரியமந: ப்ராண புத்தி விலக்ஷணமாய்" என்று தொடங்கி, "சேஷமாய் இருக்கும்" என்று முடித்து, ஆத்மாவின் ஸ்வரூப இலக்கணத்தை உரைத்தார். அதனை மேலும் விரிவாக ஆராய்கிறார். அவற்றில் முதலில் ஆத்மாவின் தன்மையானது சரீரம் போன்றவற்றைக் காட்டிலும் வேறுபட்டதாக உள்ளதை ஆராய்வது என்று திருவுள்ளம் பற்றி, அதனை அறிவதற்கான ஆர்வத்துடன் உள்ளவர்களுக்கு எழக்கூடிய கேள்வியைத் தானே எழுப்புகிறார்.

**வ்யாக்யானம் -** இது தன்னை தத்வசேகரத்தில் இவர் தாமே விஸ்தரேண அருளிச்செய்தார். "தேஹம் அநேகாவயவ ஸங்காதாத்மக மென்னுமிடம் ஸித்தம்; அதில் எல்லா அவயவங்களுக்கும் சைதந்யமுண்டாகில், அநேக சேதநோபலப்தி ப்ரஸங்கிக்கும். அவயவங்களுக்கு அந்யோந்யம் அவிவாத நியமமும், அவற்றில் மமதா புத்தியும் மமதா

வ்யவஹாரமும் கூடாது. ஓரவயவத்துக்கே சைதந்யங்கொள்ளில், அது விச்சிந்நமானால் அவயவாந்தரம் அது அநுபவித்தத்தை ஸ்மரிக்கக்கூடாது. பின்பு, அஹம் புத்தி வ்யவஹாரங்களும் மமதாபுத்தி வ்யவஹாரங்களும் தவிரவேணும்; ஸர்வ சரீர வ்யாபியான ஸுக துக்காநுபவமும் கூடாது. அவயவ ஸங்காதாத்மகமன்று சரீரம்; அவயவி. அதிலே சைதந்யமென்னவுமொண்ணாது, உபலம்ப அநுபபத்திகள் இல்லாமையாலே அவயவி ஸ்வீகாரம் அநுபபந்நமாகையாலே. “கிஞ்ச, பால தேஹோஹம் மந்த ஜ்ஞாந:, யுவ தேஹோஹம் பஹு ஜ்ஞாந:, மம சரீரம்” என்று, சரீராஹமர்த்தங்களில் பிறக்கிற பேத ப்ரதிபத்தியும், பேத வ்யவஹாரமும் கூடாது; “மமாயமாத்மா” என்கிறவிடத்திற்போலே அமுக்க்யம் என்னவொண்ணாது; முக்க்யே பாதமில்லாமையாலே. அன்றிக்கே, அஹம் புத்திக்கு சரீரம் விஷயமென்று கொண்டாலும், ச்ருதியாலும் ச்ருத்யர்த்தாபத்திகளாலும் தேஹாதிரிக்தனாய, தேஹாந்தர பரிக்ரஹ யோக்யனான ஆத்மா ஸித்தன். பாஹ்யேந்த்ரியங்களும் ஆத்மாவாகமாட்டாது; ஒருவனே ஸர்வேந்த்ரிய விஷயங்களையும் அறிகையால். இப்படிக் கொள்ளாதபோது “யாவனொருவன் நான் இவ்வர்த்தத்தைக் கண்டேன்; அந்த நானே ஸ்பர்சியா நின்றேன்” என்கிற ப்ரதிஸந்தாநமும் கூடாது. சக்ஷுஸ்ஸே ஆத்மாவாகில், அந்தன் ரூபத்தை ஸ்மரியாதொழிய வேணும். ச்ரோத்ரமே ஆத்மாவாகில், பதிரன் சப்தத்தை ஸ்மரியாதொழிய வேணும். இப்படி மற்றை இந்திரியங்களிலும் கண்டு கொள்வது. அந்த:கரணமும் ஆத்மாவாகமாட்டாது, ஸ்மர்த்தாவினுடைய ஸ்மரணாதி கார்யங்களுக்கு கரணமாக கல்பிதமாகையாலே; இது தானே ஸ்மரிக்கிறது என்னவொண்ணாது; ஸ்மரணத்துக்குக் கரணமில்லாமையாலே. கரணமுமிது தானே என்னவொண்ணாது, விருத்தமாகையாலே வேறேயொன்று கரணமென்னில்; அது பாஹ்யகரணமாகில், அதில்லாதவனுக்கு ஸ்ம்ருதி கூடாது; ஆந்தர கரணமாகில் ஆத்மாவுக்கு மநஸ்ஸென்று பேரிட்டதாய்விடும். ஆந்தர கரணம் அபேக்ஷிதமாகில் இந்த்ரியார்த்த ஸம்பந்தமுண்டான போதெல்லாம ஜ்ஞாநம் பிறக்க வேணும். ஆகையால், மநஸ்ஸும் ஆத்மாவாக மாட்டாது. ப்ராணங்களும் ஆத்மாவாகமாட்டாது; ஸங்காத ரூபங்களாகையாலே, தேஹம் ஆத்மாவென்கிற பக்ஷத்துக்குச் சொன்ன தூஷணங்கள் இங்கும் துல்யம். ஜ்ஞாநமும் ஆத்மாவாகமாட்டாது; “எனக்கு ஜ்ஞாநம் பிறந்தது, நசித்தது” என்று க்ஷணிகமுமாய், ஆத்மதர்மமுமாய்த் தோற்றுகையாலே ஸ்த்திரனாயிருப்பானோராத்மா உண்டென்னுமிடம் “நேற்றுக் கண்ட நானே இன்றும் காணா நின்றேன்” என்கிற ப்ரத்யபிஜ்ஞையாலே ஸித்தம்" என்று இப்படி விஸ்தரேண அருளிச்செய்தாரிறே.

**விளக்கம் -**இதனை ஸ்வாமி பிள்ளை லோகாசார்யார், தன்னுடைய தத்வசேகரம் என்ற நூலில் விரிவாக அருளிச்செய்தார். அது என்னவென்றால் : சரீரமானது பலவிதமான உறுப்புக்களுடைய கூட்டம் என்பது அறிந்ததே. அதில் உள்ள அனைத்து உறுப்புக்களுக்கும் ஞானம் உண்டு என்று கூறினால், பல சேதநங்கள் ஒரே உடலில் உள்ளன என்றாகிவிடும். அந்த உறுப்புக்கள் ஒவ்வொன்றுக்கும் இடையில் விவாதம் ஏற்படும். அவற்றில், “நான், என்னுடையது” என்ற சிந்தனை ஏற்படும். ஏதேனும் ஒரு உறுப்புக்கு மட்டும் ஞானம் உள்ளது என்று கூறினால், அந்த உறுப்பு பாதிக்கப்பட்டால், மற்ற உறுப்புக்கள் அதனை எண்ணுவதை விளக்க இயலாது. மேலும் “நான், எனது” என்ற சிந்தனை ஏற்படக்கூடாது. சரீரத்தில் அனைத்து இடங்களிலும் பரவி நிற்பதான சுகம் மற்றும் துக்கம் ஆகிய அனுபவங்களும் ஏற்படாது. மேலும் உறுப்புக்களின் கூட்டம் என்பது சரீரம் அல்ல, உறுப்புக்களைக் கொண்டது மற்றும் அதில் ஞானம் உள்ளது என்று கூறுவதும் சரியல்ல. உறுப்புக்களைக் காட்டிலும் வேறானதாக உள்ளதும், அந்த உறுப்புகளைக் கொண்டதும் ஆகிய வஸ்துவிற்கு ஞானம் உள்ளதாகக் கூறுதல் கூடாது. இது பொருந்தாது. கிஞ்ச, பால தேஹோஹம் மந்த ஜ்ஞாந:, யுவ தேஹோஹம் பஹு ஜ்ஞாந:, மம சரீரம் - நான் குழந்தைச் சரீரம் கொண்டவன், எனக்கு ஞானம் குறைவாக உள்ளது; நான் வாலிபன் என்பதால் ஞானம் பலவாக உள்ளது; இது எனது சரீரம் – என்பது போன்று “சரீரம், நான்” என்பதில் ஏற்படுகின்ற பேத புத்தியும் கூடாது. மமாயமாத்மா - இது எனது ஆத்மா - என்றுள்ள இடத்தைப் போன்று அமுக்யமானது என்றும் எண்ணக்கூடாது; முக்கியம் என்று கொண்டால் பாதிப்பு ஏற்படாது என்னும் காரணத்தால் ஆகும். அல்லது அஹம் என்ற சிந்தனைக்குச் சரீரம் என்று கொண்டாலும், பொருந்தாது. ஏனென்றால் ச்ருதி மற்றும் ஸ்ம்ருதி மூலம் ஏற்படுகின்ற புத்தி ஆகியவற்றின் மூலமாக “சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டவன் உள்ளான். வேறு வேறு சரீரத்தை எடுக்கவல்ல ஒருவன் உள்ளான்”, என்று ஆத்மாவைக் குறித்து உரைப்பதால் ஆகும். வெளி இந்த்ரியங்களும் ஆத்மா அல்ல, காரணம் ஒருவன் மட்டுமே அந்த அனைத்து இந்த்ரியங்களுடைய விஷயங்களை அறிவதால் ஆகும். இதனை ஏற்கவில்லை என்றால், “நான் இந்தப் பொருளைக் கண்டேன். நான் அதனைத் தொடுகிறேன்”, என்று ஒருவன் உரைப்பதாகக் கூறுவது பொருந்தாது. கண் என்பதே ஆத்மா என்றால், கண் தெரியாதவன் உருவத்தை எண்ணாமல் இருத்தல்வேண்டும்; காது என்பதே ஆத்மா என்றால், காது கேட்காதவன் ஓசையை எண்ணாமல் இருத்தல்வேண்டும். இது போன்றே

மற்ற இந்த்ரியங்களுக்கும் பொருந்தும். அடுத்து அந்தகரணமும் ஆத்மா அல்ல; காரணம் எண்ணும் ஒருவனுடைய சிந்தனைகளுக்குக் கருவியாக அந்தகரணத்தை ஏற்பதால் ஆகும். இந்த மனம் என்பது தானாகவே எண்ணமுடியாது; அது முரணாகிறது. ஆனால் எண்ணுவதற்கு வேறு இந்த்ரியம் இல்லை என்பதால், இந்த மனத்தையே கருவி என்று கூறமுடியாது; ஏனென்றால் முரண்பாடு ஏற்படும். சிந்தனை என்பது ஒரு வெளி இந்த்ரியந்த்தின் செயல்பாடு என்றால், அது இல்லை என்றால் ஞாபகம் கைகூடாது. அது உள்ளே இருக்கும் இந்த்ரியம் என்றால், ஆத்மாவிற்கு மனம் என்ற பெயர் வைத்ததாகிவிடும். உள் இந்த்ரியம் வேண்டும் என்றால், புலன்கள் மூலம் ஸம்பந்தம் ஏற்படும்போதெல்லாம் ஞானம் ஏற்படவேண்டும். எனவே மனம் என்பது ஆத்மா அல்ல. ப்ராணன்களும் ஆத்மா அல்ல. அவை பலவாக உள்ளதால், "சரீரம் என்பதே ஆத்மா" என்று கூறும்போது ஏற்பட்ட முரண்பாடுகள் அனைத்தும் இங்கும் பொருந்தும். ஞானம் என்பதும் ஆத்மா அலல்; காரணம் "எனக்கு ஞானம் ஏற்பட்டது. எனக்கு ஞானம் அழிந்தது" என்பதாக ஞானமானது க்ஷணிகமாகவும், ஆத்மாவின் பண்பாகவும் உள்ளதால் ஆகும். ஆத்மா நிலையானது என்பது, "நேற்று கண்ட நானே இன்றும் காண்கிறேன்" என்று ஞாபகம் ஏற்படுவதால் ஆகும். இவ்விதமாக ஆத்மா குறித்து தத்வசேகரத்தில் விரிவாக அருளிச்செய்தார்.

6. தேஹாதிகள் "என்னுடைய தேஹாதிகள்" என்று ஆத்மாவில் வேறுபட்டுத் தோற்றுகையாலும், "இதம்" என்று தோற்றுகையாலும் ஆத்மா நானென்று தோற்றுகையாலும், இவை ஒருக்கால் தோற்றி ஒருக்கால் தோற்றாமையாலும், ஆத்மா எப்போதும் தோற்றுகையாலும், இவை பலவாகையாலும், ஆத்மா ஒருவனாகையாலும் ஆத்மா இவற்றில் விலக்ஷணனென்று கொள்ளவேணும்.

**அவதாரிகை -** இப்படி தனித்தனியே எடுத்துக் கழிக்குமளவில் க்ரந்த விஸ்தரமாமென்று மந்தமதிகளுக்கும் ப்ரதிபத்தி யோக்யமாம்படி தேஹாதிகளை ஸமுச்சித்யோபாதாநம் பண்ணி, அவற்றிற்காட்டில் ஆத்மாவுக்குண்டான வைலக்ஷண்யத்தைச் சில யுக்தி விசேஷங்களாலே ஸங்க்ரஹமாக அருளிச்செய்கிறார் (தேஹாதிகள்) என்று தொடங்கி.

**விளக்கம் -** இவ்விதம் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்து, "இது ஆத்மா அல்ல" என்று தள்ளியபடி இருந்தால், இந்த நூலானது அளவில் மிகவும் பெரிதாகிவிடும் என்று

எண்ணினார். ஆகவே குறைந்த அறிவு கொண்டவர்களும் கூட இத்தகைய அசித் தத்வங்களைத் தங்களுடைய நினைவில் வைத்துக் கொள்ளும்விதமாக, சரீரம் முதலானவற்றை ஒன்றாகத் திரட்டி எடுத்துக்கொண்டு, அவற்றைக் காட்டிலும் ஆத்மாவிற்கு உள்ள மேன்மையை ஒரு சில யுக்தி விசேஷங்கள் மூலம் மிகவும் தெளிவாக அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (தேஹாதிகள் "என்னுடைய தேஹாதிகள்" என்று ஆத்மாவில் வேறுபட்டுத் தோற்றுகையாலும், "இதம்" என்று தோற்றுகையாலும், ஆத்மா நானென்று தோற்றுகையாலும்) அதாவது தேஹாதிகளானவை என்னுடைய தேஹம், என்னுடைய இந்த்ரியம், என்னுடைய மநஸ்ஸு, என்னுடைய ப்ராணன், என்னுடைய புத்தி என்று மமதா புத்திக்கும் மமதா வ்யவஹாரத்துக்கும் விஷயமாய்க் கொண்டு, அஹமர்த்தபூதனான ஆத்மாவுக்கு அந்யமாய்த் தோற்றுகையாலும்; அப்படியே, "இது தேஹம், இது இந்த்ரியம்" என்று இதம் புத்தி வ்யவஹார விஷயமாய்க் கொண்டு அஹமர்த்த வ்யதிரிக்தமாய்த் தோற்றுகையாலும்; அங்ஙனன்றிக்கே ஆத்மா அஹமர்த்த பூதனாய்க் கொண்டு தோற்றுகையாலும் என்றபடி.

**விளக்கம் -** (தேஹாதிகள் "என்னுடைய தேஹாதிகள்" என்று ஆத்மாவில் வேறுபட்டுத் தோற்றுகையாலும், "இதம்" என்று தோற்றுகையாலும், ஆத்மா நானென்று தோற்றுகையாலும்) - சரீரம் போன்றவைகள், "என்னுடைய சரீரம், என்னுடைய இந்த்ரியம், என்னுடைய மனம், என்னுடைய ப்ராணன், என்னுடைய புத்தி" என்று "நான், என்னுடையது" என்பதான சிந்தனைகளுக்கு அடிப்படியாக இருப்பதால், "அஹம் - நான்" என்று சொல்லக்கூடியதான ஆத்மாவைக் காட்டிலும் வேறாக வெளிப்படுவதாலும்; அது போன்றே "இது சரீரம், இது இந்த்ரியம்" என்று உரைக்கும் கூற்றுகளில், "இது" என்பறு உரைப்பதன் மூலம் சிந்தனைக்கும் அடிப்படையாக உள்ள காரணத்தால், "நான்" என்பதைக் காட்டிலும் வேறாகப் புலப்படுவதாலும்; அவ்விதம் அல்லாமல் ஆத்மாவை "நான்" என்று உரைப்பதற்கு ஏற்றபடியாகக் கொண்டு புலப்படுவதாலும்.

**வ்யாக்யானம் -** (இவை ஒருக்கால் தோற்றி ஒருக்கால் தோற்றாமையாலும், ஆத்மா எப்போதும் தோற்றுகையாலும்) "இவை" என்று தேஹேந்த்ரியாதிகளைப் பராமர்சிக்கிறது. தேஹம் ஒருக்கால் தோற்றி ஒருக்கால் தோற்றாமையாவது, ஜாக்ரத் தசையில்

“ஸ்த்தூலோஹம், க்ருசோஹம்” இத்யாதிகளாலே, அஹம் புத்தி வ்யவஹார விஷயமாய்க் கொண்டு ஆத்மத்வேந தோற்றியிருந்ததேயாகிலும், ஸுஷுப்தி தசையில் அப்படி தோற்றாதிருக்கை. ஆத்மா எப்போதும் தோற்றுகையாவது, “உறங்குவதுக்கு முனபு இவையெல்லாம அறிந்திருந்த நான் உறங்குகிறபோது என்னுடம்புமுட்பட அறிந்திலேன்” என்று ப்ரத்யபிஜ்ஞை பண்ணுகையாலே, உபயாவஸ்த்தையிலும் தேஹாதந்யனாயிருப்பானொரு ஆத்மா உண்டென்று தோற்றுகை. அதவா, ஜநம மரண பாக்த்வத்தாலே தேஹம் ஒருக்கால் தோற்றி ஒருக்கால் தோற்றாமையாலும், “நான் ஜந்மாந்தரத்தில் பண்ணினவதினுடைய பலமிது” என்கிற லோக வ்யவஹாரத்தாலே, ஆத்மா ஜநம மரணாதி ரஹிதனாய்க் கொண்டு எப்போதும் தோற்றுகையாலும் என்னவுமாம். அப்படியே, சக்ஷுராதி ரூபேண தோற்றியிருக்கிற இந்த்ரியங்கள், அந்தபதிராத்யவஸ்த்தைகளில் தோற்றாமையாலும்; ஸங்கல்பாதி ஹேதுத்வேந தோற்றியிருக்கிற மநஸ்ஸு, ஒரு காலவிசேஷங்களிலே மூடமாய்க் கொண்டு ஒன்றும் தோற்றாமையாலும்; உச்ச்வாஸ நிச்சவாஸாதிகளாலே தோற்றியிருக்கிற ப்ராணன்கள் ஓரோ மோஹ தசைகளிலே நெற்றியைக் கொற்றிப் பார்க்க வேண்டும்படி தோற்றாமையாலும்; விஷய க்ரஹண வேளையில் ப்ரகாசிக்கிற ஜ்ஞாநம் விஷய க்ரஹணாபாவ தசையில் தோற்றாமையாலும்; இப்படியன்றிக்கே, “நான் கண்ணும் செவியும் முன்பு விளங்கியிருந்தேன், இப்போது அந்தனும் பதிரனுமானேன்; முன்பு என்னுடைய மநஸ்ஸு விசதமாயிருககும், இப்போதொன்றும் தெரிகிறதில்லை; நானப்போது நிஷ்ப்ராணனாய்க் கிடந்தேன், இப்போது ஸப்ராணனானேன்; எனக்கப்போது ஜ்ஞாநமுண்டாயிருந்தது, இப்போது நசித்தது” என்று இவை தோற்றினபோதோடு தோற்றாதபோதோடு வாசியற ஆத்மா எப்போதும் தோற்றுகையாலும், இவை பலவாகையாலும், ஆத்மா ஒருவனாகையாலும் மீண்டும் இவையென்று தேஹாதிகளைப் பராமர்சிக்கிறது.

**விளக்கம் -** (இவை ஒருக்கால் தோற்றி ஒருக்கால் தோற்றாமையாலும், ஆத்மா எப்போதும் தோற்றுகையாலும்) – “இவை” என்பதன் மூலம் சரீரம் மற்றும் இந்த்ரியங்களைக் கூறுகிறார். சரீரம் “ஒரு சில நேரம் புலப்பட்டு, ஒரு சில நேரம் புலப்படாமல் இருத்தல்” என்பது என்னவென்றால், விழிப்பு நிலையில் உள்ளபோது “ஸ்தூலோஹம் க்ருசோஹம் – நான் பருத்தவன், நான் மெலிந்தவன்” என்பது போன்றதாக, “நான்” என்று உரைப்பதற்குக் காரணமாக உள்ள ஆத்மாவுடன் சேர்ந்து சரீரமும் புலப்பட்டபடி உள்ளது;

ஆனால் உறங்கும்போது அவ்விதம் புலப்படாமல் உள்ளது. "ஆத்மா எப்போதும் புலப்பட்டபடி உள்ளது" என்றால், "உறங்கும் முன்பாக இவை அனைத்தையும் அறிந்தபடி உள்ள நான், உறங்கும்போது சரீரம் உட்பட எதனையும் அறியவில்லை", என்று ஞாபகப்படுத்தி உரைப்பதால், விழிப்பு மற்றும் உறக்கம் ஆகிய இரண்டு நிலைகளிலும் சரீரத்தைக் காட்டிலும் வேறான ஆத்மா என்று ஒருவன் உள்ளதாகப் புலப்படுதல் ஆகும். அல்லது பிறப்பு மற்றும் இறப்பு ஆகிய தருணங்களில் சரீரம் ஒரு சில நேரம் புலப்பட்டு, ஒரு சில நேரம் புலப்படாமல் உள்ளது; "நான் முந்தைய பிறவிகளில் செய்தவற்றின் பலன் இது" என்று இந்த உலகில் உள்ளவர்கள் கூறுவதால், பிறப்பு மற்றும் இறப்பு ஆகியவை அற்றவனாகிய ஆத்மா எப்போதும் புலப்பட்டபடியே உள்ளது என்றும் கூறலாம். இதனைப் போன்றே, கண் முதலான இந்த்ரியங்களானவை குருடன் மற்றும் செவிடன் என்னும் நிலைகளில் வெளிப்படாமல் இருத்தல்; ஸங்கல்பம் போன்றவற்றுக்கு ஆதாரமாக உள்ள மனமானது, மயக்கம் போன்ற நிலையில் வெளிப்படாமல் உள்ளது; மூச்சை உள்ளிழுத்தல் மற்றும் விடுதல் என்பதான செயல்களில் வெளிப்பட்டபடி உள்ள ப்ராணனானது, ஒரு சில மயக்க நிலைகளில், சரீரத்தில் ப்ராணன் உள்ளது என்று நெற்றியைத் தட்டிப் பாந்த்து அறியவேண்டும்படியாக உள்ளது; ஒரு பொருளை அறியும்போது வெளிப்படும் ஞானமானது, பொருள்களை அறியாமல் உள்ளபோது வெளிப்படாமல் உள்ளது. இவற்றை வேறுவிதமாகவும் உரைக்கலாம். "நான் முன்பு கண்களும் காதுகளும் நன்கு இயங்கும்படி இருந்தேன், இப்போது குருடனும் செவிடனும் என்றானேன். நான் முன்பு ப்ராணன் அடங்கிக் கிடந்தேன், இப்போது ப்ராணனுடன் உள்ளேன். எனக்கு அப்போது ஞானம் இருந்தது, இப்போது எனது ஞானம் அழிந்தது", என்பது போன்ற விஷயங்கள் தோன்றும்போதும் தோன்றாதபோதும், ஆத்மா எந்தவிதமான வேறுபாடும் இன்றி புலப்பட்டபடியே உள்ளது; இவை பலவாக உள்ளபோதிலும் ஆத்மா ஒருவனே என்பதால், மீண்டும் "இவை" என்பதன் மூலம் சரீரம் முதலானவையே கூறப்பட்டதாகிறது.

**வ்யாக்யானம் -** தேஹத்துக்குப் பன்மை அநேகாவயவ ஸங்காதாத்மகமாகையாலே, இந்த்ரியங்களுக்குப் பன்மை சக்ஷுச்ச்ரோத்ராதி வ்யக்தி பேதத்தாலே. மநஸ்ஸுக்குப் பன்மை மநோ புத்தி சித்தாஹங்காரரூபமான பேதத்தாலே. ப்ராணனுக்குப் பன்மை, ப்ராணாபாநாதி பேதத்தாலே. புத்திக்குப் பன்மை, கட ஜ்ஞாந பட ஜ்ஞாநாதி பேதத்தாலே. இப்படி, தேஹாதிகளோரொன்றே பலவாகையாலும், இங்ஙனன்றிக்கே அஹம் புத்தி

வ்யவஹாரார்ஹனான ஆத்மா ஒருவனாகையாலும் ஆத்மா இவற்றில் விலக்ஷணனென்று கொள்ளவேணும். அதாவது இப்படி தேஹாதி ப்ரகாரத்தையும், ஆத்மாவினுடைய ப்ரகாரத்தையும் நிரூபித்தால் ஆத்மா தேஹாதிகளானவற்றில் வேறுபட்டிருப்பா னொருவனென்று அவச்யமங்கீகரிக்க வேணுமென்கை.

**விளக்கம் -** சரீரத்திற்குப் பன்மை என்பது பல அவயவங்களுடன் சேர்ந்துள்ள தன்மையால் ஆகும். இந்த்ரியங்களுக்குப் பன்மையாவது கண், காது என்ற பல வேறுபாடுகளால் ஆகும். மனதிற்குப் பன்மையாவது மனம், புத்தி, சித்தம் மற்றும் அஹங்காரம் என்பது போன்ற வேறுபாடுகளால் ஆகும். ப்ராணனுக்குப் பன்மையாவது ப்ராணன், அபாநன் முதலிய பேதங்களால் ஆகும். புத்திக்குப் பன்மையாவது “இது குடம், இது துணி” என்பது போன்ற வேறுபாடுகளை அறிவதால் ஆகும். இப்படியாகச் சரீரம் முதலானவை ஒவ்வொன்றே பலவாகப் புலப்படுவதாலும், இவை போன்றல்லாமல் “நான்” என்று அறியத்தக்கவனாகிய ஆத்மா ஒருவனே என்பதாலும், ஆத்மா இவற்றைக் காட்டிலும் வேறுபட்டவன் என்று அறியவேண்டும். அதாவது, சரீரம் முதலானவற்றின் தன்மைகள் மற்றும் ஆத்மாவின் தன்மைகள் ஆகியவற்றை நிரூபித்தால், ஆத்மாவானது சரீரம் முதலானவற்றைக் காட்டிலும் வேறுபட்டது என்பதை அவசியம் அறியவேண்டும் என்று கருத்து.

7. இந்த யுக்திகளுக்குக் கண்ணழிவுண்டேயாகிலும், சாஸ்த்ரபலத்தாலே ஆத்மா தேஹாதி விலக்ஷணாகக் கடவன்.

**அவதாரிகை -** இப்படி யுக்தியாலே ஸாதிதமானவர்த்தத்தை சாஸ்த்ரபலத்தாலே த்ருடீகரிக்கிறார் (இந்த யுக்திகளுக்குக் கண்ணழிவுண்டேயாகிலும் சாஸ்த்ர பலத்தாலே ஆத்மா தேஹாதி விலக்ஷணனாகக் கடவன்) என்று.

**விளக்கம் -** இவ்விதம் யூகம் மூலம் நிலை நிறுத்திய ஆழ்பொருளை, சாஸ்த்ரங்களுடைய வலிமையால் உரைக்கிறார்.

**வ்யாக்யானம் -** (கண்ணழிவுண்டேயாகிலும்) என்கையாலே ஸர்வதா இதுக்குக் கணணழிவு சொல்ல ஒருவர்க்கும் போகாது; அது தானுண்டாய்த்தாகிலும் இவ்வர்த்தம் ச்ருதி ஸ்ம்ருத்யாதி ஸகல சாஸ்த்ர ஸித்தமாகையாலே, சாஸ்த்ர பலந்தானே

இவ்வர்த்தத்தை ஸாதிக்குமென்று கருத்து. “பஞ்சவிம்சோயம் புருஷ:”, “பஞ்சவிம்ச ஆத்மா பவதி”, “பூதாநி ச கவர்க்கேண சவர்க்கேண இந்த்ரியாணி ச; டவர்க்கேண தவர்க்கேண ஜ்ஞாந கந்தாதயஸ் ததா மந: பகாரேணைவோக்தம் பகாரேண தவஹஹ்க்ருதி: பகாரேண பகாரேண மஹாந் ப்ரக்ருதிருச்யதே ஆத்மா து ஸ மகாரேண பஞ்சவிம்ச: ப்ரகீர்த்தித:”, “ய: பர: ப்ரக்ருதே: ப்ரோக்த: புருஷ: பஞ்சவிம்சக:, ஸ ஏவ ஸர்வபூதாத்மா நர இத்யபிதீ யதே”, “ஆத்மா சுத்தோக்ஷரச் சாந்தோ நிர்க்குண: ப்ரக்ருதே: பர:”, “ப்ரவ்ருத்த்யபசயௌ ந ஸ்த ஏகஸ்யாகிலஜத்துஷு:”, “பிண்ட: ப்ருதக் யத: பும்ஸச் சிர: பாண்யாதி லக்ஷண:, ததோஹமிதி குத்ரைதாம் ஸம்ஜ்ஞாம் ராஜந் கரோம்யஹம்”, “கிம்த்வ மேதச்சிர: கிம்நு உரஸ்தவ ததோதரம், கிமு பாதாதிகம் த்வம்வைதவைதத் கிம்மஹீ பதே ஸமஸ்தாவயவேப்யஸ் த்வம் ப்ருதக்பூப வ்யவஸ்திதம், கோஹமித்யேவ நிபுணோ பூத்வா சிந்தய பார்த்திவ”, “பஞ்சபூதாத்மகே தேஹே தேஹீ மோஹதமோ வ்ருத:, அஹம் மமைததிச்யுச்சை: குருதே குமதிர் மதிம் ஆகாசவாய்வக்நி ஜல ப்ருதிவீப்ய: ப்ருதக்ஸ்திதே, அநாத்மந்யாத்ம விஜ்ஞாநம் க: கரோதி களேபரே” என்று இப்படி ச்ருதி ஸ்ம்ருத்யாதி ஸகல சாஸ்த்ர ப்ரதிபந்நமான ஆத்மாவினுடைய தேஹாதி விலக்ஷணத்வம் துரபஹ்நவம் என்று நினைத்திறே சாஸ்த்ர பலத்தாலே ஆத்மா தேஹாதி விலக்ஷணனாகக் கடவனென்று ஸுநிச்சயமாக வருளிச்செய்தது.

**விளக்கம்** - “கண்ணழிவுண்டேயாகிலும்” என்று கூறுவதன் மூலம், இத்தகைய யூகங்களுக்கு எந்தவிதத்திலும் அழிவு உரைக்க இயலாது. இதனையும் பிறர் மறுத்து உரைத்தாலும், இந்தக் கருத்துக்கள் அனைத்தும் ச்ருதி மற்றும் ஸ்ம்ருதி என்பதான அனைத்துவிதமான சாஸ்த்ரங்கள் மூலம் வெளிப்படுவதால், சாஸ்த்ரங்களுடைய வலிமையாலும் இந்தக் கருத்துக்கள் நிலைநாட்டப்படுவதாகக் கருத்து. பஞ்சவிம்சோயம் புருஷ: - புருஷன் இருபத்து ஐந்தாவது தத்வமாகிறான் – என்றும், பஞ்சவிம்ச ஆத்மா பவதி - ஆத்மா இருபத்து ஐந்தாவது தத்வமாகிறான் என்றும், பூதாநி ச கவர்க்கேண சவர்க்கேண இந்த்ரியாணி ச; டவர்க்கேண தவர்க்கேண ஜ்ஞாந கந்தாதயஸ் ததா மந: பகாரேணைவோக்தம் பகாரேண தவஹஹ்க்ருதி: பகாரேண பகாரேண மஹாந் ப்ரக்ருதிருச்யதே ஆத்மா து ஸ மகாரேண பஞ்சவிம்ச: ப்ரகீர்த்தித: - க வரிசையில் உள்ள எழுத்துக்களால் பஞ்சபூதங்களும், ச வரிசையில் உள்ள எழுத்துக்களால் கர்ம இந்த்ரியங்களும், ட வரிசை எழுத்துக்களால் ஞான இந்த்ரியங்களும், ப என்பதால் மனமும், ப2 என்பதால் அஹங்காரமும், ப3 என்பதால் மஹத் தத்வமும், ப4 என்பதால்

ப்ரக்ருதியும் கூறப்பட்டது. ம என்பதால் இருபத்து ஐந்தாவது தத்வமான ஆத்மா கூறப்படுகிறான் என்றும், ய: பர: ப்ரக்ருதே: ப்ரோக்த: புருஷ: பஞ்சவிம்சக:, ஸ ஏவ ஸrவபூதாத்மா நர இத்யபிதீ யதே - இருபத்து ஐந்தாவது தத்வமாக எந்த ஒரு புருஷன் கூறப்படுகிறானே அவனே அனைத்து பூதங்களிலும் ஆத்மா எனப்படுகிறான் என்றும், ஆத்மா சுத்தோக்ஷரச் சாந்தோ நிர்க்குண: ப்ரக்ருதே: பர: – ஆத்மா தூய்மையானவன், அழிவற்றவன், சாந்தமானவன், மூன்று குணங்கள் அற்றவன், சரீரத்தைக் காட்டிலும் வேறானவன், அவனுக்கு வளர்தல் தேய்தல் இல்லை - என்றும், பிண்ட: ப்ருதக் யத: பும்ஸச் சிர: பாண்யாதி லக்ஷண:, ததோஹமிதி குத்ரைதாம் ஸம்ஜ்ஞாம் ராஜந் கரோம்யஹம் - எந்த ஒரு காரணத்தால் தலை, கை, கால், போன்ற உறுப்புக்கள் கொண்ட சரீரமானது ஆத்மாவைக் காட்டிலும் வேறானதாக உள்ளதோ, அந்தக் காரணத்தால் "ஆத்மா" என்ற இதன் பெயரை நான் எங்கு கூறுவேன் - என்றும், கிம்த்வ மேதச்சிர: கிம்நு உரஸ்தவ ததோதரம், கிமு பாதாதிகம் த்வம்வைததைதத் கிம்மஹீ பதே ஸமஸ்தாவயவேப்யஸ் த்வம் ப்ருதக்பூப வ்யவஸ்திதம், கோஹமித்யேவ நிபுணோ பூத்வா சிந்தய பார்த்திவ – நீ இந்தத் தலையா அல்லது தலை உன்னுடையதா, நீ இந்த வயிறா அல்லது வயிறு உன்னுடையதா, நீ இந்த கால் போன்றவையா அல்லது அவை உன்னுடையதா? நீ அனைத்தைக் காட்டிலும் வேறானவனாக உள்ளாய், நீ அனைத்தும் அறிந்தவனோ? அப்படியெனில் இவற்றில் நீ யார் என்று சிந்திப்பாயாக - என்றும், பஞ்சபூதாத்மகே தேஹே தேஹீ மோஹதமோ வ்ருத:, அஹம் மமைததிச்யுச்சை: குருதே குமதிர் மதிம் ஆகாசவாய்வக்நி ஜல ப்ருதிவீப்ய: ப்ருதக்ஸ்திதே, அநாத்மந்யாத்ம விஜ்ஞாநம் க: கரோதி களேபரே – தூய்மையான ஜீவாத்மா, தீயபுத்தி காரணமாக இருளால் சூழப்பட்டவனாக, ஐந்து பூதங்களுடைய மாறுபாடாக உள்ள இந்தச் சரீரத்தில் "நான், என்னுடையது" என்று அகப்படுகிறான். பஞ்சபூதங்களைக் காட்டிலும் வேறாக ஆத்மா உள்ளபோது, யார் இந்தச் சரீரத்தை ஆத்மா என எண்ணுவான்? – என்றும் உள்ள ச்ருதி மற்றும் ஸ்ம்ருதி முதலான அனைத்து சாஸ்த்ரங்களிலும் வெளிப்படுவதாகிய "ஆத்மா சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டது" என்று அறிதல் மிகவும் கடினமானது எனபதை அறிந்த காரணத்தால்தான், தகுந்த சாஸ்த்ரங்களின் வலிமையைத் துணையாகக் கொண்டு இங்கு இவர் "ஆத்மா தேஹாதி விலக்ஷணமாகக் கடவன்" என்று அருளிச் செய்கிறார்.

8. அஜடமாகையாவது ஜ்ஞாநத்தையொழியவும் தானே தோற்றுகை.

**வ்யாக்யானம் -** அஜடத்வமாவது-அந்நயாதீந ப்ரகாசத்வம், ஸ்வயம்ப்ரகாசத்வ மென்றபடி. ஸ்வயம்ப்ரகாசத்வமாகையாவது, தீபம் தீபாந்தர நிரபேக்ஷமாக ஸ்வவ்யவஹாரத்துக்கு ஹேதுவாகிறவோபாதி ப்ரகாசாந்தர நிரபேக்ஷமாக ஸ்வவ்யவஹாரத்துக்கு ஹேதுவாகை. அத்தையருளிச் செய்கிறார் "ஜ்ஞாநத்தையொழியவும் தானே தோற்றுகை" என்று. "ஹ்ருத்யந்தர் ஜ்யோதி: புருஷ:", "அத்ராயம் புருஷஸ் ஸ்வயம் ஜ்யோதிர் பவதி", "விஜ்ஞாநகந:", "ஆத்மா ஜ்ஞாநமய:", "தச்ச ஜ்ஞாநமயம் வ்யாபி ஸ்வஸம்வேத்ய மநூபமம்", "ஆத்ம ஸம்வேதயம் தத் ஜ்ஞாநம்" என்னக்கடவதிறே.

**விளக்கம் -** அஜடமாக உள்ள தன்மை என்றால், மற்றவற்றின் உதவி இன்றி தானாகவே தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் தன்மை ஆகும். இதனை ஸ்வயம்ப்ரகாசம் எனலாம். ஆத்மாவின் ஸ்வயம்ப்ரகாசம் என்றால்: ஒரு தீபமானது தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்கு வேறு ஒரு தீபத்தை எதிர்பாராமல் இருந்தபடி தானாகவே தன்னை வெளிப்படுத்துவது போன்று, ஆத்மாவும் தனது இருப்பை வெளிப்படுத்த வேறு எதனையும் எதிர்பாராமல் தானாகவே தன்னை வெளிப்படுத்தவல்லதாகும். இதனையே "ஜ்ஞாநத்தையொழியவும் தானே தோற்றுகை" என்று அருளிச்செய்கிறார். ப்ரு. (6-3-7) ஹ்ருத்யந்தர் ஜ்யோதி: புருஷ: - இதயத்தில் ப்ரகாசித்தபடி உள்ள ஆத்மா - என்றும், ப்ரு. (6 3-9) – அத்ராயம் புருஷஸ் ஸ்வயம் ஜ்யோதிர் பவதி – இங்கு ஆத்மா தானாகவே வெளிப்படுகிறான் - என்றும், ப்ரு. (4-4-12) – விஜ்ஞாநகந: - ஞானமே வடிவமாக உள்ளவன் - என்றும், ஸ்ரீவிபு. (6-7-32) – ஆத்மா ஜ்ஞாநமய: - ஆத்மா ஞானமயமாக உள்ளான் – என்றும், ஸ்ரீவிபு. (1-22-42) - தச்ச ஜ்ஞாநமயம் வ்யாபி ஸ்வஸம்வேத்ய மநூபமம் – அந்த ஆத்மா ஞானமயமாக உள்ளான், அனைத்து இடத்திலும் நிறைந்துள்ளான், தானே தன்னை அறிகிறான், தனக்கு ஒப்புமை இல்லாதவன் – என்றும், ஆத்ம ஸம்வேதயம் தத் ஜ்ஞாநம் - ஆத்மாவைக் குறித்து தானாகவே அறியப்படுகிறது - என்றும் உள்ள வாக்கியங்கள் காண்க.

9. ஆநந்தரூபமாகையாவது - ஸுகரூபமாயிருக்கை.

**வ்யாக்யானம்** – ஆநந்தரூபத்வமாவது ஸ்வத ஏவேஷ்டத்வம். அதாவது ஸ்வபாவமே யநுகூலமாயிருக்கை. "அநுகூலம் ஸுகம் துக்கம ப்ரதிகூலமிதி ஸ்திதே:, ஸ்வாத்மா ஸ்வஸ்யாநுகூலோஹீத்யாத்ம ஸாக்ஷிக ஏவ ஸ" என்கிறபடியே தனக்குத்தானே ஸுகரூபமாயிருக்கையென்றபடி.

**விளக்கம்** - ஆனந்தரூபமாக உள்ள தன்மை என்றால் "இயல்பாகவே இஷ்டமானதாக இருத்தல்"; அதாவது தனது இயல்பாகவே ஏற்புடையதாக இருத்தல். அநுகூலம் ஸுகம் துக்கம ப்ரதிகூலமிதி ஸ்திதே:, ஸ்வாத்மா ஸ்வஸ்யாநுகூலோஹீத்யாத்ம ஸாக்ஷிக ஏவ ஸ - ஸுகம் என்பது ஏற்புடையது, துக்கம் என்பது ஏற்புடையதல்ல, தனது ஆத்மா ஏற்புடையவனே ஆவான், அவன் தனக்குத்தானே ஸாக்ஷியாக உள்ளான் - என்பதற்கு ஏற்ப தனக்குத் தானே இன்பம் அளிக்கவல்லவனாக உள்ளான்.

10. உணர்ந்தவன் ஸுகமாக உறங்கினேனென்கையாலே.

**அவதாரிகை** - இப்படி ஆத்மஸ்வரூபம் ஸுகரூபமாயிருக்குமென்னுமிதில் ஸுப்த ப்ரபுத்த ப்ரத்யபிஜ்ஞையை ப்ரமாணமாக வருளிச்செய்கிறார் "உணர்ந்தவன்" என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் ஆத்ம ஸ்வரூபமானது ஸுகரூபமாக உள்ளது என்பதற்கு, ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழுந்த ஒருவன் தனக்கு முன்பு இருந்த நிலையின் ஞாபகம் குறித்து உரைப்பதை ப்ரமாணம் காண்பிக்கிறார்.

**வ்யாக்யானம்** – "ஸுகமாக வுறங்கினேனென்கிற ப்ரத்யபிஜ்ஞைதானே இதில் ப்ரமாணம்" என்றிறே தத்வசேகரத்திலும் இவரருளிச் செய்தது. ஸுஷுப்தி தசையில பராகர்த்தாநுபவமில்லாமையாலும், ப்ரத்யகர்த்த ஸ்புரணமுண்டாகையாலும் ஸுப்தோத் திதனாலே பராம்ருஷ்டமான ஸுகம் ஸ்வரூப ஸுகமாக வேணுமிறே. "இப்போது ஸுகம் பிறக்கும்படி யுறங்கினேன்" என்றன்றோ "ஸுகமாக வுறங்கினேன்" என்கிற விதுக்குப் பொருள் என்னவொண்ணாது. ப்ரதிபத்தி சரீரம் அப்படியன்றிக்கே "இனிதாகப் பாடினேன்" என்கிறாப் போலேயிருக்கையாலே. இது தன்னை பாஷ்யத்திலே "ஏவம் ஹி ஸுப்தோத்திதஸ்ய பராமர்ஶ:, "ஸுகம் அஹம் அஸ்வாப்ஸம்" இதி । அநேந ப்ரத்யவமர்ஶேந ததாநீம் அபி அஹம் அர்தஸ்ய ஏவ ஆத்மந: ஸுகித்வம் ஜ்ஞாத்ருத்வம் ச

ஜ்ஞாயதே । ந ச வாச்யம் யதேதாநீம் ஸுகம் பவதி ததா ததாநீம் அஸ்வாப்யம் இத்யேஷா ப்ரதிபத்தி: இதி அதத்ரூபத்வாத் ப்ரதிபத்தே:” என்று பாஷ்யகாரரருளிச் செய்தார். ஸ்வரூபமநுகூலமன்றாகில், ப்ரேமாஸ்பதத்வம் கூடாது. “ஆச்சர்யவத் பச்யதி கச்சிதேநம்” இத்யாதிகளாலும் இவ்வர்த்தம் ஸித்தம். “ஆர்த்ரம் ஜ்வலதி”, “நிர்வாணமய ஏவாயமாத்மா”, “ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா”, “ஜ்ஞாநாநந்தைக லக்ஷணம்” இத்யாதி ச்ருதி ஸ்ம்ருதிகளாலும் ஆத்மாவினுடைய ஆநந்தரூபத்வம் ஸுஸ்பஷ்டம். ஆக கீழ் ப்ரக்ருதே: பரத்வம் சொல்லுகையாலே, தேஹாத்ம வாதம் நிரஸதமாய்த்து; அஜடத்வாநந்த ரூபத்வங்களைச சொல்லுகையாலே ஜடாத்ம வாதம் நிரஸ்தமாய்த்து.

**விளக்கம்** - தத்வசேசரம் என்ற க்ரந்தத்தில், “ஸுகமாக உறங்கினேனென்கிற ப்ரத்யபிஜ்ஞைதானே இதில் ப்ரமாணம்” என்று இவரே அருளிச்செய்தார். ஆழ்ந்த உறக்கத்தின்போது ஆத்மாவிற்கு வெளிவஸ்துக்கள் குறித்த அனுபவம் இல்லை என்பதாலும், தன்னைத்தானே உணர்ந்தபடி உள்ள நிலை உள்ளது என்பதாலும், விழித்து எழுந்த ஒருவனுக்கு, சரீரத்தைக் காட்டிலும் வேறாக நின்று அனுபவித்த சுகம் என்பது, ஆத்மாவின் சுகமாகவே இருத்தல் வேண்டும் அல்லவோ? “விழித்து எழுந்த பின்னர் சுகம் கிட்டும்படியாக நான் உறங்கினேன்” என்பதை “சுகமாக உறங்கினேன்” என்பதற்கு பொருளாக உரைக்கக் கூடாது. முன்பு நடந்த நிகழ்வைக் கூறும்போது சரீரம் தொடர்ந்தபடி உள்ளதன் காரணமாக, “நான் இனிதாகப் பாடினேன்” என்று கடந்த காலமாகக் கூறுவது போன்றே உறக்க விஷயத்திலும் கூறவேண்டும். ஸ்ரீபாஷ்யத்தில்- ஏவம் ஹி ஸுப்தோத்திதஸ்ய பராமர்ஶ:, “ஸுகம் அஹம் அஸ்வாப்ஸம்” இதி । அநேந ப்ரத்யவமர்ஶேந ததாநீம் அபி அஹம் அர்தஸ்ய ஏவ ஆத்மந: ஸுகித்வம் ஜ்ஞாத்ருத்வம் ச ஜ்ஞாயதே । ந ச வாச்யம் யதேதாநீம் ஸுகம் பவதி ததா ததாநீம் அஸ்வாப்யம் இத்யேஷா ப்ரதிபத்தி: இதி அதத்ரூபத்வாத் ப்ரதிபத்தே: - உறக்கத்திலிருந்து எழுகின்ற எந்த ஒருவனும், ““அஹம் = நான்” என்பதிலிருந்து விலகி உள்ளதும், மற்ற அனைத்திற்கும் எதிர்த்தட்டாக உள்ளதும் ஆகிய ஞானமாகிய நான், அஜ்ஞானத்திற்குச் சாட்சியாக இருந்தேன்”, என்று கூறுவதில்லை; மாறாக, “நான் சுகமாக உறங்கினேன்” என்று அல்லவோ உறக்கத்திலிருந்து எழுந்த ஒருவனின் நினைவுகள் உள்ளன - என்று அல்லவோ ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்தார். ஆத்மஸ்வரூபம் ஏற்புடையதாக இல்லை என்றால் அதில் நமக்குப் பற்றுதல் ஏற்படவும் செய்யாது. கீதை (2-29) – ஆச்சர்யவத் பச்யதி கச்சிதேநம் - உயர்ந்தவன் மட்டுமே இந்த ஆத்மாவை வியப்புடன் காண்கிறான் -

என்பது போன்ற வாக்கியங்களாலும் இந்தக் கருத்து வெளிப்படுகிறது. தை. - ஆர்த்ரம் ஜ்வலதி - ப்ராசித்தபடி உள்ளது - என்றும், நிர்வாணமய ஏவாயமாத்மா - ஆனந்தமயமானவன் – என்றும், ஜ்ஞாந ஆநந்தமய: ஆத்மா - ஞானம் மற்றும் ஆனந்தத்தையே ரூபமாக கொண்டவன் - என்றும் உள்ள ச்ருதி மற்றும் ஸ்ம்ருதிகளால் ஆத்மாவின் ஆனந்தரூபமானது புலப்படுகிறது. எனவே “சரீரத்தைக் காட்டிலும் ஆத்மா வேறுபட்டது” என்று கூறியுள்ளதால், சரீரமே ஆத்மா என்ற வாதம் தள்ளப்பட்டது. ஆத்மாவிற்கு ஜடமற்ற தன்மை மற்றும் ஆனந்தம் ஆகியவற்றைக் கூறுவதால், ஆத்மா ஜடமானது என்ற வாதம் மறுக்கப்பட்டது.

11. நித்யமாகையாவது - எப்போதுமுண்டாகை.

**வ்யாக்யானம்** – நித்யத்வமாவது ஸர்வகால வர்த்தித்வம். அத்தையருளிச் செய்கிறார், “எப்போது முண்டாகையென்று”.

**விளக்கம் -** நித்யம் என்றால் அனைத்து காலத்திலும் தொடர்ந்தபடி உள்ள தன்மையாகும். இதனை இங்கு “எப்போதும் உண்டாகை” என்று அருளிச்செய்கிறார்.

12. எப்போதுமுண்டாகில் ஜந்ம மரணங்களுண்டாகிறபடி யென்னென்னில்; ஜந்மமாவது – தேஹ ஸம்பந்தம்; மரணமாவது – தேஹ வியோகம்.

**அவதாரிகை** – ஏதத் விரோதி சங்கையை யநுவதித்துப் பரிஹரிக்கிறார் “எப்போதுமுண் டாகில்” என்று தொடங்கி.

**விளக்கம் -** “ஆத்மா நித்யமானது” என்ற ஞானத்திற்கு விரோதியாக உள்ள சந்தேகத்தைத் தானே எழும்பிக் கொண்டு, அதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது ஆத்மா ஸர்வகால வர்த்தியாயிருக்குமாகில் “ப்ரஜாபதி: ப்ரஜா அஸ்ருஜத”, “ஸந்மூலாஸ் ஸோம்யேமாஸ் ஸர்வா: ப்ரஜா:”, “யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே”, “யத: ப்ரஸூதா ஜகத: ப்ரஸூதீ தோயேந ஜீவாந் வ்யஸஸர்ஜ பூம்யாம்” இத்யாதி ச்ருதி வாக்யங்களால் ஆத்மாவுக்குச் சொல்லப்படுகிற ஜந்ம

மரணங்களுண்டாகிறபடி யென்னென்னில், அவற்றிற் சொல்லுகிற ஜந்மமாவது தேஹ ஸமபந்தம், மரணமாவது தேஹ வியோகமென்கை. நித்யனாகில் ஸ்ருஷ்டிக்கு முன்பு ஏகத்வாவதாரணம் கூடாதென்னில், ஏகத்வமாவது நாமரூப விபாகாபாவமாகையாலே கூடும். ஸம்ஹார தசையில ஆத்மாவில்லையாகில, ஈச்வரனுக்கு உபாதாந்தவங்கூடாது, அக்ருதாபயாகமக்ருத விப்ரணாசங்களும் வரும், ஆகையால் ஆத்ம நித்யத்வம் கொள்ளவேணும். “ந ஜாயதே ம்ரியதே வா விபச்சித்”, “ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீசநீசௌ”, “நித்யோ நித்யாநாம்”, “ப்ரக்ருதிம் புருஷம்சைவ வித்யநாதீ உபாவபி”, “ந ஜாயதே ம்ரியதேவா கதாசிந்நாயம் பூத்வா பவிதா வா ந பூய:, அஜோ நித்யச் சாச்வதோயம் புராணோ ந ஹந்யதே ஹந்யமாநே சரீரே” என்று ஆத்ம நித்யத்வ ப்ரதிபாதகங்களான ச்ருதி ஸ்ம்ருதிகள் அநேகங்களிறே.

**விளக்கம் -** “ஆத்மா அனைத்து காலங்களிலும் உள்ளதாகும்” என்று கூறியதால், ப்ரஜாபதி: ப்ரஜா அஸ்ருஜத - நான்முகன் உயிர்களைப் படைத்தான் - என்றும், ஸந்மூலாஸ் ஸோம்யேமாஸ் ஸர்வா: ப்ரஜா: - அனைத்தும் ஸத் என்ற ப்ரஹ்மத்தையே காரணமாகக் கொண்டவை ஆகும் – என்றும், யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே - அனைத்தும் எதனிடமிருந்து உற்பத்தி ஆனதோ – என்றும், யத: ப்ரஸூதா ஜகத: ப்ரஸூதீ தோயேந ஜீவாந் வ்யஸஸர்ஜ பூம்யாம் – ப்ரக்ருதியானது எந்த ப்ரஹ்மத்திடமிருந்து தோன்றியதோ, அத்தகைய ப்ரஹ்மமானது நீர் முதலாவற்றுடன் ஆத்மாவையும் படைத்தது – என்றும் உள்ள ச்ருதி வாக்கியங்கள் மூலம், ஆத்மாவிற்கு உரைக்கப்படும் பிறப்பு மற்றும் இறப்பு ஆகியவை எப்படி ஏற்கப்படும் என்ற சந்தேகம் எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். அவற்றில் கூறப்படும் பிறப்பு என்பது சரீரத்துடன் ஆத்மாவிற்கு ஏற்படும் ஸம்பந்தம், இறப்பு என்பது சரீரத்தை விட்டுப் பிரிதல் என்பது ஆகும். ஆனால் “ஆத்மா எப்போதும் உள்ளதாகும்”, என்று கூறினால், “ஸ்ருஷ்டிக்கு முன்பு ப்ரஹ்மம் மட்டுமே இருந்தது” என்று கூறுவது பொருந்தாது அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார். “ஒன்றாகவே இருந்தது” என்றால் அனைத்து ஒரு ப்ரஹ்மமாக, பெயர் மற்றும் ரூபம் என்ற வேறுபாடுகள் இன்றி உள்ளதால் பொருந்தும். ப்ரளய காலத்தில் ஆத்மா இல்லையென்றால், ஈச்வரனுக்கு உபாதானக்காரணமாக உள்ள நிலையானது பொருந்தாது; மேலும் காரணம் இன்றி கர்மபயன்கள் எற்படுகின்றன என்ற தோஷமும் ஏற்படும். எனவே ஆத்மாக்கள் நித்யமே ஆகும் என்றே கொள்ளவேண்டும். கட. (2-18) – ந ஜாயதே ந ம்ரியதே வா விபச்சித் - அவன் பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை –

என்றும், ச்வே. (1-19) - ஜ்ஞா ஜ்ஞௌ த்வா அஜௌ ஈச அநீசௌ - அறிந்தவன், அறியாதவன் என்று இரண்டு பிறப்பற்றவர்கள் ஈசன், அநீசன் என்று கூறப்படுகிறார்கள் – என்றும், ச்வே. (6-13) - நித்யோ நித்யாநாம் - நித்யர்களுக்குள் நித்யனாக உள்ளவனும் – என்றும், கீதை (13-19) - ப்ரக்ருதிம் புருஷம் ச ஏவ வித்த்யநாதீ உபாவபி - ப்ரக்ருதி, புருஷன் என்ற ஜீவாத்மா ஆகிய இரண்டும் எப்போதும் சேர்ந்தே எல்லையற்ற காலமாக உள்ளன – என்றும், கீதை (2-20) - ந ஜாயதே ம்ரியதேவா கதாசிந்நாயம் பூத்வா பவிதா வா ந பூய:, அஜோ நித்யச் சாச்வதோயம் புராணோ ந ஹந்யதே ஹந்யமாநே சரீரே – ஆத்மா பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை; முன்பு உண்டாகி பின்பு இல்லை என்பதும் இல்லை; ஆத்மா பிறப்பற்றவன்; நித்யமானவன்; அனைத்து காலங்களிலும் உள்ளவன்; பழமையானவன்; சரீரம் கொல்லப்பட்டாலும் ஆத்மா கொல்லப்படாதவன் - என்றும் உள்ள பல ச்ருதி மற்றும் ஸ்ம்ருதி வாக்கியங்கள், ஆத்மாவின் நித்யமாக உள்ள தன்மையை வெளிப்படுத்துகின்றன.

13. அணுவானபடி என்னென்னில்.

**அவதாரிகை** – அசித் விலக்ஷணமாய், அஜடமாய், ஆநந்தரூபமாய், நித்யமாயிருந்தாலும் விபுவாயிருக்கலாமிறே; ஏவம் பூதமான ஆத்ம ஸ்வரூபமணுவென்று அறியும்படி யெங்ஙனே என்கிற ஜிஜ்ஞாஸு ப்ரச்நத்தையநுவதிக்கிறார் (அணுவானபடி யென்னென்னில்) என்று.

**விளக்கம்** - அசித் பொருள்களைக் காட்டிலும் மேம்பட்டதாகவும், ஜடப்பொருள் அல்லாததாகவும், ஆனந்தரூபமாக உள்ளதாகவும், நித்யமாகவும் இருக்கின்ற ஆத்மாவானது “எங்கும் நிறைந்தது” என்ற தன்மை கொண்டிருக்கலாம் அல்லவா? ஆனால் இப்படிப்பட்ட ஆத்மாவானது அணு அளவே ஆனது என்று எப்படி அறியப்படுகிறது என்று அறிவுள்ளவர்கள் எழுப்பும் கேள்வியை உரைக்கிறார்.

14. ஹ்ருதய ப்ரதேசத்தில் நின்றும் உத்க்ரமித்துப் போவது வருவதாமென்று சாஸ்த்ரம் சொல்லுகையாலே, ஆத்மா அணுவாகக் கடவது.

**அவதாரிகை** – அதுக்கு உத்தரமருளிச் செய்கிறார் (ஹ்ருதய ப்ரதேசத்தில் நின்றுமென்று தொடங்கி).

**விளக்கம் -** அதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, "ஹ்ருதிஹ்யேவாயமாத்மா" என்று ஹ்ருதய ஸ்திதியையும், "தேந ப்ரத்யோதேநைஷ ஆத்மா நிஷ்க்ராமதி சக்ஷுஷோவா மூர்த்நோவா அந்யேப்யோவா சரீர தேசேப்ய:" என்று உத்க்ரமணத்தையும், "யே வை கேசாஸ்மால் லோகாத் ப்ரயந்தி சந்த்ரமஸமேவ தே ஸர்வே கச்சந்தி" என்று கமநத்தையும், "தஸ்மால் லோகாத் புநரேத்யஸ்மை லோகாய கர்மணே" என்று ஆகமநத்தையும், நிர்தோஷ ப்ரமாணமான வேதாந்த சாஸ்தரம் சொலலுகையாலே அணுவாகக் கடவதென்கை. விபுவாகில் இவையொன்றும் கூடாதிறே. ஸூத்ரகாரருமாத்மாவினுடைய வணுத்வம் ஸாதிக்கிறவளவில், "உத்க்ராந்தி கத்யாகதீநாம்" என்று இவற்றாலேயிறே முந்துற ஸாதித்தது. "ஏஷோணுராதமா சேதஸா வேதிதவ்ய:", "வாலாக்ர சதபாகஸ்ய ச ததா கல்பிதஸ்ய ச, பாகோ ஜீவஸ்ஸ விஜ்ஞேய:", "ஆராக்ர மாத்ரோ ஹ்யவரோபி த்ருஷ்ட" "ஸ்வரூபமணுமாத்ரம் ஸ்யாத் ஜ்ஞாநாநந்தைக லக்ஷணம், த்ரஸரேணு ப்ரமாணாஸ்தே ரச்மி கோடி விபூஷிதா" இத்யாதி ச்ருதி ஸ்ம்ருதிகளாலும் ஆத்மாவினுடைய அணுத்வம் ஸம்ப்ரதிபந்நம்.

**விளக்கம் -** ப்ர. (3-6) - ஹ்ருதி ஹி அயமாத்மா – இதயத்தில் ஆத்மா உள்ளது - என்று ஆத்மாவின் இருப்பு என்பதை இதயத்தில் உள்ளதாக உரைத்து, ப்ரு. (4-4-2) – தேந ப்ரத்யோதேந ஏஷ ஆத்மா நிஷ்க்ராமதி சக்ஷுஷோ வா மூர்த்நோ வா அந்யேப்யோ வா சரீர தேசேப்ய: - இறக்கும்போது இதயத்தின் உட்பகுதியில் உண்டாகும் ஒளியின் உதவியுடன் இந்த ஆத்மா கண் மூலமாகவோ, தலை வழியாகவோ, அல்லது சரீரத்தின் மற்ற பகுதிகள் வழியாகவோ வெளியே கிளம்புகிறான் - என்பதாக ஆத்மா வெளிக்கிளம்புவதை உரைத்து, கௌஷீ. (1-2) – யே வை கே ச அஸ்மாத் லோகாத் ப்ரயந்தி சந்த்ரமஸம் ஏவ தே ஸர்வே கச்சந்தி – இங்ருந்து புறப்படும் அனைத்து ஆத்மாக்களும் சந்த்ரமண்டலத்தையே அடைகின்றன - என்று ஆத்மா மேலே செல்வதையும், ப்ரு. (4-4-6) - தஸ்மாத் லோகாத் புநரேதி அஸ்மை லோகாய கர்மணே – அந்த லோகத்திலிருந்து கர்மம் இயற்றுவதற்காக மீண்டும் இங்கு வருகிறான் – என்று

ஆத்மா மீண்டும் இறங்கி வருவதையும், எந்தவிதமான தோஷமும் இல்லாத ப்ரமாணமாகிய வேதாந்த சாஸ்த்ரம் கூறுவதால், “ஆத்மா அணு அளவே ஆகும்” என்று கருத்து. ஆத்மாவானது விபு என்பதால், இவை எதுவும் பொருந்தாது. ப்ரஹ்மஸூத்ரகாரரும் ஆத்மாவின் அணு அளவு குறித்து உரைக்கும்போது, ப்ர. ஸூ. (2-3-20) - உத்க்ராந்தி கதி ஆகதீநாம் - சரீரத்திலிருந்து வெளிக்கிளம்புதல், நகர்தல், மீண்டும் திரும்புதல் ஆகியவை கூறப்படுவதால் (விபு அல்லன்) என்று உரைத்தார். மேலும் முண். (3-1-9) - ஏஷ அணு: ஆத்மா சேதஸா வேதிதவ்ய: - அத்தகைய அணு அளவுள்ள ஜீவாத்மா – என்றும், ச்வே. (5-9) – வாலாக்ர சத பாகஸ்ய சததா கல்பிதஸ்ய ச | பாகோ ஜீவ: ஸ விஜ்ஞேய: - நெல் நுனியின் நூறில் ஒரு பங்கை எடுத்து, அதனை நூறு பாகமாக வெட்டினால், அதில் ஒரு பாகமே ஜீவனுடைய அளவு என்று அறியவேண்டும் – என்றும், ச்வே. (5-8) – ஆராக்ரமாத்ர: ஹி அவரோபி த்ருஷ்ட: - சாட்டை நுனியில் உள்ள முள் போன்று நுண்ணியவன் – என்றும், ஸ்வரூபமணுமாத்ரம் ஸ்யாத் ஜ்ஞாநாநந்தைக லக்ஷணம், த்ரஸரேணு ப்ரமாணாஸ்தே ரச்மி கோடி விபூஷிதா – அணு அளவே உள்ளது; ஞானமயமானது; மூன்று அணுக்கள் சேர்ந்த அளவுள்ள துகளாக நின்று, கோடிக்கணக்கான ஒளியுடன் ப்ரகாசிக்கிறது - என்றும் உள்ளது போன்ற பல ச்ருதி ஸ்ம்ருதி வாக்கியங்களாலும், ஆத்மாவின் அணுவாக உள்ள தன்மையானது நன்கு உறுதியாக்கப்பட்டது.

15. அணுவாய், ஹ்ருதயத்தளவிலே நிற்குமாகில் சரீரமெங்குமொக்க ஸுகதுக்கங்களை புஜிக்கிறபடியென்னென்னில்.

**அவதாரிகை** - இப்படியிருக்குமாகில் ஸர்வ சரீர வ்யாபியான ஸுகதுக்காநுபவம் கூடும்படியெங்ஙனே யென்கிற சங்கையை யநுவதிக்கிறார் (அணுவாய்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் உள்ளபோது, சரீரம் முழுவதும் பரவி நிற்கும் சுகம் மற்றும் துக்கத்தை ஆத்மா அனுபவிப்பது என்பது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது அணுபரிமாணமாய் ஹ்ருதய ப்ரதேசமாத்ரத்திலே நின்று விடுமாகில் “பாதே மே வேதநா சிரஸி மே வேதநா, பாதே மே ஸுகம் சிரஸி மே ஸுகம்”

என்று ஆபாதசூடம் சரீரமெங்குமொக்க ஸுகதுக்கங்களை புஜிக்கிறபடி யெங்ஙனே யென்னில் என்கை.

**விளக்கம் -** அணு அளவேயாக இருந்து, இதயத்தில் மட்டுமே நின்றுவிடுகிறது என்றால், “பாதே மே வேதநா சிரஸி மே வேதநா, பாதே மே ஸுகம் சிரஸி மே ஸுகம் – எனது கால்கள் வலிக்கிறது, எனது தலை வலிக்கிறது. எனது கால்கள் ஸுகமாக உள்ளன, எனது தலை ஸுகமாக உள்ளது” என்பதற்கு ஏற்ப, கால் தொடங்கி தலை முடிய உள்ள சுகதுக்கங்களை நாம் உணர்வது எப்படிப் பொருந்துகிறது என்ற கேள்வி எழுகிறது.

16. மணி த்யுமணி தீபாதிகள் ஓரிடத்திலேயிருக்க ப்ரபை எங்குமொக்க வ்யாபிக்குமாபோலே ஜ்ஞாநம் எங்குமொக்க வ்யாபிக்கையாலே அவற்றை புஜிக்கத் தட்டில்லை.

**அவதாரிகை -** அதுக்கு உததரமருளிச் செய்கிறார் (மணி த்யுமணி) என்று தொடங்கி.

**விளக்கம் -** அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, மணி த்யுமணி தீபாதிகளாகிற ப்ரபாவத் பதார்த்தங்கள் ஏகதேசஸ்தங்களாயிருக்கச் செய்தேயும் தத் ப்ரபை சுற்றெங்கும் வ்யாபிக்கிறாப் போலே, ஆத்மா ஹ்ருதய ப்ரதேசத்திலேயிருக்கச் செய்தே, தத் தர்மமான ஜ்ஞாநம் எங்குமொக்க வ்யாபிக்கையாலே சரீரமெங்குமொக்க ஸுகதுக்கங்களை புஜிக்கைக்கொரு ப்ரதிஹதியில்லையென்கை. இதுதான் “குணாத்வாலோகவத்” என்கிற ஸூத்ரார்த்தம்; “வாசப்தோ மதாந்தர வ்யாவ்ருத்த்யர்த்த:; ஆத்மா, ஸ்வகுணேந ஜ்ஞாநேந ஸகல தேஹம் வ்யாப்ய அவஸ்திதம், ஆலோகவத் யதா மணி த்யுமணி ப்ரப்ருதீ நாம ஏக தேசவர்த்திநாம் ஆலோக: அநேக தேசவ்யாபீ த்ருச்யதே தத்வத் ஹ்ருதயஸ்தஸ்யாத் மநோ ஜ்ஞாநம் ஸகலதேஹம் வ்யாப்ய வர்த்ததே. ஜ்ஞாது: ப்ரபா ஸ்தாநீயஸ்ய ஜ்ஞாநஸ்ய ஸ்வாச்ரயாத் அந்யத்ர வ்ருத்திர் மணிப்ரபாவத் உபபத்யத இதி ப்ரதம ஸூத்ரே ஸ்தாபிதம்” என்றிறே இதுக்கு பாஷ்யம். இப்படி ஜ்ஞாந வ்யாப்தியாலே ஸர்வத்தையும் புஜிக்குமென்னுமிடம் ப்ருஹதாரண்யகத்திலே சொல்லப்பட்டது. “ப்ரஜ்ஞயா வாசம் ஸமாருஹ்ய வாசா ஸர்வாணி நாமாந்யாப்நோதி, ப்ரஜ்ஞயாக்ராணம் ஸமாருஹ்ய க்ராணேந ஸர்வாந் கந்தாநாப்நோதி, ப்ரஜ்ஞயா சக்ஷுஸ் ஸமாருஹ்ய சக்ஷுஷா ஸர்வாணி

ரூபாண்யாப்நோதி, ப்ரஜ்ஞயா ச்ரோத்ரம் ஸமாருஹ்ய ச்ரோத்ரேண ஸர்வாஞ்சப்தாநாப்நோதி, ப்ரஜ்ஞயா ஜிஹ்வாம் ஸமாருஹ்ய ஜிஹ்வயா ஸர்வாந் ரஸாநாபநோதி, ப்ரஜ்ஞயா ஹஸ்தௌ ஸமாருஹ்ய ஹஸ்தாப்யாம் ஸர்வாணி கர்மாண்யாப்நோதி, ப்ரஜ்ஞயா சரீரம் ஸமாருஹ்ய சரீரேண ஸுகதுக்கே ஆப்நோதி, ப்ரஜ்ஞயோபஸ்தம் ஸமாருஹ்ய உபஸ்தேநாநநதம் ரதிம் ப்ரஜாம் சாப்நோதி, ப்ரஜ்ஞயா பாதௌ ஸமாருஹ்ய பாதாப்யாம் ஸர்வா கதீராப்நோதி, ப்ரஜ்ஞயா தியம் ஸமாருஹ்ய தியா விஜ்ஞாதவ்யம் காமமாப்நோதி" என்றிப்படி சொல்லுகையாலே.

**விளக்கம்** -அதாவது இரத்தினக்கல், சூரியன், தீபம் என்பது போன்று ஒளி வீசும் பொருள்கள் பலவும் அவை அவை ஒரு இடத்தில் உள்ளபோதிலும், அவற்றின் ஒளியானது அவற்றைச் சுற்றியுள்ள இடங்கள் அனைத்திலும் பரவுகின்றன. இது போன்றே ஆத்மாவானது சரீரத்தின் இதயத்தில் மட்டுமே உள்ளபோதிலும், அதன் தர்மமாகிய ஞானம் என்பது அனைத்து இடங்களிலும் பரவியுள்ளதால், சரீரத்தின் அனைத்து பகுதிகளிலும் ஏற்படும் சுக துக்கங்களை அனுபவித்தல் என்பதில் குறையில்லை. இதுவே ப்ர.ஸூ. (2-3-26) - குணாத்வா ஆலோகவத் - கிரணங்கள் போன்று தனது குணத்தினால் பரவுகிறான் - என்ற ஸூத்ரத்தின் பொருளாகும். இதற்கான ஸ்ரீபாஷ்யம், "ஸூத்திரத்தில் உள்ள "வா" என்ற சொல்லானது, மற்ற கருத்துக்களைத் தள்ளுகிறது. ஆத்மாவானது தன்னுடைய ஞானம் என்ற குணத்தால் (இது தர்மபூத ஞானம் எனப்படும்) அனைத்து சரீரங்களிலும் பரவி நிற்கிறது (குறிப்பு – ஸ்ரீபாஷ்யத்தில் "ஸகலதேஹம்" என்றுள்ளது. இது "அனைத்து சரீரங்கள்" என்றும், "சரீரத்தில் அனைத்து இடங்கள்" என்றும் இரு பொருள் தரலாம்). ஆகவே, ஆலோகவத் – ஒளியைப் போன்று ஆகும். இரத்தினம், சூரியன் போன்றவை ஓரிடத்தில் மட்டுமே உள்ளபோதிலும், அவற்றின் ப்ரகாசம் என்பது, எங்கும் பரவி நிற்பதைக் காணலாம். இதே போன்று இதயத்தில் மட்டுமே ஆத்மா உள்ளபோதிலும், அதன் ஞானம் என்பது சரீரம் முழுவதும் பரவி நிற்கிறது. ஒளியுடன் கூடிய இரத்தினத்தின் ஒளி போன்று, அறிபவனாக உள்ள ஆத்மாவின் ஞானம் என்பது, தனது ஆதாரமான (இருப்பிடமான) ஆத்மாவையும் கடந்து ப்ரகாசிக்கும் என்பதை நாம் முதல் ஸூத்ரத்திலேயே கூறினோம்" என்பதாகும். இப்படியாக ஞானமானது சரீரம் எங்கும் பரவி நிற்பதால், ஆத்மாவானது அனைத்தையும் அனுபவிக்கிறது என்று ப்ருஹத் உபநிஷத்தில் கூறப்பட்டது. மேலும் கௌஷீதகீ உபநிஷத் – ப்ரஜ்ஞயா … காமமாப்நோதி – ஞானம் மூலம் வாக்கை அடைந்து அனைத்து

பெயர்களுடன் ஸம்பந்தம் அடைகிறான்; ஞானம் மூலம் மூக்கை அடைந்து அனைத்து மணங்களையும் அனுபவிக்கிறான்; ஞானம் மூலம் செவியை அடைந்து அனைத்து ஓசைகளையும் கேட்கிறான்; ஞானம் மூலம் நாக்கை அடைந்து அனைத்து சுவைகளையும் உணர்கிறான்; ஞானத்தால் கைகளை அடைந்து அனைத்து செயல்களையும் செய்கிறான்; ஞானத்தால் சரீரத்தை அடைந்து இன்பதுன்பங்களை அனுபவிக்கிறான்; ஞானத்தால் ஆண்குறியை அடைந்து மக்களைப் பெறுகிறான்; ஞானத்தால் கால்களை அடைந்து வேண்டிய இடங்களுக்குச் செல்கிறான்; ஞானத்தால் புத்தியை அடைந்து தனது விருப்பங்களை அடைகிறான் - என்று கூறியது காண்க.

17. ஒருவன் ஏக காலத்திலே அநேக தேஹங்களைப் பரிக்ரஹிக்கிறதும் ஜ்ஞாந வ்யாப்தியாலே.

**அவதாரிகை** – ஏக சரீரமாத்ரத்துக்கிப்படி கொண்டாலும், ஒருவன் ஏக காலத்திலே அநேக தேஹங்களைப் பரிக்ரஹிக்கிறது ஸ்வரூப வ்யாப்தியாலேயாக வேணடாவோவென்கிற சங்கையிலே யருளிச் செய்கிறார் (ஒருவன்) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஒரு சரீரம் என்பதற்கு மட்டுமே இவ்விதம் கொண்டாலும், ஒருவன் ஒரே நேரத்தில் பல சரீரங்களை எடுத்தல் என்பது, ஆத்மாவின் ஸ்வரூபமானது எங்கும் பரவி நிற்கும் தன்மையால் உண்டாக வேண்டாமோ என்ற சந்தேகத்திற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ஒருவனுக்கே அநேக தேஹ பரிக்ரஹம் கால பேதத்தாலே ஸம்பவிக்குமிறே; அத்தை வ்யாவர்த்திக்கைக்காக “ஏக காலத்திலே” என்கிறது. ஏக காலே அநேக தேஹ பரிக்ரஹம் ஸௌபரி ப்ரப்ருதிகள் பக்கலிலே ஸம்ப்ரதிபந்நமிறே.

**விளக்கம்** - ஒருவனுக்கே பல சரீரங்கள் பல காலகட்டங்களில் எடுத்துக் கொள்ளுதல் என்பது உண்டாகலாம். அதனை வேறுபடுத்தி உரைப்பதற்காகவே “ஒரே நேரத்தில்” என்றார். ஒரே நேரத்தில் பல சரீரங்கள் கிட்டுதல் என்பது ஸௌபரி முனிவர் முதலானவர்கள் விஷயங்களில் அனைவராலும் ஏற்கப்பட்டது அல்லவோ?

18. அவ்யக்தமாகையாவது, கட பட ரதிகளை க்ரஹிக்கிற சக்ஷுராதிகளால் தோற்றாதிருக்கை.

வ்யாக்யானம் – "சேதநாதி யோக்யாநி கடபடாதீநி வஸ்தூநி யை: ப்ரமாணைர் வ்யஜ்யந்தே, தைரயமாத்மா ந வ்யஜ்யத இத்யவ்யக்த" என்றிறே பாஷ்யகாரரும் அருளிச் செயதது. அப்படியே இவரும் அருளிச்செய்கிறார். இங்ஙனன்றிக்கே, ஒரு ப்ரமாணத்தாலும் தோற்றாதிருக்கை என்னில், துச்சத்வம் வருமிறே. ஆகையால், மாநஸஜ்ஞாந கம்யமித்தனையல்லது ஐந்த்ரியக ஜ்ஞாந கம்யமன்றென்கை அவ்யக்த சப்தார்த்தம், "சென்று சென்று பரம்பரமாய்" என்று தொடங்கி ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தை அருளிச் செய்கிற ஆழ்வாரும், "ஞானம் கடந்ததே" என்று, ஐந்த்ரிய ஜ்ஞாந அகோசரத்வத்தையிறே அருளிச் செய்தது.

**விளக்கம்** - கீதாபாஷ்யத்தில் (2-25) – சேதநாதி யோக்யாநி கடபடாதீநி வஸ்தூநி யை: ப்ரமாணைர் வ்யஜ்யந்தே, தைரயமாத்மா ந வ்யஜ்யத இத்யவ்யக்த – அழிந்து போதல் முதலானவைகளுக்கு ஏற்றதாக உள்ள குடம், துணி போன்றவை எந்த கண் முதலான இந்த்ரியங்களால் அறியப்படுகின்றனவோ, அந்த இந்த்ரியங்களால் ஆத்மா காணப்படாமல் உள்ளதால், அது அவ்யக்தம் எனப்படுகிறது - என்று பாஷ்யகாரர் அருளிச்செய்தார். அது போன்றே இங்கு இவரும் அருளிச்செய்கிறார். இவ்விதம் சொள்ளாமல், "எந்த ஒரு ப்ரமாணத்தாலும் ஆத்மா அறியப்படாமல் உள்ளது" என்று கூறினால் சூந்யம் என்ற தன்மை ஏற்டுகிறது. ஆகவே ஆத்மாவை மனம் மூலம் அறியலாம் அல்லாமல் இந்த்ரியங்களால் அறிய இயலாது என்று கருத்து. "சென்று சென்று பரம்பரமாய்" என்பதாகத் தொடங்கி ஆத்மஸ்வரூபத்தின் மேன்மையை அருளிச்செய்த ஆழ்வார், "ஞானம் கடந்ததே" என்பதாக "ஆத்மாவானது இந்த்ரிய ஞானத்திற்கும் அப்பாற்பட்டது" என்றார் அல்லவோ?

19. அசிந்த்யமாகையாவது, அசித்தோடு ஸஜாதீயமென்று நினைக்கவொண்ணாதிருக்கை.

**வ்யாக்யானம்** – "யத: சேத்யாதி விஸஜாதீயஸ் தத ஏவ ஸர்வ வஸ்து விஸஜாதீயத்வேந தத் தத் ஸ்வபாவ யுக்ததயா சிந்தயிதுமபி நார்ஹ:" என்றிறே இதுக்கும் பாஷ்யகாரர் அருளிச் செய்தது. ஆகையாலே இவரும் இப்படி அருளிச் செய்கிறார். இங்ஙனன்றிக்கே,

அசிந்த்யத்வமாவது ஒருபடியாலும் சிந்திக்கைக்கு யோக்யமன்றிக்கே இருக்கையென்னில்; ஆத்ம ஸ்வரூப விஷயமான ச்ரவண மநநாதிகளுக்கு வையர்த்யம் ப்ரஸங்கிக்குமிறே. ஆகையால், அசித் ஸஜாதீய புத்த்யநர்ஹத்வமே அசிந்த்ய சப்தார்த்தமாகக் கடவது. ஆக, “அவ்யக்தோயமசிந்த்யோயம்” என்று கீதோபநிஷதாசார்யன் அருளிச் செய்தபடியே, இவரும் ஆத்மஸ்வரூப வைலக்ஷண்ய ப்ரகடநார்த்தமாக இவ்விடத்திலே அருளிச் செய்தாராயிற்று.

**விளக்கம் -** கீதா பாஷ்யத்தில் (2-25) – யத: சேத்யாதி விஸஜாதீயஸ் தத ஏவ ஸர்வ வஸ்து விஸஜாதீயத்வேந தத் தத் ஸ்வபாவ யுக்ததயா சிந்தயிதுமபி நார்ஹ: - எந்த ஒரு காரணத்தால் வெட்டுவதற்கு ஏற்றதாக உள்ள வாள் போன்றவற்றைக் காட்டிலும் வேறுபட்டதாக உள்ளதோ, அந்தக் காரணத்தால் ஆத்மாவானது மற்ற பொருள்களைப் போன்ற தன்மை கொண்டது அல்ல; ஆகவே அந்தப் பொருள்களுடைய இயல்பான தன்மையுடன் ஆத்மா சேர்ந்துள்ளதாக எண்ண இயலாது - என்று பாஷ்யகாரர் அருளிச்செய்தார். இதனைப் போன்றே இவரும் அருளிச்செய்கிறார். இவ்விதம் கொள்ளாமல், “அசிந்த்யம்” என்பதற்கு “எந்தவிதத்தாலும் ஆத்மாவை சிந்திக்க இயலாது” என்று பொருள் உரைத்தால், ஆத்மா விஷயமாகக் கேட்பது மற்றும் மனனம் செய்வது போன்றவற்றை உரைக்கும் வேதாந்த வாக்கியங்கள் அனைத்தும் வீணாகும் அல்லவோ? ஆகவே, “ஆத்மாவை அசித் வஸ்துக்களுக்குச் சமமாக எண்ணக்கூடாது”, என்பதே “அசிந்த்யம்” என்பதாகும். எனவே கீதை (2-25) - அவ்யக்தோயமசிந்த்யோயம் – காண இயலாதவன், அசித்திற்கு சமமாக எண்ண இயலாதவன் - என்று கீதாசார்யன் அருளிச்செய்தபடியே, ஆத்ம ஸ்வரூபத்தின் மேன்மையை இவர் அருளிச்செய்தார்.

20. நிரவயவமாகையாவது, அவயவ ஸமுதாயமன்றிக்கேயிருக்கை.

**வ்யாக்யானம்** – அதாவது, “விஜ்ஞாநமய:” என்றும், “விஜ்ஞாநகந:” என்றும் சொல்லுகிறபடியே, ஜ்ஞாநைகாரமாகையாலே அசித் வஸ்துக்களைப் போலே அவயவ ஸங்காதாத்மகமன்றிக்கேயிருக்கை.

**விளக்கம் -** தை. (4-1) - விந்ஞாநமய: - ஞானமயமாக உள்ளவன் – என்றும், ப்ரு. (4-4-12) - விஞ்ஞாநகத: - ஞானமே ரூபமாக உள்ளான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஆத்மா

ஞானத்தையே தனது வடிவமாகக் கொண்டுள்ளதால், அசித் பொருள்கள் போன்று அவயவங்களுடைய கூட்டமாக இல்லாமல் உள்ளது.

21. நிர்விகாரமாகையாவது அசித்துப்போலே விகரிக்கையின்றிக்கே ஒருபடிப்பட்டிருக்கை.

**வ்யாக்யானம்** – அதாவது “அம்ருதாக்ஷரம் ஹர:”, “ஆத்மா சுத்தோக்ஷர:” என்று, அக்ஷர சப்தவாச்யமான வஸ்துவாகையாலே, க்ஷணக்ஷரண ஸ்வபாவமாகையாலே க்ஷர சப்தவாச்யமான அசித்துப்போலே விகரிக்கையின்றிக்கே ஸதைக ரூபமாயிருக்கை. ஆகையிறே “அவிகார்யோயம்” என்று கீதோபநிஷதாசார்யன் அருளிச்செய்தது.

**விளக்கம்** - அதாவது, ச்வே. (1-10) – அம்ருதாக்ஷரம் ஹர: - மரணம் அற்றவன், அழிவற்றவன், மாற்றம் அற்றவன் - என்றும், ஸ்ரீவராஹபுராணம் (2-13-17) – ஆத்மா சுத்தோக்ஷர: - ஆத்மா தூய்மையானவன், மாற்றம் அற்றவன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப ஆத்வானவன் “அக்ஷரம்” என்ற சொல் முலம் கூறப்படுகிறான். ஆனால் அசித்தானது ஒவ்வொரு நொடியிலும் மாறியபடி உள்ளதால் “க்ஷரம்” என்ற சொல்லால் கூறப்படுகிறது. இவ்விதம் உள்ள அசித் போன்று மாற்றம் அடையாதவனாக ஆத்மா உள்ளதால், அவன் எப்போதும் ஒரே போன்று உள்ளான். இதனால்தான் கீதையில் (2-25) - அவிகார்யோயம் - ஆத்மா மாறுபாடு அடையாதவன் - என்று கீதாசார்யன் கூறினான்.

22. இப்படியிருக்கையாலே சஸ்த்ரம், அக்னி, ஜலம், வாதம், ஆதபம் தொடக்கமானவற்றால் சேதித்தல், தஹித்தல், நனைத்தல், சோஷிப்பித்தல் செய்கைக்கு அயோக்யமாயிருக்கும்.

**அவதாரிகை** – ஏவம் ப்ரகாரமாகையாலே, ச்சேத்யாதி விஸஜாதீயமாயிருக்கும் என்கிறார் மேல், (இப்படி) என்று தொடங்கி.

**விளக்கம்** -இப்படியாக ஆத்மா உள்ளதால், ஆத்மாவானது மாறுபாடுகள் அடையத்தக்க வஸ்துக்களைக் காட்டிலும் வேறுபட்டதாக இருப்பதாகும் என்கிறார்.

**வ்யாக்யானம் –** “இப்படி” என்று அவ்யக்தத்வாதிகள் நாலையும் அநுபாஷிக்கிறதாதல், நிர்விகாரத்வமாத்ரத்தையாதல். (சஸ்த்ரம், அக்நி) இத்யாதி. அதாவது சஸ்தராக்ந்யாதிகள் ச்சேதந தஹநாதிகளைப் பண்ணும்போது தத் தத் வஸ்துக்களிலே வ்யாபித்துச் செய்ய வேண்டுகையாலும், ஆத்மா ஸர்வாசித் தத்வ வ்யாபகனாகையாலே, அவற்றிற்காட்டில் அத்யந்த ஸூக்ஷ்மபூதனாகையாலும்; வ்யாப்யமாய் ஸ்தூலமாயிருக்கிற இவை வ்யாபகமாய் ஸூக்ஷ்மமான ஆத்ம வஸ்துவை வ்யாபித்து விகரிப்பிக்க மாட்டாமையாலே, சஸ்த்ராக்நி ஜல வாதாதபாதிகளாலே வரும் ச்சேதந தஹந க்லேதந சோஷணங்களுக்கு அநந்ஹமாயிருக்குமென்கை. “நைநம் சிந்தந்தி சஸ்த்ராணி நைநம் தஹதி பாவக: | ந சைநம் க்லேதயந்த்யாபோ ந சோஷயதி மாருத:”, “அச்சேத்ய: அயமதாஹ்ய: அயம் அக்லேதய: அசோஷ்ய ஏவ ச | நித்ய: ஸர்வகத: ஸ்தாணு: அசலோயம் ஸநாதந:” என்று அருளிச் செய்தானிறே.

**விளக்கம் -** “இப்படி” என்று அவ்யக்தம், அசிந்த்யம், நிரவயவம், நிர்விகாரம் ஆகிய நான்கையும் விளக்குகிறார். அம்பு, அக்னி போன்றவை அந்தந்த பொருள்களை அழிக்கும்போது, அந்தந்த பொருள்களில் புகுவதால் மட்டுமே அழியும்படியாகச் செய்ய இயலும். ஆத்மா அனைத்து அசித் வஸ்துகளில் புகுந்தபடி உள்ளதால் அவற்றைக் காட்டிலும் மிகுந்த ஸூக்ஷ்மமாக உள்ளவன் ஆவான். அம்புகள், அக்னி, நீர், காற்று போன்றவை ஆத்மாவால் நிரப்பப்பட்டதாலும், ஸ்தூலமாக உள்ளதாலும், இவை தங்களுக்குள் பரவி உள்ள ஸூக்ஷ்மமான ஆத்மாவை உட்புகுந்து மாற்றம் அடையச் செய்ய இயலாது; ஆகவே அவற்றால் ஏற்படுகின்ற வெட்டுதல், எரித்தல், நனைத்தல், உலர்த்தல் போன்றவற்றுக்கு ஆத்மா ஏற்றவன் அல்லன். இதனைக் கீதையில் (2-23) – நைநம் சிந்தந்தி சஸ்த்ராணி நைநம் தஹதி பாவக: | ந சைநம் க்லேதயந்த்யாபோ ந சோஷயதி மாருத: - இந்த ஆத்மாவை ஆயுதங்கள் வெட்டுவதில்லை, அக்னி எரிப்பதில்லை, தண்ணீர் நனைப்பதில்லை, காற்று உலர வைப்பதில்லை – என்றும், கீதை (2-24) - அச்சேத்ய: அயமதாஹ்ய: அயம் அக்லேதய: அசோஷ்ய ஏவ ச | நித்ய: ஸர்வகத: ஸ்தாணு: அசலோயம் ஸநாதந: - இந்த ஆத்மா வெட்டப்பட இயலாதவன், எரிக்கப்பட இயலாதவன், நனைக்கப்பட இயலாதவன், உலர்த்தப்பட இயலாதவன், நித்யமானவன், எங்கும் நிறைந்துள்ளவன், நிலையாக உள்ளவன், சாச்வதமானவன் - என்றும் கூறினான் அல்லவோ?

23. ஆர்ஹதர் ஆத்மாவை தேஹபரிமாணன் என்றார்கள்.

**அவதாரிகை -** இப்படி, நிர்விகாரமான ஆத்மவஸ்துவுக்கு பரிணாமித்வம் கொள்ளுகிற ஆர்ஹதமதம் அயுக்தமென்னுமிடத்தை தர்சிப்பிக்கிறார் மேல்.

**விளக்கம் -** இப்படியாக எந்தவிதமான மாற்றங்களையும் அடையாத ஆத்மாவிற்கு அளவைக் கூறுகின்ற ஜைனமதமானது யுக்திக்கு ஏற்றது அல்ல என்கிறார்.

**வ்யாக்யானம் -** ஆர்ஹதராகிறார் ஜைநந். அவர்கள் "பாதே மே வேதநா" இத்யாதி ப்ரகாரேண ஆபாதசூடம் தேஹத்திலுண்டான துக்காத்யநுபவம், ஆத்மா தேஹ பரிமாணனல்லாதபோது கூடாது; ஆகையால், ஆத்மா ஸ்வகர்மாநுகுணமாகப் பரிக்ரஹிக்கும் கஜ பிபீலிகாதி சரீரங்களுக்கு அநுகூலமாகப் பரிணமித்து, தத் தத் தேஹ பரிமாணனாயிருக்குமென்றிறே சொல்லுவது. அத்தை அருளிச் செய்கிறார் (தேஹ பரிமாணனென்றார்கள்) என்று.

**விளக்கம் -**ஆர்ஹதர் என்பது ஜைனர்களைக் குறிப்பதாகும். "அவர்கள், பாதே மே வேதநா - எனது கால்கள் வேதனை அளிக்கிறது - என்பது போன்றவற்றால் கால்கள் தொடக்கமாக சரீரத்தில் ஏற்படும் அனைத்து துன்ப அனுபவங்களும், ஆத்மாவானது சரீரத்தின் அளவு கொண்டவனக இல்லையென்றால் ஏற்படாது. ஆகவே ஆத்மாவானது தனது கர்மங்களுக்கு ஏற்ப எடுக்கின்ற யானை, எறும்பு முதலான சரீரங்களுடைய அளவுக்கு ஏற்றதான அளவை எடுத்து, அவற்றுக்குள் புகுந்து, அந்தந்த சரீரங்களுக்கு ஏற்றபடியான அளவுடன் இருக்கும்" என்கிறார்கள். இதனையே இங்கு கூறினார்.

24. அது ச்ருதி விருத்தம்.

**அவதாரிகை -** அத்தை நிராகரிக்கிறார்.

**விளக்கம் -** கடந்த சூர்ணையில் கூறப்பட்ட கருத்தை மறுக்கிறார்.

**வ்யாக்யானம் -** (அது ச்ருதி விருத்தம்) என்று. இவ்விடத்தில் இவர்க்கு விவக்ஷிதையான ச்ருதியேதென்னில்; "அம்ருதாக்ஷரம் ஹர:" என்று, ஆத்மாவினுடைய நிர்விகாரத்வ ப்ரதிபாதிகையான ச்ருதியாகவேணும்; "தேஹ பரிமாணன் என்கிற பக்ஷம், ஆத்மா நிர்விகாரன் என்கிற ச்ருதியாலே பாதிதம்" என்று இவர் தாமே தத்வசேகரத்திலே அருளிச்செயகையாலே. "ஏஷோணுராத்மா", "வாலாக்ரசத பாகஸ்ய" இத்யாதி ச்ருதிகளும், தேஹ பரிமாண பக்ஷத்துக்கு பாதிகைகளாகையாலே அவற்றையும் இவ்விடத்திலே சொல்லுவாருமுண்டு.

**விளக்கம் -**கடந்த சூர்ணையில் கூறப்பட்ட கருத்தானது ச்ருதிகளுக்கு முரணானது ஆகும் என்கிறார். இவ்விதம் இவர் உரைப்பதற்கு ஆதாரமான ச்ருதி எது என்றால், அம்ருதாக்ஷரம் ஹர: - ஆத்மா மரணம் அற்றவன், மாறுபாடு அற்றவன் – என்று ஆத்மாவின் மாறுபாடு அற்ற தன்மை வெளிப்படுத்துகின்ற ச்ருதியாகவே இருக்க வேண்டும். "ஆத்மா சரீரத்தின் அளவு கொண்டவன் என்ற கருத்தானது, ஆத்மா மாற்றம் அடையாதவன் என்ற ச்ருதியால் தள்ளப்படும்", என்று இவரே தத்வசேகரத்தில் அருளிச்செய்தார். மேலும், ஏஷோணுராத்மா - இந்த ஆத்மா அணு அளவே உள்ளவன் – என்றும், வாலாக்ரசத பாகஸ்ய – நெல்லின் நுனியை நூறுபாகமாக வெட்டினால் வரும் ஒரு பாகத்தின் அளவு கொண்டவன் - என்றும் உள்ள ச்ருதி வாக்கியங்களையும் இந்த இடத்தில் சிலர் கூறுவார்கள்.

25. அநேக தேஹங்களைப் பரிக்ரஹிக்கிற யோகிகள் ஸ்வரூபத்துக்கு சைதில்யமும் வரும்.

**அவதாரிகை -** ஏதத் விஷயமாக தூஷணாந்தரமும் அருளிச் செய்கிறார்.

**விளக்கம் -** மேலே கூறப்பட்ட கருத்திற்கு எழுகின்ற ஒரு ஆக்ஷேபத்தையும் கூறுகிறார்.

**வ்யாக்யானம் -** (அநேக தேஹங்களைப் பரிக்ரஹிக்கிற யோகிகள் ஸ்வரூபத்துக்கு சைதில்யமும் வரும்) என்று. அதாவது, தேஹ பரிமாணம் என்னும் பக்ஷத்தில், ஸம்ஸித்தயோகராய், ஸௌபரியைப் போலே ஏக காலத்திலே அநேக தேஹங்களை பரிக்ரஹிக்குமவர்களுக்கு தங்களுடைய ஸ்வரூபத்தை அநேகமாகச் சிந்நமாக்கிக் கொண்டு அவ்வவ தேஹங்களைப் பரிக்ரஹிக்க வேண்டி வருமென்கை. பரகாய ப்ரவேசமுகேந அநேக சரீரங்களைப் பரிக்ரஹிக்கிற யோகிகள் ஸ்வரூபத்துக்கு,

ஸ்தூலமான சரீரத்தை விட்டு ஸூக்ஷ்மமான சரீரத்தைப் பரிக்ரஹிக்குமளவில், இதுக்கெல்லாமது அவகாசம் போராமையாலே சைதில்யம் வருமென்னவுமாம். "ஏவஞ்சாத்மாகார்த்ஸ்ந்யம்" என்கிற ஸூத்ரத்தில் சொல்லுகிறபடியே, அல்ப மஹத் பரிமாணங்களான கஜ பிபீலிகாத சரீரங்களை ஸ்வகர்மாநுகுணமாகப் பரிக்ரஹிக்குமவர்களுக்கு, கஜ சரீரத்தை விட்டு பிபீலிகா சரீரத்தை பரிக்ரஹிக்குமளவில் கஜ சரீர ஸம பரிமாணமாயிருக்குமந்த ஸ்வரூபத்துக்கு, பிபீலிகா சரீரம் அவகாசம் போராமையாலே சைதில்யம் வருமென்று இங்ஙனே இவ்வாக்கியத்துக்கு யோஜித்தாலோவென்னில், (யோகிகள் ஸ்வரூபத்துக்கு) என்கையாலே, அது இவ்விடத்தில் இவர்க்கு விவக்ஷிதமன்று.

**விளக்கம்** - சரீரத்தின் அளவே ஆத்மா உள்ளது என்பதை ஏற்றால், சிறந்த யோக ஸித்தர்களான ஸௌபரி போன்றவர்கள் ஒரே நேரத்தில் பல சரீரங்களை எடுத்துக் கொள்ளுதல் என்னும்போது, தங்களுடைய ஆத்ம ஸ்வரூபத்தைப் பல பகுதிகளாகப் பிரித்து, அந்தந்த சரீரங்களில் புகும்படியாகச் செய்யவேண்டும் என்றாகிறது. மேலும் "கூடு விட்டு கூடு பாய்தல்" என்பது மூலம் பல சரீரங்களை எடுக்கவல்ல யோகிகளுடைய ஆத்மஸ்வரூபத்திற்கு, ஸ்தூலமான சரீரத்தை விடுத்து ஸூக்ஷ்மமான சரீரத்தை எடுக்கும்போது, அதற்கான இடம் இல்லை என்பதால் ஆத்மா உடையும் நிலை ஏற்படும். ப்ரம்ஹஸூத்ரம் (2-2-32) - ஏவம் ச ஆத்மா அகார்த்ஸ்ந்யம் - ஆத்மாவிற்கு நிறைவு இன்மை ஏற்படுவதால் - என்பதற்கு ஏற்ப, சிறியதும் பெரியதும் ஆகிய யானை மற்றும் எறும்பு போன்ற சரீரங்களைத் தங்களுடைய கர்மவினை காரணமாக எடுத்துக் கொள்பவர்களுக்கு, யானையின் சரீரத்தை விட்டு எறும்பின் சரீரத்தில் புகுவதற்கு முயலும்போது, யானையின் சரீரம் அளவிற்கு உள்ள ஆத்ம ஸ்வரூபத்தால், எறும்பின் சரீரத்தில் புகுவதற்கு இடம் இருக்காது என்பதால், ஆத்மா உடையும் நிலை ஏற்படும்; இவ்விதம் இந்த இடத்தில் பொருள் கொள்ளலாம் அல்லவோ? அதற்கு விடை அளிக்கிறார்; இத்தகைய கருத்து இந்த இடத்தில் இவரால் சிந்திக்கப்படவில்லை (அதாவது வேறுவிதமான சிந்தனை உள்ளது) என்கிறார்.

26. ஜ்ஞாநாச்ரயமாகையாவது ஜ்ஞாநத்துக்கிருப்பிடமாயிருக்கை.

**வ்யாக்யானம்** - (ஜ்ஞாநாச்ரயமாகையாவது ஜ்ஞாநத்துக்கு இருப்பிடமாயிருக்கை) ஜ்ஞாநமாவது, ஸ்வஸத்தாமாத்ரத்தாலே ஸ்வாச்ரயத்தைப் பற்றி ஸ்வ பர

வ்யவஹாரத்துக்கு உடலாயிருப்பதொரு ஆத்ம தர்மம். இதுக்கு ஆத்மா ஆச்ரயமாகையாவது தீப ப்ரபைகளிரண்டும் தேஜோ த்ரவ்யமாயிருக்கச் செய்தே தீபம் ப்ரபைக்கு ஆச்ரயமாயிருக்கிறாப்போலே, தானும் ஜ்ஞாந ஸ்வரூபனாயிருக்கச் செய்தே ஸ்வதர்மமான ஜ்ஞாநத்துக்குத தன்னையொழிய ப்ருதக் ஸ்தித்யுபலம்பங்கள் இல்லாதபடி தான் ஆதாரமாயிருக்கை. "அத யோ வேதேதம் ஜிக்ராணீதி ஸ ஆத்மா", "மநஸைவைதாந் காமாந் பச்யந் ரமதே", "ந பச்யோ ம்ருத்யும் பச்யதி", "விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத", "ஜாநாத்யேவாயம் புருஷ", "ஏஷ ஹி த்ரஷ்டா ஸ்ப்ரஷ்டா ச்ரோதா ரஸயிதா க்ராதா மந்தா போத்தா கர்த்தா விஜ்ஞாநாத்மா புருஷ:", "ஏவமேவாஸ்ய பரித்ரஷ்டு:" இத்யாதி ச்ருதிகளாலே, ஆத்மாவினுடைய ஜ்ஞாதருத்வம் ஸித்தம்.

**விளக்கம்** - ஞானம் என்றால் தனது இருப்பு மூலமாகவே தனது இருப்பிடத்தைப் பற்றி நின்று, தன்னைக் குறித்தும் மற்றவற்றைக் குறித்தும் அனைவரும் அறிவதற்கு உபாயமாக உள்ள ஆத்ம தர்மம் ஆகும். இதற்கு ஆத்மா எவ்விதம் இருப்பிடமாக உள்ளது என்றால் - விளக்கு மற்றும் அதனுடைய ஒளி ஆகிய இரண்டுமே ஒளிர்கின்ற பொருள்களாக உள்ளபோதிலும், விளக்கு என்பதே ஒளியின் இருப்பிடமாக உள்ளது; இது போன்று ஆத்மாவாகிய தானும் ஞான ஸ்வரூபமாக உள்ளபோதிலும், தனது தர்மமாக உள்ள ஞானத்திற்கு (இது தர்மபூத ஞானம் ஆகும்), ஆத்மாவாகிய தன்னை விட்டு அகன்று நிற்பதோ அல்லது அறியப்படுவதோ இயலாதவிதத்தில் தானே அதற்கு இருப்பிடமாக உள்ளது. சாந். (8-12-4) – அத யோ வேதேதம் ஜிக்ராணீதி ஸ ஆத்மா - யார் ஒருவன் "நான் இதனை முகர்கிறேன்" என்று உணர்கிறானோ அவனே ஆத்மா – என்றும், சாந். (8-12-5) – மநஸா ஏதாந் காமாந் பச்யந் ரமதே – மனம் கொண்டு அவன் அனைத்து விருப்பங்களையும் – என்றும், சாந். (7-26-2) – ந பச்யோ ம்ருத்யும் பச்யதி – ப்ரஹ்மத்தைக் கண்டவன் ம்ருத்யு எனப்படும் அவித்யையை அடைவதில்லை – என்றும், ப்ரு. (2-4-44) - விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத் – எதன் உதவியால் ஒருவன் அறிபவனை அறிகிறான் – என்றும், சாந். (7-26-2) - ஜாநாத்யேவாயம் புருஷ: – இந்தப் புருஷன் நிச்சயமாக அறிகிறான் – என்றும், ப்ர. (4-9) – ஏஷ ஹி த்ரஷ்டா ஸ்ப்ரஷ்டா ச்ரோதா ரஸயிதா க்ராதா மந்தா போத்தா கர்த்தா விஜ்ஞாநாத்மா புருஷ: - அந்தப் புருஷனே காண்பவன், கேட்பவன், சுவைப்பவன், முகர்பவன், சிந்திப்பவன், அறிபவன், செய்பவன், ஞானமயமாக உள்ளவன் ஆவான் – என்றும், ப்ர. (6-5) – ஏஷமேவாஸ்ய பரித்ரஷ்டு: - இப்படியாகப் பார்ப்பவனுக்கே சொந்தமாக உள்ளவையும் – என்றும் உள்ள ச்ருதி வாக்கியங்கள் மூலம் ஆத்மாவின் அறியும் தன்மை கூறப்பட்டது.

27. ஆத்மா ஜ்ஞாநத்துக்கிருப்பிடமன்றிக்கே ஜ்ஞாநமாத்ரமாகில்;

**அவதாரிகை** - ஏவம்பூதமான ஆத்மாவினுடைய ஜ்ஞாத்ருத்வத்தை இசையாதே ஜ்ஞாந மாத்ரமென்று சொல்லுகிற பௌத்தாதிகளுடைய மதத்தை நிராகரிக்கைக்காக தத்தத் பக்ஷத்தை அநுவதிக்கிறார்.

**விளக்கம்** - இப்படிப்பட்ட தன்மை கொண்டதாகிய ஆத்மாவானது ஞானத்திற்கு இருப்பிடமாக உள்ளது என்பதை ஏற்காமல், "ஞானம் மட்டுமே ஆகும்" என்று பௌத்தர்கள் போன்றவர்கள் கூறுகிறார்கள். அந்த மதத்தை நிராகரிப்பதற்காக, அவர்களுடைய கருத்தை கூறுகிறார்.

**வ்யாக்யானம்** - (ஆத்மா, ஜ்ஞாநத்துக்கு இருப்பிடமன்றிக்கே ஜ்ஞாந மாத்ரமாகில்) என்று.

**விளக்கம்** - "ஞானம் என்பதற்கு இருப்பிடமாக ஆத்மா இல்லை; மாறாக ஆத்மாவானது ஞானம் மட்டுமே ஆகும்", என்று கூறினால் ... (அடுத்த சூர்ணை காண்க).

28. நான் அறிவு என்று சொல்லவேணும், நான் அறியா நின்றேனென்னக் கூடாது.

அவதாரிகை –"அஹமிதம் ஜாநாமி" என்கிற ப்ரத்யக்ஷத்தாலே அத்தை நிராகரிக்கிறார் (நானறிவு) என்று தொடங்கி.

**விளக்கம்** - (கடந்த சூர்ணையில் எழுந்த ஆக்ஷேபத்தை) "அஹம் இதம் ஜாநாமி - நான் இதனை அறிகிறேன்" என்ற ப்ரத்யக்ஷம் மூலம் தள்ளுகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, ஆத்மாவுக்கு ஜ்ஞாநாச்ரயத்வமன்றிக்கே கேவலம் ஜ்ஞாநமாயிருக்குமளவே உள்ளதாகில், "நானறிவு" என்று தன்னை ஜ்ஞாநமாத்ரமாகச் சொல்லுகையொழிய, "நான் இத்தை அறியா நின்றேன்" என்று தன்னை ஜ்ஞாதாவாகச் சொல்லக்கூடாது என்கை. "இவ்வர்த்தத்தை நானறியா நின்றேன்" என்கையாலே, விஷயக்ராஹியானதொரு ஜ்ஞாநத்துக்குத் தான் ஆச்ரயம் என்னுமிடம்தோற்றா நின்றதிறே; இப்படி ஆத்மாவினுடைய ஜ்ஞாத்ருத்வம் ப்ரத்யக்ஷ ஸித்தமாகையாலே

அபாதிதமென்று கருத்து. “இதம் அபிவேத்மி இதி ஆத்ம வித்த்யோ: விபேதே ஸ்புரதி யதி தத் ஐக்யம் பாஹ்யம் அபி ஏகம் அஸ்து” என்று பட்டரும் இப்படியிறே பௌத்தமத நிராகரணம பண்ணுகிறவிடத்தில் அருளிச்செய்தது.

**விளக்கம் -** ஆத்மாவிற்கு “ஞானத்தின் இருப்பிடம்” என்ற தன்மை இன்றி, “ஞானம் மட்டுமே” என்ற தன்மையே உள்ளது என்றால், “நான் அறிவு” என்று மட்டுமே கூறப்படும் அல்லாமல், “நான் இதனை அறியா நின்றேன்” என்று தன்னை அறிபவனாகவும் கூற இயலாது அல்லவோ? “இந்த அர்த்தத்தை நான் அறியா நின்றேன்” என்று கூறுவதால், விஷயத்தை அறியக்கூடியதான ஒரு ஞானத்திற்கு ஆத்மா இருப்பிடமாக உள்ள தன்மையானது வெளிப்படுகிறது அல்லவோ? இவ்விதம் ஆத்மாவிற்கு “ஞானத்தின் இருப்பிடம்” என்ற தன்மை ப்ரத்யக்ஷமாகப் புலப்படுவதால், இந்தக் கருத்தை வேறு எதனாலும் தள்ள இயலாது. ஸ்ரீரங்கராஜஸ்த்வத்தில் (2-10) - அஹம் இதம் அபிவேத்மி இதி ஆத்ம வித்த்யோ: விபேதே ஸ்புரதி யதி தத் ஐக்யம் பாஹ்யம் அபி ஏகம் அஸ்து - “நான் இதனை அறிந்துகொள்கிறேன்” என்ற சிந்தனையின் மூலமே ஆத்மாவிற்கும் ஞானத்திற்கும் உள்ள வேற்றுமை தெளிவாகிறது. இவை இரண்டும் ஒன்றே என வாதம் செய்யும்போது, இவை இரண்டின் மூலம் அறியப்படும் விஷயம் மட்டும் ஏன் விலக்கப்படவேண்டும், மூன்றும் ஒன்றே எனக் கூற வேண்டியதுதானே – என்று ஸ்வாமி பராசரபட்டரும் பௌத்தர்களுடைய கொள்கையை மறுக்கும் இடத்தில் அருளிச்செய்தார்.

29. ஜ்ஞாதாவென்றபோதே கர்த்தா போக்தா என்னுமிடம் சொல்லிற்றாயிற்று.

**அவதாரிகை -** ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் மூன்றும் சொல்ல வேண்டியிருக்க, “ஜ்ஞாநாச்ரயமாய்” என்று, ஜ்ஞாத்ருத்வ மாத்ரத்தைச் சொல்லி, மற்றையவை இங்குச் சொல்லாதொழிவானென்? என்கிற சங்கையிலே அருளிச் செயகிறார், (ஜ்ஞாதாவென்றபோதே கர்த்தா போக்தா என்னுமிடம சொல்லிற்றாயிற்று) என்று.

**விளக்கம் -**ஆத்மாவிற்கு “அறிபவனாக இருத்தல், செயல் புரிபவனாக இருத்தல், அனுபவிப்பனாக இருத்தல்” ஆகிய மூன்றையும் கூறவேண்டும். இவ்விதம் உள்ளபோது, “ஞானத்திற்கு இருப்பிடமாக” என்று “அறிபவனாக உள்ள தன்மை” என்பதை மட்டும் ஏன் கூறவேண்டும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். அதாவது “அறிபவன்” என்று

கூறியபோதே, "செயலாற்றுபவன், அனுபவிப்பவன்" ஆகிய இரண்டுமே கூறப்பட்டதாகிறது என்கிறார்.

30. கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் ஜ்ஞாநாவஸ்தா விசேஷங்களாகையாலே.

**அவதாரிகை -** இப்படி ப்ரதிஜ்ஞா மாத்ரத்தால் போராதென்று அதுக்கு ஹேதுவை அருளிச் செய்கிறார், (கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் ஜ்ஞாநாவஸ்தா விசேஷங்களாகையாலே) என்று.

**விளக்கம் -** இவ்விதம் ப்ரதிஜ்ஞையால் மட்டுமே உரைத்தால் போதுமானது அல்ல என்று எண்ணியவராக, காரணத்தையும் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** "ஹேயோபாதேயதாஜ்ஞாநமூலம் ஜ்ஞாத்ருத்வமாத்மந:, தத்தத் ப்ரஹாணோபாதாந சிகீர்ஷாகர்த்ருதாச்ரயா" என்கிறபடியே, ஆத்மாவினுடைய ஜ்ஞாத்ருத்வம் ஹேயோபாதேய ப்ரதிபத்திக்கு ஹேதுவாயிருக்கும்; அவ்வோ ஹேயங்களை விடுகையிலும், உபாதேயங்களைப் பற்றுகையிலும் உண்டான சிகீர்ஷை கர்த்ருத்வமடியாயிருக்கும்; கர்த்தாவுக்கேயிறே சிகீர்ஷையுள்ளது; அந்த சிகீர்ஷைதான் ஜ்ஞாநாவஸ்தா விசேஷமிறே; அத்தோடு கர்த்ருத்வத்துக்கு உண்டான ப்ரத்யா ஸத்தியைக் கடாக்ஷித்து கர்த்ருத்வத்தை ஜ்ஞாநாவஸ்தா விசேஷமென்று உபசரித்து அருளிச் செய்கிறார். அல்லது, கர்த்ருத்வமாவது க்ரியாச்ரயத்வமாகையாலே அத்தை, ஜ்ஞாநாவஸ்தா விசேஷமென்று முக்க்யமாகச் சொல்லப்போகாதிறே.

**விளக்கம் -** ஹேய உபாதேயதா ஜ்ஞாந மூலம் ஜ்ஞாத்ருத்வம் ஆத்மந:, தத் தத் ப்ரஹாண உபாதாந சிகீர்ஷா கர்த்ருதாச்ரயா – ஆத்மாவின் "ஞானத்துடன் கூடிய தன்மை" என்பது நன்மை மற்றும் தீமை ஆகியவற்றை அறிவதற்கு ஆதாரமாக உள்ளது; அவற்றை விடுதல் மற்றும் கைக்கொள்ளுதல் ஆகியவற்றுக்கு ஏற்படும் ஆசை என்பதே செயலாற்றக் காரணமாகிறது - என்று கூறுவதற்கு ஏற்ப, ஆத்மாவின் "அறிபவனாக உள்ள தன்மை" என்பது தாழ்ந்தவை மற்றும் உயர்ந்தவை ஆகியவற்றை விடுதற்கும் ஏற்பதற்குக் காரணமாக உள்ளது. இவ்விதமாக உள்ள "தீயவற்றை விடுதல் மற்றும் நன்மைகளைக் கைப்பற்றுதல்" ஆகியவற்றில் உண்டாகும் ஆசை என்பதே செயல் புரிவதற்குக் காரணமாகிறது. செயலாற்றுகின்ற ஆத்மாவிற்கு அல்லவோ ஆசை உள்ளது? அத்தகைய

ஆசையானது ஞானத்தின் ஒரு நிலை அல்லவோ? அதனுடன் செயலாற்றும் தன்மையைச் சேர்த்து "ஞான நிலையின் சிறப்பு" என்று அருளிச்செய்கிறார். அல்லது செயல் புரிதல் என்பது ஒரு செயலை அண்டி நிற்பதால் அதனை "ஞான நிலையின் சிறப்பு" என்று முக்கியமாக உரைக்க இயலாது அல்லவா?

**வ்யாக்யானம்** – க்ரியையாவது, "ஜாநாதி, இச்சதி, ப்ரயததே, கரோதி" என்று ஜ்ஞாந சிகீர்ஷா ப்ரயத்நாநந்தர பாவியான ப்ரவருத்தியாகையாலும், ததாச்ரயத்வம் கர்த்ருத்வமாகையாலும் அத்தை ஜ்ஞாநாவஸ்தா விசேஷமென்றது உபசார ப்ரயோகமென்றே கொள்ளவேணும். இனி போக்த்ருத்வமாவது, போகாச்ரயத்வம். போகமாவது ஸுகதுக்க ரூபமானவநுபவ ஜ்ஞாநம். அது ஜ்ஞாநாவஸ்தா விசேஷமிறே; ததாச்ரயத்வத்தை ஜ்ஞாநாவஸ்தா விசேஷமென்று சொல்லுகையாலே இதுவும் ஔபசாரிகம். இப்படி ஜ்ஞாத்ருத்வத்துக்கும் இவற்றுக்கும் உண்டான ப்ரத்யா ஸத்த்யதிசயத்தாலே ததைக்ய கதநம் பண்ணலாம்படி இருக்கையாலே, ஜ்ஞாத்ருத்வம் சொன்னபோதே கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் சொல்லிற்றாய்த்தென்னத் தட்டில்லையிறே.

**விளக்கம்** - க்ரியை என்பது "ஜாநாதி, இச்சதி, ப்ரயததே, கரோதி – அறிகிறான், விரும்புகிறான், முயல்கிறான், செய்கிறான்" என்றுள்ள "ஞானம், ஆசை, முயற்சி மற்றும் ஆகியவற்றைத் தொடர்ந்து ஏற்படும் செயலாற்றுதல்" என்பதாகும்; அது செயலாற்றுதல் என்பதை அண்டி உள்ளதாகும்; ஆகவே அதனை "ஞான நிலையின் சிறப்பு" என்று உரைத்தலானது ஒரு உபசாரத்திற்காகவே ஆகும் என்று கொள்ளவேண்டும். அடுத்து "போக்த்ருத்வம்" என்றால் அனுபவத்திற்கு இருப்பிடமாக உள்ள தன்மை. போகம் என்றால் இன்பம் மற்றும் துன்பங்களுடைய அனுபவம் என்ற வடிவில் உள்ள ஞானம் ஆகும். அது "ஞான நிலையின் சிறப்பு" ஆகும். இப்படியாக "ஞானத்துடன் இருத்தல், செயல் புரிதல், அனுபவித்தல்" ஆகிய மூன்றுக்கும் உள்ளதான ஒன்றுடன் ஒன்று அண்மையாக இருத்தல் என்ற காரணத்தால், இவை அனைத்தும் ஒன்றே ஆகும் என்று கூறும்படியாக உள்ளன; இதனால்தான் "அறியும் தன்மை" என்று கூறியபோதே, செயலாற்றும் தன்மை மற்றும் அனுபவிக்கும் தன்மை ஆகிய இரண்டுமே கூறப்பட்டதாகிறது என்று கருத்து.

31. சிலர், குணங்களுக்கே கர்த்ருத்வமுள்ளது, ஆத்மாவுக்கில்லையென்றார்கள்.

**அவதாரிகை** - இப்படி ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமாயிருந்துள்ள கர்த்ருத்வத்தை இல்லையென்று, ப்ரக்ருதிக்கே கர்த்ருத்வத்தைக் கொள்ளுகிற ஸாங்க்யரை நிராகரிக்கிறார் (சிலர்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக ஆத்மாவிற்கு இயல்பாகவே செயலாற்றும் தன்மை உள்ளதை மறுத்து, ப்ரக்ருதிக்கே செயல் புரியும் தன்மை உள்ளது என்று கூறும் ஸாங்கியர்களைத் தள்ளுகிறார்.

**வ்யாக்யானம்** - சிலரென்று அவர்கள் பக்கல் தமக்குண்டான அநாதரம் தோற்ற அருளிச் செயகிறார். (குணங்களுக்கே கர்த்ருத்வமுள்ளது ஆத்மாவுக்கு இல்லையென்றார்கள்) குணங்களென்றும் ப்ரக்ருதியென்றும் பேதமில்லையிறே இவர்களுக்கு; ஆகையாலே ப்ரக்ருதிக்கே என்கிற ஸ்தாநத்திலே (குணங்களுக்கே) எனகிறார். “மூலப்ரக்ருதிர் நாம ஸுகதுக்க மோஹாத்மகாநி லாகவ ப்ரகாசசலநோபஷ்டம்பந கௌரவாவரண கார்யாணி, அத்யந்தாதீந்த்ரியாணி, கார்யைக நிரூபண விவேகாநி, அந்யூநாநதிரேகாணி ஸமதாமுபேதாநி ஸத்வ ரஜஸ் தமாம்ஸி த்ரவ்யாணி” என்றிறே அவர்களுடைய ஸித்தாந்தம். ஆகையால் ப்ரக்ருதிக்கே கர்த்ருத்வமுள்ளது ஆத்மாவுக்கில்லையெனறபடி. அதாவது கடவல்லியிலே, “ந ஜாயதே ம்ரியதே” இத்யாதியாலே ஆத்மாவுக்கு ஜந்ம மரணாதிகளான ப்ரக்ருதி தர்மங்களையெல்லாம ப்ரதிஷேதித்து, “ஹந்தா சேந் மந்யதே ஹந்தும் ஹதச்சேந் மந்யதே ஹதம் உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந ஹந்யதே” என்று ஹநநாதி க்ரியைகளில் கர்த்ருத்வத்தையும் நிஷேதிக்கையாலும், ஸ்ரீகீதையிலே ஸர்வேச்வரன் தானே, “நாந்யம் குணேப்ய: கர்த்தாரம் யதா த்ரஷ்டாநு பச்யதி”, “கார்யகாரண கர்த்ருத்வே ஹேது ப்ரக்ருதி ருச்யதே புருஷஸ் ஸுகதுக்காநாம் போக்த்ருத்வே ஹேதுருச்யதே” என்று சொல்லுகையாலும் இப்படி அத்யாத்ம சாஸ்த்ரங்களிலே ஆத்மாவுக்கு அகத்ருத்வத்தையும் குணங்களுக்கே கர்த்ருத்வத்தையும் சொல்லுகையாலே கர்த்ருத்வமுள்ளது ப்ரக்ருதிக்கே; ஆத்மாவுக்கு கர்த்ருத்வமில்லை போக்த்ருத்வ மாத்ரமே உள்ளதென்றாய்த்து அவர்கள் சொல்லுவது.

**விளக்கம் -** இங்கு “சிலர்” என்பதன் மூலம் அவர்களுடைய பெயர்களைக் கூட உச்சரிக்கத் தனக்கு விருப்பம் இல்லை என்பதை உணர்த்துகிறார். குணங்கள் மற்றும் ப்ரக்ருதி ஆகிய இரண்டிற்கும் இடையே இவர்கள் வேறுபாடு காண்பதில்லை. எனவே “ப்ரக்ருதிக்கே” என்னும்போது “குணங்களுக்கே” என்று படிக்கிறார். அவர்களுடைய கருத்தானது, “மூலப்ரக்ருதிர் நாம ஸுகதுக்க மோஹாத்மகாநி லாகவ ப்ரகாசசலநோபஷ்டம்பந கௌரவாவரண கார்யாணி, அத்யந்தாதீந்த்ரியாணி, கார்யைக நிரூபண விவேகாநி, அந்யூநாநதிரேகாணி ஸமதாமுபேதாநி ஸத்வ ரஜஸ் தமாம்ஸி த்ரவ்யாணி - மூலப்ரக்ருதி என்பது ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் ஆகிய மூன்று திரவியங்களைக் கொண்டதாகும்; இவை மூன்றும் சரிசமமான நிலையில் (ஒன்றை ஒன்று விஞ்சாத விதத்தில்) உள்ளன. இவற்றின் இயல்பான தன்மைகள் முறையே ஸுகம், துக்கம் மற்றும் மயக்கம் (மோகம்) என்பதாகும். ஸத்வம் அதிகமாகும்போது ஸுகம் ஏற்படும், சரீரம் எடை குறைவாக இருப்பதாகத் தோன்றும், இந்த்ரியங்கள் நன்கு இயங்கும் (இதனை லாகவ ப்ரகாசங்கள் என்பர்). ரஜஸ் அதிகமாகும்போது துக்கம் ஏற்படும், அசைவு மற்றும் இந்த்ரியங்கள் செயலாற்றுவதும் நிகழும் (சலநம் – சஞ்சலமான இயல்பு கொண்டபடியும், உஷ்டம்பநம் – யாரையேனும் வாக்குவாதத்திற்கு இழுத்தபடியும் இருப்பர்). தமஸ் அதிகமாகும்போது மயக்கம் ஏற்படும், சரீரம் பளுவாக உணரப்படும், இந்தியங்கள் மறைக்கப்படும் (கௌரவம், ஆவரணம்). இப்படிப்பட்ட குணங்களானவை இந்த்ரியங்களால் உணர இயலாதபடி உள்ளதாகும். அவற்றின் கார்யத்தைக் கொண்டே உணரவல்லதாக (அல்லது நிரூபிக்கும்படியாக) இருப்பதாகும். ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்றையும் சமநிலையில் கொண்டதான மூலப்ரக்ருதியானது அசேதனமாக உள்ளபோதிலும், எண்ணற்ற சேதநர்களுடைய இன்பத்திற்கும், மோக்ஷத்திற்கும் உதவுவதாக உள்ளது [ஸ்ரீபாஷ்யம் 2-2-1]” என்பதாகும். எனவே ப்ரக்ருதிக்கே செயாற்றுதல் உள்ளது, ஆத்மாவிற்கு இல்லை என்பது அவர்கள் கருத்து. அதாவது கட. (2-18) - ந ஜாயதே ம்ரியதே - பிறப்புமில்லை இறப்புமில்லை - என்பது போன்றவை மூலம், ஆத்மாவிற்கு பிறப்பு மற்றும் மரணம் என்பது போன்ற உலகியல் தர்மங்களை மறந்து, கட. (2-19) – ஹந்தா சேத் மந்யதே ஹந்தும் ஹதஶ்சேத் மந்யதே ஹதம் | உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந ஹந்யதே – கொல்பவன் “நான் இவனைக் கொல்கிறேன்” என்று எண்ணினாலும், கொல்லப்படுபவன் “நான் கொல்லப்பட்டேன்” என்று எண்ணினாலும், இருவரும் உண்மையை அறியவில்லை; காரணம் அவன் கொல்வதும் இல்லை, இவன் கொல்லப்படவும் இல்லை - என்பதன் மூலம் கொலை போன்ற செயல்களில் ஈடுபடுதல்

போன்றவையும் மறுக்கப்படுவதாலும், கீதை (14-49) - நாந்யம் குணேப்ய கர்த்தாரம் யதா த்ரஷ்டாநுபஶ்யதி – குணங்களைக் காட்டிலும் வேறு கர்த்தா இல்லை என்று எப்போது காண்கிறானோ - என்றும், கீதை (3-20) – கார்ய காரண கர்த்ருத்வே ஹேது: ப்ரக்ருதிர் உச்யதே | புருஷ: ஸுகதுக்காநாம் போக்த்ருத்வே ஹேதுர் உச்யதே – சரீரத்தின் இந்த்ரியங்கள் செயலாற்றுவதில் ப்ரக்ருதியே காரணம் என்றும், சுகதுக்கங்களை அனுபவிப்பதில் புருஷனே காரணம் என்றும் கூறப்படுகின்றன - என்றும் ஸர்வேச்வரன் தானே உரைப்பதாலும், இவ்விதம் அனைத்து சாஸ்த்ரங்களிலும் “ஆத்மாவிற்கு செயலாற்றும் தன்மை இல்லை, குணங்களுக்கே அந்தத் தன்மை உள்ளது” என்று கூறுவதால், “ப்ரக்ருதிக்கே செயலாற்றும் தன்மை உள்ளதே அல்லாமல் ஆத்மாவிற்கு இல்லை. அனுபவிக்கும் தன்மை மட்டுமே ஆத்மாவிற்கு உள்ளது” என்பது அவர்கள் கருத்தாக உள்ளது.

32. அப்போது இவனுக்கு சாஸ்த்ர வச்யதையும் போக்த்ருத்வமும் குலையும்.

**அவதாரிகை -** அத்தை நிராகரிக்கிறார் (அப்போது) என்று தொடங்கி.

**விளக்கம் -** கடந்த சூர்ணையில் கூறப்பட்டவற்றை நிராகரிக்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது ப்ரக்ருதிக்கே கர்த்ருத்வமாய் ஆத்மாவுக்கு கர்த்ருத்வமில்லையானபோது இவனுக்கு விதி நிஷேத ரூபமான சாஸ்த்ரத்துக்குத் தான் அதிகாரியாய்க் கொண்டு அதின் வசத்திலே நடக்கவேண்டுகையும் விஹித நிஷித்த கரண ப்ரயுக்த ஸுகதுக்கரூப பலபோக்த்ருத்வமும் சேராதென்கை. சேதனன் கர்த்தாவாகாதபோது சாஸ்த்ரத்துக்கு வையர்த்த்யம் ப்ரஸங்கிக்கும். “சாஸ்த்ர பலம் ப்ரயோக்தரி”, “கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்வாத்” என்னக் கடவதிறே. இனித் தான், “ஸ்வர்ககாமோ யஜேத”, “முமுக்ஷுர் ப்ரஹ்மோபாஸீத” என்று ஸ்வர்க மோக்ஷாதி பல போக்தாவையிறே கர்த்தாவாக சாஸ்த்ரம் நியோகிக்கிறதும்; ஆகையாலே பலபோக்தாவே கர்த்தாவாகவும் வேணுமிறே. அசேதநத்துக்கு கர்த்ருத்வமாகில் சேதநனைக் குறித்து விதிக்கவும கூடாது. “சாஸநாச் சாஸ்த்ரம்” என்னக் கடவதிறே. சாஸநமாவது ப்ரவந்த்தநம். சாஸ்த்ரத்துக்கு ப்ரவர்த்தகத்வம் போத ஜநந த்வாரத்தாலே. அசேதநமான ப்ரதாநத்துக்கு போதத்தை விளைக்கப் போகாதிறே. ஆகையால் சாஸ்த்ரம்

அர்த்தவத்தாம்போது, போக்தாவான சேதநனுக்கே கர்த்ருத்வமாக வேணும் இதெல்லாவற்றையும் திருவுள்ளம் பற்றியிறே "அப்போது இவனுக்கு சாஸ்த்ர வச்யதையும் போக்த்ருத்வமும் குலையும்" என்று அருளிச்செய்தது.

**விளக்கம் -** "ப்ரக்ருதிக்கே செயல்புரிதல் என்னும் தன்மை உள்ளது, ஆத்மாவிற்கு இல்லை" என்று உரைத்தால், "இவனால் தள்ளப்பட வேண்டியது மற்றும் ஏற்கப்பட வேண்டியது" என்பதை உரைக்கும் வடிவில் உள்ளதான சாஸ்த்ரத்திற்குத் தான் அதிகாரியாக இருந்தபடி அதில் கூறப்பட்டவற்றை ஏற்று நடத்தல் என்பதும், தள்ள வேண்டியவை மற்றும் ஏற்க வேண்டியவை என்பதைச் செய்வதால் வரும் இன்ப துன்ப பலன்களை அனுபவித்தல் என்பதும் சேராமல் போகும். மேலும் சேதநன் கர்த்தா அல்லன் என்று கூறினால், சாஸ்த்ரங்கள் அனைத்தும் வீணாகப்போகும் நிலை ஏற்படும். பூர்வமீமாம்ஸையில் - சாஸ்த்ர பலம் ப்ரயோக்தரி – கர்த்தாவானால் சாஸ்த்ரம் பயன் அளிப்பதாகும் - என்றும், ப்ர. ஸூ. (2-3-33) கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்வாத் - சாஸ்த்ரம் பயனுள்ளது என்றாகவேண்டும் என்றால், ஜீவாத்மா கர்த்தாவாகிறான் – என்றும் கூறப்பட்டது காணலாம்.

மேலும் "ஸ்வர்ககாமோ யஜேத - ஸ்வர்கத்தை விரும்புபவன் யஜ்ஞம் இயற்றக் கடவன்" என்றும், "முமுக்ஷுர் ப்ரஹ்மோபாஸீத – மோக்ஷத்தை விரும்புபவன் ப்ரஹ்மத்தை உபாசிப்பானாக" என்றும் உள்ள வாக்கியங்களின்படி, ஸ்வர்கம் மற்றும் மோக்ஷம் ஆகிய பலன்களை அனுபவிப்பவனை அல்லவோ சாஸ்த்ரங்கள் கர்த்தாவாக விதிக்கின்றன? ஆகவே பலனை அனுபவிப்பவனே கர்த்தா ஆகிறான். அசேதநத்திற்கு செயலாற்றும் தன்மை உள்ளது என்னும்போது சேதநனுக்கு அவற்றை விதிக்கக்கூடாது அல்லவோ? "சாஸநாச் சாஸ்த்ரம் – சாஸ்த்ரங்கள் என்பவை சாஸநங்கள் ஆகும்", என்று கூறப்பட்டது. சாஸநம் என்பது கட்டளை இடுதல் ஆகும். சாஸ்த்ரமானது "அதனைச் செய், இதனைச் செய்யாதே" என்று கட்டளை இடுதல் என்பது அறிவை ஏற்படுத்துதல் மூலமே ஆகும். அசேதநத்திற்கு அறிவை ஏற்படுத்த இயலாது அல்லவோ? எனவே சாஸ்த்ரங்கள் பொருளுடன் கூடியவை என்று கூறவேண்டுமானால், அனுபவிப்பனாக உள்ள சேதநனுக்கே செயல் புரியும் தன்மை உள்ளது என்றாகிறது. இவை அனைத்தையும் திருவுள்ளத்தில் கொண்டு இந்தச் சூர்ணையை அருளிச்செய்தார்.

33. ஸாம்ஸாரிக ப்ரவருத்திகளில் கர்த்ருத்வம் ஸ்வரூப ப்ரயுக்தமன்று.

**அவதாரிகை -** ஆனால் கர்த்ருத்வமெல்லாம் இவனுக்கு ஸ்வரூப ப்ரயுக்தமாமோ? என்கிற சங்கையிலே அருளிச்செயகிறார்.

**விளக்கம் -** ஆனால் செயலாற்றுதல் என்பது ஆத்மாவிற்கு இயல்பானதாகுமோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (ஸாம்ஸாரிக ப்ரவருத்திகளில் கர்த்ருத்வம் ஸ்வரூப ப்ரயுக்தமன்று) என்று. ஸாம்ஸாரிக ப்ரவருத்திகளாவன ஸ்த்ரீ அந்ந பாநாதி போகங்களை யுத்தேசித்துப் பண்ணும் ஸ்வ வ்யாபாரங்கள். அவற்றில் கர்த்ருத்வம் ஔபாதிகமாகையாலே ஸ்வரூப ப்ரயுக்தமன்றென்கை.

**விளக்கம் -** அத்தகைய கர்த்ருத்வமானது ஸம்ஸாரத்தில் இயல்பானது அல்ல. ஸம்ஸாரத்தில் உள்ளபோது உண்டாகும் செயல்பாடுகள் என்பவை பெண்கள், உணவு, நீர் போன்றவற்றை அனுபவிக்கும் பொருட்டு செய்கின்ற செயல்கள் ஆகும். அவற்றில் ஏற்படும் செயல்பாடுகள் என்பவை வந்தேறியவை என்பதால் இயல்பானவை அல்ல.

34. குண ஸம்ஸர்க்க க்ருதம்.

அவதாரிகை – ஆனால், அதுதான் இவனுக்கு வந்தபடியென்? என்கிற சங்கையிலே அருளிச் செய்கிறார்.

**விளக்கம் -** ஆனால், கடந்த சூர்ணையில் கூறப்பட்டதான “செயலாற்றுதல்” போன்றவை ஆத்மாவிற்கு எவ்விதம் வந்து சேர்ந்தன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (குணஸம்ஸர்க்க க்ருதம்) என்று குணங்களாகிறன ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்கள் அவற்றினுடைய ஸம்ஸர்க்கத்தாலே உணடானதென்றபடி. “ப்ரக்ருதே க்ரியமாணாநி குணை கர்மாணி ஸர்வச: அஹங்கார விமூடாத்மா கர்தாஹமிதி மந்யதே” என்னக் கடவதிறே. இதெல்லாம் “கர்தா சாஸ்த்ரார்த்தவர்த்தவத்வாத்” என்கிற

ஸூத்ரத்திலே பூர்வபக்ஷ ஸித்தாந்த ரூபேண பாஷ்யகாரர் தாமே விஸ்தரேண அருளிச் செய்தார்.

**விளக்கம்** -குணங்கள் என்பவை ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் என்பவை ஆகும். அவற்றினுடைய சேர்க்கை காரணமாகவே ஆத்மாவிற்கு இந்த நிலை ஏற்படுகிறது. கீதையில் (3-27) - ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வச: | அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹம் இதி மந்யதே - அனைத்து செயல்களும் அனைத்துவிதங்களிலும் ப்ரக்ருதியின் குணங்களால் செயல்படுகின்றன. ஆனால் அஹங்காரத்தால் மூடப்பட்ட அறிவு கொண்ட ஒருவன் "நான் கர்த்தா ஆவேன்" என்று எண்ணுகிறான் - என்றது காண்க. இவை அனைத்தையும் ப்ரஹ்மஸூத்ரம் (2-3-33) - கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்வாத் - சாஸ்த்ரம் பயனுள்ளது என்றாகவேண்டும் என்றால், ஜீவாத்மா கர்த்தாவாகிறான் – என்ற ஸூத்ரத்தில் பூர்வபக்ஷம் மற்றும் ஸித்தாந்த வடிவத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் மிகவும் விரிவாக அருளிச்செய்துள்ளார்.

## 35. கர்த்ருத்வந்தான் ஈச்வராதீநம்.

**அவதாரிகை** - இப்படி ஸாங்க்ய பக்ஷத்தை நிராகரித்து ஆத்மாவுக்கே கர்த்ருத்வத்தை ஸாதித்தார் கீழ்; இந்த கர்த்ருத்வம்தான், ஸ்வாயத்தமோ பராயத்தமோ என்கிற சங்கையிலே அருளிச்செய்கிறார்.

**விளக்கம்** - இப்படியாக ஸாங்க்யர்களுடைய கருத்தைத் தள்ளி, ஆத்மாவிற்குச் செயல் புரிதல் என்ற தன்மை உள்ளதை நிரூபித்தார். அடுத்து, இத்தகைய செயலாற்றுதல் என்பது ஆத்மாவிற்கு ஸ்வயமாகவே கிட்டியதா அல்லது மற்றவர்கள் வசப்பட்டதா என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (கர்த்ருத்வந்தான் ஈச்வராதீநம்) என்று, அதாவது இவ்வாத்மாவினுடைய கர்த்ருத்வந்தான் ஸ்வாதீனமன்றிக்கே, ஈச்வராதீனமாயிருக்குமென்றபடி. "பராத்து தச்ச்ருதே" என்று வேதாந்த ஸூத்ரத்தாலே ஆத்மாவினுடைய கர்த்ருத்வம் பராயத்தமென்று ஸித்தமாகச் சொல்லப்பட்டதிறே. சாஸ்த்ரார்த்தவத்வாத்துக்காக கர்த்ருத்வம் ஆத்ம தர்மமென்று கொள்ளவேணும். அந்த கர்தாவுக்கு தர்மமான ஜ்ஞாந

இச்சா ப்ரயத்நங்கள் பகவத் அதீநங்களாயிருக்கையாலும், அந்த ஜ்ஞாநாதிகள் பகவத் அநுமதியொழிய க்ரியா ஹேதுவாக மாட்டாமையாலும், இவனுடைய கர்த்ருத்வம் ஈச்வராதீநம் என்கிறது. இவனுடைய புத்தி மூலமான ப்ரயத்நத்தை அபேக்ஷித்து ஈச்வரன் அநுமதி தாநம் பண்ணுகையாலே, அந்த க்ரியா நிபந்தநமான புண்யபாபங்களும் சேதநனுக்கே ஆகிறது என்று விவரணத்திலே ஆச்சான்பிள்ளையும்; "இப்படி கர்த்ருத்வம் பரமாத்மாயத்தமானாலும், விதி நிஷேத வாக்யங்களுக்கும் வையர்த்யம் வாராது", "க்ருத ப்ரயத்நாபேக்ஷஸ்து விஹித ப்ரதிஷித்தா வையர்த்தியாதிப்ய:" என்று பரிஹரிக்கப்படுகையாலே. அதாவது விஹித ப்ரதிஷித்தங்களுக்கு வையர்த்யாதிகள் வாராமைக்காக இச்சேதநன் பணணின ப்ரதம ப்ரயத்நத்தை அபேக்ஷித்துக் கொண்டு ஈச்வரன் ப்ரவர்த்திப்பிக்குமென்றபடி, எங்ஙனேயென்னில்; எல்லா சேதநருக்கும் ஜ்ஞாத்ருத்வம் ஸ்வபாவமாகையாலே ஸாமாந்யேந ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி யோக்யத்வமுண்டாயே யிருக்கும்; இப்படியான ஸ்வரூபத்தை நிர்வஹிக்கைக்காக, ஈச்வரன் அந்தராத்மாவாய்க் கொண்டு நில்லா நிற்கும்; அவனாலே உண்டாக்கப்பட்ட ஸ்வரூப சக்தியை உடையனான சேதநன் அவ்வோ பதார்த்தங்களிலே உந்பந்ந ஜ்ஞாந சிகீர்ஷா ப்ரயத்நனாய்க் கொண்டு வர்த்தியா நிற்கும்; அவ்விடத்தில் மத்யஸ்தனாகையாலே உதாஸீநரைப் போலேயிருககிற பரமாத்மாவானவன் அந்த சேதநனுடைய பூர்வ வாஸநாநுரூபமான விதி நிஷேத ப்ரவருத்தியிலே அநுமதியையும் அநாதரத்தையுங் உடையவனாய்க் கொண்டு, விஹிதங்களிலே அநுக்ரஹத்தையும் நிஷித்தங்களிலே நிக்ரஹத்தையும் பண்ணாநிற்பானாய், அநுக்ரஹாத்மகமான புண்யத்துக்கு பலமான ஸுகத்தையும் நிக்ரஹாத்மகமான பாபத்துக்கு பலமான துக்கத்தையும அவ்வோ சேதநர்க்குக் கொடா நிற்கும்.

**விளக்கம்** - ப்ர. ஸூ. (2-3-40) - பராத் து தத் ச்ருதே: – ஜீவாத்மாவுடைய கர்த்ருத்வம் பரமாத்மாவால் உண்டாகிறது, ச்ருதி கூறுவதால் - என்ற வேதாந்தஸூத்ரத்தில், "ஆத்மாவின் செயலாற்றுதல் என்பது ஈச்வரனுக்கு வசப்பட்டதே ஆகும்" என்று அருளிச்செய்யப்பட்டது. சாஸ்திரங்கள் பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்றால், ஆத்மாவிற்குச் செயலாற்றும் தன்மை உள்ளதை ஏற்கவேண்டும். ஆத்மாவிற்கு உள்ள பண்புகளான ஞானம், இச்சை, முயற்சி போன்ற பலவும் பகவானுடைய வசப்பட்டதாக உள்ளதாலும், ஞானம் போன்றவை பகவானின் அனுமதி இன்றி செயல் புரிவதற்குக் காரணமாக இருக்காது என்பதாலும், இவனுடைய செயலாற்றுதல் என்பது ஈச்வரனுடைய வசப்பட்டது என்றாகிறது. "இவனுடைய புத்தி மூலமான முயற்சியை எதிர்பார்த்து

ஸர்வேச்வரன் அனுமதி அளிப்பதால், அந்தச் செயல்களின் விளைவாக ஏற்படும் புண்ணிய பாபங்கள் அனைத்து அந்த ஆத்மாவிற்கே சேர்கின்றன" என்று தத்வ விவரணத்தில் ஸ்வாமி ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தார்; "இவ்விதம் செயலாற்றுதல் என்பது ஸர்வேச்வரன் வசப்பட்டுள்ளபோதிலும், விதித்தல் மற்றும் தள்ளுதல் ஆகியவற்றை உரைக்கும் சாஸ்த்ர வாக்கியங்களுக்கு வீணாகுதல் என்ற நிலை ஏற்படாது"; "ஏனென்றால், ப்ர. ஸூ. (3-2-40) - பூர்வம் து பாதராயண: ஹேது வ்யபதேசாத் - பலனை அளிப்பதால் முந்தையதே என்று பாதராயணர் கூறுகிறார் - என்று பரிகாரம் கூறப்படுவதால் ஆகும்". அதாவது, சாஸ்த்ரங்களில் கூறப்பட்டதான, "இதனைச் செய், அதனைச் செய்யாதே" என்ற விதிமுறைகளுக்கு வீணாதல் என்று நிலை ஏற்படாமல் இருப்பதற்காக, சேதநன் செய்கின்ற முதல் முயற்சிற்கு ஸர்வேச்வரன் அனுமதி அளித்து, அவனைச் செயல்பட வைக்கிறான் என்று கருத்து. எப்படி என்றால், அனைத்து சேதநர்களுக்கும் "ஞானத்துடன் இருத்தல்" என்பது பொதுவாகவே உள்ளது; ஆகவே செயல்களில் ஈடுபடுதல் மற்றும் தவிர்த்தல் ஆகியவை எப்போதுமே உள்ளதாகவே இருக்கும்; இவ்விதமாக உள்ள ஜீவாத்மாவின் தன்மையை நிர்வாகம் செய்வதற்காக ஸர்வேச்வரன் அவர்களுடைய அந்தர்யாமியாக நிற்கிறான்; ஸர்வேச்வரனால் உண்டாக்கப்பட்டதான, "செயலாற்றும் தன்மை" என்பதைக் கொண்டவனாகிய ஆத்மா, அந்தந்த பொருள்களில் ஏற்படுகின்ற ஞானம், ஆசை மற்றும் முயற்சி ஆகியவற்றைக் கொண்டவனாக உள்ளான்; அங்கு நடுநிலைமையில் உள்ளதால், எதிலும் பட்டும் படாமலும் உள்ளவனாகிய பரமாத்மா, அந்தச் சேதநனுடைய பூர்வ வாசனைக்கு ஏற்ப, செய்யவேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை என்பவற்றில் ஜீவாத்மாவிற்கு அனுமதியையும் உதாஸீனத்தையும் கொண்டவனாக, செய்ய வேண்டிவற்றுக்கு அநுக்ரஹமும் செய்யக்கூடாதவற்றுக்கு தண்டனையையும் அளித்தபடி உள்ளான். தனது அனுக்ரஹத்தை உள்ளடக்கியதான புண்ணியத்திற்குப் பலனாக சுகத்தையும், தண்டனையை உள்ளடக்கியதான பாபத்திற்குத் துக்கத்தையும் அந்தச் சேதநர்களுக்கு அளிக்கிறான்.

**வ்யாக்யானம்** – இது தன்னை அபியுக்தரும் சொன்னார். "ஆதாவீஸ்வரதத்தயைவ புருஷஸ் ஸ்வாதந்த்ரிய சக்தயா ஸ்வயம் தத்தத் ஜ்ஞாந சிகீர்ஷண ப்ரயத்நாந் உத்பாதயந் வர்ததே தத்ர உபேக்ஷ்ய தத் அநுமத்ய விததத் தந்நிக்ரஹாநுக்ரஹௌ தத்தத் கர்மபலம் ப்ரயச்சதி ததஸ் ஸர்வஸ்ய பும்ஸோ ஹரி:" என்று அடியிலே ஸர்வநியந்தாவாய ஸர்வாந்தராத்மாவான ஸர்வேர்வரன் தனக்குண்டாக்கிக் கொடுத்த ஜ்ஞாத்ருத்வ ரூபமான

ஸ்வாதந்த்ரிய சக்தியாலே இப் புருஷன் தானே அவ்வோ விஷயங்களிலே ஜ்ஞாந சிகீர்ஷா ப்ரயத்நங்களை யுண்டாக்கிக் கொணடு வர்த்தியா நிற்கும்; அவ்விடத்திலே அசாஸ்த்ரீயங்களிலே உபேக்ஷித்தும் சாஸ்த்ரீயங்களிலே அநுமதி பண்ணியும் அவ்வோ விஷயங்களிலே நிக்ரஹாநுக்ரஹங்களைப் பண்ணா நின்றுகொண்டு, அவ்வோ கர்மபலத்தையும் ஸர்வேச்வரன் கொடா நிற்குமென்றார்கள், "இப்படி ஸர்வ ப்ரவருத்திகளிலும் சேதநனுடைய ப்ரதம ப்ரயத்நத்தை அபேக்ஷித்துக் கொண்டு பரமாத்மா ப்ரவர்ததிப்பியா நிற்குமென்றதாய்த்து" என்று தீபப்ரகாசத்திலே ஜீயரும் அருளிச்செய்த அர்த்தங்கள் இவவிடத்திலே அநுஸந்தேயங்கள்.

**விளக்கம்** -இந்தக் கருத்தை, நம்பிக்கைக்கு உரியவராகிய ஸ்வாமி நடாதுரம்மாளும் தத்வஸாரத்தில் (46) - ஆதாவீஸ்வரதத்தயைவ புருஷஸ் ஸ்வாதந்த்ரிய சக்தயா ஸ்வயம் தத்தத் ஜ்ஞாந சிகீர்ஷண ப்ரயத்நாந் உத்பாதயந் வர்ததே தத்ர உபேக்ஷ்ய தத் அநுமத்ய விததத் தந்நிக்ரஹாநுக்ரஹௌ தத்தத் கர்மபலம் ப்ரயச்சதி ததஸ் ஸர்வஸ்ய பும்ஸோ ஹரி: - ஆத்மாவிற்கு வழங்கப்படுவதான முதல் அனுமதி என்ற சுதந்திரமாகிய சக்தி காரணமாக, ஆத்மாவானவன் தானாகவே அந்தந்த விஷயங்ளில் செயலாற்றுவதற்கான ஆசை மற்றும் முயற்சிகளை ஏற்படுத்துகிறான்; அவற்றில் செய்யக்கூடாதவற்றில் உதாசீனமும், செய்யக்கூடியவற்றில் அனுமதியும் அளித்தபடி உள்ள ஈச்வரன், அவற்றுக்குத் தண்டணை அளித்தல் மற்றும் அனுக்ரஹம் புரிதல் ஆகியவற்றைச் செய்கிறான்; இதன் மூலம், அனைவருடைய கர்மபலனை ஸ்ரீஹரி அளித்தபடி உள்ளான் - என்றார். அதாவது அனைத்தையும் நியமிப்பவனாகவும், அனைத்திற்கும் அந்தர்யாமியாகவும் உள்ள ஸர்வேச்வரன், ஜீவாத்மாவாகிய தனக்கு ஏற்படுத்திக் கொடுத்த செயலாற்றுதல் என்ற வடிவத்தில் உள்ளதான சுதந்திரம் என்ற சக்தியால், தானாகவே அந்தந்த விஷயங்களில் ஞானம், ஆசை மற்றும் முயற்சி ஆகியவற்றை ஏற்படுத்திக் கொள்கிறான்; அந்தந்த விஷயங்களில், சாஸ்த்ரத்திற்கு விரோதமாக உள்ள செயல்களில் ஈச்வரன் தனது வெறுப்பையும், சாஸ்த்ரங்களுக்கு ஏற்ப உள்ள செயல்களில் தனது அனுமதியையும் அளிக்கிறான்; இதன் மூலம் அந்தந்த விஷயங்களுக்கான தண்டனை மற்றும் அனுக்ரஹம் ஆகியவற்றை அளிக்கிறான்; இதன் விளைவாக அந்தந்த கர்மங்களுக்கான பலன்களை அளித்தபடியும் ஈச்வரன் உள்ளான். "இப்படியாக அனைத்து விஷயங்களிலும் ஜீவாத்மாவின் முதல் முயற்சியை எதிர்பார்த்தபடி பரமாத்மா தூண்டியபடி நிற்கிறான்" என்று தீபப்ரகாசத்தில் ஸ்வாமி வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர் அருளிச்செய்தார். இந்தக் கருத்துக்களை இங்கு எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

**வ்யாக்யானம் –** ஆனால், “ஏஷ ஹ்யேவஸாது கர்ம காரயதி, தம் யமேப்யோ லோகேப்ய உநநிநீஷதி, ஏஷ ஏவாஸாது கர்ம காரயதி, தம் யமதோ நிநீஷதி” என்று உநநிநீஷையாலும், அதோநிநீஷையாலும் ஸர்வேச்வரன் தானே ஸாத்வஸாது கர்மங்களைப் பண்ணுவியாநிற்குமென்கிற இது சேரும்படி என்? என்னில், இது ஸர்வஸாதாரணமன்று; யாவனொருவன் பகவத் விஷயத்தில் அதிமாத்ரமான ஆநுகூல்யத்திலே வ்யவஸிதனாய்க்கொண்டு ப்ரவர்த்தியா நிற்கும் அவனை அநுக்ரஹியா நின்றுகொண்டு பகவான் தானே ஸ்வப்ராப்தயுபாயங்களாய், அதிகல்யாணங்களான கர்மங்களிலே ருசியை ஜநிப்பிக்கும்; யாவனொருவன் அதிமாத்ர ப்ராதிகூல்யத்திலே வ்யவஸிதனாய்க் கொண்டு ப்ரவர்த்தியா நிற்கும அவனை ஸ்வப்ராப்தி விரோதிகளாய், அதோகதி ஸாதநங்களான கர்மங்களிலே ஸங்கிப்பிக்கும் என்று இந்த ச்ருதி வாக்யங்களுக்கு அர்த்தமாகையாலே, இது தன்னை ஸர்வேச்வரன் தானே அருளிச்செய்தானிறே, “அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே இதி மத்வா பஜந்தே மாம் புதாபாவஸமந்விதா:” என்று தொடங்கி, “தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே; தேஷாமேவாநுகம்பார்த்தம் அஹமஜ்ஞாநஜம் தம: நாசயாம்யாத்மபாவஸ்த்தோ ஜ்ஞாந தீபேந பாஸ்வதா” என்றும், “அஸத்யமப்ரதிஷ்டம் தே ஜகதாஸுர நீச்வரம்” என்று தொடங்கி “மாமாத்ம பரதேஹேஷு ப்ரதவிஷந் தோப்யஸூயகா:” என்னுமதளவாக அவர்களுடைய ப்ராதிகூல்யாதிசயத்தைச் சொல்லி, “தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் க்ஷிபாம்யஜஸ்ரமசுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு” என்றும் அருளிச் செய்கையாலே. ஆகையால், அநுமந்த்ருத்வமே ஸர்வஸாதாரணம்; ப்ரயோஜகத்வம் விசேஷ விஷயமென்று கொள்ளவேணும். “க்ருத ப்ரயத்நாபேக்ஷஸ்து” என்கிற ஸூத்ரத்திலே இதெல்லாம் பாஷ்யகாரர் தாமே அருளிச்செய்தார். இவை எல்லாவற்றையும் திருவுள்ளம் பற்றியிறே “கர்த்ருத்வம்தான் ஈச்வராதீநம்” என்று அருளிச்செய்தது.

**விளக்கம் -** ஆனால், கௌஷீதகீ உபநிஷத்தில் - ஏஷ ஹ்யேவஸாது கர்ம காரயதி, தம் யமேப்யோ லோகேப்ய உநநிநீஷதி, ஏஷ ஏவாஸாது கர்ம காரயதி, தம் யமதோ நிநீஷதி - எந்த ஒரு ஆத்மாவை இந்த லோகத்திலிருந்து உயர்ந்த ஸர்வேச்வரன் எண்ணுகிறானோ, அந்த ஆத்மாவையே நல்ல செயல்கள் புரியும்படிச் செய்கிறான்; எந்த ஆத்மாவை நரகத்தில் ஆழ்த்த எண்ணுகிறானோ, அந்த ஆத்மாவைத் தீய செயல்கள் செய்யும்படியாகத்

தூண்டுகிறான் - என்று கூறுவதற்கு ஏற்ப, உயர்ந்த இடம் மற்றும் தாழ்ந்த இடம் ஆகிய இடங்களை அடையச் செய்யும்விதமாக, ஸர்வேச்வரன் தானாகவே ஆத்மாவை நல்ல செயல்கள் மற்றும் தீய செயல்கள் செய்யும்படியாகச் செய்யும்போது, மேலே கூறப்பட்ட கருத்துக்கள் எப்படிப் பொருந்தும்? இதற்கு விடை அளிக்கிறார். இது அனைவருக்கும் பொதுவானது அல்ல. யார் ஒருவன் பகவத் விஷயத்தில் எல்லையற்ற ஈடுபாடுடன் உள்ளானோ, அவனைப் பகவான் அனுக்ரஹிக்கத் தொடங்குகிறான், அவன் தன்னை அடைவதற்கான உபாயமாகப் பகவான் தானே நிற்கிறான், மிகுந்த மங்களகரமான கர்மங்களில் அவனுக்கு ஆசையை ஏற்படுத்துகிறான். ஆனால் ஒருவன், பகவானுக்கு விருப்பம் இல்லாத செயல்களைச் செய்ய முயன்றபடி இருப்பான்; அவன், பகவானாகிய தன்னை அடைவதற்கான தடைகளைப் பகவானே ஏற்படுத்தி, மேலும் தாழ்ந்த நிலைக்குச் செல்லக் கூடிய கர்மங்களை அவன் செய்யும்படியாக பகவானே தூண்டுகிறான். இதுவே மேலே உள்ள ச்ருதி வாக்கியத்தின் பொருள் என்பதால், இதனை ஸர்வேச்வரன் தானே கீதையில் (10-8) – அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே | இதி மத்வா பஜந்தே தம் புதா பாவஸமந்விதா – "நானே அனைத்தும் தோன்றுவதற்கான காரணம் ஆவேன், அனைத்தும் என்னால் செய்யப்படுகிறது" என்று அறிந்து கொள்ளும் அறிஞர்களாகிய பக்தர்கள் என்னை இடைவிடாது உபாஸிக்கிறார்கள் - என்று கூறத் தொடங்கி, கீதை (10-10) - தேஷாம் ஸதத யுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் ததாமி புத்தியோகம் தம் யேந மாம் உபயாந்தி தே - எப்போதும் என்னுடன் சேர்ந்திருக்கவேண்டும் என்னும் ஆசை கொண்டவர்களாக, என்னை மிகுந்த அன்புடன் உபாஸிப்பவர்களுக்கு, என்னை அடைவதற்கான புத்தியோகத்தை நான் அளிக்கிறேன் - என்றும், கீதை (10-11) – தேஷாம் ஏவ அநுகம்பார்த்தம் அஹம் அஜ்ஞாநஜம் தம: | நாசயாமி ஆத்ம பாவஸ்தோஜ்ஞாந தீபேந பாஸ்வதா - அப்படிப்பட்டவர்களை அனுக்ரஹிக்கும்விதமாக நான் அவர்களுடைய உள்ளத்தில் நிலைத்து நின்று, அறியாமையால் ஏற்படும் இருளை, என்னைக் குறித்த ஞானம் என்ற ஒளியால் அழிக்கிறேன் - என்றும் கூறியதைக் காணலாம். இதனைப் போன்றே கீதையில் (16-8) – அஸத்யம் அப்ரதிஷ்டம் தே ஜகதாஹு: அநீச்வரம் – அவர்கள், "இந்த உலகம் ஸத்யம் அற்றது, பரமாத்மாவை ஆதாரமாகக் கொண்டது அல்ல, என்னால் நியமிக்கப்படுவது அல்ல" என்று கூறுகிறார்கள் – என்று தொடங்கி, கீதை (16-18) - மாமாத்ம பரதேஹேஷு ப்ரத்விஷந்தோ அப்யஸூயகா: - தங்கள் உடலிலும் மற்றவர்கள் உடலிலும் அந்தர்யாமியாக உள்ள என்னை வெறுத்து, என்னைக் குறித்து பொறாமை

அடைகிறார்கள் - என்று முடித்தான். இதனைத் தொடர்ந்து கீதையில் (16-19) – தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் | க்ஷிபாமி அஜஸ்ரம் அஶுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு - இப்படியாக யார் என்னை வெறுக்கிறார்களோ, பாபம் செய்கிறார்களோ, கொடியவர்களோ, அப்படிப்பட்டவர்களை நான் இந்த ஸம்ஸாரச் சூழற்சியில் தொடர்ந்து உழலும்படியாக அஸுரப் பிறவிகளில் தள்ளுகிறேன் - என்றது காண்க. ஆகவே கர்மங்களுக்கான அனுமதி அளித்தல் என்பது அனைவருக்கும் பொதுவானதே ஆகும். சிறந்த கர்மங்களைச் செய்யவைத்தல் என்பது மட்டுமே சிறப்பித்துக் கூறப்பட்டதாகக் கொள்ளவேண்டும். ப்ர. ஸூ. (3-2-40) - பூர்வம் து பாதராயண: ஹேதுவ்யபதேசாத் - பலனை அளிப்பதால் முந்தையதே என்று பாதராயணர் கூறுகிறார் - என்பதில் இவை அனைத்தையும் பாஷ்யகாரர் தானே அருளிச்செய்தார். இவை அனைத்தையும் திருவுள்ளம் பற்றியே சூர்ணையில் "கர்த்ருத்வம்தான் ஈச்வராதீநம்" என்று அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** – ஆக, கீழ்ச் செய்ததாயிற்று : "ஜ்ஞாநாச்ரயமாகையாவது ஜ்ஞாநத்துக்கு இருப்பிடமாயிருக்கை" என்று ப்ரதமத்திலே ஆத்மாவினுடைய ஜ்ஞாத்ருத்வத்தைச் சொல்லி, ஜ்ஞாந மாத்ரமென்பாரை நிராகரித்துக்கொண்டு, ஜ்ஞாத்ருத்வ கதநாநந்தரம் கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் சொல்லவேண்டுகையாலே அவை இரண்டும் ஜ்ஞாத்ருத்வ பலத்தாலே தன்னடையே வருமென்னுமிடத்தை தர்சிப்பித்து, குணங்களுக்கே கர்த்ருத்வமுள்ளது ஆத்மாவுக்கு இல்லை என்பாரை நிராகரித்துக் கொண்டு, ஆத்மாவினுடைய கர்த்ருத்வத்தை ஸ்தாபித்து, அந்த கர்த்ருத்வத்தில் ஸ்வரூப ப்ரயுக்தமல்லாத அம்சத்தையும், அதுதானிவனுக்கு வருகைக்கடியையும் சொல்லி, இப்படி ஆத்மாவுக்குண்டான கர்த்ருத்வம்தான் ஸர்வாவஸ்தையிலும் ஈச்வராதீநமா யிருககுமென்று நிகமித்தாராயிற்று. இதெல்லாம் ஆத்மாவினுடைய ஜ்ஞாநாச்ரயத்வ கதநமடியாக வந்ததிறே.

**விளக்கம்** -ஆகவே இதுவரை கூறப்பட்டது என்ன? "ஜ்ஞாநாச்ரயமாகையாவது ஜ்ஞாநத்துக்கு இருப்பிடமாயிருக்கை" என்று தொடக்கத்தில், ஆத்மாவின் "அறிபவனாக உள்ள தன்மை" என்பதை உரைத்தார்; ஆத்மாவானது ஞானம் மட்டுமே ஆவான் என்று கூறும் கருத்தைத் தள்ளினார்; அறிபவனாக உளள தன்மை என்பதைக் கூறியதைத் தொடர்ந்து, செயல் புரிபவனாக இருத்தல் மற்றும் அனுபவிப்பனாக இருத்தல் ஆகிய

இரண்டையும் கூறவேண்டும் என்பதால், அவை இரண்டும், அறிபவனாக உள்ள தன்மை என்பதைத் தொடர்ந்து தாங்களாகவே வெளிப்படும் என்று உணர்த்தினார்; தொடர்ந்து, “குணங்களுக்கே செயல் புரியும் தன்மை உள்ளது, ஆத்மாவிற்கு அல்ல” என்று கூறும் வாதத்தை தள்ளினார்; ஆத்மாவின் செயல் புரியும் தன்மை என்பதை நிலை நாட்டினார்; அத்தகைய செயலாற்றும் தன்மை என்பது ஆத்மாவிற்கு ஸ்வரூபத்திலேயே உள்ளதல்ல என்றும், அது அவனுக்கு வந்து சேர்கின்ற ஒன்றாகும் என்றும் உரைத்தார். இப்படியாக ஆத்மாவுக்கு உள்ள செயலாற்றும் தன்மை என்பதும், அனைத்து நிலைகளிலும் ஈச்வரனுக்கு வசப்பட்டே உள்ளதாகும் என்றூம் கூறி நிறைவு செய்தார்.

**அவதாரிகை** - இப்படி ஆத்மா ஜ்ஞாநாச்ரயமாயிருக்குமாகில், “யோ விஜ்ஞாநே திஷ்ட்டந்”, “விஜ்ஞாநமய:”, “விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே” என்றும், “ஜ்ஞாந ஸ்வரூபமத்யந்த நிர்மலம் பரமார்த்தத:”, “ஜ்ஞாந ஸ்வரூபமகிலம் ஜகதேததபுத்தய:”, “விஜ்ஞாநம் பரமார்த்தோ ஹி த்வைதி நோதத்யதர்சிந:” என்றும் சாஸ்த்ரங்களிலே இவனை ஜ்ஞாநமென்று சொல்லுவானேன்? என்கிற ஜிஜ்ஞாஸு ப்ரச்நத்தை அநுவதிக்கிறார்.

**விளக்கம்** - இவ்விதம் ஆத்மாவானது ஞானத்திற்கு இருப்பிடம் என்று கூறும்போது, ப்ரு. (3-7-22) - யோ விஜ்ஞாநே திஷ்டந் – விஜ்ஞாநத்தில் உறைபவன் யாரோ – என்றும், தைத். (2-4-1) - விஜ்ஞாநமய: - ஞானமயமாக உள்ளவனும் – என்றும், தை. (2-5) - விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே - ஜ்ஞானம் யஜ்ஞத்தை இயற்றுகிறது – என்றும், ஸ்ரீவிபு. (1-2-6) – ஜ்ஞாந ஸ்வரூபம் அத்யந்த நிர்மலம் பரமார்த்தத: – ஞானமயமானவனும், அனைத்து குணங்களும் நீங்கப் பெற்றவனும், இதனால் தூய்மையாக உள்ளவனும் – என்றும், ஸ்ரீவிபு. (1-4-40) - ஜ்ஞாந ஸ்வரூபம் அகிலம் ஜகத் ஏதத் அபுத்தய: - இந்த உலகம் ஞானஸ்வரூபமாகவே உள்ளது – என்றும், ஸ்ரீவிபு. (2-14 -31) - விஜ்ஞாநம் பரமார்த்தோ ஹி த்வைதிநோ அதத்ய தர்சிந: - ஞானமயமான ப்ரஹ்மத்தை இவ்விதம் அறிவதே உண்மையானது; இரண்டு என்று எண்ணியபடி உள்ளவர்கள் உண்மை அறியாதவர் ஆவர் – என்றும் பலவிதமாகச் சாஸ்த்ரங்களில் ஆத்மாவை ஞானம் என்று ஏன் கூற வேண்டும் என்று அறிய விரும்புபவர்களுடைய கேள்வியை உரைக்கிறார்.

36. ஜ்நாநாச்ரயமாகில் சாஸ்த்ரங்களிலே இவனை ஜ்ஞாநமென்று சொல்லுவானேன்? என்னில்;

**வ்யாக்யானம்** – “ஜ்நாநாச்ரயமாகில் சாஸ்த்ரங்களிலே இவனை ஜ்ஞாநமென்று சொல்லுவானேன்? என்னில்” என்று,

**விளக்கம்** - அந்தக் கேள்வியானது, “ஆத்மாவானது ஞானத்தின் இருப்பிடம் என்றால், சாஸ்த்ரங்களில் ஆத்மாவை ஞானம் என்று ஏன் கூறவேண்டும்?”, என்பதாகும்.

37. ஜ்ஞாநத்தையொழியவும் தன்னையறிகையாலும், ஜ்ஞாநம் ஸாரபூதகுணமாய் நிரூபக தர்மமாயிருக்கையாலும் சொல்லிற்று.

**அவதாரிகை** - இப்படி சாஸ்த்ரங்கள் சொல்லுகைக்கு மூலம் இன்னதென்கிறார்.

**விளக்கம்** - இவ்விதம் சாஸ்த்ரங்கள் கூறுவதற்கான அடிப்படை இன்னது என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஜ்ஞாநத்தையொழியவும் தன்னையறிகையாலும்) என்று தொடங்கி, அதாவது ஜ்ஞாநம் ஸ்வாச்ரயத்துக்கு ஸ்வயம்ப்ரகாசகமாயிருக்குமோபாதி ஜ்ஞாந நிரபேக்ஷமாகத் தனக்குத்தானே ப்ரகாசிக்கையாலும் ஜ்ஞாநம் இவனுக்கு ஸாரபூத குணமாகையாலே ஸ்வரூபாநுபந்தித்வேந ஸ்வரூப நிரூபக தர்மமாகையாலும் சொல்லிற்றென்கை.

**விளக்கம்** - ஞானமானது தனது இருப்பிடமாக உள்ள ஆத்மாவிற்குத் தானே தன்னை வெளிப்படுத்துகிறது; அதே போன்று, ஞானத்தை எதிர்பார்க்காமல் ஆத்மாவானது தனக்குத் தானே தன்னை வெளிப்படுத்துகிறது. ஆகவே ஞானமானது ஆத்மாவிற்கு ஸாரமான ஒரு உள்ளது என்றாகிறது. இதன் விளைவாக ஆத்மாவுடன் சேர்ந்து நின்று ஸ்வரூபத்தை நிரூபித்துக் காண்பிக்கும் தர்மமாக உள்ளதால், கடந்த சூர்ணையில் கூறப்பட்டது போன்று உரைக்கப்பட்டது.

**வ்யாக்யானம்** – இதுதான், "தத் குண ஸாரத்வாத் து தத் வ்யபதேச: ப்ராஜ்ஞவத்", "யாவதாத்ம பாவிதவாச்ச ந தோஷஸ் தத் தர்சநாத்" என்கிற ஸூத்ர த்வயத்தாலும் சொல்லப்பட்டது. "ஜ்ஞாந மாத்ர வ்யபதேசஸ்து ஜ்ஞாநஸ்ய ப்ரதாந குணத்வாத், ஸ்வரூபாநுபந்தித்வேந ஸ்வரூப நிரூபக குணத்வாத் ஆத்ம ஸ்வரூபஸ்ய ஜ்ஞாநவத் ஸ்வப்ரகாசத்வாத்வோபபத்யதே" என்றிறே தீபத்திலே பாஷ்யகாரரும் அருளிச்செய்தது.

**விளக்கம்** - இந்தக் கருத்தானது, ப்ர. ஸூ. (2-3-29) - தத் குண ஸாரத்வாத் து தத் வ்யபதேச: ப்ராஜ்ஞவத் - ஞானம் என்ற குணத்தைச் சாரமாகக் கொண்டுள்ளதால் (சாரம் என்றால் "இன்றியமையாத" என்று பொருள்), ஆத்மாவானது ஞானம் என்று கூறப்படுகிறது. பரமாத்மா (ஆனந்தம் என்று) கூறப்படுவது போன்று – என்றும், ப்ர. ஸூ. (2-3-30) - யாவதாத்ம பாவித்வாத் ச ந தோஷ: தத் தர்சநாத் - ஆத்மா உள்ளவரை ஞானம் தொடர்வதாலும், ஆத்மாவை ஞானம் என்று கூறுவதில் தவறில்லை. இது போன்று கூறப்படுவதைக் காணலாம் – என்றும் உள்ள இரண்டும் ஸூத்ரங்களாலும் கூறப்பட்டது. இதனை பாஷ்யகாரரும் வேதாந்ததீபத்தில் - ஜ்ஞாந மாத்ர வ்யபதேசஸ்து ஜ்ஞாநஸ்ய ப்ரதாந குணத்வாத், ஸ்வரூபாநுபந்தித்வேந ஸ்வரூப நிரூபக குணத்வாத் ஆத்ம ஸ்வரூபஸ்ய ஜ்ஞாநவத் ஸ்வப்ரகாசத்வாத்வோபபத்யதே - ஆத்மாவானது ஞானமே ஆகும் என்று உரைக்கும் கருத்தானது, ஞானம் முதன்மையான குணமாக உள்ளதாலும், ஆத்மாவை நிரூபிக்கின்ற குணமாக உள்ளதாலும், ஆத்மஸ்வரூபம் போன்று தானே ப்ரகாசிப்பதாலும் ஆகும் - என்று அருளிச்செய்தார் அல்லவோ?

38. நியாம்யமாகையாவது ஈச்வர புத்த்யதீநமாக எல்லா வ்யாபாரங்களும் உண்டாம்படியிருக்கை.

**வ்யாக்யானம்** – அதாவது, "ஆத்மநி திஷ்ட்டந்நாத்மநோந்தரோயமாத்மா நவேத யஸ்யாத்மா சரீரம்ய ஆத்மாநமந்தரோ யமயதி ஸத ஆத்மாந்தர்யாம்யம்ருத" என்று இத்யாதிகளில் சொல்லுகிறபடியே, அந்தராத்மதயா நின்று நியமிக்கை ஈச்வரனுக்கு ஸார்வகாலீநமாகையாலே, இவ்வாத்ம வஸ்து அவனுக்கு நியாம்யமாகையாவது சரீரத்தினுடைய ஸகலப்ரவருத்திகளும் சரீரியினுடைய புத்த்யதீநமாக உணடாமாப் போலே சரீரபூதமான இவ்வாத்ம வஸ்துவினுடைய ஸகல வ்யாபாரங்களும் சரீரியான பரமாத்மாவினுடைய புத்த்யதீநமாகவே உணடாம்படி இருக்கையென்றபடி. இப்படி

தச்சரீரதயா தததீந ஸகலப்ரவருத்திகனானாலும், அசேதநமான சரீரம்போலே தானாக ஒரு ப்ரவருத்தி பண்ணமாட்டாதபடி இருக்கையன்றிக்கே, ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்களை ஸ்வாபாவிக தர்மங்களாக உடையனாகையாலே, ஜ்ஞாந சிகீர்ஷா ப்ரயத்ந பூர்வக ப்ரவருத்தி க்ஷமனாயிருக்கையாலும், ஸகல ப்ரவருத்திகளும் இவனுடைய ப்ரதம ப்ரயத்நத்தை அபேக்ஷிததுக் கொணடு ஈச்வரன் அநுமதி தாநம் பண்ணுகையாலும், விதி நிஷேத சாஸ்த்ர வையர்த்தயமுமில்லை. இவனுடைய ப்ரவ்ருத்தி மூலமாக ஈச்வரன் பண்ணும் நிக்ரஹாநுக்ரஹங்களுக்கும் தததநுகுணமான பல ப்ரதாநத்துக்கும் விரோதமில்லை என்னுமிடம் கீழே சொல்லப்பட்டது.

**விளக்கம்** - நியாம்யம் என்று ஏன் கூறப்பட்டது என்றால், ஈச்வரனுடைய ஸங்கல்பத்தின்படியே ஆத்மா அனைத்து செயல்களையும் செய்வதால் ஆகும். அதாவது, ப்ரு. (3-7-22) - ய ஆத்மநி திஷ்டந் ஆத்மநோ அந்தர: | யம் ஆத்மா ந வேத | யஸ்ய ஆத்மா சரீரம் | ய ஆத்மாநம் அந்தர: ய ஆத்மாநம் அந்தரோ யமயதி | ஸ தே ஆத்மா அந்தர்யாமி அம்ருத: - யார் ஆத்மாவில் உள்ளானோ, யார் ஆத்மாவில் புகுந்துள்ளானோ, யார் இவ்விதம் உள்ளதை ஆத்மா அறியாதோ, யாருக்கு ஆத்மா சரீரமோ, யார் ஆத்மாவினுள் புகுந்து நியமிக்கிறானோ அவனே உன் ஆத்மா, உனக்கு அந்தர்யாமியாக உள்ள அவன் அழிவற்றவன் - என்பது போன்று வாக்கியங்களில் கூறுவது போன்று, ஆத்மாவின் அந்தராத்மாவாக நின்று நியமத்தல். ஈச்வரன் அனைத்து காலங்களிலும் உள்ளவன் என்பதால், ஆத்மாவானது அவனால் ஏவப்படுவதாக உள்ளது என்பது, "சரீரத்தின் அனைத்து செய்கைகளும் அந்தச் சரீரத்தில் உள்ள புத்தியின் அடிப்படையின் அமைவது போன்று, சரீரத்தின் உள்ளே இருக்கின்ற ஆத்மாவின் அனைத்து செயல்களும் அந்த ஆத்மாவைச் சரீரமாகக் கொண்டுள்ள பரமாத்மாவின் ஸங்கல்பத்திற்கு ஏற்றபடியே உள்ளது", என்பதாகும். இவ்விதம் ஆத்மாவானது பரமாத்மாவின் சரீரமாக உள்ளதால், பரமாத்மாவின் கட்டுப்பாட்டிற்கு ஏற்பவே தனது செயல்களைச் செய்கிறது; ஆனால் அசேதநமான சரீரம் போன்று தானாகவே எந்த ஒரு செயலையும் செய்ய இயலாமல் இருப்பதில்லை; அறிபவனாக இருத்தல், செயல் புரிபவனாக இருத்தல் மற்றும் அனுபவிப்பவனாக இருத்தல் ஆகிய தன்மைகளை இயல்பாகவே கொண்டதாக ஆத்மா உள்ளதால், "அறிவு, ஆசை, முயற்சி" ஆகியவற்றை முன்னிட்டுக் கொண்டு, செயல் புரிவதில் தகுதி கொண்டவனாகவே ஆத்மா உள்ளான்; மேலும் இவனுடைய முதல் முயற்சியை மட்டுமே எதிர்ப்பார்த்தபடி, ஈச்வரன், இந்த ஆத்மா செயலாற்ற அனுமதி அளிக்கிறான்; இந்தக் காரணங்களால், விதித்தல் மற்றும் தள்ளுதல் ஆகியவற்றைக் கூறும்

சாஸ்த்ரங்கள் வீணாகப் போவதில்லை. ஆத்மாவின் செயல்கள் காரணமாக ஈச்வரன் செய்யும் அனுக்ரஹம் மற்றும் அளிக்கும் தண்டனை ஆகியவற்றுக்கும், இவற்றின் மூலம் விளையும் பயன்களுக்கும் விரோதம் இல்லை என்று முன்பே கூறப்பட்டது.

39. தார்யமாகையாவது அவனுடைய ஸ்வரூப ஸங்கல்பங்களை ஒழிந்தபோது தன் ஸத்தை இல்லையாம்படியிருக்கை.

**வ்யாக்யானம்** – அதாவது, “ஏஷ ஸேதுர் விதரண:”, “ஏதத் ஸர்வம் ப்ரஜ்ஞாநே ப்ரதிஷ்ட்டிதம்”, “ஏவமேவ சாஸ்மிந்நாத்மநி ஸர்வாணி பூதாநி ஸர்வ ஏவாத்மாநஸ் ஸமர்பிதா”, “ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்கி ஸூர்யா சந்தரமஸௌ வித்ருதௌதிஷ்டத:” என்று இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே, ஈச்வரன் ஸகல சேதநாசேதநங்களையும் பறறி நியமேந தாரகனாகையாலே, இவ்வாத்ம வஸ்து தார்யமாகையாவது தனக்கு நியமேந தாரகமாய்க் கொண்டு தன் ஸத்தா ஹேதுவாயிருக்கிற அவனுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தையும் இந்த ஸ்வரூபாச்ரிதத்வத்துக்கும் ஸத்தாநுவ்ருத்தி ரூபையான ஸ்திதிக்கும் ஹேதுவாயிருந்துள்ள அவனுடைய நித்யேச்சாகார்ய ஸங்கல்பத்தையும் ஒழிந்தபோது தன் ஸத்தாஹாநி பிறக்கும்படியிருக்கை என்றபடி.

**விளக்கம்** - தார்யம் ஆவது என்றால், ஈச்வரனுடைய ஸ்வரூபம் மற்றும் ஸங்கல்பம் ஆகியவற்றை விலக்கினால் ஆத்மாவின் இருப்பு என்பது இல்லை என்பதாகும். அதாவது ப்ரு. (4-4-22) - ஏஷ ஸேது: விதரண: - ஸம்ஸாரத்தைக் கடக்க உதவும் பாலம் இவனே – என்றும், ஏதத் ஸர்வம் ப்ரஜ்ஞாநே ப்ரதிஷ்ட்டிதம் – இந்த அனைத்தும் உயர்ந்த அந்த ஆத்மாவிடமே நிலைபெற்று நிற்கின்றன - என்றும், ஏவமேவ சாஸ்மிந்நாத்மநி ஸர்வாணி பூதாநி ஸர்வ ஏவாத்மாநஸ் ஸமர்பிதா – இந்த அனைத்தும் உயர்ந்த அந்த ஆத்மாவிடமே நன்கு காக்கப்பட்டு நிற்கின்றன - என்றும், ப்ரு. (3-8-9) - ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்க்கி ஸூர்யா சந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத: - கார்க்கி! இந்த அக்ஷரத்தின் கட்டளையால் சூரியனும் சந்த்ரனும் நிலைக்கிறார்கள் – என்றும் உள்ளது போன்ற வாக்கியங்களில் கூறப்பட்டபடி, ஈச்வரன் அனைத்து சேதந அசேதனங்களையும் தனது நியமனம் என்ற செயல் மூலம் தாங்குகிறான் என்றாகிறது; ஆகவே இந்த ஆத்மாவிற்குத் தார்யம் ஆவது என்பது: தன்னை நியமனம் செய்வது மூலம் தன்னைத் தாங்கியபடி உள்ளதன் விளைவாக தனது இருப்பு என்பதற்கு ஈச்வரனே காரணமாக

உள்ள திவ்யாத்ம ஸ்வரூபத்தையும், அந்த ஸ்வரூபத்தைச் சார்ந்துள்ள தன்மையையும், தனது இருப்பு என்பது தொடர்ந்து நீடிப்பதற்குக் காரணமாக உள்ளதான "எப்போதும் ஆத்மாக்களைக் குறித்த விருப்பத்துடன் இருத்தல்" என்ற ஸங்கல்பத்தையும் நீக்கும்போது தனது இருப்பிற்குத் தாழ்வு ஏற்படுதல் என்பதாகும்.

**வ்யாக்யானம் -** இப்படி தார்ய வஸ்துக்களை ஸ்வரூப ஸங்கல்பங்களிரண்டாலும் தரிக்குமென்னுமிடம் அபியுக்தராலே விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது. எங்ஙனே என்னில்; ஈச்வரன் தன் ஸ்வரூப நிரூபக தர்மங்களுக்கும் நிரூபிதஸ்வ ரூப விசேஷணங்களான குணங்களுக்கும் போலே ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த த்ரவ்யங்களுக்கும் அவ்யவஹிதமாக ஸ்வரூபேண ஆதாரமாயிருக்கும் அவ்வோ த்ரவயங்களை ஆச்ரயித் திருக்கும் குணாதிகளுக்கு அவ்வோ த்ரவ்யத்வாரா ஆதாரமாயிருக்கும் ஜீவர்களாலே தரிக்கப்படுகிற சரீரங்களுக்கு ஜீவத்வாரா ஆதாரமாயிருக்குமென்று சிலர் சொல்லுவர்கள். ஜீவனை த்வாரமாகக் கொண்டு ஸ்வரூபத்தாலும் ஆதாரமாமென்று சில ஆசார்யர்கள் சொல்லுவர்கள். இப்படி ஸர்வமும் ஆச்ரயத்தைப் பற்ற அப்ருதக் ஸித்த விசேஷணமாகையாலே இவற்றின் ஸத்தாதிகள் ஆச்ரய ஸத்தாதீநங்கள். ஸர்வ வஸ்துக்களினுடையவும் ஸத்தை ஸங்கல்பாதீநையாகையாவது அநிதயங்கள் அநிதயேச்சையாலே உத்பந்நங்களாயும் நித்யங்கள் நித்யேச்சாஸித்தங்களாயுமிருக்கை. இவ்வர்த்தத்தை "இச்சாத் ஏவ தவ விச்வபதார்த்த ஸத்தா" என்கிற ச்லோகத்தாலே அபியுகதர் விவேகித்தார்.

**விளக்கம் -**இவ்விதம் ஈச்வரன், தன்னால் தாங்கப்படும் அனைத்து வஸ்துக்களையும், தனது ஸ்வரூபம் மற்றும் ஸங்கல்பம் ஆகியவற்றால் தாக்குகிறான் என்பதைச் சான்றோர்கள் மிகவும் விரிவாக அருளிச்செய்தனர். எவ்விதம்? ஈச்வரன் தனது ஸ்வரூபத்தை மற்றவர்களுக்கு உணர்த்தவல்ல தர்மங்கள் மற்றும் அவற்றால் நிரூபிக்கபட்ட ஸ்வரூபத்துடன் கூடியுள்ள குணங்கள் ஆகியவற்றுக்குப் போன்றே, தன்னைத் தவிர்ந்துள்ள மற்ற அனைத்து வஸ்துக்களுக்கும் வேறு எதன் மூலமும் அல்லாமல் தனது ஸ்வரூபம் கொண்டே தாங்கும்படி செய்கிறான். அந்தந்த வஸ்துக்களைச் சார்ந்துள்ள குணங்கள் போன்றவற்றுக்கு, அந்தந்த வஸ்துக்களையே ஆதாரமாக்குகிறான். ஜீவாத்மாவால் தாங்கப்படும் சரீரங்களுக்கு ஜீவாத்மாக்களையே ஆதாரமாக்குகிறான். அல்லது ஜீவாத்மாக்கள் மூலமாக ஈச்வரன் தனது ஸ்வரூபம் கொண்டு தாங்குவதாகவும் சிலர் கூறுவர். இவ்விதம் அனைத்து வஸ்துக்களும் ஈச்வரனுடைய ஆதாரத்தைப் பெறுவதற்காக, அவனை விட்டுப் பிரியாதபடி ஒரு சேர்த்தி

கொண்டவையாக உள்ளன; எனவே இவற்றின் இருப்பு போன்றவை, ஈச்வரனுடைய இருப்பிற்கு அடங்கியவையே ஆகும்; அனைத்து வஸ்துக்களுடைய இருப்பு என்பது ஈச்வரனுடைய ஸங்கல்பத்திற்கு வசப்பட்டே உள்ளது; இது என்றபடி என்றால், "நிலை மாறியபடி உள்ள வஸ்துக்கள் அனைத்தும், மாறியபடி உள்ள இச்சை காரணமாக உண்டாகின்றன" என்பதாலும், "நித்யமான வஸ்துக்கள் அனைத்தும் நித்யமான இச்சையால் ஏற்படுகின்றன" என்பதாலும் ஆகும். இந்தக் கருத்தானது ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தில் – இச்சாத் ஏவ தவ விச்வபதார்த்த ஸத்தா - உலகில் உள்ள அனைத்து வஸ்துக்களும் அவனுடைய இச்சையால் ஏற்பட்டன – என்று கூறப்பட்டது.

**வ்யாக்யானம் -** இத்தாலே ஸர்வத்தினுடையவும் ஸத்தாநுவ்ருத்தி ரூபையான ஸ்திதியும் ஈச்வரேச்சாதீநையானபடியாலே ஸர்வமும் ஈச்வர ஸங்கல்பாச்ரித மென்று சொல்லுகிறது. குரு த்ரவ்யங்கள் ஸங்கல்பத்தாலே த்ருதங்களென்று சாஸ்த்ரங்கள் சொல்லுமது "த்யௌஸ்ஸசந்த்ரார்க்க நக்ஷத்ராகம் திசோபூர் மஹோததி: வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதாநி மஹாத்மந:" என்கிறபடியே ஓரோ தேச விசேஷங்களிலே விழாதபடி நிறுத்துகையைப் பற்ற இப்படி இச்சாதீந ஸத்தாஸ்திதி ப்ரவ்ருத்திகளான வஸ்துக்களுக்கு பரமாத்ம ஸ்வரூபமென் செய்கிறது? என்னில்; பரமாத்மாவினுடைய இச்சை இவ்வஸ்துக்களை பரமாத்மாவின் ஸ்வருபாச்ரிதங்களாக வகுத்து வைக்கும். இப்படி, ஸர்வ வஸ்துவும் ஈச்வர ஸ்வரூபாதீநமுமாய் ஈச்வரேச்சாதீநமுமாயிருக்கும். லோகத்திலும் சரீரம் சரீரியினுடைய ஸ்வரூபாச்ரயமுமாய் ஸங்கல்பாச்ரயமுமாயிருக்கக் காணா நின்றோம்; இவனிருந்தகாலமிருந்து, இவன் விட்டபோதொழிகையாலே ஸ்வரூபாச்ரிதம், இவ்வாத்ம ஸங்கல்பமில்லாத ஸுஷுப்த்யாத்யவஸ்தைகளிலே தெளிவது. ஜாக்ராதி தசைகளில் ஸங்கல்பத்தாலே விழாதபடி தாங்கும்போது ஸங்கல்பாச்ரிதம் என்னக் கடவது என்று இப்படி ரஹஸ்யத்ரயஸாரத்திலே ப்ரதிபாதிக்கையாலே.

**விளக்கம் -**இதன் மூலம் அனைத்து வஸ்துக்களுடைய இருப்பின் தொடர்ச்சி வடிவத்தில் உள்ளதான நிலைபெறுதல் என்பதும் ஈச்வரனுடைய இச்சைக்கு வசப்பட்டே உள்ளதால், அனைத்தும் ஈச்வரனுடைய ஸங்கல்பத்திற்கு அடங்கியே உள்ளன என்று கூறப்பட்டது. மிகவும் வலுவான வஸ்துக்கள் அனைத்தும் ஈச்வரனுடைய ஸங்கல்பத்தால் தாங்கப்படுகின்றன என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன; ஏனென்றால், த்யௌஸ்ஸ சந்த்ரார்க்க நக்ஷத்ராகம் திசோபூர் மஹோததி: வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதாநி மஹாத்மந: - சந்த்ரன், சூரியன், நக்ஷத்ரங்கள் ஆகியவற்றுடன் கூடிய ஆகாயம்; திசைகள்,

பூமி, ஸமுத்ரங்கள் போன்ற பலவும் வாஸுதேவனுடைய வீர்யத்தால் நிலையாக உள்ளன என்று மஹாத்மாக்கள் கூறுகிறார்கள் – என்பதற்கு ஏற்ப, அவற்றை அந்தந்த குறிப்பிட்ட இடங்களில் விழாமல் நிறுத்துவதால் ஆகும். இவ்விதமாக ஈச்வரனுடைய விருப்பத்திற்கு ஏற்ப தங்களுடைய இருப்பு மற்றும் செயல்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ள வஸ்துக்களுக்குப் பரமாத்மாவின் ஸ்வரூபம் என்ன செய்கிறது? விடை அளிப்போம். பரமாத்மாவின் இச்சையானது அந்த வஸ்துக்களை பரமாத்மாவின் ஸ்வரூபத்தை அண்டி நிற்பதற்கு வழி செய்கிறது. இப்படியாக அனைத்து வஸ்துக்களும் ஈச்வரனுடைய ஸ்வரூபத்திற்கு அடங்கியும், ஈச்வரனுடைய இச்சைக்கு அடங்கியும் உள்ளன. இந்த லோகத்தில் கூட சரீரமானது ஆத்மாவின் ஸ்வரூபம் மற்றும் விருப்பத்திற்கு அடங்கி நிற்பதை நாம் காண்கிறோம்; ஒருவன் இந்த உலகில் வாழும் காலம் முடிய இருந்து, உயிரை விடும்போது ஒழிவதால் ஆத்மஸ்வருபத்திற்கு அடக்கமே ஆகிறான். இந்தக் கருத்தானது ஆத்மாவிற்கு சுயநினைவு இல்லாத உறக்கம் போன்ற நிலைகளில் உள்ளதைக் காணலாம். விழிப்பு போன்ற நிலைகளில், ஸங்கல்பத்தால் விழாதபடி தாங்கும்போது, ஸங்கல்பத்திற்கு அடங்கியவன் என்று கூறலாம். இப்படியாகவே ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் கூறப்பட்டது.

40. சேஷமாகையாவது சந்தந குஸும தாம்பூலாதிகளைப் போலே, அவனுக்கு இஷ்ட விநியோகார்ஹமாயிருக்கை.

**வ்யாக்யானம் -** (சேஷமாகையாவது சந்தந குஸும தாம்பூலாதிகளைப் போலே அவனுக்கு இஷ்ட விநியோகார்ஹமாயிருக்கை) அதாவது, சந்தந குஸுமாதி பதார்த்தங்கள் தனக்கென்ன இருப்பதோராகாரமின்றிக்கே பூசுமவனுக்கும் சூடுமவனுக்கும் உறுப்பாய், விநியோகம் கொள்ளுமவனுக்குத்தானும் விநியோகம் கொண்டு, தானுகந்த விஷயங்களுக்கும் கொடுக்கலாம்படி இஷ்ட விநியோகார்ஹமாயிருக்குமாப்போலே சேதந வஸ்துவாயிருக்க ஸ்வப்ரயோஜந கந்தமின்றிக்கே தன்னுடைய ஸ்வரூப ஸ்வபாவ வைலக்ஷண்யமெல்லாவற்றாலும் சேஷிக்கு அதிசயகரமாய், விநியோக தசையில் அவனுக்குத் தானும் விநியோகம் கொண்டு “அடியார்க்கென்னை யாட்படுத்த விமலன்” என்கிறபடியே தானுகந்தவர்களுக்கும் உறுப்பாக்கலாம்படி வேண்டின விநியோகத்துக்கு யோக்யமாயிருக்கை என்றபடி. சித் த்ரவயத்துக்கு அசித் த்ரவயங்களை த்ருஷ்டாந்தமாகச் சொல்லிற்று பாரதந்த்ரியாதிசயம் சொல்லுகைக்காகவிறே ஆத்மஸ்வரூப யாதாத்ம்யம்


email –sridharan_book@yahoo.com

இதுவாகையாலேயிறே ப்ராப்ய நிஷ்கர்ஷம் பண்ணுகிற தசையிலே "தனக்கேயாக வெனைக் கொள்ளுமீதே" என்று ஆழ்வார் அருளிச்செய்தது.

**விளக்கம் -**சந்தனம், மலர்கள் போன்ற பொருள்கள் பலவும் தங்களுக்கு என்று இருக்கின்ற நிலை ஏதும் இல்லாமல், தங்களைப் பூசிக் கொள்பவர்கள் மற்றும் சூட்டிக் கொள்பவர்களுக்கு அவை உபயோகமாக உள்ளன; அந்த மனிதர்கள் தங்களுக்கு விருப்பமானவர்களுக்கு அவற்றை அளிப்பதற்கு ஏற்றவையாகவும் அவை உள்ளன. இதனைப் போன்று சேதந வஸ்துக்களாக உள்ளவை "தனது பயனுக்காக" என்ற சுயநல தோஷம் இல்லாமல், தங்களுடைய "ஸ்வரூபம், ஸ்வபாவம், மேன்மை" போன்ற பலவற்றாலும் தங்களுடைய எஜமானனாகிய ஸர்வேச்வரனுக்கு அதிசயத்தை ஏற்படுத்தக் கூடியவையாகவும், அவனுக்குப் பயன்படும் நேரங்களில் பயன்படும்விதமாக உள்ளவையாகவும், அமலனாதிபிரான் (1) - அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன் - என்று கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரனாகிய அவன் யாரை விரும்புகிறனோ அவர்களுக்கும் அடிமையாக்கலாம்படி இருப்பவையாகவும் உள்ள தகுதியுடன் இருத்தல் வேண்டும். இங்கு அசேதந வஸ்துக்களை உதாரணமாகக் காண்பித்து சேதந வஸ்துக்கள் ஏன் உணர்த்தப்பட்டன என்றால், மற்றவர்கள் வசப்பட்டிருத்தல் என்பதைக் கூறவே ஆகும். ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபம் இதுவே ஆகும் என்பதால் அல்லவோ, அடையப்படும் இலக்கு குறித்து உறுதிபட உரைக்கும்போது, திருவாய்மொழி (2-9-4) – தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே – என்று ஆழ்வார் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் –** "பரகதாதிசயாதாநேச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம், ஸ சேஷ: பரச்சேஷீ" என்று சேஷசேஷித்வ லக்ஷணம் பாஷ்யகாரராலே அருளிச்செயயப்பட்டது. இந்த லக்ஷண வாக்யார்த்தத்தை அநுஸரித்துக் கொண்டு, "இச்சயா யது பாதேயம் யஸ்யாதிசய ஸித்தயே உபயாநுபயைகைகஜுஷாதெள சேஷசேஷிணெள" என்று சேஷசேஷித்வ லக்ஷணத்தை அபியுக்தரானவர்களும் சொல்லி வைத்தார்கள்.

**விளக்கம் -** "பரகதாதிசயாதாநேச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம், ஸ சேஷ: பரச்சேஷீ – பிறருக்கு சந்தோஷத்தை உண்டு பண்ண வேண்டும் என்ற எண்ணம் எவைகளுக்குத் தன்மையோ, அவைகள் அனைத்தும் சேஷன் (அடிமை); மகிழ்வை அடைபவன் சேஷி (அடிமைச் செயலை ஏற்பவன்)" என்று இத்தகைய "அடிமை -

எஜமானன்” இலக்கணம் குறித்து பாஷ்யகாரரால் அருளிச் செய்யப்பட்டது. இத்தகைய இலக்கணம் கூறும் வாக்கியத்தின் கருத்தை அடியோற்றியே, இச்சயா யது பாதேயம் யஸ்யாதிசய ஸித்தயே உபயாநுபயைகைகஜுஷாதௌ சேஷசேஷிணௌ - எந்த ஒரு தலைவனுக்காக, எந்த ஒரு பொருள், இருவரை அடைதல் அல்லது ஒருவரை மட்டும் அடைதல் என உள்ளதோ (அதாவது தலைவனுடைய விருப்பதிற்கு ஏற்ப), அவர்கள் அடிமை மற்றும் எஜமானன் ஆவார்கள் - என்று “எஜமானன் – அடிமை” இலக்கணத்தைச் சான்றோர்களும் கூறினார்கள்.

**வ்யாக்யானம் –** “யதேஷ்ட விநியோகார்ஹம் சேஷ சப்தேந கத்த்யதே, ஈச்வரேண ஜகத் ஸர்வம் யதேஷ்டம் விநியுஜ்யதே” என்று சொல்லுகையாலே, சேஷத்வமாவது இஷ்ட விநியோகார்ஹத்வம் என்னுமிடம் சாஸ்த்ரஸித்தம்.

**விளக்கம் -** “யதேஷ்ட விநியோகார்ஹம் சேஷ சப்தேந கத்த்யதே, ஈச்வரேண ஜகத் ஸர்வம் யதேஷ்டம் விநியுஜ்யதே - ஒருவர் விருப்பத்திற்கு ஏற்ப பயன் கொள்ளத் தகுதியாக உள்ள நிலையே அடிமை என்று கூறப்படுகிறது. ஸர்வேச்வரனால் அனைத்து லோகங்களும் தனது விருப்பப்படி உபயோகப்படுத்தப்படுகிறது” என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே, அடிமைத்தன்மை என்பது “விருப்பத்திற்கு ஏற்ப உபயோகம் செய்து கொள்ளத் தகுதியானது” என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

**வ்யாக்யானம் -** இப்படி ஈச்வர விஷயத்தில் ஆத்மாவுக்குண்டான சேஷத்வம்தான், “யஸ்யாஸ்யாமி ந தமந்தரேமி”, “பரவாநஸ்மி காகுத்ஸ்த்த த்வயி வர்ஷசதம் ஸ்திதே”, “தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:, நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச”, “ஸ்வோஜ்ஜீவநேச்சா யதி தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி, ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர” என்று ச்ருதி ஸ்ம்ருத்யாதிகளிலே சொல்லப்படா நின்றதிறே.

**விளக்கம் -**இவ்விதம் பகவத் விஷயதில் ஆத்மாவிற்கு உள்ள அடிமைத்தனமானது, யஜுர்வேதம் - யஸ்யாஸ்யாமி ந தமந்தரேமி – யாருக்கு நான் அடிமையாக உள்ளேனோ, அவனை நான் மீறமாட்டேன் – என்றும், ஆரண்யகாண்டம் (15-6) - பரவாநஸ்மி காகுத்ஸ்த்த த்வயி வர்ஷசதம் ஸ்திதே - காகுஸ்த்த வம்சத்தில் வந்தவனே! பல வருடங்கள்

நீ உள்ளவரை நான் உனக்கு வசப்பட்டு நிற்பேன் - என்றும், தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:, நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச - அனைத்து ஆத்மாக்களுக்கும் ஸர்வேச்வரனுக்கு இயல்பாகவே அடிமையானவர்கள்; இந்த லோகத்திலும் மோக்ஷ நிலையிலும் அவர்களுக்குச் சுதந்திரம் என்னும் இலக்கணம் இல்லை - என்றும், ஸ்ரீவிஷ்ணுதத்வம் - ஸ்வோஜ்ஜீவநேச்சா யதி தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி, ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர - உனக்குக் கரையேறுவதற்கான விருப்பம் இருந்தால் அல்லது அழியாமல் இருக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தால், இயல்பாகவே உள்ள ஆத்மாவின் தன்மையையும், ஸ்ரீஹரியான ஈச்வரனுடைய எஜமானனாக உள்ள தன்மையையும் எப்போதும் சிந்தித்தபடி இருப்பாயாக - என்று ச்ருதி மற்றும் ஸ்ம்ருதிகளில் கூறப்பட்டது அல்லவா?

41. இதுதான் க்ருஹ க்ஷேத்ர புத்ர களத்ராதிகளைப் போலே, ப்ருதக்ஸித்த்யாதிகளுக்கு யோக்யமாம்படியிருக்கையன்றிக்கே, சரீரம்போலே அவற்றுக்கு அயோக்யமாயிருக்கை.

**அவதாரிகை** - ஒருவனுக்கு க்ருஹக்ஷேத்ராதிகளும் சேஷமாய், ஸ்வசரீரமும் சேஷமாயிருக்கச் செய்தே, க்ருஹ க்ஷேத்ராதிகள் ப்ருதக் ஸித்த்யாதிகளுக்கு அர்ஹமாய், சரீரம் அவற்றுக்கு அநர்ஹமாயிருக்கக் காண்கையாலே, இவ்வாத்ம வஸ்து ஈச்வரனுக்கு சேஷமாமிடத்திலிருக்குமபடி எங்ஙனே? என்கிற சங்கையிலே அருளிச்செய்கிறார் (இதுதான்) என்று தொடங்கி.

**விளக்கம்** -ஒருவனுக்கு வீடு, நிலம் போன்றவை அடிமையாக உள்ளது போன்று, அவனுடைய சரீரமும் அவனுக்கு அடிமையாக உள்ளது; ஆனாலும், வீடு நிலம் போன்றவை அவனை விட்டுத் தனியே இருப்பற்குத் தகுதியுடன் உள்ளதாகவும், சரீரமானது அவனை விட்டுப் பிரிந்து இருப்பதற்குத் தகுதி அற்றதாகவும் உள்ளதை நாம் காண்கிறோம். இப்படி உள்ளபோது, இந்த ஜீவாத்மா ஈச்வரனுக்கு அடிமையாக இருத்தல் என்பது எவ்வகைப்பட்டது என்று சந்தேகம் எழலாம். இதற்கு விடை அருளிச் செய்கிறோர்.

**வ்யாக்யானம்** - இதுதானென்றது இப்படி ஈச்வரசேஷமாகச் சொல்லப்பட்ட ஆத்மவஸ்துதான் என்றபடி. (க்ருஹ க்ஷேத்ர புத்ர களத்ராதிகளைப்போலே) என்கிற விடத்தில் ஆதிசப்தத்தாலே தந தாந்ய ஆராம தாஸ தாஸீ வர்கங்களைச் சொல்லுகிறது.

(ப்ருதக்ஸித்த்யாதிகளுக்கு யோக்யமாம்படி இருக்கையன்றிக்கே) என்கிறவிடத்தில், ப்ருதக்ஸித்தியாவது ஸஹோபலம்ப நியமமின்றிக்கே, சேஷியானவனை ஒழியவும் தான் ஸித்திக்கை. ஆதிசப்தத்தாலே அநேக ஸாதாரணத்வத்தைச் சொல்லுகிறது. க்ருஹ க்ஷேத்ர தாஸதாஸீ ப்ரப்ருதிகள், பித்ரு புத்ர ஜ்யேஷ்ட கநிஷ்டாதிகளுக்கு ஸாதாரண சேஷமாயிருக்கும்; புத்ரனும், மாதா பித்ரு பித்ருவ்யாதிகளுக்கு ஸாதாரண சேஷமாயிருக்கும்; களத்ரமும், "ஸோம: ப்ரதமோ விவிதே கநதர்வோ விவித உத்தர: த்ருதீயோக்நிஷ்டேபதிஸ்துரீயஸ்தே மநுஷ்யஜா:" என்று பாணிக்ரஹணாநந்தரம், ஸோமாதிகளுக்கு சேஷமாகச் சொல்லுகையாலே, அநேக ஸாதாரணமாயிருக்கும்.

**விளக்கம்** - "இதுதான்" என்பதன் மூலம், ஈச்வரனுக்கு அடிமையாக உள்ளது என்று கூறப்படுகின்ற ஆத்மாவானது கூறப்பட்டது. "க்ருஹ க்ஷேத்ர புத்ர களத்ராதிகளைப்போலே" என்பதில் உள்ள" ஆதி" என்பதன் மூலம், "தனம், தானியம், தோட்டம், வேலையாட்கள், பணிப்பெண்கள்" ஆகிய பலவும் கூறப்பட்டன. "ப்ருதக்ஸித்த்யாதிகளுக்கு யோக்யமாம்படி இருக்கையன்றிக்கே" என்பதில் உள்ள "ப்ருதக் ஸித்தி" என்பது, சேர்ந்து இருத்தல் வேண்டும் என்ற விதிமுறை ஏதும் இன்றி, தனக்கு எஜமானனாக உள்ளவனை விட்டுத் தனித்து நிற்பது ஆகும்; இங்குள்ள "ஆதி" என்பதன் மூலம், பல பொதுவான விஷயங்கள் கூறப்படுகின்றன. வீடு, நிலம், வேலையாட்கள், பணிப்பெண்கள் போன்ற பலவும், "தந்தை, புத்திரன், பெரியவன், சிறியவன்" போன்றவர்களுக்குப் பொதுவான அடிமைகளாக இருப்பதாகும். ஒரு புத்திரனானவன் – தனது தாய், தந்தை, உடன் பிறந்தவர்களுக்குப் பொதுவான அடிமையாக இருப்பான். மனைவியானவள், "ஸோம: ப்ரதமோ விவிதே கநதர்வோ விவித உத்தர: த்ருதீயோக்நிஷ்டேபதிஸ்துரீயஸ்தே மநுஷ்யஜா: - சந்த்ரன் முதல் பர்த்தா, கந்தர்வன் அடுத்த பர்த்தா, அக்னி மூன்றாவது பர்த்தா, மனிதன் நான்காவது பர்த்தாவாக அறிவாய்" என்று கூறுவதற்கு ஏற்ப, விவாகத்திற்கு பின் கணவனின் கரத்தைப் பிடிகும் ஒரு மனைவி, சந்த்ரன் போன்ற பலருக்கும் அடிமை என்று கூறப்படுவதால், இவ்விதம் அவர்கள் அனைவருக்கும் பொதுவானவளே ஆகிறாள்.

**வ்யாக்யானம்** - இப்படியன்றிக்கே (சரீரம் போலே அவற்றுக்கு அயோக்யமாயிருக்கை)யாவது அப்ருதக்ஸித்தமாய், அநந்ய ஸாதாரணமான சரீரம்போலே, ப்ருதக்ஸித்த்யாதிகளானவற்றுக்குத் தான் அநர்ஹமாயிருக்கை.

(ப்ருதக்ஸ்தித்யாதிகளுக்கு) என்று பாடமாகில், ஆதிசப்தத்தாலே ப்ருதகுபலப்தியை சொல்லுகிறது. அப்போதைக்கு இதுதான் க்ருஹ க்ஷேத்ர புத்ர மித்ர களத்ராதிகளைப் போலே பிரிந்து நிற்கைக்கும் பிரிந்து தோற்றுகைக்கும் அர்ஹமாம்படியிருக்கை யன்றிகே, சரீரம்போலே ததுபயாநர்ஹமாயிருக்குமென்று பொருளாகக் கடவது. “அயமேவாத்ம சரீரபாவ ப்ருதக்ஸித்த்யநர்ஹாதாராதேய பாவ, நியந்த்ரு நியாம்ய பாவ, சேஷ சேஷி பாவச்ச” என்றும், “யஸ்ய சேதநஸ்ய யத்த்ரவ்யம் ஸர்வாத்மநா ஸ்வார்த்தே நியந்தும் தாரயிதும் ச சக்யம் தச்சேஷதைக ஸ்வரூபம் ச தத் தஸ்ய சரீரம்” என்றும் வேதார்த்த ஸங்கரஹத்திலும் ஸ்ரீபாஷயத்திலும் ஆத்ம சரீர பாவ லக்ஷணமாக பாஷயகாரர் அருளிச்செய்த நியந்த்ரு நியாமய பாவம், ஆதார ஆதேய பாவம், சேஷசேஷி பாவமாகிற மூன்றும் இவ்விடததிலே சொல்லப்படுகையாலே, “யஸ்யாத்மா சரீரம் யஸ்யாக்ஷரம் சரீரம்” என்று இத்யாதி ச்ருதி ஸித்தமான ஆத்மாவினுடைய பரமாத்ம சரீரத்வம் அர்த்தாத் உக்தமாயிற்று. ஆக, கீழே ஆத்ம ஸ்வரூபத்தினுடைய சோதநம் பண்ணப்பட்டது.

**விளக்கம் -** இவ்விதம் அல்லாமல், “சரீரம் போன்று அவற்றுக்குத் தகுதியற்றதாக இருத்தல்” என்பது, தனித்து நிற்காமல் வேறு ஒன்றுக்கு உரிமையாக இல்லாத சரீரம் போன்று, தனித்து வெளிப்படுதல் போன்றவற்றுக்குத் தான் தகுதி அற்றதாக இருக்கும் என்று கருத்து. சூர்ணையில் உள்ள “ப்ருதக் ஸித்த்யாதிகளுக்கு” என்பதை “ப்ருதக் ஸ்திதிகளுக்கு” என்றும் சிலர் படிப்பர்; இவ்விதம் கொள்ளும்போது, இங்குள்ள “ஆதி” என்பதன் மூலம் பிரிந்து வெளிப்படுத்தல் கூறப்படுகிறது. அப்போது இவை வீடு, நிலம், புத்திரன், நண்பர்கள், மனைவி என்பவர்கள் போன்று பிரிந்து நிற்பதற்கும், பிரிந்து தோன்றுவதற்கும் தகுதி இல்லாதபடி இருத்தல் என்பது அல்லாமல், சரீரம் போன்று அவை இரண்டிற்கும் தகுதி அற்றதாக உள்ளன என்று கருத்தாகிறது. வேதார்த்த ஸங்க்ரஹத்தில் - அயமேவாத்ம சரீரபாவ ப்ருதக்ஸித்த்யநர்ஹாதாராதேய பாவ, நியந்த்ரு நியாம்ய பாவ, சேஷ சேஷி பாவச்ச – ஆத்மா மற்றும் சரீரம் ஆகிய இரண்டிற்கும் இடையே உள்ள ஸம்பந்தம் இதுவே ஆகும்: தனித்தனியே இருக்க இயலாத இவை இரண்டிற்கும் இடையே ஆதாரம் – ஆதேயம் (தாங்குவது – தாங்கப்படுவது), நியந்த்ரு – நியாம்யம் (ஆள்பவன் – ஆளப்படுவது) மற்றும் சேஷி – சேஷன் (எஜமானன் – அடிமை) என்னும் ஸம்பந்தங்கள் உள்ளன - என்றும், வேதார்த்தஸங்க்ஹரத்தில் - யஸ்ய சேதநஸ்ய யத்த்ரவ்யம் ஸர்வாத்மநா ஸ்வார்த்தே நியந்தும் தாரயிதும் ச சக்யம் தச்சேஷதைக

ஸ்வரூபம் ச தத் தஸ்ய சரீரம் – எந்த ஒன்று தாங்கப்படுவதாகவும் (இது ஆதேயம் எனப்படும், இதுவே சரீரம் ஆகும்), நியமிக்கப்படுவதாகவும், சேஷனாகவும் (மற்றவற்றின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொடுக்கும் வஸ்து) உள்ளதோ, அது தன்னைத் தாங்கும் பொருளாகிய ஆத்மாவைக் விட்டு அகன்று தனியாக நிற்க இயலாத ப்ரகாரமாக உள்ளது; இதுவே சரீரம் என்று கூறப்படுகிறது – என்றும், “ஆத்மா- சரீரம்” குறித்த இலக்கணமாக பாஷ்யகாரர் “ஏவுதல் - ஏவப்படுதல்” என்றும், “தாங்கும் வஸ்து - தாங்கப்படும் வஸ்து” என்றும், “எஜமானன் - அடிமை” என்றும் அருளிச்செய்த கருத்துக்கள் உள்ளன. ஆகவே “யஸ்யாத்மா சரீரம் யஸ்யாக்ஷரம் சரீரம் – யாருக்கு ஆத்மா சரீரமோ, யாருக்கு அக்ஷரம் சரீரமோ” என்பது போன்ற ச்ருதிகளில் கூறப்படுவது போன்று, ஆத்மாவானது பரமாத்மாவின் சரீரமாக உள்ள தன்மை வெளிப்படுகிறது. எனவே இந்த ஆத்மாவின் ஸ்வரூபம் குறித்து இதுவரை ஆராயப்பட்டது.

42. ஆத்மஸ்வரூபம்தான் பத்த முக்த நித்யரூபேண மூன்று படிப்பட்டிருக்கும்.

**அவதாரிகை -** இனி ஏவம்பூதமான ஆத்மஸ்வரூபம், அநாத்யசித் ஸமபந்த தத்வியோக தத்தநந்வயங்களாலே பத்த முக்த நித்யரூபேண த்ரிப்ரகாரமாயிருக்கும்படியை அருளிச்செயகிறார் (ஆத்மஸ்வரூபம்தான் பத்த முக்த நித்யரூபேண மூன்று படிப்பட்டிருக்கும்) என்று.

**விளக்கம் -** அடுத்து, இப்படிப்பட்டதான ஆத்மஸ்வரூபமானது, எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள அசித் வஸ்துக்களுடைய ஸம்பந்தம், அவற்றிலிருந்து விடுபடுதல், அசித்தின் ஸம்பந்தம் இல்லாமை போன்ற பல காரணங்களால், “பத்தர், முத்தர், நித்யர்” என மூன்றுவிதமாக உள்ள நிலையை அருளிச்செய்கிறார்.

43. பத்தரென்கிறது ஸம்ஸாரிகளை.

**அவதாரிகை -** இதில் பத்தரென்கிறது ஆரை? என்னுமாகாங்க்ஷையிலே அருளிச்செயகிறார்.

**விளக்கம் -** இவர்களில், பத்தர் என்பது யாரைக் குறிக்கும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (பத்தரென்கிறது ஸம்ஸாரிகளை) என்று. அவர்களாகிறார் - தில தைலவத் தாரு வஹ்நிவத் துர்விவேசகுணத்ரயாத் மகாநாதி பகவந் மாயா திரோஹித ஸ்வஸ்வரூபராய், அநாத்யவித்யா ஸஞ்சிதாநந்த புண்யபாபரூப கர்மவேஷ்டிதராய், தத்தத்கர்மாநுகுண விவித விசிதர தேவாதி ரூப தேஹ விசேஷ ப்ரவிஷ்டராய், அவ்வோ தேஹங்களிலே அஹம் புத்தியையும், தேஹாநுபந்திகளிலே மமதா புததியையும் பண்ணி, துர்வாஸநாருசி விவசராய், ஸ்வஸ்வ கர்மாநுகுண ஸுகதுக்க பரம்பரைகளை அநுபவிக்குமவர்கள்.

**விளக்கம் -** ஸம்ஸாரிகள் யார் என்றால், எள்ளுக்குள் மறைந்துள்ள எண்ணெய் போன்றும், மரத்திற்குள் மறைந்துள்ள அக்னி போன்றும் பிரிக்க இயலாமல், மூன்று குணங்கள் கொண்டதான அசித்தின் ஸம்பந்தம் காரணமாக எல்லையற்ற காலங்கள் பகவானுடைய மாயை என்று திரையால் தங்களுடைய ஸ்வரூபம் மறைக்கப்ட்டவர்கள்; எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ளதான அவித்யையின் ஸம்பந்தம் காரணமாகப் பலவிதமான புண்யபாப ரூபங்களுடைய பலன்களுக்கு ஏற்றபடி பலவிதமான விசித்ரமான தேவர்கள் முதலான வடிவங்கள் எடுத்தபடி உள்ளவர்கள்; அந்தந்த சரீரங்களில் “இந்தச் சரீரமே நான் ஆவேன்” என்று எண்ணியபடியும், “சரீரத்துடன் தொடர்புடைய அனைத்தும் என்னுடையது” என்று எண்ணியபடியும் உள்ளவர்கள்; தகாத விஷயங்களில் ருசி கொண்டபடி உள்ளவர்கள்; தங்கள் தங்கள் கர்மங்களுக்கு ஏற்ப இன்ப துன்பங்களை அனுபவிப்பவர்கள் ஆவார்கள்.

44. முக்தரென்கிறது ஸம்ஸார ஸம்பந்தமற்றவர்களை.

**அவதாரிகை -** இனி முக்தரென்கிறது ஆரையென்னுமாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (முக்தரென்கிறது ஸம்ஸார ஸம்பந்தமற்றவர்களை) என்று.

**விளக்கம் -** அடுத்து முக்தர் என்பது யாரைக் குறிக்கும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அவர்களாகிறார், அநாதிகர்ம ப்ரவாஹ ப்ரயுக்தமான ஸம்ஸார ஸம்பந்தம் நடவாநிற்கச் செய்தே, மோக்ஷ ருசிக்கு ப்ரதிபந்தகமான கர்ம விசேஷம் அநுபவத்தாலேயாதல், ஸாமாந்யேந அநுஷ்டிக்கும் ப்ராயச்சித்த கர்மங்களாலேயாதல், அநபிஸம்ஹித பலமாய் அத்யுத்கடமான ப்ராமாதிக புண்யங்களாலேயாதல் க்ஷயித்து, அதடியாக ஜாயமாநதசையில பகவத் கடாக்ஷத்தாலுண்டான ஸத்வோத்ரேகத்தாலே மோக்ஷ ருசி பிறந்து, ஸத்குரு ஸமாச்ரயண ஸம்ப்ராப்த வேதாந்த வேத்ய பரபரஹ்ம ஜ்ஞாநராய், தத் ப்ராப்தி ரூப மோக்ஷ ஸித்தயர்த்தமாக ஸ்வவர்ண ஸ்வாச்ரமோசிதமான காமங்களை பல ஸங்க கர்த்ருத்வ த்யாக பூர்வகமாக அநுஷ்டித்து, “தர்மேண பாபமபநுததி” என்றும், “கஷாயே கர்மபி: பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்ததே” என்றும் சொல்லுகிறபடியே, அந்த ஸத் கர்மாநுஷ்டாநத்தாலே ஜ்ஞாநோத்பத்தி விரோதி ப்ராசீந கர்மம் க்ஷயித்தவாறே அந்த:கரணம் நிர்மலமாய், பகவதேகாவலம்பியான ஸம்யக் ஜ்ஞாநமுதித்து, அநந்தரம், “ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ ஜ்ஞாந ஸமாதிபி: நராணாம் க்ஷீண பாபாநாம், க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே” என்கிறபடியே, இப்படி பஹுதர ஜந்ம ஸாத்யமான கர்ம ஜ்ஞாநங்களாலே பிறந்த தைலதாராவதவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்தாநரூப பக்தி மூலமாக வரும் பகவத ப்ரஸாதத்தாலேயாதல். அன்றிக்கே தன்னுடைய நிர்ஹேதுக ஸௌஹார்த விசேஷத்தாலே யாத்ருச்சிகாதி ஸுக்ருத பரம்பரைகளைக் கல்பித்து அதடியாக விசேஷ கடாக்ஷத்தைப் பணணி, அநந்தரம் அத்வேஷத்தை ஜநிப்பித்து, ஆபிமுக்கியத்தை உண்டாக்கி, ஸாத்விக ஸம்பாஷணத்தை விளைத்து, அவ்வழியாலே ஸதாசார்ய ஸமாச்ரயணததிலே மூட்டி, ததுபதேசமுகேந தத்வஜ்ஞாநத்தைப் பிறப்பித்தல், தன்னுடைய விசேஷ கடாக்ஷம் தன்னாலே தத்வஜ்ஞாநத்தைப் பிறப்பித்தல் செய்து, மஹாவிச்வாஸ பூர்வகமாகத் தன் திருவடிகளே உபாயமென்று நிற்கும்படி பண்ணும் பகவதாகஸ்மிக க்ருபையாலே உபாயாந்தர விஷயத்தில் பிறந்த துஷ்கரத்வாதி புத்தி மூலமாக வரும் ப்ரபதந மூலமான பகவத் ப்ரஸாதத்தாலேயாதல், ஸாம்ஸாரிக ஸகல துரிதங்களும் கழிந்து ஆவிர்ப்பூத ஸ்வரூபராய் பகவதநுபவ கைங்கர்யைக போகரானவர்கள். அவிசேஷேண (முக்தரென்கிறது ஸம்ஸார ஸம்பந்தமற்றவர்களை) என்கையாலே, பகவதநுபவத்தில் ருசியின்றிக்கே தத் ஸமாச்ரயணத்தைப் பண்ணி ஸம்ஸார நிவ்ருத்தியை உண்டாக்கிக் கொண்டு தேசவிசேஷத்திலே போய் ஸ்வஸ்வரூபாநுபவம் பண்ணியிருக்கும் கேவலரையும் சொல்லிற்றாயிற்று.

**விளக்கம் -** எல்லையற்ற காலமாக இயற்றியபடி உள்ள கர்மவினைகள் என்ற ப்ரவாஹத்தின் விளைவாக ஏற்படும் ஸம்ஸாரபந்தம் என்பது தொடர்ந்தபடி உள்ளது;

ஆனாலும், மோக்ஷத்தில் ஏற்படும் விருப்பத்திற்கு தடை ஏற்படுத்துகின்ற கர்மங்களுடைய அனுபவம், சாதாரணமாகச் செய்யப்படும் ப்ராயச்சித்த கர்மங்கள், பயனை எண்ணாமல் மிகவும் உயர்ந்த சிந்தனை ஏதும் இன்றி செய்யப்படும் அதிகமான புண்ணியங்கள் ஆகியவை அனைத்தும் அழியப் பெற்று, அதன் விளைவாக நல்ல ஒரு ஆசார்யனை அடைந்து, அவருடைய உபதேசம் மூலமாக, வேதாந்தத்தால் மட்டுமே அறியப்படுவதான பரப்ரஹ்மத்தைக் குறித்து அறிகின்றனர்; அப்படிப்பட்ட பரப்ரஹ்மத்தை அடைதல் என்பதான மோக்ஷத்தை அடையும்விதமாக தங்களுடைய வர்ணாச்ரமத்திற்கு ஏற்றபடியான கர்மங்களை, எந்தவிதமான பயனையும் கருதாமல் இயற்றியபடி உள்ளனர்; தைத். (2-6) - தர்மேண பாபமபநுததி – தர்மங்களால் பாபத்தை விலக்குகிறான் - என்றும், கஷாயே கர்மபி: பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்ததே – புண்ணியங்களால், ஞானம் ஏற்படுவதற்குத் தடையாக உள்ள வினைகள் அழிந்த பின்னர், ஞானம் பிறக்கிறது - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அத்தகைய சிறந்த கர்மங்கள் காரணமாக, ஞானம் ஏற்படுவதற்கு விரோதியாக உள்ள பூர்வவினைகள் அனைத்தும் அழிகின்றன; இதனால் அந்தகரணம் தூய்மை அடைகிறது; பகவானைக் குறித்து மட்டுமே எண்ணியபடி உள்ள ஞானம் ஏற்படுகிறது; அதன் பின்னர், ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ ஜ்ஞாந ஸமாதிபி: நராணாம் க்ஷீண பாபாநாம், க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே - ஆயிரம் பிறவிகளில் செய்யப்படும் தவம், த்யானம், ஸமாதிநிலை ஆகியவை மூலம் பாபங்கள் அனைத்தும் அழிந்து, ஒருவனுக்கு க்ருஷ்ணனிடம் பக்தி ஏற்படுகிறது - என்பதற்கு ஏற்ப, எண்ணற்ற பிறவிகளின் பின்னர் கைகூடுகின்ற கர்மங்கள் மற்றும் ஞானம் ஆகியவற்றால் ஏற்படுவதாகிய, எண்ணெய் வழிவது போன்று இடைவெளி இன்றி உள்ளதான “ஸர்வேச்வரனைக் குறித்து சிந்தனை” என்ற வடிவில் உள்ள பக்தி மூலமாக பகவானுடைய கடாக்ஷம் பிறக்கிறது. அல்லது, பகவான் எந்தவிதமான காரணமும் இன்றி, நல்ல எண்ணம் மட்டுமே காரணமாகக் கொண்டு, எதிர்பாராத நிகழ்வுகள் மூலம் சில நற்பண்புகளை உண்டாக்கி, அதன் காரணமாகச் சிறப்பான கடாக்ஷங்களைச் செய்து, அதன் பின்னர் தன்னிடம் வெறுப்பு இன்மை என்பதை ஏற்படுத்தி, தன்னை மிகவும் விருப்பத்துடன் வணங்குதல் என்னும் நிலையை உண்டாக்கி, பாகவதர்களுடன் உரையாடல்களை உண்டாக்கி, அதன் மூலம் சிறந்த ஒரு ஆசார்யனை அண்டுதல் என்பதை ஏற்படுத்தி, அவருடைய உபதேசம் மூலமாக தத்வஞானத்தை ஏற்படுத்துகிறான்; தனது திருவடிகளே உபாயம் என்று நிற்கும்படிச் செய்கிறான்; இப்படியாக எதனையும் எதிர்பாராமல் செய்வதான பகவத் கருணை மூலமாக, “மற்ற விஷயங்களில் அல்லது மற்ற

உபாயங்களில், இவை கைக்கொள்வதற்கு அரியவை ஆகும்", என்பது போன்ற எண்ணம் ஏற்பட்டு, அதன் விளைவாக ஏற்படும் பகவத் கருணையால், சரணாகதி செய்தல் (அல்லது சரணாகதி மூலமாக ஏற்படும் பகவத் கருணை எனலாம்); ஸம்ஸாரத்தில் ஏற்படும் அனைத்து துக்கங்களும் விலகி, இதன் மூலமாக ஆத்மஸ்வரூபம் கைக்கூடப் பெற்று, பகவத் அனுபவ கைங்கர்யம் என்பதை அனுபவித்தபடி உள்ளவர்கள் ஆவர். எந்தவிதமான அடைமொழியும் இல்லாமல், "முக்தரென்கிறது ஸம்ஸார ஸம்பந்தமற்றவர்களை" என்று கூறுவதால், பகவத் அனுபவத்தில் எந்தவிதமான ருசியும் இன்றி, ஆனாலும் அவனை வணங்கி நின்றி ஸம்ஸாரத்திலிருந்தும் வெளியேறி, பரமபதம் சென்று தங்களுடைய ஆத்மாவை மட்டுமே அனுபவித்தபடி உள்ள கைவல்ய நிஷ்டர்களையும் இங்கு கூறினார்.

45. நித்யரென்கிறது ஒருநாளும் ஸம்ஸரியாத சேஷசோஷஸநாதிகளை.

**அவதாரிகை** - இனி நித்யரென்கிறது ஆரை? என்னுமாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார்.

**விளக்கம் -** நித்யர் என்பவர்கள் யார் என்ற கேள்விக்கு அடுத்து விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (நித்யரென்கிறது ஒருநாளும் ஸம்ஸரியாத சேஷ சேஷாஸநாதிகளை) என்று ஒருநாளும் ஸம்ஸரியாத என்கையாலே முக்தரை வ்யாவர்த்திக்கிறது. நிவ்ருத்த ஸம்ஸாரரிறே அவர்கள்; இவர்கள் அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரிறே. "அஹ்ருத ஸஹஜதாஸ்யாஸ் ஸூரயஸ் ஸ்ரஸ்தபந்தா" என்றாரிறே பட்டர். "நித்யோ நித்யாநாம்" என்றும், "ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீசநீசௌ" என்றும் சொல்லுகிறபடியே ஆத்மஸ்வரூபம் நித்யமாயிருக்க, "அஸந்நேவ" என்பது "ஸந்தமேநம்" என்பதாகிறது. பகவத் விஷய ஜ்ஞாநராஹித்ய ஸாஹித்யங்களாலேயிறே. ஆகையால் இவர்களை நித்யரென்கிறதும் பகவத்ஜ்ஞாநத்துக்கு ஒருநாளும் ஸங்கோசமில்லாமையாலே என்று கொள்ளவேணும். இந்த வைபவத்தைப் பற்றவிறே "யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்தி தேவா:" என்றும், "யத்ர ருஷய: ப்ரதமஜா யே புராணா:" என்றும ச்ருதி இவர்களை ச்லாகிக்கிறது பாஷ்யகாரரும் இவர்களுடைய வைபவத்தை "ஸ்வச்சந்தாநுவர்த்தி" இத்யாதியாலே ஸ்ரீகத்யத்திலே பரக்க அருளிச்செய்தார். ஆகையாலே, (ஒருநாளும் ஸம்ஸரியாத) என்றபோதே,

இவர்களுடைய வைபவமெல்லாம் சொல்லிற்றாயிற்று அசேஷ சேஷ வ்ருத்தியிலும் அந்விதனாய் கைங்கர்யபரர்க்கெல்லாம் படிமாவாயிருக்கையாலே, திருவனந்தாழ்வானை சேஷனென்கிறது. “நிவாஸ சய்யாஸந பாதுகாம்சுகோபதாந வர்ஷாதப வாரணாதிபி: சரீரபேதைஸ் தவ சேஷதாம்கதைர் யதோசிதம் சேஷ இதீரிதே ஜநை:” என்றிறே ஆளவந்தாரும் அருளிச்செய்தது.

**விளக்கம்** - “நித்யர்” என்று கூறுவதன் மூலம், “ஸம்ஸாரத்தில் ஒருபோதும் பந்தப்படாமல் உள்ளவர்கள்” ஏன்று உரைப்பதால், இவகளிடமிருந்து முக்தர்கள் வேறுபடுத்தப்பட்டனர். முக்தர்கள், “ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டவர்கள்” ஆவர்; ஆனால் நித்யர்கள் ஒருபோதும் ஸம்ஸாரத்தால் தீண்டப்படாதவர்கள் ஆவார்கள். ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (2-32) – அஹ்ருத ஸஹஜதாஸ்யாஸ் ஸூரயஸ் ஸ்ரஸ்தபந்தா - அபகரிக்கப்படாமல் உள்ள இயல்பான கைங்கர்யம் பெறவர்கள் நித்யர்கள் – என்று ஸ்வாமி பராசரபட்டர் அருளிச் செய்தார். கட. (5-13) – நித்யோ நித்யாநாம் – நித்யர்களில் நித்யமானவனும் – என்றும், ச்வே. (1-9) – ஜ்ஞா ஜ்ஞௌ த்வௌ ஈச அநீச - பிறப்பற்ற இரண்டில் ஒன்று அறிந்ததும் ஒன்று அறியாததுமாகவும், ஒன்று வலிமை உள்ளதும் ஒன்று வலிமை அற்றதுமாகவும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஆத்மஸ்வரூபமானது நித்யமானதாகவே உள்ளது; ஆனாலும் தை. (2-6-1) – அஸந்நேவ - இல்லாதவர்கள் ஆகிறார்கள் – என்றும், தை. (2-6-1) – ஸந்தமேநம் - இருப்பவர்கள் ஆகிறார்கள் - என்றும் ஏன் கூறப்படுகிறது என்றால், “பகவத் விஷயம் குறித்த ஞானம் அற்ற நிலை, பகவத் விஷயம் குறித்த ஞானம் பெற்ற நிலை” என்பதன் அடிப்படையிலேயே ஆகும். ஆகவே இவர்களை “நித்யர்கள்” என்று கூறுவது ஏனென்றால், “பகவத் ஞானத்திற்கு எப்போதும் சுருக்கம் ஏற்படாதவர்கள்” என்ற அடிப்படையில் ஆகும். இவர்களுடைய இந்த மேன்மையைக் கொண்டாடுவதாகவே ச்ருதியானது, யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்தி தேவா: - எந்த ஒரு பரமபதத்தில் பகவத் அனுபவத்தில் முதன்மையாக நித்யர்கள் உள்ளனரோ – என்றும், யத்ர ருஷய: ப்ரதமஜா யே புராணா: - எந்தப் பரமபதத்தில் அனைத்தையும் நேரே காணக் கூடிய நித்யர்கள் முன்பே உள்ளனரோ - என்றும் கொண்டாடுகிறது. பாஷ்யகாரரும் இவர்களுடைய வைபவத்தை கத்யத்தில் - ஸ்வச்சந்தாநுவர்த்தி - பகவானுடைய இச்சையைப் பின்பற்றியபடி உள்ள – என்று அருளிச்செய்தார். ஆகவே ஒருநாளும் சூர்ணையில் “ஒருநாளும் ஸம்ஸரியாத” என்று கூறியபோதே அவர்களுடைய அனைத்து வைபவங்களும் கூறப்பட்டதாகிறது. அனைத்துவிதமன கைங்கர்யங்களிலும்

ஈடுபடுபவனாகவும், கைங்கர்யம் செய்யும் அனைவருக்கும் உதாரணமாக உள்ளவனாகவும் இருப்பதால் திருவனந்தாழ்வானை "சேஷன்" என்று கூறுகிறோம். ஸ்தோத்ரரத்னம் (40) – நிவாஸ சய்யா ஆஸந பாதுகாம்சுக உபதாந வர்ஷாதப வாரணாதிபி: சரீரபேதை: தவ சேஷதாம்கதை: யதோசிதம் சேஷ இதி ஈரிதே ஜனை: - ஸர்வேச்வரனாகிய நீ எழுந்தருளியுள்ள இருப்பிடமாகவும், திருக்கண் வளர்வதற்கு ஏற்ற படுக்கையாகவும், வீற்றிருப்பதற்கு ஸிம்ஹாஸனமாகவும், நிற்கும்போது பாதுகைகளாகவும், திருப்பரிவட்டமாகவும், நடந்தால் குடையாகவும் என்பதாக, உனக்கு அடிமையாக உள்ளதையே தனது இயல்பாகக் கொண்டதால் சேஷன் எனப்படுபவன் - என்று ஆளவந்தார் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** மற்றுள்ள ததீயரைப் போலே அநியமமாயிராதே ஸர்வேச்வரன் அமுது செய்த சேஷமொழிய அமுது செய்யாத நியமத்தைப் பற்ற சேஷாஸநரென்று சேனை முதலியாரை நிரூபிக்கிறது. "த்வதீய புக்தோஜ்ஜித சேஷ போஜிநா" என்றாரிறே ஆளவந்தாரும். "வநாத்ரி நாதஸ்ய ஸுஸுந்தரஸ்ய வை ப்ரபுக்த சிஷ்டாச்யத ஸைந்ய ஸத்பதி:" என்று ஆழ்வானும் அருளிச்செய்தார். ஆதிசப்தத்தாலே, "சேஷசேஷாசந கருட ப்ரமுக நாநாவிதாநந்த பரிஜந பரிசாரிகா பரிசரித சரண யுகள" எனகிறபடியே, பகவத் கைங்கர்யைக போகராயிருந்துள்ள வைநதேய ப்ரமுகரான நித்யஸித்தரையெல்லாம் சொல்லுகிறது.

**விளக்கம் -** வேறு சில அடியார்கள் போன்று எந்தவிதமான கட்டுப்பாடும் இன்றி அல்லாமல், ஸர்வேச்வரன் அமுது செய்யாத எதனையும் ஏற்பதில்லை என்னும் விதிமுறையைக் கொண்டுள்ளதால் சேனைமுதலியாரை "சேஷாஸநர்" என்கிறார்கள். ஸ்தோத்ரரத்னம் (42) - த்வதீய புக்த உஜ்ஜித சேஷ போஜிநா - நீ அமுது செய்த மீதத்தை உட்கொள்பவனாக உள்ளவர் - என்று ஆளவந்தார் அருளிச்செய்தார். ஸுந்தரபாஹு ஸ்தவம் (74) – வநாத்ரி நாதஸ்ய ஸுஸுந்தரஸ்ய வை ப்ரபுக்த சிஷ்டாச்யத ஸைந்ய ஸத்பதி: - மிகவும் அழகாக உள்ளவனும், திருமாலிருஞ்சோலையில் உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரன் அமுது செய்து மீதம் உள்ளதை ஏற்கும் சேனைமுதலியார் - என்று கூரத்தாழ்வானும் அருளிச்செய்தார். சூர்ணையில் உள்ள "சேஷ சோஷஸநாதிகளை" என்பதில் காணப்படும் "ஆதி" என்பதன் மூலம், கத்யத்தில் - சேஷசேஷாசந கருட ப்ரமுக நாநாவிதாநந்த பரிஜந பரிசாரிகா பரிசரித சரண யுகள – ஆதிசேஷன், சேனைமுதலியார் , கருடன் போன்றவர்கள் தொடக்கமாக உள்ள பலவிதமான கைங்கர்யம் செய்பவர்கள்,

கைங்கர்யம் செய்யும் தேவலோகப் பெண்கள், இவர்களால் கைங்கர்யம் செய்யப்படும் திருவடிகள் கொண்டவனே - என்பதற்கு ஏற்ப, பகவத் கைங்கர்யம் என்பதிலேயே இன்பம் அடைந்தபடி உள்ள கருடன் முதலான நித்யர்கள் கூறப்படுகிறார்கள்.

46. ஜலத்துக்கு அக்நி ஸம்ஸ்ருஷ்டஸ்த்தாலீ ஸம்ஸர்கத்தாலே ஔஷ்ண்ய சப்தாதிகளுண்டாகிறாப்போலே, ஆத்மாவுக்கும் அசித் ஸம்பந்தத்தாலே அவித்யா கர்ம வாஸநா ருசிகளுண்டாகிறன.

**அவதாரிகை** - பூர்வோக்தமான ஸ்வரூப வைலக்ஷண்யத்தையுடைய ஆத்மாவுக்கு அவித்யாதி தோஷ ஸம்பந்தம் வந்தபடி என்? என்கிற சங்கையிலே, ஸத்ருஷ்டாந்தமாக தத்தேதுவை அருளிச்செய்கிறார் (ஜலத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - முன்பு கூறப்பட்டதான, மிகவும் சிறப்பான ஸ்வரூபத்தைக் கொண்ட ஆத்மாவிற்கு, அவித்யை முதலான தோஷங்கள் எப்படி ஏற்படுகிறது என்று கேள்விக்கு, ஓர் உதாரணத்துடன், அதற்கான காரணத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது ஸ்வபாவத ஏவ நிர்விகாரமாய் சீதளமாயிருக்கிற ஜலத்துக்கு அக்நியோடே ஸம்ஸ்ருஷ்டையான ஸ்தாலியோட்டை ஸம்ஸர்கத்தாலே ஔஷ்ண்ய சப்தோத்ரேக ரூபங்களான விகாரங்களுண்டாகிறாப்போலே ஸ்வத ஜ்ஞாநாநந்தாமல ஸ்வரூபனான ஆத்மாவுக்கும் குணத்ரயாச்ரய அசித் ஸம்பந்தத்தாலே, அவித்யா கர்ம வாஸநா ருசிகளுணடாகிறன என்கை. இவருடைய திருத்தம்பியாரும் ஆசார்ய ஹ்ருதயத்திலே "அவித்யா காரணமநாத்யசித் ஸம்பந்தம்" என்று அருளிச்செய்தாரிறே.

**விளக்கம்** - இயல்பாகவே எந்தவிதமான மாறுதல்களும் அடையாமல், குளிர்ந்துள்ள நீருக்கு, அக்னியின் ஸம்பந்தம் காரணமாக "உஷ்ணம், மிகுந்த சப்தத்துடன் கொதித்தல்" போன்ற மாறுதல்கள் ஏற்படுகின்றன; இதனைப் போன்று இயல்பாகவே "ஞானம், ஆனந்தம், தூய்மை" ஆகியவற்றுடன் கூடியுள்ள ஆத்மாவிற்கு, மூன்று குணங்களையும் அண்டி நிற்கின்ற அசித் பொருள்களுடைய ஸம்பந்தம் காரணமாக, "அவித்யை, கர்மம், வாசனை, ருசி" போன்றவை ஏற்படுகின்றன. இவருடைய திருத்தம்பியாராகிய அழகிய மணவாளப்பெருமாள் நாயனார், ஆசார்ய ஹ்ருதயத்தில் (10) – அவித்யா காரணம் அநதி அசித் ஸம்பந்தம் – என்னும் கருத்தை அருளிச்செய்தார் அல்லவோ?

**வ்யாக்யானம் -** இப்படி ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே “நிர்வாணமய ஏவாயமாத்மா ஜ்ஞாநமயோமல: து:காஜ்ஞாநமலா தர்மா: ப்ரக்ருதேஸ் தே ந சாத்மந: ஜலஸ்ய சாக்நி ஸம்ஸ்ருஷ்ட ஸ்தாலீ ஸங்காத ததாபி ஹி சப்தோத்ரேகாதிகாந் தர்மாந் தத் கரோதி யதாமுநே ததாத்மா ப்ரக்ருதௌ ஸங்காத அஹம்மாநாதி தூஷித:, பஜதே ப்ராக்ருதாந் தர்மாநந்ய ஸ்தேப்யோபி ஸோவ்யய:” என்று சொல்லப்பட்டது. அவித்யையாவது அஜ்ஞாநம்; அதுதான் ஜ்ஞாநாநுதய, அந்யதாஜ்ஞாந, விபரீத ஜ்ஞாந ரூபேண அநேக விதமாயிருக்கும். கர்மமாவது கரண த்ரய க்ருதமாய், புண்ய பாபாத்மகமான க்ரியா விசேஷம்; அதில் புண்யம் ஐஹிக ஆமுஷ்மிக நாநாவித போக ஸாதநதயா பஹுவிதமாயிருக்கும், பாபமும் அக்ருத்யகரண க்ருதயாகரண பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசார ரூபேண அநந்தமாயிருக்கும். வாஸனையாவது முன்பு செய்து போந்தவற்றிலே மீளவும் மூளுகைக்குறுப்பான ஸம்ஸாரம்; இதுதான் ஹேது பேதத்தாலே பஹுவிதமாயிருக்கும். ருசியாவது ரஸாந்தரத்தாலும் மீட்கவொண்ணாதபடி ஒன்றிலே செல்லுகிற விருப்பம்; இதுவும் விஷய பேதத்தாலே பஹுவிதமாயிருக்கும். “அவித்யா கர்ம வாஸநா ருசிகளுண்டாயிற்றன” என்னாதே, “உண்டாகிறன” என்கையாலே இவற்றினுடைய ப்ரவாஹ ரூபத்வம் சொல்லப்பட்டது.

**விளக்கம் -** இவ்விதம் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் (6-7-22) - நிர்வாணமய ஏவாயமாத்மா ஜ்ஞாநமயோமல: து:காஜ்ஞாநமலா தர்மா: ப்ரக்ருதேஸ் தே ந சாத்மந: ஜலஸ்ய சாக்நி ஸம்ஸ்ருஷ்ட ஸ்தாலீ ஸங்காத ததாபி ஹி சப்தோத்ரேகாதிகாந் தர்மாந் தத் கரோதி யதாமுநே ததாத்மா ப்ரக்ருதௌ ஸங்காத அஹம்மாநாதி தூஷித:, பஜதே ப்ராக்ருதாந் தர்மாநந்ய ஸ்தேப்யோபி ஸோவ்யய: – மோக்ஷ நிலையில் உள்ள ஜீவாத்மா, ஞானம் மற்றும் ஆனந்தமே ஸ்வரூபமாக உள்ளவன், தோஷம் அற்றவன் ஆவான்; துன்பங்கள், அஜ்ஞானம், தோஷங்கள் ஆகிய பலவும் ப்ரக்ருதியான அசித்தின் தர்மங்கள் ஆகும்; அவை ஆத்மாவுடையது அல்ல; நீருடன் அக்னிக்கு ஏற்படும் ஸம்பந்தம் காரணமாக ஓசை, வெப்பம் போன்றவை நீருக்கு எவ்விதம் ஏற்படுகின்றனவோ அது போன்று, ஆத்மாவானது ப்ரக்ருதியின் ஸம்பந்தம் காரணமாக “நான், என்னுடையது” என்பது போன்ற எண்ணங்களால் தாழ்வை அடைந்து, ப்ரக்ருதியின் ஸம்பந்தம் கொண்ட தர்மங்களை அடைகிறான்; அழிவற்ற ஆத்மாவானவன் ப்ரக்ருதியின் தர்மங்களைக் காட்டிலும் வேறுபட்டவன் ஆவான் - என்று உரைக்கப்பட்டது. அவித்யை என்பது

அறிவின்மை; அது “ஞானம் இன்மை, பொருளின் தன்மையை வேறாக அறிதல், ஒரு பொருளை மற்றொன்றாக அறிதல்” என்பது போன்று பலவிதமாக உள்ளது. கர்மம் என்பது மனம், வாக்கு மற்றும் சரீரம் ஆகிய மூன்றாலும் இயற்றப்படுவதாகவும், புண்ணியம் மற்றும் பாபங்களை உள்ளடக்கியதாகவும் உள்ள செய்கைகள் ஆகும். புண்ணியம் என்பது இந்த லோகத்திலும், அந்த லோகத்திலும் பலவிதமான இன்பங்களை அடையும்படியாகச் செய்யவல்ல உபாயங்கள் பல கொண்டதாக, பலவிதமாக உள்ளது. பாபங்கள் என்பவை “செய்யத்தகாதவற்றைச் செய்தல், செய்யவேண்டியதைச் செய்யாமல் விடுதல், பகவத் அபசாரம், பாகவத அபசாரம், பொறுக்க இயலாத மற்ற அபசாரம்” என்று எண்ணற்றதாக உள்ளவை ஆகும். வாஸனை என்பது முன்பு செய்தவற்றில் மீண்டும் ஈடுபடுதல் என்பதற்குக் காரணமாக ஸம்ஸாரம் ஆகும்; இது பல்வேறு காரணங்களால் பலவிதமாக உள்ளதாகும். ருசி என்பது, வேறு ஒரு சிறந்த சுவையைக் காண்பித்த போதிலும் மீட்க இயலாதபடி, அதனைக் காட்டிலும் தாழ்ந்தவற்றில் கொள்ளும் ஆழ்ந்த ஈடுபாடு ஆகும். இதுவும் விஷயங்களில் உள்ள வேறுபாடுகள் காரணமாகப் பலவிதமாக உள்ளதாகும். “அவித்யை, கர்மம், வாஸனை, ருசி” ஆகியவை, “உண்டாயின” என்று கூறப்படாமல், “உண்டாகின்றன” என்று ஏன் கூறப்பட்டது என்றால், இவற்றின் இடைவிடாத ப்ரவாளம் காரணமாகவே ஆகும்.

47. அசித்துக் கழிந்தவாறே அவித்யாதிகள் கழியுமென்பர்கள்.

**அவதாரிகை** - இப்படி ஆத்மாவுக்கு வந்தேறியான அவித்யாதிகள் தான் எவ்வவஸ்தையிலே கழிவது? என்னும் ஆகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (அசித்துக் கழிந்தவாறே அவித்யாதிகள் கழியுமென்பர்கள்) என்று.

**விளக்கம்** - இவ்விதம் ஆத்மாவிற்கு வந்து சேர்ந்ததான அவித்யை போன்றவை எந்த நிலையில் விலகுகின்றன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது காரணநிவ்ருத்த்யா கார்ய நிவ்ருத்தியாகையாலே, அசித் ஸம்பந்த நிபந்தநமாக வந்த இவையும் தத் ஸம்பந்தம் கழிந்தவாறே கழியுமென்று தத்வ வித்துக்கள் சொல்லுவர்களென்றபடி. “என்பர்கள்” என்றவித்தை பரமதமாக்கி, மயர்வற மதிநலமருளப் பெற்றவர்களுக்கு பகவத் ப்ரஸாத விசேஷத்தாலே அசித்துக் கழியும் முன்னே அவித்யாதிகள் கழியக் காண்கையாலே அந்த நியமமில்லை என்று இவருக்குக்

கருத்து என்று சொல்லுவாருமுண்டு. அது முக்யமன்று; அவர்கள் திருமேனியோடே இருக்கச் செய்தே, பரமபக்தி பர்யந்தமாகப் பிறந்ததேயாகிலும் “வினைப்படலம் விள்ள விழித்துன்னை மெய்யுற்றாலுள்ளவுலகளவும் யானுமுளனாவனென்கொலோ” என்கையாலே, “ஸர்வம் ஹ பச்ய: பச்யதி” என்கிற முக்தாவஸ்தையில் வைசத்யம் அசித்து கழிவதற்கு முன்பில்லாமையாலே. ஆக, கீழ்ச் செய்ததாயிற்றது - ஆத்மஸ்வரூபம் பத்த முக்த நித்ய ரூபேண மூன்றுபடிப்பட்டிருக்குமென்றும், அதில் பத்த சேதநர்க்கு அவித்யாத்யுத்பத்தி மூலமும், தந் நிவ்ருத்திக்ரமமும் சொல்லி நின்றது.

**விளக்கம்** - அதாவது, “காரணம் விலகும்போது, கார்யமும் விலகும்” என்று கூறுவதற்கு ஏற்ப, அசித் வஸ்துக்களுடைய ஸம்பந்தத்தின் விளைவாக வந்து சேர்ந்த இவை அனைத்தும், அத்தகைய ஸம்பந்தம் நீங்கிய பின்னர் அழிந்துவிடும் என்று, உண்மையை அறிந்தவர்கள் கூறுவர். சூர்ணையில் உள்ள “என்பர்கள்” என்பதை, மற்றவர்கள் கூறும் கருத்தாக எடுத்துக்கொண்டு, “மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர்க்கு, பகவத் க்ருபையின் சிறப்பு காரணமாக, அசித் வஸ்துக்களுடைய ஸம்பந்தம் நீங்குவதற்கு முன்பாகவே அவித்யை போண்றவை நீங்குவதை நாம் காண்கிறோம். ஆகவே அசித் ஸம்பந்தம் நீங்கவேண்டும் என்ற விதிமுறை அனைவருக்கும் பொருந்தாது” என்று உரைப்பதே இவருடைய கருத்து என்று சிலர் கூறுவர். ஆனால் அது முக்கியம் அல்ல; ஆழ்வார்கள் தாங்கள் ஆதரித்த திருமேனியுடன் இருக்கும் நிலையில் கூட பரமபக்தி வரை நீண்ட ஞானம் ஏற்பட்டபோதிலும், பெரியதிருவந்தாதி (76) – வினைப்படலம் விள்ள விழித்துன்னை மெய்யுற்றாலுள்ளவுலகளவும் யானுமுளனாவனென்கொலோ - என்று கூறுவதால், சாந்தோக்யம் - ஸர்வம் ஹ பச்ய: பச்யதி – ப்ரஹ்மத்தைக் கண்டவன் அனைத்தையும் கண்டவன் ஆகிறான் - என்று முக்தி பெற்ற நிலையில் ஏற்படும் ஞானத்தெளிவானது, அசித் ஸம்பந்தம் நீங்குவதற்கு முன்பு இல்லை என்பதால், இவ்விதம் உரைத்தார் என்று கருத்து. இதுவரை கூறப்பட்டது என்ன? ஆத்மஸ்வரூபமானது “பத்தர், முக்தர், நித்யர்” என்று மூன்றுவகையாக உள்ளது என்பதும், ஸம்ஸாரத்தில் பந்தப்பட்ட சேதநர்களுக்கு அவித்யை உற்பத்தி ஆவதன் அடிப்படையும் அவற்றின் விலகுதலும் கூறப்பட்டது.

48. இம்மூன்றும் தனித்தனியே அநந்தமாயிருக்கும்.

**அவதாரிகை** - இப்படி உக்தமான த்ரிவிதாத்ம வர்க்கமும், இத்தனை சேதநரென்று ஸங்க்யேயமாயிருக்குமோ? என்கிற சங்கையிலே அருளிச்செய்கிறார்.

**விளக்கம்** - இவ்விதம் கூறப்பட மூன்றுவிதமான ஆத்மாக்களும் "இத்தனை" என்று அளவிட்டுக் கூறலாம்படி உள்ளதோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இம்மூன்றும் தனித்தனியே அநந்தமாயிருக்கும்) என்று. இம்மூன்றும் அநந்தமாயிருக்குமென்றால், வர்க்கத்ரயமுமாக அநந்தமென்று தோற்றுமென்று நினைத்து, "தனித்தனியே" என்று விசேஷிக்கிறார். அநந்தமாயிருக்குமென்றது அஸங்க்யேயமாயிருக்குமென்றபடி.

**விளக்கம் -** "இந்த மூன்றும் எண்ணற்றதாக உள்ளது" என்று கூறினால், "மூன்று பிரிவும் எண்ணற்றதாக உள்ளன" என்ற கருத்து உண்டாகிவிடும் என எண்ணியவராக, "தனித்தனியே" என்று சிறப்பித்துக் கூறுகிறார். "அந்தந்தமாக" என்றால் "எண்ணற்று" என்று பொருள்.

49. சிலர், ஆத்மபேதமில்லை; ஏகாத்மாவே உள்ளதென்றார்கள்.

**அவதாரிகை** - உக்தமான ஜீவாநந்த்யத்துக்கு விரோதியான ஐகாத்ம்ய வாதத்தை நிராகரிக்கிறார் மேல் (சிலர் ஆத்ம பேதமில்லை, ஏகாத்மாவேயுள்ளதென்றார்கள்) என்று தொடங்கி.

**விளக்கம்** - மேலே கூறப்பட்டதான "ஆத்மாக்கள் எண்ணற்றவை" என்ற வாதத்திற்கு முரண்பட்ட கருத்தான "ஆத்மா ஒன்று மட்டுமே" என்ற வாதத்தை அடுத்து மறுக்கிறார்.

**வ்யாக்யானம்** - சிலரென்று அநாதரோக்தியாலே அருளிச் செய்கிறார். இப்படி சொல்லுமவர்கள் தாங்கள் ஆரோ? என்னில், ஜீவாத்வைத ப்ரதிபாதக சாஸ்த்ரத்தில் குத்ருஷ்டிகள். அதாவது, ப்ரஹ்மாத்வைதமென்றும், ஜீவாத்வைதமென்றும் சாஸ்த்ர

ப்ரதிபாத்யமான அத்வைதம் த்விவிதமாயிருக்கும். அதில் ப்ரஹ்மாத்வைதமாவது ப்ரகார்யத்வைதம். ஜீவாத்வைதமாவது ப்ரகாராத்வைதம். இதுக்கு நியாமகமேது? என்னில், ப்ரஹ்ம ப்ரகரணங்களிலே "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம", "ஐததாத்ம்யமிதம் ஸர்வம்", "புருஷ ஏவேதம் ஸர்வம்" என்று ஸாமாநாதிகரண்யத்தாலே ப்ரஹ்மாத்வைதத்தை ப்ரதிபாதிக்கையாலும், ஸாமாநாதிகரண்யம் ப்ரகார பேத விசிஷ்ட ப்ரகார்யேகத்வ பரமாகையாலும், "ஏகஸ்ஸந் பஹுதா விசார" என்று ப்ரகார பஹுத்வம் கண்டோக்தமாகையாலும், ஐக்ய விதிக்கு சேஷமான "நேஹநாநாஸ்தி" இத்யாதி பேத நிஷேதம் விஹிதைக்ய விரோதி பேத விஷயமாகையாலும், ஸாமான்ய நிஷேதம் விஹித வ்யதிரிக்த விஷயமாகையாலே ப்ரகாரி பஹுத்வ நிஷேத பரமாகையாலும், "ந தத் ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே" என்று ப்ரஹ்ம துல்ய ப்ரகார்யந்தர நிஷேத கண்டோக்தியாலும் ப்ரகார்யத்வைதமே ப்ரஹ்மாத்வைதம்.

**விளக்கம்** - அவ்விதம் உரைப்பவர்கள் யார் என்று, அவர்கள் குறித்து உரைப்பதற்கும் அவர்கள் தகுதியற்றவர்கள் என்பதால், அவர்களை "சிலர்" என்கிறார். இவ்விதம் கூறுபவர்கள் யார் என்றால், "ஜீவாத்மா - பரமாத்மா" என இரண்டு உள்ளதை வெளிப்படுத்தும் சாஸ்த்ரங்களைத் தவறாக அறிபவர்கள் ஆவார்கள். அதாவது சாஸ்த்ரங்களில் கூறப்படும் அத்வைதமானது, ப்ரஹ்ம அத்வைதம் மற்றும் ஜீவ அத்வைதம் என இரு வகைப்படும். இவற்றில் ப்ரஹ்ம அத்வைதம் என்பது "ப்ரகாரி ஒன்று" என்பதாகும்; ஜீவ அத்வைதம் என்பது "ப்ரகாரம் ஒன்று" என்பதாகும் (ப்ரகாரி என்றால் முதன்மையான வஸ்து, ப்ரகாரம் என்றால் ப்ரகாரிக்கு உடைமையான பொருள் என்பதாகும்). இதற்கான சான்றுகள் என்ன? ப்ரஹ்மத்தைக் குறித்து உரைக்கப்படும் பகுதிகளில், சாந். (3-14-1) - ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம - இவை அனைத்தும் ப்ரஹ்மம் -– என்றும், சாந். (6-8-7) – ஐதத் ஆத்ம்யமிதம் ஸர்வம் - அனைத்தும் ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொண்டது - என்றும், ச்வே. (3-15)- புருஷ ஏவேதம் ஸர்வம் – இந்தப் புருஷனே இவை அனைத்தும் - என்றும் உள்ள பல வாக்கியங்களில், ஸாமாநாதிகண்யம் (பல பொருள்கள் கொண்ட சொற்கள், ஒரே வேற்றுமையில் நின்று, ஒரே பொருள் குறித்து உரைக்கும் தன்மை : உதாரணம் - கறுத்த பருத்த யானை – என்பதில் உள்ள கறுத்த மற்றும் பருத்த ஆகிய சொற்களை யானையையே குறிப்பதாக உள்ளன) மூலம், ப்ரஹ்ம அத்வைதம் வெளிப்படுத்தப்படுகிறது; சிறப்புடன் கூடியவை மற்றும் அவ்விதம் அல்லாதவை எனப் பலவற்றையும் ஒன்றாக ஸாமாநாதிகரண்யம் கூறுவதால்,

ப்ரகாரங்களில் உள்ள வேறுபாட்டுடன் ப்ரகாரி உள்ளது என்று உணர்த்துகிறது; ஏகஸ்ஸந் பஹுதா விசார – பரமாத்மா ஒன்றாக இருந்தபடி பலவற்றையும் வ்யாபிக்கிறான் – என்று ப்ரகாரத்தின் பலவாக உள்ள நிலை கூறப்பட்டுள்ளது. “ஒன்றே ஆகும்” என்ற ஐக்யத்தை கூறும் விதியின் எஞ்சிய பகுதியானது, ந இஹ நாநாஸ்தி - பரமாத்மாவை விடுத்து ஏதும் இல்லை - என்று வேறுபாட்டைத் தள்ளுகிறது; இப்படியாக வேறுபாட்டைத் தள்ளுகின்ற சாஸ்த்ரங்களில் “அனைத்தும் ஒன்றே” என்று விதிக்கப்பட்ட கருத்தானது விரோதிபேத விஷயமாக உள்ளதாலும், பொதுவாகத் தள்ளப்படும் விதியானது வேறுபட்ட விஷயமாக இருப்பதால் ப்ரகாரியாகிய விஷயம் பலர் என்று தள்ளுவதாக உள்ளதாலும், ந தத் ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே – பரமாத்மாவிற்கு நிகரானதும் மேலானதும் காணப்படவில்லை – என்று ப்ரஹ்மத்திற்கு நிகரான ப்ரகாரி வேறு இல்லை என்று விதிவாக்கியமான இதில் கூறப்படுவதாலும், “ப்ரகாரியானது ஒன்றே ஆகும்” என்று கூறுவதே ப்ரஹ்ம அத்வைதமாகிறது.

**வ்யாக்யானம் -** ஜீவபஹுத்வம் ச்ருதி ஸித்தமாகையாலும், அல்லாதபோது பத்த முக்த வ்யவஸதாநுபபத்தியாலும் உபதேசாநுபபத்தியாலும் ஸுகாதி வ்யவஸ்தாநுபபத்தியாலும் “புமாந் ந தேவோ ந நரோ ந பசுர் ந ச பாதப:, சதுர்விதோ விபேதோயம் மித்தயா ஜ்ஞாந நிபந்தந தேவாதிபேதே அபத்வஸ்தே” இத்யாதிகளாலே தேவாதி சரீர பேத விசேஷ நிஷேதம் கண்டோக்தமாகையாலும், முக்தாத்மாக்களுக்கு ஸாம்யத்தை ச்ருதி சொல்லுகையாலும், ஜீவாத்வைதம் ப்ரகாராத்வைதமே.

**விளக்கம் -** ஜீவாத்மாக்கள் பலர் உள்ளனர் என்பது ச்ருதி மூலம் வெளிப்படுவதாலும், இவ்விதம் கொள்ளவில்லை என்றால் “பத்தர், முக்தர்” என்பது போன்ற நிலைகள் பொருத்தம் இல்லாமல் போகும் என்பதாலும், உபதேசங்கள் அனைத்தும் பொருந்தாமல் போகும் என்பதாலும், இன்பம் முதலான அனுபவங்கள் பொருந்தாது என்பதாலும், ஸ்ரீவிபு. (2-13-98) - புமாந் ந தேவோ ந நரோ ந பசுர் ந ச பாதப:, சதுர்விதோ விபேதோயம் மித்தயா ஜ்ஞாந நிபந்தந தேவாதிபேதே அபத்வஸ்தே - ஜீவாத்மா தேவனும் அல்லன், மனிதனும் அல்லன், தாவரம் அல்லன், விலங்கு அல்லன் என்று கூறப்பட்ட நான்குவிதமான வேறுபாடுகள் தவறான ஞானத்தால் ஏற்படுகிறது; தேவன் முதலான வேறுபாடுகள் நீங்கும்போது மெய்யான ஞானம் ஏற்படுகிறது - என்பது போன்று வாக்கியங்கள் மூலம் தேவர்கள் முதலான சரீர வேறுபாடுகள் அனைத்தும்

கண்டிக்கப்பட்டதாலும், முக்தி பெற்ற ஆத்மாக்களுடைய ஸ்வரூபத்தில் ஒற்றுமை கூறப்படுவதாலும், ஜீவ அத்வைதம் என்பது ப்ரகார அத்வைதமே ஆகிறது.

**வ்யாக்யானம் -** இதுதாம் ச்ருதப்ரகாசிகையிலே ஆதிபரத சதுச்ச்லோகீ வ்யாக்யாநோபக்ர மத்திலே "ப்ரஹ்மாத்வைதம் ஜீவாத்வைதஞ்சேத்யத்வைதம் த்விவிதம் சாஸ்த்ர ப்ரதிபாத்யம்" என்று தொடங்கி, ஸ்ரீவேதவ்யாஸபட்டராலே விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது. இப்படி சாஸ்த்ரத்தில் சொல்லப்படுகிற ஜீவாத்வைதத்துக்கு ஹ்ருதயமறியாதே "ஆத்மபேதமில்லை ஏகாத்மாவே உள்ளதெ"ன்று சில குத்ருஷ்டிகள் சொன்னார்களென்கை.

**விளக்கம் -** இதனை ச்ருதப்ரகாசிகையில் ஸ்ரீவேதவ்யாஸபட்டர் ஆதிபரத சதுச்லோகி வ்யாக்யான தொடக்கத்தில், ப்ரஹ்மாத்வைதம் ஜீவாத்வைதஞ்சேத்யத்வைதம் த்விவிதம் சாஸ்த்ர ப்ரதிபாத்யம் - ப்ரஹ்ம அத்வைதம் மற்றும் ஜீவ அத்வைதம் என்று இரண்டுவிதமான அத்வைதங்கள் சாஸ்த்ரத்தில் கூறப்பட்டன – என்று உரைக்கத் தொடங்குகிறார். இவ்விதம் சாஸ்த்ரத்தில் கூறப்பட்ட ஜீவ அத்வைதத்தில் கருத்து இன்னது என்று அறியாமல் சாஸ்த்ரத்திற்கு முரணான பொருள் கற்பிக்கும் சிலர், "ஆத்மாக்களில் வேறுபாடு இல்லை. ஒரு ஆத்மா மட்டுமே உள்ளது" என்றனர்.

50. அந்த பக்ஷத்தில், ஒருவன் ஸுகிக்கிற காலத்திலே வேறெ ஒருவன் துக்கிக்கக் கூடாது.

**அவதாரிகை -** அது அயுக்தமென்னுமிடம் ஸாதிக்கிறார்.

**விளக்கம் -** அவர்களுடைய வாதமானது பொருந்தமற்றது என்று அடுத்து கூறுகிறார்.

**வ்யாக்யானம் -** (அந்த பக்ஷத்தில்) இத்யாதியாலே. அதாவது, அப்படி ஆத்மபேதமில்லாத பக்ஷத்தில், "அஹம் ஸுகீ" என்று ஒருவன் ஸுகோத்தரனாயிருக்கிற காலத்திலே வேறே ஒருவன், "அஹம் து:கீ" என்று துக்கோததரனாயிருக்கிற இந்த ஸுகதுக்க வ்யவஸ்தை கூடாதென்கை. ஸுகது:க்கங்களிரண்டும் ஏகாச்ரயகதமாகில், உபய ப்ரதிஸந்தாநமும் ஒருவனுக்கே உண்டாகவேணுமிறே. ஆகையால் ஸுகதுக்கங்கள் நியதங்களாகையாலே ஆத்மபேதமுண்டாக வேணுமென்று கருத்து.

**விளக்கம் -** “ஆத்மாக்கள் பல அல்ல, ஒருவன் மட்டுமே” என்பதான, ஆத்மாக்களில் வேறுபாடு இல்லை என்னும் வாதத்தில், “அஹம் ஸுகீ - நான் சுகமாக உள்ளேன்” என்று ஒருவன் சுகம் நிறைந்தவனாகவும், வேறு ஒருவன் “அஹம் து:கீ - நான் துக்கமாக உள்ளேன்” என்று துக்கம் நிறைந்தவனாகவும், இவ்விதமாக சுகதுக்க வேறுபாடுகள் இருக்கக்கூடாது அல்லவோ? சுகம் மற்றும் துக்கம் ஆகிய இரண்டும் ஒரே இடத்தில் உள்ளது என்றால், இரண்டுவிதமான நிலையும் ஒருவனுக்கு ஒரே நேரத்தில் உண்டாக வேண்டும் அல்லவோ? ஆகவே சுகம் மற்றும் துக்கம் ஆகிய இரண்டும் தனித்தனியே ஏற்படுவதால், ஆத்மாக்களில் வேறுபாடு உண்டு; அதாவது, பல ஆத்மாக்கள் உள்ளனர் என்று கருத்து.

51. அது தேஹ பேதத்தாலே என்னில்.

**அவதாரிகை -** அந்த ஸுகதுக்க வ்யவஸ்தைக்கு ஹேது “தேஹ பேதம்” என்கிறவர்களுக்தியை அநுவதிக்கிறார் (அது தேஹபேதத்தாலே என்னில்) என்று.

**விளக்கம் -** “அத்தகைய சுகம் மற்றும் துக்கம் ஆகிய வேறுபாடுகளுக்குக் காரணம், சரீரங்கள் பலவாக உள்ளன என்பதே ஆகும்”, என்று சிலர் கூறுகிறார்கள். அந்த வாதத்தை இவர் எடுத்துக் கூறுகிறார்.

52. ஸௌபரி சரீரத்திலும் அது காணவேணும்.

**அவதாரிகை -** அதுக்கு அநுபபத்தி சொல்லுகிறார்.

**விளக்கம் -** அந்த வாதத்தில் உள்ள பொருந்தம் இன்மையை அடுத்து உரைக்கிறார்.

**வ்யாக்யானம் -** (ஸௌபரி சரீரத்திலும் அது காணவேணும்) என்று. அதாவது, தேஹபேதம் ஸுகதுக்க நியமத்துக்கு ஹேதுவாகில், அநேக தேஹ பரிக்ரஹம் பணணின ஸௌபரி சரீரத்திலும் அந்த நியமம் காணவேணுமென்கை. தேஹபேதம், ஸுகதுக்க நியமத்துக்கு ஹேதுவன்றாகில், ஜந்மாந்தராநுபவத்தை இஜ்ஜந்மத்திலே ஸ்மரிக்க

வேண்டாவோ? என்னில், ஸ்மரியாதொழிகிறது ஸம்ஸ்காரத்தினுடைய அநுத்பவத்தாலேயாதல், நாசத்தாலேயாதல். சரீராந்தரத்தில் ஸுகதுக்க ஸ்மருத்யாதிக ளின்றிக்கே ஒழிகிறதும் இரண்டத்தொன்றாலே யென்னில், ஒரு சரீரந்தன்னிலும் ஸ்ம்ருதி கூடாதொழியவேணும். ஆகையால் ஸுகதுக்க நியமத்துக்கு ஹேது, தேஹபேதம் என்னவொண்ணாது.

**விளக்கம்** - சரீரங்களில் உள்ள வேறுபாடுகளே, சுகம் மற்றும் துக்கம் ஆகிய வேறுபாடுகளுக்கும் காரணம் என்று கொண்டால், பல சரீரங்கள் எடுத்த ஸௌபரி முனிவரின் சரீரத்திலும் அந்த விதிமுறையை நாம் காணவேண்டும் அல்லவோ? சரீரங்களில் உள்ள வேறுபாடுகள், சுகம் மற்றும் துக்கம் ஏற்படுவதற்கான காரணம் அல்ல என்றால், கடந்த பிறவிகளில் அனுபவித்த சுகம் மற்றும் துக்கங்கள் இந்தப் பிறவியிலும் நினைவிற்கு வரவேண்டும் அல்லவோ என்று கேட்கலாம். இதற்கு விடை அளிக்கிறார். இவ்விதம் நினைவில் வராமல் இருப்பதற்குக் காரணம், ஞானமானது மறைக்கப்பட்டு ஸம்ஸாரம் வெளிப்படாமல் இருத்தல் அல்லது அதன் அழிவு காரணமாக அதில் அல்லது வேறு சரீரத்தில் சுகதுக்கங்களின் ஞாபகம் இன்றிப்போதல் ஆகிய இரண்டில் ஒன்று என்றால், ஒரு சரீரத்திலும் நினைவுகள் ஏற்படாமல் இருத்தல் வேண்டும். ஆகவே சுகதுக்கங்களுக்கான காரணம் சரீரத்தில் உள்ள வேற்றுமை என்று கூறுதல் பொருந்தாது.

53. ஒருவன் ஸம்ஸரிக்கையும், ஒருவன் முக்தனாகையும், ஒருவன் சிஷ்யனாகையும், ஒருவன் ஆசார்யனாகையும் கூடாது.

**அவதாரிகை** – இப்படி, ஸுகதுக்க வ்யவஸ்தாநுபபததியேயன்று; ஏகாத்மாவென்னும் பக்ஷத்தில் பத்த முக்த வ்யவஸ்தாநுபபத்தியும், சிஷ்யாசார்ய வ்யவஸ்தாநுபபத்தியும் உண்டென்கிறார் மேல் (ஒருவன் ஸம்ஸரிக்கையும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் “ஆத்மாக்கள் பல அல்ல, ஒரு ஆத்மா மட்டுமே” என்று கூறும் வாதத்தில், இன்ப துன்பங்களுடைய வேறுபாடுகளின் பொருந்தாமை மட்டும் அல்ல; ஒரே ஆத்மாதான் உள்ளது என்று கூறும் வாதத்தில், “பத்தர், முக்தர்” என்பது போன்று வேறுபாடுகள் பொருந்தாமை மற்றும் “சிஷ்யர், ஆசார்யன்” என்பது போன்று வேறுபாடுகள் பொருந்தாமை ஆகியவையும் ஏற்படும் என்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, ஏகாத்மாவாகில், “அநேக ஜந்ம ஸாஹஸ்ரீம் ஸம்ஸார பதவீம் வ்ரஜந், மோஹச்ரமம் ப்ரயாதோஸௌ வாஸநா ரேணு குண்டித:” என்கிறபடியே, ஒருவன் ஸம்ஸரிக்கையும், “சுகோ முக்கோ வாமதேவோ முக்த:” என்கிறபடியே ஒருவன் முக்தனாகையும், “தத் விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபி கச்சேத் ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் | தஸ்மை ஸ வித்வான் உபஸந்நாயஸம்யக் ப்ரசாந்த சித்தாய சமாந்விதாய | யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்ம வித்யாம்” என்கிறபடியே, ஒருவன் சிஷ்யனாய வந்து உபஸத்தி பண்ண, ஒருவன் ஆசார்யனாயிருந்து அவனுக்கு உபதேசிக்கையும் கூடாதென்கை.

**விளக்கம் -** அதாவது “ஆத்மா ஒன்று மட்டுமே” என்று கூறினால், ஸ்ரீவிபு (6-7-19) - அநேக ஜந்ம ஸாஹஸ்ரீம் ஸம்ஸார பதவீம் வ்ரஜந், மோஹச்ரமம் ப்ரயாதோஸௌ வாஸநா ரேணு குண்டித: – பல ஆயிரக்கணக்கான பிறவிகளில் ஸம்ஸாரத்தில் உழன்றபடி மயக்க வாஸனைகளால் உண்டாகும் துன்பத்தை அடைகிறான் - என்று கூறுவதற்கு ஏற்ப, ஒரு ஜீவாத்மா ஸம்ஸாரத்தில் ஆழ்ந்து நிற்பது; சுகோ முக்கோ வாமதேவோ முக்த: - ஸுகர் முக்தரானார், வாமதேவர் முக்தரானார் - என்பதற்கு ஏற்ப ஒரு ஜீவாத்மா முக்தனாக இருப்பது; முண். (1-2-12, 13) – தத் விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபி கச்சேத் ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் | தஸ்மை ஸ வித்வான் உபஸந்நாயஸம்யக் ப்ரசாந்த சித்தாய சமாந்விதாய | யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்ம வித்யாம் – இத்தகைய ப்ரஹ்ம ஞானத்தை அடையும் பொருட்டு வேதங்களை அத்யயனம் செய்த அவன்,தனது கையில் ஸமித் (ஆலமரத்தின் சுள்ளிகள்) போன்றவற்றை எடுத்தவனாக, வேத அத்யயனம் செய்தவரும் ப்ரஹ்மத்தைக் குறித்து நன்கு அறிந்தவரும் ஆகிய ஆசார்யனை அடையவேண்டும்; தன்னிடம் வந்தவனும், தன்னிடம் வணக்கம் நிறைந்தவனும், தனது மனதை வசப்படுத்தியவனும் ஆகிய அந்த சிஷ்யனுக்கு ஆசார்யன் செய்யவேண்டியது என்னவெனில், தான் எந்த ஒரு வித்யை மூலமாக ஸ்வரூபம் மற்றும் குணங்களால் மாறுபாடு இல்லாத பரமபுருஷனை அறிகின்றாரோ, அத்தகைய ப்ரஹ்மவித்யையை அந்தச் சிஷ்யனுக்கு நேர்மையாக உபதேசிக்கவேண்டும்– என்பதற்கு ஏற்ப, ஒரு ஆத்மா சிஷ்யனாக வந்து உபதேசம் கேட்பது மற்றும் ஒரு ஆத்மா ஆசர்யனாக இருந்து உபதேசம் செய்வது போன்ற பலவும் பொருந்தால் போகும்.

54. விஷம ஸ்ருஷ்டியும் கூடாது.

**அவதாரிகை -** இன்னமும் ஓர் அநுபபத்தி சொல்லுகிறார்.

**விளக்கம் -** மேலும் ஒரு பொருந்தாமையையும் கூறுகிறார்.

**வ்யாக்யானம் -** (விஷம ஸ்ருஷ்டியும் கூடாது) என்று. அதாவது, ஏகாத்மாவாகில் தேவதிர்யகாதி ரூபேண, சில ஸுகோத்தரமாகவும் சில துக்கோத்தரமாகவும், சில ஸுகதுக்க மிச்ரமாகவும், இப்படி லோகத்தில பதார்த்தங்களை விஷமமாக ஸர்வேச்வரன் ஸ்ருஷ்டிக்கக் கூடாதென்கை. ஜீவபேதமும் கர்ம தாரதம்யமுமிறே விஷம ஸ்ருஷ்டிக்கு ஹேது.

**விளக்கம் -** "ஒரே ஆத்மா மட்டுமே உள்ளான்" என்று உரைத்தால், "தேவர்கள், விலங்கு" என்பது போன்ற வடிவங்களிலும், அவற்றுள் சில சுகமாகவும், சில இன்பமாகவும், சில இன்ப துன்பங்கள் கலந்தவையாகவும், இவ்விதம் லோகத்தில் ஏற்றத்தாழ்வுகளுடன் ஸர்வேச்வரன் ஸ்ருஷ்டித்தல் என்பது ஏற்படாது. ஜீவாத்மாக்களுடைய கர்மங்களில் உள்ள ஏற்றதாழ்வுகளும், ஜீவாத்மாக்களில் உள்ள வேறுபாடுகளும் அல்லவோ இவ்விதமாக ஸர்வேச்வரன் ஸ்ருஷ்டிப்பதற்குக் காரணமாக அமைகிறது?

55. ஆத்மபேதம் சொல்லுகிற ச்ருதியோடும் விரோதிக்கும்.

**அவதாரிகை -** இப்படி யுக்தியாலே அநேக விரோதங்களை தர்சிப்பித்தார் கீழ். இவ்வளவேயன்று; இப்பக்ஷத்துக்கு ச்ருதி விரோதமுமுண்டென்கிறார்.

**விளக்கம் -** இவ்விதம் தகுந்த வாதங்கள் மூலம், "ஒரே ஆத்மா மட்டுமே உள்ளான்" என்று கூறுவதில் உள்ள பலவிதமான முரண்பாடுகளை எடுத்துரைத்தார். இது மட்டுமே அல்லாமல், இந்த வாதத்தை ஏற்பது என்பது, ச்ருதிக்கும் விரோதம் என்று அடுத்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (ஆத்மபேதம் சொல்லுகிற ச்ருதியோடும் விரோதிக்கும்) என்று. அதாவது, ஏகாத்மா என்கிற பக்ஷம், "நித்யோ நித்யாநாம் சேதநச் சேதநாநாமேகோ பஹூநாம் யோ விததாதி காமாந்" என்று ஆத்மபேதத்தைச் சொல்லுகிற ச்ருதிக்கும் சேராதென்றபடி.

**விளக்கம் -** அதாவது "ஒரே ஆத்மா" என்ற வாதத்தில், கட. (5-13) – நித்யோ நித்யாநாம் சேதநச்சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோ விததாதி காமாந் – நித்யர்களில் நித்யமானவனும், சேதநர்களில் சேதநனும் ஆகிய அவன் அனைவருடைய விருப்பத்தையும் நிறைவேற்றுகிறான் – என்று, ஆத்மபேதத்தைக் கூறும் ச்ருதி வாக்கியத்திற்கு முரண்பாடு ஏற்படும்.

56. ச்ருதி, ஔபாதிக பேதத்தைச் சொல்லுகிறதென்னவொண்ணாது.

**அவதாரிகை -** இந்த ச்ருதி ஆத்மபேதத்தைச் சொல்லுகிறதென்னில், "போக்தா போக்யம்" என்றும், "ப்ருதகாத்மாநம்" என்றும், "ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜௌ" என்றும், "அந்யோந்தர ஆத்மா விஜ்ஞாநமய:" என்றும் ஜீவைகத்வ ப்ரதிபாதிகைகளான அநேக ச்ருதிகளோடும் விரோதிக்கும். ஆகையால், இது ஔபாதிக பேதத்தைச் சொல்லுகிறதென்றிறே அவர்கள் சொல்லுவது. அத்தை நிஷேதிக்கிறார்.

**விளக்கம் -** மேலே கூறிய ச்ருதி வாக்கியமானது ஆத்மாக்களில் உள்ள பேதத்தைக் கூறுகிறது என்று கொண்டால், போக்தா போக்யம் – அனுபவிக்கும் சேதநம், அனுபவிக்கப்படும் அசேதநம் – என்றும், ச்வே. (1-6) – ப்ருதக் ஆத்மாநம் – ஆத்மாவையும், அதனை நியமிப்பவனையும் தனித்தனியாக - என்றும், ச்வே. (1-9) - ஜ்ஞா ஜ்ஞௌ த்வௌ அஜௌ – பிறப்பற்ற இந்த இருவரில் ஒருவன் அறிந்தவன், ஒருவன் அறியாதவன் - என்றும், தைத். (2-4-1) - அந்யோந்தர ஆத்மா விஜ்ஞாநமய: - மனோமயனைக் காட்டிலும் வேறான ஞானமயமாக உள்ளவனும், உள்ளே காணப்படுபவனும் ஆகிய ஆத்மா வேறாக உள்ளான் - என்றும், ஜீவாத்மாக்களின் ஐக்யத்தை உரைக்கும் பல ச்ருதி வாக்கியங்களுடன், மேலே கூறப்பட்ட வாக்கியமானது, முரண்பாடு அடையும். ஆகவே மேலே கூறப்பட்ட வாக்கியமானது ஏதோ ஒரு குறிப்பிட்ட காரணத்தினால் ஏற்படும் பேதத்தைக் கூறுகிறது என்றே கொள்ளவேண்டும்; இவ்விதமாக அத்வைதிகள் கூறுகிறார்கள். இதனை மறுக்கிறார்.

**வ்யாக்யானம் -** (ச்ருதி, ஔபாதிக பேதத்தைச் சொல்லுகிறதென்னவொண்ணாது) என்று. ஔபாதிக பேதமாவது, தேவ மநுஷ்யாதி பேதமும் காமக்ரோதாதி பேதமும்.

**விளக்கம் -** "ஔபாதிக பேதம்" என்றால், "தேவர்கள், மனிதர்கள்" மற்றும் "ஆசை, சினம்" என்பது போன்ற வேறுபாடுகள் ஆகும்.

**அவதாரிகை –** ஔபாதிக பேதமென்னவொண்ணாமைக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார்.

**விளக்கம் -** ஔபாதிக பேதத்தை அந்த ச்ருதி வாக்கியம் கூறுகிறது என்று கொள்ளக் கூடாது என்பதற்கான வேறு ஒரு காரணத்தையும் அருளிச்செய்கிறார்.

57. மோக்ஷ தசையிலும் பேதமுண்டாகையாலே.

**வ்யாக்யானம் -** (மோக்ஷ தசையிலும் பேதமுண்டாகையாலே) என்று. அதாவது, "ஸதா பச்யந்தி", "மம ஸாதர்ம்யமாகதா:", "முக்தாநாம் பரமாகதி:", "ஸாயுஜ்யம் ப்ரதிபந்நா யே", "யஸ்மிந் பதே விராஜந்தே முக்தாஸ் ஸம்ஸார பந்தநை:" என்று, மோக்ஷ தசையிலும் ஆத்மபேதத்தை ச்ருதி ஸ்ம்ருதிகள் சொல்லுகையாலே, அப்படி சொல்லவொண்ணா தென்கை. மோக்ஷ தசையாவது, ஸர்வோபாதி விநிர்முக்த தசையிறே. அந்த தசையிலும், ஆத்மபேதம் ச்ருதி ஸித்தமாகையாலே, "நித்யோ நித்யாநாம்" என்கிற ச்ருதியும் ஆத்மபேதத்தைச் சொல்லுகிறதென்றதாயிற்று.

**விளக்கம் -** ப்ர. (5-10) - ஸதா பச்யந்தி - நித்யஸூரிகள் எப்போதும் அந்த விஷ்ணுவின் உயர்ந்த இடத்தைப் பார்த்தபடி உள்ளனர் – என்றும், கீதை. (14-2) - மம ஸாதர்ம்யம் ஆகதா: - எனது ஸ்வரூபத்தை அடைந்தவர்கள் – என்றும், முக்தாநாம் பரமாகதி: - முக்தர்கள் உயர்ந்த கதியை அடைகிறார்கள் – என்றும், ஸாயுஜ்யம் ப்ரதிபந்நா யே – ஸாயுஜ்யம் அடைகிறார்கள் – என்றும், யஸ்மிந் பதே விராஜந்தே முக்தாஸ் ஸம்ஸார பந்தநை: - எந்த இடத்தை அடைவதால் முக்தர்கள் ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுகிறார்களோ – என்றும் பலவிதமாக மோக்ஷ நிலையில் கூட ஆத்மபேதத்தை ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் கூறுவதால், அந்த வாக்கியம் ஔபாதிக பேதத்தைக் கூறுவதாக

உரைக்க இயலாது. மோக்ஷ நிலை என்றால், அனைத்துவிதமான உபாதிகளிலிருந்தும் விடுபட்ட நிலை அல்லவோ? அந்த நிலையில் கூட ஆத்மபேதங்கள் குறித்து ச்ருதி உரைப்பதால், "நித்யோ நித்யாநாம்" என்ற வாக்கியமும், ஆத்மபேதத்தை கூறுவதாகவே ஆகிறது.

58. அப்போது தேவ மநுஷ்யாதி பேதமும், காம க்ரோதாதி பேதமும் கழிந்து, ஆத்மாக்கள் ஸ்வரூபம் அத்யந்தம் ஸமமாய், ஒருபடியாலும் பேதம் சொல்லவொண்ணாதபடி இருந்ததேயாகிலும்;

**அவதாரிகை -** ஆனால், ஆத்மபேத ப்ரதிபத்திக்கு ஹேதுவாய், ஔபாதிகமாயிருந்துள்ள தேவ மநுஷ்யாதி பேதமும், காமக்ரோதாதி பேதமும் கழிந்து, ஆத்மாக்களுடைய ஸ்வரூபம் அத்யந்தம் ஸமமாய், ஒரு ப்ரகாரத்தாலும் பேதகதநத்துக்கு யோக்யதையில்லாதபடியிறே மோக்ஷ தசையிருப்பது; அவ்விடத்தில், ஆத்மபேதம் ஸித்திக்கிறபடி எங்ஙனே? என்கிற வாதி ப்ரச்நத்தை அநுவதிக்கிறார் (அப்போது) என்று தொடங்கி.

**விளக்கம் -** ஆனால், ஆத்மபேதத்தை அறிவதற்குக் காரணமாக உள்ளதும், இயல்பாகவே அல்லாமல் வந்து சேர்ந்ததும் ஆகிய "தேவர்கள், மனிதர்கள் என்பது போன்ற வேறுபாடுகளும், "ஆசை கோபம் என்பது போன்ற வேறுபாடுகளும் கூறுவதற்கு இயலாதபடி உள்ளதாகவும் அல்லவோ மோக்ஷ நிலை உள்ளது? அங்கு ஆத்ம வேறுபாடுகள் எவ்விதம் வெளிப்படுகின்றன என்ற எதிர்வாதத்திற்குச் சமாதானம் கூறுகிறார்.

**வ்யாக்யானம் -** (ஒருபடியாலும் பேதம் சொல்லவொண்ணாதபடி யிருந்ததேயாகிலும்) என்று த்ருஷ்டாந்தமுகேந பேதத்தை ஸாதிக்கிறார்.

**விளக்கம் -** "ஒருபடியாலும் பேதம் சொல்லவொண்ணாதபடியிருந்ததேயாகிலும்" என்று , "மோக்ஷ நிலையில் எந்தவிதத்திலும் வேறுபாடு கூற இயலாதபடி உள்ளது என்றாலும்" என உரைக்கிறார். ஓர் உதாரணம் மூலம் அங்கும் ஆத்மவேறுபாடுகள் உள்ளதைக் கூறுகிறார்.

59. பரிமாணமும் எடையும், ஆகாரமுமொத்திருக்கிற பொற்குடங்கள், ரத்நங்கள், வ்ரீஹிகள் தொடக்கமானவற்றுக்கு பேதமுண்டாகிறாப்போலே ஸ்வரூபபேதமும் ஸித்தம்.

**வ்யாக்யானம் -** (பரிமாணமும்) என்று தொடங்கி. அதாவது அளவும், தூக்கமும், வடிவுமொத்திருக்கிற பொற்குடங்கள், ரத்னங்கள், வ்ரீஹிகள் முதலான பதார்த்தங்களுக்கு பேதகமாயிருப்பதொரு லக்ஷணமில்லையேயாகிலும், அதிலே நாநாத்வம் காண்கிறாப் போலே, ஒருபடியாலும் பேதம் சொல்லவொண்ணாதபடி, ஏகாகாரரான முக்தாத்மாக்களுக்கும் ஸ்வரூபபேதம் ஸித்திக்குமென்றபடி.

**விளக்கம் -**அளவு, எடை மற்றும் வடிவம் ஆகியவற்றில் ஒரே போன்றுள்ளதான பொற்குடங்கள், இரத்தினங்கள், நெற்கதிர்கள் ஆகியவற்றுக்கு வேறுபட்டிருப்பது என்னும் இலக்கணமானது, “அளவு, எடை” போன்றவற்றால் இல்லை என்றாலும், அவை பலவிதமாக உள்ளதை நாம் உணர்கிறோம். இதே போன்று, எந்தவிதத்திலும் வேறுபாடு கூற முடியாதபடி உள்ள முக்தாத்மாக்களுக்கும் ஸ்வரூபத்தில் வேறுபாடு ஏற்படும்.

60. ஆகையால், ஆத்மபேதம் கொள்ளவேணும்.

**அவதாரிகை -** கீழ்ச்சொன்னவற்றையெல்லாம் அநுபாஷித்துக் கொண்டு, (ஆகையால் ஆத்மபேதம் கொள்ள வேணும்) என்று நிகமிக்கிறார்.

**விளக்கம் -** கீழே உரைத்த பலவற்றையும் ஒன்றாகத் திரட்டியபடி “ஆகவே ஆத்மபேதம் உள்ளதை ஏற்கவேண்டும்” என்று முடிக்கிறா.

வ்யாக்யானம் – ஆக, கீழ்ச் செய்ததாயிற்று: “சிலர் ஆத்மபேதமில்லை; ஏகாத்மாவே உள்ளதென்றார்கள்” என்று தொடங்கி, இவ்வளவாக, முன்பு தாமருளிச்செய்த ஜீவாநந்த்ய ப்ரதிபடமான ஏகாத்மவாதத்தை உத்க்ஷேபித்து, யுக்தியாலும், சாஸ்த்ரத்தாலும் பஹுமுகமாக அத்தை தூஷித்து, ஆத்மபேதத்தை ஸாதித்தாராயிற்று.

**விளக்கம் -** ஆகவே சூர்ணை (49) - சிலர் ஆத்மபேதமில்லை; ஏகாத்மாவே உள்ளதென்றார்கள் - என்று தொடங்கி, கடந்த சூர்ணை முடிய உள்ளவற்றில், முன்பு தான்

அருளிச்செய்த, “ஜீவாத்மாக்கள் பலர் உள்ளனர்” என்ற ஸித்தாந்தத்திற்கு எதிர்த்தட்டான “ஆத்மா ஒன்றே” என்ற வாதத்தை உரைத்து, அதனை யுக்தியாலும் சாஸ்த்ரத்தாலும் பலவிதமாக மறுத்து உரைத்து, ஆத்மாக்கள் பலர் உள்ளதை நிரூபித்தார்.

61. இப்போது இவர்களுக்கு லக்ஷணம் சேஷத்வத்தோடே கூடின ஜ்ஞாத்ருத்வம்.

**அவதாரிகை** - கீழே ஆத்மஸ்வரூப லக்ஷணத்தை விஸ்தரேண அருளிச் செயதார். அதில் அசித் விலக்ஷணத்வம், அஜடத்வம், ஆநந்தரூபத்வம், அவ்யக்தத்வம் அசிந்த்யத்வம், நிரவயவத்வம், நிர்விகாரத்வம், ஜ்ஞாநாச்ரயத்வமாகிற இவை ஜீவேச்வர ஸாதாரணம். நியாமயத்வாதிகள் மூன்றும் சிதசித் ஸாதாரணம். நித்யத்வம் தத்வத்ரய ஸாதாரணம். அணுத்வமும், அசித் பரமாணு ஜீவ ஸாதாரணம். இவையித்தனையும் சேரக்கூடி, ஆத்மஸ்வரூபத்துக்கு அசிதீச்வர வ்யாவ்ருத்தியை ஸித்திப்பிக்கையாலே இவற்றை லக்ஷணமென்னக் குறையில்லை. அப்படியன்றிக்கே, ஸங்க்ரஹமாக ஒரு லக்ஷணம் அருளிச் செயகிறார்.

**விளக்கம்** - இதுவரை ஆத்மஸ்வரூபத்தின் லக்ஷணத்தை விரிவாக அருளிச்செய்தார். அவற்றில், ஆத்மாவானது “அசித்தைக் காட்டிலும் வேறுபட்ட தன்மை கொண்டது, அஜடமாக உள்ளது, ஆநந்தமயமானது, இந்த்ரியங்களால் அறிய இயலாதது, இப்படிப்பட்டது என்று எண்ணமுடியாத தன்மை கொண்டது, அவயவங்கள் அற்றது, மாற்றங்கள் அடையாதது, ஞானத்தின் இருப்பிடமாக உள்ளது” என்பது போன்று பல தன்மைகள் கொண்டதாக உள்ளது; இவை அனைத்தும், ஜீவாத்மா மற்றும் ஈச்வரன் ஆகியவர்களுக்கே உரிய தன்மைகளாகும். “ஏவப்படும் தன்மை, தாங்கப்படுதல், மற்றும் அடிமையாக உள்ள தன்மை” ஆகியவை சித் மற்றும் அசித் ஆகிய இரண்டிற்கும் உரியதாகும். நித்யமாக இருத்தல் என்பது சித், அசித் மற்றும் ஈச்வரன் ஆகிய மூன்றுக்கும் உள்ளதாகும். அணு அளவே உள்ளது என்பது ஜீவாத்மாக்களுக்கே உரியதாகும். இவை அனைத்தையும் ஒன்றாகத் திரட்டிக்கொண்டு, ஆத்ம ஸ்வரூபத்தில் உள்ளதான, அசித் மற்றும் ஈச்வரன் ஆகியவற்றை காட்டிலும் வேறுபட்ட தன்மையை உணர்த்துவதால், இவை அனைத்தும் ஆத்மாவின் வடிவங்கள் என்று கூறுவதில் தவறில்லை. அது மட்டும் அல்லாமல், ஆத்மாவிற்கு, தெளிவான வேறு ஒரு அடையாளத்தையும் அடுத்து அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** இவர்களென்கிறது, த்ரிவித சேதநரையும். லக்ஷணமாவது, அஸாதாரண தர்மமிறே. ஆகையால் சேஷத்வ மாத்ரத்தைச் சொல்லில், அசித் வ்யாவ்ருத்தி ஸித்தியாமையாலும்; ஜ்ஞாத்ருத்வ மாத்ரத்தைச் சொல்லில், ஈச்வர வ்யாவருத்தி ஸித்தியாமையாலும், சேஷத்வே ஸதி ஜ்ஞாத்ருத்வமே லக்ஷணமென்கிறார்.

**விளக்கம் -** "இவர்கள்" என்று கூறுவது பத்தர், முத்தர் மற்றும் நித்யர் என்பதான மூன்று ஆத்மாக்களையும் ஆகும். லக்ஷணம் என்றால் ஒரு குறிப்பிட்ட வஸ்துவிற்கு மட்டுமே உரிய அடையாளம் அல்லவோ? ஆகவே, அடிமையாக உள்ள தன்மையை மட்டுமே உரைத்தால் அசித்தைக் காட்டிலும் உள்ள வேறுபட்ட தன்மை வெளிப்படுவதில்லை என்பதாலும்; அறிபவனாக இருத்தல் என்ற தன்மையை மட்டுமே உரைத்தால், ஈச்வரனை காட்டிலும் வேறுபட்ட தன்மை வெளிப்படுவதில்லை என்பதாலும், "அடிமைத்தனம் என்பதுடன் கூடிய அறிபவனாக உள்ளவன்" என்பதே ஆத்மாவின் லக்ஷணம் என்கிறார்.

62. இவர்களுடைய ஜ்ஞாநம்தான் ஸ்வரூபம் போலே நித்யத்ரவ்யமாய், அஜடமாய், ஆநந்த ரூபமாயிருக்கும்.

**அவதாரிகை -** இப்படி ஜ்ஞாதாவான ஆத்மாவினுடைய ஜ்ஞானத்துக்கும் ஸ்வரூபத்துக்கு முண்டான ஸாதர்ம்ய வைதர்ம்யங்களை அருளிச்செய்கிறார் மேல்; (இவர்களுடைய ஜ்ஞாநம்தான்) என்று தொடங்கி.

**விளக்கம் -** இவ்விதம், அறிபவனாகிய ஆத்மாவின் ஞானம் மற்றும் ஸ்வரூபம் ஆகிய இரண்டிற்கும் இடையே உள்ளதான, சேரக்கூடிய தர்மம் மற்றும் சேராத தர்மம் ஆகியவற்றை அடுத்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** ஸ்வரூபம் போலே நித்யத்ரவ்யமாய், அஜடமாய், ஆநந்த ரூபமாயிருக்கும். இத்தால், நித்யத்வ த்ரவ்யத்வ அஜடத்வ ஆநந்தரூபத்வங்கள், ஸ்வரூபத்தோபாதி, ஜ்ஞாநத்துக்குமுண்டு என்றபடி.

**விளக்கம் -** ஆத்மாவின் ஞானமானது, ஸ்வரூபம் போன்றே, "நித்யத்தன்மை கொண்டதாகவும், தானே தங்களை வெளிப்படுத்துவதாகவும், ஆனந்தரூபமாகவும்"

உள்ளது. ஆகவே ஸ்வரூபம் போன்றே, நித்யமாக உள்ள தன்மை, தானே தன்னை வெளிப்படுத்தும் தன்மை மற்றும் ஆனந்தமாக உள்ள தன்மை ஆகியவை, ஞானத்திற்கும் உண்டு என்று கருத்து.

63. ஆனால், ஜ்ஞாநத்துக்கும் ஸ்வரூபத்துக்கும் வாசியென்னென்னில்.

**அவதாரிகை -** நித்யத்வாதிகளை உபபாதித்து வைதர்ம்யத்தைச் சொல்லுமளவில், அநேக க்ரந்த வ்யவஹிதமாமென்று நினைத்து, ஸாதர்ம்யம் சொன்னவநந்தரம், வைதர்ம்யத்தையும் சொல்லுவதாக, தஜ்ஜிஜ்ஞாஸு ப்ரச்நத்தை உத்க்ஷேபிக்கிறார்.

**விளக்கம் -**நித்யமாக உள்ள தன்மை போன்ற ஒவ்வொன்றையும் வரிசையாக எடுத்துக் கூறி, சேராத தர்மங்களைக் கூறும்போது, நூலில் இடைவெளி பலவாக ஏற்படும் என்று எண்ணுகிறார். ஆகவே சேரக்கூடிய தர்மத்தை உரைத்த பின்னர், சேராத தர்மத்தையும் கூறுவதாக, அறிபவர்களுடைய கேள்வியை மனதில் கொண்டவராக அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (ஆனால் ஜ்ஞாநத்துக்கும் ஸ்வருபத்துக்கும் வாசி என்? என்னில்) என்று.

**விளக்கம் -** ஆனால், "ஞானம் மற்றும் ஸ்வரூபம் ஆகிய இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?", என்ற கேள்வியை எழுப்புகிறார்.

64. ஸ்வரூபம் தர்மியாய், ஸங்கோச விகாஸங்களுக்கு அயோக்யமாய், தன்னை யொழிந்தவற்றை ப்ரகாசிப்பியாமலே தனக்குத்தான் ப்ரகாசிக்கக் கடவதாய், அணுவாயிருக்கும்; ஜ்ஞானம் தர்மமாய், ஸங்கோச விகாஸங்களுக்கு யோக்யமாய், தன்னையொழிந்தவற்றை ப்ரகாசிப்பிக்கக் கடவதாய், தனக்குத்தான் ப்ரகாசியாதே ஆத்மாவுக்கு ப்ரகாசிக்கக் கடவதாய், விபுவாயிருக்கும்.

**அவதாரிகை –** வைதர்ம்யம் தன்னை அருளிச் செய்கிறார் (ஸ்வரூபம் தர்மியாய்) என்று தொடங்கி.


email –sridharan_book@yahoo.com

**விளக்கம் -** ஆத்மாவின் ஸ்வரூபம் மற்றும் ஞானம் ஆகிய இரண்டிற்கும் இடையே உள்ள சேராத தன்மைகளை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது தர்மித்வம், ஸங்கோச விகாஸாயோக்யத்வம், ஸ்வவ்யதிரிக்தார்த்தாப்ரகாசகத்வம், ஸ்வஸ்மை ஸ்வயம்ப்ரகாசத்வம், அணுத்வம் இவை ஸ்வரூபத்துக்கு விசேஷம். தர்மத்வம், ஸங்கோச விகாஸ யோக்யத்வம், ஸ்வவ்யதிரிக்தார்த்த ப்ரகாசகத்வம், ஸ்வஸ்மை ஸ்வயம் ப்ரகாச ரஹிதத்வம், ஸ்வாச்ரயஸ்ய ஸ்வயம்ப்ரகாசத்வம், விபுத்வம் இவை ஜ்ஞாநத்துக்கு சேஷமென்றபடி. (விபுவாயிருககும்) என்று ஜ்ஞாநத்தினுடைய ஸ்வாபாவிக வேஷத்தை அருளிச் செய்தாரித்தனையிறே.

**விளக்கம் -**தர்மத்தை கொண்டதாக உள்ள தன்மை, சுருங்குதல் மற்றும் மலர்தல் போன்ற தன்மை, தன்னைத் தவிர மற்றவற்றை வெளிப்படுத்தாத தன்மை, தனக்குத்தானே வெளிப்படுத்தும் தன்மை, அணு அளவே உள்ள தன்மை போன்ற பலவும் ஆத்ம ஸ்வரூபத்திற்கு உள்ள சிறப்புகளாகும். தர்மமாக உள்ள தன்மை, சுருங்குதல் மற்றும் மலர்தல் ஆகியவற்றுக்கு ஏற்றதாக உள்ள தன்மை, தன்னைத் தவிர மற்றவற்றை வெளிப்படுத்தும் தன்மை, தனக்குத் தானே வெளிப்படுத்தாத தன்மை, தனக்கு இருப்பிடமாக உள்ள ஆத்மாவிற்கு தன்னை வெளிப்படுத்தும் தன்மை, எங்கும் பரவி உள்ள தன்மை போன்ற பலவும் ஞானத்திற்கு உள்ள சிறப்புகளாகும். “எங்கும் பரவி உள்ள தன்மை” என்று ஞானத்தின் இயல்பான நிலையை அருளிச்செய்தார்.

65. அதில் சிலருடைய ஜ்ஞாநம் எப்போதும் விபுவாயிருக்கும், சிலருடைய ஜ்ஞாநம் எப்போதும் ஆவிபுவாயிருக்கும், சிலருடைய ஜ்ஞாநம் ஒருக்கால் விபுவாய் ஒருக்கால் ஆவிபுவாயிருக்கும்.

**அவதாரிகை -** ஸகல சேதநருடைய ஜ்ஞாநமும் இப்படி இராதொழிவானென்? என்கிற சங்கையிலே ஸங்கோசாஸங்கோச நிபந்தநமான தாரதம்யத்தை அருளிச் செய்கிறார் (அதில் சிலருடைய ஜ்ஞாநம்) என்று தொடங்கி.

**விளக்கம் -** ஆனால் அனைத்து ஆத்மாக்களுடைய ஞானமும் இவ்விதம் இல்லாமல் உள்ளது ஏன் என்று சந்தேகத்திற்கு, ஞானச்சுருக்கம் ஏற்படுதல் மற்றும் மலர்தல் ஆகியவற்றுக்குக் காரணமாக உள்ள ஏற்றத்தாழ்வை அடுத்து சமாதானமாக அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "அயர்வறுமமரர்கள்" என்கிறபடியே, பகவத்ஜ்ஞாநத்துக்கு ஒரு நாளும் ஸங்கோசமின்றிக்கே தத் ஸ்வரூப ரூப குண விபூதிகளை ஸதாநுபவம் பண்ணுகிற நித்யஸூரிகளுடைய ஜ்ஞாநம், எப்போதும் விபுவாயிருக்கும்; "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்குமழுக்குடம்பு" மாயிருக்கிற பத்தருடைய ஜ்ஞாநம், கர்மாநுகுணமாக ஸங்கோச விகாஸங்களோடே கூடிக்கொண்டு, எப்போதும் அவிபுவாயிருக்கும். "கரை கண்டோர்" என்கிறபடியே, பகவத் ப்ரஸாதத்தாலே ஸம்ஸார ஸாகரத்தைக் கடந்து அக்கரைப்பட்ட முக்தருடைய ஜ்ஞாநம், பூர்வாவஸ்தையில் அவிபுவாய், உத்தராவஸ்தையில் "ஸர்வம் ஹ பச்ய பச்யதி" என்கிறபடியே விபுவாயிருக்குமென்கை.

**விளக்கம் -**திருவாய்மொழி (1-1-1) – அயர்வறும் அமரர்கள் - என்பதற்கு ஏற்ப, பகவானை எப்போதும் அனுபவித்தல் என்ற ஞானத்திற்கு ஒருநாளும் சுருக்கம் ஏற்படுவதில்லை; அதாவது அவனுடைய ஸ்வரூபம், ரூபம், குணங்கள் மற்றும் விபூதிகள் ஆகிய அனைத்தையும் எப்போதும் அனுபவித்தபடி உள்ள நித்யஸூரிகளுடைய ஞானமானது எப்போதும் எங்கும் நிறைந்தபடியே இருப்பதாகும். திருவிருத்தம் (1) – பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் - என்பதற்கு ஏற்ப உள்ளதான, ஸம்ஸாரத்தில் பந்தப்பட்டுள்ள ஸம்ஸாரிகளுடைய ஞானமானது, கர்மங்களின் காரணமாக, சுருக்கம் மற்றும் மலர்ச்சி ஆகியவற்றுடன் கூடியதாக, எங்கும் நிறைந்ததாக இன்றி காணப்படும். திருவாய்மொழி (8-3-10) - கரை கண்டோர் - என்பதற்கு ஏற்ப, பகவானின் கருணை காரணமாக ஸம்ஸாரத்தைக் கடந்து அக்கரை சென்ற முக்தர்களுடைய ஞானமானது, முக்திக்கு முன்னர் எங்கும் நிறையாததாகவும், முக்திக்கு பின்னர், சாந். (7-26-2) - ஸர்வம் ஹ பச்ய பச்யதி - எப்போதும் பார்த்தபடியே இருப்பர் – என்பதற்கு ஏற்ப, எங்கும் நிறைந்ததாகவே உள்ளது.

66. ஜ்ஞாநம் நித்யமாகில், “எனக்கு ஜ்ஞாநம் பிறந்தது, நசித்தது” என்கிறபடி யென்னென்னில்;

**அவதாரிகை** – இனிமேல், ஜ்ஞாநத்துக்குச் சொன்ன நித்யத்வாதிகளை உபபாதிக்கிறார். அதில் ப்ரதமத்திலே, “எனக்கிப்போது ஜ்ஞாநம் பிறந்தது, எனக்கிப்போது ஜ்ஞாநம் நசித்தது” என்று உத்பத்தி விநாசவத்தாகச் சொல்லப்படுகிற ஜ்ஞாநத்துக்கு, நித்யத்வம் கூடும்படி எங்ஙனே என்கிற சங்கையைப் பரிஹரிக்கைக்காக, தஜ்ஜிஜ்ஞாஸு ப்ரசநத்தை அநுவதிக்கிறார்.

**விளக்கம்** - அடுத்து, ஞானத்திற்குக் கூறப்பட்டதான “நித்யமாக உள்ள தன்மை” போன்றவற்றை விளக்குகிறார். அதில் முதலில், “எனக்கு இப்போது ஞானம் பிறந்தது, எனக்கு இப்போது ஞானம் அழிந்தது” என்று, உற்பத்தி மற்றும் அழிவு ஆகியவற்றுடன் கூடிய ஞானத்திற்கு, நித்யமாக உள்ள தன்மை என்பது எவ்விதம் பொருந்தும் என்ற சந்தேகத்தை விலக்குவதற்காக, அதனைக் குறித்து அறிய விரும்புபவர்களுடைய கேள்வியை அடியொற்றி உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஜ்ஞாநம் நித்யமாகில், “எனக்கு ஜ்ஞாநம் பிறந்தது, நசித்தது” என்கிறபடி யென்? என்னில்) என்று.

**விளக்கம்** - ஞானம் நித்யமானது என்றால், “எனக்கு ஞானம் பிறந்தது, எனக்கு ஞானம் அழிந்தது” என்று கூறுவது எப்படி? இதற்கான விடை அடுத்த சூர்ணையில் உள்ளது.

67. இந்த்ரிய த்வாரா ப்ரஸரித்து விஷயங்களை க்ரஹிப்பது மீளுவதாகையாலே, அப்படி சொல்லக் குறையில்லை.

**அவதாரிகை** - அதுக்கு உத்தரமருளிச் செய்கிறார்.

**விளக்கம்** - அதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (இந்த்ரிய த்வாரா ப்ரஸரித்து விஷயங்களை க்ரஹிப்பது மீளுவதாகையாலே, அப்படி சொல்லக் குறையில்லை) என்று. அதாவது, "ஸர்வம் ஹ பச்ய:, பச்யதி", "ஸ சாநந்த்யாய கல்பதே" என்று, முக்த தசையில் ஸர்வ விஷயமாகச் சொல்லுகையாலே, ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரிக்கைக்கு யோக்யமாயிருக்கச் செய்தேயும், "யயா க்ஷேத்ரஜ்ஞ சக்திஸ்ஸா வேஷ்டிதா ந்ருப ஸர்வகா" என்கிறபடியே, கர்மத்தாலே ஸங்குசிதமாய், "தயா திரோஹிதத்வாச்ச சக்தி க்ஷேத்ரஜ்ஞ ஸம்ஜ்ஞிதா, ஸர்வ பூதேஷு பூபால தாரதம்யேந வர்ததே; அப்ராணிமத்ஸு ஸ்வல்பா ஸா ஸ்தாவரேஷு ததோதிகா" என்கிறபடியே, கர்மாநுகுணமான தாரதம்யத்தையுடைத்தாய்க் கொண்டு, "இந்த்ரியாணாம் ஹி ஸர்வேஷாம் யத்யேகம் க்ஷரதீந்த்ரியம், தேநாஸ்ய க்ஷரதி ப்ரஜ்ஞா த்ருதே: பாதாதிவோதகம்" என்கிறபடியே, இந்த்ரிய த்வாரா புறப்பட்டு விஷயங்களை க்ரஹிப்பது மீளுவதாகையாலே, தாத்ருசமான விகாஸத்தாலும் ஸங்கோசத்தாலும் வந்த ப்ரகாசாப்ரகாசங்களைக் கொண்டு, பிறந்தது நசித்தது என்னக் குறையில்லை என்கை.

**விளக்கம் -** "இந்த்ரியங்கள் மூலமாக ஞானமானது உலக விஷயங்களை அறிந்து கொண்டு திரும்புதல்" என்றுள்ளதால், இவ்விதம் கூறுவதில் தவறில்லை. சாந். (7-26-2) - ஸர்வம் ஹ பச்ய: பச்யதி ஸர்வம் - அனைத்தையும் காண்பவன் (முக்தன்) அனைத்தையும் காண்கிறான் - என்றும், ச்வே. (5-9) - ஸ சாநந்த்யாய கல்பதே - அவன் எப்போதும் உள்ளவன் என்றாகிறான் - என்றும் உள்ள வாக்கியங்களின்படி, மோக்ஷம் பெற்ற நிலையில், அனைத்தும் ஞானத்தால் அறியப்படுவதாகக் கூறப்படுவதால், ஜீவாத்மாவிற்கு அனைத்தையும் அறியும் தகுதி உள்ளது. ஆனால் ஸம்ஸாரத்தில் உள்ளபோது, ஸ்ரீவிபு. (6-7-62) - யயா க்ஷேத்ரஜ்ஞ சக்தி: ஸா வேஷ்டித ந்ருப ஸர்வகா - அவித்யை என்ற சக்தியால் சூழப்பட்டதன் காரணமாகவே ஜீவாத்மா என்ற சக்தியானது (எங்கும் பரவியுள்ள ஸம்ஸார துன்பங்களை அடைந்தபடி உள்ளது) - என்று கூறுவதற்கு ஏற்ப, கர்மங்களின் காரணமாக ஞானமானது சுருக்கம் அடைகிறது; மேலும் ஸ்ரீவிபு. (6-7-63) – தயா திரோஹித்வாத் ச சக்தி: க்ஷேத்ரஜ்ஞ ஸம்ஜ்ஞிதா | ஸர்வபூதேஷு பூபால தாரதம்யேந வர்த்ததே; அப்ராணிமத்ஸு ஸ்வல்பா ஸா ஸ்தாவரேஷு ததோதிகா - மேலும் இந்தச் சக்தியால் (அவித்யை அல்லது கர்மம்) மறைக்கப்பட்டதன் காரணமாகவே ஜீவாத்மாவானது (விலங்குகள், மனிதர்கள் போன்ற) ஏற்றத்தாழ்வு கொண்டதாக ஆகிறது. இது அனைத்து உயிர்களிலும் காணப்படுகிறது; ப்ராணன் இல்லாத சரீரத்தில்

இந்தச் சக்தி அற்பமாகவே உள்ளது - என்பதற்கு ஏற்ப, கர்மங்களின் காரணமாக ஞானமானது ஏற்றத்தாழ்வுடன் கூடியதாகவே உள்ளது. மநு. (2-99) – இந்த்ரியாணாம் ஹி ஸர்வேஷாம் யத்யேகம் க்ஷரதீந்த்ரியம், தேநாஸ்ய க்ஷரதி ப்ரஜ்ஞா த்ருதே: பாதாதிவோதகம் - ஒரு குடத்தில் உள்ள நீரானது சிறிய துளை வழியே வெளியேறுவது போன்று மனிதனுடைய ஞானமானது வெளியே செல்கிறது - என்பதற்கு ஏற்ப, ஞானமானது இந்த்ரியங்கள் வழியாக வெளியே சென்று, உலக விஷயங்களைக் குறித்து அறிதல் மற்றும் திரும்புதல் என்பவை நிகழ்கிறது; ஆகவே அப்படிப்பட்ட விரிவடைதல் மற்றும் சுருங்குதல் முதலானவை மூலம் ஏற்படுவதான அறிவை, வெளிப்படுதல் மற்றும் வெளிப்படாமல் இருத்தல் என்பதைக் காரணமாகக் கொண்டு, “பிறந்தது, அழிந்தது” என்று கூறுவதில் தவறில்லை.

68. இதுதான் ஏகமாயிருக்கச் செய்தே நாநாவாய்த் தோற்றுகிறது ப்ரஸரண பேதத்தாலே.

**அவதாரிகை -** இப்படி இந்த்ரிய த்வாரா ப்ரஸரிக்கிற ஜ்ஞாநம் ஏகமாயிருக்கச் செய்தே, விஷய க்ரஹண வேளையில் ப்ரகாசிக்கும்போது, தர்சந ச்ரவணாதி ஸம்ஜ்ஞா பேதத்தை உடைத்தாய்க் கொண்டு, அநேகத்வேந ப்ரகாசிக்கிறபடி எங்ஙனே? என்கிற சங்கையிலே அருளிச் செய்கிறார்.

**விளக்கம் -**ஆனால் இவ்விதம் இந்த்ரியம் மூலமாக வெளியே உலவியபடி உள்ள ஞானமானது ஒன்று என உள்ளபோது, உலக விஷயங்களை உணரக்கூடிய நேரத்தில், “காணுதல், கேட்டல்” என்பது போன்றுதான, அறிதல்களில் உள்ள வேறுபாடு காரணமாக பல பெயர்களை அடைந்து, பலவிதமாக ப்ரகாசிப்பது எப்படி என்ற கேள்வி எழலாம். இதற்குச் சமாதானம் கூறுகிறார்.

**வ்யாக்யானம் -** (இதுதான் ஏகமாயிருக்கச்செய்தே, நாநாவாய்த் தோற்றுகிறது ப்ரஸரண பேதத்தாலே) என்று. அதாவது ஏகமுகமாக ப்ரஸரிக்கையன்றிக்கே, சக்ஷுச் ச்ரோத்ராத்யநேகேந்த்ரிய த்வாரா ப்ரஸரித்து, ரூப சப்தாத்யநேக விஷயங்களை க்ரஹிக்கிறவிதுக்கு, தர்சந ச்ரவணாதி ஸம்ஜ்ஞா பேதேந தோற்றுகிற நாநாத்வம் ப்ரஸரண பேத நிபந்தநமென்கை. இத்தால், நித்யமான ஜ்ஞானத்துக்கு உத்பத்தி விநாச வ்யவஹார ஹேது இன்னதென்று சொன்ன அநந்தரத்திலே ப்ராஸங்கிகமாக அதினுடைய

நாநாத்வேந ப்ரகாசந ஹேதுவும் சொல்லப்பட்டதாயிற்று. ஆத்மாவினுடைய தர்மபூதஜ்ஞாந நித்யத்வம், "ந ஹி விஜ்ஞாதா விஜ்ஞாதோ விபரிலோபோ வித்யதே, ந ஹி த்ருஷ்டோ விபரிலோபோ வித்யதே", "ஜ்ஞாநம் வைராக்யமைச்வர்யம் தர்மச்ச மநுஜேச்வர, ஆத்மநோ ப்ரஹ்ம பூதஸ்ய நித்யமேதத் சதுஷ்டயம் யதோதபாநகரணாத் க்ரியதே ந ஜலாம்பரமம், ஸதேவ நீயதே வ்யக்திமஸதஸ் ஸம்பவ: குத: ததா ஹேய குணத்வம்ஸாதவபோதாதயோ குணா:, ப்ரகாசயந்தே ந ஜந்யந்தே நித்யா ஏவாத்மநோ ஹி தே" என்று ச்ருதி ஸ்ம்ருத்யாதிகளில் சொல்லப்பட்டதிறே.

**விளக்கம்** - இந்த்ரியங்கள் மூலம் உலவுகின்ற வேற்றுமை காரணமாக, ஞானமானது ஒன்று என உள்ளபோதிலும், பலவாகத் தோன்றுகிறது. அதாவது ஒரே வழியாக ஞானம் வெளியேறி உலவுதல் என்பது அல்லாமல், கண் மற்றும் காது என்பது போன்ற பலவிதமான இந்த்ரியங்கள் வழியாக உலவியபடி, உருவம் மற்றும் ஒலி போன்ற பல உலகவிஷயங்களை ஞானம் உள்வாங்குகிறது. ஆகவே, காணுதல் மற்றும் கேட்டல் என்பது போன்று பெயர் வேறுபாடுகள் காரணமாக உண்டாகின்ற பன்மை என்பது, ஞானத்தின் உலவுகின்ற வேற்றுமைக்கு அடிப்படையாகிறது. இதன் மூலம், நித்யமாக உள்ள ஞானத்திற்கு, உற்பத்தி மற்றும் அழிவு என்று கூறப்படுவதற்கான காரணம் இன்னதாகும் என்கிறார். இதனைத் தொடர்ந்து, இதன் மூலமாகவே ஞானமானது பலவிதமாக வெளிப்படுதல் என்பதற்கான காரணமும் கூறப்பட்டது. ஆத்மாவின் தர்மபூதஞானமானது நித்யமான தன்மை கொண்டது என்பதை, ப்ரு. (4-3-30) – ந ஹி விஜ்ஞாது: விஜ்ஞாதே: விபரிலோபோ வித்யதே – அறிபவனுடைய அறிவுக்கு அழிவு உள்ளதை இதுவரை அறிந்ததில்லை – என்றும், வைஷ்ணவதர்மம் - ஜ்ஞாநம் வைராக்யமைச்வர்யம் தர்மச்ச மநுஜேச்வர, ஆத்மநோ ப்ரஹ்ம பூதஸ்ய நித்யமேதத் சதுஷ்டயம் யதோதபாநகரணாத் க்ரியதே ந ஜலாம்பரமம், ஸதேவ நீயதே வ்யக்திமஸதஸ் ஸம்பவ: குத: ததா ஹேய குணத்வம்ஸாதவபோதாதயோ குணா:, ப்ரகாசயந்தே ந ஜந்யந்தே நித்யா ஏவாத்மநோ ஹி தே – ஞானம், வைராக்யம், ஐச்வர்யம் மற்றும் தர்மம் என்றுள்ளதான ப்ரஹ்மத்துடன் ஒப்புமை அடைந்தவனாகிய முக்தாத்மா ஒருவனுக்கு இந்த நான்கும் எவ்விதம் நித்யமாக உள்ளது? இது எப்படி என்றால், கிணறு வெட்டுவதன் மூலம் நீரானது எவ்விதம் உற்பத்தி ஆகாமல் தானாகவே வெளிப்படுகிறதோ அதே போன்று, தாழ்ந்த குணங்கள் அனைத்தும் விலகுவதால் ஞானம் வெளிப்படுகிறது;

இத்தகைய ஞானம் போன்றவை ஆத்மாவிற்கு நித்யமே ஆகும் - என்றும் ச்ருதி மற்றும் ஸ்ம்ருதிகளில் கூறப்பட்டது அல்லவோ?

69. த்ரவ்யமானபடி என் என்னில்?

**அவதாரிகை -** இப்படியிருந்துள்ள ஜ்ஞானநித்யத்வத்தை அருளிச்செய்தாராய் நின்றார் கீழ்; இனி இதினுடைய த்ரவ்யத்வத்தை உபபாதிப்பதாக தஜ்ஜிஜ்ஞாஸு ப்ரச்நத்தை அநுவதிக்கிறார்.

**விளக்கம் -** இப்படியாக உள்ள ஞானத்தின் நித்யமான தன்மையை இதுவரை அருளிச்செய்தார். அடுத்து, ஞானத்தின் திரவியமாக உள்ள தன்மையை அருளிச்செய்வதற்காக, அதனைக் குறித்து அறிய விரும்புவர்கள் எழுப்பும் கேள்வியை உரைக்கிறார்.

**வ்யாக்யானம் -** (த்ரவ்யமானபடியென்? என்னில்) என்று.

**விளக்கம் -** ஞானம் திரவியமாக உள்ளது எப்படி?

70. க்ரியாகுணங்களுக்கு ஆச்ரயமாய், அஜடமாயிருக்கையாலே த்ரவ்யமாகக் கடவது.

அவதாரிகை – தத் ஹேதுக்களை அருளிச்செய்து த்ரவ்யத்வத்தை ஸாதிக்கிறார்.

**விளக்கம் -** ஞானமானது திரவியமாக இருப்பதற்கான காரணங்களை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (க்ரியா குணங்களுக்கு ஆச்ரயமாய், அஜடமாயிருக்கையாலே த்ரவ்யமாகக் கடவது) என்று. க்ரியையாவது ஸங்கோச விகாஸங்கள். குணமாவது ஸம்யோக வியோகங்கள். அஜடத்வமாவது ஸ்வயம்ப்ரகாசத்வம். "க்ரியாச்ரயோ த்ரவ்யம், குணாச்ரயோ த்ரவ்யம்" என்று த்ரவ்ய லக்ஷணம் சொல்லப்படுகையாலே, க்ரியாச்ரயத்வமும் குணாச்ரயத்வமும் ஒரொன்றே த்ரவ்யத்வ ஸாதகம். இவற்றோடே அஜடத்வத்தையும் சொல்லுகையாலே, அதுவும் த்ரவ்யத்வ ஸாதகமென்று இவர்க்குக்

கருத்து. எங்ஙனே? என்னில், ஜட வஸ்துககளிலே த்ரவ்யாத்ரவ்யங்களிரண்டுமுண்டு; அஜட வஸ்துக்களிலே அத்ரவ்யமாயிருப்பதொன்றில்லையிறே. ஆகையால், “ஜ்ஞாநம் த்ரவ்யம்; அஜடத்வாத், யதஜடம், தத் த்ரவ்யம், யதா ஆத்மாதி” என்று, அஜடத்வந்தன்னைக் கொண்டே த்ரவ்யத்வம் ஸாதிக்கலாமிறே. ஆகையிறே, “இதுதான் அஜடமுமாய், ஸங்கோச விகாஸங்களுக்கும் ஸம்யோக வியோகாதிகளுக்கும் ஆச்ரயமுமாயிருக்கையாலே த்ரவ்யம்” என்று தத்வசேகரத்திலும் இவரருளிச்செய்தது. இப்படி த்ரவ்யமாயிருக்குமாகில், இதுக்கு ஆத்ம குணத்வம் கூடும்படி என்? என்னில், நித்ய ததாச்ரயத்வத்தாலே கூடும். “ஆச்ரயாதந்யதோ வ்ருத்தேராச்ரயேண ஸமந்வயாத், த்ரவ்யத்வம் ச குணத்வம் ச ஜ்ஞானஸ்யைவோபபத்யதே” என்றிறே ஆளவந்தார் அருளிச்செய்தது. ஆச்ரயாதந்யதோ வ்ருத்தித்வம், க்ரியாச்ரயத்வம் சொன்னபோதே சொல்லிற்றாயிற்று. இதுதான் ஜ்ஞாநத்துக்கேயன்றிறே; தீபாதி தேஜ பதார்த்த ப்ரபைகளுக்கும் ஒக்குமிறே. ஆகையால் த்ரவ்யத்வ குணத்வங்களிரண்டும், ஜ்ஞாநத்துக்கு உபபந்நம்.

**விளக்கம் -** க்ரியை என்றால், சுருங்குதல் மற்றும் மலர்தல் ஆகியவற்றுக்கு ஏற்றபடியான செயல்பாடுகள். குணம் என்றால் சேர்ந்து இருத்தல் மற்றும் பிரிந்து இருத்தல். அஜடத்வம் என்றால், தானே தன்னை வெளிப்படுத்துவதாக இருத்தல். “க்ரியாச்ரயோ த்ரவ்யம், குணாச்ரயோ த்ரவ்யம் - ஒரு செயல் புரிவதற்கு ஏற்ற இடமாக இருத்தல் என்பது திரவியமாக உள்ளதன் இலக்கணம்; குணத்தின் இருப்பிடமாக இருத்தல் என்பது திரவியமாக உள்ளதன் இலக்கணம் ஆகும்”, என்று திரவியத்தின் இலக்கணம் கூறப்படுகிறது. ஆகவே செயல் புரிவதற்கான இடமாக இருத்தல் மற்றும் குணத்திற்கு இருப்பிடமாக இருத்தல் ஆகிய ஒவ்வொன்றுமே, திரவியமாக உள்ள தன்மைக்கு சாதகமாக உள்ள நிலையாக உள்ளன. இதனுடன் சேர்ந்து அஜடமாக உள்ள தன்மையும் கூறப்படுவதால், அந்தத் தன்மையும், திரவியமாக உள்ள தன்மைக்குச் சாதகமாக உள்ளது என்பது இவருடைய கருத்து ஆகும். எப்படி? ஜடமாக உள்ள பொருள்களில் திரவியமாக உள்ளவை மற்றும் திரவியம் அல்லாதவை என்று இரண்டு வகைகள் உள்ளன. ஆனால் அஜடமான பொருள்களில், “திரவியம் அல்லாதவை” என ஏதும் இல்லை அல்லவோ? எனவே, “ஜ்ஞாநம் த்ரவ்யம்; அஜடத்வாத், யத் அஜடம், தத் த்ரவ்யம், யதா ஆத்மாதி - ஞானம் திரவியமாகும்; அது அஜடமாக உள்ளதால்; எது அஜடமோ அது திரவியம் ஆகும்; ஆத்மா போன்று” என்பதன் மூலம், அஜடமாக உள்ள தன்மையைக் கொண்டே

திரவியமாக உள்ள தன்மையானது ஞானத்திற்கு உள்ளது என நிரூபிக்கலாம் அல்லவோ? எனவேதான், தத்வசேகரத்தில், "இதுதான் அஜடமுமாய், ஸங்கோச விகாஸங்களுக்கும் ஸம்யோக வியோகாதிகளுக்கும் ஆச்ரயமுமா யிருக்கையாலே த்ரவ்யம்", என்று இவரே அருளிச்செய்தார். ஆனால் இவ்விதம் ஞானமானது திரவியமாக உள்ளது என்றால், ஞானத்திற்கு ஆத்மாவின் குணத் தன்மை எவ்விதம் சேரும் என்பதற்கு விடை அளிக்கிறார். ஞானமானது எப்போதும் ஆத்மாவை அண்டியே நிற்பதால் பொருந்தும். ஸித்தித்ரயத்தில், ஆச்ரயாதந்யதோ வ்ருத்தேராச்ரயேண ஸமந்வயாத், த்ரவ்யத்வம் ச குணத்வம் ச ஜ்ஞானஸ்யைவோபபத்யதே - தனக்கு இருப்பிடமான ஆத்மாவுடன் சேர்ந்து உள்ளதாலும், தனியாக வெளிப்படுவதாலும், ஞானத்திற்கு, குணமாக உள்ள தன்மை மற்றும் திரவியமாக உள்ள தன்மை ஆகியவை உள்ளன என்று ஸ்வாமி ஆளவந்தார் அருளிச்செய்தார். தனக்கு இருப்பிடமாக உள்ள ஆத்மாவைக் காட்டிலும் வேறு இடத்தில் உள்ள இருப்பு என்பது, செயல் புரிவதற்கு இடமாக உள்ள தன்மையைக் கூறியபோதே கூறப்பட்டதாகிறது. இத்தகைய தன்மையானது ஞானத்திற்கு மட்டும் அல்ல; விளக்கு முதலான ஒளிரும் பொருள்கள் அனைத்திற்கும் உள்ள ஒளிக்கும் பொருந்தும். எனவே திரவியமாக உள்ள தன்மை மற்றும் குணமாக உள்ள தன்மை ஆகிய இரண்டும் ஞானத்திற்கும் பொருந்தும் என்று கருத்து.

71. அஜடமாகில் ஸுஷுப்தி மூர்ச்சாதிகளில் தோற்றவேண்டாவோவென்னில்.

**அவதாரிகை -** கீழ் ஜ்ஞாநத்துக்குத் தாம் அருளிச்செய்த அஜடத்வ விஷயமான ஜிஜ்ஞாஸு ப்ரச்நத்தை அநுவதிக்கிறார்.

**விளக்கம் -** ஞானத்திற்கு தான் அருளிச்செய்த கருத்தான "அஜடமாக உள்ள தன்மை" என்பதைக் குறித்து அறிய விரும்புபவர்கள் எழுப்பும் கேள்வி குறித்து அடுத்து உரைக்கிறார்.

**வ்யாக்யானம் -** (அஜடமாகில் ஸுஷுப்தி மூர்ச்சாதிகளில் தோற்றவேண்டாவோ? என்னில்) என்று. அதாவது ஜ்ஞாநம் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்குமாகில் எப்போதும் ப்ரகாசிக்கவேண்டாவோ; ஸுஷுப்த்யாத்யவஸ்தைகளில் ப்ரகாசியாதொழிவானென் என்கை.

**விளக்கம் -** ஞானமானது ஆழ்ந்த உறக்கம், மயக்கம் போன்றவற்றில் வெளிப்படவல்லது என்றுள்ளபோது, அது எப்போதும் வெளிப்பட்டபடி இருக்கவேண்டாமோ? ஆழ்ந்த உறக்கம் முதலான நிலைகளில் ஏன் வெளிப்படுவதில்லை?

72. ப்ரஸரணமில்லாமையாலே தோற்றாது.

**அவதாரிகை -** அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார்.

**விளக்கம் -** கடந்த சூர்ணையில் கேட்கப்பட்ட கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (ப்ரஸரணமில்லாமையாலே தோன்றாது) என்று. அதாவது ஜ்ஞானம் ஸ்வாச்ரயத்துக்கு ஸ்வயமேவ ப்ரகாசிப்பது, தான் விஷய க்ரஹண வேளையிலிறே. ஸுஷுப்த்யாதி அவஸ்தைகளில் தமோகுணத்யபிபவத்தாலே ஸங்குசிதமாய், திரோஹிதங்களான மணி ப்ரகாசாதிகளைப்போலே ப்ரஸரணமில்லாமையாலே ப்ரகாசியாதென்கை.

**விளக்கம் -** ஞானமானது இந்த்ரியங்களில் புகாமல் உள்ளதால் வெளிப்படுவதில்லை. அதாவது ஞானமானது ஆத்மாவிற்குத் தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொள்ளுதல் என்பது, தான் உலக விஷயங்களைக் குறித்து அறியும்போது அல்லவோ? ஆனால் உறக்கம் போன்ற நிலைகளில் தமோ குணத்தால் மூடப்பட்ட ஞானமானது, சுருக்கம் அடைந்து, மறைத்து வைக்கப்பட்ட இரத்தினங்கள் போன்று, இந்த்ரியங்களில் புகுதல் என்பது இல்லாமல் போகிறது. ஆகவே தன்னைத் தான் வெளிப்படுத்துவதில்லை.

73. ஆநந்தரூபமாகையாவது ஜ்ஞாநம் ப்ரகாசிக்கும்போது அநுகூலமாயிருக்கை.

**அவதாரிகை -** இனிமேல் இதினுடைய ஆநந்தரூபத்வத்தை உபபாதிக்கிறார் (ஆநந்த ரூபமாகையாவது) என்று தொடங்கி.

**விளக்கம் -** அடுத்து ஞானத்தின் ஆனந்தவடிவமாக உள்ள தன்மையை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் -** ஜ்ஞாநம் ப்ரகாசிக்கும்போதாவது ஸ்வாச்ரயத்துக்கு விஷயங்களை தர்சிப்பிக்கும்போது அப்போதிறே இதுதான் ப்ரகாசிப்பது அவ்வவஸ்தையில் அநுகூலமாயிருக்கையாவது அவ்வோ விஷயங்களெல்லாம் அநுகூலமாய்த் தோற்றுகையாலே அவற்றை விஷயீகரித்த இந்த ஜ்ஞாநம் ஸ்வாச்ரயத்துக்கு ஸுகரூபமாயிருக்கை.

**விளக்கம் -** "ஞானம் வெளிப்படுதல்" என்றால், தனது இருப்பிடமாக உள்ள ஆத்மாவிற்கு மற்ற விஷயங்களைக் குறித்து அறிய வைப்பதாகும். அப்போதுதான் அது வெளிப்படுகிறது. அந்த நிலையில் ஆத்மாவிற்கு ஏற்றபடியாக உள்ளது; அதாவது, அந்தந்த விஷயங்கள் அனைத்தும் ஆத்மாவிற்கு ஏற்றதாகவே தோன்றுவதால், அவற்றை உணரும்படியாகச் செய்த ஞானமானது, அதன் இருப்பிடமான ஆத்மாவிற்குச் சுகமாகவே உள்ளது என்று கருத்து.

74. விஷசஸ்த்ராதிகளைக் காட்டும்போது ப்ரதிகூலமாயிருக்கைக்கடி தேஹாத்ம ப்ரமாதிகள்.

**அவதாரிகை -** ஆனால் விஷசஸ்த்ராதிகளை தர்சிப்பிக்கும்போது அவற்றை விஷயீகரித்த ஜ்ஞாநம் ப்ரதிகூலமாயிருப்பானேன்? என்கிற சங்கையை உட்கொண்டு அருளிச் செயகிறார் (விஷசஸ்த்ராதிகள்) என்று தொடங்கி.

**விளக்கம் -** ஆனால் ஆபத்து ஏற்படுத்தவல்லதான ஆயுதங்கள் குறித்து அறியும்போது, அவற்றை அறியும்படிச் செய்த ஞானமானது, ஏற்கத்தகாதபடி உள்ளது; இது ஏன் என்ற சந்தேகத்திற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது அவற்றை தர்சிப்பிக்கும்போது அவற்றை விஷயீகரித்த ஜ்ஞாநம் துக்கரூபமாயிருக்கைக்குக் காரணம், அவற்றில் பாதகத்வ புத்திக்கு மூலமான தேஹாத்ம ப்ரமமும் கர்மமும் ஈச்வராத்மகத்வ ஜ்ஞாநராஹித்யமும் என்கை.

**விளக்கம் -** அதாவது அந்த ஆயுதங்கள் குறித்து அறியும்படிச் செய்யும் ஞானமானது, துக்க வடிவமாக உள்ளதற்கான காரணம் என்னவென்றால், அவற்றில் விரோதமான எண்ணம்

ஏற்படுவதற்கு ஆதாரமாக உள்ள "சரீரமே ஆத்மா" என்ற சிந்தனையும், அதன் விளைவாக ஏற்படும் கர்மமும், ஈச்வரனே அனைத்தின் ஆத்மாவாகவும் உள்ளான் என்ற ஞானத்தின் இல்லாமையும் ஆகும்.

75. ஈச்வராத்மகமாகையாலேயெல்லாப் பதார்த்தங்களுக்கும் ஆநுகூல்யமே ஸ்வபாவம், ப்ராதிகூல்யம் வந்தேறி.

**அவதாரிகை -** இவை தனக்கு ஸ்வாபாவிக வேஷமேது? என்கிற சங்கையிலே அருளிச் செய்கிறார் (ஈச்வராத்மகமாகையாலே) என்று தொடங்கி.

**விளக்கம் -** இவற்றுக்கான இயல்பான வடிவம் எது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது "ஜகத் ஸர்வம் சரீரம் தே", "தாநி ஸர்வாணி தத் வபு:", "தத் ஸர்வம் வை ஹரேஸ்தநு:" என்று ஸகலபதார்த்தங்களும் பகவச் சரீரமென்று சாஸ்த்ரங்களிலே சொல்லப்படா நின்றதிறே. அப்படி பகவதாத்மகமாகக் காணும்போது, ஸகலமுமநுகூல்மாய்க்கொண்டு தோற்றுகையாலே எல்லா பதார்த்தங்களுக்கும் ஆநுகூல்யமே ஸ்வபாவம்; இவற்றில் தோற்றுகிற ப்ராதிகூல்யம் தேஹாத்ம ப்ரமாதி மூலமாகையாலே வந்தேறி என்கை.

**விளக்கம் -** அதாவது, யுத்தகாண்டம் (120-126) - ஜகத் ஸர்வம் சரீரம் தே - இந்த ஜகத் முழுவதும் உனது சரீரம் - என்றும், ஸ்ரீவிபு. (1-22-86) - தாநி ஸர்வாணி தத் வபு: - இந்த அனைத்தும் அவனுடைய சரீரம் – என்றும், ஸ்ரீவிபு (1-22-78) – தத் ஸர்வம் வை ஹரேஸ்தநு: - அனைத்தும் ஸ்ரீஹரியின் சரீரம் - என்றும் உள்ள பல வாக்கியங்கள் மூலம், "அனைத்து வஸ்துக்களும் பகவானுடைய சரீரம் ஆகின்றன" என்று சாஸ்த்ரங்களில் கூறப்பட்டது அல்லவோ? அவ்விதம் அனைத்திற்கும் ஆத்மாவாக பகவான் உள்ளான் என்று காணும்போது, அனைத்தும் இனிமையாகவே தோன்றுவதால், அனைத்து வஸ்துக்களுக்கும் "ஏற்புடையது ஆகும்" என்பது இயல்பாக உள்ளது. ஆனால் இவற்றில் தோன்றுகின்ற "ஏற்புடையது அல்ல" என்ற எண்ணமானது, சரீரத்தையே ஆத்மா என எண்ணி மயங்கும் நிலையால் வந்தது என்று கருத்து.

76. மற்றையாநுகூல்யம் ஸ்வாபாவிகமாகில், ஒருவனுக்கொருக்காலோரிடத்திலே அநுகூலங்களான சந்தந குஸுமாதிகள், தேசாந்தரே காலாந்தரே இவன்தனக்கும் அத்தேசத்திலே அக்காலத்திலே வேறேயொருவனுக்கும் ப்ரதிகூலங்களாகக் கூடாது.

**அவதாரிகை -** இப்படி ஈச்வராத்மகமாகையாலே ஸகலபதார்த்தங்களுக்கும் ஆநுகூல்யமே ஸ்வபாவமென்பானேன்? சந்தந குஸுமாதிகளிலுண்டான ஆநுகூல்யம் ஸ்வாபாவிக மன்றோ? என்கிற சங்கையின் மேலே அருளிச்செய்கிறார் (மற்றையாநுகூல்யம் ஸ்வாபாவிகமாகில்) என்று தொடங்கி.

**விளக்கம் -** இவ்விதம் அனைத்து வஸ்துக்களும் ஈச்வரனையே தங்கள் ஆத்மாவாகக் கொண்டவையாக உள்ளதால், அவை அனைத்திற்கும் “ஏற்புடையதாக உள்ள தன்மை” என்பதே இயல்பானது என்று தனியாக ஏன் கூறவேண்டும்? சந்தனம், மலர்கள் போன்றவற்றுக்கு “ஏற்புடையதாக உள்ள தன்மை” என்பது இயல்பானது அல்லவோ என்ற சந்தேகத்திற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** மற்றையாநுகூல்யம் என்கிறது தாமருளிச்செய்த பகவதாத்மகத்வத்தால் வந்த ஆநுகூல்யத்தை ஒழிய சந்தந குஸுமாதி பதார்த்தங்களில் தோற்றுகிற ஆநுகூல்யததை. அது அவற்றுக்கு ஸ்வாபாவிகமாகில், போக்தாவாயிருப்பா னொருவனுக்கு ஒரு காலத்திலே ஒரு தேசத்திலே அநுகூலங்களாயிருந்தவை, காலாந்தரத்திலேயாதல், தேசாந்தரத்திலேயாதல், இவன்றனக்கே ப்ரதிகூலங்களாவது; இவனுக்கு அநுகூலங்களாயிருக்கிற தேச காலங்கள் தன்னிலே வேறே ஒருவனுக்கு ப்ரதிகூலங்களாவதாகை கூடாது. இப்படி ப்ரதிகூலங்களாய்த் தோற்றக் காணா நின்றோமிறே. ஆகையால், பகவதாத்மகத்வ நிபந்தநமான ஆநுகூல்யமே ஸ்வாபாவிகம்; மற்றையாநுகூல்யம ஸ்வாபாவிகமன்றென்கை. “தத் ஏவ ப்ரீதயே பூத்வா புநர் துக்காய ஜாயதே || தத் ஏவ கோபாய யத: ப்ரஸாதாய ச ஜாயதே | தஸ்மாத் துக்காத்மகம் நாஸ்தி ந ச கிஞ்சித் ஸுகாத்மகம்” என்று இவ்வர்த்தம் ஸ்ரீபராசரபகவானாலே விசதமாகச் சொல்லப்பட்டதிறே.

**விளக்கம் -** “மற்றையாநுகூலம்” என்று எதனைக் கூறுகிறார்? தான் முன்பு அருளிச்செய்த கருத்தான, “பகவானே அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளான்” என்பதன் மூலம்,

அனைத்து வஸ்த்துக்களுக்கு உள்ளதான "ஏற்புடையதான தன்மை" என்பது அல்லாமல், சந்தனம் மற்றும் மலர்கள் போன்றவற்றுக்கு உள்ளதான "ஏற்புடைய தன்மை" என்பதையே "மற்றையானுகூலம்" என்கிறார். அவை, அந்தப் பொருள்களுக்கு இயல்பாகவே உள்ள தன்மை என்றால், அவற்றை அனுபவிக்கும் ஒருவனுக்கு, அவை ஒரு காலம் மற்றும் ஓர் இடத்தில் ஏற்புடையதாக இருந்தபடியும், அவனுக்கே வேறு ஒரு காலம் மற்றும் வேறு ஓர் இடத்தில் ஏற்கமுடியாததாக இருக்க இயலாது அல்லவோ? மேலும் ஒருவனுக்கு ஏற்புடையதாக உள்ள இடம் மற்றும் காலத்தில், வேறு ஒருவனுக்கு அதே இடம் மற்றும் காலத்தில் ஏற்கப்படாதவையாக இருக்க இயலாது அல்லவோ? ஆனால் இவ்விதமாக இந்தப் பொருள்கள் ஏற்கப்படாதவையாக உள்ளதை நான் காண்கிறோம். எனவே "அனைத்து வஸ்துக்களின் ஆத்மாவாக பகவான் உள்ளான்" என்பதன் விளைவாக, அனைத்துப் பொருள்களுக்கும் "ஏற்கப்படுவதாக உள்ள தன்மை" என்பதே இயல்பானது ஆகும்; மற்ற விதங்களில் வரும் இந்தத் தன்மையானது, இயல்பானது அல்ல என்று கருத்து. இதனைப் பராசரபகவான் ஸ்ரீவிபு. (2-6-46, 47) - தத் ஏவ ப்ரீதயே பூத்வா புநர் துக்காய ஜாயதே || தத் ஏவ கோபாய யத: ப்ரஸாதாய ச ஜாயதே | தஸ்மாத் துக்காத்மகம் நாஸ்தி ந ச கிஞ்சித் ஸுகாத்மகம் - ஒரு பொருளே, ஒரு நேரத்தில் இன்பமாகவும் மற்றொரு நேரத்தில் துக்கத்தை அளிப்பதாகவும் உள்ளது. எது கோபத்தைத் தூண்டியதோ அதுவே அமைதியை அளிப்பதாகவும் மாறுகிறது. ஆகவே இயல்பாகவே துக்கமானது என்றும், இன்பமானது என்றும் ஏதும் இல்லை – என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** இத்தால் சொல்லிற்றாயிற்றதென்? என்னில், விஷசஸ்த்ராதிகள் ப்ரதிகூலங்களாயும், சந்தந குஸுமாதிகள் அநுகூலங்களாயும் தோற்றுகிறது தேஹாத்ம ப்ரமாதிகளாலே. ஈச்வராத்மகமாகையாலே எலலா பதார்த்தங்களுக்கும் ஆநுகூல்யமே ஸ்வபாவம். ஆகையால் அவ்வாகாரத்தாலே காணும்போது, ஸர்வ விஷய ப்ரகாசந தசையிலும் ஜ்ஞாநம் ஆனந்தரூபமாயிருக்கும் என்றதாயிற்று.

**விளக்கம் -** இதன் மூலமாகக் கூறப்பட்டது என்ன? விஷம் மற்றும் ஆயுதம் போன்றவை ஏற்கப்படாத வஸ்துக்களாகவும், சந்தனம் மற்றும் மலர்கள் போன்றவை ஏற்கப்படும் தன்மை கொண்டவைகளாகவும் இருத்தல் என்ற நிலையானது, "சரீரமே ஆத்மா" என்ற மயக்கத்தால் ஆகும். ஈச்வரனை ஆத்மாவாகக் கொண்டுள்ளதால், அனைத்து

வஸ்துக்களுக்கும் “ஏற்புடையதாக உள்ள தன்மை” என்பதே இயல்பாகும். ஆகவே இந்தத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு காணும்போது, அனைத்து விஷயங்களையும் அறிகின்ற நிலையில் உள்ள ஞானமானது, ஆனந்த ரூபமாகவே உள்ளது என்று கருத்து.

**வ்யாக்யானம் -** ஆக கீழ்ச்செய்ததாயிற்றது, “சித்தென்கிறது ஆத்மாவை” என்று முதலிலே சிச்சப்தவாச்யமான வஸ்துவை உத்தேசித்து; அநந்தரம் “தேஹாதி விலக்ஷணமாய்” என்று தொடங்கி, “சேஷமாயிருக்கும்” என்னுமளவாக தத் ஸ்வரூப லக்ஷணத்தை விஸ்தரேண சொல்லி; “தேஹாதி விலக்ஷணமானபடியென் என்னில்” என்று தொடங்கி, “சேஷமாகையாவது” எனனுமளவாக உக்த லக்ஷணத்தைப பரீக்ஷித்து; அநந்தரம் ஏவம்பூதமான ஆத்ம ஸ்வரூபம் பத்த முக்த நித்ய ரூபேண த்ரிப்ரகாரமா யிருக்கும்படியையும்; பத்தாத்மாக்களுக்கு அவித்யாதிகளுண்டாகைக்கு ஹேதுவையும் தந்நிவ்ருத்தி க்ரமத்தையும் த்ரிவிதாத்ம வர்க்கமும் தனித்தனியே அநந்தமா யிருக்கும்படியையும் சொல்லி; அந்த ஜீவாநந்த்ய ப்ரதிபடமான ஏகாத்ம வாதத்தை யுக்தி சாஸ்த்ரங்களாலே நிரஸித்து, ஆத்மபேதத்தை ஸாதித்து; முன்பு விஸ்தரேண சொன்னபடியன்றிக்கே, ஸங்க்ரஹமாக த்ரிவித ஆத்மாக்களுக்குமுண்டான லக்ஷணத்தை தர்சிப்பித்து; அநந்தரம் ஜ்ஞாநத்துக்கும் ஸ்வரூபத்துக்குமுண்டான ஸாதர்ம்ய வைதர்ம்யங்களைச் சொல்லி; ஜ்ஞாந விபுத்வ ப்ரஸங்கத்திலே, த்ரிவித சேதநருடைய ஜ்ஞாநத்துக்குமுண்டான விசேஷத்தைச் சொல்லி; முன்பு ஜ்ஞாநத்துக்குச் சொன்ன நித்யத்வ த்ரவயத்வ அஜடத்வ ஆநந்தரூபத்வங்களை அடைவே உபபாதித்து; இப்படி சித் தத்வத்தினுடைய வேஷத்தை அருளிச்செய்து தலைக்கட்டினார்.

**விளக்கம் -** ஆகவே இதுவரை கூறப்பட்டது என்ன? சூர்ணை (93) – சித் என்கிறது ஆத்மாவை - என்பதன் மூலம் தொடக்கத்திலேயே “சித்” என்ற சொல்லால் கூறப்படும் வஸ்துவை உணர்த்தினார். அடுத்து, சூர்ணை (4) – தேஹாதி விலக்ஷணமாய் - என்று தொடங்கி, சூர்ணை (4) – சேஷமாயிருக்கும் – என்பது முடிய உள்ள சூர்ணையில், சித் வஸ்துவின் ஸ்வரூப லக்ஷணத்தை விரிவாக உரைத்தார். அடுத்து சூர்ணை (5) – தேஹாதி விலக்ஷணமானபடியென் என்னில் - என்று தொடங்கி, சூர்ணை (40) – சேஷமாகையாவது – என்பது முடிய உள்ள சூர்ணைகளில், முன்பு கூறப்பட்ட சித் வஸ்துவின் லக்ஷணத்தை ஆராய்ந்தார். அடுத்து, இப்படியாக உள்ள ஆத்ம ஸ்வரூபமானது, “பத்தர், முக்தர், நித்யர்” என மூன்றுவிதமாக உள்ளதைக் கூறினார்;

பத்தராக உள்ள ஸம்ஸாரி ஆத்மாக்களுக்கு, அவித்யை போன்றவை ஏற்படும் காரணத்தை உரைத்தார்; அந்த அவித்யை முதலானவை விலகும் வரிசையைக் கூறினார்; மூன்று விதமாக உள்ள ஆத்மாக்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக பல உள்ளன என்றார்; இவ்விதம் "ஜீவாத்மாக்கள் பலர் உள்ளனர்" என்ற ச்ருதி கருத்திற்கு விரோதமாக உள்ளதான "ஒரே ஒரு ஜீவாத்மா" என்ற வாதத்தை, தகுந்த யுக்தி சாஸ்த்ரங்களால் தள்ளினார்; இதன் மூலம் ஆத்ம வேறுபாட்டை உறுதியாக்கினார்; முன்பு விரிவாக உபதேசித்தது போன்று அல்லாமல், மூன்றுவிதமான ஆத்மாக்களுக்கும் உள்ள லக்ஷணத்தைச் சுருக்கமாக உபதேசித்தார்; அடுத்து ஞானத்திற்கும் ஆத்மஸ்வரூபத்திற்கும் இடையே உள்ளதான "ஒரே போன்று உள்ளது, ஒரே போன்று இல்லாதது" என்னும் தர்மங்களைக் கூறினார்; ஞானத்தின் "எங்கும் உள்ள தன்மை" என்பதைக் கூறியபோது, மூன்றுவிதமான சேதனங்களுக்கும் உள்ள ஞானத்திற்கு இருப்பதான சிறப்புகளை உரைத்தார்; முன்பு ஞானத்திற்குக் கூறப்பட்டதான "எப்போதும் உள்ள தன்மை, திரவியமாக உள்ள தன்மை, தானே தன்னை வெளிப்படுத்தும் தன்மை, ஆனந்தமே வடிவமாக உள்ள தன்மை" போன்ற பலவற்றையும் முற்றிலுமாக விளக்கினார். இப்படியாக சித் தத்வத்தின் தன்மையை அருளிச்செய்து நிறைவு செய்தார்.

## ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த
## தத்வத்ரயத்தில்

## சித் ப்ரகரணம் ஸம்பூர்ணம்

திருவரங்கச்செல்வனார் திருவடிகளே தஞ்சம்

தஞ்சம் அடைந்த நம் இராமாநுசன் திருவடிகளே தஞ்சம்

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:



ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

# தத்வ த்ரயம்

# (அசித் ப்ரகரணம்)

## இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச்செய்த வ்யாக்யானம்

(மூலம், எளிய தமிழ்நடை)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

**அவதாரிகை -** தத்வத்ரயத்தில் தத்வத்ரயமாவது சித்தும், அசித்தும் ஈச்வரனும் என்று உத்தேசித்த க்ரமததிலே, ப்ரதமம் சிச்சப்த வாச்யனான ஆத்மாவினுடைய ஸ்வரூப ஸ்வபாவ விசேஷங்களை ஸ்புடமாக அருளிச்செய்தார் கீழ்; அநந்தரம், அசித் வஸ்துவினுடைய ஸ்வரூப ஸ்வபாவ விசேஷங்களை அதிஸ்புடமாக அருளிச்செய்கிறார்.

**விளக்கம் -** தத்வத்ரயத்தில், "தத்வத்ரயம் என்பது சித், அசித் மற்றும் ஈச்வரன்" என்று தான் கருதிய விதத்தில், முதலில் "சித்" என்ற சொல்லால் கூறப்படும் ஆத்மாவின் தன்மைகள் மற்றும் இயல்புகளையும், அவற்றின் சிறப்புகளையும் தெளிவாக இதுவரை அருளிச்செய்தார். தொடர்ந்து, அசித் வஸ்துவின் தன்மை மற்றும் இயல்பின் சிறப்புகளை மிகவும் தெளிவாக அருளிச்செய்கிறார்.

77. அசித்து ஜ்ஞாந சூந்யமாய், விகாராஸ்பதமாயிருக்கும்.

**அவதாரிகை -** அதில் ப்ரதமத்திலே அசில்லக்ஷணத்தை அருளிச்செய்கிறார்.

**விளக்கம் -** அதில் தொடக்கத்தில், அசித் வஸ்துக்களுடைய லக்ஷணத்தை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (அசித்து ஜ்ஞாந சூந்யமாய், விகாராஸ்பதமாயிருக்கும்) என்று. அசித்தாகிறது, சைதந்ய அநாதாரமான வஸ்துவிறே. அதுதன்னை அருளிச்செய்கிறார், "ஜ்ஞாந சூந்யமாய்" என்று. அத்தைப் பற்றவிறே ச்ருதி, போக்ய சப்தத்தாலே அசித்தைச் சொல்லிற்று. விகாராஸ்பதமாகையாவது, விகாரத்துக்கு இருப்பிடமாயிருக்கை. விகாரமாவது, அவஸ்தாந்தராபத்தி; அதாவது சித்ஸ்வரூபம் போலே ஸதைக ரூபமாயிரா தொழிகை.

**விளக்கம் -** “அசித் என்பது ஞானம் அற்றதாகவும், மாற்றத்தின் இருப்பிடமாகவும் உள்ளது” என்கிறார். அசித் என்பது சைதந்யம் அற்றதான அல்லது சைதந்யத்தால் கைவிடப்பட்ட வஸ்து அல்லவோ? இதனையே “ஜ்ஞாந சூந்யமாய் – ஞானம் அற்றதாக” என்கிறார். இதனை உணர்த்துவதற்காக அல்லவோ ச்ருதியானது “போக்யம்” என்ற சொல் மூலம் அசித்தைக் கூறியது? “விகார ஆஸ்பதம்” என்றால் “மாற்றத்திற்கு இருப்பிடம்” என்று பொருள். “விகாரம் – மாற்றம்” என்றால் வேறு ஒரு நிலையை அடைதல் ஆகும். அதாவது, சித் வஸ்துவின் தன்மைகள் போன்று ஒரேவிதமாக இல்லாத தன்மை கொண்டதாகும்.

78. இது, சுத்தஸத்வமென்றும், மிச்ரஸத்வமென்றும், ஸத்வசூந்யமென்றும் த்ரிவிதம்.

**அவதாரிகை -** இப்படி இதினுடைய லக்ஷணத்தை அருளிச்செய்த வநந்தரம், இவ்வசித் தத்வந்தான் ஸத்வைகாதாரமாயும், ஸத்வாதி குண த்ரயாதாரமாயும், ஸத்வாதி குண சூந்யமாயும், மூன்று வகைப்பட்டிக்கும்படியை அருளிச்செய்கிறார்.

**விளக்கம் -** இவ்விதம் அசித் வஸ்துவின் தன்மையை அருளிச்செய்த பின்னர், இந்த அசித் வஸ்துவானது “ஸத்வ குணத்தை மட்டுமே ஆதாரமாகக் கொண்டது, ஸத்வம் முதலான மூன்று குணங்களையும் ஆதாரமாகக் கொண்டது, ஸத்வம் முதலான மூன்று குணங்களும் இல்லாமல் உள்ளது”, என்பதாக மூன்றுவிதமாக உள்ளதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (இது, சுத்தஸத்வமென்றும், மிச்ரஸத்வமென்றும், ஸத்வசூந்யமென்றும் த்ரிவிதம்) என்று.

**விளக்கம் -** அசித் வஸ்துவானது, “ஸத்வகுணம் மட்டுமே கொண்டது, மூன்று குணங்களுடைய கலவையாக உள்ளது, ஸத்வம் போன்ற குணங்கள் இன்றி உள்ளது” என மூன்றுவிதம் ஆகும்.

79. இதில் சுத்தஸத்வமாவது ரஜஸ் தமஸ்ஸுக்கள் கலசாதே கேவல ஸத்வமாய், நித்யமாய், ஜ்ஞாநாநந்த ஜநகமாய், கர்மத்தாலன்றிக்கே கேவல பகவதிச்சையாலே விமாந கோபுர மண்டப ப்ராஸாதாதி ரூபேண பரிணமிக்கக் கடவதாய், நிரவதிக தேஜோ ரூபமாய், நித்யமுக்தராலும் ஈச்வரனாலும் பரிச்சேதிக்க அரிதாய், அத்யத்புதமா யிருப்பதொன்று.

**அவதாரிகை -** உத்தேசித்த க்ரமத்திலே அசித் த்ரயத்தினுடையவும் ஸ்வரூப ஸ்வபாவ விசேஷங்களை ப்ரதிபாதிப்பதாக நினைத்து ப்ரதமம் சுத்தஸத்வத்தின் படியை அருளிச்செய்கிறார் (இதில் சுத்தஸத்வமாவது) என்று தொடங்கி.

**விளக்கம் -** தான் கருதிய முறையில், அசித் வஸ்துக்களுடைய தன்மைகள் மற்றும் இயல்புகளின் சிறப்புகளை வெளிப்படுத்த எண்ணியவராக, முதலில் சுத்தஸத்வத்தின் தன்மையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** சுத்தஸத்வமென்றது குணாந்தரம் கலசாத ஸத்வகுணத்தையுடையதென்ற படி. அத்தை அருளிச்செய்கிறார் (ரஜஸ் தமஸ்ஸுக்கள் கலசாதே கேவல ஸத்வமாய்) என்று. “க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே”, “தமஸஸ்து பாரே”, “தமஸஸ் பரஸ்தாத்”, “பஞ்ச சக்திமயே திவ்யே சுத்தஸத்வே ஸுகாகரே” என்று ச்ருதி ஸ்ம்ருதிகளிலே இப்படி சொல்லாநின்றதிறே.

**விளக்கம் -** சுத்தஸத்வம் என்பது மற்ற இரண்டு குணங்களான ராஜஸம் மற்றும் தாமஸம் கலக்காத, ஸத்வகுணத்தை மட்டுமே கொண்டது என்று பொருள். இதனை “ரஜஸ் தமஸ்ஸுக்கள் கலசாதே கேவல ஸத்வமாய்” என்று அருளிச்செய்கிறார். யஜுஷி - க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே – ராஜஸம் கலந்த இந்த லோகங்களைக் காட்டிலும் மேலே உள்ள பரமபதத்தில் – என்றும், புருஷஸூக்தம் – தமஸஸ்து பாரே - தமோ குணம் நிறைந்த இந்த லோகத்திற்கு அப்பால் – என்றும், தைத். (2-11) – பஞ்ச சக்திமயே திவ்யே சுத்தஸத்வே ஸுகாகரே - ஐந்து சக்திகளைத் தனது இயல்பாகக் கொண்டதும், சுகத்திற்கு இருப்பிடமாக உள்ளதும், தெய்வீகமானதும், சுத்தஸத்வமாக உள்ளதும் ஆகிய பரமபதம் - என்றும் ச்ருதி மற்றும் ஸ்ம்ருதிகள் கூறியது காண்க.

**வ்யாக்யானம் -** (நித்யமாய்) அதாவது, அநாதி நிதநமாயிருக்கை. “ததக்ஷரே பரமே வ்யோமந்”, “காலாதீதமநாத்யந்தமப்ராக்ருதமசஞ்சலம், ப்ராப்யமர்ச்சி: பதாத் ஸத்பிர்மயி ஸம்ந்யஸ்தமாநஸை:”, “யத் தத் புராணமாகாசம் ஸர்வஸ்மாத் பரமம் த்ருவம், யத் பதம் ப்ராப்ய தத்வஜ்ஞா முச்யந்தே ஸர்வ கில்பிஷை:” என்று இதினுடைய நித்யத்வமும் ச்ருதி ஸ்ம்ருதிகளிலே சொல்லப்பட்டது.

**விளக்கம் -** அதாவது தொடக்கமும் முடிவும் அற்றதாக, எப்போதுமே உள்ளதாக இருத்தல். தைத். (2-12) – தத் அக்ஷரே பரமே வ்யோமந் – அந்த வஸ்துவானது அழிவற்ற பரமபதத்தில் உள்ளது - என்றும், காலாதீதம் அநாத்யந்தம் அப்ராக்ருதமசஞ்சலம், ப்ராப்யம் அர்ச்சி: பதாத் ஸத்பிர்மயி ஸம்ந்யஸ்தமாநஸை: - எந்த ஒரு பரமபதமானது அனைத்து காலங்களுக்கும் அப்பாற்பட்டதகவும், தொடக்கம் மற்றும் முடிவு அற்றதாகவும், என்னிடம் அசையாத மனதைச் செலுத்தியவர்களால் அர்ச்சிராதி மார்க்கமாக அடையப்படுவதாகவும் உள்ளதோ - என்றும், யத் தத் புராணமாகாசம் ஸர்வஸ்மாத் பரமம் த்ருவம், யத் பதம் ப்ராப்ய தத்வஜ்ஞா முச்யந்தே ஸர்வ கில்பிஷை: - எந்த ஒரு பரமபதமானது மிகவும் புராணமாகவும், பரமாகாசம் என்று கூறப்படுவதாகவும், அனைத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகவும், நித்யமாகவும் உள்ளதோ, எதனை அடைந்த தத்வ ஞானிகள் தங்கள் பாபங்கள் அனைத்தையும் விடுகிறார்களோ - என்றும் உள்ள ச்ருதி மற்றும் ஸ்ம்ருதிகளால் இதன் நித்யமாக உள்ள தன்மை கூறப்பப்பட்டது.

**வ்யாக்யானம் -** (ஜ்ஞாநாநந்த ஜநகமாய்) சுத்த ஸத்வமாகையாலே ஜ்ஞாநாநந்த ஜநகமாயிருக்குமிறே. ஸத்வம் ஜ்ஞாந ஸுகாவஹமாயிறே இருப்பது; ஆகையிறே “சுத்த ஸத்வே” என்ற அநந்தரத்திலே, “ஸுகாகரே” என்றது.

**விளக்கம் -** (ஜ்ஞாந ஆநந்த ஜநகமாய்) - சுத்தஸத்வமாக உள்ளதால் ஞானம் மற்றும் ஆனந்தம் ஆகியவற்றின் பிறப்பிடமாக இருப்பதாகும். ஸத்வ குணமானது ஞானம் மற்றும் ஆனந்தத்தின் இருப்பிடமாக உள்ளதால் அல்லவோ வேதமானது, “சுத்த ஸத்வே” என்ற கூறியதைத் தொடர்ந்து, “ஸுக ஆகரே” என்று கூறியது?

**வ்யாக்யானம் -** (கர்மத்தாலன்றிக்கே கேவல பகவதிச்சையாலே விமாந கோபுர மண்டப ப்ராஸாதாதி ரூபேண பரிணமிக்கக் கடவதாய்) அதாவது சேதநன் கர்மாநுகுணமாக இச்சிக்க, அந்த இச்சாநுகுணமாக பகவத் ஸங்கல்பத்தாலே சதுர்விம்சதி தத்வமாய்க் கொண்டு பரிணமித்து, சேதநர்க்கு போக்ய போகோபகரண போகஸ்தாநங்களாகிற ப்ரக்ருதி தத்வம் போலன்றிக்கே, ஸ்வபோகார்த்தமாக உண்டான பகவதிச்சையாலே விமாந கோபுராதி ரூபேண பரிணமியா நிற்குமென்கை. “தேவாநாம் பூரயோத்யா தஸ்யாம் ஹிரண்மய கோச: | யோ வை தாம் ப்ரஹ்மணோ வேத அம்ருதேநாவ்ருதாம் புரீம்”, “அபராஜிதா பூர்ப்ரஹ்மண:”, “ப்ரஜாபதேஸ் ஸபாம் வேச்மப்ரபத்யே” என்று ச்ருதியிலேயும் ஸங்க்ரஹேண நித்யவிபூதியிலுண்டான திவ்ய நகர திவ்யாயதநாதிகள் சொல்லப்பட்டது. இதுதன்னை பாஷ்யகாரர் ஸ்ரீவைகுண்டகத்யத்தில், “திவ்யாவரண சத ஸஹஸ்ராவ்ருதே, திவ்ய கல்பகதரூப சோபிதே, திவ்யோத்யாந சதஸஹஸ்ர கோடி பிராவ்ருதே அதிப்ரமாணே, திவ்யாயதநே கஸ்மிம்ச்சித் விசித்ர திவ்ய ரத்நமய திவ்யாஸ்தாந மண்டபே” என்று தொடங்கி விஸ்தரேண அருளிச்செய்தாரிறே.

**விளக்கம் -** (கர்மத்தால் அன்றிக்கே கேவல பகவத் இச்சையாலே விமாந கோபுர மண்டப ப்ராஸாதாதி ரூபேண பரிணமிக்கக் கடவதாய்) - சேதநன் தனது கர்மங்களுக்கு ஏற்றபடி விருப்பங்கள் கொள்கிறான்; அந்த விருப்பங்களுக்கு ஏற்ப ப்ரக்ருதியானது, பகவானின் ஸங்கல்பத்தால், இருபத்து நான்கு தத்வங்களாக விரிவடைந்து, சேதநர்களுக்கு “இனிமையாகவும், இன்பத்தை அனுபவிக்க உதவும் கருவியாகவும், இன்பம் அனுபவிக்கவல்ல இடமாகவும்” உள்ளது. இத்தகைய ப்ரக்ருதி போன்று அல்லாமல், பகவானுடைய இன்ப அனுபவத்திற்காக ஏற்பட்டதான, அவனுடைய விருப்பத்தால் விமானம், கோபுரம் முதலான வடிவங்களில் வெளிப்பட்டு நிற்பதான சுத்தஸத்வம் என்று கருத்து. தேவாநாம் பூரயோத்யா தஸ்யாம் ஹிரண்மய கோச: | யோ வை தாம் ப்ரஹ்மணோ வேத அம்ருதேநாவ்ருதாம் புரீம் – தேவர்களுடைய அந்த நகரமானது அயோத்தி என்று பெயர் கொண்டதாக உள்ளது; அங்கு ஸ்வர்ணமயமாக உள்ள நிதி உள்ளது; எந்த ஒருவன் ப்ரஹ்மத்தின் அமிர்தத்தால் சூழப்பட்ட அந்த நகரத்தை அறிகிறானோ - என்றும், அபராஜிதா பூர்ப்ரஹ்மண: - அந்த நகரமானது யாராலும் வெல்லப்பட இயலாதது – என்றும், சாந். (8-14-1) – ப்ரஜாபதேஸ் ஸபாம் வேச்மப்ரபத்யே - அந்த உபாஸகன் ஸபையின் உள்ளே புகுகிறான் - என்றும் உள்ள பல ச்ருதி வாக்கியங்களால், நித்யவிபூதியில் காணப்படும் திவ்யமான நகரம் மற்றும் திவ்யமான

இடங்கள் குறித்து சுருக்கமாகக் கூறப்பட்டது. இதனை பாஷ்யகாரர் தனது ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் – திவ்ய ஆவரண சத ஸஹஸ்ராவ்ருதே, திவ்ய கல்பகதரூப சோபிதே, திவ்ய உத்யாந சதஸஹஸ்ர கோடி பிராவ்ருதே அதிப்ரமாணே, திவ்யாயதநே கஸ்மிம்ச்சித் விசித்ர திவ்ய ரத்நமய திவ்ய ஆஸ்தாந மண்டபே – திவ்யமான நூறாயிரம் மதிள்களால் சூழப்பட்டும், திவ்யமான கற்பகமரம் கொண்டும், திவ்யமான நூறாயிரம் கோடி நந்தவனங்கள் உள்ளதாகவும், அளவிடப்பட இயலாதபடியும் உள்ள திவ்யமான இடத்தில், விசித்ரமான திவ்ய இரத்தினமயமான உள்ள திருமாமனி மண்டபத்தில் - என்று தொடங்கி விரிவாக அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** (நிரவதிக தேஜோ ரூபமாய்) அதாவது, அக்நி ஆதித்யாதி தேஜ பதார்த்தங்களையும கத்யோத்கல்பமாக்கும்படி அளவிறந்த தேஜஸே வடிவாயிருக்கை. "ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்நி:", "அத்யர்காநலதீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோ மஹாத்மந: ஸ்வயைவ ப்ரபயா ராஜந் துஷ்ப்ரேக்ஷம் தேவ தாநவை:" என்னக்கடவதிறே. "சுடரொளியாய் நின்ற தன்னுடைய சோதி", "கழிப்பட்டோடும் சுடர்ச்சோதி வெள்ளம்", "விளங்குஞ் சுடர்ச்சோதி" என்று ஆழ்வாரும் இதினுடைய நிரவதிக தேஜோ ரூபத்வத்தைப் பலவிடங்களிலும் அருளிச் செய்தாரிறே.

**விளக்கம் -** (நிரவதிக தேஜோ ரூபமாய்) - அதாவது அக்னி, ஆதித்யன் போன்றதான ஒளியுடன் கூடிய வஸ்துக்களைக் கூட மின்மினிப் பூச்சிகளுக்கு நிகராக மாற்றும்படியாக, அளவற்ற ஒளி வடிவாக இருத்தல், கட உபநிஷத் – ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்நி: - ப்ரஹ்மத்திடம் ஆதித்யன் ப்ரகாசிப்பதில்லை, சந்த்ரனும் தாரகைகளும் ப்ராசிப்பதில்லை, மின்னலும் அக்னியும் ப்ரகாசிப்பதில்லை - என்றும், மஹாபாரதம் – அத்யர்காநலதீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோ மஹாத்மந: ஸ்வயைவ ப்ரபயா ராஜந் துஷ்ப்ரேக்ஷம் தேவ தாநவை: - சூரியன், சந்திரன் மற்றும் அக்னி ஆகியவற்றைக் காட்டிலும் கோடி ஆதித்யனைப் போன்று ஒளியுடன் கூடிய மஹாவிஷ்ணுவின் பரமபதம் எனக் கொண்டாடப்படும் இடமானது, தனது தேஜஸ்ஸால், தேவர்கள் மற்றும் அஸுரர்களால் காணப்பட இயலாதபடி உள்ளது - என்றும் கூறப்பட்டது அல்லவோ? திருவாய்மொழி (3-10-5) – சுடரொளியாய் நின்ற தன்னுடைய சோதி – என்றும், திருவாய்மொழி (8-10-5) - கழிப்பட்டோடும் சுடர்ச்சோதி வெள்ளம் –

என்றும், திருவாய்மொழி (6-4-6) – விளங்குஞ் சுடர்ச்சோதி – என்றும் பலவிதமாக, நம்மாழ்வாரும் பரமபதத்தினுடைய எல்லையற்ற தேஜஸ் ரூபத்தைப் பல இடங்களில் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** (நித்யமுக்தராலும் ஈச்வரனாலும் பரிச்சேதிக்க அரிதாய்) அதாவது இதினுடைய பரிமாணாதிகள் ஒருவராலுமளவிட வொண்ணாதபடியிருக்குமாயிற்று. "தேஷாமபி இயத் பரிமாணம் இயதைச்வர்யம், ஈத்ருச ஸ்வபாவம் இதி பரிச்சேத்தும் அயோக்யே" என்று நித்யரால் பரிச்சேதிக்கவொண்ணாதென்று ஸ்ரீவைகுண்டகத்யத்திலே பாஷ்யகாரர் அருளிச்செய்தவிது முக்தருக்குமொக்குமிறே. ஈச்வர ஜ்ஞாநத்தோபாதி இவர்களுடைய ஜ்நாநத்துக்கும் ஸர்வதர்சித்வமுண்டாகையாலே; அவனால் பரிச்சேதிக்கலாமாகில், இவர்களாலும் பரிச்சேதிக்கலாமிறே; ஆகையால் அவனுக்குமரிது என்கை. ஆனால் இவர்களுடைய ஸர்வஜ்ஞதைக்குக் கொத்தை வாராதோ? என்னில், வாராது; ஸர்வஜ்ஞதையாவது ஸர்வத்தையுமுள்ளபடியறிகையிறே. பரிச்சேத்யமாகில் பரிச்சேதித்தறிகையும், அபரிச்சேத்யமாகில் அப்படியறிகையுமிறே உள்ளது. ஸீமையில்லாததொன்றுக்கு ஸீமையறியாமை ஸர்வஜ்ஞதைக்கு அநுகுணமென்னுமிடம் "தேவி த்வத் மஹிம் அவதி: ந ஹரிணா ந அபி த்வயா ஜ்ஞாயதே | யத்யபி ஏவம் அத அபி ந ஏவ யுவயோ: ஸர்வஜ்ஞதா ஹீயதே | யத் ந அஸ்தி ஏவ தத் அஜ்ஞதாம் அநுகுணாம் ஸர்வஜ்ஞதா: விது: | வ்யோம அம்போஜம் இதந்தயா கில விதந் ப்ராந்த: அயம் இதி உச்யதே" என்று ஸ்ரீஸ்தவத்திலே ஆழ்வானருளிச்செய்தார். இங்ஙனன்றாகில், "தனக்குந் தன் தன்மையறிவரியான்" என்கிறவிதுவும் ஸர்வஜ்ஞதையோடு விரோதிக்கும். ஆகையால், நித்ய முக்த ஈச்வரர்களால் அபரிச்சேத்யமென்றவிதில் குறையில்லை. இத்தால் இதினுடைய வைபவம் சொன்னபடி. (அத்யத்புதமாயிருப்பதொன்று) அத்யத்புதத்வமாவது அநுக்ஷணம் அபூர்வ ஆச்சர்யாவஹத்வம். "அநந்தாச்சர்யாநந்த மஹா விபவ" என்றாரிறே பாஷ்யகாரர். ஆக சுத்தஸத்வமாவது இப்படியிருப்ப தொன்றென்றதாயிற்று.

**விளக்கம் -** (நித்யமுக்தராலும் ஈச்வரனாலும் பரிச்சேதிக்க அரிதாய்) - இதனுடைய அளவானது யாராலும் அளந்து உரைக்கை இயலாதபடியாக உள்ளது. ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் - தேஷாமபி இயத் பரிமாணம் இயதைச்வர்யம், ஈத்ருச ஸ்வபாவம் இதி பரிச்சேத்தும் அயோக்யே - நித்யஸூரிகளால் கூட இத்தகைய அளவு கொண்டது, இத்தகைய ஐச்வர்யம் கொண்டது, இப்படிப்பட்ட இயல்பு கொண்டது என உரைக்க

இயலாதது - என்று நித்யஸூரிகளாலும் அளவிட்டுக் கூறமுடியாத நிலையை ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்தார்; இது முக்தர்களுக்கும் பொருந்தும். ஸர்வேச்வரனுடைய ஞானத்தைப் போன்றே இவர்களுடைய ஞானத்திற்கும், “அனைத்தையும் ஒரே நேரத்தில் காணலாம்” என்பதான தன்மை உள்ளது; ஆகவே அவனால் தனது பரமபதத்தை அளவிட்டுக் கூற இயலும் என்றால், இவர்களுக்கும் இயலும்; எனவே அவனாலும் இயலாது என்று கருத்து. ஆனால் இவ்விதம் கொண்டால், “அனைத்தையும் ஒரே நேரத்தில் அறியக்கூடிய ஞானம்“ என்பதற்கு இழுக்கு ஏற்படாதோ?”, என்று கேட்கலாம்; ஏற்படாது. அனைத்தையும் அறிதல் என்றால், “அனைத்தையும் உள்ளது உள்ளபடி அறிதல் என்பதாகும். அதாவது ஒன்றை அளவிட்டு அறிய இயலும் என்றால், அதனை அளவிட்டு அறிய இயலும்; ஒன்றை அளவிட்டு அறிய இயலாது என்றால், அவ்விதம் அறிய இயலாது என்றும் அறிதல்”, என்பதாகும். எல்லையற்ற ஒரு வஸ்துவின் எல்லையை அறிய இயலாது என்று அறிதலே அனைத்தையும் அறிந்த நிலை ஆகும்; இதனை ஸ்ரீஸ்தவம் (8) – தேவி த்வத் மஹிம் அவதி: ந ஹரிணா ந அபி த்வயா ஜ்ஞாயதே | யத்யபி ஏவம் அத அபி ந ஏவ யுவயோ: ஸர்வஜ்ஞதா ஹீயதே | யத் ந அஸ்தி ஏவ தத் அஜ்ஞதாம் அநுகுணாம் ஸர்வஜ்ஞதா: விது: | வ்யோம அம்போஜம் இதந்தயா கில விதந் ப்ராந்த: அயம் இதி உச்யதே - ஹே! ஸ்ரீரங்கநாச்சியாரே! உன்னுடைய மேன்மையின் எல்லையானது ஸ்ரீரங்கநாதனாலும் அறியப்படுவதில்லை. உன்னாலும் உனது மேன்மை என்பது எத்தன்மையது என்று அறியப்படுவதில்லை. இப்படி இருந்தாலும் நீங்கள் இருவரும் அனைத்தையும் அறியும் தன்மையில் எந்தவிதமான குறையும் இல்லாமல் உள்ளீர்கள். இதன் காரணம், எந்த ஒரு பொருளானது இல்லவே இல்லை என்பதை உணர்ந்து, அதனை அறிந்து கொள்ள முயலாமல் இருப்பதையே அனைத்தும் அறிந்த தன்மையாகச் சான்றோர்கள் அறிகிறார்கள். ஆகாயத்தாமரை, முயல்கொம்பு ஆகியவற்றை உள்ளதாக அறிபவன் பைத்தியக்காரன் என்றே உலகத்தினரால் கூறப்படுகிறான் – என்பதாக கூரத்தாழ்வான் அருளிச்செய்தார் அல்லவோ? இதனை ஏற்கவில்லை என்றால், திருவாய்மொழி (8-4-6) - தனக்குந் தன் தன்மையறிவரியான் – என்ற ஆழ்வார் வாக்கானது, “அனைத்தும் அறிபவன்” என்ற தன்மையையுடன விரோதிக்கும். எனவே நித்யர்கள் மற்றும் முக்தர்களால் அளவிட்டு உரைக்க இயலாது என்று உரைப்பது தவறில்லை இதன் மூலம் சுத்தஸத்வத்தின் வைபவம் கூறப்பட்டது. (அத்யத்புதமாயிருப்பதொன்று) – “அத்யத்புதம்” என்றால், எப்போதும், ஒவ்வொரு நொடியிலும், புதிதாகத் தோன்றியபடி உள்ளதால், வியப்பை ஏற்படுத்தும் தன்மையாகும். கத்யத்தில் - அநந்தாச்சர்யாநந்த மஹா விபவ – எல்லையற்ற வியப்பும் பெருமையும்

கொண்ட - என்று பாஷ்யகாரரும் உரைத்தார் அல்லவோ? எனவே சுத்தஸத்வம் என்பது இப்படியாக உள்ள ஒன்றாகும்.

80. இத்தைச் சிலர் ஜடமென்றார்கள், சிலர் அஜடமென்றார்கள்.

**வ்யாக்யானம் -** (இத்தைச் சிலர் ஜடமென்றார்கள், சிலர் அஜடமென்றார்கள்) அதாவது, இந்த சுத்தஸத்வம் தனனை இந்த தர்சநஸ்தர் தங்களிலே சிலர் ஜடமென்று சொன்னார்கள். அங்ஙனன்றிக்கே சிலர் அஜடமென்று சொன்னார்கள் என்கை. "இஹ ஜடாமாதிமாம் கேசிதாஹு:" என்றிறே அபியுக்தரும் சொல்லிற்று.

**விளக்கம் -** இத்தகைய சுத்த ஸத்வத்தை, ஸ்ரீவைஷ்ணவ தர்சனத்தை ஏற்கும் சிலர் "ஜடம்" என்றார்கள். அவ்விதம் அல்லாமல் ஒரு சிலர் "அஜடம்" என்றனர். தத்வமுக்தகலாபத்தில் - இஹ ஜடாமாதிமாம் கேசிதாஹு: - முதலாவதாக சுத்தஸத்வத்தை ஜடம் என்று சிலர் கூறுகிறார்கள் – என்று வேதாந்த தேசிகன் உரைத்தார்.

81. அஜடமானபோது, நித்யர்க்கும் முக்தர்க்கும் ஈச்வரனுக்கும் ஜ்ஞாநத்தையொழியவும் தோற்றும்.

**அவதாரிகை –** ஜடமாகையாவது, ஸ்வயம்ப்ரகாசமன்றிக்கேயிருக்கை; அஜடமாகை யாவது, ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கை; அத்தை அருளிச்செய்கிறார்.

**விளக்கம் -**ஜடம் என்றால் தானாகவே தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமை; அஜடம் என்றால் தானாகவே தன்னை வெளிப்படுத்தக் கொள்ளுதல் ஆகும். இதனை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** (அஜடமானபோது, நித்யர்க்கும் முக்தர்க்கும் ஈச்வரனுக்கும் ஜ்ஞாநத்தையொழியவும் தோற்றும்) என்று. அஜடமானபோது என்றது, ஜடமென்றும் ஒரு பக்ஷம் சொல்லுகையாலே அப்படியன்றிக்கே இப்படியானபோது என்றபடி. அந்த பக்ஷத்தை விட்டு இத்தை உபபாதிக்கையாலே, இவர் தமக்கு இதுவே திருவுள்ளமென்று

தோற்றாநின்றதிறே. ஜ்ஞானத்தையொழியவும் தோற்றுமென்றது, ஜ்ஞானத்தாலே தன்னையறிய வேண்டாதபடி, தானே ப்ரகாசிக்கும் என்றபடி.

**விளக்கம்** -"அஜடமானபோது" என்றால், "இதனை ஒரு சிலர் ஜடம் என்று கூறுவதால், அவ்விதம் அல்லாமல் அஜடம் என்று உள்ளபோது" என்று பொருள். அந்த வாதத்தை விடுத்து, இதனை அருளிச்செய்வதால், இதுவே இவருடைய திருவுள்ளத்திற்கு ஏற்புடையதாகிறது என்பது வெளிப்படுகிறது. (ஜ்ஞாநத்தையொழியவும் தோற்றும்) – வேறு ஒரு ஞானத்தால் அறிய வேண்டாதபடி, தானே தன்னை வெளிப்படுத்தவல்லது என்று பொருள்.

82. ஸம்ஸாரிகளுக்குத் தோற்றாது.

**அவதாரிகை** - இப்படி ஸ்வயம்ப்ரகாசமாயிருக்குமாகில ஸம்ஸாரிகளுக்கு ஜ்ஞாந வேத்யமாக வேண்டாதே, தானே தோற்ற வேண்டாவோ? என்கிற சங்கையிலே அருளிச்செய்கிறார்.

**விளக்கம்** - "இவ்விதம் தானே வெளிப்படுதல் என்பதாக இருந்தால், சுத்தஸத்வமானது இந்த லோகத்தில் உள்ளவர்களுக்கு ஞானத்தால் அறிதல் என்பது இன்றி, தானாகவே வெளிப்பட வேண்டாமோ?", என்ற சந்தேகத்திற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஸம்ஸாரிகளுக்குத் தோற்றாது) என்று. இதுதான் அபியுக்தராலே விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது எங்ஙனே? என்னில், த்ரிவித அசேதனங்க ளென்றெடுத்தவற்றில், ப்ரக்ருதியும் காலமும் ஜடங்கள்; சுத்தஸத்வமான த்ரவ்யத்தையும் ஜடமென்று சிலர் சொல்லுவார்கள். ஜடத்வமாவது ஸ்வயம்ப்ரகாசமன்றிக்கேயிருக்கை. பகவச் சாஸ்த்ராதி பராமர்சம் பண்ணினவர்கள், ஞானாத்மகத்வம் சாஸ்த்ர ஸித்தமாகையாலே சுத்தஸத்வ த்ரயத்தை ஸ்வயம்ப்ரகாசமென்பார்கள். இப்படி ஸ்வயம்ப்ரகாசமாகில் ஸம்ஸாரிகளுக்கு சாஸ்த்ர வேத்யமாக வேண்டாதே, தானே தோன்ற வேண்டாவோவென்னில் ஸர்வாத்மாக்களுடையவும் ஸ்வரூபமும் தர்மபூதஞானமும் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்க, ஸ்வரூபம் தனக்கே ஸ்வயம்ப்ரகாசமாய் வேறெல்லார்க்கும் ஞானாந்தர வேத்யமானாற் போலவும், தர்மபூதஞானம்

ஸ்வாச்ரயத்துக்கே ஸ்வயம்ப்ரகாசமாய் இதரர்க்கு ஸ்வயம்ப்ரகாசம் அல்லாதாப்போலவும் இதுவும் நியதவிஷயமாக ஸ்வயம்ப்ரகாசமானால் விரோதமில்லை. "யோ வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத: | தம் ப்ரணம்ய ஹரிம் சாஸ்த்ரம் ந்யாய தத்வம் ப்ரசக்ஷ்மஹே" என்கிறபடியே, தர்மபூதஞானத்தாலே ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரித்துக் கொண்டிருக்கிற ஈச்வரனுக்கு, சுத்தஸத்வ த்ரயம் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கிறபடி எங்ஙனேயென்னில், இவனுடைய தர்மபூதஞானம், திவ்யாத்ம ஸ்வரூபம் ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கிறாப்போலே, இதுவும் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கலாம். இப்படி நித்யருக்கும் துல்யம். விஷய ப்ரகாச காலத்திலே தர்மபூதஞானம் ஸ்வாச்ரயத்துக்கே ஸ்வயம்ப்ரகாசமானாற்போலே, முக்தருக்கும் அவ்வவஸ்தையிலே இதுவும் ஸ்வயம்ப்ரகாசமானால் விரோதமில்லை. தர்மபூதஞானத்தினுடைய ஸ்வாத்ம ப்ரகாசன சக்தியானது விஷய ப்ரகாசமில்லாத காலத்தில் கர்மவிசேஷங்களாலே ப்ரதிபத்தையானாப்போலே, சுத்தஸத்வத்தினுடைய ஸ்வாத்ம ப்ரகாசன சக்தியும் பத்ததசையில் ப்ரதிபத்தையாகையாலே, சுத்தஸத்வம் பத்தருக்கு ப்ரகாசியாதொழிகிறது. "தியஸ் ஸ்வயம்ப்ரகாசத்வம் முக்தெள ஸ்வாபாவிகம் யதா | பத்தே கதாசித் ஸம்ருத்தம் ததா அத்ராபி நியம்யதே"; இவ்வளவு அவஸ்தாந்தராபத்தி, விகாரி த்ரவ்யத்துக்கு விருத்தமன்று. ஆகையாலே ப்ரமாண ப்ரதிபந்நார்த்தத்துக்கு யுக்தி விரோதம் சொல்ல வழியில்லை - என்றிப்படி ரஹஸ்ய த்ரய ஸாரத்திலே ப்ரதிபாதிக்கையாலே.

**விளக்கம் -** இந்தக் கருத்தானது வேதாந்ததேசிகனால் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் விளக்கமாக உரைக்கப்பட்டது; எப்படி? மூன்று வகையான அசேதங்களில் ப்ரக்ருதியும், காலமும் ஜடப்பொருள்கள் ஆகும். ஒரு சிலர் சுத்தஸத்வத்தையும் ஜடப்பொருள் என்று கூறுவதுண்டு; ஜடப்பொருள் என்றால் தன்னைத்தானே வெளிப்படுத்த இயலாத பொருள் ஆகும். பாஞ்சராத்ரம் முதலான ஆகமங்களை ஆராய்ந்து கற்றவர்கள், சாஸ்த்ரங்களில் கூறப்பட்டபடி, சுத்தஸத்வம் என்பது ஞானம் பொருந்தியதாக உள்ளதால், ஜடம் அல்ல; தானாகவே வெளிப்படக்கூடியது என்பார்கள். இவ்விதம் (சுத்தஸத்வம்) தானாகவே வெளிப்படும் திறன் உள்ளது என்றால், சாஸ்த்ரங்கள் மூலம் அறியப்படவேண்டிய அவசியம் இல்லாதது என்றால், அது ஏன் ஸம்ஸாரத்தில் உள்ளவர்களுக்குப் புலப்படாமல் உள்ளது? இதற்கான விடை கூறுவோம். ஆத்மாவின் ஸ்வரூபமான ஞானமும், அதன் தர்மபூதஞானமும் தானாகவே வெளிப்படக்கூடியவை ஆகும். இதில் ஆத்மாவின் ஸ்வரூபம் என்பது அந்த ஆத்மாவிற்கு மட்டுமே வெளிப்படும், மற்றவர்களுக்கு

அவரவர்களின் தர்மபூதஞானம் வழியாகவே மற்ற ஆத்மாவின் ஸ்வரூபம் புலப்படும். ஆனால் தர்மபூதஞானம் என்பது அந்த ஆத்மாவிற்கு மட்டுமே புலப்படும், மற்றவர்களுக்கு அல்ல. இது போன்று, சுத்தஸத்வம் என்பது ஈச்வரன், நித்யர் மற்றும் முக்தர் ஆகியோருக்கு மட்டுமே தானாகவே வெளிப்படும்; மற்றவர்களுக்கு அல்ல. ஆக இந்தக் கருத்துக்களில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை. ந்யாய தத்வத்தின் மங்கள ச்லோகம் - யோ வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத: | தம் ப்ரணம்ய ஹரிம் சாஸ்த்ரம் ந்யாய தத்வம் ப்ரசக்ஷ்மஹே - எந்த ஒரு ஸர்வேச்வரன் அனைத்தையும் ஒரே நேரத்தில் தனது ஸ்வபாவம் காரணமாக அறிகிறானோ, அப்படிப்பட்ட ஹரியை வணங்கிவிட்டு ந்யாயதத்வம் என்ற இந்த சாஸ்த்ரத்தைக் கூறுகிறோம் - என்றது. இங்கு ஒரு கேள்வி எழலாம். சுத்தஸத்வமானது ஸர்வேச்வரனின் தர்மபூதஞானத்தாலேயே அவனுக்குப் புலப்படுகிறது; இப்படி உள்ளபோது, அவனுக்கு சுத்தஸத்வம் தானாகவே புலப்படுவதாகக் கூறுவது எப்படி? விடை அளிப்போம்; ஸர்வேச்வரனின் தர்மபூதஞானம் என்பது அவனது திவ்யமான ஸ்வரூபம் உட்பட அனைத்தையும் புலப்பட வைக்கிறது என்று கூறினோம்; ஆயினும் அவனது ஸ்வரூபம் தானாகவே வெளிப்படவல்லது என்று கூறவில்லையா? இது போன்று அவனுக்கு சுத்தஸத்வமும், தர்மபூதஞானம் வழியே வெளிப்பட்டாலும், தானாகவே வெளிப்படுவதாகவே கொள்ளவேண்டும். இது நித்யஸூரிகளுக்கும் பொருந்தும். ஒரு பொருளை உணர்த்தவல்ல காலத்தில், அந்த ஆத்மாவிற்கு தர்மபூதஞானம் தானாகவே தன்னை வெளிப்படுத்துவது போன்று, முக்தி அடைந்தவர்களுக்கு சுத்தஸத்வமானது தானாகவே தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும். இதில் எந்த முரண்பாடும் இல்லை. ஆனால் கர்மம் காரணமாக, ஒரு பொருளை உணர்த்தவேண்டிய நேரத்தில்கூட தர்மபூதஞானம் தடைபட்டு, தன்னை வெளிப்படுத்திக் கொள்ள இயலாமல் போகலாம். இது போன்றே ஸம்ஸார பந்தத்தில் உள்ளதால், சுத்தஸத்வம் என்பது தன்னைத் தானாகவே வெளிப்படுத்த இயலாமல் போகிறது. "தியஸ் ஸ்வயம்ப்ரகாசத்வம் முக்தௌ ஸ்வாபாவிகம் யதா | பத்தே கதாசித் ஸம்ருத்தம் ததா அத்ராபி நியம்யதே - மோக்ஷ காலத்தில் தானாகவே வெளிப்படும் தர்மபூதஞானமானது, ஸம்ஸார காலத்தில் சில நேரங்களில் தடைபட்டு உள்ளது; இது போன்றே சுத்தஸத்வ விஷயத்திலும் கொள்ளவேண்டும்". தொடர்ந்து மாற்றம் அடைந்தபடி உள்ள பொருள்கள் ஒரு சில நேரங்களில் ஒருவரால் ஏற்கவும்படலாம், நிராகரிக்கவும்படலாம்; மற்றவர்களும் அந்தப் பொருள் குறித்து இதே போன்று இருக்க வாய்ப்புண்டு. இதில் எந்தவிதமான

முரண்பாடும் இல்லை. ப்ரமாணங்களால் தளிவாக நிரூபிக்கப்பட்ட பொருள்களுக்கு உதாரணம் மூலம் முரண்பாடு கண்டு பிடிக்கவேண்டிய அவசியம் இல்லை.

83. ஆத்மாவிலும் ஜ்ஞாநத்திலும் பிந்நமானபடியென் னென்னில்;

**அவதாரிகை** – கீழே, ஆத்மாவும் அஜடமாய், ஜ்ஞாநமும் அஜடமாயிருக்கச் செய்தே, அந்யோந்யம் பின்னமென்னுமித்தை தர்சிப்பித்தாப்போலே சுத்தஸத்வமும் அஜடமாயிருக்கச்செய்தே, இவையிரண்டிலும் பின்னமாயிருக்கும்படியை தர்சிப்பிக்கைக்காக தஜ்ஜிஜ்ஞாஸு ப்ரச்நத்தை அநுவதிக்கிறார்.

**விளக்கம் -**ஆத்மாவும் அஜடமாகவும், தர்மபூதஞானமும் அஜடமாகவும் இருந்தபோதிலும், இவை ஒன்றுக்கொன்று தனித்தனியாக உள்ளதை மேலே உரைத்தார். இதனைப் போன்றே, சுத்தஸத்வமானது அஜடமாக உள்ளபோதிலும், இதுவும் ஞானம் மற்றும் ஆத்மா ஆகியவையும் தனித்தனியாக உள்ள விதத்தைக் காண்பிப்பதற்காக இதனைக் குறித்து அறிந்து கொள்ள விரும்புபவர்கள் எழுப்பக்கூடிய வினாவை இங்கு தானாகவே எழுப்புகிறார்.

**வ்யாக்யானம் -** (ஆத்மாவிலும் ஜ்ஞாநத்திலும் பின்னமானபடியென்? என்னில்) என்று.

**விளக்கம் -** சுத்தஸத்வமானது, ஆத்மா மற்றும் ஞானம் ஆகியவற்றைக் காட்டிலும் எவ்விதம் வேறுபட்டது என்றால்… (அடுத்த சூர்ணையில் தொடர்கிறார்).

84. நானென்று தோற்றாமையாலும், சரீரங்களாய் பரிணமிக்கையாலும், விஷயங்களை யொழியவும் தானே தோற்றுகையாலும், சப்த ஸபர்சாதிகளுண்டாகையாலும் பிந்நமாகக் கடவது.

**அவதாரிகை** - அநேக ஹேதுக்களாலே அதுதன்னை தர்சிப்பிக்கிறார் "நானென்று தோற்றாமையாலும்" என்று தொடங்கி.

**விளக்கம் -** கடந்த சூர்ணையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, பல காரணங்கள் மூலம் விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது ஆத்மவஸ்து ப்ரத்யக்காகையாலே அஹமென்று ப்ரகாசியா நிற்கும்; இது பராக்காகையாலே இதமென்றிறே ப்ரகாசிப்பது. இத்தாலே ஆத்மாவில் பின்னமென்றபடி. சரீராதிகளாய் பரிணமிக்கையாலே ஆத்மாவிலும் ஜ்ஞானத்திலும் இரண்டிலும பின்னமென்றபடி. ஏகரூபனாகையாலே ஆத்மாவுக்கு பரிணாமமில்லையிறே. ஜ்ஞாநத்துக்கு பரிணாமமுண்டேயாகிலும், சரீராதிகளாய் பரிணமியாதிறே. விஷய நிரபேக்ஷமாக ப்ரகாசிக்கையாலும், சப்த ஸ்பர்சாதிகளுக்கு ஆச்ரயமாகையாலும் விஷய ஸந்நிதியிலொழிய ப்ரகாசிப்பதும் செய்யாதே, சப்தாத்யாச்ரயமன்றிக்கே தத் க்ராஹகமாயிருக்கிற ஜ்ஞாநத்தில் பின்னமென்றபடி.

**விளக்கம் -** ஆத்ம வஸ்துவானது தானாகவே தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவல்லது என்பதால் “நான்” என்று புலப்பட்டபடி இருப்பதாகும்; ஆனால் சுத்தஸத்வமானது தானாகவே தன்னை வெளிப்படுத்தாதது என்பதால் “அது” என்று புலப்பட்டபடி இருக்கும். இதன் விளைவாக, சுத்தஸத்வமானது ஆத்மாவைக் காட்டிலும் வேறுபட்டதாக உள்ளது. சரீரம் போன்றவையாக வெளிப்படுவதால் ஆத்மா மற்றும் ஞானம் ஆகிய இரண்டைக் காட்டிலும் வேறுபட்டதாகும். ஒரே ரூபமாக உள்ள ஆத்மாவிற்குப் பரிணாமம் இல்லை. ஞானத்திற்குப் பரிணாமங்கள் உண்டு என்றாலும், சரீரம் போன்றவையாக பரிணமிக்காது. எந்தவிதமான விஷயங்களையும் எதிர்பாராமல் வெளிப்படுவதாலும், “ஓசை, தொடு உணர்ச்சி” போன்ற பலவற்றுக்கும் இருப்பிடமாக உள்ளதாலும், விஷயங்கள் இருந்தால் அல்லாமல் வெளிப்படுவது என்பது செய்யாமல், ஓசை போன்றவற்றுக்கு இடமாக இல்லாமல் அவற்றை கிரஹிப்பதாலும், ஞானத்திலிருந்து வேறுபட்டதாகும்.

85. மிச்ரஸத்வமாவது, ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்கள் மூன்றோடுங்கூடி பத்தசேதனருடைய ஜ்ஞாநாநந்தங்களுக்கு திரோதாயகமாய், விபரீத ஜ்ஞாந ஜநகமாய், நித்யமாய், ஈச்வரனுக்கு க்ரீடாபரிகரமாய், ப்ரதேச பேதத்தாலும் காலபேதத்தாலும் ஸத்ருசமாயும் விஸத்ருசமாயுமிருக்கும் விகாரங்களையுண்டாக்கக் கடவதாய், “ப்ரக்ருதி, அவித்யை, மாயை”யென்கிற பேர்களையுடைத்தாயிருக்கும் அசித்விசேஷம்.

**அவதாரிகை** - ஆகவிப்படி சுத்தஸத்வத்தினுடைய ப்ரகாரத்தை அருளிச்செய்தாராய் நின்றார் கீழ்; அநந்தரம், மிச்ரஸத்வ ப்ரகாரத்தை அருளிச்செய்வதாக (மிச்ரஸத்வமாவது) என்று தொடங்குகிறார்.

**விளக்கம்** - இப்படியாக இதுவரை சுத்தஸத்வத்தின் தன்மைகளை அருளிச்செய்தார். அடுத்ததாக ரஜஸ் மற்றும் தமஸ் கலந்த ஸத்வத்தின் தன்மைகளை அருளிச்செய்யத் தொடங்குகிறார்.

**வ்யாக்யானம்** - (மிச்ரஸத்வமாவது) ரஜஸ் தமஸ்ஸுக்களோடே கூடின ஸத்வகுணத்தை யுடைத்தானது. அத்தை அருளிச்செய்கிறார் "ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்கள் மூன்றோடுங் கூடி" என்று. "த்ரிகுணம் தஜ்ஜகத் யோநிரநாதி ப்ரபவாப்யயம்", "த்ரிகுணம் கர்மிணாம் க்ஷேத்ரம் ப்ரக்ருதே ரூபமுச்யதே", "ஸத்வம் ரஜஸ் தம இதி குணா: ப்ரக்ருதி ஸம்பவா:" எனனக் கடவதிறே.

**விளக்கம்** - (மிச்ரஸத்வமாவது) - ரஜஸ் மற்றும் தமஸ் ஆகியவற்றுடன் கூடிய ஸத்வகுணத்தைக் கொண்டது. அதனை, "ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்கள் மூன்றோடுங் கூடி" என்று அருளிச் செய்கிறார். ஸ்ரீவிபு. (1-2-23) – த்ரிகுணம் தஜ்ஜகத் யோநிரநாதி ப்ரபவாப்யயம் - மூன்று குணங்களுடன் கூடிய ப்ரக்ருதியானது இந்த ஜகத்தின் பிறப்பிடமாக அநாதியாக உள்ளது – என்றும், பரமஸம்ஹிதை - த்ரிகுணம் கர்மிணாம் க்ஷேத்ரம் ப்ரக்ருதே ரூபமுச்யதே - மூன்று குணங்களுடன் கூடிய இந்தச் சரீரமானது கர்மங்கள் அனைத்தையும் அனுபவிக்கவல்ல ரூபமாக உள்ளது என ப்ரக்ருதியானது கூறப்படுகிறது - என்றும், கீதை (14-5) - ஸத்வம் ரஜஸ் தம இதி குணா: ப்ரக்ருதி ஸம்பவா: - ஸத்வம், ரஜஸ், தமஸ் என்பதாக உள்ள ப்ரக்ருதியிலிருந்து உண்டான மூன்று குணங்களும் – என்றும் கூறப்பட்டன.

**வ்யாக்யானம்** - (பத்தசேதநருடைய ஜ்ஞாநாநந்தங்களுக்கு திரோதாயகமாய்) அதாவது குணத்ரயாத்மகமாயிருக்கையாலே, ரஜஸ் தமோம்சத்தாலே ஜ்ஞாநாதிகளுக்கு திரோதாநத்தைப் பண்ணுமென்கை. சேதநருடைய ஜ்ஞாநாநந்தங்களுக்கு திரோதாயகமாயென்று ஸாமாந்யேந சொல்லாதே, "பத்த சேதநருடைய" என்று

விசேஷிக்கையாலே, கர்மஸம்ஸ்ருஷ்டரான சேதநருடைய ஜ்ஞாநாதிகளுக்கே அது திரோதாயகமென்றபடி. அல்லது, ஐச்சிகமாக ப்ராக்ருத சரீர பரிக்ரஹம் பண்ணுகிற நித்ய முக்தருடைய ஜ்ஞாநாதிகளுக்கும் இது ஸங்கோசத்தைப் பண்ணவேண்டி வருமிறே. ஆகையாலே "அஹ்ருத ஸஹஜ தாஸ்யா: ஸூரய: ஸ்ரஸ்த பந்தா: விமல சரம தேஹா: இதி அமீ ரங்கதாம | மஹித மநுஜ திர்யக் ஸ்த்தாவரத்வா: ச்ரயந்தே", என்கிறபடியே, நித்ய முக்தரும் இங்கே வந்து ப்ராக்ருத தேஹங்களைப் பரிக்ரஹித்து சேஷிக்கு அதிசயத்தைப் பண்ணுமளவில் அவர்களுக்கிது ஸங்கோசத்தைப் பண்ணாமையாலே, பத்த சேதநருடைய ஜ்ஞாநாதிகளுக்கே இது திரோதாயகமென்னுமிடம் ஸித்தம். "அநீசயா சோசதி முஹ்யமாந:", "அநாதி மாயயா ஸுப்த:", "பகவந் மாயா திரோஹித ஸ்வப்ரகாச:" என்னக்கடவதிறே.

**விளக்கம்** -(பத்தசேதநருடைய ஜ்ஞாநாநந்தங்களுக்கு திரோதாயகமாய்) - மூன்று குணங்களுடன் கூடியதாக உள்ளதால் ரஜஸ் மற்றும் தமஸ் ஆகிய பகுதிகளின் விளைவாக ஞானம் முதலானவற்றில் மறைவை ஏற்படுத்துகிறது. இங்கு, "சேதநர்களுடைய ஞானம், ஆனந்தம் போன்றவற்றுக்கு மறைவை ஏற்படுத்துகிறது" என்று பொதுவாக உரைக்காமல், "ஸம்ஸாரத்தில் பந்தப்பட்ட சேதநருடைய" என்று சிறப்பித்துக் கூறப்பட்டது; ஆகவே இத்தகையை மறைவு என்பது, கர்மஸம்பந்தம் கொண்டுள்ள சேதநர்களுடைய ஞானம் முதலானவற்றுக்கு மட்டுமே ஆகும் என்றாகிறது. அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். நித்யர்கள் மற்றும் முக்தர்கள், தங்களுடைய விருப்பத்தினால் கூட இந்த லோகத்தில் சரீரங்களை எடுக்கலாம்; அப்போது அவர்களுடைய ஞானம் மற்றும் ஆனந்தம் போன்றவற்றுக்கு இத்தகைய சுருக்கம் ஏற்படலாம் அல்லவோ? இதற்குச் சமாதானம் கூறும்விதமாக, ஸ்ரீரங்கராஜஸ்தவம் (1-33) - அஹ்ருத ஸஹஜ தாஸ்யா: ஸூரய: ஸ்ரஸ்த பந்தா: விமல சரம தேஹா: இதி அமீ ரங்கதாம | மஹித மநுஜ திர்யக் ஸ்த்தாவரத்வா: ச்ரயந்தே - கைங்கர்யம் என்ற செல்வத்தை இயற்கையாகவே உடைய நித்யஸூரிகள், ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபட்ட முக்த ஜீவன்கள் மற்றும் அடுத்து வரும் பிறவிகள் இனி இல்லை என்பது போன்றுள்ள முமுக்ஷுக்கள் ஆகிய அனைவரும் மனிதப்பிறவி, பசு முதலான பிறவி, தாவரங்களாகப் பிறவி முதலானவற்றை ஏற்று – என்பதற்கு ஏற்ப, நித்யர்கள் மற்றும் முக்தர்கள் இந்த உலகிற்கு வந்து, இந்த உலகியல் சரீரங்களை எடுத்து, தங்களுடைய எஜமானனாகிய ஸர்வேச்வரனுக்கு மேன்மையை உண்டாக்குவிதமாக உள்ளபோது, அவர்களுக்கு இத்தகைய சுருக்கங்கள் உண்டாவதில்லை; எனவே

இத்தகைய மறைவு என்பது, பந்தத்தில் உள்ள சேதநர்களுக்கு மட்டுமே ஆகும் என்பது புலப்படுகிறது. முண். (3-1-2) - அநீசயா சோசதி முஹ்யமாந: - ப்ரக்ருதியால் மறைக்கப்பட்டு – என்றும், மாண்டூக்யம் - அநாதி மாயயா ஸுப்த: - எல்லையற்ற காலமாகத் தொடரும் மாயையால் மயக்கம் கொண்டு – என்றும், கத்யத்தில் – பகவந் மாயா திரோஹித ஸ்வப்ரகாச: - பகவானுடைய மாயையால் மறைக்கப்பட்ட ஸ்வரூபம் கொண்டவனாக - என்றும் கூறப்படுவது காண்க.

**வ்யாக்யானம் -** (விபரீத ஜ்ஞாந ஜநகமாய்) விபரீத ஜ்ஞாநமாவது, அதஸ்மிந் தத் புத்தி:, அதாவது அநாத்மாவான தேஹத்தில் ஆத்மபுத்தியும் அஸ்வதந்த்ரமான ஆத்மவஸ்துவில் ஸ்வதந்த்ரபுத்தியும், அநந்ய சேஷமானவதுதன்னில் அந்ய சேஷத்வ புத்தியும், அநீச்வரரானவர்கள் பக்கல் ஈச்வரத்வ புத்தியும், அபுருஷார்த்தமான ஐச்வர்யாதிகளிலே புருஷார்த்தத்வ புத்தியும், அநுபாயங்களானவற்றில் உபாயத்வ புத்தியும் தொடக்கமானவை. யதா ஜ்ஞாநத்தை மறைக்குமளவன்றிக்கே இப்படியிருந்துள்ள விபரீத ஜ்ஞாநங்களையும் பத்தசேதநர்க்கு உண்டாக்கா நிற்குமாயிற்று. "பகவத் ஸ்வரூப திரோதாநகரீம் விபரீத ஜ்ஞாந ஜநநீம்" என்று இது தன்னை பாஷ்யகாரர் அருளிச்செய்தாரிறே.

**விளக்கம் -** (விபரீத ஜ்ஞாந ஜநகமாய்) – "விபரீத ஞானம்" என்றால், உண்மைக்கு மாறாக அறிதல் என்று பொருள். அதாவது ஆத்மா அல்லாத சரீரத்தை ஆத்மா என்று எண்ணுதல், சுதந்திரம் அற்றதான ஆத்மாவைச் சுதந்திரமானது என்று எண்ணுதல், மற்றவர்களுக்கு அடிமை அல்லாத தன்னை மற்றவர்களுக்கு அடிமை என்று எண்ணுதல், ஈச்வரர்கள் அல்லாதவர்களை ஈச்வரர்கள் என்று எண்ணுதல், புருஷார்த்தம் அல்லாத ஐச்வர்யம் போன்றவற்றைப் புருஷார்த்தங்களாக எண்ணுதல், உபாயங்கள் அல்லாதவற்றை உபாயங்களாக எண்ணுதல் என்பது தொடக்கமாக உள்ளவை ஆகும். உண்மையான ஞானமானது பந்தப்பட்ட சேதநர்களுக்கு மறைக்கப்படுவது மட்டும் அல்லாமல், இது போன்ற விபரீத ஞானமும் ஏற்படுகிற்து. கத்யத்தில் - பகவத் ஸ்வரூப திரோதாநகரீம் விபரீத ஜ்ஞாந ஜநநீம் - பகவானுடைய ஸ்வரூபத்தை மறைப்பதாகவும், விபரீத ஞானத்தைப் பிறக்கச் செய்வதாகவும் உள்ள ப்ரக்ருதி - என்று பாஷ்யகாரர் அருளிச்செய்தார் அல்லவோ?

**வ்யாக்யானம் -** (நித்யமாய்) அதாவது உத்பத்தி விநாச ரஹிதமாயிருக்கை. "அஜாமேகாம்", "கௌரநாத்யந்தவதீ ஸா ஜநித்ரீ பூதபாவிநீ", "அசேதநா பரார்த்தா ச நித்யா ஸதத விக்ரியா", "விகார ஜநநீமஜ்ஞாமஷ்டரூபாமஜாம் த்ருவாம்" என்னக்கடவதிறே.

**விளக்கம் -** (நித்யமாய்) - உற்பத்தி மற்றும் அழிவு இல்லாமல் இருத்தல். அஜாமேகாம் - பிறப்பற்றதும் ஒன்றாக உள்ளதும் ஆகிய ப்ரக்ருதி - என்றும், கௌரநாத்யந்தவதீ ஸா ஜநித்ரீ பூதபாவிநீ - ப்ரக்ருதியானது தொடக்கம் மற்றும் முடிவு அற்றது; கண்களுக்குத் தென்படாதவற்றையும் தென்படுவதையும் உண்டாக்குகிறது - என்றும், பரமஸம்ஹிதை - அசேதநா பரார்த்தா ச நித்யா ஸதத விக்ரியா - அறிவற்றதும் மற்றவர்களுக்காகவே உள்ளதும் நித்யமானதும் மாற்றம் உடையதும் - என்றும், விகார ஜநநீம் அஜ்ஞாம் அஷ்டரூபாம் அஜாம் த்ருவாம் - மாற்றத்திற்கு இடமாகவும், ஞானம் அற்றதாகவும், எட்டு உருவம் கொண்டதாகவும் பிறப்பற்றதாகவும் உறுதியானதாகவும் – என்றும் கூறப்பட்டது.

**வ்யாக்யானம் -** (ஈச்வரனுக்கு க்ரீடா பரிகாரமாய்) அதாவது ஸர்வேச்வரனுடைய ஜகத் ஸ்ருஷ்ட்யாதி லீலைக்கு உபகரணமாயிருக்கை. "க்ரீடதோ பாலகஸ்யேவ சேஷ்டாம் தஸ்ய நிசாமய", "அப்ரமேயோ நியோஜ்யச்ச யத்ர காமகமோவசீ | மோததே பகவாந் பூதைர் பால: க்ரீடநகைரிவ", "த்வம் ந்யஞ்சத்பிருதஞ்சத்பி: காம ஸூத்ரோபபாதிதை: | ஹரே விஹரஸி க்ரீடாகந்துகைரிவ ஜந்துபி:" என்று சொல்லப்படுகிற, ஸர்வேச்வரனுடைய லீலைக்கு குணத்ரயாத்மிகையான ப்ரக்ருதியிறே ப்ரதாநோபகரணம். "ஸிதாஸிதா ச ரக்தா ச ஸர்வகாமதுகா விபோ:" என்னக்கடவதிறே. "தைவீ ஹ்யேஷா குணமயீ" என்று தானே அருளிச்செய்தானிறே.

**விளக்கம் -** (ஈச்வரனுக்கு க்ரீடா பரிகாரமாய்) - ஸர்வேச்வரனுடைய ஜகத் ஸ்ருஷ்டி முதலான பல லீலைகளுக்கு ஏற்ற கருவியாக உள்ளது. ஸ்ரீவிபு. (1-2-18) - க்ரீடதோ பாலகஸ்யேவ சேஷ்டாம் தஸ்ய நிசாமய - விளையாடி மகிழும் பாலர்கள் போன்று, மஹாவிஷ்ணுவின் லீலைகளைக் காண்பாய் – என்றும், ஸ்ரீவிபு. (1-2-20) - அப்ரமேயோ நியோஜ்யச்ச யத்ர காமகமோவசீ | மோததே பகவாந் பூதைர் பால: க்ரீடநகைரிவ - அளவிட இயலாதவனும், அனைத்துவிதமான இன்பங்களையும் அடையப் பெற்றவனும், அனைவரையும் வசப்படுத்துபவனும் ஆகிய பகவான், இவை

அனைத்தையும், சிறுவர்கள் உபயோகிக்கும் விளையாட்டுக் கருவிகள் போன்று பயன்படுத்துகிறான் - என்றும், ஸ்ரீவிஷ்ணுதர்மம் - த்வம் ந்யஞ்சத்பிருதஞ்சத்பி: காம ஸூத்ரோபபாதிதை: | ஹரே விஹரஸி க்ரீடாகந்துகைரிவ ஜந்துபி: - தாழ்ந்தும் உயர்ந்தும் காணப்படுவதன் வினைகள் என்ற கயிறு கொண்டு கட்டப்பட்ட இந்த மனிதர்களைப் பந்தாகக் கொண்டு நீ விளையாடுகிறாய் - என்றும் கூறப்படுகிற ஸர்வேச்வரனுடைய விளையாட்டுக்களுக்கு, மூன்று குணங்களுடன் கூடியதான இந்த ப்ரக்ருதியானது, ஏற்ற கருவியாக உள்ளது அல்லவோ? ஸிதாஸிதா ச ரக்தா ச ஸர்வகாமதுகா விபோ: - வெண்மையும், கருமையும், சிவந்தும் உள்ள ப்ரக்ருதியானது பகவனுக்கு இன்பம் அளிப்பதாக உள்ளது - என்று கூறப்பட்டது. கீதையில் (7-14) - தைவீ ஹ்யேஷா குணமயீ – எனது இந்த மூன்று குணங்கள் - என்று பகவன் தானே அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (ப்ரதேச பேதத்தாலும், காலபேதத்தாலும் ஸத்ருசமாயும், விஸத்ருசமாயு மிருக்கும் விகாரங்களை யுண்டாக்கக் கடவதாய்) ப்ரதேச பேதமாவது, குண வைஷம்ய மில்லாத ப்ரதேசமும் குண வைஷம்யமுள்ள ப்ரதேசமும். இது தனக்கு குணவைஷம்ய முள்ளது, கார்யோந்முகமான ஸ்தலத்திலேயிறே. அல்லாதவிடமெல்லாம் குண ஸாம்யாபந்நமாயிருக்குமித்தனை. அதில், குணவைஷம்யமில்லாதவிடம் ஸத்ருச விகாரமாயிருக்கும். வைஷம்யமுள்ளவிடம் விஸத்ருச விகாரமாயிருக்கும். ஸத்ருச விகாரமாவது, நாம ரூப விபாகாதேசாநர்ஹமாயிருக்கும் ஸூக்ஷ்மவிகாரம். விஸத்ருச விகாரமாவது, நாம ரூப விபாக நிர்தேச யோக்யமாயிருக்கும் ஸ்தூல விகாரம். “குண ஸாம்ய மநுத்ரிக்தமந்யூநம்” என்கையாலே, அவ்யக்தாவஸ்தையிலுள்ள விகாரமெல்லாம் ஸத்ருசமாயிருக்கும்; மஹதாதி விஸத்ருச விகாரமாயிருக்கும்.

**விளக்கம் -** (ப்ரதேச பேதத்தாலும், காலபேதத்தாலும் ஸத்ருசமாயும், விஸத்ருசமாயு மிருக்கும் விகாரங்களை யுண்டாக்கக் கடவதாய்) - “ப்ரதேச பேதம் = இருப்பிட வேறுபாடு” என்றால் குணங்களின் ஏற்றத்தாழ்வு இல்லாத இடம் மற்றும் அவற்றின் ஏற்றத்தாழ்வு உள்ள இடம் ஆகும். கார்ய நிலையான ஸ்தூல நிலையில் மூன்று குணங்களுக்கு ஏற்றத்தாழ்வு உள்ளது; அது இல்லாத இடத்தில், அனைத்து குணங்களும் ஒரே போன்று உள்ளன. குணங்களின் ஏற்றத்தாழ்வு இல்லாத இடமானது, ஒரே போன்று மாறுதல்கள் கொண்டதாக இருக்கும். அவற்றில் ஏற்றதாழ்வு உள்ள இடமானது, வெவ்வேறு மாறுதல்கள் கொண்டதாக இருக்கும். ஒரே போன்று மாறுதல்கள் கொண்ட

நிலை என்பது பெயர் மற்றும் உருவம் ஆகியவை இன்னவை என்று பிரித்துக் கூற இயலாதபடி உள்ள ஸூக்ஷ்ம நிலையாகும். வெவ்வேறு மாறுதல்கள் கொண்ட நிலை என்பது, பெயர் மற்றும் உருவம் ஆகியவற்றைத் தனித்தனியே பிரித்துக் கூறத் தகுதியாக உள்ள ஸ்தூல நிலையாகும். "குண ஸாம்ய மநுத்ரிக்தமந்யூநம் - கண்ணுக்குப் புலப்படாத அவ்யக்த நிலையில் குணங்கள் சமமாகவும், அதிகமாகவோ குறைவாகவோ இன்றியும் உள்ளன", என்று கூறப்படுவதால், அவ்யக்த நிலையில் உள்ள மாறுதல்கள் அனைத்தும் ஒரே போன்று உள்ளன. மஹத் முதலான நிலைகளில் மாறுதல்கள் வெவ்வேறாக உள்ளன.

**வ்யாக்யானம் –** இனி, காலபேதமாவது ஸம்ஹாரகாலமும், ஸ்ருஷ்டி காலமும். ஸம்ஹார காலத்தில் இது அவிபக்த தமஸ்ஸாய்க் கிடக்கையாலே ஓரிடத்திலும் குண வைஷம்யமில்லாமையால் எங்குமொக்க ஸத்ருச விகாரமாயிருக்கும். ஸ்ருஷ்டி காலத்திலே பகவததிஷ்டான விசேஷத்தாலே விபக்தமாய், கார்யோந்முகமாய், குண வைஷம்யம் பிறந்தவாறே விஸத்ருச விகாரத்தையுடைத்தாகா நிற்கும், ஸதத விகா ராஸ்பதமா யிருக்கையாலே, அதுக்கு ஸத்தாப்ரயுக்தமிறே விகாரம். அதினுடைய ஸௌக்ஷ்ம்யாஸௌக்ஷ்ம்ய நிபந்தநமான விபாக நிர்தேசமிறே உள்ளது. அல்லது நிர்விகாரமாயிருப்பதோரவஸ்தையும் இல்லையிறே. (ப்ரக்ருதி, அவித்யை, மாயை என்கிற பேர்களை உடைத்தாயிருக்கும் அசித் விசேஷம்) மிச்ரஸத்வமாவது இப்படி இருப்பதோர் அசித் விசேஷமென்று வாக்யாந்வயம்.

**விளக்கம் -** அடுத்து காலபேதம் என்பது, ஸம்ஹார காலம் மற்றும் ஸ்ருஷ்டி காலம் ஆகும். ப்ரளயகாலத்தில் இந்த மிச்ர ஸத்வமானது, பெயர் மற்றும் ரூபம் போன்ற வேறுபாடுகள் கொண்டதாக பிரித்துக் காண இயலாதபடி இருளாகக் கிடப்பதால், எந்த ஒரு இடத்திலும் குணங்களில் வேறுபாடுகள் இல்லாமல் உள்ளது; ஆகவே அனைத்து இடங்களிலும் ஒரே போன்று, ஒரே மாறுதலுடன் உள்ளது. ஸ்ருஷ்டி காலத்தில், பகவான் அதன் உட்புகுந்த நிலையில், கண்களுக்குப் புலப்படத்தக்கதாகவும், கார்யம் ஏற்பட ஏற்றதாகவும், குணங்களில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டதால் அவை மாறுதல்கள் கொண்டதாகவும் மிச்ர ஸத்வம் உள்ளது. எப்போதும் மாற்றத்திற்கு இருப்பிடமாக உள்ளதால், மிச்ர ஸத்வத்தின் இருப்பு என்பதும் மாற்றத்துடன் கூடியதாகவே உள்ளது. உருவம் அற்ற நிலை மற்றும் ரூபத்துடன் கூடிய நிலை ஆகியவையே வேறுபாடு என்ற தன்மையாக உள்ளது.

இவ்விதம் அல்லாமல், மிச்ரஸத்வத்திற்கு மாற்றம் இல்லாத நிலையும் இல்லை அல்லவோ? (ப்ரக்ருதி, அவித்யை, மாயை என்கிற பேர்களை உடைத்தாயிருக்கும் அசித் விசேஷம்) – "மிச்ர ஸத்வம் என்பது இவ்விதம் உள்ளதான ஓர் அசித் நிலை" என்று படிக்கவேண்டும் .

87. ப்ரக்ருதியென்கிறது விகாரங்களைப் பிறப்பிக்கையாலே; அவித்யையென்கிறது ஜ்ஞாந விரோதியாகையாலே; மாயையென்கிறது விசித்ர ஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே.

**அவதாரிகை** - ப்ரக்ருத்யாதி நாமபேதங்கள் இதினுடைய ஸ்வபாவங்களைப் பற்ற வந்ததென்கிறார் (ப்ரக்ருதியென்கிறது) என்று தொடங்கி.

**விளக்கம்** - ப்ரக்ருதி முதலான பெயர் வேறுபாடுகள் பலவும் மிச்ரஸத்வத்தின் இயல்பு காரணமாக வந்தவை ஆகும் என்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "மூலப்ரக்ருதிர்விக்ருதி" இத்யாதிகளிலே ப்ரக்ருதி சப்தம் காரணவாசியாகச் சொல்லப்பட்டதிறே, இதுதான் உபாதாந காரணத்துக்கே வாசகம். ஆகையிறே ப்ரஹமத்தினுடைய ஜகதுபாதாநத்வத்தைச் சொல்லுகிற ஸூத்ரகாரர், "ப்ரக்ருதிச்ச ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தாநுபரோதாத்" என்று, ப்ரக்ருதி சப்தத்தாலே சொல்லிற்று. ஆகையால், இத்தை ப்ரக்ருதியென்கிறது மஹதாதி விகாரங்களைத் தன்பக்கலில் நின்றும ஜநிப்பிக்கையாலே. அவித்யா சப்தம், வித்யாபாவத்துக்கும் வித்யேதரத்துக்கும், வித்யாவிரோதிக்கும் வாசகமாயிருந்ததேயாகிலும், விஷயா நுகுணமாயிறே ப்ரயோகமிருப்பது. ஆகையால் இத்தை அவித்யை என்கிறது, ஜ்ஞாந விரோதியாகையாலே. "ஜ்ஞாநாநந்தங்களுக்குத் திரோதாயகமாய்" என்று இதினுடைய ஜ்ஞாந விரோதித்வம்தான் கீழே சொல்லப்பட்டதிறே. அஸுர ராக்ஷஸாதி க்ரியைகளை, ஆச்சரியகரத்வததைப் பற்ற மாயாசப்தத்தாலே சொல்லுகிறாப்போலே இத்தையும் மாயை என்கிறது, விசித்ர ஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே; அதாவது, ஒன்று போலொன்றன்றிக்கே, விஸ்மயநீயங்களான கார்யங்களை ஜநிப்பிக்கை.

**விளக்கம்** - “மூலப்ரக்ருதிர்விக்ருதி - மூலப்ரக்ருதியானது ஜகத் உண்டாகக் காரணமாக இருக்கிறது” என்பது போன்ற வாக்கியங்களில், ப்ரக்ருதி என்ற சொல்லானது காரணப் பொருளைக் கூறும்விதமாக உள்ளது. ஆனால் இது உபாதானக் காரணத்தைக் கூறும் வாசகமாக மட்டுமே உள்ளது இதனால்தான், ப்ரஹ்மத்திற்கு மட்டுமே ஜகத்தின் உபாதானக்காரணம் என்பது பொருந்தும் என்று கூறுகின்ற ஸூத்ரகாரர், ப்ர. ஸூ. (1-4-23) - ப்ரக்ருதி: ச ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்த அநுபரோதாத் - ப்ரஹ்மமே உபாதானக் காரணம் என்றால் மட்டுமே, உறுதிபட உரைக்கும் வாக்கியங்களும் உதாரணங்களும் முரண்படாமல் இருக்கும் - என்று, ப்ரக்ருதி என்னும் சொல்லால் கூறினார். ஆகவே மிச்ரஸத்வத்தை ”ப்ரக்ருதி” என உரைப்பது ஏனென்றால் மஹத் முதலான மாற்றங்களைத் தன்னிடமிருந்து பிறக்கும்படிச் செய்வதால் ஆகும். அவித்யை என்ற சொல்லானது “வித்யை இல்லை” என்பதையும், வித்யை தவிர உள்ள மற்றவற்றையும், வித்யைக்கு விரோதமாக உள்ளவற்றையும் குறிக்கும் பொதுவான சொல்லாக உள்ளது; ஆயினும், அந்தந்த விஷயத்திற்கு ஏற்றபடி அல்லவோ பொருள் கொள்ளவேண்டும்? ஆகவே ஞானத்திற்கு விரோதமாக உள்ளதால், அவித்யை எனப்படுகிறது. அவித்யையின் ஞானத்திற்கு விரோதமாக உள்ள தன்மை குறித்து சூர்ணை (85) - ஜ்ஞாநாநந்தங்களுக்குத் திரோதாயகமாய் – என்று முன்பே கூறப்பட்டது. அஸுரர்கள், ராக்ஷஸர்கள் போன்றவர்கள் செய்கின்ற செயல்களில் உள்ள ஆச்சர்யமான தன்மை என்பதை உணர்த்தும்விதமாக “மாயா” என்று கூறுவது போன்று, இது விசித்ரமான ஸ்ருஷ்டிகளைச் செய்வதால் “மாயா” என்ற சொல்லால் கூறப்பட்டது. அதாவது ஒரே போன்று அல்லாமல் வியக்க வைக்கின்ற காரயங்களை உண்டாக்குவதால் ஆகும்.

87. இதுதான் “பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதமிங்கிவ் வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்கள” என்கிறபடியே இருபத்து நாலு தத்வமாயிருக்கும்.

**அவதாரிகை** - ஏவம்பூதமான அசித்துதான் கார்யகாரணரூபேண அநேக தத்வமாயிருக்கும் படியை அருளிச்செய்கிறார் (இதுதான் பொங்கைம்புலன்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் உள்ள அசித்தானது, கார்யம் மற்றும் காரண வடிவமாகப் பல தத்வங்களாக உள்ள விதங்களை அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** – (ஐம்புலன்) சப்தாதிகள்; பொங்குதலால், சேதநரை விக்ருதராம்படி பண்ணுகைக்கீடான இவற்றினுடைய உத்ரேகம் சொல்லுகிறது. இவ்விடத்தில் விசேஷ்ய மாத்ரமே அபேக்ஷிதம். (பொறியைந்தாவன) ச்ரோத்ராதிகள். (கருமேந்திரியம்) வாகாதிகள். (ஐம்பூதம்) ககநாதிகள். (இங்கிவ்வுயிரேய் பிரகிருதி) என்றது, ஸம்ஸார தசையில் இவ்வாத்மாவோடே அத்யந்த ஸம்ஸ்ருஷ்டையாய்க் கிடக்கிற ப்ரக்ருதி யென்றபடி. இங்கும் விசேஷ்ய மாத்ரமிறே தத்வ ஸங்க்யைக்கு வேண்டுவது. (மானாங்கார மனங்களாவன) மஹானும் அஹங்காரமும் மநஸ்ஸும். இப்படி இருபத்து நாலு தத்வத்தையும் அருளிச் செய்கிற ஆழ்வார், தந்மாத்ரங்களை அருளிச்செய்யாதே, சப்தாதிகளை அருளிச் செய்தது, தந்மாத்ரங்களுக்கு பூதங்களோடு ஸ்வரூப பேதமின்றியிலே, அவஸ்தா பேத மாத்ரமாகையாலே தந்மாத்ரங்களான பூதங்கள் பத்தையும் அஞ்சு தத்வமாக்கி, சப்தாதிகளைந்தையும் ஐந்து தத்வங்களாகக் கொண்டு இவையும், ஏகாதசேந்த்ரியங்களும் ப்ரக்ருதி மஹதஹங்காரங்களுமாக சதுர்விம்சதி தத்வமென்று கொள்ளுவதும் ஒரு பக்ஷமுண்டாகையாலே, உபய பக்ஷத்திலும் தத்வ ஸங்க்யையில் ந்யூநாதிரேகமில்லையிறே. ஆகையால், இப்பாட்டிற் சொன்னபடியே இருபத்துநாலு தத்வமாயிருக்குமென்றதாயிற்று.

**விளக்கம்** - இங்கு திருவாய்மொழி (10-7-10) – பொங்கு ஐம்புலனும் பொறி ஐந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம் இங்கு இவ் உயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்களே – என்ற பாசுரத்தைக் கூறுகிறார். ஐம்புலன் என்பது ஓசை முதலானவை. இவற்றுக்கு "பொங்கு" என்ற அடைமொழி கொடுத்ததன் மூலம், இவை மனிதர்களை மாற்றம் அடையும்படிச் செய்வதற்கு இணையாக உள்ள எழுச்சியைக் கூறுகிறார். இங்கு புலன்களுடைய நிலையை மட்டுமே கொள்ளவேண்டும். "ஐந்து பொறிகள்" என்பது செவி போன்றவை ஆகும். கர்ம இந்த்ரியங்களானவை, வாக்கு போன்றவை; ஐந்து பூதங்களானவை ஆகாசம் போன்றவை ஆகும். (இங்கு இவ் உயிரேய் பிரகிருதி) – ஸம்ஸார நிலையில் இந்த ஆத்மாவுடன் கலந்து கிடக்கும் ப்ரக்ருதி. இந்த இடத்திலும் முதன்மையான இந்த்ரியங்களை மட்டுமே தத்வ கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். (மானாங்கார மனங்கள்) - மஹாந், அஹங்காரம் மற்றும் மனம். இவ்விதம் இருபத்து நான்கு தத்துவங்களையும் அருளிச்செய்த ஆழ்வார் தந்மாத்ரைகளை அருளிச்செய்யாமல், ஓசை முதலானவற்றை மட்டும் ஏன் அருளிச்செய்தார்? இதற்கு விடை அளிக்கிறார்.

தந்மாத்திரைகளுக்கு அவற்றின் பூதங்களுடன் ஸ்வரூப வேறுபாடு இல்லை; ஆகவே நிலைமை மாறுபாடு அடைதல் மட்டுமே நிகழ்கின்றன. எனவே தந்மாத்ரைகளாகிய பூதங்கள் பத்தையும் ஐந்து தத்வங்கள் என்று கொண்டார்; ஒசை முதலான ஐந்தையும் ஐந்து தத்துவங்களாகக் கொண்டார்; ஆகவே இந்தப் பத்தும், பதினொரு இந்த்ரியங்களும், ப்ரக்ருதி, மஹத், அஹங்காரம் என்பதாக இருபத்து நான்கு தத்துவங்கள் என்று ஒரு சிலர் கொள்வதால், இரண்டு விதமாகக் கொள்வதில் எந்தவிதமான எண்ணிக்கை மாற்றமும் இல்லை. எனவே இந்தப் பாசுரத்தில் கூறியபடி இருபத்து நான்கு தத்வங்கள் உள்ளன என்றாகிறது.

## 88. இதில் ப்ரதம தத்வம் ப்ரக்ருதி.

**அவதாரிகை -** இப்பாட்டில் தத்வங்களைச் சொன்னவித்தனையொழிய, இவற்றினுடைய க்ரம கதநம் பண்ணிற்றில்லையிறே. ஆகையால் இதில் ப்ரதம தத்வமேது? என்னு மாகாங்க்ஷையிலே அருளிச் செய்கிறார்.

**விளக்கம் -** இந்தப் பாசுரத்தில் தத்வங்களை எண்ணிக்கையை அருளிச்செய்தார்; ஆனால் இவற்றின் வரிசையைக் கூறவில்லை அல்லவோ? ஆகவே அவற்றில் முதன்மையான தத்வம் எது என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (இதில் ப்ரதம தத்வம் ப்ரக்ருதி) என்று. ப்ரக்ருதியென்றும், ப்ரதாநமென்றும், அவ்யக்தமென்றும் ப்ரதம தத்வத்துக்குப் பர். ப்ரக்ருதி என்று சொல்லுகைக்கடி முன்னே சொல்லப்பட்டது. ப்ரதாநமென்கிறது, எம்பெருமானுடைய லீலைக்கு ப்ரதாநமான உபகரணமாகையாலே. அவ்யக்தமென்கிறது, அநபிவ்யக்த குண விபாகமாகையாலே.

**விளக்கம் -** முதல் தத்வமானது ப்ரக்ருதி, ப்ரதானம், அவ்யக்தம் எனப் பலவிதமாக வழங்கப்படுகிறது. ப்ரக்ருதி என்று கூறுவதற்கான பெயர்க்காரணம் முன்பே கூறப்பட்டது. ப்ரதானம் என்பது, எம்பெருமானுடைய லீலைகளுக்கு முதன்மையான கருவியாக உள்ளது என்ற பொருள் தருகிறது. அவ்யக்தம் என்பது, இதற்குள் இருக்கின்ற மூன்று குணங்களும் கண்களுக்குப் புலப்படுவதில்லை என்பதை உணர்த்துகிறது.

89. இது அவிபக்த தமஸ்ஸென்றும், விபக்த தமஸ்ஸென்றும், அக்ஷரமென்றும் சில அவஸ்த்தைகளை யுடைத்தாயிருக்கும்.

**அவதாரிகை -** இப்படி ப்ரதம தத்வமான ப்ரகருதிக்குண்டான அவஸ்தா விசேஷங்களை அருளிச்செய்கிறார் (இது அவிபக்த தமஸ்ஸு) என்று தொடங்கி.

**விளக்கம் -** இவ்விதம் முதன்மையாக உள்ளதான ப்ரக்ருதிக்கு இருக்கின்ற பல்வேறு பரிணாம நிலைகளுடைய சிறப்புகளை அடுத்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, "அவ்யக்தமக்ஷரே லீயதே, அக்ஷரம் தமஸி லீயதே, தம: பரே தேவ ஏகீ பவதி" என்கிறபடியே, ஸம்ஹ்ருதி ஸமயத்தில் அவ்யக்தாவஸ்தை குலைந்து அக்ஷராவஸ்தமாய். அது தானும் குலைந்து அதிஸூக்ஷ்மமாய தமச்சப்த வாச்யமாய அது தானும் நாம ரூப விபாக அநந்ஹமாம்படி ஸர்வேச்வரன் பக்கலிலே ஏகீபவித்து நிற்கையாலே அவிபக்த தமஸ்ஸென்றும்; ஸர்ககாலம் வந்தவாறே "ப்ராதுராஸீத் தமோநுத:" என்கிறபடியே, அவனாலே ப்ரேரிதமாய்க் கொண்டு நாம ரூப விபாக யோக்யமாம்படி அவன் பக்கல நின்றும விபக்தமாய், கார்யோந்முகமாகையாலே விபக்த தமஸ்ஸென்றும்; அநந்தரம் தத் ஸங்கல்ப விசேஷத்தாலே புருஷ ஸமஷ்டி கர்ப்பமான அசேதநமென்று விவேகிக்கைக்கும் அபதமாம்படியான தமோவஸ்தை குலைந்து புருஷ ஸமஷ்டி கர்ப்பத்வம் தோன்றும்படியான அவஸ்தையை ப்ராபித்து நிற்கையாலே அக்ஷரமென்றும், இங்ஙனே சில அவஸ்தைகளை உடைத்தாயிருக்குமென்கை. ஆகையால் இது அவிபக்த தமஸ்ஸாகையாவது, அவ்யக்த அக்ஷராவஸ்தைகள் குலைந்து, தமச்சப்த வாச்யமாய், நாம ரூப விபாக அநந்ஹமாம்படி ஸர்வேச்வரன் பக்கலிலே ஏகீபவித்து நிற்கை. விபக்த தமஸ்ஸாவது, நாம ரூப விபாக அர்ஹமாம்படி விபக்தமாய், கார்யோந்முகமாகை. அக்ஷரமாகையாவது, இது அசித்தென்றும், இதினுள்ளே புருஷ ஸமஷ்டி கிடக்கிறதென்றும் விவேகிக்கவொண்ணாதபடி அதிஸூக்ஷ்மமாயிருக்கிற தமோவஸ்தை குலைந்து, புருஷ ஸமஷ்டி கர்ப்பத்வம் தோன்றும்படியான அவஸ்தையை பஜிக்கை என்றதாயிற்று.

**விளக்கம் -** ஸுபால உபநிஷத் (2) - அவ்யக்தம் அக்ஷரே லீயதே | அக்ஷரம் தமஸி லீயதே | தம: பரே தேவ ஏகீபவதி – அவ்யக்தம் அக்ஷரத்திலும், அக்ஷரம் தமஸ்ஸிலும் லயிக்கின்றன. தமஸ் உயர்ந்த தேவனிடமும் சென்று ஒன்றாகிறது – என்பதற்கு ஏற்ப,

ப்ரளய காலத்தில் அவ்யக்த நிலையானது குலைந்து, அக்ஷர நிலையை அடைகிறது; அதன் பின்னர் அக்ஷர நிலையும் குலைந்து, மிகவும் ஸூக்ஷ்மமான நிலையை அடைகிறது; அந்தக் கட்டத்தில் தமஸ் என்ற பெயர் பெறுகிறது; அத்தகைய தமஸ்ஸானது பெயர் மற்றும் ரூபம் என்று பிரித்து அறிவதற்கான தகுதி அற்றதாக, ஸர்வேச்வரனிடம் சென்று ஒடுங்குகிறது; இதனால் அது "அவிபக்த தமஸ்" என்று கூறப்படுகிறது. அதன் பின்னர் ஸ்ருஷ்டி காலம் வந்தவுடன், மநு. (1-6) – ப்ராதுராஸீத் தமோநுத: - இருளை விரட்டும்விதமாக வெளிப்படுத்தினான் - என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனால் தூண்டப்பட்டு பெயர் மற்றும் ரூபம் கொண்டு பிரித்து அறிவதற்கான தகுதி கொண்டதாக, ஸர்வேச்வரனிடமிருந்து தனியாக நின்று, கார்யங்கள் உற்பத்தி ஆவதற்கு ஏற்றபடி உள்ளதால், "விபக்த தமஸ்" என்று கூறப்படுகிறது. அதன் பின்னர் ஸர்வேச்வரனுடைய ஸங்கல்பத்திற்கு உள்ள சிறப்பு காரணமாக, ஆத்மாக்களும் ப்ரக்ருதியும் இணைந்து, கர்ப்பம் அடைந்த பயிர்கள் நிலையை அடைகிறது; அதனால் அக்ஷரம் எனப்படுகிறது. இப்படியாக சில நிலைகளுடன் கூடியதாக உள்ளது. எனவே ப்ரக்ருதியானது அவிபக்த தமஸ் என உள்ளது ஏனென்றால், அவ்யக்தம் மற்றும் அக்ஷரம் என்பதான நிலைகள் மாற்றம் அடைந்து "தமஸ்" என்று அழைக்கப்படுவதாக, பெயர் மற்றும் ரூபம் பிரித்து அறியலாம்படி தகுதி இன்றி, ஸர்வேச்வரனிடம் ஒடுங்கி நிற்பதால் ஆகும். இது விபக்த தமஸ் என உள்ளது ஏனென்றால், பெயர் மற்றும் ரூபம் என்று பிரித்து அறியத் தகுதி கொண்டதாக, கார்யங்கள் தோன்றுபடியாக இருப்பதால் ஆகும். ப்ரக்ருதியானது, அசித் என்றும், இதற்குள் அனைத்து ஜீவாத்மாக்களும் தொகுத்த நிலையில் உள்ளனர் என்றும் பிரித்து அறியாதபடி, மிகவும் ஸூக்ஷ்மமான தமஸ் நிலையானது மாறி, ஜீவாத்மாக்களுடைய தொகுப்பு நிலை கர்ப்பம் என்பது வெளிப்படும்படியான நிலையை அடைவதால் அக்ஷரம் எனப்படுகிறது.

**வ்யாக்யானம்** – குண த்ரய வைஷம்யஸ்யாநந்தர பூர்வ அவஸ்தா குணஸாம்யம், குண ஸாம்ய லக்ஷணம் அவ்யக்தம், ("அவ்யக்தம் அக்ஷரே லீயதே" இதி) யஸ்யாம் அவஸ்தாயாம் குண ஸாம்யமப்யஸ்புடம், தத் அவஸ்தம் சேதந ஸமஷ்டி கர்ப்பம் தத் அக்ஷர சப்தேந உச்யதே. நது சேதந மாத்ரம், தஸ்ய அவ்யக்த ப்ரக்ருதித்வ தமோ விக்ருதித்வ அயோகாத். அதஸஸ் ஸர்வம் தத்வ ஜாதம் சித் அசித் ஆத்மகம் மந்தவ்யம். "ப்ரதாநாதி விசேஷாந்தம் சேதந அசேதந ஆத்மகம்" இதி பராசர வசநாத். அத்ர து சித்கர்ப்பே வஸ்துநி அக்ஷர சப்த உபசரித:, ப்ரயோகேந்யதாஸித்தே சக்தி அந்தர

கல்பநாயோகாத். (“அக்ஷரம் தமஸி லீயதே” இதி) சித் கர்ப்பத்வம் அசித்வம் அபி யத்ர விவேகதும் அசக்யம் தத் அவஸ்தத் அதிஸூக்ஷ்மம் ப்ரதாநம் தமச் சப்தேந அபிலப்யம். அக்ஷராதி அவஸ்தா ப்ராப்த்யௌந்முக்க்ய விசிஷ்டம் தேதேவ விபக்தம் தம: தௌந்முக்க்யரஹிதம் அவிபக்தம் தம: பரமாத்ம சரீரதயாபி சிந்தயிதும் அசக்யம். ஸலில விலீந லவண சந்தரகாந்தஸ்த ஸலில ஸூர்யகாந்தஸ்தவஹ்நி கல்பம் ஸர்வஜ்ஞ பரமாத்மைக வேத்யம் அவதிஷ்டதே. பூதல விநிஹித பீஜஸ்தாநீயமவிபக்தம் தம:, ம்ருந்நிஸ்ஸ்ருத பீஜவத் விபக்தம் தம:, ஸலில ஸம்ஸ்ருஷ்டார்த்ரசதில அவயவ பீஜ துல்யம் அக்ஷரம், உச்சூந பீஜ ஸமாநம் அவ்யக்தம், அங்குர ஸ்தாநீயோ மஹாந் இதி விவேக: - என்று ஸுபாலோபநிஷத் வ்யாக்யாநத்தில் ச்ருதப்ரகாசிகாகாரர், இதினுடைய அவஸ்தா விசேஷங்களை ஸுஸ்பஷ்டமாக அருளிச் செய்தார். இத்தால் அக்ஷரமும் தமஸ்ஸும், குஸுமத்தினுடைய முகுள கோரக அவஸ்தைகள்போலே இதினுடைய ஸங்கோச தசையாகையாலே, மஹதாதிகளைப் போலே தத்வாந்தரமன்றென்னுமிடம் ஸித்தம்.

**விளக்கம் -** ஸுபால உபநிஷத் வ்யாக்யானத்தில் ச்ருதப்ரகாசிகாகாரர்: ப்ரக்ருதியானது மூன்று குணங்களுடைய ஏற்றத்தாழ்வை அடைகிறது; அந்த நிலைக்குப் பின்னர், முந்தைய நிலையானது சமநிலை எனப்படுகிறது. குணங்கள் சமமாக உள்ள நிலையானது, கண்களுக்குப் புலப்படாத அவ்யக்தம் எனப்படும். எந்த ஒரு நிலையில் அனைத்து குணங்களும் சமமாகவோ அல்லது ஏற்றத்தாழ்வுடன் கூடியதாக வெளிப்படையாகவோ காண இயலாமல் உள்ளதோ, அப்படிப்பட்ட நிலையை அடைந்துள்ளதான தொகுத்த ஜீவாத்ம கூட்டம் எதில் அடங்கியுள்ளதோ, அது அக்ஷரம் எனப்படும்; இது ஏனென்றால், அக்ஷரம் என்பது ஜீவாத்மாக்களை மட்டுமே குறிப்பதல்ல; காரணம், அதற்கு ப்ரக்ருதியானது காரணமாகவும், அது தமஸ்ஸுக்குக் கார்யமாகவும் உண்டானது அல்ல என்பதால் ஆகும். ஆகவே ப்ரக்ருதி தத்வம் முதலாக, இந்தப் பூமி முடிய உள்ள அனைத்தும் சித் மற்றும் அசித் என்ற ஸ்வரூபங்களாகவே எண்ணப்படவேண்டும். பராசரர் - ப்ரதாநாதி விசேஷாந்தம் சேதந அசேதந ஆத்மகம் - ப்ரதானம் தொடக்கமாக விசேஷமான பொருள்கள் முடிய உள்ள அனைத்தும் சேதனம் மற்றும் அசேதனம் என்பவற்றை உள்ளடக்கியதாகவே உள்ளன - என்றார். இங்கு “ஜீவர்கள் அனைவரும் ப்ரக்ருதியில் உள்ள நிலையானது, சூல் கொண்ட பயிர்கள் போன்று உள்ளனர்” என்பதைக் குறிக்கும் சொல்லானது உபசாரமாக மட்டுமே கூறப்பட்டது; இதற்கு

வேறுவிதமாகப் பொருள் ஏற்கக்கூடாது. இவ்விதமாக சித் வஸ்துக்களைக் கர்ப்பத்தில் கொண்டதாக உள்ள நிலையும், அசித் வஸ்துக்களுடைய தன்மையும், எந்த ஒரு நிலையில் பிரித்து அறிய முடியாதபடி உள்ளதோ அப்படிப்பட்ட ஸூக்ஷ்மமான நிலையானது, ப்ரதானம் மற்றும் தமஸ் போன்ற சொற்களால் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட அக்ஷர நிலையை அடைவதற்கான எதிர்த்தன்மையுடன் கூடியுள்ளது "விபக்த தமஸ்" எனப்படும்; இவ்விதம் எதிர்த்தட்டாக இல்லாதது "அவிபக்த தமஸ்" எனப்படும். அது பரமாத்மாவின் சரீரம் என்று பிரித்து அறிய இயலாதபடியும், நீரில் கலந்துள்ள உப்பு, சந்த்ரகாந்தக் கல்லில் உள்ள நீர், சூரியகாந்தக் கல்லில் உள்ள நெருப்பு போன்றதாகவும், அனைத்தும் அறிந்த பரமாத்மாவால் மட்டுமே அறியக்கூடியதாகவும் உள்ளது. பூமியில் விதைக்கப்பட்ட விதை போன்றதே அவிபக்த தமஸ் ஆகும்; நீருடன் ஒன்றாகக் கலந்து சிதைவுடன் கூடிய விதை போன்றதே அக்ஷரம் ஆகும்; அந்த விதையிலிருந்து வெளிவந்த முளையைப் போன்றதே மஹாந் ஆகும் - என்று கூறினார். இதன் மூலம் அக்ஷரம் மற்றும் தமஸ் ஆகியவை, ஒரு மலருடைய மொட்டு மற்றும் அரும்பு முதலான நிலைகளைப் போன்று, ப்ரக்ருதியின் சுருங்கிய நிலையாகிறது; ஆகவே இவை மஹாந், அஹங்காரம் என்பது போன்று வேறு தத்வங்கள் அல்ல என்று தேறுகிறது.

90. இதில் நின்றும் குண வைஷம்யத்தாலே மஹதாதி விகாரங்கள் பிறக்கும்.

**அவதாரிகை -** இனி இந்த ப்ரக்ருதியில் நின்றும மஹதாதி விகாரங்கள் ஜநிக்கைக்கு மூலம் இன்னதென்கிறார்.

**விளக்கம் -** அடுத்து ப்ரக்ருதியிலிருந்து மஹத் போன்ற மாற்றங்கள் பிறப்பதற்கான காரணத்தைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம் -** (இதில் நின்றும் குண வைஷம்யத்தாலே மஹதாதி விகாரங்கள் பிறக்கும்) என்று. குணங்களுக்கு வைஷம்யமாவது, பரஸ்பர உத்ரேகம்.

**விளக்கம் -** குணங்களுக்கு வைஷம்யம் என்றால், ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வுகள் கொண்ட நிலையாகும்.

91. குணங்களாகிறன - ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்கள்.

**அவதாரிகை** - அப்படியிருக்கிற குணங்கள்தானெவை என்னும் ஆகாங்க்ஷையிலே (குணங்களாகிறன - ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்கள்) என்கிறார்.

**விளக்கம் -** அப்படிப்பட்ட குணங்கள் எவை என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** - இவைதானிருக்கும்படி எங்ஙனே என்கிற சங்கையிலே அருளிச் செய்கிறார் (இவை ப்ரக்ருதிக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவை எப்படிப்பட்டவை அல்லது எவ்விதம் உள்ளன என்று சந்தேகத்திற்கு விடை அருளிச்செய்கிறார்.

92. இவை ப்ரக்ருதிக்கு ஸ்வரூபாநுபந்திகளான ஸ்வபாவங்களாய், ப்ரக்ருத்யவஸ்தையில் அநுத்பூதங்களாய், விகார தசையில் உத்பூதங்களாயிருக்கும்.

**வ்யாக்யானம் -** (இவை ப்ரக்ருதிக்கு ஸ்வரூப அநுபந்திகளான ஸ்வபாவங்களாய்) "ஸத்வம் ரஜஸ் தம இதி குணா ப்ரக்ருதி ஸம்பவா", "ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வச:", "ஸத்வம் ரஜஸ் தம இதி ப்ரக்ருதேர் குணா:" என்னக்கடவதிறே. ஸ்வபாநுபந்திகளென்றது, ஆகந்துகங்களன்றிக்கே ஸத்தா ப்ரயுக்தங்களாகையாலே, இவற்றையொழிந்திருப்பதோரவஸ்தையும் இல்லையென்கை. இவற்றை ஸ்வபாவங்களென்றும், ப்ரக்ருதிக்கு ஸ்வரூபாநுபந்திகளென்றும் சொல்லுகையாலே, "மூல ப்ரகருதிர் நாம ஸுக துக்க மோஹாத்மகாநி லாகவ ப்ரகாச சலநோபஷ்டம்பந கௌரவா வரண கார்யாணயத்யந்தாதீந்தரியாணி கார்யைக நிரூபண விவேகாநி அந்யூநாநதிரே காணி ஸமதாமுபேதாநி ஸத்வ ரஜஸ தமாம்ஸி த்ரவ்யாணி" என்று இவற்றை த்ரவயங்களாகவும், இவைதானே ப்ரக்ருதி ஸ்வரூபமாகவும் கொள்ளுகிற ஸாங்க்ய மதம் நிரஸ்தமாயிற்று. இந்த மத நிராகரணார்த்தமாகவிறே ஆளவந்தார், "குணா: ப்ரதாநம்" என்று பிரித்தருளிச் செய்தது.

**விளக்கம் -** (இவை ப்ரகருதிக்கு ஸ்வரூப அநுபந்திகளான ஸ்வபாவங்களாய்) - கீதை (14-5) – ஸத்வம் ரஜஸ் தம இதி குணா ப்ரக்ருதி ஸம்பவா – ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ்

என்பதான, ப்ரக்ருதியிலிருந்து உண்டான குணங்களை - என்றும், கீதை (3-27) - ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வச: – அனைத்து செயல்களும் அனைத்து விதங்களிலும் ப்ரக்ருதியின் குணங்களால் இயங்குகின்றன – என்றும், ஸத்வம் ரஜஸ் தம இதி ப்ரக்ருதேர் குணா: - ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் ஆகியவை ப்ரக்ருதியின் குணங்கள் - என்றும் கூறப்பட்டது அல்லவோ? (ஸ்வபாவ அநுபந்திகள்) - அவை இடையில் வந்து சேர்ந்தவை அல்ல, ப்ரக்ருதியில் எப்போதும் உள்ளவை; ஆகவே அவற்றைத் தவிர்த்து ஒரு நிலையும் இல்லை. இவற்றை ஸ்வபாவங்கள் என்றும், ப்ரக்ருதியின் ஸ்வரூபத்துடன் சேர்ந்தவை என்றும் கூறுவதால், “மூலப்ரக்ருதிர் நாம ஸுகதுக்க மோஹாத்மகாநி லாகவ ப்ரகாசசலநோபஷ்டம்பந கௌரவாவரண கார்யாணி, அத்யந்தாதீந்த்ரியாணி, கார்யைக நிரூபண விவேகாநி, அந்யூநாநதிரேகாணி ஸமதாமுபேதாநி ஸத்வ ரஜஸ் தமாம்ஸி த்ரவ்யாணி - மூலப்ரக்ருதி என்பது ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் ஆகிய மூன்று திரவியங்களைக் கொண்டதாகும்; இவை மூன்றும் சரிசமமான நிலையில் (ஒன்றை ஒன்று விஞ்சாத விதத்தில்) உள்ளன. இவற்றின் இயல்பான தன்மைகள் முறையே ஸுகம், துக்கம் மற்றும் மயக்கம் (மோகம்) என்பதாகும். ஸத்வம் அதிகமாகும்போது ஸுகம் ஏற்படும், சரீரம் எடை குறைவாக இருப்பதாகத் தோன்றும், இந்த்ரியங்கள் நன்கு இயங்கும் (இதனை லாகவ ப்ரகாசங்கள் என்பர்). ரஜஸ் அதிகமாகும்போது துக்கம் ஏற்படும், அசைவு மற்றும் இந்த்ரியங்கள் செயலாற்றுவதும் நிகழும் (சலநம் – சஞ்சலமான இயல்பு கொண்டபடியும், உஷ்டம்பநம் – யாரையேனும் வாக்குவாதத்திற்கு இழுத்தபடியும் இருப்பர்). தமஸ் அதிகமாகும்போது மயக்கம் ஏற்படும், சரீரம் பளுவாக உணரப்படும், இந்தியங்கள் மறைக்கப்படும் (கௌரவம், ஆவரணம்). இப்படிப்பட்ட குணங்களானவை இந்த்ரியங்களால் உணர இயலாதபடி உள்ளதாகும். அவற்றின் கார்யத்தைக் கொண்டே உணரவல்லதாக (அல்லது நிரூபிக்கும்படியாக) இருப்பதாகும். ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்றையும் சமநிலையில் கொண்டதான மூலப்ரக்ருதியானது அசேதனமாக உள்ளபோதிலும், எண்ணற்ற சேதநர்களுடைய இன்பத்திற்கும், மோக்ஷத்திற்கும் உதவுவதாக உள்ளது [ஸ்ரீபாஷ்யம் 2-2-1]” என்று, இவற்றை த்ரவ்யங்களாகவும், இவையே ப்ரக்ருதியின் ஸ்வரூபங்கள் என்பதாகவும் கொள்ளும் ஸாங்க்ய மதம் தள்ளப்பட்டது. இந்த மதத்தைத் தள்ளுவதற்காக அல்லவோ ஸ்வாமி ஆளவந்தார் ஸ்தோத்ரரத்னத்தில் (17) - குணா: ப்ரதாநம் – குணங்களும் ப்ரக்ருதியும் - என்று தனித்தனியாகப் பிரித்து அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** (ப்ரக்ருத்யவஸ்தையில் அநுத்பூதங்களாய், விகார தசையில் உத்பூதங்களாயிருக்கும்) அதாவது, ஸாம்யாபந்நங்களாயிருக்கையாலே, ப்ரக்ருத்யவஸ்தையில் இவற்றினுடைய ஸ்வரூப விபாகம் தோற்றாது. வைஷம்யாபத்தியாலே விக்ருத்யவஸ்தையில் இவற்றினுடைய ஸ்வரூப விபாகம் தோற்றியிருக்குமென்கை. "ஸத்வ ரஜஸ தமாம்ஸி த்ரயோ குணா: ப்ரக்ருதேஸ் ஸ்வரூபாநுபந்திநஸ் ஸ்வபாவ விசேஷா ப்ரகாசாதி கார்யைக நிரூபணீயா: ப்ரக்ருத்யவஸ்தாயாம் அநுத்பூதாஸ் தத் விகாரேஷு மஹதாதிஷூத்பூதா" என்றிறே பாஷ்யகாரரும் அருளிச்செய்தது.

**விளக்கம் -** (ப்ரக்ருதி அவஸ்தையில் அநுத்பூதங்களாய், விகார தசையில் உத்பூதங்களாயிருக்கும்) - இந்த மூன்று குணங்களும் ஏற்றத்தாழ்வு இன்றி சமமாக உள்ளதால், ப்ரக்ருதி நிலையில் எந்தவிதமான மாற்றமும் இன்றி உள்ளதால், இவற்றின் ஸ்வரூப வேறுபாடு புலப்படாது. மாற்றம் அடையும் நிலையில் ஏற்றத்தாழ்வுகளுடன் கூடியுள்ளதால், இவற்றின் ஸ்வரூப வேறுபாடு வெளிப்படுகிறது. கீதாபாஷ்யத்தில் (14-5) – ஸத்வ ரஜஸ தமாம்ஸி த்ரயோ குணா: ப்ரக்ருதேஸ் ஸ்வரூபாநுபந்திநஸ் ஸ்வபாவ விசேஷா ப்ரகாசாதி கார்யைக நிரூபணீயா: ப்ரக்ருத்யவஸ்தாயாம் அநுத்பூதாஸ் தத் விகாரேஷு மஹதாதிஷூத்பூதா - ஸத்வம் ரஜஸ் மற்றும் தமஸ் ஆகியவை ப்ரக்ருதியின் ஸ்வரூபத்தை அண்டியுள்ளன; இவற்றின் ஸ்வபாவத்தில் உள்ள சிறப்புகள் அனைத்து கார்யத்தால் மட்டுமே நிச்சயிக்கத்தக்கவையாக, ப்ரக்ருதி என்ற நிலையில் வெளிப்படாமல், ப்ரக்ருதியின் மாற்றங்களாகிய மஹத் முதலானவற்றின் மூலம் வெளிப்படுகின்றன – என்பதாக பாஷ்யகாரர் அருளிச்செய்தார்.

93. ஸத்வம் – ஜ்ஞாந ஸுகங்களையும் உபயஸங்கத்தையும் பிறப்பிக்கும்.

**அவதாரிகை –** விகார தசையில் இவைதான் கார்யைக நிரூபணீயங்களாகையாலே, கார்யகதநமுகத்தாலே இவற்றினுடைய ஸ்வரூபங்களை தர்சிப்பிக்கிறார்.

**விளக்கம் -** மாற்றங்கள் அடைந்த நிலையில் கார்யங்களைக் கொண்டு மட்டுமே இந்தக் குணங்களை நிரூபிக்கவேண்டும் என்ற நிலை உள்ளதால், கார்யங்கள் குறித்து உரைக்கும்போது இவற்றின் ஸ்வரூபத்தையும் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸத்வகுணம் நிர்மலமாகையாலே, ஜ்ஞாந ஸுகாவரண மன்றிக்கே அவற்றுக்கு ஜநகமுமாய், அவற்றினுடைய பேற்றுக்கு ப்ரவர்த்திக்கும்படி அவையிரண்டிலும் ஸங்கத்தையுமுண்டாக்குமென்கை. “தத்ர ஸத்வம் நிர்மலத்வாத் ப்ரகாசகமநாமயம், ஸுக ஸங்கேந பத்நாதி ஜ்ஞாந ஸங்கேந சாநக” என்னக்கடவதிறே.

**விளக்கம்** - ஸத்வகுணமானது எந்தவிதமான தோஷங்களும் அற்றதாக உள்ளதால், ஞானம் மற்றும் ஸுகம் ஆகியவற்றை மூடாமல், அவற்றுக்குப் பிறப்பிடமாகவும், அவற்றை அடைவதற்கு ஒருவனை முயற்சி செய்யும்படியாக அவற்றின் மீது பற்றுதலை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. கீதையில் (14-6) - தத்ர ஸத்வம் நிர்மலத்வாத் ப்ரகாசகமநாமயம், ஸுக ஸங்கேந பத்நாதி ஜ்ஞாந ஸங்கேந சாநக – அந்த மூன்று குணங்களில் ஸத்வமான தூய்மையானதாக உள்ளதால் ஒளிர்ந்தபடி இருக்கிறது, மாற்றங்கள் அடையாதது; ஆனால் அது இன்பத்துடன் கொண்ட ஸம்பந்தம் மற்றும் ஞானத்துடன் கொண்ட ஸம்பந்தம் காரணமாக கட்டுப்படும்படிச் செய்கிறது - என்றது காண்க.

94. ரஜஸ்ஸு - ராக த்ருஷ்ணா ஸங்கங்களையும் கர்ம ஸங்கத்தையும் பிறப்பிக்கும்.

**வ்யாக்யானம்** – “ரஜோ ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணா ஸங்க ஸமுத்பவம் தந்நிபதநாதி கௌந்தேய கர்ம ஸங்கேந தேஹிநாம்” என்னக் கடவதிறே. ராகமாவது, யோஷித் புருஷர்களுக்கு அந்யோந்யமுண்டான ஸ்ப்ருஹை. த்ருஷ்ணையாவது, சப்தாதி ஸர்வ விஷய ஸ்ப்ருஹை. ஸங்கமாவது, புத்ர மித்ராதிகளளவில் ஸம்ச்லேஷ ஸ்ப்ருஹை. கர்ம ஸங்கமாவது, க்ரியைகளில் ஸ்ப்ருஹை.

**விளக்கம்** - கீதையில் (14-7) - ரஜோ ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணா ஸங்க ஸமுத்பவம் தந்நிபதநாதி கௌந்தேய கர்ம ஸங்கேந தேஹிநாம் - விருப்பம் என்பதே வடிவமாக உள்ள ரஜோ குணமானது, கர்மம் மற்றும் பற்றுதல் ஏற்படக் காரணமாக உள்ளது. இது கர்மங்களிலும், கர்ம பலன்களிலும் உள்ள ஸம்பந்தம் காரணமாகக் கட்டுப்படுத்துகிறது. ராகம் என்பது ஆண்-பெண் இடையே உண்டாகின்ற காமம் ஆகும். த்ருஷ்ணை என்றால், ஓசை முதலான இந்த்ரிய விஷயங்கள் மீது ஏற்படும் விருப்பம் ஆகும். ஸங்கம் என்பது

புத்திரன், நண்பன் போன்றவர்கள் மீது கொள்ளும் விருப்பம் ஆகும். கர்மஸங்கம் என்றால், செயல்களில் உள்ள விருப்பம் ஆகும்.

95. தமஸ்ஸு விபரீத ஜ்ஞாநத்தையும், அநவதாநததையும், ஆலஸ்யத்தையும், நித்ரையையும் பிறப்பிக்கும்.

**வ்யாக்யானம்** – "தமஸ்த்வ ஜ்ஞாநஜம் வித்தி மோஹநம் ஸர்வதேஹிநாம் ப்ரமாதாலஸ்ய நித்ராபிஸ் தந்நிபத்நாதி பாரத" என்னக் கடவதிறே. விபரீத ஜ்ஞாநமாவது, வஸ்து யாதாத்ம்ய விபரீத விஷயமான ஜ்ஞாநம். அநவதாநமாவது, செய்யுமதொன்றில் குறிக்கோளில்லாமை. ஆலஸ்யமாவது, ஒரு கார்யத்திலும் ஆரம்பமற்றிருக்கும் சொப்பம். நித்ரையாவது, புருஷனுக்கு இந்த்ரிய ப்ரவர்த்தந ச்ராந்தியடியாக வருகிற ஸர்வேந்த்ரிய ப்ரவர்த்தநோபரதி.

**விளக்கம்** -கீதையில் (14- 8) - தமஸ்த்வ ஜ்ஞாநஜம் வித்தி மோஹநம் ஸர்வதேஹிநாம் ப்ரமாதாலஸ்ய நித்ராபிஸ் தந்நிபத்நாதி பாரத – சரீரத்தில் பற்றுதல் கொண்ட அனைவரையும் மயக்கவல்லதான தமஸ்ஸானது அஜ்ஞானத்தினால் ஏற்படுவதாகும். அது ஜீவாத்மாக்களை தேவையற்ற செயல்களில் ஈடுபடுத்தல், சோம்பம் மற்றும் உறக்கம் முதலியவற்றால் கட்டுகிறது - என்றது காண்க. விபரீத ஞானம் என்றால், உண்மையான பொருளைச் சரியாக அறிவதற்கு மாறாக உள்ள அறிவு ஆகும். அநவதாநம் என்றால், எந்த ஒரு செயலிலும் குறிக்கோள் இன்மை ஆகும். ஆலஸ்யம் என்றால், எந்த ஒரு செயலையும் செய்ய முயலாமல் உள்ள சோம்பல் ஆகும். நித்ரை என்றால், அனைத்து இந்திரியங்களும் செயலற்று உள்ள உறக்கம் ஆகும்.

96. இவை ஸமங்களானபோது விகாரங்கள் ஸமங்களுமாய், அஸ்பஷ்டஙகளுமா யிருக்கும்; விஷமங்களானபோது, விகாரங்கள் விஷமங்களுமாய், ஸ்பஷ்டங்களுமா யிருக்கும்.

**அவதாரிகை** - இனி இக்குணங்களினுடைய ஸமதசையிலும், விஷம தசையிலும், ப்ரக்ருதியினுடைய விகாரங்களிருக்கும்படியை அருளிச்செய்கிறார் (இவை ஸமங்களான போது) என்று தொடங்கி.

**விளக்கம்** - அடுத்து மூன்று குணங்களும் சமமான நிலையில் இருத்தல் மற்றும் ஏற்றத்தாழ்வுகளுடன் கூடியபடி இருத்தல் ஆகிய நிலைகளில், ப்ரக்ருதியில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இக்குணங்கள் பரஸ்பர உத்ரேகமாதல், க்ருத்ஸ்ந உத்ரேகமாத லின்றிக்கே ஸாம்யாபந்நங்களாயிருந்தபோது, ப்ரக்ருதியினுடைய விகாரங்கள் நாம ரூப விசேஷ ராஹித்யத்தாலே தன்னில் ஸமங்களுமாய், ப்ரமாணங்களால் தர்சிக்கப் போகாதபடி ஸ்பஷ்டங்களுமன்றிக்கே இருக்கும். இக்குணங்கள் உத்ரேகித்து விஷமங்களானபோது, ப்ரக்ருதியினுடைய விகாரங்களும் நாம ரூப விசேஷ ஸாஹித்யத்தாலே தன்னில் விஷமங்களுமாய், ப்ரமாணங்களாலே தர்சிக்கலாம்படி ஸ்பஷ்டங்களுமாயிருக்குமென்கை. “ப்ரதேச பேதத்தாலும், கால பேதத்தாலும்” என்று கீழ்ச் சொன்னதுக்கும் இந்த குண ஸாம்ய வைஷம்யங்களேயிறே ஹேது. அது இங்கே விசதமாயிற்று.

**விளக்கம்** - இந்த மூன்று குணங்களும் ஒன்றுக்கொன்று மேன்மேலும் வளர்தல் அல்லது சிறிதளவு மேலே எழுதல் போன்றவை இன்றி, சமமாக உள்ளபோது, ப்ரக்ருதியில் மாற்றங்கள் அனைத்தும் பெயர் மற்றும் உருவம் இன்றி உள்ளதால், சமாகவே உள்ளது; மேலும் ப்ரமாணங்களால் அறிய இயலாதபடி தெளிவற்று உள்ளது. இந்த மூன்று குணங்களும் வளர்ந்து ஏற்றத்தாழ்வுகளுடன் உள்ளபோது, ப்ரக்ருதியில் மாற்றங்கள் அனைத்தும், பெயர் மற்றும் உருவம் ஆகியவை தோன்றுவதன் காரணமாக, ஏற்றத்தாழ்வுகள் அடைகின்றன; மேலும் ப்ரமாணங்களால் அறிய இயலும்படி தெளிவாக உள்ளது. “சூர்ணை (85) - ப்ரதேச பேதத்தாலும், கால பேதத்தாலும்” என்ற உரைத்ததற்கும், இத்தகைய குண ஏற்றத்தாழ்வுகள் அல்லவோ காரணமாக உள்ளன? இது அங்கு தெளிவாக உரைக்கப்பட்டது.

97. விஷம விகாரங்களில் ப்ரதம விகாரம் மஹான்.

**வ்யாக்யானம்** - இந்த குண வைஷம்ய ப்ரயுக்தமான விஷம விகாரங்களில் ப்ரதம விகாரமேது என்னுமாகாங்க்ஷையிலே, (விஷம விகாரங்களில் ப்ரதம விகாரம் மஹான்)

என்கிறார். “குண ஸாம்யாத் ததஸ்தஸ்மாத் க்ஷேத்ரஜ்ஞாதிஷ்டிதாந் முநே, குண வ்யஞ்ஜநஸம்பூதி ஸர்ககாலே த்விஜோத்தம” என்னக் கடவதிறே. அதாவது, குண ஸாம்யத்தையுடைத்தாய், க்ஷேத்ரஜ்ஞனான பத்த சேதநனாலே அதிஷ்டிதமான அவ்யக்தத்தில் நின்றும் வ்யக்த குணோந்மேஷ ஹேதுவாகையாலே குண வ்யஞ்ஜநமென்று பேரான மஹத் தத்வம் உத்பந்நமாமென்றபடி.

**விளக்கம் -** இத்தகைய குண ஏற்றத்தாழ்வுகள் காரணமாக ஏற்படும் மாற்றங்களில் முதல் மாற்றத்தை அருளிச்செய்கிறார். அது எது என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். ஸ்ரீவிபு. (1-2-36) - குண ஸாம்யாத் ததஸ்தஸ்மாத் க்ஷேத்ரஜ்ஞாதிஷ்டிதாந் முநே, குண வ்யஞ்ஜநஸம்பூதி ஸர்ககாலே த்விஜோத்தம - ஸ்ருஷ்டியின்போது சம நிலையில் உள்ள மூன்று குணங்களும், க்ஷேத்ரஜ்ஞன் என்பதான ஆத்மாவால் உட்புகப்பட்டு ப்ரக்ருதியிலிருந்து குணங்கள் வளர்வதற்குக் காரணமாக உள்ள மஹாந் ஏற்படுகிறது - என்றது காண்க. அதாவது குணங்கள் சமநிலையில் உள்ளதாகவும், க்ஷேத்ரஜ்ஞனான பந்தப்பட்ட சேதநனால் அடையப் பெற்றதும் ஆகிய அவ்யக்தத்திலிருந்து குணங்கள் தோன்றுவதற்குக் காரணமாக உள்ளதால், “குணங்களின் வெளிப்பாடு” என்பதைக் குறிக்கும் மஹத் தத்வம் வெளிப்படுகிறது.

98. இது ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்று த்ரிவிதமாய், அத்யவஸாய ஜநகமாயிருக்கும்.

**அவதாரிகை -** இதினுடைய ஸ்வரூபமிருக்கும்படி எங்ஙனே? என்னும் ஆகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (இது ஸாத்விகம்) என்று தொடங்கி.

**விளக்கம் -** மஹத் தத்வத்தின் ஸ்வரூபம் எத்தகையது என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, இந்த மஹத் தத்வம் “ஸாத்விகோ ராஜஸச்சைவ தாமஸச்ச த்ரிதா மஹாந்” என்று ப்ரகாச ப்ரவ்ருத்தி மோஹஹேதுந்யமான ஸத்வ ரஜஸ் தமோ ரூப குணாந்வயத்தாலே ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்று த்ரிவிதமாய், “மஹாந் வை புத்தி லக்ஷண:” எனறு புத்தி லக்ஷணமாகையாலே அத்யவஸாய ஜநகமாயிருக்கும் என்கை. அதில், ஸாத்விக புத்தியாவது “ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச கார்யாகார்யே

பயாபயே பந்தம் மோக்ஷம் ச யா வேத்தி புத்திஸ் ஸா பார்த்த ஸாத்விகீ" என்று ப்ரவருத்தி நிவ்ருத்திகளுடையவும் கார்யாகார்யங்களினுடையவும் பயாபயங்களினுடையவும், பந்த மோக்ஷங்களி னுடையவும் யதாவத்யவஸாயமென்றும்; ராஜஸ புத்தியாவது "யயா தர்மமதர்மம் ச கார்யம் சாகார்யமேவ ச அயதாவத் ப்ரஜாநாதி புத்திஸ் ஸா பார்த்த ராஜஸீ" என்று தர்மாதர்மங்களையும், கார்யாகார்யங்களையும் அந்யதாவாக அறுதியிடுகை யென்றும்; தாமஸ புத்தியாவது "அதர்மம் தர்மமிதி யா மந்யதே தமஸாவ்ருதா, ஸர்வார்த்தாந் விபரீதாம்ச்ச புத்திஸ்ஸா பார்த்த தாமஸீ" என்று, அதர்மத்தை தர்மமாகவும், தர்மத்தை அதர்மமாகவும் இப்படி ஸர்வார்த்தங்களையும், விபரீதமாகவும் நிச்சயிக்கையென்றும் பகவான் தானே கீதோபநிஷத்திலே அருளிச்செய்தான். ஆக, ப்ரக்ருதியினுடைய விஷம விகாரங்களில் ப்ரதம விகாரமின்ன தென்றும், அதினுடைய ஸ்வரூபமிருக்கும்படியும், அதினுடைய க்ருத்யமும் சொல்லிற்றாயிற்று.

**விளக்கம் -** மஹத் தத்வமானது, ஸ்ரீவிபு. (1-2-36) – ஸாத்விகோ ராஜஸச்சைவ தாமஸச்ச த்ரிதா மஹாந் - மஹத்தானது ஸாத்விகம், ராஜஸம் மற்றும் தாமஸம் என மூன்று வகையாகும் - என்பதற்கு ஏற்ற ப்ரகாசம், செயலாற்றுதல் மற்றும் மோகம் என்பதை அறியலாம்படியாக "ஸத்வ, ரஜஸ், தமஸ்" ரூபமாக, குணங்களுடன் சேர்ந்துள்ளதால் "ஸாத்விகம், ராஜஸம், தாமஸம்" என மூன்று வகையாக உள்ளது. மேலும் "மஹாந் வை புத்தி லக்ஷண: - மஹத்தானது புத்தியை லக்ஷணமாகக் கொண்டது" என்பதாக புத்தி லக்ஷணமாக உள்ளதால், உறுதியான அறிவை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது. இவற்றில் ஸாத்விக புத்தியானது, கீதை (18-30) - ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச கார்யாகார்யே பயாபயே பந்தம் மோக்ஷம் ச யா வேத்தி புத்திஸ் ஸா பார்த்த ஸாத்விகீ – ஸ்வர்க்கம் முதலானவற்றை அடைவதில் முயற்சி மற்றும் மோக்ஷ ஸாதனங்களான கர்மம் போன்றவற்றை அடைதல், எவை செய்யத்தக்கவை மற்றும் செய்யத்தகாதவை என்பதை அறிதல், சாஸ்த்ரங்களில் கூறப்பட்டவற்றை மீறுவதால் அச்சம் மற்றும் அச்சம் இன்மை, ஸம்ஸாரம் மற்றும் மோக்ஷம் போன்றவற்றைக் குறித்து அறிதல் ஆகியவற்றை எந்த ஒரு புத்தி அறிகிறதோ, அந்தப் புத்தியானது ஸாத்விகம் ஆகும் – என்பது காண்க. ஆக செயலாற்றுதல் மற்றும் செய்யத்தகாதவை, அஞ்சவேண்டியவை மற்றும் அஞ்சத் தகாதவை, பந்தம் மற்றும் மோக்ஷம் போன்றவை குறித்து அறிதலே ஆகும். ராஜஸ புத்தியானது, கீதை (18-31) – யயா தர்மமதர்மம் ச கார்யம் சாகார்யமேவ ச அயதாவத் ப்ரஜாநாதி புத்திஸ் ஸா பார்த்த ராஜஸீ – எந்த ஒரு புத்தியால் தர்மம் மற்றும் அதர்மம்,

செய்யத்தக்கவை மற்றும் செய்யத்தகாதவை ஆகியவற்றைக் குறித்து உள்ளதுஉள்ளபடி அல்லாமல் அறிகிறானோ, அந்தப் புத்தியானது ராஜஸம் ஆகிறது - என்பதற்கு ஏற்ப, தர்மம் மற்றும் அதர்மம், செய்யக்கூடியவை மற்றும் செய்யத்தகாதவை ஆகியவற்றை வேறுவிதமாக அறிதல் ஆகும். தாமஸ புத்தியானது, கீதை (18-32) – அதர்மம் தர்மமிதி யா மந்யதே தமஸாவ்ருதா, ஸர்வார்த்தாந் விபரீதாம்ச்ச புத்திஸ்ஸா பார்த்த தாமஸீ - எந்த ஒரு புத்தியால் அதர்மத்தைத் தர்மமாகவும், அனைத்துப் பொருள்களின் தன்மையை மாறாக அறிகிறானோ, அது தாமஸ புத்தியாகிறது - என்பதற்கு ஏற்ப, அதர்மத்தை தர்மம் என்றும், தர்மத்தை அதர்மம் என்றும், அனைத்து வஸ்துக்கள் குறித்து தவறாக அறிதலே ஆகும். இப்படியாக பகவான் கீதோபநிஷத்தில் தானே உறுதிபட அருளிச்செய்தான். எனவே, மாற்றம் அடைகின்ற நிலையில் உள்ள ப்ரக்ருதியில் உண்டாகும் முதன்மையான மாற்றம் இன்னது என்றும், அதன் ஸ்வரூபம் இன்னது என்றும், அதன் செயல்பாடு இன்னது என்றும் கூறப்பட்டது.

99. இதில் நின்றும் வைகாரிகம், தைஜஸம், பூதாதியென்று த்ரிவிதமான அஹங்காரம் பிறக்கும்.

**அவதாரிகை -** இனி, மற்றுமுண்டான விகாரங்களும் க்ரமத்திலே சொல்லப்படுகிறது.

**விளக்கம் -** அடுத்து ப்ரக்ருதியில் ஏற்படும் வேறு மாற்றங்கள் குறித்துக் கூறப்பட உள்ளன.

**வ்யாக்யானம் –** அதாவது, இந்த மஹானில் நின்றும், "வைகாரிகஸ் தைஜஸச்ச பூதாதிச்சைவ தாமஸ:, த்ரிவிதோயமஹங்காரோ மஹத் தத்வாத ஜாயத" என்கிறபடியே, ஸாத்விக ராஜஸ தாமஸ ரூப பேதத்தாலே வைகாரிகமென்றும், தைஜஸமென்றும், பூதாதியென்றும் த்ரிவிதமான அஹங்காரமும் பிறக்குமென்கை. இத்தால், த்ரிகுணாத்மிகையான மூலப்ரக்ருதியில் நின்றும் பிறந்ததாகையாலே, மஹானும் த்ரிகுணாத்மகமாயிருக்கும்; அப்படியே த்ரிகுணாத்மகமான மஹானில் நின்றும் பிறந்ததாகையாலே, அஹங்காரமும் த்ரிகுணமாயிருக்கும் என்கை.

**விளக்கம் -** இந்த மஹான் தத்வத்திலிருந்து, ஸ்ரீவிபு (1-2-37) - வைகாரிகஸ் தைஜஸச்ச பூதாதிச்சைவ தாமஸ:, த்ரிவிதோயமஹங்காரோ மஹத் தத்வாத ஜாயத -

வைகாரிகமானது ஸாத்விக அஹங்காரம், ராஜஸ அஹங்காரம் மற்றும் தாமஸ அஹங்காரம் என மூன்றுவிதமாக உள்ளது. இவை மஹத் தத்வத்திலிருந்து வெளிப்படுகின்றன - என்பதற்கு ஏற்ப ஸாத்விகம், ராஜஸம் மற்றும் தாமஸம் ஆகிய வேறு பெயர்கள் கொண்ட வைகாரிகம், தைஜஸம் மற்றும் பூதாதி ஆகிய மூன்றுவிதமான அஹங்காரங்கள் பிறக்கின்றன. ஆகவே, மூன்று குணங்களுடன் கூடியதான ப்ரக்ருதியிலிருந்து வெளிப்பட்ட காரணத்தால், மஹத் தத்வமும் மூன்று குணங்களுடன் கூடியதாக இருக்கும்; மூன்று குணங்கள் கொண்ட மஹத்திலிருந்து வெளிப்பட்டதால், அஹங்காரமும் மூன்று குணங்களுடன் இருக்கும் என்றாகிறது.

100. அஹங்காரம் அபிமாந ஹேதுவாயிருக்கும்.

**வ்யாக்யானம்** – அதாவது, தேஹாத்மாபிமாநாதிகளை ஜநிப்பிக்கை. இத்தால் இதினுடைய க்ருத்யம் சொல்லப்பட்டது.

**விளக்கம்** - “இந்தச் சரீரமே ஆத்மா” என்ற எண்ணத்தை அஹங்காரம் ஏற்படுத்துகிறது. இதன் மூலம் அஹங்காரத்தின் செயல்பாடு கூறப்பட்டது.

101. இதில் வைகாரிகத்தில் நின்றும் ச்ரோத்ர த்வக் சக்ஷுர் ஜிஹ்வா க்ராணங்களென்கிற ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும், வாக் பாணி பாத பாயூபஸ்த்தங்களென்கிற கர்மேந்த்ரியங்களைந்தும், மநஸ்ஸுமாகிற பதினோரிந்த்ரியங்களும் பிறக்கும்.

**வ்யாக்யானம்** - (இதில், வைகாரிகத்தில் நின்றும்) இத்யாதி. அதாவது, இப்படி த்ரிவிதமான அஹங்காரத்தில் வைகாரிகமாவது ஸாத்விக அஹங்காரமாகையாலே, இதில் நின்றும், ஸத்வ கார்யமான லகுத்வ ப்ரகாசத்வங்களையுடைத்தான இந்த்ரியங்கள் பதினொன்றும் பிறக்கும் என்கை.

**விளக்கம்** - (இதில், வைகாரிகத்தில் நின்றும்) - இப்படியாக மூன்றுவிதமாக உள்ள அஹங்காரத்தில், வைகாரிக அஹங்காரமானது ஸாத்விக அஹங்காரம் ஆகிறது. எனவே, இதிலிருந்து, ஸத்வகார்யமாகிய சிறிதான ப்ரகாசங்களைக் கொண்டதான பதினோரு இந்த்ரியங்கள் பிறக்கின்றன.

**வ்யாக்யானம் -** வைகாரிகத்தில் நின்றும் ஏகாதசேந்த்ரியங்களும் பிறக்குமென்று சொல்லி விடாதே, (ச்ரோத்ர த்வக் சக்ஷுர் ஜிஹ்வா க்ராணங்களென்கிற ஜ்ஞானேந்த்ரியங்க ளைந்தும், வாக் பாணி பாத பாயு உபஸ்த்தங்களென்கிற கர்மேந்தரியங்களைந்தும், மநஸ்ஸும் ஆகிற பதினோரிந்த்ரியங்களும்) என்று இப்படி அருளிச் செய்தது, இவற்றினுடைய கார்ய பேதத்தையும், ஸம்ஜ்ஞா பேதத்தையுமொழிய, இவற்றினுடைய ஸ்வரூப பேதமும், வ்யவஹார பேதமும் தோற்றாதென்று. மநஸ்ஸுகு கார்யம் உபய ஸஹகாரித்வம். அதுதான் இவ்விடத்தில் சொல்லாதொழிந்தது, மேலே இவை தன்னை விஸ்தரேண சொல்லுகிறவிடத்திலே சொல்லுகிறோமென்று. இந்த்ரியங்கள் ஸாத்விக அஹங்கார கார்யமென்று அருளிச்செய்கையாலே, இவற்றை ராஜஸ அஹங்கார கார்யமென்கிற பக்ஷம் ப்ரதிக்ஷிப்தம்.

**விளக்கம் -** ஆனால், "வைகாரிகத்திலிருந்து பதினோரு இந்த்ரியங்கள் பிறக்கும்" என்று நேரடியாகக் கூறாமல், "ச்ரோத்ர த்வக் சக்ஷுர் ஜிஹ்வா க்ராணங்களென்கிற ஜ்ஞானேந்த்ரியங்க ளைந்தும், வாக் பாணி பாத பாயு உபஸ்த்தங்களென்கிற கர்மேந்தரியங்களைந்தும், மநஸ்ஸும் ஆகிற பதினோரிந்த்ரியங்களும்" என்று ஏன் அருளிச்செய்தார்? இதற்கு விடை அருளிச்செய்கிறார். அதாவது நேரடியாக அருளிச் செய்தால், இந்திரியங்களில் உள்ள கார்ய வேறுபாடுகள் மற்றும் பெயர் வேறுபாடுகள் மட்டுமே வெளிப்படும் அல்லாமல், அவற்றுடைய ஸ்வரூப வேறுபாடுகள் மற்றும் செயலாற்றுதலில் உள்ள வேறுபாடுகள் வெளிப்படாது என்பதால் ஆகும். மனமானது, ஞானேந்த்ரியங்கள் மற்றும் கர்மேந்த்ரியங்கள் ஆகிய இரண்டிற்கும் உதவுவது ஆகும். அதனை இங்கு ஏன் கூறவிலை என்றால், இந்த்ரியங்கள் குறித்து அடுத்து விரிவாக அருளிச்செய்ய உள்ளதால் ஆகும். "இந்த்ரியங்கள் அனைத்தும் ஸாத்விக அஹங்காரத்திலிருந்து வெளிப்பட்டவை ஆகும்", என்று கூறுவதன் மூலம், "இவை ராஜஸ அஹங்காரத்தின் வெளிப்பாடு" என்று கூறும் கருத்தானது மறுக்கப்பட்டது.

**வ்யாக்யானம் –** "தைஜஸாநீந்த்ரியாண்யாஹுர் தேவா வைகாரிகா தச, ஏகாதசம் மநச்சாத்ர தேவா வைகாரிகாஸ் ஸ்ம்ருதா:" என்றும், "அக்நிர் வாக் பூத்வா முகம் ப்ராவிசத் வாயுர் க்ராணோ பூத்வா நாஸிகே ப்ராவிசத்; ஆதித்யச் சக்ஷுர் பூத்வா அக்ஷிணீ ப்ராவிசத்; திசச் ச்ரோத்ரம் பூத்வா கர்ணௌ ப்ராவிசத்; ஓஷதி வநஸ்பதயோ லோமாநி

பூத்வா த்வசம் ப்ராவிசத்; சந்த்ரமா மநோ பூத்வா ஹ்ருதயம் ப்ராவிசத்; ம்ருத்யுரபாநோ பூத்வா நாபிம் ப்ராவிசத்; ஆபோ ரேதோ பூத்வா சிச்நம் ப்ராவிசத்" என்கிறபடியே, தேவாதிஷ்டிதங்களாகையாலே, தேவ சப்த வாச்யங்களான இந்த்ரியங்கள் பதினொன்றும் ராஜஸ அஹங்கார கார்யமென்பர்கள சிலர், ஸாத்விக அஹங்கார கார்யமென்பர்கள் சிலர் என்று சொல்லி, அதில் ஸாத்விகாஹங்கார கார்யமென்கிறதே ஸ்வபக்ஷமாக ஸ்ரீபராசர பகவான் நிச்சயிக்கையாலே, இவர்க்கு இப்படி அருளிச் செய்யக் குறையில்லையிறே.

**விளக்கம்** - மேலும், ஸ்ரீ. விபு. (1-2-47) - தைஜஸாநி இந்த்ரியாணி ஆஹு: தேவா வைகாரிகா தச | ஏகாதசம் மநச்சாத்ர தேவா வைகாரிகாஸ் ஸ்ம்ருதா: - இந்திரியங்கள் அனைத்தும் தைஜஸம் (ஒளி எனலாம்) எனப்படும், பத்து இந்த்ரியங்களும் வைகாரிகா எனப்படும், மனம் பதினொன்றாவது ஆகும், இவை தேவதைகளால் புகப்பட்டதால் "தேவ" என்னும் சப்தத்தால் கூறத்தக்கதாக – என்றும், ஐதரேய உபநிஷத் (2-1-4) - அக்நிர் வாக் பூத்வா முகம் ப்ராவிசத்; வாயுர் க்ராணோ பூத்வா நாஸிகே ப்ராவிசத்; ஆதித்யச் சக்ஷுர் பூத்வா அக்ஷிணீ ப்ராவிசத்; திசச் ச்ரோத்ரம் பூத்வா கர்ணௌ ப்ராவிசத்; ஓஷதி வநஸ்பதயோ லோமாநி பூத்வா த்வசம் ப்ராவிசத்; சந்த்ரமா மநோ பூத்வா ஹ்ருதயம் ப்ராவிசத்; ம்ருத்யுரபாநோ பூத்வா நாபிம் ப்ராவிசத்; ஆபோ ரேதோ பூத்வா சிச்நம் ப்ராவிசத் – அக்னி வாக்காக மாறி முகத்தை அடைந்தான், வாயு முகரும் இந்த்ரியமாக மாறி மூக்கை அடைந்தான், சூரியன் பார்வையாக மாறி கண்ணை அடைந்தான், திசையின் அபிமானி தேவதையானவன் கேட்கும் இந்த்ரியமாக மாறி செவியை அடைந்தான், செடிகள் மற்றும் கொடிகள் தங்களுடைய அபிமான தேவதைகளாக மாறி மரங்களும் முடியும் என்றாகி தொடு இந்த்ரியங்களை அடைந்து நின்றன, சந்த்ரன் மனமாக மாறி இதயத்தை அடைந்தான், யமன் அபான வாயுவாக மாறி நாபியை அடைந்தான், நீரானது ரேதஸ்ஸாகி மாறி மர்மக்குறியை அடைந்தது - என்றும் கூறுவதற்கு ஏற்ப, "இந்த்ரியங்கள் அனைத்தும் தேவதைகளால் ப்ரவேசிக்கப்பட்ட தாகின்றன. எனவே தேவர்கள் என்ற சொல்லின் பொருளான இந்த்ரியங்கள் பதினொன்றும், ராஜஸ அஹங்காரத்தின் வெளிப்பாடு என்று சிலர் கூறுவர், ஸாத்விக அஹங்காரத்தின் வெளிப்பாடு என்றும் சிலர் கூறுவர்", என்று உரைத்து, "அவை அனைத்தும் ஸாத்விக அஹங்காரத்தின் கார்யமே ஆகும்" என்பதே தனது கருத்தாக ஸ்ரீபராசரபகவான் அருளிச்செய்ததால், இவரும் இங்கு அதனைத் தனது கருத்தாகவும் கூறியதில் தவறில்லை.

**வ்யாக்யானம் -** இந்த்ரியங்கள் பதினொன்று என்கிற நியமமும் வ்யஷ்டி விஷயமன்று, ஸமஷ்டி விஷயம். “தேஷாந்த்வவயவாந ஸூக்ஷ்மாந் ஷண்ணாமப்யமிதௌஜஸாம், ஸந்நிவே ச்யாத்ம மாத்ராஸு ஸர்வபூதாநி நிர்மமே” என்று அணுக்களாகையாலே ஸூக்ஷ்மங்களான இந்தரியங்களினுடைய அம்சங்களை ஆத்மமாத்ரைகளிலே ப்ரவேசிப்பித்து ஸர்வ பூதங்களையும் ஈச்வரன் ஸ்ருஷ்டித்தானென்று மநு வசநமுண்டாகையாலே. இதில் (ஸூக்ஷ்மாந்) என்கையாலே, “அணவச்ச” என்கிற ஸூத்ர மர்யாதையாலே இந்த்ரியங்கள் அணுவென்றும்; (அவயவாந்) என்கையாலே இந்த்ரியங்கள்தோறும் வ்யக்தி பாஹுள்யமுண்டென்றும்; ஆத்ம மாத்ரைகளிலே கூட்டினான் என்கையாலே, அடியிலே கொடுத்த இந்த்ரியங்களே யாவத்ஸம்ஸாரம் அநுவர்த்திக்குமென்றும்; “சரீரம் யத் அவாப்நோதி யச்சாப்யுத்க்ராமதீச்வர:, க்ருஹீத வைதாநி ஸம்யாதி வாயுர் கந்தா நிவாசயாத்” என்கிறபடியே, சரீரத்தை விட்டு சரீராந்தரத்தை ப்ரவேசிக்கும்போது இந்த்ரியங்களை க்ரஹித்துக் கொணடு போமென்றும் தோற்றுகிறது. (ஷண்ணாம்) என்றும், (மநஷ்ஷஷ்ட்டாநி) என்றும் சொலலுகிற ஸங்க்யா நிர்தேசத்தில் நிர்பந்தமில்லை; இந்த்ரியாந்தரங்களும் கூடிப் போகையாலே.

**விளக்கம் -** “இந்த்ரியங்கள் பதினொன்று ஆகும்” என்னும் விதிமுறையும், தனித்தனியாக படைப்பு விஷயம் அல்ல, தொகுத்த படைப்பு விஷயம் ஆகும்; மநுஸ்ம்ருதி (1-16) - “தேஷாந்த்வவயவாந ஸூக்ஷ்மாந் ஷண்ணாமப்யமிதௌஜஸாம், ஸந்நிவே ச்யாத்ம மாத்ராஸு ஸர்வபூதாநி நிர்மமே - மிகுந்த தேஜஸ் கொண்ட ஆறு இந்த்ரியங்களைக் காட்டிலும் ஸூஷ்மமான தந்மாத்ரைகளில் தனது மாற்றங்களைச் சேர்த்து, அனைத்து பூதங்களையும் ஈச்வரன் ஸ்ருஷ்டி செய்தான் - என்று மநுவின் வசனம் உள்ளதால் ஆகும். மேலே உள்ள “ஸூக்ஷ்மாந்” என்பதன் மூலம், ப்ர. ஸூ (2-4-6) - அணவ: ச – இந்த்ரியங்களும் அணு அளவே ஆகும் - என்பதன் விளைவாக, இந்த்ரியங்கள் அணு அளவே எனப்பட்டது. “அவயவாந்” என்பதன் மூலம், இந்த்ரியங்களிடம் பல பெயர்கள் உண்டு எனப்பட்டது. “ஆத்ம மாத்ரைகளில் கூட்டினான்” என்பதன் மூலம், ஜீவாத்மாக்களுக்கு முதலில் அளிக்கப்பட்ட இந்த்ரியங்களானவை, ஸம்ஸாரம் உள்ள காலம் முடிய தொடரும் எனப்பட்டது. கீதை. (15-8) - சரீரம் யத் அவாப்நோதி யத் ச அபி உத்க்ராமதீச்வர: || க்ரஹீத்வைதாநி ஸம்யாதி வாயுர் கந்தாநிவாசயாத் - காற்றானது எவ்விதம் மலர்களிடம் உள்ள நறுமணத்தைக் கவர்ந்து செல்லுமோ அது போன்று, உயிர் பிரிந்த பின்னர், ஜீவன் தன்னுடன் இவை அனைத்தையும் (இந்த்ரியங்கள்) எடுத்துச்

செல்கிறான் - என்பதன் மூலம், ஒரு சரீரத்தை விட்டு அடுத்த சரீரத்தில் புகும்போது இந்த்ரியங்களை எடுத்துச் செல்கிறான் என்பது வெளிப்படுகிறது. "ஷண்ணாம், மந: ஷஷ்ட்டாநி" என்று கூறும் கணக்கின் எண்ணிக்கையில் எந்த ஒரு கட்டாயமும் இல்லை; மற்ற இந்த்ரியங்களும் சேர்ந்து செல்வதால் ஆகும்.

102. பூதாதியில் நின்றும் சப்த தந்மாத்ரை பிறக்கும்; இதில் நின்றும் ஆகாசமும், ஸ்பர்ச தந்மாத்ரையும் பிறக்கும்; இதில் நின்றும் வாயுவும், ரூப தந்மாத்ரையும் பிறக்கும்; இதில் நின்றும் தேஜஸ்ஸும் ரஸ தந்மாத்ரையும் பிறக்கும்; இதில் நின்றும் அப்பும், கந்த தந்மாத்ரையும் பிறக்கும்; இதில் நின்றும் ப்ருதிவி பிறக்கும்.

அவதாரிகை – இனிமேல், "பூத தந்மாத்ரஸர்கோயமஹங்காராத்து தாமஸாத்" என்கிறபடியே, பூதாதி சப்த வாச்யமான தாமஸாஹங்காரத்தில் நின்றும் தந்மாத்ர பஞ்சகமும், தத் விசேஷமான ஆகாசாதி பஞ்சபூதங்களும் உத்பந்நங்களாம் க்ரமம் அருளிச் செய்கிறார் (பூதாதியில் நின்றும் சப்த தந்மாத்ரை பிறக்கும்) என்று தொடங்கி.

**விளக்கம் -**அடுத்து ஸ்ரீவிபு. (1-2-48) - பூத தந்மாத்ர ஸர்கோயம் அஹங்காராத் து தாமஸாத் – பூதங்கள் மற்றும் தந்மாத்ரைகள் அனைத்தும் தாமஸ அஹங்காரத்திலிருந்து உண்டாகின்றன - என்பதற்க்கு ஏற்ப, பூதம் முதலான சொற்களுக்குப் பொருளாக உள்ள தாமஸ அஹங்காரத்திலிருந்து ஐந்து தந்மாத்ரைகளும், அவற்றின் விசேஷங்களாக உள்ள ஆகாசம் முதலான ஐந்து பூதங்களும் உற்பத்தி ஆகின்ற வரிசையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது பூதாதி ஸம்ஜ்ஞகமான தாமஸ அஹங்காரத்தில் நின்றும், ஆகாசத்தினுடைய ஸூக்ஷ்மாவஸ்தையான சப்த தந்மாத்ரை பிறக்கும். இந்த சப்த தந்மாத்ரையில் நின்றும், இதினுடைய ஸ்தூலாவஸ்தையாய் வ்யக்த சப்த குணகமான ஆகாசமும், வாயுவினுடைய ஸூக்ஷ்மாவஸ்தையான ஸ்பர்ச தந்மாத்ரையும் பிறக்கும். இந்த ஸ்பர்ச தந்மாத்ரையில் நின்றும், இதினுடைய ஸ்தூலாவஸ்தையாய ஸ்பர்ச குணகமான வாயுவும், தேஜஸ்ஸினுடைய ஸூக்ஷ்மமான ரூப தந்மாத்ரையும் பிறக்கும். இந்த ரூப தந்மாத்ரையில் நின்றும், இதினுடைய ஸ்தூலாவஸ்தையாய ரூப குணகமான தேஜஸ்ஸும், அப்பினுடைய ஸூக்ஷ்மமான ரஸ தந்மாத்ரையும் பிறக்கும். இந்த ரஸ

தந்மாத்ரையில் நின்றும், இதினுடைய ஸ்தூலாவஸ்தையாய ரஸ குணையான அப்பும், ப்ருதிவியினுடைய ஸூக்ஷ்மமான கந்த தந்மாத்ரையும் பிறக்கும். இந்த கந்த தந்மாத்ரையில் நின்றும், இதினுடைய ஸ்தூலாவஸ்தையா கந்தய் குணையான ப்ருதிவி பிறக்கும் என்கை.

**விளக்கம் -** பூதாதி என்று அறியப்படுவதான தாமஸ அஹங்காரத்திலிருந்து, ஆகாசத்தின் ஸூக்ஷ்ம நிலையாகிய சப்த தந்மாத்ரை தோன்றுகிறது. இந்த சப்த தந்மாத்ரையிலிருந்து, இதன் ஸ்தூல நிலையாகிய தெளிவான ஓசை என்பதை உள்ளடக்கிய ஆகாசமும், வாயுவின் ஸூக்ஷ்ம நிலையாகிய ஸ்பர்ச தந்மாத்ரையும் பிறக்கின்றன. இந்த ஸ்பர்ச தந்மாத்ரையிலிருந்து, இதன் ஸ்தூல நிலையாகிய ஸ்பர்ச குணத்தை உள்ளடக்கிய வாயுவும், தேஜஸ்ஸின் ஸூக்ஷ்ம நிலையாகிய ரூப தந்மாத்ரையும் பிறக்கின்றன. இந்த ரூப தந்மாத்ரையிலிருந்து, அதன் ஸ்தூல நிலையாகிய ரூப குணத்தை உள்ளடக்கிய தேஜஸ்ஸும், நீருடைய ஸூக்ஷ்மமான சுவை தந்மாத்ரையும் பிறக்கின்றன. இந்தச் சுவை தந்மாத்ரையிலிருந்து, அதன் ஸ்தூல நிலையாகிய சுவையை உள்ளடக்கிய நீரும், பூமியின் ஸூக்ஷ்மமான மண தந்மாத்ரையும் பிறக்கின்றன. இந்த மண தந்மாத்ரையிருந்து, அதன் ஸ்தூல நிலையாகிய மணத்தை உள்ளடக்கிய பூமி பிறக்கிறது.

**வ்யாக்யானம் –** "ஆகாசமும் ஸ்பர்ச தந்மாத்ரையும் பிறக்கும். வாயுவும் ரூப தந்மாத்ரையும் பிறக்கும்" என்று உத்பத்தி சொல்லுகிறவளவில், பூதத்தை முற்படச் சொல்லி, தந்மாத்ரையைப் பிற்படச் சொல்லிக் கொண்டு வந்தது, பூதோத்பத்திதகு அநந்தரம் தந்மாத்ரோத்பத்தியென்கிற க்ரமம் தோற்றுகைக்காக இந்த தந்மாத்ராத் தந்மாத்ரோத்பத்தி க்ரமம் நம்மாசார்யர்களுக்கு மிகவும் ஆதரணீயமாய்ப் போரும்; அதுக்கடி, "அஷ்டௌ ப்ரக்ருதய: ஷோடச விகாரா:" என்கிற ச்ருதிக்கு ஸ்வரஸார்த்தம் ஸித்திக்கையாலே. "ஈச்வராத் ப்ரக்ருதி புருஷௌ, ப்ரக்ருதோ மஹாந், மஹதோஹங்காரோஹங்காராச் சப்த தந்மாத்ரம், சப்த தந்மாத்ராதாகாசம் ஸ்பர்ச தந்மாத்ரஞ்ச, ஸ்பர்ச தந்மாத்ராத் வாயு ரூப தந்மாத்ரஞ்ச, ரூப தந்மாத்ராத் தேஜோ ரஸ தந்மாத்ரஞ்ச, ரஸ தந்மாத்ராதாபோ கந்த தந்மாத்ரஞ்ச, கந்த தந்மாத்ராத் ப்ருதிவீ" என்று, இந்த க்ரமத்தை யாதவப்ரகாசாதிகளும் ஆதரித்துக் கொண்டு போந்தார்கள்.

**விளக்கம்** - “ஆகாசமும் ஸ்பர்ச தந்மாத்ரையும் பிறக்கும். வாயுவும் ரூப தந்மாத்ரையும் பிறக்கும்” என்பதாக உற்பத்தி வரிசையைக் கூறியபடி வரும்போது, பூதத்தை முதலில் உரைத்து, அதனைத் தொடர்ந்து தந்மாத்ரையைக் கூறினார்; இது ஏன் என்பதற்கு விடை அளிக்கிறார்; அதாவது பூதத்தின் உற்பத்திற்குப் பின்னரே தந்மாத்ரையின் உற்பத்தி ஏற்படுகிறது என்பதான வரிசை முறை வெளிப்படவே ஆகும். இப்படியாக ஒரு தந்மாத்ரையிலிருந்து அடுத்து தந்மாத்ரையின் உற்பத்தி நிகழ்கிறது என்ற கருத்தானது நம்முடைய பூர்வாசார்யர்கள் கூறும் கருத்திற்கு ஏற்பவே உள்ளது; எப்படி என்றால், கர்ப உபநிஷத்தில் - அஷ்டௌ ப்ரக்ருதய: ஷோடச விகாரா: – எட்டு ப்ரக்ருதிகள், பதினாறு மாற்றங்கள் - என்பதால் ஆகும்; இந்தக் கருத்தானது ச்ருதிக்கு மகிழ்வை ஏற்படுத்துவதால் ஆகும். மேலும், “ஈச்வராத் ப்ரக்ருதி புருஷௌ, ப்ரக்ருதோ மஹாந், மஹதோஹங்காரோஹங்காராச் சப்த தந்மாத்ரம், சப்த தந்மாத்ராதாகாசம் ஸ்பர்ச தந்மாத்ரஞ்ச, ஸ்பர்ச தந்மாத்ராத் வாயூ ரூப தந்மாத்ரஞ்ச, ரூப தந்மாத்ராத் தேஜோ ரஸ தந்மாத்ரஞ்ச, ரஸ தந்மாத்ராதாபோ கந்த தந்மாத்ரஞ்ச, கந்த தந்மாத்ராத் ப்ருதிவீ - ஈச்வரனிடமிருந்து ப்ரக்ருதியும் ஜீவாத்மாவும் தோன்றுகிறார்கள்; ப்ரக்ருதியிலிருந்து மஹத், மஹத்திலிருந்து அஹங்காரம், அஹங்காரத்திலிருந்து சப்த தந்மாத்ரை, சப்த தந்மாத்ரையிலிருந்து ஆகாசம் மற்றும் ஸ்பர்ச தந்மாத்ரை, ஸ்பர்ச தந்மாத்ரையிலிருந்து வாயு மற்றும் ரூப தந்மாத்ரை, ரூப தந்மாத்ரையிலிருந்து அக்னி மற்றும் சுவை தந்மாத்ரை, சுவை தந்மாத்ரையிலிருந்து நீர் மற்றும் மண தந்மாத்ரை, மண் தந்மாத்ரையிலிருந்து பூமி – என்பதான இந்த வரிசையை யாதவப்ரகாசர் போன்றவர்கள் ஏற்கிறார்கள்.

103. ஸ்பர்ச தந்மாத்ரை தொடக்கமான நாலு தந்மாத்ரைகளும் ஆகாசம் தொடக்கமான நாலு பூதங்களுக்கும் கார்யமாய், வாயு தொடக்கமான நாலு பூதங்களுக்கும் காரணமாயிருக்குமென்றுஞ் சொல்லுவர்கள்.

**அவதாரிகை** – இனி, பூதாத் தந்மாத்ரோத்பத்தி க்ரமமும் சாஸ்த்ர ஸித்தமாகையாலே அத்தையும் ஸங்க்ரஹேண அருளிச் செய்கிறார் (ஸ்பர்ச தந்மாத்ரை தொடக்கமான நாலு தந்மாத்ரைகளும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - அடுத்து, பூதங்கள் மற்றும் தந்மாத்ரைகள் ஆகியவற்றின் உற்பத்தியானது சாஸ்த்ரங்களிலும் கூறப்பட்டுள்ளதால், அவற்றையும் சுருக்கமாக அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பூதாதியில் நின்றும் சப்த தந்மாத்ரை பிறக்கும், சப்த தந்மாத்ரையில் நின்றும் ஆகாசம் பிறக்கும்; ஆகாசத்தில் நின்றும் ஸ்பர்ச தந்மாத்ரை பிறக்கும்; ஸ்பர்ச தந்மாத்ரையில் நின்றும் வாயு பிறக்கும்; வாயுவில் நின்றும் ரூப தந்மாத்ரை பிறக்கும்; ரூப தந்மாத்ரையில் நின்றும் தேஜஸ்ஸு பிறக்கும்; தேஜஸ்ஸில் நின்றும் ரஸ தந்மாத்ரை பிறக்கும்; ரஸ தந்மாத்ரையில் நின்றும் ஜலம் பிறக்கும்; ஜலத்தில் நின்றும் கந்த தந்மாத்ரை பிறக்கும்; கந்த தந்மாத்ரையில் நின்றும் ப்ருதிவி பிறக்கும் என்றபடி.

**விளக்கம் -** பூதாதியிருந்து சப்த தந்மாத்ரை பிறக்கும், சப்த தந்மாத்ரையிலிருந்து ஆகாசம் பிறக்கும், ஆகாசத்திலிருந்து ஸ்பர்ச தந்மாத்ரை பிறக்கும், ஸ்பர்ச தந்மாத்ரையிருந்து வாயு பிறக்கும், வாயுவிலிருந்து ரூப தந்மாத்ரை பிறக்கும், ரூப தந்மாத்ரையிலிருந்து தேஜஸ் பிறக்கும், தேஜஸ்ஸிலிருந்து சுவை தந்மாத்ரை பிறக்கும், சுவை தந்மாத்ரையிலிருந்து நீர் பிறக்கும், நீரிலிருந்து மண தந்மாத்ரை பிறக்கும், மண தந்மாத்ரையிருந்து பூமி பிறக்கும்.

**வ்யாக்யானம் -** இந்த க்ரமம் ஸ்ரீவிஷ்ணுபுராண ஸித்தம்; பூர்வக்ரமம் புராணாந்தர ஸித்த மென்று சொல்லுவர்கள்; அது சொல்லவொண்ணாதிறே. “அஷ்டௌ ப்ரக்ருதயஷ் ஷோடச விகாரா:” என்று ஆகாசாதி பூதங்களைந்தையும், இந்த்ரியங்களோபாதி கேவலம் விக்ருதிகளாக ச்ருதி சொல்லுகையாலே. ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே “ஆகாசஸ்து விகுர்வாண: ஸ்பர்சமாத்ரம் ஸஸர்ஜ ஹ” என்று தொடங்கி, ஸ்பர்ச தந்மாத்ராதிகளுக்குக் காரணமாகச் சொன்ன ஆகாசாதி பதார்த்தங்களையும் தந்மாத்ர லக்ஷணமான பூதங்களாக ஸ்ரீபராசரபகவானுக்கு விவக்ஷிதமென்று நினைத்து வ்யாக்யாதாக்கள் வ்யாக்யாநம் பண்ணி வைக்கையாலே. ஆகையால், ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும் பூதாத் தந்மாத்ரோத்பத்தி சாப்தமாய்த் தோற்றியிருந்ததேயாகிலும், வ்யாக்யாந ப்ரக்ரியையைப் பார்த்தால் தந்மாத்ராத் தந்மாத்ரோத்பத்தி என்றே கொள்ளவேணும். பூதாத் தந்மாத்ரோத் பத்தி பக்ஷத்திலும் “அஷ்டௌ ப்ரக்ருத்ய ஷோடச விகாரா:” என்று சொல்லுகிற ஷோடச விகாரங்களாகிறது, பூதங்களையொழிய ஏகாதசேந்த்ரியங்களும் சப்தாதிகளைந்தும் என்று

தந்மாத்ரங்களுக்கு பூதங்களோடு ஸ்வரூப பேதமின்றியிலே அவஸ்தாபேதமாத்ர மாகையாலே.

**விளக்கம்** - "இந்த வரிசையானது ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் கூறப்பட்டதாகும். முன்பு கூறப்பட்ட வரிசையானது மற்ற புராணங்களில் கூறப்பட்டது", என்றும் சிலர் உரைப்பர்; ஆனால் இவ்விதம் உரைக்க இயலாது. ஏன்? அஷ்டௌ ப்ரக்ருத்ய ஷோடச விகாரா: – எட்டு ப்ரக்ருதிகள் மற்றும் பதினாறு மாற்றங்கள் – என்று, ஆகாசம் முதலான பஞ்சபூதங்களையும், இந்த்ரியங்கள் போன்று வெறும் மாற்றங்களாக ச்ருதி கூறுவதால் ஆகும். மேலும், ஸ்ரீவிபு. (1-2-41) – ஆகாசஸ்து விகுர்வாண: ஸ்பர்சமாத்ரம் ஸஸர்ஜ ஹ – ஆகாசம் மாற்றம் அடைந்து ஸ்பர்ச தந்மாத்ரையை உண்டாக்கியது - என்பது தொடங்கி," "ஸ்பர்ச தந்மாத்ரைகளுக்குக் காரணமாகக் கூறப்பட்ட ஆகாசம் முதலானவற்றையும் தந்மாத்ர லக்ஷணமான பூதங்கள் என்பதே சரியானது" என்னும் கருத்தே ஸ்ரீபராசரபகவான் கூறுவதாகும் என ச்ருதி வ்யாக்யானங்களை இயற்றியவர்கள் வ்யாக்யானம் செய்வதால் ஆகும். எனவே, ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் கூட, "பூதத்திலிருந்து தந்மாத்ரை உண்டானது" என்று சொல் வடிவில் நமக்கும் புலப்படுகிறது என்றாலும், வ்யாக்யானங்களை நோக்கும்போது, "தந்மாத்ரையிலிருந்து தந்மாத்ரை உற்பத்தி ஆகிறது" என்பதாகவே கொள்ளவேண்டும். "பூதங்களிலிருந்து தந்மாத்ரை உற்பத்தி ஆகிறது" என்பதாகக் கூறப்படும் கருத்திலும், "அஷ்டௌ ப்ரக்ருத்ய ஷோடச விகாரா: – எட்டு ப்ரக்ருதிகள் மற்றும் பதினாறு மாற்றங்கள்" என்பது, "பூதங்கள் தவிர உள்ள பதினோரு இந்த்ரியங்களும் ஐந்து புலன்களும்" என்பதாக, தந்மாத்ரைகளுக்கு பூதங்களுடன் ஸ்வரூபத்தில் வேறுபாடு இல்லாமல், நிலைகளில் உள்ள வேறுபாடு மட்டும் உள்ளது என்பதால் ஆகும்.

**வ்யாக்யானம்** – "அஷ்டௌ ப்ரக்ருதய:" என்று ப்ரக்ருதி மஹதஹங்காரங்களையும், ஆகாசாதிகளைந்தையுஞ் சொல்லுகிறதென்றும் ச்ருதயவிரோதம் நிர்வஹிப்பர்கள். இதுதான், ஸ்ரீவேதவ்யாஸ பகவானாலே, "அஷ்டௌ ப்ரக்ருதய: ப்ரோக்தா விகாராச்சாபி ஷோடச, அத வ்யக்தாநி ஸப்தைவ ப்ராஹுஊரத்யாத்ம சிந்தகா:; அவ்யக்தஞ்ச மஹாம்ச்சைவ ததாஹங்கார ஏவ ச, ப்ருதிவீ வாயுராகாசமாபோ ஜ்யோதிச்ச பஞ்சமம், ஏதா ப்ரக்ருத்யஸ்த்வஷ்டௌ விகாராநபி மே ச்ருணு ச்ரோத்ரம் த்வக் சைவ சக்ஷுஊச்ச

ஜிஹ்வா க்ராணஞ்ச பஞ்சமம், வாக் ச ஹஸ்தௌ ச பாதௌ ச பாயுர் மேட்ரம் ததைவச; சப்த ஸ்பர்சௌ ச ரூபஞ்ச ரஸோ கந்தஸ்ததைவச, ஏதே விசேஷா ராஜேந்தர மஹாபூதேஷு; பஞ்சஸு தசேந்த்ரியாண்யதைதாநி ஸவிசேஷாணி மைதில, மநஷ் ஷோடசமித்யாஹுரத்யாத்ம கதி சிந்தகா:” என்று மோக்ஷதர்மத்திலே யாஜ்ஞவல்க்ய ஜநக ஸம்வாதத்திலே சொல்லப்பட்டது.

**விளக்கம் -**“அஷ்டௌ ப்ரக்ருதய: - எட்டு ப்ரக்ருதிகள்” என்பதன் மூலம், “ப்ரக்ருதி, மஹத் அஹங்காரங்கள் மற்றும் ஆகாசம் முதலான ஐந்து பூதங்கள்” கூறப்பட்டதாகவும், ச்ருதிக்கு முரண்பாடு ஏற்படாமல் சிலர் கூறுவார்கள். இந்தக் கருத்தானது, ஸ்ரீவேதவ்யாஸ பகவானால் - அஷ்டௌ ப்ரக்ருதய: ப்ரோக்தா விகாராச்சாபி ஷோடச, அத வ்யக்தாநி ஸப்தைவ ப்ராஹுரத்யாத்ம சிந்தகா:; அவ்யக்தஞ்ச மஹாம்ச்சைவ ததாஹங்கார ஏவ ச, ப்ருதிவீ வாயுராகாசமாபோ ஜ்யோதிச்ச பஞ்சமம், ஏதா ப்ரக்ருத்யஸ்த்வஷ்டௌ விகாராநபி மே ச்ருணு; ச்ரோத்ரம் த்வக் சைவ சக்ஷுச்ச ஜிஹ்வா க்ராணஞ்ச பஞ்சமம், வாக் ச ஹஸ்தௌ ச பாதௌ ச பாயுர் மேட்ரம் ததைவச; சப்த ஸ்பர்சௌ ச ரூபஞ்ச ரஸோ கந்தஸ்ததைவச, ஏதே விசேஷா ராஜேந்தர மஹாபூதேஷு; பஞ்சஸு தசேந்த்ரியாண்யதைதாநி ஸவிசேஷாணி மைதில, மநஷ் ஷோடசமித்யாஹுரத்யாத்ம கதி சிந்தகா: - ப்ரக்ருதிகள் எட்டு எனக் கூறப்படுகின்றன; மாற்றங்கள் பதினாறு என்றும், அதன் பின்னர் தெளிவாகக் காணப்படும் மாற்றங்கள் ஏழு என்றும் மோக்ஷ சாஸ்த்ரம் கற்றவர்கள் கூறுகிறார்கள். அவ்யக்தம், மஹத் மற்றும் அஹங்காரம் என்பதுடன் ப்ருதிவீ, வாயு, ஆகாசம், நீர் மற்றும் தேஜஸ் என்பதான ஐந்தும் சேர்த்து எட்டு ப்ரக்ருதிகள் ஆகும். அவை ஒன்றுக்கொன்று காரணங்களாக உள்ளதையும், மாற்றங்களாக உள்ளதையும் நான் கூறக் கேட்பாயாக. செவி, தோல், கண், நாக்கு, மூக்கு என ஐந்து; வாக்கு, கைகள் காலகள், மலமூத்ர கருவிகள் மற்றும் மர்மக்குறிகள் என ஐந்து; ஓசை, உருவம், சுவை, மணம் மற்றும் தொடுதல் என ஐந்து என்று இப்படியாக பஞ்சபூதங்களுடைய விசேஷங்கள் உள்ளன. விசேஷங்களுடன் கூடிய இந்த ஐந்து பூதங்கள், பத்து இந்த்ரியங்கள் ஆகியவற்றுடன் சேர்த்து இறுதியாக மனதையும் பதினாறாவது விஷயமாக மோக்ஷம் குறித்து எண்ணுபவர்கள் கூறுகிறார்கள் – என்பதாக மஹாபாரதம் மோக்ஷ தர்மத்தில், யாஜ்ஞவல்க்யர் மற்றும் ஜனகர் ஆகியவர்களுக்கு இடையில் நடைபெற்ற உரையாடல் கூறப்பட்டது.

**வ்யாக்யானம் -** அப்படியே யம ஸ்ம்ருதியிலும் "மநோ புத்திரஹங்காரகாநிலாக்நி ஜலாநி பூ:, ஏதா ப்ரக்ருதயஸ் த்வஷ்டௌ விகாராஷ் ஷோடசாபரே, ச்ரோத்ராக்ஷி ரஸநாக்ராண த்வக் ச ஸங்கல்ப ஏவ ச, சப்த ரூப ரஸ ஸ்பர்ச கந்த த்வக் பாணிபாயவ:, உபஸ்த பாதாவிதி ச விகாராஷ்ஷோடச ஸ்ம்ருதா" என்று சொல்லப்பட்டது. இந்த ஸ்ம்ருதியில் ப்ரக்ருதிகளிலே பரிகணிக்கையாலும், ப்ரதமத்திலே எடுக்கையாலும், மந்தவ்யதையாலே மநஸ்ஸென்று ப்ரதாந தத்வம் சொல்லப்படுகிறது. ஸங்கல்ப சப்தத்தாலே தத்காரணமான மநஸ்ஸு லக்ஷிக்கப்படுகிறதென்று ஸுபாலோபநிஷத் வ்யாக்யாநத்திலே ச்ருதப்ரகாசிகாகாரராலே வ்யாக்க்யாதமாயிற்று. இப்படி இதிஹாஸாதிகளிலே சொல்லப்படுகையாலே, "அஷ்டௌ ப்ரக்ருதய:" என்கிற ச்ருதிக்கு பூதாத் தந்மாத்ர உத்பத்தி பக்ஷத்தில் விரோதாபாவம் ஸுஸ்பஷ்டம்.

**விளக்கம் -** இது போன்று யம ஸ்ம்ருதியில் - மநோ புத்திரஹங்காரகாநிலாக்நி ஜலாநி பூ:, ஏதா ப்ரக்ருதயஸ் த்வஷ்டௌ விகாராஷ் ஷோடசாபரே, ச்ரோத்ராக்ஷி ரஸநாக்ராண த்வக் ச ஸங்கல்ப ஏவ ச, சப்த ரூப ரஸ ஸ்பர்ச கந்த த்வக் பாணிபாயவ:, உபஸ்த பாதாவிதி ச விகாராஷ்ஷோடச ஸ்ம்ருதா - மனம், புத்தி, அஹங்காரம், ஆகாசம், வாயு, அக்னி, நீர் மற்றும் பூமி என்ற எட்டும் ப்ரக்ருதிகள்; மற்ற அனைத்து பதினாறும் மாற்றங்கள் ஆகும்; செவி, கண், வாய், மூக்கு, தோல் ஆகியவற்றுடன் எண்ணம் என்பதும் சேர்ந்து; ஒலி, உருவம், சுவை, தொடு உணர்ச்சி, மனம், நாக்கு, கைகள், மலமூத்ர கருவிகள், மர்ம உறுப்புகள் மற்றும் கால்கள் என்பதான பதினாறு மாற்றங்கள் கூறப்படுகின்றன - என்று உரைக்கப்பட்டது. இந்த யமஸ்ம்ருதியில், ப்ரக்ருதிகளுடன் சேர்ந்து எண்ணப்படுவதாலும், முதலில் கூறப்படுவதாலும், மனனம் செய்வது என்பதால் மனம் என்பதாக இதன் முதன்மைத்தன்மை உள்ளது. ச்லோகத்தில் உள்ள "ஸங்கல்பம் – எண்ணுதல்" என்பதன் மூலம், அதன் காரணமான மனம் என்பது உணர்த்தப்படுகிறது என்பதாக ஸுபால உபநிஷத் உரையில் ச்ருதப்ரகாசிகாகாரர் வ்யாக்யானம் செய்தார். இவ்விதம் இதிஹாஸம் போன்றவற்றில் கூறப்படுவதால், "அஷ்டௌ ப்ரக்ருதய: - எட்டு ப்ரக்ருதிகள்" என்பதான

ச்ருதி வாக்கியத்திற்கும், “பூதத்திலிருந்து தந்மாத்ரை உற்பத்தி ஆகிறது” என்று கூறும் கருத்திற்கும் விரோதம் இல்லை என்றாகிறது.

**வ்யாக்யானம்** – “த்வசா பீஜமிவா வ்ருதம்” என்கிற த்ருஷ்டாந்த பலத்தாலே த்வக்கில்லாத பீஜத்துக்கு அங்குர சக்தியில்லாதவோபாதி ஆவாரகத்தை யொழிந்தபோது உத்தர கார்ய சக்தியில்லையென்று தோற்றுகையாலும், காரணகுணத்தையொழிய உத்தரோத்தர விசேஷங்களில் “ஆத்யாத்யஸ்ய குணாநேதாநாப்நோதி ச பர: பர:” என்று ஸ்வவிசேஷத்துக்குச் சொல்லுகிற குணாதிசயம் கூடாமையாலும், “ஆகாசம் சப்த மாத்ரந்து ஸ்பர்சமாத்ரம் ஸமாவிசத், ரூபம் ததைவாவிசதச் சப்த ஸ்பர்ச குணாவுபௌ: சப்த ஸ்பர்சச்ச ரூபஞ்ச ரஸமாத்ரம் ஸமாவிசந், தஸ்மாத் சதுர்குணா ஹ்யாபோ விசேஷாச்சேந்த்ரிய க்ரஹா:” என்கிற புராணவசநங்களினுடைய ஆநுகுண்யத்துக்காகவும், “தேப்யஸ் தந்மாத்ரேப்யோ யதா ஸங்க்யமேக த்வி த்ரி சது: பஞ்சப்யோ பூதாந்யாகாசாநிலாநல ஸலிலாவ நிரூபாணி பஞ்ச ஜாயந்தே” என்று இதில் அதிக்ருதனான ஸாங்க்ய வாசஸ்பதி சொல்லுகையாலும், “கார்யோத் பாதகங்களான தத்வங்கள் ஸ்வஸ்வ காரணாவ்ருதங்களாய்க் கொண்டே உத்பாதிக்கிறதென்று சொல்ல வேணும்” என்று, தத்வத்ரய விவரணத்திலே ஆச்சான்பிள்ளை அருளிச்செய்கையாலும், “ப்ரதாந தத்வமுத்பூதம் மஹாந்தம் தத் ஸமாவ்ருணோத்”, “யதா ப்ரதாநேந மஹாந் மஹதா ஸ ததாவ்ருத:”, “சப்தமாத்ரம் ததாகாசம் பூதாதிஸ் ஸஸமாவ்ருணோத்”, “ஆகாசம் சப்த மாத்ரஸ்து ஸ்பர்சமாத்ரம் ஸமாவ்ருணோத்”, “ஸ்பர்சமாத்ரஸ்து வைவாயு ரூப மாத்ரம் ஸமாச்ருணோத்”, “ரஸ மாத்ராணி சாம்பாம்ஸி ரூப மாத்ரம் ஸமாவ்ருணோத்” என்று ஸ்ரீபராசரபகவானாலே உக்தமாகையாலும், “முன்புத்தை தந்மாத்ரைகளோடு கூடிக்கொண்டு உத்தரோத்தர தந்மாத்ரைகள் ஸ்வவிசேஷங்களைப் பிறப்பிக்கையாலே” என்று இவர் தாமே மேலே அருளிச்செய்கையாலும் ஆவரண க்ரமங்கொள்ளவேணும்.

**விளக்கம்** - ஸ்ரீவிபு (1-2-37) - த்வசா பீஜமிவா வ்ருதம் – தோலால் மூடப்பட்ட விதை போன்று - என்கிற உதாரணம் மூலம், “தோலால் மூடப்படாத விதைக்கு முளை விடும் சக்தி இல்லாதது போன்று, மேலே மூடப்படும் திரை இன்றி, அடுத்து வரவுள்ள கார்யம் ஏற்படாது” என்பது வெளிப்படுவதாலும்; காரணப்பொருளுடைய குணம் அல்லாமல், பின்னர் வரவுள்ள சிறப்புக்களில், மநுஸ்ம்ருதி (1-20) - ஆத்யாத்யஸ்ய குணாநேதாநாப்நோதி ச பர: பர: - முன்பு உள்ள தத்வங்களுடைய குணங்கள், பின்னர்

வரவுள்ள தத்வங்களை அடைகின்றன - என்பதற்கு ஏற்ப, தங்கள் சிறப்புகளைத் தனியாக உரைக்கும்படியாக குணச் சிறப்பு ஏதும் இல்லை என்பதாலும்; ஆகாசம் சப்த மாத்ரந்து ஸ்பர்சமாத்ரம் ஸமாவிசத், ரூபம் ததைவாவிசதச் சப்த ஸ்பர்ச குணாவுபௌ: சப்த ஸ்பர்சச்ச ரூபஞ்ச ரஸமாத்ரம் ஸமாவிசந், தஸ்மாத் சதுர்குணா ஹ்யாபோ விசேஷாச்சேந்த்ரிய க்ரஹா: - ஆகாசமானது தனக்குக் காரணமாக உள்ள சப்த தந்மாத்ரை மற்றும் வாயுவின் காரணமான ஸ்பர்ச தந்மாத்ரை ஆகியவற்றை அடைகிறது; இதே போன்று இரண்டாக உள்ள சப்தம் மற்றும் ஸ்பர்ச தந்மாத்திரைகள் ஆகியவை, அக்னியின் காரணமான ரூப தந்மாத்ரையை அடைகின்றன; சப்தம், ஸ்பர்சம் மற்றும் ரூப தந்மாத்ரைகள், நீரின் காரணமாக உள்ள சுவை தந்மாத்ரையை அடைகின்றன; ஆகவே இந்த்ரியங்களால் அறியத்தக்க சிறப்பு கொண்ட நீரானது, நான்கு குணங்கள் கொண்டதாக உள்ளது - என்கிற புராண வசனங்களுக்கு ஒத்துப் போகவேண்டும் என்பதாலும்; தேப்யஸ் தந்மாத்ரேப்யோ யதா ஸங்க்யமேக த்வி த்ரி சது: பஞ்சப்யோ பூதாநி ஆகாச அநில அநல ஸலிலாவ நிரூபாணி பஞ்ச ஜாயந்தே - ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு மற்றும் ஐந்து என்பதான எண்ணிக்கைகளில் அடங்கியுள்ளதான தந்மாத்ரைகளிலிருந்து ஆகாசம், வாயு, அக்னி, நீர் மற்றும் பூமி ஆகிய ஐந்து பூதங்களும் உண்டாகின்றன – என்பதாக இந்த விஷயத்தில் கூடுதலாக உரைக்கின்ற ஸாங்க்ய வாசஸ்பதியின் கூற்று உள்ளதாலும்; "கார்யோத்பாதகங்களான தத்வங்கள் ஸ்வஸ்வ காரணாவ்ருதங்களாய்க் கொண்டே உத்பாதிக்கிறதென்று சொல்ல வேணும் - கார்யத்தை உண்டாக்கக்கூடிய தத்வங்கள் அனைத்தும் தங்களுடைய காரணங்களை மேல்திரையாக மூடியபடியே உண்டாகின்றன என்றே உரைக்கவேண்டும்" என்பதாக தத்வத்ரய விவரணத்தில் ஸ்வாமி ஆச்சான்பிள்ளை கூறுவதாலும்; ஸ்ரீவிபு. (1-2-32) – ப்ரதாந தத்வமுத்பூதம் மஹாந்தம் தத் ஸமாவ்ருணோத் - ப்ரதானம் என்பதால் உண்டாக்கப்பட்ட மஹத் தத்வத்தை வ்யாபித்து நிற்கிறது – என்று, ஸ்ரீவிபு (1-2-36) - யதா ப்ரதாநேந மஹாந் மஹதா ஸ ததாவ்ருத: - எப்படி ப்ரதானத்தால் மஹத் மூடப்பட்டபடி உள்ளதோ அதே போன்று அஹங்காரமானது மஹத்தால் மூடப்பட்டுள்ளது – என்றும், ஸ்ரீவிபு. (1-2-42) - சப்தமாத்ரம் ததாகாசம் பூதாதிஸ் ஸஸமாவ்ருணோத் – தாமஸ அஹங்காரமானது சப்த தந்மாத்ரை மற்றும் ஆகாசத்தை மூடி உள்ளது - என்றும், ஸ்ரீவிபு (1-2-42) – ஆகாசம் சப்த மாத்ரந்து ஸ்பர்சமாத்ரம் ஸமாவ்ருணோத் - ஆகாசமானது சப்த தந்மாத்ரை மற்றும் ஸ்பர்ச தந்மாத்ரை ஆகியவற்றை மூடியுள்ளது - என்றும், ஸ்ரீவிபு (1-2-42) - ஸ்பர்சமாத்ரஸ்து வைவாயூ ரூப மாத்ரம் ஸமாச்ருணோத் – ஸ்பர்ச தந்மாத்ரை மற்றும் ரூப தந்மாத்ரை

ஆகியவற்றை வாயுவானது மூடியுள்ளது – என்றும், ஸ்ரீவிபு (1-2-45) - ரஸ மாத்ராணி சாம்பாம்ஸி ரூப மாத்ரம் ஸமாவ்ருணோத் - நீரானது சுவை தந்மாத்ரை மற்றும் ரூப தந்மாத்ரைகளை மூடியுள்ளது - என்றும் ஸ்ரீபராசரபகவானால் கூறப்பட்டது என்பதாலும்; "முன்புத்தை தந்மாத்ரைகளோடு கூடிக்கொண்டு உத்தரோத்தர தந்மாத்ரைகள் ஸ்வவிசேஷங்களைப் பிறப்பிக்கையாலே - முன்புள்ள தந்மாத்ரைகளோடு கூடியபடி பின்பு தோன்றும் தந்மாத்ரைகள், தங்களுடைய குணங்களைப் பிறக்கும்படிச் செய்வதால்" என்று முன்பு இவரே அருளிச்செய்வதாலும், மேலே கூறியபடியே மூடப்படும் வரிசையைக் கொள்ளவேண்டும்.

**வ்யாக்யானம் -** அப்படியே பூர்வபாவ நியமத்தைப் பற்ற ஸ்பர்ச தந்மாத்ராதிகளுக்கு ஸ்வஸ்வ விசேஷங்களை உத்பாதிக்குமளவில், ஸ்வஸ்வ பூர்வ பூத ஸஹாயத்வமும் கொள்ள வேணும். அதாவது பூதாதியில் நின்றும் சப்த தந்மாத்ரை பிறக்கும், சப்த தந்மாத்ரையை பூதாதி ஆவரிக்கும், இதில் நின்றும் ஆகாசம் பிறக்கும். அநந்தரம் இந்த சப்த தந்மாத்ரையில் நின்றும் ஸ்பர்ச தந்மாத்ரை பிறக்கும், ஸ்பர்ச தந்மாத்ரையை சப்த தந்மாத்ரை ஆவரிக்கும், இப்படி சப்த தந்மாத்ராவ்ருதையாய் ஆகாசத்தை ஸஹாயமாகவுடைத்தான ஸ்பர்ச தந்மாத்ரையில் நின்றும் வாயு பிறக்கும். இந்த ஸ்பர்ச தந்மாத்ரையில் நின்றும் ரூப தந்மாத்ரை பிறக்கும், ரூப தந்மாத்ரையை ஸ்பர்ச தந்மாத்ரையாவரிக்கும், இப்படி ஸ்பர்ச தந்மாத்ராவ்ருதையாய் வாயுவை ஸஹாயமாகவுடைத்தான ரூப தந்மாத்ரையில் நின்றும் தேஜஸ்ஸு பிறக்கும். இந்த ரூப தந்மாத்ரையில் நின்றும் ரஸ தந்மாத்ரை பிறக்கும், ரஸ தந்மாத்ரையை ரூப தந்மாத்ரையாவரிக்கும், இப்படி ரூப தந்மாத்ராவ்ருதையாய் தேஜஸ்ஸை ஸஹாயமாகவுடைத்தான ரஸ தந்மாத்ரையில் நின்றும் அப்பு பிறக்கும். இந்த ரஸ தந்மாத்ரையில் நின்றும் கந்த தந்மாத்ரை பிறக்கும், கந்த தந்மாத்ரையை ரஸ தந்மாத்ரையாவரிக்கும், இப்படி ரஸ தந்மாத்ராவ்ருதையாய் அப்பை ஸஹாயமாகவுடைத்தான கந்த தந்மாத்ரையில் நின்றும் ப்ருதிவி பிறக்கும் என்கை. சப்த தந்மாதத்ராவ்ருதமாய் ஆகாசத்தை ஸஹாயமாகவுடைத்தான ஸ்பர்ச தந்மாத்ரத்தில் நின்றும் வாயு பிறக்குமென்று தொடங்கிச் சொன்ன விசேஷ உத்பத்தியில் க்ரமம், பூதாத் தந்மாத்ர உத்பத்தி பக்ஷத்துக்கும் ஒக்கும்; பூர்வபூர்வ பூதத்தில நின்றும், உத்தர உத்தர தந்மாத்ர உத்பத்தியாகிறவிது விசேஷம். இது தத்வத்ரய விவரணத்தில் ஆச்சான்பிள்ளை அருளிச்செய்த க்ரமம்.

**விளக்கம் -** இதனைப் போன்றே, முன்பு கூறப்பட்ட விதிமுறையைப் பின்பற்றி, ஸ்பர்ச தந்மாத்ரை போன்ற அனைத்தும், தங்கள் தங்கள் குணங்களை ஏற்படுத்தும்போது, முன்பு உள்ளதான தங்கள் தங்கள் பூதத்தின் துணையைக் கைகொள்ளவேண்டும். அதாவது, பூதாதியிருந்து சப்த தந்மாத்ரை பிறக்கும்; சப்த தந்மாத்ரையை பூதாதி மூடும்; அதிலிருந்து ஆகாசம் தோன்றும். அடுத்து, சப்த தந்மாத்ரையிலிருந்து ஸ்பர்ச தந்மாத்ரை பிறக்கும்; ஸ்பர்ச தந்மாத்ரையை சப்த தந்மாத்ரை மூடும்; இவ்விதம் சப்த தந்மாத்ரையால் மூடப்பட்டதும், ஆகாசத்தைத் துணையாகக் கொண்டதும் ஆகிய ஸ்பர்ச தந்மாத்ரையிலிருந்து வாயு தோன்றும். இந்த ஸ்பர்ச தந்மாத்ரையிலிருந்து ரூப தந்மாத்ரை தோன்றும்; ரூப தந்மாத்ரையை ஸ்பர்ச தந்மாத்ரை மூடும்; இவ்விதம் ஸ்பர்ச தந்மாத்ரையால் மூடப்பட்டதும், வாயுவைத் துணையாகக் கொண்டதும் ஆகிய ரூப தந்மாத்ரையிலிருந்து தேஜஸ் பிறக்கும். இந்த ரூப தந்மாத்ரையிலிருந்து சுவை தந்மாத்ரை பிறக்கும்; சுவை தந்மாத்ரையை ரூப தந்மாத்ரை மூடும்; ரூப தந்மாத்ரையால் மூடப்பட்டதும், தேஜஸ்ஸால் உதவி செய்யப்பட்டதும் ஆகிய சுவை தந்மாத்ரையிலிருந்து நீர் பிறக்கும். இந்த சுவை தந்மாத்ரையிலிருந்து மண தந்மாத்ரை பிறக்கும்; மண தந்மாத்ரையை சுவை தந்மாத்ரை மூடும்; சுவை தந்மாத்ரையால் மூடப்பட்டதும், நீரால் உதவி செய்யப்பட்டதும் ஆகிய மண தந்மாத்ரையிலிருந்து பூமி பிறக்கும். "சப்த தந்மாத்ரையால் மூடப்பட்டதும், ஆகாசத்தைத் துணையாகக் கொண்டதும் ஆகிய ஸ்பர்ச தந்மாத்ரையிலிருந்து வாயு பிறக்கும்" என்று தொடங்கிக் கூறப்பட்டதான சிறப்பான உற்பத்தியின் வரிசையானது, "பூதத்திலிருந்து தந்மாத்ரை பிறக்கும்" என்று கூறும் கருத்திற்கும் பொருந்தும். முன்பு உள்ள தந்மாத்ரையிலிருந்து, பின்பு பின்பு தந்மாத்ரை உற்பத்தி ஆகின்றன என்பதே இங்கு சிறப்பாகும். இதுவே தத்வத்ரய விவரணத்தில் ஸ்வாமி ஆச்சான்பிள்ளை அருளிச்செய்த வரிசையாகும்.

**வ்யாக்யானம் -** இங்ஙனன்றிக்கே தத்வநிரூபணத்திலே ஜீயரருளிச் செய்ததும் ஒரு க்ரமமுண்டு. அதாவது, "பூதாதியில் நின்றும் சப்த தந்மாத்ரை பிறக்கும்; சப்த தந்மாத்ரையில் நின்றும், அதினுடைய ஸ்தூலாவஸ்தையான ஆகாசம் பிறக்கும்; சப்த தந்மாத்ரத்தையும் ஆகாசத்தையும் பூதாதி ஆவரிக்கும்; இப்படி பூதாத்யாவ்ருதமாய், ஸ்தூல ஆகாச ஸஹக்ருதமாய்க் கொண்டு விக்ருதமான சப்த தந்மாத்ரத்தில் நின்றும் ஸ்பர்ச தந்மாத்ரம் பிறக்கும்; அதில் நின்றும் ஸ்பர்ச குணகமான வாயு பிறக்கும்;

அவையிரண்டையும், காரணமான சப்த தந்மாத்ரையாவரிக்கும்; சப்த தந்மாத்ராவ்ருதமாய், வாயு ஸஹக்ருதமாய் விகரித்த ஸ்பர்ச தந்மாத்ரத்தில் நின்றும் ரூப தந்மாத்ரை பிறக்கும்; அதில் நின்றும் ரூப குணகமான தேஜஸ்ஸு பிறக்கும்; அவையிரண்டையும், காரணமான ஸ்பர்ச தந்மாத்ரை ஆவரிக்கும்; இத்தாலே ஆவ்ருதமாய், தேஜஸ் ஸஹக்ருதமாய் விகரித்த ரூப தந்மாத்ரத்தில் நின்றும் ரஸ தந்மாத்ரை பிறக்கும்; அதில் நின்றும், ரஸ குணகமான ஜலம் பிறக்கும்; அவையிரண்டையும், காரணமான ரூப தந்மாத்ரம் ஆவரிக்கும்; இத்தாலே ஆவ்ருதமாய், அம்ப ஸஹக்ருதமாய்க் கொண்டு விகரித்த ரஸ தந்மாத்ரத்தில் நின்றும் கந்த தந்மாத்ரம் பிறக்கும்; அதில் நின்றும் கந்தகுணையான ப்ருதிவி பிறக்கும்; அவையிரண்டையும், காரணமான ரஸ தந்மாத்ரம் ஆவரிக்கும்", என்கை. இதில் முற்பட்ட க்ரமத்திலே ஸ்பர்ச தந்மாத்ராதி சதுஷ்டயத்துக்கு ஸ்வஸ்வ விசேஷ உத்பாதநத்தில் பூர்வபூர்வ பூத ஸாஹாய்யம் சொல்லப்பட்டது; பிற்பட்ட க்ரமத்தில், பூர்வ பூர்வ தந்மாத்ரத்துக்கு உத்தரோத்தர தந்மாத்ர உத்பாதநத்தில் ஸ்வஸ்வ விசேஷ ஸாஹாய்யம் சொல்லப்பட்டது. ஆகையால், அந்யோந்ய விரோதமில்லை.

**விளக்கம் -** இவ்விதம் அல்லாமல், தத்வநிரூபணத்தில் ஸ்வாமி வாதிகேஸரி அழகிய மணவாள ஜீயர் அருளிச்செய்த வரிசை ஒன்று உள்ளது. அதாவது பூதாதியிலிருந்து சப்த தந்மாத்ரை பிறக்கும்; சப்த தந்மாத்ரையிலிருந்து, அதனுடைய ஸ்தூல நிலையான ஆகாசம் தோன்றும்; சப்த தந்மாத்ரை மற்றும் ஆகாசம் ஆகியவற்றை பூதாதி மூடும். இவ்விதம் பூதாதியால் மூடப்பட்டதாகவும், ஸ்தூலமான ஆகாசத்தைத் துணையாகக் கொண்டதாகவுமம், சப்த தந்மாத்ரையிலிருந்து ஸ்பர்ச தந்மாத்ரை பிறக்கும்; அதிலிருந்து ஸ்பர்ச குணத்தைக் கொண்டதான வாயு பிறக்கும்; இவை இரண்டையும், அவற்றின் காரணப்பொருளான சப்த தந்மாத்ரை மூடும். இவ்விதம் சப்த தந்மாத்ரையால் மூடப்பட்டதும், வாயுவைத் துணையாகக் கொண்டதும் ஆகிய ஸ்பர்ச தந்மாத்ரையிலிருந்து ரூப தந்மாத்ரை பிறக்கும்; அதிலிருந்து ரூப குணத்தைக் கொண்டதான தேஜஸ் பிறக்கும்; இவை இரண்டையும், அவற்றின் காரணப்பொருளாகிய ஸ்பர்ச தந்மாத்ரை மூடும். இவ்விதம் ஸ்பர்ச தந்மாத்ரையால் மூடப்பட்டதும், தேஜஸ்ஸைத் துணையாகக் கொண்டதும் ஆகிய ரூப தந்மாத்ரையிலிருந்து, ரஸ தந்மாத்ரை பிறக்கும்; அதிலிருந்து ரஸ குணத்தைக் கொண்டதான நீர் பிறக்கும்; இவை இரண்டையும், இவற்றின் காரணப்பொருளாகிய ரூப தந்மாத்ரை மூடும். இவ்விதம் ரூப தந்மாத்ரையால் மூடப்பட்டதும், நீரைத் துணையாகக் கொண்டு மாற்றம் அடைந்ததும்

ஆகிய ரஸ தந்மாத்ரையிலிருந்து கந்த தந்மாத்ரை பிறக்கும்; அதிலிருந்து கந்த குணத்தைக் கொண்டதான பூமி பிறக்கும்; இவை இரண்டையும் இவற்றின் காரணப்பொருளாகிய ரஸ தந்மாத்ரை மூடும்; இதுவே தத்வ நிரூபணத்தில் உள்ள வரிசையாகும். இவற்றில், முதலில் கூறப்பட்ட வரிசையில், ஸ்பர்ச தந்மாரை முதலான நான்கிற்கு, அவை சிறப்பாக உண்டாகும்விதத்தில் அவைஅவைக்கு முன்புள்ள பூதத்தின் உதவி கூறப்பட்டது. அடுத்துள்ள வரிசையில், முன்பு முன்பு உள்ள தந்மாத்ரைகளுக்கு, அவற்றின் பின்னர் பின்னர் உற்பத்தி ஆகின்ற தந்மாத்ரை உற்பத்தியில், அவைஅவைக்கு சிறப்பாக உள்ள உதவி கூறப்பட்டது. எனவே இந்த இரண்டு வரிசைகளுக்கும் ஒன்றுக்கொன்று முரண்பாடு என்பது இல்லை.

**வ்யாக்யானம்** - ஓரொன்றில் இரண்டும் அநுக்தமேயாகிலும், இரண்டும் அபேக்ஷிதமாகையாலே, ஆவரண கதநத்திலும், "பூர்வ பூர்வ தந்மாத்ரம் உத்தரோத்தர தந்மாத்ரத்தையும், தத் விசேஷத்தையும ஆவரிக்கும்", என்று ஜீயரருளிச் செய்கையாலும்; ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே "சப்த மாத்ரம் ததாகாசம் பூதாதிஸ்ஸ ஸமாவ்ருணோத்" என்றவிதுக்கு, "சப்த மாத்ரம் – சப்த தந்மாத்ரம்; ததாகாசம் - ஸ்தூலாகாசஞ்ச ஸ பூதாதிராவ்ருணோத். ஏதேந பூர்வ பூர்வ தந்மாத்ரமுத்தரோத்தர தந்மாத்ரம் தத் விசேஷஞ்சாவ்ருணோதிதி தர்சிதம்" என்று பிள்ளை எங்களாழ்வான் வ்யாக்யானம் பண்ணுகையாலும்; தத்வத்ரய விவரணத்தில், தந்மாத்ரத்துக்கு ஆவரணம் சொன்னவோபாதி தத் விசேஷத்துக்கு ஆவரணம் சொல்லிற்றில்லையேயாகிலும் அது உபலக்ஷணமாமித்தனை. அல்லாதபோது, அவ்விடம் தன்னில் பூதாத் தந்மாத்ரோத்பத்தி சொல்லவும் போகாது. ஆகையாலிரண்டும் கொள்ளவேணும். தத்வநிரூபணத்தில், தந்மாத்ர தத் விசேஷங்களிரண்டுக்கும் ஆவரணம் சொல்லுகிறவளவில் இரண்டையும் சேர்த்துப் பிடித்துச் சொல்லப்பட்டதேயாகிலும், விசேஷ உத்பத்திக்கு முன்பே தந்மாத்ரத்துக்கு ஆவரணம் கொள்ளவேணும். த்வக்கில்லாத பீஜத்துக்கு அங்குர சக்தியில்லாதாப்போலே, ஆவாரகத்தையொழிந்தபோது உத்தர கார்ய சக்தியில்லை யென்னுமிடம் கீழே சொல்லப்பட்டதிறே. இப்படி பூத தந்மாத்ர ஸ்ருஷ்டி சொல்லுகிறவிடத்திலே ஆவரண க்ரமம் வக்தவ்யமாயிருக்கச் செய்தேயும், அருளிச் செய்யாதொழிந்தது அபேக்ஷிதமல்லாமையன்று; ஸங்கோசேந உத்பத்தி க்ரமத்தை அருளிச்செய்தாரித்தனை. பெரியவாச்சான்பிள்ளையும் இப்படியிறே அருளிச்செய்தது.

**விளக்கம்** - இந்த இரண்டில் இரண்டு விஷயங்களும் கூறப்பட்டுள்ளபோது, இரண்டும் அவசியமா என்றால், அந்த இரண்டுமே தேவைப்படுகின்றன என்று கருத்து. மறைவு குறித்துக் கூறப்படும் இடத்தில், "பூர்வ பூர்வ தந்மாத்ரம் உத்தரோத்தர தந்மாத்ரத்தையும், தத் விசேஷத்தையும ஆவரிக்கும் - முன்பு முன்பு உள்ள தந்மாத்ரைகள், அவற்றின் பின்பு பின்பு உள்ள தந்மாத்ரையையும், அதன் சிறப்பாக உள்ள பூதங்களையும் மூடும்" என்று ஸ்வாமி வாதிகேஸரி அழகியமணவாள ஜீயர் அருளிச்செய்வதாலும்; ஸ்ரீவிபு – சப்த மாத்ரம் ததாகாசம் பூதாதிஸ்ஸ ஸமாவ்ருணோத் - சப்த தந்மாத்ரை மற்றும் ஸ்தூல ஆகாசம் ஆகியவற்றை பூதாதி மூடுகிறது - என்றுள்ள வாக்கியத்திற்கு, "சப்த தந்மாத்ரம் ஸ்தூலாகாசஞ்ச ஸ பூதாதிராவ்ருணோத்; ஏதேந பூர்வ பூர்வ தந்மாத்ரமுத்தரோத்தர தந்மாத்ரம் தத் விசேஷஞ்சாவ்ருணோதிதி தர்சிதம் - தந்மாத்ரை மற்றும் ஸ்தூலமான ஆகாசம் ஆகியவற்றை பூதாதி மூடுகிறது; இவ்விதம் கூறுவதால், முன்பு முன்பு உள்ள தந்மாத்ரைகள், பின்பு பின்பு உள்ள தந்மாத்ரை மற்றும் அதன் சிறப்பான பூதங்கள் ஆகியவற்றை மூடுகின்றன என்று உணர்த்தப்பட்டது" என்பதாக பிள்ளை எங்களாழ்வான் வ்யாக்யானம் செய்துள்ளதாலும்; தத்வத்ரய விவரணத்தில் தந்மாத்ரைக்கு மூடுதல் கூறப்பட்டது போன்று அதன் சிறப்பான பூதங்களுக்கு மூடுதல் கூறப்படவில்லையே என்ற சந்தேகம் எழுந்தாலும், அது உபலக்ஷணம் மட்டுமே ஆகும் என்றாகிறது. இவ்விதம் கொள்ளவில்லை என்றால், அங்கு பூதங்களிலிருந்து தந்மாத்ரை உற்பத்தி ஆகின்றன என்பதைக் கூற இயலாது. எனவே இரண்டு வரிசைகளையும் கைக்கொள்ளவேண்டும். தத்வநிரூபணம் என்ற நூலில், தந்மாத்ரை மற்றும் அதன் சிறப்பாகிய பூதங்கள் ஆகிய இரண்டிற்கும் மறைவு குறித்துக் கூறும்போது, தந்மாத்ரை மற்றும் பூதங்கள் ஆகிய இரண்டும் சேர்த்துப் பிடித்து உரைக்கப்பட்டது என்றாலும், பூதங்களின் உற்பத்திக்கு முன்னரே தந்மாத்ரையின் மறைவு குறித்துக் கொள்ளவேண்டும். தோல் அற்றதான விதைக்கு முளை விடும் திறன் இல்லை என்பது போன்று, மறைவு என்பது இல்லாதபோது, அதன் பின்னர் வருகின்ற கார்யசக்தி இல்லை என முன்பே கூறப்பட்டது. இவ்விதம் பூதங்கள் தந்மாத்ரைகளுடைய ஸ்ருஷ்டி கூறப்படும்போது, மூடப்படும் வரிசையானது வெளிப்படையாக உள்ளபோதிலும், அதனை அருளிச்செய்யாமல் விடுத்த காரணம், "அவசியம் இல்லை" என்பது அல்ல; உற்பத்தி வரிசையை அவ்விதம் சுருக்கமக உரைக்கவேண்டும் என்பதால் ஆகும். ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளையும் இவ்விதமே அருளிச்செய்தார்.

104. தந்மாத்ரங்களாவன பூதங்களினுடைய ஸூக்ஷ்மாவஸ்த்தைகள்.

**அவதாரிகை** - ஆக, பூததந்மாத்ர உத்பத்தி க்ரமம் அருளிச்செய்தார் கீழ்; அதில் தந்மாத்ரங்கள்தான் எவை? என்கிற சங்கையிலே அருளிச்செய்கிறார்.

**விளக்கம் -** இப்படியாக பூதங்கள் மற்றும் தந்மாத்ரைகள் ஆகியவற்றின் உற்பத்தி வரிசை குறித்து இதுவரை அருளிச்செய்தார். இவற்றில் தந்மாத்ரைகள் எவை என்பதற்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம் -** (தந்மாத்ரங்களாவன பூதங்களினுடைய ஸூக்ஷ்ம அவஸ்தைகள்) என்று. அதாவது, "தஸ்மிம்ஸ் தஸ்மிம்ஸ் து தந்மாத்ரம் தேந தந்மாத்ரதா ஸ்ம்ருதா, தந்மாத்ராண்ய விசேஷாணி அவிசேஷாஸ் ததோஹிதே; ந சாந்தா நாபி கோராஸ்தே ந மூடாச்சா விசேஷிண" என்று, சாந்தத்வ கோரத்வ மூடத்வ லக்ஷணமான விசேஷங்களை யுடைத்தல்லாத சப்தாதி மாத்ரத்தை குணமாகவுடைத்தாயிருக்கிற ஆகாசாதி பூத ஸூக்ஷ்மங்கள். சாந்தத்வமாவது அநுகூலவேதநீயத்வம்; கோரத்வமாவது ப்ரதிகூலவேத நீயத்வம்; மூடத்வமாவது உதாஸீநவேதநீயத்வம். அதில் ஸ்வபாவமே சாந்தங்களா யிருக்கும் பூமியும் ஜலமும்; கோரங்களாயிருக்கும் தேஜஸ்ஸும் வாயுவும்; மூடமாயிருக்கும் ஆகாசம். மேளநத்தாலே எல்லா பூதங்களும், சாந்தத்வ, கோரத்வ, மூடத்வங்களை உடையனவாயிருக்கும். தந்மாத்ரங்களுக்கு இந்த சாந்தத்வாதி விசேஷமில்லாமையாலே, அவை அவிசேஷங்களென்று சொல்லப்படுகின்றன. ஆகையாலே, தந்மாத்ரங்களென்றும், அவிசேஷங்களென்றும் பர்யாயம். அதில் அபியுக்தரான யாதவப்ரகாசாதிகளும், "தந்மாத்ராண்ய விசேஷா இத்யநர்த்தாந்தரம், சாந்தத்வ கோரத்வ மூடத்வமிதி த்ரயோ விசேஷாஸ்த்ரைகுண்யாத்மாநஸ் தேஷாமநுத்பவாத் ஸூக்ஷ்மமாகாசமவிசேஷ லக்ஷணம் பவதி, தேந சப்த தந்மாத்ர முச்யதே. ஏவம் ஸூக்ஷ்மோ வாயுஸ் ஸூக்ஷ்மம் தேஜஸ் ஸூக்ஷ்மா ஆபஸ் ஸூக்ஷ்மா ப்ருதிவீ" என்று சொல்லி வைத்தார்கள். ஆக, த்ரிவித அஹங்காரத்திலும் வைத்துக்கொண்டு, ஸாத்விக அஹங்காரத்தில் நின்றும் ஏகாதச இந்த்ரியங்களும், தாமஸ அஹங்காரத்தில் நின்றும் பூத தந்மாத்ரங்களும உத்பந்நமாம் க்ரமம் சொல்லி நின்றது.

**விளக்கம்** - அதாவது, "தந்மாத்ரைகள் என்பவை பூதங்களுடைய ஸூக்ஷ்ம நிலை" என்கிறார். ஸ்ரீவிபு. (1-2-46, 47) – தஸ்மிம்ஸ் தஸ்மிம்ஸ் து தந்மாத்ரம் தேந தந்மாத்ரதா ஸ்ம்ருதா, தந்மாத்ராண்ய விசேஷாணி அவிசேஷாஸ் ததோஹிதே; ந சாந்தா நாபி கோராஸ்தே ந மூடாச்சா விசேஷிண - ஆகாசம் முதலான பூதங்களில் தந்மாத்ரைகள் உள்ளதாக எண்ணப்பட்டது. தந்மாத்ரைகள் எந்தவிதமான விசேஷமும் அற்றவை எனக் கூறப்பட்டது. எனவே ஓசை முதலான பூதங்களுடைய குணங்கள் அனைத்தும் விசேஷங்கள் அற்றவையாகின்றன; ஏனென்றால் இவை சாந்தம், கோரம் மற்றும் மூடம் ஆகியவற்றால் ஏற்படக்கூடிய விசேஷங்கள் அற்றதாகவே உள்ளன - என்பது காணலாம். அதாவது, "சாந்தம், கோரம், மூடம்" போன்றவற்றின் அடையாள விசேஷங்கள் ஏதும் அற்றதாக உள்ள ஓசை போன்ற குணங்கள் கொண்ட ஆகாசம் முதலான பூதங்களுடைய ஸூக்ஷ்ம நிலைகளே தந்மாத்ரைகள் ஆகும். சாந்தத்தன்மை என்பது அனுகூலம் உள்ளதாகும் என்று அறிதல்; கோரத்தன்மை என்பது விரோதங்களாக இருக்கும் என்று அறிதல்; மூடத்தன்மை என்பது இவை இரண்டும் இன்றி உதாசீனமாக இருக்கும் என்று அறிதல் ஆகும். இவற்றில், பூமி மற்றும் நீர் ஆகியவை இயல்பாகவே சாந்தங்களாகும்; தேஜஸ் மற்றும் வாயு ஆகியவை இயல்பாகவே கோரங்களாகும்; ஆகாசம் என்பது இயல்பாகவே மூடம் ஆகும். ஆனால் சேர்க்கை காரணமாக அனைத்து பூதங்களும் "சாந்தம், கோரம் மற்றும் மூடம்" ஆகிய தன்மைகள் கொண்டதாக உள்ளன. இத்தகைய சாந்தம் போன்ற தன்மைகள், தந்மாத்ரைகளுக்கு இல்லை என்பதால் அவை "விசேஷம் அற்றவை" எனப்படுகின்றன. ஆகவே தந்மாத்ரை மற்றும் "விசேஷம் அற்றவை" ஆகிய இரண்டும் ஒரே பொருள் தரவல்ல சொற்கள் ஆகும். இவற்றில் யாதவப்ரகாசர் முதலானவர்கள், "தந்மாத்ராண்ய விசேஷா இத்யநர்த்தாந்தரம், சாந்தத்வ கோரத்வ மூடத்வமிதி த்ரயோ விசேஷாஸ்த்ரைகுண்யாத்மாநஸ் தேஷாமநுத்பவாத் ஸூக்ஷ்மமாகாசமவிசேஷ லக்ஷணம் பவதி, தேந சப்த தந்மாத்ர முச்யதே. ஏவம் ஸூக்ஷ்மோ வாயுஸ் ஸூக்ஷ்மம் தேஜஸ் ஸூக்ஷ்மா ஆபஸ் ஸூக்ஷ்மா ப்ருதிவீ - தந்மாத்ரைகள் மற்றும் விசேஷம் அற்றவை ஆகிய இரண்டும், ஒரே பொருள் கூறுவதாகும். சாந்தத்தன்மை, கோரத்தன்மை மற்றும் மூடத்தன்மை ஆகிய மூன்று குணங்களையும் ஸ்வரூபமாகக் கொண்ட மூன்று விசேஷங்கள் இத்தகைய தந்மாத்ரைகளுக்கு இல்லை என்பதால், ஸூக்ஷ்மமான ஆகாசமானது விசேஷம் அற்றதாகவே உள்ளது; அந்தச் சொல் மூலம் தந்மாத்ரைகள் கூறப்படுகின்றன; இப்படியாகவே ஸூக்ஷ்ம வாயு, ஸூக்ஷ்ம தேஜஸ், ஸூக்ஷ்ம நீர், ஸூக்ஷ்ம ப்ருதிவி"

என்று கூறினார்கள். ஆகவே மூன்றுவிதமான அஹங்காரங்களிலிருந்தும், ஸாத்விக அஹங்காரத்திலிருந்து பதினொரு இந்த்ரியங்கள், தாமஸ அஹங்காரத்திலிருந்து பஞ்சபூதங்கள் மற்றும் தந்மத்ரைகள் உற்பத்தி ஆகின்ற வரிசை கூறப்பட்டது.

105. மற்றை இரண்டஹங்காரமும் ஸ்வகார்யங்களைப் பிறப்பிக்கும்போது, ராஜஸாஹங்காரம் ஸஹகாரியாயிருக்கும்.

**அவதாரிகை** - இனி, ராஜஸ அஹங்காரத்தினுடைய கார்யம் சொல்லுகிறது (மற்றையிரண்டு அஹங்காரமும் என்று தொடங்கி).

**விளக்கம்** - அடுத்து ராஜஸ் அஹங்காரத்தின் கார்யம் கூறப்படுகிறது.

**வ்யாக்யானம்** - அதாவது ஸாத்விக தாமஸ அஹங்காரங்களிரண்டும் ஸ்வகார்யங்களை உத்பாதிக்கும்போது, பீஜத்தினுடைய அங்குரத்துக்கு ஜலம் போலவும், அக்நியினுடைய ஜ்வலநத்துக்கு வாயு போலவும், ராஜஸ அஹங்காரம் ஸஹகாரியாயிருக்குமென்கை. இது ஸஹகரிக்கையாவது "ரஜ: ப்ரவர்த்தகம் தத்ர" என்கிறபடியே, இவற்றில் இந்திரிய ஹேதுவான ஸத்வ அம்சத்துக்கும் பூதஹேதுவான தமோம்சத்துக்கும் சல ஸ்வபாவமான ரஜஸ்ஸு ப்ரேரகமாய்க் கொண்டு ப்ரவர்த்திப்பிக்கை.

**விளக்கம்** - ஸாத்விகம் மற்றும் தாமஸம் ஆகிய இரண்டு அஹங்காரங்களும் தங்கள் தங்கள் மாற்றங்களை உண்டாக்கும்போது, விதையினுடைய முளைக்கு நீர் போன்றும், அக்னியின் ஜ்வாலைக்குக் காற்று போன்றும், ராஜஸ அஹங்காரம் அவற்றுக்குத் துணையாக உள்ளது. இது எப்படி உதவுகிறது என்றால், "ரஜ: ப்ரவர்த்தகம் தத்ர - அவற்றை ராஜஸம் ஈடுபட வைக்கிறது" என்பதற்கு ஏற்ப, இந்த இரண்டில் இந்த்ரியங்களுக்குக் காரணமாக உள்ள ஸத்வ அம்சத்திற்கும், பூதங்களுக்குக் காரணமாக உள்ள தாமஸ அம்ஸத்திற்கும், அசைவதையே இயல்பாகக் கொண்ட ராஜஸ அம்சமானது தூண்டுகோலாக நின்று, அந்தந்த செயல்களில் ஈடுபட வைக்கிறது.

106. ஸாத்விகாஹங்காரம் சப்த தந்மாத்ராதி பஞ்சகத்தையும் அடைவே ஸஹகாரியாய்க் கொண்டு ச்ரோத்ராதி ஜ்ஞாநேந்திரியங்களைந்தையும் ஸ்ருஷ்டிக்கும். தத்ஸஹக்ருதமாய்க் கொண்டு வாகாதிகர்மேந்த்ரியங்களைந்தையும் ஸ்ருஷ்டிக்கும். இவற்றையொழியத் தானே மநஸ்ஸை ஸ்ருஷ்டிக்குமென்றும் சொல்லுவர்கள்.

**அவதாரிகை -** இப்படி ஸாத்விக தாமஸ அஹங்காரங்களுக்கு ஸாதாரண ஸஹகாரியை அருளிச்செய்தார் கீழ். அநந்தரம், ஸாத்விக அஹங்காரத்துக்கு அஸாதாரணமாயிருப்பன சில ஸஹகாரி விசேஷங்களை அருளிச்செய்கிறார் (ஸாத்விக அஹங்காரம்) என்று தொடங்கி.

**விளக்கம் -** இப்படியாக ஸாத்விகம் மற்றும் தாமஸ அஹங்காரங்களுக்குப் பொதுவாக உள்ளதான "துணை நிற்கும் உதவி" குறித்து அருளிச்செய்தார். அடுத்து, ஸாத்விக அஹங்காரத்திற்கு மட்டுமே உதவி செய்தபடி உள்ளதான சில விசேஷங்கள் குறித்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது ஸாத்விக அஹங்காரம் இந்த்ரியங்களை ஸ்ருஷ்டிக்குமளவில் இவற்றினுடைய விஷய ப்ரதிநியமத்துக்காக சப்த தந்மாத்ரத்தை ஸஹகாரியாகக் கொண்டு ச்ரோத்ரத்தையும், ஸ்பர்ச தந்மாத்ரத்தை ஸஹகாரியாகக் கொண்டு த்வக் இந்த்ரியத்தையும், ரூப தந்மாத்ரத்தை ஸஹகாரியாகக் கொண்டு சக்ஷுஸ்ஸையும், ரஸ தந்மாத்ரத்தை ஸஹகாரியாகக் கொண்டு ஜிஹ்வையையும், கந்த தந்மாத்ரத்தை ஸஹகாரியாகக் கொண்டு க்ராணேந்த்ரியத்தையும் ஸ்ருஷ்டிக்கும். இப்படி சப்த தந்மாத்ராதி பஞ்சகத்தையும் அடைவே ஸஹகாரியாகக் கொண்டு ச்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தையும் ஸ்ருஷடித்தவநந்தரம், ச்ரோத்ர க்ராஹ்யமான சப்த விஷயமாயும், த்வகிந்த்ரிய க்ராஹ்யமான ஸ்பர்ச விஷயமாயும், சக்ஷுர் க்ராஹ்யமான ரூபத்தில் ப்ரவ்ருத்தி ஹேதுவாயும், ரஸநா விஷய ரஸ ஆச்ரயமான ஜலத்தினுடைய நிஸ்ஸரண ஹேதுவாயும், க்ராண விஷய கந்தாச்ரய ப்ருதிவி அம்சமான அந்நாதிகளில் ருஜீஷோத்ஸர்ஜந ஹேதுவாயும், இப்படி ஜ்ஞாநேந்த்ரிய பஞ்சக சேஷமாய்க் கொண்டு சப்தாதி பஞ்சகத்தையும் ஒட்டியிருக்கும். "கர்மேந்த்ரிய பஞ்சகத்தை ஸ்ருஷ்டிக்குமளவில், ச்ரோத்ர ஸஹக்ருதமாய்க் கொண்டு வாக்கையும், த்வக் ஸஹக்ருதமாய்க் கொண்டு பாணியையும, சக்ஷுஸ் ஸஹக்ருதமாய்க் கொண்டு பாதத்தையும், ஜிஹ்வா ஸஹக்ருதமாய்க் கொண்டு உபஸ்தத்தையும், க்ராண ஸஹக்ருதமாய்க் கொண்டு

பாயுவையும் ஸ்ருஷ்டித்து, ஜ்ஞாநேந்த்ரியங்களுக்கும் கர்மேந்த்ரியங்களுக்கும் ஸஹகாரியாய், உபயாத்மகமான மநஸ்ஸை ஸஹகாரி நிரபேக்ஷமாகத் தானே ஸ்ருஷ்டிக்குமென்று தத்வவித்துக்கள் சொல்லுவர்கள்", என்கை. இது தன்னை ஸ்ரீவிஷ்ணுபுராண வ்யாக்யாநத்திலே, "அயமத்ரேந்த்ரிய ஸ்ருஷ்டி க்ரம: வைகாரிகாஹங்காராத் க்ரமேண சப்த தந்மாத்ராதி பஞ்சக ஸஹாயாத் க்ரமேண ச்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரிய பஞ்சகஸ்ய ஸ்ருஷ்டி:, தஸ்மாதேவ தத் ஸஹாயாத் வாகாதி கர்மேந்த்ரிய பஞ்சகஸ்ய; அஸஹாயாத்து தஸ்மாந் மநஸஸ் ஸ்ருஷ்டிரிதி" என்று பிள்ளை எங்களாழ்வானுமருளிச்செய்தார்.

**விளக்கம்** - ஸாத்விக அஹங்காரமானது இந்த்ரியங்களை ஸ்ருஷ்டி செய்யும்போது அந்தந்த புலன்களுடைய விஷயத்தின் நியமத்திற்காக, சப்த தந்மாத்ரத்தைத் துணையாகக் கொண்டு காதுகளையும், ஸ்பர்ச தந்மாத்ரத்தைத் துணையாகக் கொண்டு தோலையும், ரூப தந்மாத்ரத்தைத் துணையாகக் கொண்டு கண்களையும், ரஸ தந்மாத்ரத்தைத் துணையாகக் கொண்டு நாக்கையும், கந்த தந்மாத்ரத்தைத் துணையாகக் கொண்டு மூக்கையும் படைக்கிறது. இப்படியாக சப்த தந்மாத்ரைகள் முதலான ஐந்தையும் துணையாகக் கொண்டு, காதுகள் முதலான ஐந்து ஞான இந்த்ரியங்களையும் படைத்த பின்னர், காதுகளால் பெறப்படும் சப்த விஷயமாகவும், தோல் இந்த்ரியம் மூலம் உணரப்படுவதான ஸ்பர்ச விஷயமாகவும், கண்கள் மூலம் பெறப்படுவதான உருவத்தில் செயல்படும் விஷயமாகவும், மூக்கின் விஷயமாக உள்ள மணம் என்பதை அண்டி நிற்கும் ப்ரக்ருதியின் அம்சமாக உள்ள உணவு முதலானவற்றில் சாரமாக அல்லாதவற்றை மேலே தள்ளுவதற்குக் காரணமாகவும் என, இப்படியாக ஞான இந்த்ரியங்கள் முதலானவற்றையும் கொண்டு, சப்த தந்மாத்ரை போன்ற ஐந்தையும் அண்டியிருக்கும். "கர்ம இந்த்ரியங்கள் ஐந்தையும் படைக்கும்போது செவியைத் துணையாகக் கொண்டு வாக்கையும், தோலை உதவியாகக் கொண்டு கைகளையும், கண்களை உதவியாகக் கொண்டு கால்களையும், நாக்கை உதவியாகக் கொண்டு மர்ம உறுப்புகளையும், மூக்கை உதவியாகக் கொண்டு மலக் கருவியையும் படைத்து, ஞானம் மற்றும் கர்ம இந்தரியங்களுக்குத் துணையாக இருந்தபடி, இந்த இரண்டிற்கும் பொதுவாக உள்ள மனத்தை, வேறு எந்த உதவியும் இன்றி ஸாத்விக அஹங்காரம் படைக்கிறது என தத்வங்கள் குறித்து நன்றாக அறிந்தவர்கள் கூறுவர்" என்று கருத்து. இதனை ஸ்ரீவிஷ்ணுபுராண வ்யாக்யானத்தில் - அயமத்ரேந்த்ரிய ஸ்ருஷ்டி க்ரம: வைகாரிகாஹங்காராத் க்ரமேண சப்த தந்மாத்ராதி பஞ்சக ஸஹாயாத் க்ரமேண

ச்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரிய பஞ்சகஸ்ய ஸ்ருஷ்டி:, தஸ்மாதேவ தத் ஸஹாயாத் வாகாதி கர்மேந்த்ரிய பஞ்சகஸ்ய; அஸஹாயாத்து தஸ்மாந் மநஸஸ் ஸ்ருஷ்டிரிதி - இது இங்கு இந்த்ரிய ஸ்ருஷ்டி வரிசைகள்; ஸாத்விக அஹங்காரத்திலிருந்து முறையே, சப்தம் போன்ற தந்மாத்ரைகளின் துணையுடன், முறையே காதுகள் போன்ற ஐந்து ஞான இந்த்ரியங்களின் ஸ்ருஷ்டி உண்டாக்கிறது; ஞான இந்த்ரியங்களுடன் உதவி கொண்டு, காதுகள் போன்ற ஐந்து கர்ம இந்த்ரியங்களுடைய ஸ்ருஷ்டி ஏற்படுகிறது; மற்ற தத்வங்களுடைய துணை ஏதும் இன்றி, ஸாத்விக அஹங்காரத்திலிருந்து மனம் தோன்றுகிறது - என்பதாகப் பிள்ளை எங்களாழ்வான் அருளிச்செய்தார்.

107. சிலர், இந்த்ரியங்களிலே சிலவற்றை பூதகார்யமென்றார்கள்.

**அவதாரிகை** - அநந்தரம் இப்படி தாமருளிச்செய்த இந்த்ரிய உத்பத்தி க்ரமத்துக்கு விரோதி பக்ஷத்தை நிரஸிக்கைக்காக அத்தையுத்க்ஷேபிக்கிறார்.

**விளக்கம்** - இப்படியாகத் தாம் அருளிச்செய்த இந்த்ரியங்களுடைய உற்பத்தி வரிசைக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களுடைய வாதங்களைத் தள்ளுவதற்காக, அவற்றை உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** - (சிலர், இந்த்ரியங்களிலே சிலவற்றை பூதகார்யமென்றார்கள்) என்று. அவர்களாகிறார் க்ராணாதிகளான இந்த்ரியங்களை ப்ருதிவ்யாதி பூதகார்யமாகவே கொள்ளும் நையாயிகாதிகள். அவர்கள் தாம் ஆநுமாநிகராகையாலே அநுமாநத்தாலேயிறே அர்த்தத்தை ஸாதிப்பது.

**விளக்கம்** - இந்த்ரியங்களில் சிலவற்றை பூதங்களிலிருந்து உற்பத்தி ஆனவை என்று ஒரு சிலர் கூறுகிறார்கள். அவர்கள் யார் என்றால், நாக்கு தொடக்கமாக உள்ள இந்த்ரியங்க்ளை, பூமி தொடக்கமாக உள்ள பூதங்களுடைய கார்யங்கள் என்று கூறுகின்ற நையாயிகர்கள் ஆவர். அவர்கள் ஆநுமாநிகர்கள் என்பதால், அனுமானத்தை மட்டுமே கொண்டு தங்கள் கருத்தை நிலைநாட்டுகிறார்கள்.

108. அது சாஸ்த்ர விருத்தம்.

**அவதாரிகை -** அத்தை காலாத்யயாபதேசத்தாலே தூஷிக்கிறார்.

**விளக்கம் -** அந்தக் கருத்தை, காலத்தில் உள்ள வேறுபாட்டின் மூலம் தள்ளுகிறார்.

**வ்யாக்யானம் -** (அது சாஸ்த்ர விருத்தம்) என்று. அதாவது இந்த்ரியங்களை பூதகார்யமென்று சொல்லுவது, இவற்றை ஆஹங்காரிகங்களாகச் சொல்லுகிற இதிஹாஸ புராணாதிகளுக்கு விருத்தமென்கை.

**விளக்கம் -** அந்தக் கருத்தானது சாஸ்த்ரங்களுக்கு முரணானது ஆகும். அதாவது, "இந்த்ரியங்கள் பூதங்களிலிருந்து உற்பத்தி ஆனவை" எனக் கூறுவது, "இந்திரியங்கள் அஹங்காரத்திலிருந்து வெளிப்பட்டவை" என்று கூறுகின்ற இதிஹாஸம் மற்றும் புராணங்களுக்கு முரணான கருத்தாகும்.

109. பூதங்கள் ஆப்யாயகங்களித்தனை.

**அவதாரிகை -** அதுவென்? மோக்ஷதர்மத்திலே, "சப்த ச்ரோத்ரம் ததா காதித்ரயமாகாச ஸம்பவம், வாயோ ஸ்பர்சம் ததா சேஷ்டா த்வக் சைவ த்ரிதயம் ஸ்ம்ருதம்; ரூபம் சக்ஷுஸ் ததா வ்யக்திஸ் த்ரிதயம் தைஜ உச்யதே; ரஸ: க்லேதச்ச ஜிஹ்வா ச த்ரயோ ஜலகுணா: ஸ்ம்ருதா:, க்ராணம் க்ரேயம் சரீரஞ்ச தே து பூமிகுணா: ஸ்ம்ருதா:" என்று சொல்லுகையாலே, இதிஹாஸாதிகள் தன்னிலேயும் இந்த்ரியங்களுக்கு பௌதிகத்வம் சொல்லப்படுகையால், பூதங்கள் இவற்றுக்குக் காரணமாக வேணுமே என்ன;

**விளக்கம் -** கடந்த சூர்ணையில் கூறப்பட்ட கருத்திற்குச் சிலர் ஆக்ஷேபம் கூறுகிறார்கள். மஹாபாரதம் மோக்ஷதர்மத்தில் - சப்த ச்ரோத்ரம் ததா காதித்ரயமாகாச ஸம்பவம், வாயோ ஸ்பர்சம் ததா சேஷ்டா த்வக் சைவ த்ரிதயம் ஸ்ம்ருதம்; ரூபம் சக்ஷுஸ் ததா வ்யக்திஸ் த்ரிதயம் தைஜ உச்யதே; ரஸ: க்லேதச்ச ஜிஹ்வா ச த்ரயோ ஜலகுணா: ஸ்ம்ருதா:, க்ராணம் க்ரேயம் சரீரஞ்ச தே து பூமிகுணா: ஸ்ம்ருதா: - ஓசை, செவி மற்றும் பறவைகளுடைய வழியாக உள்ள ஆகாயம் ஆகியவை ஆகாசத்திலிருந்து உண்டாயின.

ஸ்பர்சம், அசைவு மற்றும் தோல் ஆகியவை வாயுவிடமிருந்து உண்டாயின. சுவை, நனைத்தல் மற்றும் நாக்கு ஆகியவை நீரின் குணங்களாகக் கூறப்படுகின்றன. மூக்கு, மணம் மற்றும் சரீரம் ஆகியவை பூமியின் குணங்களாகக் கூறப்படுகின்றன - என்று கூறப்படுவதால், இதிஹாஸம் முதலானவற்றிலும் இந்த்ரியங்களுக்கு பௌதிகத்தன்மை கூறப்படுவதால், இவற்றின் உற்பத்திற்கு பூதங்கள் காரணமாக இருக்கவேண்டும் அல்லவோ? இந்த ஆக்ஷேபத்திற்குச் சமாதானம் கூறுகிறார்.

**வ்யாக்யானம் -** (பூதங்கள் ஆப்யாயகங்களித்தனை) என்கிறார். அதாவது இதிஹாஸாதிகளில் இந்த்ரியங்களுக்குச் சொன்ன பௌதிகத்வம், பூதங்களாலுண்டான ஆப்யாயந மாத்ரத்தைப் பற்றவாகையாலே, இந்த்ரியங்களுக்கு பூதங்கள் ஆப்யாயகங்களித்தனை; காரணங்களன்றென்கை.

**விளக்கம் -** இதிஹாசம் முதலானவைகளில் இந்த்ரியங்களுக்குக் கூறப்பட்ட பௌதிகத்வம் என்பது பூதங்களால் ஏற்பட்ட வளர்ச்சியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இருக்கமுடியாது என்பதால், இந்த்ரியங்களை பூதங்கள் வளரச் செய்வதாக மட்டுமே உள்ளன; உற்பத்தி காரணங்கள் அல்ல.

**வ்யாக்யானம் -** ஆப்யாயகத்வமாவது போஷகத்வம். இன்னமும், அஹங்காரத்தை இந்த்ரியங்களுக்கு நிமித்தகாரணமாகவும், பூதங்களை இவற்றுக்கு உபாதாந காரணமாகவும் சொல்லுகிறதொரு குத்ருஷ்டி மதமுண்டிறே . "அஹங்காரஸ்யேந்த்ரியாணி ப்ரதி நிமித்தத்வமேவ; பூதாநாமேவ உபாதாநத்வம். அந்நமயம் ஹி ஸோம்ய மந: ஆபோமய ப்ராணஸ் தேஜோமயீ வாக் இதி ச்ருதேரிதி கேசிதாஹு:, ததயுக்தம்; அஹங்காரஸ்யைவோபாதாநத்வேபி பூதாநாமாப்யாயகத்வேநாபி ததா நிர்தேசோபபத்தே:" என்று பிள்ளை எங்களாழ்வானெடுத்துக் கழித்தது. அதுவும், "இந்த்ரியங்களிலே சிலவற்றை" என்று தொடங்கி இவரருளிச் செய்த க்ரமந்தன்னாலே ப்ரதிக்ஷிப்தம். அப்போதைக்கு, "அது சாஸ்த்ர விருத்தம்" என்றது, "ஏகாதசம் மநச்சாத்ர தேவா வைகாரிகாஸ் ஸ்ம்ருதா:" இத்யாதிகளாலே இவற்றை ஸாத்விக அஹங்கார கார்யமாகவே சொல்லுகிற புராணாதிகளுக்கு விருத்தமென்கை.

**விளக்கம் -** ஆப்யாயகத்வம் என்பது போஷகத்வம் (வளரச் செய்யும் தன்மை). மேலும் அஹங்காரத்தை இந்த்ரியங்களுக்கு நிமித்தகாரணமாகவும், பூதங்களை உபாதானக் காரணமாகவும் கூறுகின்ற வேறு ஒரு முரணான மதமும் உள்ளது. ஸ்ரீவிபு. (21-2-48) – அஹங்காரஸ்ய இந்த்ரியாணி ப்ரதி நிமித்தத்வம் ஏவ; பூதாநாம் ஏவ உபாதாநத்வம். "அந்நமயம் ஹி ஸோம்ய! மந: ஆபோ மய ப்ராண: தேஜோமயீ வாக்" இதி ச்ருதேரிதி கேசிதாஹு:, தத் அயுக்தம்; அஹங்காரஸ்ய ஏவ உபாதாநத்வேந அபி பூதாநாம் ஆப்யாயகத்வேந அபி ததா நிர்தேச உபபத்தே: - அஹங்காரத்திற்கு இந்த்ரியங்களைக் குறித்து நிமித்தகாரணமாக உள்ள தன்மை மட்டுமே உள்ளது; பூதங்களுக்கு மட்டுமே உபாதானக்காரணமாக உள்ள தன்மை உள்ளது. "ச்வேதகேது! மனமானது அன்னமயம், ப்ராணனானது நீர்மயம், வாக்கானது தேஜோமயம்" என்று ச்ருதி கூறுகிறது. இவ்விதம் வேதம் கூறுவதால், பூதங்களை முதற்காரணம் என சிலர் உரைக்கிறார்கள். ஆனால் அது சரியான கருத்து அல்ல. அஹங்காரத்திற்கு முதற்காரணமாக உள்ள தன்மையும், பூதங்களுக்கு வளர்க்கின்ற தன்மையும் உள்ளதால், பூதங்கள் முதற்காரணமாக இருக்க முடியாது - என்று பிள்ளை எங்களாழ்வான் அந்தக் கருத்துக்களை விலக்கினார். மேலும் சூர்ணை (107) - இந்த்ரியங்களிலே சிலவற்றை - என்று தொடங்கி இவர் அருளிச்செய்த வரிசை மூலம் அந்த வாதம் தள்ளப்பட்டது. அப்போது, சூர்ணை (108) – அது சாஸ்த்ர விருத்தம் - என்று கூறியது, "ஏகாதசம் மநச்சாத்ர தேவா வைகாரிகாஸ் ஸ்ம்ருதா:" என்பது போன்றவற்றில், இவற்றில் ஸாத்விக அஹங்கார கார்யமாகக் கூறுகின்ற புராணங்கள் போன்றவைகளுக்கு முரணாக உள்ளதால் ஆகும்.

**வ்யாக்யானம் -** புராணாதிகளைப் பற்ற, "அந்நமயம் ஹி ஸோம்ய மந:" இத்யாதி ச்ருதிக்கு ப்ராபல்யமுண்டேயாகிலும், "இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்" என்கையாலே, உபப்ரும்ஹணாநுகூலமாக அதுக்கு அர்த்தம் கொள்ளவேணுமென்று கருத்து. ஆனால், உபப்ரும்ஹணங்கள் தன்னிலேயும் பௌதிகத்வம் சொல்லுகையாலே, இவற்றுக்கு பூதங்கள் காரணமாயன்றோ தோற்றுகிறது என்ன; "பூதங்கள் ஆப்யாயகங்களித்தனை" என்று நிர்வாஹம்.

**விளக்கம் -** புராணங்களைப் பொறுத்தவரையில், "அந்நமயம் ஹி ஸோம்ய மந: –ஸோம்ய! மனமானது பூமிமயமாக உள்ளது" என்பது போன்ற ச்ருதி வாக்கியத்திற்கு வலிமையான தன்மை உள்ளது என்றாலும், மஹாபாரதத்தில் - இதிஹாஸ புராணாப்யாம் வேதம்

ஸமுபப்ரும்ஹயேத் - இதிஹாஸங்களாலும் புராணங்களாலும் வேதமானது விவரிக்கப்பட வேண்டியாதாகும் - என்று கூறப்படுவதால், இதிஹாஸம் போன்ற நூல்களுக்கு ஏற்றபடியே வேதங்களுக்கும் பொருள் கொள்ளவேண்டும். ஆனால் இதிஹாஸம் போன்ற துணை நூல்களில் கூட பௌதிகத்வம் கூறப்படுவதால், இந்த்ரியங்களுக்குப் பூதங்கள் காரணமாக உள்ளதாக அல்லவோ தோன்றுகிறது என்று கேட்கலாம். அப்படி அல்ல, பூதங்களுக்கு இந்த்ரியங்களை வளர்க்கின்ற தன்மை மட்டுமே உள்ளது என்று கருத்து.

**வ்யாக்யானம் -** க்ராணாதிகளான இந்த்ரியங்களுக்கு ப்ருதிவ்யாதி பூதங்களாலுண்டான ஆப்யாயநம் ச்ருதி ஸ்ம்ருதிகளிலே ப்ரஸித்தம். இதுதான் ஸுபாலோபநிஷத் வ்யாக்யாநத்திலே, "க்ராணாதீநாமிந்த்ரியாணாம் ஹி ப்ருதிவ்யாதி பூதைராப்யாயநம் ச்ருதி ஸ்ம்ருதிஷு ப்ரஸித்தம். அந்நமயம் ஹி ஸோம்ய மந: ஆபோமய: ப்ராணஸ் தேஜோமயீ வாக் ச்ரோத்ரம் நபோ க்ராணமுக்தம் ப்ருதிவ்யா: இத்யாரப்ய, வாய்வாத்மகம் ஸ்பர்சநமாமநந்தி நபே: ச்ரோத்ரஞ்ச தந்மயம் இத்யாதிஷு" என்று ச்ருதப்ரகாசிகாகாரராலே அபிஹிதமாயிற்று. இப்படி இந்த்ரியங்களுக்கு பூதங்கள் எப்போதும் ஆப்யாயகங்களாயிருக்குமென்னுமிடம் மோக்ஷதர்மத்திலே ப்ருகு பரத்வாஜ ஸம்வாதத்திலே, "ஆப்யாயந்தே ச தே நித்யம் தாதவஸ் தைஸ்து பஞ்சபி:" என்று ஸுவ்யக்தமாகச் சொல்லப்பட்டது. ஆகையால், பூதங்கள் இந்த்ரியங்களுக்கு ஆப்யாயகங்களித்தனை; காரணங்களன்று என்றதாயிற்று.

**விளக்கம் -** மூக்கு முதலான இந்த்ரியங்களுக்கு பூமி முதலான பூதங்களால் ஏற்படுவது வளர்ச்சி மட்டுமே ஆகும் என்பதான கருத்து ச்ருதி மற்றும் ஸ்ம்ருதிகளில் ப்ரஸித்தம் ஆகும். இது ஸுபால உபநிஷத் வ்யாக்யானத்தில், க்ராணாதீநாமிந்த்ரியாணாம் ஹி ப்ருதிவ்யாதி பூதைராப்யாயநம் ச்ருதி ஸ்ம்ருதிஷு ப்ரஸித்தம். அந்நமயம் ஹி ஸோம்ய மந: ஆபோமய: ப்ராணஸ் தேஜோமயீ வாக் ச்ரோத்ரம் நபோ க்ராணமுக்தம் ப்ருதிவ்யா: இத்யாரப்ய, வாய்வாத்மகம் ஸ்பர்சநமாமநந்தி நபே: ச்ரோத்ரஞ்ச தந்மயம் இத்யாதிஷு - மூக்கு முதலான இந்த்ரியங்களுக்கு பூமி முதலான பூதங்களால் வளர்ச்சி ஏற்படுதல் என்பது வேதங்களில் கூறப்பட்டது. மனமானது அன்னமயம், ப்ராணனானது நீர்மயம், வாக்கானது தேஜோமயம் என்றும் கூறப்பட்டது. ஆகாயத்திலிருந்து செவி இந்த்ரியமும், பூமியிலிருந்து மூக்கு இந்த்ரியமும் என்று தொடங்கி , ஸ்பர்சத்தை வாயுவிற்கும், செவியை ஆகாசத்திடமும் கூறுகிறார்கள் - என்று ச்ருதிப்ரகாசிகாகாரரால் உணர்த்தப்பட்டது. இவ்விதம் இந்த்ரியங்களுக்குப் பூதங்களானவை எப்போதும் வளர்ச்சிக்கு உதவுபவையாக

மட்டுமே உள்ளன என்ற கருத்தானது மஹாபாரதம் மோக்ஷ தர்மத்தில், ப்ருகு மற்றும் பரத்வாஜருடைய உரையாடலில், ஆப்யாயந்தே ச தே நித்யம் தாதவஸ் தைஸ்து பஞ்சபி: - ஐந்தாக உள்ள பூதங்களால் அனைத்து காலத்திலும் வளரும்படிச் செய்து - என்று மிகவும் தெளிவாகக் கூறப்பட்டது. எனவே பூதங்களானவை இந்த்ரியங்களுடைய வளர்ச்சிக்கு உதவுபவை மட்டுமே ஆகும், காரணப்பொருள்கள் அல்ல என்றாகிறது.

110. இவை கூடினாலல்லது கார்யகரமல்லாமையாலே, மண்ணையும் மணலையும் நீரையும் சேர்த்து ஒரு த்ரவ்யமாக்கிச் சுவரிடுவாரைப்போலே, ஈச்வரன் இவற்றையெல்லாம் தன்னிலே சேர்த்து ஓரண்டமாக்கி, அதுக்குள்ளே சதுர்முகனை ஸ்ருஷ்டித்தருளும்.

**அவதாரிகை -** ஆக இப்படி மஹதாதி பதார்த்தங்களினுடைய உத்பத்தி க்ரமம் அருளிச் செய்தாராய் நின்றார் கீழ்; இவற்றைக் கொண்டு ஈச்வரன் அண்ட ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணும்படியை அருளிச்செய்கிறார் மேல்.

**விளக்கம் -** இப்படியாக மஹத் முதலானவற்றின் உற்பத்தி வரிசை குறித்து இதுவரை அருளிச்செய்தார். அடுத்து இவற்றைக் கொண்டு ஈச்வரன் இந்த அண்டத்தை, ஸ்ருஷ்டி முதலானவற்றைச் செய்வது குறித்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (இவை கூடினாலல்லது கார்யகரமல்லாமையாலே) என்று. அதாவது "நாநாவீர்யா: ப்ருதக் பூதாஸ் ததஸ் தே ஸம்ஹதிம் விநா, நாசக்நுவந் ப்ரஜாஸ் ஸ்ரஷ்டுமஸமாகம்ய க்ருதஸ்நச:" என்கிறபடியே சாந்தத்வ கோரத்வ மூடத்வங்களாலே நாநா சக்தி யுக்தங்களாய ப்ருதக் பூதங்களாயிருக்கிற இம்மஹதாதி பதார்த்தங்கள், பரஸ்பர ஸம்ஹதமானாலல்லது அண்டரூபமான கார்யத்தை உத்பாதிக்க மாட்டாமையாலே என்கை. (மண்ணையும் மணலையும் நீரையும் சேர்த்து ஒரு த்ரவ்யமாக்கிச் சுவரிடு வாரைப் போலே) அதாவது ப்ருதக் வீர்யங்களாய், ப்ருதக் ஸ்த்திதங்களாயிருக்கிற ம்ருத் ஸிகதாஸலிலங்களை அந்யோந்யம் சேர்த்து தத் ஸமுதாயாத்மகமானதொரு த்ரவ்யமாக்கி, பித்தி ரூபமானதொரு கார்யத்தை நிர்மிப்பாரைப் போலே என்கை.

**விளக்கம்** - (இவை கூடினாலல்லது கார்யகரமல்லாமையாலே) - அதாவது ஸ்ரீவிபு. (1-2-53) – நாநாவீர்யா: ப்ருதக் பூதாஸ் ததஸ் தே ஸம்ஹதிம் விநா, நாசக்நுவந் ப்ரஜாஸ் ஸ்ரஷ்டுமஸமாகம்ய க்ருதஸ்நச: - அதன் பின்னர் பலவிதமான வீர்யங்கள் கொண்டதும், தனித்தனியாக உள்ளதும் ஆகிய அந்த மஹத் முதலான தத்வங்கள் ஒன்றாகச் சேர்ந்தால் அல்லாமல் ப்ரஜைகள் போன்றவற்றைப் படைப்பதற்கு ஒன்றாகச் சேரத் தக்க வரிசையை அடைவதில்லை - என்பதற்கு ஏற்ப சாந்தத்தன்மை, கோரத்தன்மை மற்றும் மூடத்தன்மை ஆகிய தன்மைகளின் விளைவாக பலவிதமான சக்தி கொண்டவைகளாகவும், தனித்தன்மையாக உள்ளவையாகவும் இருக்கின்ற இந்த மஹத் முதலான பதார்த்தங்கள், ஒன்றுடன் ஒன்று சேர்ந்தால் அல்லாமல், அண்ட ரூபமாக உள்ள ஸ்ருஷ்டியை உற்பத்தி செய்ய இயலாது. (மண்ணையும் மணலையும் நீரையும் சேர்த்து ஒரு த்ரவ்யமாக்கிச் சுவரிடு வாரைப் போலே) - தனித்தன்மையாக சக்தி கொண்டவைகளாகவும், தனித்தனியே இருப்பதற்கு ஏற்றவையாகவும் உள்ள மண் மற்றும் நீர் போன்றவற்றை, ஒன்றுடன் ஒன்று பிரிக்க இயலாதபடிச் சேர்த்து, அந்தக் கலவையை உள்ளடக்கியதான ஒரு பொருளாக்கி, சுவர் என்ற வடிவமாக உள்ள கார்யப்பொருளை உண்டாக்குவது போன்று ஆகும்.

**வ்யாக்யானம்** - (ஈச்வரன் இவற்றையெல்லாம் தன்னிலே சேர்த்து ஓரண்டமாக்கி) அதாவது ஜகத்ஸ்ரஷ்டாவான ஈச்வரன் “ஸமேத்யாந்யோந்ய ஸம்யோகம் பரஸ்பர ஸமாச்ரயா, ஏக ஸங்காத லக்ஷ்யாச்ச ஸம்ப்ராப்யைக்யமசேஷத மஹதாதயோ விசேஷாந் தா ஹயண்டமுத்பாதயந்திதே” என்கிறபடியே, இவற்றையெல்லாம் அந்யோந்யம் ஸம்ஹதமாக்கி, இவற்றாலே அண்ட ஸ்ருஷ்டியைப் பண்ணியென்கை. இவ்வண்டத்துக்குள்ளே மஹதாதி கார்யங்களையடையக் காண்கையாலே மஹதாதி பதார்த்தங்களெல்லாவற்றையும் சேர்த்து அண்ட ஸ்ருஷ்டியைப் பண்ணினா னென்னுமிடம ஸுவ்யக்தம். ஆகையாலே, “பூதேப்யோண்டம் மஹாபுத்தே ப்ருஹத் தது தகேசயம்” என்று, பூதங்களில் நின்றும அண்டம் உத்பந்நமாம்; அது உதகத்திலே கிடக்குமென்று சொன்னதும், “அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு வீர்யமபா ஸ்ருஜத ததண்டமபவத்தைமம் ஸஹஸ்ராம்சு ஸமப்ரபம்” என்று அப்புக்களில் நின்றும் அண்டம் உத்பந்நமாமென்று மநுபகவான் சொன்னதும் பூதாந்தரத்துக்கும் உபலக்ஷணம். அதாவது பூர்வபூதாம்சங்களோடே ஸம்ஸ்ருஷ்டமுமாய் ப்ருதிவியும் தனக்குள்ளே கரைந்து கிடக்கிற ஜலத்தில் நின்றும் உத்பந்நமாய் அதிலே கிடக்குமென்றபடி.

**விளக்கம்** - (ஈச்வரன் இவற்றையெல்லாம் தன்னிலே சேர்த்து ஓரண்டமாக்கி) - இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிப்பவனாகிய ஈச்வரன் ஸ்ரீவிபு (1-2-53) – ஸமேத்ய அந்யோந்ய ஸம்யோகம் பரஸ்பர ஸமாச்ரயா, ஏக ஸங்காத லக்ஷ்யாச்ச ஸம்ப்ராப்ய ஐக்யம் அசேஷத மஹதாதயோ விசேஷாந் தா ஹி அண்டம் உத்பாதயந்திதே - ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பவைகளாக, ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டவைகளாக, ஒரு குவியலாகக் காணத்தகுந்தவைகளாக உள்ள அவற்றைக் கொண்டு, மஹத் தொடங்கி அவற்றின் விசேஷமான பூதங்கள் முடிய உள்ள பலவும் சேர்ந்து, அண்டத்தை உற்பத்தி செய்கின்றன - என்பதற்கு ஏற்ப, இவற்றை ஒன்றுடன் ஒன்று சேர்த்து, இவற்றால் அண்ட ஸ்ருஷ்டியைச் செய்து. அதாவது, இந்த அண்டத்திற்குள் மஹத் முதலானவற்றின் கார்யங்களை முற்றிலுமாகக் காண முடிவதால், மஹத் முதலானவற்றைச் சேர்த்து இந்த அண்ட ஸ்ருஷ்டியைச் செய்தான் என்பது மிகவும் தெளிவாகிறது. எனவே, ஸ்ரீவிபு (1-2-55) – பூதேப்யோண்டம் மஹாபுத்தே ப்ருஹத் தது தகேசயம் - பூதங்களிலிருந்து அண்டம் உண்டாகிறது, பெரியதாக உள்ள அந்த அண்டம் நீரில் உள்ளது - என்பதாக, பூதங்களிருந்து அண்டம் உற்பத்தி ஆகிறது. அது நீரில் கிடப்பதாகக் கூறுவது உபலக்ஷணமே ஆகும். மநுஸ்ம்ருதி (1-7-9) - அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு வீர்யம் அபா ஸ்ருஜத தத் அண்டமபவத்தைமம் ஸஹஸ்ராம்சு ஸமப்ரபம் - தொடக்கத்தில் நீரைப் படைத்தான், நீரில் அண்டத்தைப் படைத்தான், அண்டமானது பொன்னைப் போன்று சூரியனை ஒத்த தேஜஸ் கொண்டதாக ஆனது – என்று "நீரிலிருந்து அண்டம் உற்பத்தி ஆனது" என மநுபகவான் கூறியது என்பது, மற்ற பூதங்களுக்கும் உபலக்ஷணமே ஆகும். அதாவது முன்பு முன்பு உள்ள பூதங்களுடைய அம்சங்களுடன் சேர்ந்துள்ளதாகவும், பூமியும் தனக்குள் கரைந்து நிற்கும் நீரிலிருந்து உற்பத்தியாகி அதனுடன் இருக்கும்.

**வ்யாக்யானம்** - இப்படி அண்ட ஸ்ருஷ்டியைப் பண்ணும்படியை அருளிச் செய்து அநந்தரம், இந்த பாஹ்யமான பூதங்கள் ஆந்தரமான ஆகாசாதிகளாய் பரிணமித்த பின்பு அவற்றைக் கொண்டு லோகவிபாகங்களைப் பண்ணுகைக்காகவும் அந்த லோகங்களில் தேவாதி ஜீவ விபாகங்களைப் பண்ணுகைக்காகவும் இவ்வண்டத்துக்குள்ளே பத்தாத்ம ஸமஷ்டிபூதனான ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்தருளும்படியை அருளிச்செய்கிறார் (அதுக்குள்ளே சதுர்முகனை ஸ்ருஷ்டித்தருளும்) என்று. சதுர்முகனுக்கு பத்தாத்ம ஸமஷ்டிபாவமாவது, இவ்வண்டத்துக்கு வேண்டும் கர்மவச்ய சேதனர் இவன் சரீரத்திலே உண்டாய்க் கிடக்கை. இப்படி சதுர்முகனை ஸ்ருஷ்டித்தது, இனிமேலுண்டான ஸ்ருஷ்டியெல்லாம் ஸத்வாரகமாக நின்று செய்வதாகவிறே.

**விளக்கம் -** இப்படியாக அண்டத்தின் ஸ்ருஷ்டியை அருளிச்செய்த பின்னர் வெளியே உள்ளதான பூதங்கள், உள்ளே நிற்கும் ஆகாசம் போன்றவைகளாக மாறிய பின்னர், அவற்றைக் கொண்டு லோக வேறுபாடுகளைச் செய்வதற்காகவும், இந்த லோகங்களில் தேவர்கள் மனிதர்கள் என்பதான வேறுபாடுகளைச் செய்வதற்காகவும், இந்த அண்டத்திற்குள் பந்தப்பட்டுள்ள அனைத்து ஜீவாத்மாக்களுடைய தொகுத்த வடிவமான நான்முகனை ஸ்ருஷ்டித்து நிற்குமாறு அவன் அருளிய விதத்தை அருளிச்செய்கிறார். பந்தப்பட்ட ஜீவாத்மாக்களுடைய தொகுத்த ரூபமாக நான்முகன் உள்ளான் என்பது எப்படியென்றால், இந்த அண்டத்திற்கு வேண்டிய கர்மவசப்பட்ட சேதநர்கள் இவன் சரீரத்தில் உள்ளதால் ஆகும். இவ்விதம் நான்முகனைப் படைத்தான். அடுத்துள்ள ஸ்ருஷ்டிகள் அனைத்தையும் அந்த நான்முகன் மூலமாகச் செய்தான்.

111. அண்டத்தையும் அண்ட காரணங்களையும் தானேயுண்டாக்கும். அண்டத்துக்கு உட்பட்ட வஸ்துக்களை சேதனருக்கு அந்தர்யாமியாய் நின்றுயுண்டாக்கும்.

**அவதாரிகை -** அது தன்னை தர்சிப்பிக்கைக்காக ஸமஷ்டி ஸ்ருஷ்டியிலும், வ்யஷ்டி ஸ்ருஷ்டியிலும் ஸர்வேர்வரன் செய்யும் க்ரமத்தை அருளிச்செய்கிறார் மேல்.

**விளக்கம் -** இவ்விதமாக ஸ்ருஷ்டியை விளக்குவதற்காக, ஸமஷ்டி ஸ்ருஷ்டி மற்றும் வ்யஷ்டி ஸ்ருஷ்டி ஆகியவற்றில் ஸர்வேச்வரன் செய்யும் வரிசையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** (அண்டத்தையும் அண்ட காரணங்களையும் தானேயுண்டாக்கும்) அதாவது, ஸமுதாய கார்யமான அண்டத்தையும், தத் காரணமான மஹதாதி பதார்த்தங்களையும், ஸத்ய ஸங்கல்பனான தன்னுடைய அவயவஹித ஸங்கல்பத்தாலே யுண்டாக்கும் என்கை. “ஸோபித்யாய சரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷுர் விவிதா: ப்ரஜா:, அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு வீர்யமபாஸ்ருஜத; ததண்டமபவத்தைமம் ஸஹஸ்ராம்சு ஸம்ப்ரபம்” என்னக் கடவதிறே. (அண்டத்துக்கு உட்பட்ட வஸ்துக்களை சேதனருக்கு அந்தர்யாமியாய் நின்றுயுண்டாக்கும்) அதாவது, சதுர்முகாதி சேதநருடைய ஹ்ருதயங்களிலேயிருந்து, “ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ்ச” என்று, ஸங்கல்ப ஜ்ஞாநாதிகளை ஜநிப்பித்துக் கொண்டு.

அண்டாந்த்ர வர்த்திகளான ஸகல பதார்த்தங்களையும் ஸ்ருஷ்டிக்குமென்கை. "யத் கிஞ்சித் ஸ்ருஜ்யதே யே ஸத்வஜா தேந வை த்விஜ! தஸ்ய ஸ்ருஜ்யஸ்ய ஸம்ஸ்தௌ தத் ஸர்வம் வை ஹரேஸ் தநு:" என்று, ஈச்வரன் ஸகல கர்த்ரு சரீரியாய்க் கொண்டு ஸகல கார்யங்களையும் ஸ்ருஷ்டிக்கும் என்னக்கடவதிறே.

**விளக்கம்** - (அண்டத்தையும் அண்ட காரணங்களையும் தானேயுண்டாக்கும்) - அனைத்து தத்துவங்களும் சேர்ந்து உண்டாக்கப்பட்ட அண்டத்தையும், அதன் காரணமாக உள்ள மஹத் முதலான பதார்த்தங்களையும் ஸர்வேச்வரன் தனது நேரடியான ஸங்கல்பம் மூலம் உண்டாக்குகிறான். மநு. (1-8-9) - ஸோபித்யாய சரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷுர் விவிதா: ப்ரஜா:, அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு வீர்யமபாஸ்ருஜத; ததண்டமபவத்தைமம் ஸஹஸ்ராம்சு ஸம்ப்ரபம் - பரமாத்மா ஸங்கல்பம் செய்து, தனது திருமேனியிலிருந்து பலவற்றையும் படைக்கவேண்டும் என்று எண்ணி, முதலில் நீரைப் படைத்தான்; அந்த நீரில், வீர்யமான அண்டத்தை ஸ்ருஷ்டித்தான்; அது பொன்மயமான சூரியனுக்கு நிகரான தேஜஸ் கொண்டதாக விளங்கியது - என்று கூறப்பட்டது அல்லவோ? (அண்டத்துக்கு உட்பட்ட வஸ்துக்களை சேதனருக்கு அந்தர்யாமியாய் நின்றுயுண்டாக்கும்) - நான்முகன் போன்றவர்கள் சேதநர்களுடைய இதயங்களிலிருந்து, கீதை (15-15) – ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ்ச - அனைவருடைய இதயங்களிலும் நான் உள்ளேன்; என்னிடமிருந்தே ஞாபமும் மறதியும் ஏற்படுகின்றன - என்று கூறுவதற்கு ஏற்ப, நினைவுகள் மற்றும் ஞானம் போன்றவற்றை ஸ்ருஷ்டித்துக் கொண்டு, அண்டத்தின் உள்ளே வசிக்கின்ற அனைத்தையும் ஸ்ருஷ்டிக்கிறான். ஸ்ரீவிபு (1-12-33) - யத் கிஞ்சித் ஸ்ருஜ்யதே யே ஸத்வஜா தேந வை த்விஜ! தஸ்ய ஸ்ருஜ்யஸ்ய ஸம்ஸ்தௌ தத் ஸர்வம் வை ஹரேஸ் தநு: - எந்தப் பொருள்கள் நான்முகனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டனவோ அவை அனைத்திற்கும் பகவான் ஸ்ரீஹரியே காரணமாக உள்ளான்; அனைத்தும் அவனுடைய சரீரம் அல்லவோ? - என்பதாக, ஸர்வேச்வரன் அனைத்தையும் தனது சரீரமாகக் கொண்டு, அனைத்து கார்யப்பொருள்களையும் படைக்கிறான் என்று கருத்து.

112. அண்டங்கள்தான் அநேகங்களாய், பதினாலு லோகங்களோடே கூடி ஒன்றுக்கொன்று பதிற்று மடங்கான ஏழாவரணங்களாலும் சூழப்பட்டு, ஈச்வரனுக்கு க்ரீடாகந்துக ஸ்த்தாநீயங்களாய், ஜலபுத்புதம்போலே ஏககாலத்திலே ஸ்ருஷ்டங்களா யிருக்கும்.

**அவதாரிகை** – "ஈச்வரன் இவற்றையெல்லாம் தன்னிலே சேர்த்து ஓரண்டமாக்கி" என்று ஸர்வேச்வரன் மஹதாதி பதார்த்தங்களைச் சேர்த்து அண்டஸ்ருஷ்டியைப் பண்ணுமென்னும் இவ்வளவிறே கீழருளிச் செய்தது. இப்போது அந்த அண்ட பஹுத்வத்தையும், அவற்றினுடைய கட்டளையிருக்கும்படியையும், அவைதான் ஸர்வேச்வரனுக்கு இன்ன விநியோகத்துக்கு உறுப்பென்னுமத்தையும், அவற்றினுடைய பரிணாம ப்ரகாரத்தையும் அருளிச்செய்கிறார் (அண்டங்கள்தான்) என்று தொடங்கி.

**விளக்கம்** - சூர்ணை (110) - ஈச்வரன் இவற்றையெல்லாம் தன்னிலே சேர்த்து ஓரண்டமாக்கி - என்று, "ஸர்வேச்வரன் மஹத் முதலான பதார்த்தங்கள் அனைத்தையும் சேர்த்து அண்ட ஸ்ருஷ்டியைச் செய்கிறான்", என்று மட்டுமே கீழே அருளிச் செய்யப்பட்டது. இப்போது அந்த அண்டத்தின் பலவான தன்மையும், அவற்றின் கட்டளைகள் உள்ள விதங்களையும், அவைகள் ஸர்வேச்வரனால் "இத்தகைய செயல்களுக்கு பயன்படுகின்றன" என்பதற்கு உறுப்பாக உள்ளன என்பதையும், அவற்றின் மாற்றங்களில் உள்ள விதங்களையும் அடுத்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (அண்டங்கள்தான் அநேகங்களாய்) "அண்டாநாம் து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநி ச, ஈத்ருசாநாம் ததா தத்ர கோடி கோடி சதாநி ச" என்னக் கடவதிறே. (பதினாலு லோகங்களோடே கூடி) பதினாலு லோகங்களாவன கீழில் அண்ட கடாஹலத்துக்குமேல் எண்பத்து மூன்று நூறாயிரத்தைம்பதினாயிரம் யோஜநம் உயர்த்தியுடைத்தான கர்ப்போதகத்தின் மேலே, "ஸப்ததிஸ்து ஸஹஸ்ராணாம் த்விஜோச்ச்ராயோபி கத்யதே, தச ஸாஹஸ்ர மேகைகம் பாதாளம் முநி ஸத்தம! அதலம் விதலஞ்சைவ நிதலஞ்ச கபஸ்திமத், மஹாக்க்யம் ஸுதலஞ்சாக்ர்யம் பாதாளஞ்சைவ ஸப்தமம்" என்கிறபடியே, ஒரொன்று பதினாலாயிரம் யோஜநத்தளவு உயர்த்தியையும் பரப்பையுமுடைத்தாய், தைத்ய தாநவ பந்நக ஸுபர்ணாதிகள் வர்த்திக்கும் தேசமாய்,

**விளக்கம் -** (அண்டங்கள்தான் அநேகங்களாய்) – ஸ்ரீவிபு. (2-7-27) - அண்டாநாம் து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநி ச, ஈத்ருசாநாம் ததா தத்ர கோடி கோடி சதாநி ச – ஆயிரம் அண்டங்களுடைய, ஆயிரம் மற்றும் பதினாயிரம் என்னும் பிரிவுகள் கொண்ட அண்டங்களுடைய பல கோடிகள் உள்ளன - என்பது காண்க. (பதினாலு லோகங்களோடே கூடி) - பதினான்கு லோகங்கள் எவையென்றால்: கீழே அண்ட கபாலத்திற்கு மேலே, எண்பத்து மூன்று நூறாயிரத்து ஐம்பதினாயிரம் யோஜனைகள் [ஒரு யோஜனை = 12 முதல் 15 கிலோமீட்டர்கள்] உயரம் கொண்ட கர்ப்போதகத்தின் மேலே. ஸ்ரீவிபு. (2-5-12) - ஸப்ததிஸ்து ஸஹஸ்ராணாம் த்விஜோச்ச்ராயோபி கத்யதே, தச ஸாஹஸ்ர மேகைகம் பாதாளம் முநி ஸத்தம! அதலம் விதலஞ்சைவ நிதலஞ்ச கபஸ்திமத், மஹாக்க்யம் ஸுதலஞ்சாக்ர்யம் பாதாளஞ்சைவ ஸப்தமம் - பூமியின் உயரமானது எழுபதினாயிரம் யோஜனையாகும்; பாதாள லோகம் ஒவ்வொன்றும் பதினாயிரம் யோஜனைகள் உயரம் மற்றும் அகலம் கொண்டதாக உள்ளன; அதலம், விதலம், நிதலம், கபஸ்திமத், மஹாதலம், ஸுதலம், பாதாளம் என்று ஏழு லோகங்கள் உள்ளன - என்பதற்கு ஏற்ப, ஒவ்வொன்றும் பதினாயிரம் யோஜனை உயரமும் பரப்பளவும் கொண்டதாகவும், “தைத்யர்கள், தாநவர்கள், நாகங்கள், பறவைகள்” போன்ற பலவும் வாழ்கின்ற லோகங்களாகவும்;

**வ்யாக்யானம் -** “சுக்ல க்ருஷ்ணாருணா: பீதாச் சர்க்கராச்சைல காஞ்சநா: பூமயோ யத்ர மைத்ரேய வர ப்ராஸாத சோபிதா:” என்கிறபடியே, சுக்லங்களாயும், க்ருஷ்ணங்களாயும், அருணங்களாயும், பீதங்களாயும், வாலுகாமயமான சர்க்கரா ரூபங்களாயும், சைலரூபமாயும், பொன்னாயுமிருக்கிற ஸ்தல விசேஷங்களை யுடையவையாய், விலக்ஷணமான மாளிகைகளாலேயும், ப்ராஸாத தோரணங்களாலேயும் அலங்க்ருதமாய், ஸ்வர்காதிகளிலுங்காட்டில் நிரதிசய போக்யமாய், அதலமென்றும், விதலமென்றும், நிதலமென்றும் கபஸ்திமத்தென்று சொல்லப்பட்ட தலாதலமென்றும், மஹாதலமென்றும், ஸுதலமென்றும், பாதாளமென்றும் பேரையுடைத்தான அதோ லோகங்களேழும்;

**விளக்கம் -** ஸ்ரீவிபு. (2-5-3) - சுக்ல க்ருஷ்ணாருணா: பீதாச் சர்க்கராச்சைல காஞ்சநா: பூமயோ யத்ர மைத்ரேய வர ப்ராஸாத சோபிதா: - மைத்ரேயரே! எந்த ஒரு லோகத்தில் மிகவும் சிறந்த விளங்கும் மாளிகைகளில் உள்ள தரை முதலானவை வெளிர் நிறமுள்ளவையாகவும், மலைகளாகவும், கருங்கற்களாகவும், வெண்ணிறமாகவும்

உள்ளதோ - என்பதற்கு ஏற்ப “வெண்மை, கருப்பு, சிவப்பு, மஞ்சள், கூழாங்கற்கள் நிறைந்தும், குன்றுகளாகவும், பொன்னிறமாகவும்” உள்ள மாளிகைகள், மதில் தோரணங்கள் போன்றவை நிறைந்தும், ஸ்வர்கம் போன்றவற்றைக் காட்டிலும் எல்லையற்ற இன்பமாகவும், “அதலம், விதலம், நிதலம், கபஸ்திமத் எனப்படும் தலாதலம், மஹாதலம்,ஸுதலம், பாதாளம்” என்ற பெயர் கொண்ட கீழ் லோகங்கள் ஏழும்.

**வ்யாக்யானம் -** இதுக்கு மேல் எழுபதினாயிரம் யோஜநமகலத்தை உடைத்தாய், ஸப்த த்வீப ஸாகர பர்வதாதி விசிஷ்டமாய், பாதசாரிகளான மநுஷ்யாதிகள் வர்த்திக்கும் தேசமாய், பத்மாகாரமான பூலோகமும்;

**விளக்கம் -** இதற்கு மேல் எழுபதினாயிறம் யோஜனை அகலம் கொண்டதாகவும், “ஏழு த்வீபங்கள், ஏழு கடல்கள், ஏழு மலைகள்” ஆகியவற்றுடன் கூடியதாகவும், கால்கள் கொண்டு நகர்கின்ற மனிதர்கள் முதலான உயிர்கள் வசிக்கும் இடமாகவும், தாமரை போன்ற வடிவம் உள்ளதான பூலோகமும்.

**வ்யாக்யானம் -** பூலோகத்துக்கு மேல் ஆதித்யனுக்குக் கீழ் நூறாயிரம் யோஜநத்தளவு உயர்த்தியையுடைத்தாய், கந்தர்வாதிகள் வர்த்திக்கும் தேசமான புவர்லோகமும்;

**விளக்கம் -** பூலோகத்திற்கு மேலே, ஆதித்யனுக்கும் கீழே, நூறாயிரம் யோஜனை உயரம் கொண்டதாகவும், கந்தர்வர்கள் முதலானோர் வாழ்வதும் ஆகிய புவர்லோகமும்.

**வ்யாக்யானம் -** ஆதித்யனுக்கு மேல் த்ருவனுக்குக் கீழ் பதினாலு ஆயிரம் யோஜநத்தளவு உயர்த்தியையுடைத்தாய், ஸாதிகாரரான க்ரஹ நக்ஷத்ர இந்த்ராதிகள் வர்த்திக்கும் தேசமான ஸ்வர்லோகமும்

**விளக்கம் -** ஆதித்யனுக்கு மேலே துருவனுக்கும் கீழே, பதினான்காயிரம் யோஜனை உயரம் கொண்டதாகவும், மிகுந்த அதிகாரத்துடன் கூடிய “கிரகங்கள், நக்ஷத்ரங்கள், இந்த்ரன்” போன்றவர்கள் வாழ்வதாகவும் உள்ள ஸ்வர்லோகமும்.

**வ்யாக்யானம்** – த்ருவனுக்கு மேல் ஒரு கோடி யோஜநத்தளவு உயர்த்தியையுடைத்தாய், "விநிவ்ருத்தாதிகாராஸ்து மஹர்லோக நிவாஸிந" என்று நிவ்ருத்த அதிகாரராய், அதிகார அபேக்ஷரான இந்த்ராதிகள் வர்த்திக்கும் தேசமான மஹர்லோகமும்.

**விளக்கம்** -துருவனுக்கு மேலே ஒரு கோடி யோஜனை உயரம் கொண்டதாகவும், விநிவ்ருத்தாதிகாராஸ்து மஹர்லோக நிவாஸிந - அதிகாரம் நீங்கியவர்கள் மற்றும் மஹர் லோகத்தில் உள்ளவர்கள் - என்பதற்கு ஏற்ப அதிகாரம் நீங்கப்பெற்றவராக, அதிகாரத்தை எப்போதும் விரும்புபவராக உள்ள இந்த்ரன் போன்றவர்கள் வாழ்கின்ற மஹர்லோகமும்.

**வ்யாக்யானம்** - அந்த மஹர்லோகத்துக்கு மேல் இரண்டு கோடி யோஜநத்தளவு உயர்த்தியையுடைத்தாய், ப்ரஹ்மபுத்ரர்களான ஸநகாதி பரமயோகிகள் வர்த்திக்கும் தேசமான ஜநர்லோகமும்;

**விளக்கம்** - அந்த மஹர்லோகத்திற்கு மேலே இரண்டு கோடி யோஜனை உயரம் கொண்டதாகவும், நான்முகனுடைய புத்திரர்களாகிய ஸநகர் போன்ற உயர்ந்த யோகிகள் வாழ்வதும் ஆகிய ஜநர்லோகமும்;

**வ்யாக்யானம்** – ஜநர்லோகத்துக்கு மேல் எட்டு கோடி யோஜநத்தளவு உயர்த்தியையுடைத்தாய், வைராஜாக்க்யரான ப்ரஜாபதிகள் வர்த்திக்கும் தேசமான தபோலோகமும்,

**விளக்கம்** - ஜநர்லோகத்திற்கு மேலே எட்டுகோடி யோஜனை உயரம் கொண்டதாகவும், வைராக்யம் நிறைந்தவர்களாகிய ப்ரஜாபதிகள் வாழ்வதும் ஆகிய தபோலோகமும்.

**வ்யாக்யானம்** - தபோ லோகத்துக்கு மேல் நாற்பத்தெட்டு கோடி யோஜநத்தளவு உயர்த்தியையுடைத்தாய், "தேஷாமேஷாம் கேசந பரஹ்மலோகா ருத்ரஸ்யாந்யே ஸந்தி தத்ரைவ லோகா: விஷ்ணோரந்யே ஸந்தி லோகா விசாலாஸ் தாம்ஸ்தாந்லோகான் தாநுபாஸ்ய வ்ரஜந்தி" என்கிறபடியே ப்ரஹ்ம விஷ்ணு சிவர்களும், அவர்களை உபாஸித்து தத் ப்ராப்தி பண்ணினவர்களும் வர்த்திக்கும் தேசமான ஸத்யலோகமும்,

**விளக்கம் -** தபோலோகத்திற்கு மேலே நாற்பத்து எட்டு கோடி உயரம் கொண்டதாகவும், தேஷாமேஷாம் கேசந பரஹ்மலோகா ருத்ரஸ்யாந்யே ஸந்தி தத்ரைவ லோகா: விஷ்ணோரந்யே ஸந்தி லோகா விசாலாஸ் தாம்ஸ்தாந்லோகான் தாநுபாஸ்ய வ்ரஜந்தி - ஒரு சிலர் ஸத்யலோகத்தில் நான்முகனுடைய லோகம் உள்ளதாகவும், அங்கேயே ருத்ரனுடைய லோகம் உள்ளதாகவும் கூறுகிறார்கள்; ஒரு சிலர் விஷ்ணுவின் பரந்த லோகம் அங்கு உள்ளதாகவும் கூறுகிறார்கள் - என்பதற்கு ஏற்ப நான்முகன், விஷ்ணு மற்றும் ருத்ரன் ஆகியோரும், அவர்களை உபாஸனை செய்து அவர்களை அண்டி வாழும் தேவர்களும் வாழ்கின்ற ஸத்யலோகமும்;

**வ்யாக்யானம் -** ஆக ஊர்த்வாத கடாஹங்களுக்கு நடுவு அறுபது கோடி யோஜநம் அண்டோச்ச்ராயமாயிருக்கும். ஐம்பது கோடி யோஜநம் அண்டோச்ராயமென்பாருமுண்டு. அதில் "ஸூர்யாண்ட கோளயோர்மத்யே கோட்யஸ்யு: பஞ்சவிம்சதி:" என்கிற சுக்ர வசநத்தின்படியே, ஸூர்யனுக்கு மேல் இருபத்தஞ்சு கோடியும் கீழ் இருபத்தஞ்சு கோடியுமாயிருக்கும்.

**விளக்கம் -** இப்படியாக மேல் லோகங்களுக்கு நடுவில் அறுபது கோடி யோஜனை கொண்டதாக அண்டம் உள்ளது. அண்டமானது அந்த இடத்தில் ஐம்பது கோடி யோஜனை தூரம் என்று கூறுபவர்களும் உள்ளனர். அதில், ஸூர்யாண்ட கோளயோர்மத்யே கோட்யஸ்யு: பஞ்சவிம்சதி: - ஸூர்யமண்டலமானது அண்ட கோளங்களின் நடுவில் இருபத்து ஐந்து கோடி யோஜனை பரப்பளவில் உள்ளது - என்னும் சுக்ராசார்ய வசனத்தின்படி சூர்யனுக்கு மேலே இருபத்து ஐந்து கோடியும், கீழே இருபத்து ஐந்து கோடியுமாக உள்ளது.

**வ்யாக்யானம் -** இப்படியிருந்துள்ள சதுர்தச புவநங்களோடே கூடி, (ஒன்றுக்கொன்று பதிற்று மடங்கான ஏழு ஆவரணங்களாலும் சூழப்பட்டு) அதாவது கீழ்ச்சொன்ன பதினாலு லோகத்தையும் "ஏததண்ட கடாஹேந திரச்சோர்த்வமதஸ் ததா, கபித்தஸ்ய யதா பீஜம் ஸர்வதோ வை ஸமாவ்ருதம்" என்கிறபடியே, உளவாயில் விளாம்சதையை விளாவோடு எங்குமொக்க ஆவரிக்குமாபோலே "கோடி யோஜநமாநஸ்து கடாஹஸ் ஸம்வ்யவஸ்த்தித:" என்று கோடி யோஜநமெடுப்பமவகாசதயா உக்தமானபடியே அண்டகடாஹம் ஆவரித்து நிற்கும்.

**விளக்கம் -** இப்படியாக உள்ள பதினான்கு லோகங்களுடன் சேர்ந்து, (ஒன்றுக்கொன்று பதிற்று மடங்கான ஏழு ஆவரணங்களாலும் சூழப்பட்டு) - அதாவது, இதுவரை கூறப்பட்ட பதினான்கு லோகங்களையும், ஸ்ரீவிபு. (2-7-22) – ஏதத் அண்ட கடாஹேந திரச்ச ஊர்த்வமதஸ் ததா, கபித்தஸ்ய யதா பீஜம் ஸர்வதோ வை ஸமாவ்ருதம் – விளாம்பழத்தின் விதைகளானவை எவ்விதம் ஓட்டுடன் நான்கு பக்கங்களிலும் நன்றாகச் சூழப்பட்டு நிறைந்துள்ளனவோ அதே போன்று இந்த லோகங்கள் அனைத்தும் அண்ட கோளத்தால் கீழும் மேலுமாகச் சூழப்பட்டுள்ளன - என்பதற்கு ஏற்ப, விளாம்பழத்தின் உள்ளே இருக்கின்ற விதைகள் அதன் சதையை எங்கும் ஒரே போன்று பரவி நிற்பது போன்று, கோடி யோஜநமாநஸ்து கடாஹஸ் ஸம்வ்யவஸ்த்தித: - அண்டகோசமானது கோடி யோஜனை அளவு கொண்டது - என்பதற்கு ஏற்ப, கோடி யோஜனை எடுப்பாக சைவபுராணத்தில் கூறப்பட்டபடி அண்டகோசம் சூழ்ந்து நிற்கும்.

**வ்யாக்யானம் -** ஸாண்டகடாஹமான இவ்வண்டம், "தசோத்தரேண பயஸா மைத்ரேயாண்டஞ்ச தத் வ்ருதம்" என்கிறபடியே, தன்னில் பதிற்று மடங்கு பரந்திருக்கிற ஜல தத்வத்தாலே ஆவ்ருதமாயிருக்கும். "பஞ்சாசத் கோடி விஸ்தாரா ஸேயமுர்வீ மஹாமுநே, ஸஹைவாணடகடாஹேந ஸத்வீபாபதி மஹீதரா" என்று, ஸாண்டகடாஹமான பூமண்டலம் பஞ்சாசத கோடி விஸ்தாரமாகச் சொல்லுவாரும்; "பூமண்டலம் து சதகோடி விஸ்தாரம் ஸாண்டகடாஹம்" என்று வாராஹபுராணத்திலே சொல்லுகையாலும், இப்படி ஸ்காந்தபுராணத்திலே சிவ ரஹஸ்யத்திலே பரக்கச் சொல்லுகையாலும், மேருவைச் சுற்றும் பஞ்சாசத கோடி விஸ்தாரத்தைக் கொண்டு பூமியை சத கோடி விஸ்தாரமாகச் சொல்லுவாருமாயிருக்கும். இதில் இரண்டத்தொரு மர்யாதையைத் தளமாக்கி, அதில் பதிற்று மடங்கு பெருத்த ஜல தத்வத்தாலே ஆவ்ருதமாயிருக்கும் என்றபடி.

**விளக்கம் -** அண்டகோசத்துடன் கூடியுள்ள இந்த அண்டமானது, ஸ்ரீவிபு. (2-7-23) - தசோத்தரேண பயஸா மைத்ரேயாண்டஞ்ச தத் வ்ருதம் - மைத்ரேயரே! பூமிக்குப் பத்து மடங்கு அதிகமான நீராலும் அந்த அண்டம் சூழப்பட்டுள்ளது - என்பதற்கு ஏற்ப, பூமியானது பத்து மடங்கு பரந்து நிற்கும் நீர் தத்வத்தால் சூழப்பட்டுள்ளது. ஸ்ரீவிபு. (2-4-98) - பஞ்சாசத் கோடி விஸ்தாரா ஸேயமுர்வீ மஹாமுநே, ஸஹைவாணடகடாஹேந

ஸத்வீபாபதி மஹீதரா - மகாமுனிவரே! தீவுகள், பெருங்கடல்கள், பெரிய மலைகள் என்று பலவற்றுடன் கூடியுள்ள அண்ட கோசத்துடன் சேர்ந்து இந்தப் பூமியானது ஐம்பது கோடி யோஜனை விரிவு கொண்டது – என்பதற்கு ஏற்ப, அண்டகோசத்துடன் சேர்ந்து பூமியானது ஐம்பது கோடி யோஜனை பரப்பு கொண்டது என்று சிலர் கூறுவர். “பூமண்டலம் து சதகோடி விஸ்தாரம் ஸாண்டகடாஹம் - அண்டகோசத்துடன் கூடிய பூமண்டலமானது நூறு கோடி யோஜனை பரப்பு கொண்டது” என்று வராஹபுராணத்தில் கூறப்பட்டதாலும், இவ்விதமே ஸ்காந்தபுராணம் சிவ ரஹஸ்யத்தில் கூறப்பட்டதாலும், மேரு மலையைச் சுற்றியுள்ள எல்லையுடன் ஐம்பது கோடி யோஜனை பரப்பளவையும் சேர்த்துக் கொண்டு, பூமியானது நூறு கோடி யோஜனை பரப்பளவாக உள்ளது என்றும் சிலர் கூறுவர். இவற்றில் ஏதேனும் ஒரு கருத்தை மதிப்பதற்கு ஏற்றதாகக் கொண்டு, அதில் பூமியைப் பத்து மடங்கு பெரும் நீர் தத்வம் சூழ்ந்துள்ளதாகக் கொள்ளவேண்டும்.

**வ்யாக்யானம் -** அண்டகடாஹத்தைப் பற்ற பதிற்று மடங்கு பெருத்த ஜல தத்வத்தாலே ஆவ்ருதமென்பாருமுண்டு. இப்படி தசோத்தரமாய்க் கொண்டு ஜல தத்வத்தை தேஜஸ் தத்வம் ஆவரிக்கும். அப்படி அத்தை வாயு தத்வம் ஆவரிக்கும். வாயுவை ஆகாசம் ஆவரிக்கும். ஆகாசத்தை அஹங்காரம் ஆவரிக்கும். அஹங்காரத்தை மஹத் தத்வம் ஆவரிக்கும். அந்த மஹத் தத்வத்தை அவ்யக்தம் ஆவரிக்கும். “ததநந்தமஸங்கயாத ப்ரமாணம்” என்று அபரிமித ப்ரமாணமான அவ்யக்தத்துக்கு ஆவரணத்வ ப்ரயுக்தமான தசோத்தரத்வம் கூடும்படியெங்ஙனே என்னில், ஆயிரத்திலே பத்துமுண்டாமாபோலே அபரிமித ஸங்க்யையிலே அதுவுமுண்டாகையாலே கூடும்.

**விளக்கம் -** அண்டகோசத்தைப் பற்ற பெரிய நீர் தத்வமானது பத்து மடங்கு சூழ்ந்துள்ளது என்றும் கூறுவர். இப்படியாக உள்ள நீர் தத்வமானது, பத்து மடங்கு அதிகமாக உள்ள அக்னி தத்வம் சூழ்ந்துள்ளது. இது போன்றே அக்னி தத்வத்தை வாயு தத்வம் சூழும். வாயு தத்வத்தை ஆகாசம் சூழும். ஆகாசத்தை அஹங்காரம் மூடும். அஹங்காரத்தை மஹத் தத்வம் மூடும். மஹத் தத்வத்தை அவ்யக்தம் மூடும். ஸ்ரீவிபு. (2-7-26) – தத் அநந்தம் அஸங்கயாதப்ரமாணம் – ப்ரக்ருதி எனப்படும் ப்ரதானமானது, அளவிட இயலாதபடி உள்ளது - என்பதற்கு ஏற்ப அளப்பதற்கு இயலாதபடி உள்ள அவ்யக்தத்திற்குப் பத்து மடங்காகப் பலதும் சூழ்ந்துள்ளதாகக் கூறுவது எப்படி? ஆயிரம் என்ற எண்ணிக்கையில்

பத்து என்பதும் அடங்கியுள்ளது போன்று, அளவிட இயலாத கணக்கில் இவையும் அடங்கியுள்ளன என்பது சரியே ஆகும்.

**வ்யாக்யானம்** – “வாரிவஹ்ந்யநிலாகாசைஸ் ததோ பூதாதிநா பஹி:, வ்ருதம் தச குணைரண்டம் பூதாதிர் மஹதா ததா, அவ்யக்தேநாவ்ருதோ ப்ரஹ்மந் தைஸ்ஸர்வைஸ் ஸஹிதோ மஹாந்; ஏபிராவரணைரண்டம் ஸப்தபி: ப்ராக்ருதைர் வ்ருதம்” என்கிறபடியே, இப்படி தசோத்தரங்களான ஸப்த ஆவரணங்களாலும் சூழப்பட்டு (ஈச்வரனுக்கு க்ரீடாகந்துகஸ்த்தாநீயங்களாய்) அதாவது க்ரீடாபரனான பாலனுக்கு க்ரீடநகங்கள் போலே, க்ரீடாரஸாநுபுபூஷுவான ஈச்வரனுக்கு, லீலோபகரணங்களாயிருகைகை. “ஹரே விஹரஸி க்ரீடாகந்துகைரிவ ஜந்துபி:” என்றும், “மோததே பகவாந் பூதைர் பால: க்ரீடநகைரிவ” என்றும் சொல்லுகிறபடியே, ஈச்வரனுக்கு விபூதியாக லீலோபகரணமாயிறே இருப்பது.

**விளக்கம்** - ஸ்ரீவிபு. (1-3-60) – வாரி வஹ்நி அநில ஆகாசைஸ் ததோ பூதாதிநா பஹி:, வ்ருதம் தச குணை: அண்டம் பூதாதிர் மஹதா ததா, அவ்யக்தேந ஆவ்ருதோ ப்ரஹ்மந் தைஸ்ஸர்வைஸ் ஸஹிதோ மஹாந்; ஏபி: ஆவரணை: அண்டம் ஸப்தபி: ப்ராக்ருதைர் வ்ருதம் - அதன் பின்னர் நீர், அக்னி, வாயு, ஆகாசம் ஆகியவற்றாலும், அஹங்காரத்தாலும் சூழப்பட்ட அண்டமானது, ஒன்றுக்கொன்று பத்து மடங்கு அதிகமாகச் சூழப்பட்டுள்ளது. பூதாதியானது மஹத்தால் சூழப்பட்டுள்ளது. இவ்விதம் அனைத்துவிதமான மூடுதலையும் கொண்ட மஹத்தானது, அவ்யக்தத்தால் சூழப்பட்டுள்ளது. இவ்விதம் ஏழுவிதமான மறைவுகள் கொண்டு அண்டம் மூடப்பட்டுள்ளது - என்பதற்கு ஏற்ப, ஒவ்வொன்றும் பத்து மடங்குகளாக உள்ள ஏழுவிதமான மறைப்புகளால் சூழப்பட்டுள்ளது. இப்படியாக உள்ள இது, (ஈச்வரனுக்கு க்ரீட ஆகந்துக ஸ்த்தாநீயங்களாய்) - விளையாட்டிலேயே எப்போதும் நாட்டம் கொண்டுள்ள ஒரு பாலகனிடம் உள்ள விளையாடும் பந்து போன்று, லீலைகளை உள்ளடக்கிய ஈச்வரனுக்கு இவை அனைத்தும் விளையாட்டுப் பொருள்களாக உள்ளன. ஸ்ரீவிஷ்ணுதர்மம் - ஹரே விஹரஸி க்ரீடாகந்துகைரிவ ஜந்துபி: - இந்த மனிதர்களைப் பந்தாகக் கொண்டு நீ விளையாடுகிறாய் - என்றும், மோததே பகவாந் பூதைர் பால: க்ரீடநகைரிவ - சிறுவர்கள் உபயோகிக்கும் விளையாட்டுக் கருவிகள் போன்று பயன்படுத்துகிறான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனுக்கு அனைத்தும் விளையாட்டுப் பொருள்கள் அல்லவோ?

**வ்யாக்யானம் -** (ஜலபுத்புதம்போலே, ஏககாலத்திலே ஸ்ருஷ்டங்களாயிருக்கும்) அதாவது இவ்வண்டங்களை ஈச்வரன் ஸ்ருஷ்டிக்குமளவில், ஓரொரு படையாக இட்டு அகமெடுக்குமா போலே க்ரமததிலே பரிணமிக்கையன்றியே, "ந க்ரமேண விவ்ருத்தம் தத் ஜலபுத்புதவத் ஸமம்" என்கிறபடியே நீர்க்குமிழிபோலே யொருக்காலே உத்பந்நங்களா மென்கையும், அநேக ஜலபுத்புதங்கள ஏக்காலத்திலே யுத்பந்நங்களாமாபோலே "ஏக காலேந ஸ்ருஜயந்தே" என்கிறபடியே ஸகல அண்டங்களும் ஏககாலத்திலே உத்பந்நங்களாமென்கையும். ஆக (அண்டங்கள்தான் அநேகங்கள்) என்னுமிடமும், அவைதான் எல்லாமொன்று போலேயிருக்கும் என்னுமிடமும் சொல்லிற்றாயிற்று.

**விளக்கம் -** (ஜலபுத்புதம்போலே, ஏககாலத்திலே ஸ்ருஷ்டங்களாயிருக்கும்) - இந்த அண்டங்களை ஈச்வரன் படைக்கும்போது, ஒவ்வொரு படையாக வைத்து வீடு கூட்டுவது போன்று, வரிசையாக ஏற்படுத்தல் இன்றி, ஸ்ரீவிபு. (1-2-56) – ந க்ரமேண விவ்ருத்தம் தத் ஜலபுத்புதவத் ஸமம் - அண்டமானது வரிசையாக வளராமல், நீர்க்குமிழி போன்று சட்டென்று வெளிப்படுகிறது - என்பதற்கு ஏற்ப, நீர்க்குமிழி போன்று ஒரே நேரத்தில் உற்பத்தி ஆகிறது. மேலும் பல நீர்க்குமிழிகள் ஒரே நேரத்தில் உற்பத்தி ஆவது போன்று, ஸ்ரீவிபு. (1-3-17) – ஏக காலேந ஸ்ருஜயந்தே - ஒரே காலத்தில் ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன - என்பதற்கு ஏற்ப, அனைத்து அண்டங்களும் ஒரே காலத்தில் உண்டாகின்றன. ஆகவே (அண்டங்கள்தான் அநேகங்கள்) என்று கூறும் இடமும், அவை அனைத்தும் ஒரே போன்று இருக்கும் என்ற இடமும் கூறப்பட்டதாகிறது.

113. பூதங்களில் ஆகாசமவகாச ஹேது; வாயு வஹநாதி ஹேது; தேஜஸ்ஸு பசநாதி ஹேது; ஜலம் ஸேசந பிண்டீகரணாதி ஹேது; ப்ருதிவி தாரணாதி ஹேது என்பர்கள்.

**அவதாரிகை -** பூதபஞ்சகங்களுக்கும் தனித்தனியே விநியோகங்களை தர்சிப்பிக்கிறார்.

**விளக்கம் -** பஞ்ச பூதங்களுக்கும், அவற்றின் தனித்தனியான பயன்களைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம் -** (பூதங்களில் ஆகாசம் அவகாச ஹேது) அதாவது ஸகல பதார்த்தங்களுக்கும் ஸ்திதி கமநாதிகளுக்கு இடங்கொடுத்துக் கொண்டிருக்கிறவிது,

ஆகாசத்துக்கு விநியோகமென்கை. "அஸ்ய தேஹஸ்ய வியதோ லாகவம் ஸௌக்ஷ்ம்யமேவ ச, சப்த: ச்ரோத்ரம் பலம் ப்ரஹ்மந் ஸுஷிரத்வம் விவிக்ததா" என்று இதுக்கு அநேக விநியோகங்களுண்டாயிருக்க இதொன்றையும் அருளிச்செய்தது, இதினுடைய ப்ராதாந்யத்தைப் பற்ற, இதுதான் மற்றையவற்றுக்கும் உபலக்ஷணம்.

**விளக்கம் -** (பூதங்களில் ஆகாசம் அவகாச ஹேது) - அனைத்து வஸ்துக்களுக்கும் இருப்பு, நகர்தல் போன்றவற்றுக்கு இடம் அளித்தல் என்பதே ஆகாயத்தின் தொழில் ஆகும். ப்ரஹ்மபுராணம் – அஸ்ய தேஹஸ்ய வியதோ லாகவம் ஸௌக்ஷ்ம்யமேவ ச, சப்த: ச்ரோத்ரம் பலம் ப்ரஹ்மந் ஸுஷிரத்வம் விவிக்ததா - நமது சரீரத்திற்கு எடை குறைவான தன்மை, நுட்பமாக உள்ள தன்மை, சப்தம் செவி மற்றும் வலிமை கொண்டதாக உள்ள தன்மை, துளைகளை உடைய தன்மை மற்றும் இடைவெளி கொண்டதாக உள்ள தன்மை ஆகிய பலவும் சரீரத்திற்கு ஆகாயத்திலிருந்து ஏற்படுகிறது - என்பதற்கு ஏற்ப, ஆகாயத்திற்குப் பல பயன்கள் உள்ளன. ஆயினும் இதற்கு அவகாசம் என்பதை மட்டுமே ஏன் அருளிச்செய்தார் என்றால், இதன் முதன்மையான தொழிலை உணர்த்தவே ஆகும். இது மற்ற பூதங்களுக்கும் பொருந்தும்; அதாவது அவை குறித்தும் கூறப்பட்டதாகிறது.

**வ்யாக்யானம் -** (வாயு வஹநாதி ஹேது) வஹநம் வஹிக்கை. ஆதி சப்தத்தாலே வ்யூஹந சேஷ்டாதிகளைச் சொல்லுகிறது. இதுதான் "வாயோஸ் ஸ்பர்சேந்த்ரியஞ் சேஷ்டாம் கார்க்கச்யம் ஸ்பர்சமேவ ச, வ்யூஹநம் வஹநம் தேஹஸ் ஸ்வீகரோதி ஸ்துத்தம" என்று சொல்லப்பட்டதிறே.

**விளக்கம் -** (வாயு வஹநாதி ஹேது) – "வஹநம்" என்றால், "பொருளை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லுதல்" என்று பொருள். "வஹநாதி" என்பதில் உள்ள "ஆதி - தொடக்கமாக" என்பதன் மூலம், அடைதல் போன்றவற்றைக் கூறியது. இந்தக் கருத்தானது, "வாயோஸ் ஸ்பர்சேந்த்ரியஞ் சேஷ்டாம் கார்க்கச்யம் ஸ்பர்சமேவ ச, வ்யூஹநம் வஹநம் தேஹஸ் ஸ்வீகரோதி ஸ்துத்தம - ஸ்பர்ச இந்த்ரியம், அசைத்தல், உறுதியுடன் இருத்தல், ஸ்பர்சம், உலவுதல், எடுத்துச் செல்லுதல் போன்ற பலவற்றையும் சரீரமானது வாயுவிலிருந்து கொள்கிறது" என்று கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** - (தேஜஸ்ஸு பசநாதி ஹேது) பசநமாவது பாகம் பண்ணுகை. ஆதி சப்தத்தாலே ஔஷ்ண்ய ப்ரகாசாதிகளைச் சொல்லுகிறது. இதுவும், "அக்நேரௌஷ்ண்யம் ப்ரகாசத்வம் ரூபேந்த்ரியமமர்ஷணம், ஸந்தாப சௌர்ய தைக்ஷ்ண்யாநி வர்ணம் பசந சக்திதாம்; ஆதத்தே ஸஹஸா தேஹஸ் ஸாஹஸஞ்ச த்விஜர்ஷப" என்று கதிதமாயிற்று.

**விளக்கம்** - (தேஜஸ்ஸு பசநாதி ஹேது) - பசநம் என்றால் சமைத்தல். இங்குள்ள "ஆதி" என்பதன் மூலம், உஷ்ணம் மற்றும் ப்ரகாசம் கூறப்பட்டது. இந்தக் கருத்தானது, "அக்நேரௌஷ்ண்யம் ப்ரகாசத்வம் ரூபேந்த்ரியமமர்ஷணம், ஸந்தாப சௌர்ய தைக்ஷ்ண்யாநி வர்ணம் பசந சக்திதாம்; ஆதத்தே ஸஹஸா தேஹஸ் ஸாஹஸஞ்ச த்விஜர்ஷப - உஷ்ணமாக இருத்தல், ஒளி பொருந்தி இருத்தல், கண்கள், பொறுத்துக் கொள்ள இயலாமை, தாபம், சௌர்யம், தீக்ஷ்ண்யம், நிறம், சமைக்கும் திறன், சாகசம் ஆகியவற்றை இந்தச் சரீரமானது அக்னியிடமிருந்து பெறுகிறது", என்று கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** - (ஜலம் ஸேசந பிண்டீகரணாதி ஹேது) ஸேசநமாவது நனைக்கை. பிண்டீகரணமாவது திரட்டுகை. ஆதி சப்தத்தாலே சைத்ய மார்தவாதிகளைச் சொல்லுகிறது. இதுவும் "அத்ப்யச் சைத்யம் ஸமாதத்தே ஸ்நிக்தத்வம ரஸநேந்த்ரியம் ப்ரஸாதம் மார்தவம் பிண்டீகரணம் க்லேதநஞ்ச வை" எனறு அபிஹிதமாயிற்று.

**விளக்கம்** - (ஜலம் ஸேசந பிண்டீகரணாதி ஹேது) - ஸேசநம் என்றால் நனைத்தல் என்று பொருள்; பிண்டீகரணம் என்றால் திரட்டுதல் என்று பொருள். "ஆதி" என்பதன் மூலம் குளிர்ச்சி, மென்மை போன்றவை கூறப்பட்டது. இந்தக் கருத்தனாது, "அத்ப்யச் சைத்யம் ஸமாதத்தே ஸ்நிக்தத்வம ரஸநேந்த்ரியம் ப்ரஸாதம் மார்தவம் பிண்டீகரணம் க்லேதநஞ்ச வை - குளிர்ச்சி, மென்மை, சுவை இந்த்ரியம், தெளிவு, மெழுகு போன்ற தன்மை, திரட்டும் தன்மை, நனைக்கும் தன்மை போன்றவற்றைச் சரீரமானது நீரிலிருந்து பெறுகிறது", எனப்பட்டது.

**வ்யாக்யானம்** - (ப்ருதிவி தாரணாதி ஹேது, என்பர்கள்) தாரணம் தரிக்கை. ஆதி சப்தத்தாலே மூர்த்திமத்த்வ குருத்வாதிகளைச் சொல்லுகிறது. "பூமேர் கந்த குணம் க்ராணம் கரிமாணஞ்ச தாரணம், மூர்த்திமத்த்வம் ஸஹிஷ்ணுத்வம் ஸ்வீகரோதி யதாததம்"

என்று இதுவும் வ்யாஹ்ருதமாயிற்று. “என்பர்கள்” என்றது, தத்வவித்துக்கள் சொல்லுவர்கள் என்றபடி.

**விளக்கம் -** (ப்ருதிவி தாரணாதி ஹேது, என்பர்கள்) - தாரணம் என்றால் தாங்குதல் என்று பொருள். ஆதி என்பதன் மூலம் உருவத்துடன் இருத்தல், பெரியதாக உள்ள தன்மை, பொறுமை ஆகியவை கூறப்பட்டது. இந்தக் கருத்தானது, “பூமேர் கந்த குணம் க்ராணம் கரிமாணஞ்ச தாரணம், மூர்த்திமத்த்வம் ஸஹிஷ்ணுத்வம் ஸ்வீகரோதி யதாததம் - மணம் என்ற தன்மை, மூக்கு, பெரியதாக உள்ள தன்மை, தாங்கும் தன்மை, உருவம் கொண்டிருத்தல், பொறுமை போன்றவற்றைச் சரீரமானது பூமியிலிருந்து பெறுகிறது” என்று கூறப்பட்டது. “என்பர்கள்” என்பதன் மூலம், “இப்படியாகத் தத்வங்கள் குறித்து அறிந்தவர்கள் கூறுகிறார்கள்” எனப்பட்டது.

114. ச்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்களைந்துக்கும், அடைவே சப்தாதிகளைந்தையும் க்ரஹிக்கை தொழில்; வாகாதி கர்மேந்த்ரியங்களைந்துக்கும், விஸர்க சில்பகத்யுக்திகள் தொழில்; மநஸ்ஸு இவையித்தனைக்கும் பொது.

**அவதாரிகை -** இனி ஏகாதச இந்த்ரியங்களுடைய வ்ருத்தி பேதத்தை அருளிச்செய்கிறார் மேல்.

**விளக்கம் -** அடுத்து பதினொரு இந்த்ரியங்களுடைய செயல்களில் உள்ள வேறுபாடுகளை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (ச்ரோத்ராதி இத்யாதி) ச்ரோத்ரத்துக்கு சப்த க்ரஹணமும், த்வகிந்த்ரியத்துக்கு ஸ்பர்ச க்ரஹணமும், சக்ஷுஸ்ஸுக்கு ரூப க்ரஹணமும், ஜிஹ்வைக்கு ரஸ க்ரஹணமும், க்ராணத்துக்கு கந்த க்ரஹணமும் தொழில். “த்வக் சக்ஷுர் நாஸிகா ஜிஹ்வா ச்ரோத்ரமத்ர து பஞ்சமம், சப்தாதீநாமவாப்த்யர்த்தம் புத்தி யுக்தாநி வை த்விஜ” என்னக் கடவதிறே. இந்த ச்லோகத்தில், இந்த்ரியங்களை வ்யுத்க்ரமமாக எடுக்கையாலே, இன்னத்துக்கு இன்னது விஷயமென்கிற நியமம் ந்யாயங்கொண்டு நிச்சயிக்கவேணும். ஜ்ஞாநேந்த்ரியங்களுக்கு சப்தாதிகளை க்ரஹிக்கை தொழிலென்னும் இவ்வளவே ப்ரகாசிப்பது.

**விளக்கம்** - (ச்ரோத்ராதி இத்யாதி) - செவிகளுக்குக் கேட்பது, தோலுக்குத் தீண்டுவது, கண்களுக்கு உருவங்களைக் காண்பது, நாக்கிற்கு சுவைப்பது மற்றும் மூக்கிற்கு மணத்தைப் பெறுவது போன்றவை செயல்களாகும். ஸ்ரீவிபு. (1-2-48) - த்வக் சக்ஷுர் நாஸிகா ஜிஹ்வா ச்ரோத்ரமத்ர து பஞ்சமம், சப்தாதீநாமவாப்த்யர்த்தம் புத்தி யுக்தாநி வை த்விஜ - சரீரத்தில் உள்ள தோல், கண், மூக்கு, நாக்கு மற்றும் காது ஆகிய ஐந்தும், சப்தம் முதலான புலன்களை அடையும் விதமாக புத்தி தத்வத்துடன் சேர்ந்துள்ளன – என்பது காண்க. இந்த ச்லோகத்தில், இந்த்ரியங்களை வரிசை இன்றிக் கூறுவதால், "இன்னதற்கு இன்ன தொழில்" என்பதை முறைப்படுத்தி அறிதல் வேண்டும். ஞானத்தை உண்டாக்கும் இந்த்ரியங்களுக்கு, சப்தம் போன்றவற்றை அறிதல் என்பது தொழில் என்ற அளவில் மட்டுமே இங்கு கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** - (வாகாதி இத்யாதி) இப்படி வ்யுத்க்ரமமாக அருளிச்செய்தது, வாக்ய ஸ்வாரஸ்யத்துக்காக. இத்தால் வாக்குக்கு உக்தியும், பாணிக்கு சில்பமும், பாதத்துக்கு கதியும், உபஸ்த்தபாயுக்களுக்கு ஜல மல விஸர்ஜநமும் தொழிலென்கை. "பாயூபஸ்த்தௌ கரௌ பாதௌ வாக் ச மைத்ரேய பஞ்சமீ, விஸர்க சில்பகத்யுக்தி கர்ம தேஷாஞ்ச கத்யதே" என்னக் கடவதிறே. (மநஸ்ஸு இவையித்தனைக்கும் பொது) அதாவது ஜ்ஞாநேந்த்ரியங்கள் ஸ்வஸ்வ விஷயங்களை க்ரஹிக்கும்போதும், கர்மேந்த்ரியங்கள் ஸ்வஸ்வ கர்மங்களைப் பண்ணும்போதும், மநஸ் ஸஹகாரம் வேண்டுகையாலே, உபயாத்மகமான மநஸ்ஸு இவையித்தனைக்கும் ஸாதாரணமாயிருக்குமென்கை.

**விளக்கம்** - (வாகாதி இத்யாதி) – இவ்விதம் "வாக்கு முதலான" என வரிசையாகக் கூறாமல், வரிசை மாற்றி அருளிச்செய்தது ஏனென்றால் வாக்கியத்தின் சுவை மாறாமல் இருப்பதற்காகவே ஆகும். இதன் மூலம் வாக்கிற்குப் பேசுதல், கைகளுக்குப் பொருளைத் தூக்குதல், கால்களுக்கு நடத்தல், மர்மக்குறிகளுக்கு சிறுநீர் மற்றும் மலம் வெளியேற்றுதல் ஆகியவையே தொழில் எனப்பட்டது. ஸ்ரீவிபு. (1-2-50) - பாயூபஸ்த்தௌ கரௌ பாதௌ வாக் ச மைத்ரேய பஞ்சமீ, விஸர்க சில்பகத்யுக்தி கர்ம தேஷாஞ்ச கத்யதே – மலமூத்ர கருவிகள், கைகள், கால், வாக்கு ஆகிய ஐந்தும் மலம் மற்றும் சிறுநீர் கழித்தல், பொருளை எடுத்தல், நடத்தல் மற்றும் பேசுதல் என்பதான தொழில் புரிகின்ற கர்ம இந்தத்ரியங்கள் – எனப்பட்டது. (மநஸ்ஸு இவையித்தனைக்கும்

பொது) - ஞானேந்த்ரியங்கள் தங்கள் தங்கள் விஷயங்களை அறியும்போதும், கர்மங்கள் தங்கள் தங்கள் தொழில்களைச் செய்யும்போதும், அவை மனதுடைய துணையைக் கொண்டுள்ளன. ஆகவே இரண்டு வகையான இந்த்ரியங்களுக்கும் மனத்தின் துணையானது அவசியம் என்பதால், மனம் இவை இரண்டிற்கும் பொதுவானது என்று கொள்ளவேண்டும்.

115. ஆகாசாதி பூதங்களுக்கு, அடைவே சப்தாதிகள் குணங்களாயிருக்கும்.

**அவதாரிகை** - ஜ்ஞாநேந்த்ரியங்களுக்கு விஷயங்களாகச் சொல்லப்பட்ட சப்தாதிகள் ஐந்தும் ஆகாசாதிகளுக்கு ப்ரதிநியத குணங்களாயிருக்கும்படியை அருளிச்செய்கிறார்.

**விளக்கம்** - ஞானேந்த்ரியங்களுக்கு விஷயங்களாகக் கூறப்பட்ட சப்தம் போன்ற ஐந்தும், ஆகாசம் முதலானவற்றுக்கு, அந்தந்த குணங்களாக உள்ள விதத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஆகாசாதி பூதங்களுக்கு) இத்யாதியால். அதாவது ஆகாசகுணம் சப்தம், வாயுகுணம் ஸ்பர்சம், அக்நிகுணம் ரூபம், ஜலகுணம் ரஸம், பூகுணம் கந்தம் என்றபடி.

**விளக்கம்** - ஆகாசத்தின் குணம் - சப்தம், வாயுவின் குணம் - தீண்டுதல், அக்னியின் குணம் - ரூபம், நீரின் குணம் - சுவை மற்றும் பூமியின் குணம் - மணம் என்பதாகும்.

116. குண விநிமயம் – பஞ்சீகரணத்தாலே.

**அவதாரிகை** - இப்படி ப்ரதிநியத குணங்களான பூதங்களுக்கு குண விநிமயம் வருகைக்கு அடியருளிச் செய்கிறார்.

**விளக்கம்** - இவ்விதம் ஒவ்வொரு பூதங்களுக்கும் குணங்கள் தனித்தனியாக உள்ளபோது, அந்தக் குணங்களுடைய சேர்க்கை வருவதற்கான காரணத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (குண விநிமயம் பஞ்சீகரணத்தாலே) என்று. குண விநிமயமாவது, ஏக பூதத்திலே பூதாந்தர குணங்களும் காணலாம்படி, பூதங்களிலுண்டான குணக் கலப்பு.

ச்ருதப்ரகாசிகாகாரர் சுகபக்ஷீயத்திலே, “தேஜோவாரிம்ருதாம் யதா விநிமய:” என்கிறவிதுக்கு, “விநிமய பரஸ்பர ஸம்மிச்ரீகரணம்” என்றாரிறே. இங்கும், பரஸ்பர ஸம்மிச்ரீகரணமே விநிமய சப்தார்த்தம். அங்கு, பூதங்களுக்கு அந்யோந்யம் கலப்புச் சொல்லிற்று; இங்கு குணங்களுக்கு அந்யோந்யம் கலப்புச் சொல்லுகிறது. குணங்களுக்கந்யோந்யம் கலப்பாவது, பூதமும் பூதாந்தரமும் போலே, குணமும் குணாந்தரமும் தன்னிலே கலக்கையன்று; ஒன்றினுடைய குணம் ஒன்றிலே புக்கு, எல்லாவற்றிலும் எல்லாமுண்டாம்படியிருக்கை.

**விளக்கம்** - “குண விநிமயம்” என்றால், ஒரு பூதத்தில் மற்ற பூதத்தின் குணங்களைக் காணலாம்படியாக, பூதங்களில் ஏற்பட்டுள்ள குணச்சேர்க்கை. ச்ருதப்ரகாசிகாகாரர் சுகபக்ஷீயத்தில், “தேஜோவாரிம்ருதாம் யதா விநிமய: - அக்னி, நீர் மற்றும் பூமி ஆகியவற்றுக்கு எவ்விதம் ஒன்றுடன் ஒன்று சேர்க்கை ஏற்படுகிறது?”, என்ற கேள்விக்கு, “விநிமய பரஸ்பர ஸம்மிச்ரீகரணம் - விநிமயம் என்றால் ஒன்றுடன் ஒன்று கலத்தல்” என்றார் அல்லவோ? இங்கும், பூதங்கள் ஒன்றுடன் ஒன்று கலங்கக் கூடிய தன்மையே விநிமயம் எனப்பட்டது. அங்கு, பூதங்கள் ஒன்றுடன் ஒன்று சேர்வது குறித்துக் கூறப்பட்டது; இங்கு பூதங்களுடைய குணங்களின் சேர்க்கை குறித்துக் கூறப்பட்டது. இந்தச் சேர்க்கையானது, ஒரு பூதமும் மற்ற பூதங்களும் கலப்பது போன்று, ஒரு குணமும் மற்ற குணங்களும் கலப்பது அல்ல; ஒரு பூதத்தின் குணங்கள், மற்ற பூதங்கள் அனைத்திலும் உள்ளது போன்று சேர்தல் ஆகும்.

**வ்யாக்யானம்** – அதவா, விநிமயமாவது ஒன்றைக் கொடுத்து ஒன்றைக் கொள்ளுகையாய், தன் குணத்தை பூதாந்தரங்களுக்குக் கொடுத்து அதின் குணத்தைத் தான் பஜிக்கை என்னவுமாம். இத்தால் தன் குணம் அந்யத்தின் பக்கலிலுமுண்டாய், அந்யத்தினுடைய குணம் தன் பக்கலிலுமுண்டாம்படி இருக்கையைச் சொல்லுகிறது. இந்த (குண விநிமயம் பஞ்சீகரணத்தாலே) என்றதுக்குக் கருத்து, குணங்களாகையாலே ஆச்ரயாதந்யதோ வ்ருத்தியில்லையிறே இவற்றுக்கு. ஆகையால், த்ரவயத்தினுடைய கலப்பே குணக் கலப்புக்கு ஹேது என்கை.

**விளக்கம்** - அல்லது விநிமயம் என்பதற்கு வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். கலத்தல் என்பதற்கு “ஒன்றை அளித்து மற்றொன்றைப் பெறுதல்” என்பதாகும். தனது குணத்தை

மற்ற பூதங்களுக்கு ஒரு பூதம் அளித்துவிட்டு, அவற்றின் குணங்களைத் தானும் ஏற்பதாகும். இதன் மூலம், ஒரு பூதத்தின் குணம் மற்ற பூதங்களிலும், மற்ற பூதங்களின் குணங்கள் தன்னிலும் உள்ளதாக இருத்தல் கூறப்பட்டது. இந்தச் சேர்க்கை என்பது “பஞ்சீகரணத்தாலே” என்று ஏன் கூறப்பட்டது? குணங்களாக உள்ளதால், வேறு எதனுடைய செயல்பாடும் இவற்றின் மீது இல்லை அல்லவோ? எனவே பூதங்களுடைய சேர்க்கையே இங்கு காரணமாகிறது என்பதால், இவ்விதம் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – பஞ்சீகரணமாவது, “ஏவம் ஜாதேஷு பூதாநி ப்ரத்யேகம் ஸ்யுர் த்விதா தத:, சதுர்த்தா பிந்ந மேகைகமர்த்தமர்த்தம் ததா ஸ்த்திதம்; வ்யோமநோர்த்த பாகாச் சத்வாரோ வாயு தேஜ: பயோபுவாம்; அர்த்தாநியாநி வாயோஸ்து வ்யோம தேஜ: பயோபுவாம்” இத்யாதி புராணங்களிலே சொல்லுகிறபடியே ஆகாசாதி பூதங்களைந்தையும் தனித்தனியே இரண்டு கூறாக்கி, அவற்றிலே ஒரு கூறை நாலு கூறாக்கி, அந்தக் கூறுகளை பூதாந்தரங்களிலே கூட்டி, ஸர்வபூதங்களிலும் ஸர்வமுண்டாம்படி பண்ணுகை. இப்படி பஞ்சீகரணமானாலும், அவிபக்தமான அர்த்தங்கள் ப்ரதாநங்களாய் நிற்கையாலே, ஆகாசாதி பூத பேத வ்யவஹாரத்துக்கும் குறையில்லை.

**விளக்கம்** - பஞ்சீகரணம் என்றால் என்ன? ஏவம் ஜாதேஷு பூதாநி ப்ரத்யேகம் ஸ்யுர் த்விதா தத:, சதுர்த்தா பிந்ந மேகைகமர்த்தமர்த்தம் ததா ஸ்த்திதம்; வ்யோமநோர்த்த பாகாச் சத்வாரோ வாயு தேஜ: பயோபுவாம்; அர்த்தாநியாநி வாயோஸ்து வ்யோம தேஜ: பயோபுவாம் – இப்படியாகத் தோன்றிய பூதங்கள், அதன் பின்னர் தனித்தனியாக இரண்டாயின. ஒவ்வொரு பாதி பாகமும் நான்காக மாறின. மற்றொரு பாதி பாகம், பிரிக்கப்படாமல் இருந்தது. ஆகாசத்தின் பாதி பாகம் மற்றும் வாயு, அக்னி, நீர், பூமி ஆகியவற்றின் நான்கு பாகங்களும் சேர்ந்து; வாயுவின் பாதி பாகமும் ஆகாசம், அக்னி, நீ, பூமி ஆகியவற்றின் நான்கு பாகங்களும் சேர்ந்து, பஞ்சீகரணம் ஆகிறது - என்று கூறப்பட்டது. இப்படியாகப் புராணங்களில் கூறப்பட்டபடி, ஆகாசம் முதலான பூதங்களை இரண்டு இரண்டாகப் பிரித்து, அவற்றின் ஒரு பாகத்தை நான்கு பாகங்களாகப் பிரித்து, அந்த நான்கு கூறுகளையும் மற்ற பூதங்களுடன் சேர்க்கவேண்டும்; இப்படியாக அனைத்து பூதங்களிலும், அனைத்தும் இருக்கும்படியாகச் செய்தல் ஆகும். இப்படியாகப் பஞ்சீகரணம் செய்யப்பட்டாலும், பிரிக்கப்படாத பாதி பாகமானது அந்தந்த பூதங்களில்

முதன்மையாக உள்ளதால், ஆகாசம் முதலான பூதங்களில் உள்ள வேறுபாடுகள் மற்றும் செயல்களுக்கு எந்தப் பாதகமும் இல்லை.

117. ஆகாசம் கறுத்துத் தோற்றுகிறதுமத்தாலே.

**வ்யாக்யானம்** - (ஆகாசம் கறுத்துத் தோற்றுகிறதும் அத்தாலே) அதாவது, அதிஸூக்ஷ்மதையாலே கண்ணுக்குத் தோற்றாதபடியிருக்கும் ஆகாசத்துக்கு சக்ஷுர் விஷயத்வமும், "யத் க்ருஷ்ணம் தத் ப்ருதிவீ" என்று ப்ருதிவிக்கு உள்ளதொன்றாகச் சொல்லுகிற க்ருஷ்ணத்வமும் உண்டாயிற்று; அது பஞ்சீகரணத்தாலே என்கை.

**விளக்கம்** - ஆகாசம் என்ற பூதமானது மிகவும் நுண்ணியதாக உள்ளதால் கண்களுக்குப் புலப்படாமல் உள்ளதாகும். அப்படிப்பட்ட ஆகாசமானது, கண்களுக்குப் புலப்படுவது எந்தக் காரணத்தால் என்பதற்கு விடை அளிக்கிறார். சாந். (6-4-1) - யத் க்ருஷ்ணம் தத் ப்ருதிவீ – எந்த ஒன்று கருமையாக உள்ளதோ அது பூமியின் அம்சமாகும் – என்று கூறப்படுவதற்கு ஏற்ப, பூமிக்கு உள்ளதான கருமை நிறமானது ஆகாசத்திற்கு ஏற்படுகிறது. அது பஞ்சீகரணத்தால் வந்ததாகும்.

**வ்யாக்யானம்** – இத்தால், த்ரிவ்ருத்கரணத்தைச் சொன்ன வநந்தரம், ச்ருதிதானே "யதக்நே ரோஹிதம் ரூபம் தேஜஸஸ் தத் ரூபம் யச்சுக்லம் ததபாம் யத்க்ருஷ்ணம் ததந்நஸ்ய" என்று, அக்நியிலே த்ரிரூபத்வத்தை தர்சிப்பித்தாப்போலே, இவரும் பஞ்சீகரணத்தை அருளிச் செய்த அநந்தரம், அது தன்னை ஸர்வத்தையும் பற்ற ஸூக்ஷ்மமாயிருப்பதொரு பூதத்திலே தர்சிப்பித்தாராயிற்று.

**விளக்கம்** - இப்படியாக த்ரிவ்ருத்கரணத்தைக் கூறியதைத் தொடர்ந்து, ச்ருதியானது சாந். (6-4-1) – யத் அக்நே ரோஹிதம் ரூபம் தேஜஸஸ் தத் ரூபம் யத் சுக்லம் தத் அபாம் யத் க்ருஷ்ணம் தத் அந்நஸ்ய - அக்னிக்கு உள்ள சிவந்த நிறம் தேஜஸ்ஸின் அம்சம், வெண்மையானது நீரின் அம்சம், கருமையானது பூமியின் அம்சம் - என்று அக்னியில் மூன்றுவிதமான ரூபங்களையும் உணர்த்தியது. அதே போன்று இவரும், பஞ்சீகரணத்தை அருளிச்செய்ததைத் தொடர்ந்து, அதனை, அனைத்தையும் பற்றுவதற்காக, நுண்ணியதாக உள்ள ஆகாசத்தில் காண்பிக்கிறார்.

**வ்யாக்யானம் -** இப்படி ஸ்ரீபாஷ்யத்திலே, "யதக்நேர் லோஹிதம் ரூபம் தேஜஸஸ் ததபாமபி, சுக்லம் க்ருஷ்ணம் ப்ருதிவ்யாச்சேத்யகநாவேவ த்ரிரூபதா; ச்ருத்யைவ தர்சிதா தஸ்மாத் ஸர்வே ஸர்வத்ர ஸங்கதா:" என்று பாஷ்யகாரரும் அருளிச் செய்தார்.

**விளக்கம் -** இவ்விதமாக ஸ்ரீபாஷ்யத்தில் (1-1-1, ஸத் க்யாதி வாதம்), "யத் அக்நேர் லோஹிதம் ரூபம் தேஜஸஸ் தத் அபாம் அபி, சுக்லம் க்ருஷ்ணம் ப்ருதிவ்யாச்சேத்யகநாவேவ த்ரிரூபதா; ச்ருத்யைவ தர்சிதா தஸ்மாத் ஸர்வே ஸர்வத்ர ஸங்கதா: - அக்னியில் உள்ள சிவப்பு நிறமானது தேஜஸ்ஸுடையது ஆகும், வெண்மை நிறமானது நீரினுடையது ஆகும், கறுப்பு நிறமானது ப்ருதிவீ(பூமி)யின் நிறம் ஆகும். இப்படியாக அக்னியில் உள்ள மூன்றுவிதமான ரூபங்கள் குறித்து ச்ருதியிலேயே தெளிவாகக் கூறப்பட்டுள்ளது", என்று பாஷ்யகாரரும் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் –** சாந்தோக்யத்தில், பஞ்சீகரணம் சொல்லாதே த்ரிவ்ருத்கரணத்தைச் சொல்லுவானென்? என்னில்; அங்கு தேஜோபந்நங்கள் மூன்றினுடையவும் உத்பத்தி மாத்ரமிறே சொல்லிற்று; ச்ருத்யந்தரத்திற் சொல்லுகிற ஆகாச வாயுக்களினுடையவும் அவ்யக்த மஹதஹங்காராதிகளினுடையவும் உத்பத்திதானும் சொல்லிற்றில்லையிறே. ஆகையால், தேஜோபந்நமாத்ரகதநம், தத்வாந்தரங்களுக்கும் உபலக்ஷணமானாப் போலே, த்ரிவ்ருத்கரண கதநமும் பஞ்சீகரணத்துக்கும் உபலக்ஷணம். இப்படி, பஞ்சீகரணத்தாலே ஸகல பூதங்களும் பரஸ்பர மிச்ரங்களாகையாலே, சப்தாதி குண பஞ்சகமும் ஸாவபூதங்களிலுமுண்டா யிருக்குமென்று குண விநிமய ஹேது சொல்லிற்றாய் நின்றது.

**விளக்கம் -** ஆனால் சாந்தோக்யத்தில் பஞ்சீகரணம் கூறப்படாமல், த்ரிவ்ருத்கரணம் மட்டுமே கூறப்பட்டது ஏன்? இதன் காரணம், இந்த இடத்தில், தேஜஸ் உள்ளிட்ட மூன்றின் உற்பத்தி மட்டுமே கூறப்படுவதால் ஆகும். ச்ருதியின் வேறு பகுதியில் கூறப்படுவதான, ஆகாசம் மற்றும் வாயு ஆகியவையும், "அவ்யக்தம், மஹத் மற்றும் அஹங்காரம்" ஆகியவையும் உற்பத்தி ஆனது குறித்தும் இந்தப் பகுதியில் கூறப்படவில்லை அல்லவோ? எனவே தேஜஸ், நீர் மற்றும் பூமி ஆகியவற்றின் குணங்களில் கூறப்பட்ட விஷயமானது மற்ற தத்வங்களுக்கும் பொருந்தும் என்பது

போன்று, த்ரிவ்ருத்கரணம் மட்டுமே கூறப்பட்டதும் பஞ்சீகரணத்திற்கு உபலக்ஷணம் ஆகியது. இப்படியாகப் பஞ்சீகரணம் மூலம் அனைத்து பூதங்களும் ஒன்றுடன் ஒன்று கலந்து நிற்பதால், ஓசை முதலான ஐந்து குணங்களும், அனைத்து பூதங்களிலும் காணப்படும் என்பதாக, குணங்களுடைய சேர்க்கையின் காரணம் கூறப்பட்டது.

118. முன்புத்தை தந்மாத்ரைகளோடே கூடிக்கொண்டு உத்தரோத்தர தந்மாத்ரைகள் ஸ்வவிசேஷங்களைப் பிறப்பிக்கையாலே, குணாதிக்யமுண்டாயிற் றென்றும் சொல்லுவர்கள்.

**அவதாரிகை –** இனி, ஆகாசாதிகளில் பூர்வபூர்வத்தைப் பற்ற உத்தரோத்தர தத்வத்துக்கு குணாதிக்யமுண்டாகைக்கு மூலம் அருளிச்செய்கிறார்.

**விளக்கம் -** அடுத்து, ஆகாசம் முதலான பூதங்களில், அவற்றுக்கு முன்புள்ள தத்வம் மற்றும் அவற்றுக்கு முன்புள்ள தத்வம் என்பதை விளக்க, அவற்றுக்குப் பின்புள்ள தத்வம் மற்றும் அவற்றுக்குப் பின்புள்ள தத்வம் ஆகியவற்றின் குணங்களுடைய ஆதிக்கம் அதிகமாக உள்ள காரணத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (முன்புத்தை தந்மாத்ரைகள்) என்று தொடங்கி. அதாவது சப்த தந்மாத்ரத்தாலே ஆவ்ருதமாய்க் கொண்டு ஸ்பர்ச தந்மாத்ரம் ஸ்வவிசேஷமான வாயுவை ஜநிப்பிக்கையாலே, வாயுவுக்கு ஸ்பர்ச சப்தங்களிரண்டும் குணமாயிற்று. இப்படி, சப்த தந்மாத்ரத்தாலே ஆவ்ருதமான ஸ்பர்ச தந்மாத்ரத்தாலே ஆவ்ருதமாய், அவை யிரண்டோடுங்கூடி நின்று, ரூப தந்மாத்ரம் ஸ்வவிசேஷமான தேஜஸ்ஸை ஜநிப்பிக்கையாலே, அத்தத்வத்துக்கு சப்த ஸ்பர்ச ரூபங்களாகிற மூன்று குணங்களு முண்டாயிற்று. இப்படி பூர்வ தந்மாத்ர த்வய விசிஷ்டமான ரூப தந்மாத்ரத்தாலே ஆவ்ருதமாய், அவை மூன்றோடே கூடி நினறு ரஸ தந்மாத்ரம் ஸ்வவிசேஷமான ஜலத்தை ஜநிப்பிக்கையாலே, அதுக்கு சப்த ஸ்பர்ச ரூப ரஸங்களாகிற நாலு குணங்களு முண்டாயிற்று. இப்படி பூர்வ தந்மாத்ர த்ரய விசிஷ்டமான ரஸ தந்மாத்ரத்தாலே ஆவ்ருதமாய்க் கொண்டு கந்த தந்மாத்ரம் ஸ்வவிசேஷமான ப்ருதிவியைப் பிறப்பிக்கையாலே, அதுக்கு சப்தாதிகளான அஞ்சு குணங்களும் உண்டாயிற்று என்கை.

**விளக்கம் -** சப்த தந்மாத்ரையால் மூடப்பட்ட ஸ்பர்ச தந்மாத்ரையானது, தனது குணத்தை உள்ளடக்கியதான வாயுவை உண்டாக்குவதால், வாயுவிற்குத் தீண்டுதல் மற்றும் சப்தம் ஆகிய இரண்டு குணங்களுமே ஏற்பட்டது. இவ்விதம் சப்த தந்மாத்ரையால் மூடப்பட்டதான ஸ்பர்ச தந்மாத்ரையால் மூடப்பட்டதும், அவை இரண்டுடன் கூடி நிற்பதும் ஆகிய ரூப தந்மாத்ரையானது, தனது குணத்தை உள்ளடக்கியதான தேஜஸ்ஸை வெளிப்படுத்துகிறது. ஆகவே தேஜஸ்ஸிற்கு சப்தம், ஸ்பர்சம் மற்றும் ரூபம் ஆகிய மூன்று குணங்களும் உள்ளன. இவ்விதம் தனக்கு முன்புள்ள இரண்டு தந்மாத்ரைகளால் மூடப்பட்ட ரூப தந்மாத்ரையால் மூடப்பட்டதும், இந்த மூன்று தந்மாத்ரைகளுடன் கூடி நிற்பதும் ஆகிய சுவை தந்மாத்ரையானது, தனது குணத்தை உள்ளடக்கியதான நீரை வெளிப்படுத்தியது. ஆகவே நீருக்கு சப்தம், ஸ்பர்சம், ரூபம் மற்றும் சுவை ஆகிய நான்கு குணங்களும் உள்ளன. இவ்விதம் தனக்கு முன்புள்ள மூன்று தந்மாத்ரைகளால் மூடப்பட்ட சுவை தந்மாத்ரையால் மூடப்பட்டதும், இந்த நான்கு தந்மாத்ரைகளுடன் கூடி நிற்பதும் ஆகிய மண தந்மாத்ரையானது, தனது குணத்தை உள்ளடக்கியதான பூமியை வெளிப்படுத்தியது. ஆகவே பூமிக்கு சப்தம் போன்ற ஐந்து குணங்கள் உள்ளன.

**வ்யாக்யானம் -** இத்தால் ஏகைககுண ஆச்ரயமான ஆகாசாதி பூதங்களுக்கு குண விநிமயம் பஞ்சீகரண ப்ரயுக்தமானவோபாதி, உத்தரோத்தர பூதங்களில் குணாதிக்யமும் ஸ்வஸ்வ தந்மாத்ரங்களுக்குண்டான ஆவரண ப்ரயுக்தமென்றதாயிற்று என்றும் சொல்லுவர்களென்று கீழ்ச் சொன்னத்தோடே இத்தையும் ஸமுச்சயித்தருளிச் செய்கிறார்; இப்படி தத்வ வித்துக்கள் சொல்லுவர்களென்கை. "ஆகாசம் சப்த மாத்ரந்து ஸ்பர்ச மாத்ரம் ஸமாவிசத், ரூபம் ததைவாவிசத சப்த ஸ்பர்ச குணாவுபௌ; சப்தஸ் ஸ்பர்சச்ச ரூபஞ்ச ரஸ மாத்ரம் ஸமாவிசத; தஸ்மாத் சதுர்குணா ஹி ஆபோ விசேஷாச்சேந்த்ரிய க்ரஹ:" என்னக் கடவதிறே.

**விளக்கம் -** ஆக, இதன் மூலம், "ஒரு குணத்தை மட்டுமே கொண்டதான ஆகாசம் முதலான பூதங்களுக்குப் பஞ்சீகரணம் போன்றவற்றால் குணச் சேர்க்கை ஏற்படுவது போன்று, அடுத்தடுத்து உள்ள பூதங்களில் ஏற்படும் குணங்களுடைய அதிகம் என்பது, அந்தந்த பூதங்களுடைய தந்மாத்ரைகள் மூலம் ஏற்படுகிறது என்றானது என்றும் கூறுவார்கள்", என்பதைக் கீழே கூடியவற்றுடன் இதனையும் சேர்த்துக் கொண்டு அருளிச்செய்கிறார். இவ்விதமாக தத்வங்கள் குறித்து அறிந்தவர்கள் கூறுவார்கள் என்று கருத்து. ஆகாசம் சப்த

மாத்ரந்து ஸ்பர்ச மாத்ரம் ஸமாவிசத், ரூபம் ததைவாவிசத சப்த ஸ்பர்ச குணாவுபௌ; சப்தஸ் ஸ்பர்சச்ச ரூபஞ்ச ரஸ மாத்ரம் ஸமாவிசத; தஸ்மாச்ச: துர்குணாஹ்யாபோ விசேஷாச்சேந்த்ரிய க்ரஹ: - ஆகாசமானது சப்தம் மற்றும் ஸ்பர்சம் தந்மாத்ரைகளைப் பெற்றுள்ளது. அவ்விதமே, இரண்டாக உள்ளதான சப்தம் மற்றும் ஸ்பர்சம் ஆகிய குணங்கள், அக்னிக்குக் காரணமாக உள்ள ரூப தந்மாத்ரையை அடைகின்றன. சப்தம், ஸ்பர்சம், ரூபம் ஆகிய குணங்கள், நீருக்குக் காரணமாக உள்ள சுவை தந்மாத்ரையை அடைகின்றன. எனவே இந்த்ரியங்களால் அறியப்படவல்லதாக உள்ளதும், சிறப்பையும் கொண்ட நீரானது நான்கு குணங்கள் கொண்டதாக உள்ளது - என்பது காண்க.

119. ஸத்வ சூந்யமாவது காலம்.

**அவதாரிகை** - உத்தேச க்ரமத்திலே சுத்தஸத்வ மிச்ரஸத்வங்களினுடைய ஸ்வரூபாதிகளைத் தெளியவருளிச் செய்தார் கீழ்; இனி, ஸத்வ சூந்யமாகிறது ஏது என்னுமாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார்.

**விளக்கம்** - இவ்விதமாகத் தனது கருத்தை வெளியிட்ட அதே முறையில், சுத்தஸத்வம் மற்றும் மிச்ரஸத்வம் ஆகியவற்றின் ஸ்வரூபங்கள் குறித்து நன்கு விளங்கும்படியாக முன்பு அருளிச்செய்தார். அடுத்து ஸத்வ சூந்யம் என்றால் என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஸத்வ சூந்யமாவது காலம்) என்று. ஸத்வகுணம் ரஜஸ் தமஸ்ஸுக்களுக்கும் உபலக்ஷணமாய், ஸத்வ சூந்யமென்றது ஸத்வாதி குண த்ரய சூந்யமென்றபடி. இத்தால், கேவல ஸத்வமாயும், குண த்ரயாச்ரயமாயும் இருக்கிற அசித் த்வயத்தையும் பற்ற இது வ்யாவ்ருத்த ஸ்வரூபமாயிருக்குமென்கை.

**விளக்கம்** - இங்கு கூறப்பட்ட ஸத்வ குணம் என்பது, ராஜஸம் மற்றும் தாமஸம் ஆகியவற்றையும் கூறியதாகும். ஸத்வ சூந்யம் என்றால், ஸத்வம் போன்ற மூன்று குணங்களும் இன்றி இருத்தல். இதன் மூலம், வெறும் ஸத்வமாகவும், மூன்று குணங்களும் சேர்ந்துள்ளதாகவும் இருக்கின்ற இரண்டுவிதமான அசித்தை நோக்கும்போது, இது வேறுபட்டதாக உள்ளது என்று கருத்து.

120. இது, ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினுடைய பரிணாமங்களுக்கு ஹேதுவாய், கலா காஷ்டாதி ரூபேண பரிணமிக்கக் கடவதாய், நித்யமாய், ஈச்வரனுக்கு க்ரீடாபரிகரமாய், சரீர பூதமாயிருக்கும்.

**அவதாரிகை -** இதினுடைய ப்ரகாரம் ஏது என்னுமாகாங்க்ஷையிலே சொல்லப்படுகிறது மேல்.

**விளக்கம் -** ஸத்வ சூந்யத்தின் தன்மை என்ன என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (இது ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினுடைய பரிணாமங்களுக்கு ஹேதுவாய்) ப்ரக்ருதியென்கிறது அவ்யக்தத்தை. ப்ராக்ருதமென்கிறது வ்யக்தத்தை. ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினுடைய பரிணாமங்களுக்கு காலதத்வம் ஹேதுவாகையாவது, இவற்றை ஸ்வஸங்கல்பாதிகளாலே பரிணமிப்பிக்கிற ஸர்வேச்வரன், காலத்தினுடைய அவஸ்த்தா விசேஷங்களைப் பார்த்துக் கொண்டிருந்து, அவ்வவ காலங்கள் வந்தவாறே இவற்றை நிர்வஹிக்கையாலே, இவற்றினுடைய பரிணாமங்களுக்கு இது அவச்யாபேக்ஷிதமா யிருக்கை.

**விளக்கம் -** ப்ரக்ருதி என்பது அவ்யக்தத்தைக் குறிப்பதாகும். ப்ராக்ருதம் என்பது கண்களுக்குப் புலப்படும் தத்வம். ப்ரக்ருதி மற்றும் ப்ராக்ருதம் ஆகியவற்றின் மாற்றங்களுக்குக் காலம் எவ்விதம் காரணமாக உள்ளது? இதற்கு விடை அருளிச் செய்கிறார். இவற்றைத் தனது ஸங்கல்பம் மூலம் மட்டுமே மாற்றம் அடையச் செய்யும் ஸர்வேச்வரன், காலத்தின் செயல் நிலை சிறப்புகளை நோக்கிக் கொண்டிருப்பவனாக, அந்தந்த காலங்கள் வந்தவுடன் இவற்றை நிர்வாகம் செய்வதால், இவை மாற்றம் அடைவதற்குக் காலமானது மிகவும் இன்றியமையாத ஒன்றாக உள்ளது.

**வ்யாக்யானம் –** "ப்ரக்ருதிம் புருஷஞ்சைவ ப்ரவிச்யாத்மேச்சயா ஹரி:, க்ஷோபயாமாஸ ஸம்ப்ராப்தே ஸர்க்ககாலே வ்யயாவயயௌ", "காலே சம்ஸதி யோக்யதாம் சிதசிதோரந் யோந்யமாலிங்கதோ பூதாஹங்க்ருதி புத்திபஞ்சகரணீ ஸ்வாந்த ப்ரவ்ருத்தீந்த்ரியை:, அண்டாநாவரணைஸ் ஸஹஸ்ரமகரோத்" என்கிறபடியே ஜகத்ஸ்ருஷ்டி பண்ணுகிறபோது அக்காலம் வருமளவும் பார்த்துக் கொண்டிருந்திறே ஸ்ருஷ்டித்தது. இதுதான்

ஸ்த்தித்யாதிகளுக்குமொக்குமிறே. இப்படி, கால ப்ரதாநமாக ஸர்வேச்வரன் நிர்வஹித்தருளுகையாலே, இவ்விபூதியில் ஸகல பதார்த்தமும் காலக்ருத பரிணாமமா யிருக்கும். இவற்றினுடைய பரிணாமங்களுக்கு காலம் ஹேதுவென்னுமிடம், இதினுடைய அந்வய வ்யதிரேகங்களாலே லௌகிக பதார்த்தங்களிலே காணலாமிறே. ஆகையால், காலத்தினுடைய ப்ரக்ருதி ப்ராக்ருத பரிணாம ஹேதுத்வம், ஆகமத்தாலும் ப்ரத்யக்ஷத்தாலும் ஸித்தம்.

**விளக்கம்** - ஸ்ரீவிபு. (1-2-35) – ப்ரக்ருதிம் புருஷம் ச ஏவ ப்ரவிச்யாத்மேச்சயா ஹரி: க்ஷோபயாமாஸ ஸம்ப்ராப்தே ஸர்க்ககாலே வ்யயாவயயௌ – ஸ்ருஷ்டி காலம் வந்தவுடன், மாற்றம் அடைந்தும் மாற்றம் அடையாமலும் உள்ள ப்ரக்ருதி மற்றும் புருஷன் என்ற ஆத்மா ஆகியவற்றில் ஸ்ரீஹரி உட்புகுந்து, தனது ஸங்கல்பத்தால் கலக்கினான் - என்றும், ஸ்ரீகுணரத்னகோசம் (19) – காலே சம்ஸதி யோக்யதாம் சித் அசிதோ: அந்யோந்யம் ஆலிங்கதோ: பூத அஹங்க்ருதி புத்தி பஞ்சகரணீ ஸ்வாந்த ப்ரவ்ருத்தி இந்த்ரியை: அண்டாந் ஆவரணை: ஸஹஸ்ரம் அகரோத் தாந் பூர்புவஸ் ஸ்வர்வத: ஸ்ரீரங்கேச்வரதேவி தே விஹ்ருதயே ஸங்கல்பமாந: ப்ரிய: - ஸ்ரீரங்கநாதனின் நாயகியே! தாயே! ப்ரளயம் முடிந்த பின்னர், பல வகையான சேதனங்களும் அசேதனங்களும் ஒன்றுடன் ஒன்று, வேறுபாடு காண இயலாமல் கலந்து நின்றன. அப்போது மீண்டும் ஸ்ருஷ்டியைத் தொடங்கும் காலம் வந்தது. உடனே உனது ப்ரியமானவனான அழகியமணவாளன், அனைத்தையும் மீண்டும் படைக்க உறுதி பூண்டான். எதற்கு? உன்னை மகிழ்விக்க அன்றோ? அப்போது அவன் பஞ்சபூதங்கள், அஹங்காரம், மஹத், ஞான இந்த்ரியங்கள் ஐந்து, மனம், கர்ம இந்த்ரியங்கள் ஐந்து ஆகியவற்றைப் படைத்தான். இவற்றுடன் ஏழு சுற்றுக்களையும் படைத்தான். அதன் பின்னர் பூலோகம், புவர்லோகம், ஸ்வர்கலோகம் ஆகியவற்றைப் படைத்தான். மேலும் பல அண்டங்களையும் படைத்தான் - என்று கூறுவதற்கு ஏற்ப, இந்த ஜகத்தை ஸ்ருஷ்டி செய்யும் ஸர்வேச்வரன், அவ்விதம் ஸ்ருஷ்டிக்கும் காலம் வரும்வரை பார்த்துக் கொண்டிருந்தான், அதன் பின்னர் ஸ்ருஷ்டித்தான். இந்தக் கருத்தானது, இருப்பு போன்றவற்றுக்கும் பொருந்தும். இவ்விதம் காலத்தை முக்கியமான தத்வமாகக் கொண்டு ஸர்வேர்வரன் அனைத்தையும் நிர்வகித்து அருள்வதால், இந்த லீலாவிபூதியில் உள்ள அனைத்து வஸ்துக்களும் காலத்தால் மாற்றம் அடைவதாக இருக்கும். இவற்றின் மாற்றங்களுக்குக் காலமானது காரணமாக உள்ளது என்ற கருத்தானது, இதன் உடன்பாடு

மற்றும் எதிர்மறை மூலமாக, அனைத்து வஸ்துக்களிலும் காணலாம் அல்லவோ? எனவே காலத்தின் ப்ரக்ருதியாகிய மூலப்பகுதியும், ப்ராக்ருதம் என்பதான மஹத் தத்வம் போன்ற தத்வங்களுடைய மாற்றங்களுக்குக் காரணமாக உள்ளது என்னும் கருத்தானது, வேதங்களாலும் நேரடியாக அறிதல் மூலமும் தெளிவாகிறது.

**வ்யாக்யானம்** – அநந்தரம், கீழ்ச்சொன்னதுக்கு உபயோகியான இதின் பரிணாம விசேஷத்தைச் சொல்லுகிறது. (கலாகாஷ்ட்டாதி ரூபேண பரிணமிக்கக் கடவதாய்) “காஷ்ட்டா பஞ்சதச க்யாதா நிமேஷா முநிஸத்தம, காஷ்டா த்ரிம்சத் கலா த்ரிம்சத் கலா மௌஹூர்த்தி கோ விதி:, தாவத் ஸங்க்யைரஹோராத்ரம் முஹூர்த்தைர் மாநுஷம் ஸ்ம்ருதம்; அஹோராத்ராணி தாவந்தி மாஸ பக்ஷ த்வயாத்மக:; தைஷ்ஷட்பிரயநம் வர்ஷம் த்வேயநே தக்ஷிணோத்தரே; அயநம் தக்ஷிணம் ராத்ரி தேவாநாமுத்தரம் திநம்; திவ்யைர் வர்ஷ ஸஹஸ்ரைஸ்து க்ருத த்ரேதாதி ஸம்ஜ்ஞிதம்; சதுர்யுகம் த்வாதசபிஸ் தத் விபாகம் நிபோதமே சத்வாரி த்ரீணி த்வேசைகம் க்ருதாதிஷு யதாக்ரமம்; திவ்யாப்தாநாம் ஸஹஸ்ராணி யுகேஷ்வாஹு: புராவித:; தத் ப்ரமாணைச்சதைஸ் ஸந்த்யா பூர்வா தத்ராபிதீயதே; ஸந்த்யாம்சகச்ச தத் துல்யோ யுகஸ்யாநந்தரோ ஹி ஸ:; ஸந்த்யா ஸந்த்யாமசயோரந்தர்ய: காலோ முநிஸத்தம; யுகாக்யஸ் ஸ து விஜ்ஞேய: க்ருத த்ரேதாதி ஸம்ஜ்ஞித:” என்று தொடங்கி, “ஏவந்து ப்ரஹ்மணோ வர்ஷமேவம் வர்ஷசதந்து தத், சதம் ஹி தஸ்ய வர்ஷாணாம் பரமாயுர் மஹாத்மந:” என்னுமதளவாக காலத்தினுடைய பரிணாம விசேஷம் ஸ்ரீபராசரபகவானாலே கதிதமாயிற்று.

**விளக்கம்** - அடுத்து இதுவரை கூறப்பட்டவற்றுக்குப் பயனாக உள்ள காலத்தின் சிறப்பு குறித்துக் கூறப்படுகிறது. (கலாகாஷ்ட்டாதி ரூபேண பரிணமிக்கக் கடவதாய்) - ஸ்ரீவிபு. (1-3) - காஷ்ட்டா பஞ்சதச க்யாதா நிமேஷா முநிஸத்தம, காஷ்டா த்ரிம்சத் கலா த்ரிம்சத் கலா மௌஹூர்த்தி கோ விதி:, தாவத் ஸங்க்யைரஹோராத்ரம் முஹூர்த்தைர் மாநுஷம் ஸ்ம்ருதம்; அஹோராத்ராணி தாவந்தி மாஸ பக்ஷ த்வயாத்மக:; தைஷ்ஷட்பிரயநம் வர்ஷம் த்வேயநே தக்ஷிணோத்தரே; அயநம் தக்ஷிணம் ராத்ரி தேவாநாமுத்தரம் திநம்; திவ்யைர் வர்ஷ ஸஹஸ்ரைஸ்து க்ருத த்ரேதாதி ஸம்ஜ்ஞிதம்; சதுர்யுகம் த்வாதசபிஸ் தத் விபாகம் நிபோதமே சத்வாரி த்ரீணி த்வேசைகம் க்ருதாதிஷு யதாக்ரமம்; திவ்யாப்தாநாம் ஸஹஸ்ராணி யுகேஷ்வாஹு: புராவித:; தத் ப்ரமாணைச்சதைஸ் ஸந்த்யா பூர்வா தத்ராபிதீயதே; ஸந்த்யாம்சகச்ச தத் துல்யோ யுகஸ்யாநந்தரோ ஹி ஸ:; ஸந்த்யா

ஸந்த்யாமசயோரந்தர்ய: காலோ முநிஸத்தம; யுகாக்யஸ் ஸ து விஜ்ஞேய: க்ருத த்ரேதாதி ஸம்ஜ்ஞித: - முனிவர்களில் சிறந்தவரே! பதினைந்து நிமேஷங்கள் கொண்டது ஒரு காஷ்டை ஆகும். முப்பது காஷ்டைகள் கொண்டது ஒரு கலையாகும். முப்பது கலைகள் கொண்டது ஒரு முகூர்த்தம் ஆகும். இப்படிப்பட்ட முகூர்த்தங்கள் மூலம், பகல் மற்றும் இரவு என்பதாகிய ஒரு மனித நாள் உள்ளது. பகல் மற்றும் இரவு என்னும் முப்பது நாள்கள் கொண்டதாக, இரண்டு பக்ஷங்கள் கொண்ட ஒரு மாதம் உள்ளது. இப்படிப்பட்ட ஆறு மாதங்கள் கொண்டதாக உள்ள இரண்டு அயனங்களுடன் கூடிய வருடம் உள்ளது. தேவர்களுக்கு உத்தராயனம் என்பது பகல், தக்ஷிணாயனம் என்பது இரவு ஆகும். இந்த இரண்டும் சேர்ந்து தேவர்களுக்கு ஒருநாள் ஆகிறது. பன்னிரண்டு ஆயிரம் தேவ வருடங்கள் கொண்டதாகவும், க்ருத த்ரேதா த்வாபர கலி என்பதான பெயர்கள் கொண்டதாகவும் நான்கு யுகங்கள் உள்ளன. நான்கு யுகங்கள் குறித்துக் கூறுகிறேன். க்ருதயுகம் போன்றவற்றில் தேவ வருடங்கள் முறையே நான்கு, மூன்று, இரண்டு மற்றும் ஒன்று என உள்ளதாக அறிஞர்கள் கூறுகிறார்கள். யுகங்களில் ஒவ்வொரு யுகத்தின் முந்தினது, நூறான அளவைக் கொண்டதாக உள்ளது. யுகத்தின் பின்னே வருகின்ற ஸந்தியானது, முன்பு கூறப்பட்ட எண்ணிக்கைகளுடன் சமமாக உள்ளது. பிற்சந்தி மற்றும் முற்சந்தி ஆகியவற்றின் சமமான காலம் எதுவோ, அதுவே "க்ருத, த்ரேதா, த்வாபர, கலி" என்பதான பெயர் கொண்ட யுகங்களாகக் கூறப்படுகிறது - என்று தொடங்கி, ஸ்ரீவிபு - ஏவந்து ப்ரஹ்மணோ வர்ஷமேவம் வர்ஷசதந்து தத், சதம் ஹி தஸ்ய வர்ஷாணாம் பரமாயுர் மஹாத்மந: - இப்படியாக உள்ள நான்முகனுடைய ஒரு வருடம் உள்ளது. இவ்விதமாக நான்முகனுக்கு நூறு வருடங்கள் உள்ளன. இதுவே நான்முகனுடைய ஆயுள் காலம் ஆகும் - என்று காலத்தின் மாற்றங்களின் சிறப்பானது ஸ்ரீபராசரபகவானால் கூறப்பட்டது.

**வ்யாக்யானம் –** இது தன்னை நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டர், "நிமேஷம் பதினைந்து கொண்டது காஷ்டை. காஷ்டை முப்பது கொண்டது கலை. கலை முப்பது கொண்டது முஹூர்த்தம். முஹூர்த்தம் முப்பது கொண்டது திவஸம். திவஸம் முப்பது கொண்டது பக்ஷ த்வய ரூபமான மாஸம். மாஸமிரண்டு கொண்டது ருது. ருது மூன்று கொண்டது அயநம். அயநமிரண்டு கொண்டது ஸம்வத்ஸரம். இப்படி மாநுஷ ஸம்வத்ஸரம் முந்நூற்றறுபது கொண்டது ஒரு தேவ ஸம்வத்ஸரம். தேவ ஸம்வத்ஸரம் பன்னீராயிரங் கொண்டது சதுர்யுகம். அதில் க்ருதயுகம் நாலாயிரம், த்ரேதை மூவாயிரம், த்வாபரம்

இரண்டாயிரம், கலியுகம் ஆயிரம். க்ருதயுகத்துக்கு பூர்வஸந்த்யை நானூறு, அபரஸந்த்யை நானூறு. த்ரேதைக்கு பூர்வஸந்த்யை முந்நூறு, அபர ஸந்த்யை முந்நூறு. த்வாபரத்துக்கு பூர்வஸந்த்யை இருநூறு, அபரஸந்த்யையிருநூறு. கலியுகத்துக்கு பூர்வஸந்த்யை நூறு, அபரஸந்த்யை நூறு. இப்படி எழுபத்தொன்று சென்ற சதுர்யுகம் ஒரு மந்வந்தரம். இப்படி பதினாலு மந்வந்தரம் ஆயிரம் சதுர்யுகம். இது ப்ரஹ்மாவுக்கு ஒரு பகல். ராத்ரியும் இத்தோடே ஸமமாயிருக்கும். இப்படி, அஹோராத்ரங்களும் மாஸ ஸம்வத்ஸரங்களுமாகப் பெருக்கி, சதாந்தமாக பரிகணிதமான ப்ரஹ்ம ஆயுஸ்ஸுக்கு பரமென்று பேராம்" என்று ஸுவ்யக்தமாக அருளிச்செய்தார். ஆக காலத்தினுடைய கலா காஷ்ட்டாதி ரூப பரிணாம ப்ரகாரம் சொல்லப்பட்டது.

**விளக்கம் -** இதனையே நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டர், "பதினைந்து நிமேஷங்கள் கொண்டது ஒரு காஷ்டை ஆகும். முப்பது காஷ்டைகள் கொண்டது ஒரு கலை ஆகும். முப்பது கலைகள் கொண்டது ஒரு முஹூர்த்தம் ஆகும். முப்பது முஹூர்த்தங்கள் கொண்டது ஒரு நாள் ஆகும். முப்பது நாள்கள் கொண்டது, இரண்டு பக்ஷங்களை உள்ளடக்கிய வடிவான ஒரு மாதம் ஆகும். இரண்டு மாதங்கள் கொண்டது ஒரு ருது ஆகும். மூன்று ருதுக்கள் கொண்டது ஒரு அயநம் ஆகும். இரண்டு அயநங்கள் கொண்டது ஒரு வருடம் ஆகும். இப்படி உள்ள முந்நூற்று அறுபது மனித வருடங்கள் கொண்டதாக ஒரு தேவ வருடம் உள்ளது. பன்னீராயிரம் தேவ வருடங்கள் கொண்டது ஒரு சதுர்யுகம் ஆகும். ஒரு சதுர்யுகத்தி, நாலாயிரம் க்ருதயுகங்கள், மூவாயிரம் த்ரேதா யுகங்கள், இரண்டாயிரம் த்வாபர யுகங்கள் மற்றும் ஆயிரம் கலியுகங்கள் உள்ளன. க்ருதயுகத்துக்கு பூர்வஸந்த்யை நானூறு, அபரஸந்த்யை நானூறு ஆகும் த்ரேதா யுகத்திற்கு பூர்வஸந்த்யை முந்நூறு, அபர ஸந்த்யை முந்நூறு ஆகும். த்வாபர யுகத்துக்கு பூர்வஸந்த்யை இருநூறு, அபரஸந்த்யை இருநூறு ஆகும். கலியுகத்துக்கு பூர்வஸந்த்யை நூறு, அபரஸந்த்யை நூறு ஆகும். இவ்விதம் எழுபத்தொன்று சதுர்யுகங்கள் கொண்டது ஒரு மந்வந்தரம் ஆகும். இவ்விதம் பதினான்கு மந்வந்தரங்கள் கொண்டதாக ஆயிரம் சதுர்யுகம் உள்ளது. இது நான்முகனுக்கு ஒரு பகல் ஆகும். அவனுடைய ஒரு இரவும் இதே போன்று ஆகும். இப்படி, அஹோராத்ரங்களும் மாத வருடங்களுமாகப் பெருக்கி, வருகின்ற நான்முகனுடைய ஆயுள் காலத்திற்கு பரம் என்று பெயர்", என்று அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** (நித்யமாய்) இவ்விடத்தில் நித்யத்வமாவது, “அநாதிர் பகவாந் காலோ நாந்தோஸ்ய த்விஜ வித்யதே” என்கிறபடியே ஆதி அந்தரஹிதமாகை.

**விளக்கம் -** (நித்யமாய்) - இங்கு “நித்யம்” என்பது, ஸ்ரீவிபு. (1-2-20) - அநாதிர் பகவாந் காலோ நாந்தோஸ்ய த்விஜ வித்யதே - காலமானது மிகவும் பழமையானதாகவே உள்ளது, இதற்கு இறுதியும் இல்லை - என்பதாக, தொடக்கம் மற்றும் முடிவு இன்றி உள்ளதைக் குறிப்பதாகும்.

**வ்யாக்யானம் -** (ஈச்வரனுக்கு க்ரீடாபரிகரமாய்) அதாவது நிகில ஜகதுதய விபவ லய லீலனான ஸர்வேச்வரனுக்கு தத்தல்லீலோபகரணமாகை. ப்ரக்ருதி புருஷ காலங்கள் மூன்றும் லீலோப கரணமாயிறே இருப்பது. அதில், ப்ரக்ருதி புருஷர்கள் ஸ்ருஷ்ட்யாதிகளுக்கு கர்மீபவித்து லீலோப கரணமாவர்கள். இது, ஸஹகாரித்வேந லீலோப கரணமாயிருக்கும்; ஈச்வரன் ஸ்ருஷ்ட்யாதிகளை நிர்வஹிக்குமிடத்தில், ஸத்ய ஸங்கல்பனான தான் அடியில் பண்ணி வைத்த காலநியமம் தப்பாதபடி அவ்வவ காலா கமநம் பார்த்திருந்தே நிர்வஹிக்கையாலே இதுதன்னை நிமேஷ காஷ்ட்டாதி ரூபேண பரிணமிப்பிக்கையாலே, இதுதான் ஸ்ருஷ்டி விஷயமுமாயிறே இருப்பது. ஆக இப்படிகளாலே, ஈச்வரனுக்கு க்ரீடா பரிகரமாயிருக்கும். இத்தை க்ரீடா பரிகரமென்றே சொல்லுகையாலே, கால க்ருத பரிணாமமேயாய்ச் செல்லுகிற லீலாவிபூதியிலே இதுக்கு விநியோகம். “ந காலஸ் தத்ர வை ப்ரபு:” என்கிற போகவிபூதியில் இது கொண்டு அபேக்ஷையில்லை என்றதாயிற்று.

**விளக்கம் -** (ஈச்வரனுக்கு க்ரீடாபரிகரமாய்) - அதாவது, அனைத்து ஜகத்தின் ஸ்ருஷ்டி, காத்தல் மற்றும் அழித்தல் ஆகியவற்றை லீலையாகக் கொள்ளும் ஸர்வேச்வரனுக்கு, காலமானது, அத்தகைய லீலைக்கு ஏற்ற கருவியாக உள்ளது, ப்ரக்ருதி, புருஷன் மற்றும் காலம் ஆகிய மூன்றுமே, லீலைக்கு ஏற்ற கருவிகளாக உள்ளன அல்லவோ? இவற்றில், ப்ரக்ருதி மற்றும் ஜீவாத்மா ஆகியவர்கள், ஜீவாத்மாவின் கர்மங்களுக்கு ஏற்ப விளையாட்டுக் கருவியாக உள்ளனர். ஸர்வேச்வரன், ஸ்ருஷ்டி முதலானவற்றை நிர்வாகம் செய்யும்போது, ஸத்யஸங்கல்பனாக உள்ள தான், தொடக்கத்தில் ஏற்படுத்திய கால நியமம் மாறி விடாதபடி, அந்தந்த காலம் வரும்வரை பார்த்து நின்று, நிர்வாகம் செய்கிறான். மேலும் இதனை, நிமேஷம் மற்றும் காஷ்டை என்பதான வடிவங்களில்

மாறும்படிச் செய்கிறான். ஆகவே, காலமானது லீலைக்கான கருவியாக உள்ளது என்றாகிறது. காலத்தை லீலைக்குக் கருவியாகக் கூறுவதால், காலத்தின் மாறுதல்களால் ஏற்படுகின்ற மாற்றம் என்பதாகக் கூறப்படும் லீலாவிபூதியில், காலத்தின் உபயோகமானது, மஹாபாரதம் - ந காலஸ் தத்ர வை ப்ரபு: - பரமபதத்தில் காலம் உபயோகப்படுவதில்லை - என்பதற்கு ஏற்ப, பரமபதத்தில் இதன் மூலம் உபயோகம் இல்லை என்பதால் கூறப்பட்டதாகிறது.

**வ்யாக்யானம் –** அநந்தரம், ஏவம்பூதமான காலதத்வம் ஈச்வரனுக்கு அப்ருதக் ஸித்த விசேஷணமாயிருக்கும்படியை அருளிச்செய்கிறார், (சரீர பூதமாயிருக்கும்) என்று. “பரஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் புருஷ: பரமம் த்விஜ, வ்யக்தாவ்யக்தே ததைவாந்யே ரூபே காலஸ் ததா பரம்”, “ப்ரதாந புருஷா வ்யக்த காலாஸ்து ப்ரவிபாகச:, ரூபாணி ஸ்திதி ஸர்காந்த வ்யக்தி ஸத்பாவ ஹேதவ:”, “விஷ்ணோ: ஸ்வரூபாத் பரதோதிதே த்வே ரூபே ப்ரதாநம் புருஷச்ச விப்ர, தஸ்யைவதேந்யேந த்ருதே வியுக்தே ரூபாந்தரம் தத் த்விஜ காலஸம்ஜ்ஞம்” என்னக்கடவதிறே. ஒரு சேதநனோடு ஒரு த்ரவ்யத்துக்குண்டான ப்ருதக்ஸித்த்யநர்ஹ ஆதார ஆதேய பாவமும், நியந்த்ரு நியாம்ய பாவமும், சேஷசேஷி பாவமும் ஒரொன்றே சரீரலக்ஷணமாயிறே இருப்பது. கால ஸம்ஜ்ஞக அசித் த்ரவயத்துக்கு ஏதத் ஸம்பந்த த்ரயமும் ஈச்வரனோடே உண்டாகையாலே, இது அவனுக்கு சரீரமாயிருக்குமென்றதாயிற்று.

**விளக்கம் -** அடுத்து, இப்படியாக உள்ள காலதத்வமானது ஈச்வரனை விட்டு அகலாதபடி உள்ள சேர்க்கையை அருளிச்செய்கிறார். ஸ்ரீவிபு. (1-2-17) - பரஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் புருஷ: பரமம் த்விஜ, வ்யக்தாவ்யக்தே ததைவாந்யே ரூபே காலஸ் ததா பரம் - மிகவும் உயர்ந்த ப்ரஹ்மத்தின் சரீரமாக ஆத்மா உள்ளான்; ப்ரக்ருதியும் சரீரமாக உள்ளது; காலமும் சரீரமாக உள்ளது - என்றும், ஸ்ரீவிபு. (1-2-19) - ப்ரதாந புருஷா வ்யக்த காலாஸ்து ப்ரவிபாகச:, ரூபாணி ஸ்திதி ஸர்காந்த வ்யக்தி ஸத்பாவ ஹேதவ: – ப்ரதானம், புருஷனாகிய ஆத்மா, வ்யக்தம், காலம் போன்ற அனைத்தும் ப்ரஹ்மத்தின் சரீரங்கள்; இவை மாறுபாடுகளை அடைவிக்கும் தன்மை, இன்பம் அளிக்கவல்ல தன்மை, இருப்பு, தோற்றம், அழிவு, வெளிப்படும் தன்மை ஆகியவற்றுக்குக் காரணங்களாக உள்ளன - என்றும், ஸ்ரீவிபு. (1-2-26) – விஷ்ணோ: ஸ்வரூபாத் பரதோதிதே த்வே ரூபே ப்ரதாநம் புருஷச்ச விப்ர, தஸ்யைவதேந்யேந த்ருதே வியுக்தே ரூபாந்தரம் தத் த்விஜ காலஸம்ஜ்ஞம்

- அனைத்தையும் விட உயர்ந்த மஹாவிஷ்ணுவின் திருமேனியிலிருந்து ப்ரதானம் மற்றும் புருஷன் ஆகிய இரண்டும் தோன்றின; இவை ஸ்ருஷ்டிக்கு ஏற்றபடி உள்ளது போன்று, அவனுடைய சரீரத்தில் உள்ள மற்றொன்று, காலம் என்பதாகும் – என்றும் கூறப்பட்டது. ஒரு சேதனனுடன் ஒரு பொருளுக்கு ஏற்படுகின்ற பிரிவது என்பது இன்றி, “தாங்கும் தன்மை, தாங்கப்படும் தன்மை, ஏவும் தன்மை, ஏவப்படும் தன்மை, எஜமானன், அடிமை” ஆகியவற்றில் ஒவ்வொன்றும், சரீரத்தின் அடையாளமாகவே உள்ளன. காலம் என்பதான இந்த அறிவற்ற வஸ்துவிற்கும், மேலே கூறப்பட்ட மூன்றுவிதமான ஸம்பந்தமும் ஈச்வரனுடன் உள்ளது என்பதால், காலம் என்பதும் அவனுடைய சரீரமே என்றாகிறது.

**வ்யாக்யானம்** – இப்படி, ப்ரக்ருத்யாதி பரிணாம ஸஹகாரியான காலம், ஈச்வரனுக்கு சரீரமாயிருக்கும் என்கையாலே, ஸஹகாரிகாரணமும ஈச்வரனே என்னுமதுக்கு விரோதமில்லை. ஆக, ஸத்வசூந்யமாகிறது இன்னதென்றும், அது செய்யும் கார்யமும், அதுக்குறுப்பான அதினுடைய பரிணாமமும், அதினுடைய அநாதிநிதநத்வமும், அதுதான் ஈச்வரனுக்கு இன்னதுக்கு பரிகரமாயிருக்குமென்றும், அதுதான் அவனுக்கு சரீரமா யிருக்குமென்றும் சொல்லி நின்றது.

**விளக்கம் -** இவ்விதம், ப்ரக்ருதி முதலான தத்வங்கள் மாற்றம் அடையக் காரணமாக உள்ள காலமானது, ஈச்வரனுக்குச் சரீரமாக உள்ளது என்பதால், துணைக் காரணமும் ஈச்வரனே ஆகிறான் என்று கூறுவதில் எந்த முரண்பாடும் இல்லை. ஆக, ஸத்வசூந்யம் என்றால் என்ன என்பதும், அது செய்கின்ற செயல்பாடுகள், அதற்கு அவசியமாக உள்ள அதன் மாற்றங்கள், அதனுடைய புராதானத்தன்மை, அது ஈச்வரனுக்கு இந்த இந்த விஷயங்களில் கருவியாக உள்ள தன்மை மற்றும் அது ஈச்வரனுக்குச் சரீரமாக உள்ள தன்மை ஆகிய பலவும் கூறப்பட்டதாகிறது.

121. மற்றையிரண்டசித்தும், ஈச்வரனுக்கும் ஆத்மாவுக்கும் போக்ய போகோபகரண போக ஸ்தாநங்களாயிருக்கும்.

**அவதாரிகை** - த்ரிவித அசித்தையும் அருளிச்செய்கிறவிடத்தில் அவனுக்கு போக உபகரணமான கௌரவத்தைப் பற்ற சுத்த ஸத்வத்தை ப்ரதமமருளிச்செய்தார். அநந்தரம், அவனுடைய லீலைக்கு ப்ரதாந உபகரணமாய்க் கொண்டு ப்ரதாந சப்தவாச்யமான

மிச்ரஸத்வத்தை அருளிச்செய்தார். அநந்தரம், அந்த ப்ரதாந பரிணாமத்துக்கு ஸஹகாரியாய்க் கொண்டு லீலோபகரணமாயிருக்கும் ஸத்வ சூந்யத்தை அருளிச் செய்தார். இப்படி அசித் த்ரயத்தையும் சொல்லுகிறவிடத்தில், "ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினுடைய பரிணாமங்களுக்கு ஹேதுவாய்" என்று, காலதத்துவத்துக்கு விநியோகம் சொன்னவோபாதி பூர்வ அசித் த்வயத்துக்கும் விநியோகம் சொல்லப் பட்டதில்லையிறே; அத்தை அருளிச்செய்கிறார் மேல்.

**விளக்கம்** - மூன்றுவிதமான அசித் வஸ்துக்களைக் குறித்து அருளிச்செய்யும்போது, ஸர்வேச்வரனுக்கு இன்பங்களை அனுபவிக்கத் துணையாக உள்ளதான பெருமையை உணர்த்த, முதலில் சுத்தஸத்வம் குறித்து அருளிச்செய்தார். அடுத்து, அவனுடைய லீலைகளுக்கு முதன்மையான உபகரணமாக உள்ளதன் காரணமாக, ப்ரதானம் என்ற சொல்லின் பொருளாக உள்ள மிச்ரஸத்வம் குறித்து அருளிச்செய்தார். அடுத்து, அந்த ப்ரதானம் என்பது மாற்றங்கள் அடைவதற்குத் துணையாக உள்ள காரணத்தால், லீலைக்கு உபகரணமாக உள்ளதான ஸத்வசூந்யம் குறித்து அருளிச்செய்தார். இப்படியாக மூன்று அசித்துக்கள் குறித்து அருளிச்செய்யும் இந்த இடத்தில், சூர்ணை (120) – ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினுடைய பரிணாமங்களுக்கு ஹேதுவாய் - என்பதாக, காலத்திற்கு ஏற்ற பயன் கூறியது போன்று, முதலில் உள்ள இரண்டு அசித் வஸ்துக்களுக்குப் பயன் கூறப்படவில்லை அல்லவோ? அதனை இப்போது அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (மற்றையிரண்டு அசித்தும்) என்று தொடங்கி. ஈச்வரனுக்கும் ஆத்மாவுக்கும் என்றது, சேதநரிறே அசேதநத்துக்கு போக்தாக்கள்; சேதநராகவுள்ளது ஈச்வரனும் ஆத்மாவுமிறே; ஆனபின்பு, உபயர்க்கும் போக்யாதிகளாயிருக்குமென்றபடி. "ஆத்மாவுக்கும்" என்ற ஏகவசநம், ஜாத்யபிப்ராயமாகையாலே த்ரிவித சேதநரையும் சொல்லுகிறது. இப்படி, உபய அசித்தும் உபயர்க்கும் போக்யாதிகளாயிருந்ததேயாகிலும், கேவல பகவதிச்சையாலே தத் போகார்த்தமாக பரிணமிக்கையாலும், அநவரத அபரோக்ஷித ஸ்வ பர ஸ்வரூபரான நித்யமுக்தரில், "திருமகளும் நீயும்" என்கிறபடியே அம்மிதுநத்தினுடைய போகத்துக்குக கைதொடுமானமா யிருக்குமதொழிய, "அஹம் மம" என்றிருப்பாரில்லாமையாலும், சுத்தஸத்வத்தினுடைய விநியோகம் ஈச்வர ப்ரதாநமா யிருக்கும். அங்ஙனன்றிக்கே, சேதந கர்மாநுகுணமாக பகவத் ஸங்கல்பத்தாலே பரிணமிக்கையாலும், சேதநரெல்லாரும் தேவாதி சரீரங்களிலே அஹம் புத்தியைப்

பண்ணி ஸ்வதந்த்ர போக்தாக்களாயிருக்கையாலும், ஈச்வரனுக்கு இந்த விபூதியில் லீலாரஸமே ப்ரசுரமாய் போக ரஸம் அத்யல்பமாகையாலும், மிச்ரஸத்வத்தினுடைய விநியோகம் பத்தசேதந ப்ரதானமாயிருக்கும்.

**விளக்கம்** - "ஈச்வரனுக்கும் ஆத்மாவிற்கும்" என்று ஏன் கூறினார்? அசேதநத்தை அனுபவிப்பது சேதநர்கள் என்பதால் ஆகும். சேதநர்களாக உள்ளவர்கள், ஈச்வரனும் ஆத்மாவும் ஆவர். ஆகவே அசித் வஸ்துக்கள், இந்த இருவருக்கும் இன்பம் அளிக்கவல்லவையாக இருக்கும் என்று கருத்து. "ஆத்மாவுக்கு" என்று ஒருமையில் கூறப்பட்டது, "ஆத்ம ஜாதி" என்ற ஒன்றை உணர்த்தவே ஆகும்; இது மூன்றுவிதமான உள்ள சேதநர்களைக் குறிப்பதாகும். இவ்விதம் இரண்டு அசித்துக்களும், இந்த இருவருக்கும் இன்பம் அளிக்கக்கூடியதாக உள்ளபோதிலும், பகவானின் விருப்பம் காரணமாக மட்டுமே இவ்விதம் இன்பம் அளிக்கவல்லதாக அவை மாறுகின்றன என்பதாலும்; அனைத்து காலங்களிலும் தங்களையும் பகவானையும் நேரில் காணக்கூடிய ஸ்வரூபம் கொண்ட நித்யமுக்தர்களில், திருவாய்மொழி (4-9-10) – திருமகளும் நீயும் - என்பதற்கு ஏற்ப எம்பெருமான் மற்றும் பெரியபிராட்டியார் ஆகிய இருவருடைய இன்பத்திற்குக் கருவியாக இருப்பது அல்லாமல், "நான், என்னுடையது" என்று இவற்றை உரிமை கொள்ள யாரும் இல்லை என்பதாலும் சுத்தஸத்வத்தின் பயன் என்பது, ஈச்வரனுக்கு மட்டுமே முதன்மையானதாக இருக்கும். மிச்ர ஸத்வமானது இது போன்று அல்லாமல், சேதநர்களுடைய வினையில் காரணமாக பகவத் ஸங்கல்பத்தால் மாற்றங்கள் அடைகிறது என்பதாலும்; சேதநர்கள் அனைவரும் தாங்கள் எடுக்கின்ற தேவர்கள் முதலான சரீரங்களில் "நான்" என்ற எண்ணத்தை ஏற்படுத்திக்கொண்டு, தாங்கள் சுதந்திரமானவர்கள் என்று எண்ணி அனுபவித்தபடி உள்ளதாலும்; ஈச்வரனுக்கு இந்த உலகில் லீலையை அனுபவித்தல் என்பதே முதன்மையானதாக, இன்பத்தின் அனுபவம் குறைவாக இருப்பதாலும், மிச்ரஸத்வத்தின் பயன் என்பது பந்தப்பட்ட சேதநர்களுக்கு மட்டுமே முதன்மையானதாக உள்ளது.

122. போக்யங்களாகிறன விஷயங்கள்; போகோபகரணங்களாகிறன சக்ஷுராதி கரணங்கள்; போகஸ்த்தாநங்களாகிறன சதுர்தச புவநமும் ஸமஸ்ததேஹமும்.

**அவதாரிகை -** அந்த விபூதியில் போக்யங்களாவன அப்ராக்ருதமான சப்தாதிகள்; போகோபகரணங்களாவன திவ்யமால்யாதிகளும் சதத்சாமராதிகளும், கரணங்கள்தானும்; போகஸ்த்தானங்களாவன அப்ராக்ருத ரத்நமயமான மண்டபமென்ன, மாளிகையென்ன இத்யாதிகளும், பஞ்சோபநிஷந்மயமான திவ்யவிக்ரஹங்களும். இப்படி நித்யவிபூதி ப்ரக்ரியையும் இவ்விடத்திலே அருளிச்செய்ய வேண்டியிருக்க ஸங்கோசித்து லீலாவிபூதி ப்ரக்ரியா மாத்ரத்தை அருளிச்செய்கிறார் (போக்யங்களாகிறன) என்று தொடங்கி.

**விளக்கம் -** அந்தப் பரமபதத்தில் உள்ள இன்பங்கள் என்பவை இந்த உலகை காண இயலாத ஒலி போன்றவை; இன்பத்தை அனுபவிக்கப் பயன்படும் கருவிகள் என்பவை திவ்யமான மாலைகள், குடை, சாமரங்கள், இவற்றை உபயோகப்படுத்தவல்ல உறுப்புகள் போன்றவை; இன்பங்களை அனுபவிக்கத்தக்க இடங்கள் என்பவை இந்த உலகில் காண இயலாத இரத்தினங்கள் பதிக்கப்பட்ட மண்டபங்கள் மாளிகைகள், "பரமேஷ்டி, புமாந், விச்வம், நிவ்ருத்தி மற்றும் ஸர்வம்" என்பதான ஐந்து அம்சங்கள் சேர்ந்த திவ்ய விக்ரஹங்கள் போன்றவை ஆகும். இப்படியாக நித்யவிபூதியின் செயல்களையும் இந்த இடத்தில் அருளிச்செய்யவேண்டியதாக உள்ளபோது, அவற்றைச் சுருக்கி, லீலா விபூதியில் செய்யப்படும் செயல்கள் குறித்து மட்டுமே அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** இதுதானே உபயவிபூதிக்குமானாலோ? என்னில், போகோபகரணங்களில் ப்ரதாநங்கள் சொல்லாமையாலும், போகஸ்த்தாநங்களில் வைஷம்யத்தாலும் சேராது. இங்கு, சேதநர்க்கு போகமாவது ஸுகதுக்கரூபமான அநுபவ ஜ்ஞாநம். அந்த ஜ்ஞாநத்துக்கு விஷயமாகையாலே சப்தாதி விஷயங்கள் போக்யங்கள். அந்த ஜ்ஞாநத்துக்கு உபகரணங்களாகையாலே இந்த்ரியங்கள் போகோபகரணங்கள். யாதொரு அதிகரணத்திலே நிற்கிற சேதநனுக்கு அந்த ஜ்ஞாநம் பிறக்கிறது, அது போகஸ்த்தாந சப்தத்துக்கு அர்த்தமாகையாலே, போகஸ்த்தாநங்களென்று லோகங்களையும் தேஹங்களையும் சொல்லுகிறது. லோகவிபாகம் கீழே சொல்லப்பட்டது. ஸமஸ்த தேஹங்களாவன ஸுர நர திர்யக் ஸ்த்தாவராத்மகமான சரீரங்கள். ஈச்வரனுக்கு இந்த விபூதியிலுண்டான போக்ய போகோபகரணாதிகளையும், அவதார கந்தமான க்ஷீரார்ணவ சயநத்திலும் அவதார விசேஷங்களிலும், அர்ச்சாவதாரங்களிலுமுண்டான விநியோக விசேஷங்களாலே கண்டு கொள்வது.

**விளக்கம் -** இந்த ஐந்தும், இரண்டு விபூதிகளுக்கும் உள்ளது என்று கூறலாம் அல்லவா என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். இன்பத்தை அனுபவிக்கும் கருவிகளில் முதன்மையானவற்றைக் கூறாமல் இருந்ததாலும், இன்பத்தை அனுபவிக்கும் இடங்களில் உள்ள ஏற்றத்தாழ்வின் காரணத்தாலும், இவை அனைத்தும், இரண்டு விபூதிகளுக்கும் சேராது. இந்த உலகில் உள்ளபோது சேதநர்களுக்கு இன்பம் என்பது, இன்பதுன்பங்கள் வடிவில் உள்ள அனுபவ ஞானம் ஆகும். அத்தகைய ஞானத்திற்கு விஷயமாக உள்ளதால், சப்தம் போன்றவை அந்த இன்பங்கள் ஆகும். அந்த ஞானத்திற்கு உதவியாக இந்த்ரியங்கள் உள்ளதால், அவை அனைத்தும் இன்பத்தை அனுபவிக்க உதவும் கருவிகள் ஆகும். எந்த ஒரு இடத்தில் சேதநன் நிற்கும்போது, அத்தகைய ஞானம் ஏற்படுகிறதோ, அந்த இடமே இன்பத்தை அனுபவிக்கும் இடம் என்பதால், "இன்பத்தை அனுபவிக்கும் இடங்கள்" என லோகங்களும், சரீரங்களும் கூறப்பட்டன. லோகத்தில் உள்ள வேறுபாடுகள் முன்பே கூறப்பட்டன. "ஸமஸ்த தேஹம்" என்றால் தேவர்கள், மனிதர்கள், விலங்குகள் மற்றும் தாவரங்கள் என்பதான சரீரங்கள் ஆகும். ஈச்வரனுக்கு இந்த உலகில் ஏற்படும் இன்பங்கள் மற்றும் அவற்றை அனுபவிக்கும் கருவிகளை, "அவதாரங்கள் எடுப்பதற்குக் காரணமாக உள்ள திருப்பாற்கடலில் சயனித்தல், அவதாரங்களில் உள்ள சிறப்புகள், அர்ச்சாவதாரத்தில் உள்ள ஸௌளப்யம் போன்றவை" முதலானவற்றில் அறிக.

123. இதில், முற்பட்ட அசித்துக்குக் கீழெல்லையுண்டாய் சுற்றும் மேலுமெல்லை யின்றிக்கேயிருக்கும்; நடுவில் அசித்துக்குச் சுற்றுங் கீழுமெல்லையின்றிக்கே, மேலெல்லையுண்டாயிருக்கும்; காலம் எங்குமொக்கவுண்டாயிருக்கும்.

**அவதாரிகை -** அநந்தரம், த்ரிவித அசித்தினுடையவும் பரிணாமங்களை அருளிச்செய்கிறார் (இதில் முற்பட்ட அசித்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம் -** அடுத்து, மூன்றுவிதமான அசித் வஸ்துக்களுடைய வளர்ச்சி மாற்றங்களை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - பூர்வ அசித்துக்குக் கீழெல்லையுண்டு என்கிறது, மிச்ர ஸத்வாவதியாகையாலே. நடுவில் அசித்துக்கு மேலெல்லையுண்டென்கிறது, சுத்த ஸத்வாவதியாகையாலே. காலத்துக்கு அங்ஙனொரு அவச்சேதமில்லாமையாலே, எங்குமொக்கவுண்டாயிருக்கும் என்கிறது. இப்படி, ஸார்வத்ரிகமான காலந்தான், உபயவிபூதியிலும் நித்யமென்றிறே தமக்குத் திருவுள்ளம்.

**விளக்கம்** - (முன்பு கூறப்பட்டதான சுத்தஸத்வமானது, மிச்ரஸத்வத்தின் மேலே உள்ளதாகக் கொண்டு படிக்கவும்) மிச்ரஸத்வத்துக்கு மேல் எல்லை என்பது முடிவாக உள்ளதால், முதலில் கூறப்பட்டதான சுத்த ஸத்வத்திற்கு கீழ் எல்லை உண்டு என்றாகிறது. நடுவில் உள்ளதான மிச்ரஸத்வத்திற்கு மேல் எல்லை உண்டு என்றாகிறது; ஏனெனில், அதன் மேல் எல்லை என்பது சுத்தஸத்வத்தின் முடிவாக உள்ளதால் ஆகும். காலம் என்பதற்கு எவ்விதமான எல்லையும் இல்லை. ஆகவே அது எங்கும் ஒரே போன்று, எப்போதும் உள்ளது. இப்படியாக எங்கும் உள்ள காலமானது, இரண்டு விபூதிகளிலும் எப்போதும் இருக்கிறது என்பதே இவருடைய திருவுள்ளமாகும்.

124. காலந்தான் பரமபதத்தில் நித்யம், இங்கு அநித்யமென்றுஞ் சொல்லுவர்கள்.

**அவதாரிகை** - இங்ஙனன்றிக்கே, இதுக்கு விபூதி விபாகத்தையிட்டு ஒரு பேதம் சொல்லு வாருமுண்டு என்கிறார்.

**விளக்கம்** - இவ்விதம் காலமானது ஒரே போன்று உள்ளது என்பதை ஏற்காமல் ஒரு சிலர், காலத்திற்கு "இந்த உலகம், அந்த உலகம்" என்பதான பிரிவு உள்ளதாகக் கூறி, வேறுபாடு உரைப்பார்கள்.

**வ்யாக்யானம்** - இப்படிச் சொல்லுகைக்கடி பரமபதத்தில் இதுக்கு உத்பத்த்யாதிக ளுண்டாக சாஸ்த்ரங்கள் சொல்லாமையாலும், இந்த விபூதியிலே இதுக்கு உத்பத்த்யாதிகளைச் சொல்லுகையாலும். வ்யூஹ க்ருத்யங்களைச் சொல்லுமிடத்திலே கால ஸ்ருஷ்டியை அநிருத்த க்ருத்யமாகச் சொல்லாநின்றதிறே.

**விளக்கம் -** “காலமானது பரமபதத்தில் எப்போதும் உள்ளது, இந்த விபூதியில் அநித்யமானது” என்று சிலர் கூறுவர். இவ்விதம் கூறுவதற்கான அடிப்படை என்ன? பரமபதத்தில் இதற்கு உற்பத்தி உள்ளதாகச் சாஸ்த்ரங்கள் கூறுவதில்லை; இந்த லோகத்தில் இதற்கு உற்பத்தி உள்ளதாகச் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. வ்யூஹங்களுடைய செயல்பாடுகள் குறித்து உரைக்கும் இடங்களில், காலத்தில் ஸ்ருஷ்டியை அநிருத்தனுடைய செயலாகக் கூறுவதாலும் ஆகும்.

**வ்யாக்யானம் -** ப்ரக்ருதியை ஸ்ருஷ்டிக்கையாவது, மஹதாதி ரூபேண பரிணமிப்பிக்கையானாப்போலே. காலத்தை ஸ்ருஷ்டிக்கையாவது, நிமேஷகாஷ்டாதி ரூபேண பரிணமிப்பிக்கை. ஸதத பரிணாமிநியான ப்ரக்ருதிக்கு மஹதாதி ரூபமான ஸ்த்தூல பரிணாமம் போலேயிறே, ஸதத பரிணமியானவிதுக்கும் நிமேஷாதி ரூபேண பரிணாமம். அந்த மஹதாதியோபாதி நிமேஷாதியானவிதுவும் விநாசவத்தாகையாலே, இவ்வளவைக் கொண்டு, “காலம் இங்கு அநித்யமாயிருக்கும்” என்கிறது. பரமபதத்தில் ஈத்ருச பரிணாம விசேஷ ப்ரயுக்தோத்பத்த்யாதி வ்யவஹார ராஹித்யத்தாலே நித்யமாயிருக்கும் என்கிறது.

**விளக்கம் -** ப்ரக்ருதியைப் படைத்தல் என்பது, மஹத் முதலானவற்றை மாற்றம் அடையச்செய்தல் மூலம் ஆகும்; அதே போன்று காலத்தைப் படைத்தல் என்றால், நிமேஷம் மற்றும் காஷ்டை முதலானவையாக மாறும்படிச் செய்தல் ஆகும். எப்போதும் மாறுபாடு அடைந்தபடியாக உள்ள ப்ரக்ருதிக்கு, மஹத் போன்றவை ஸ்தூல பரிணாமங்களாக உள்ளது போன்று, எப்போதும் மாறியபடி உள்ள காலத்திற்கு, நிமேஷம் போன்றவை ஆகின்றன. மஹத் முதலான தத்வங்கள் போன்று, நிமேஷம் முதலானவையும் அழிவு முதலானவற்றைக் கொண்டுள்ளன. இப்படியாக உள்ள பலவற்றின் விளைவாக, காலமானது இங்கு அநித்யமாக உள்ளது என்றாகிறது. பரமபதத்தில் காலமானது, இப்படிப்பட்டதான மாற்றங்களின் சிறப்பாக உள்ள உற்பத்தி போன்ற ஏதும் இன்றி உள்ளதால், நித்யமாக உள்ளது என்றாகிறது.

**வ்யாக்யானம் -** இப்படி காலத்துக்கு பரிணாமங்கொள்ளாதே ஏகரூபத்வத்தைக் கொண்டு, இப்படியிருந்துள்ள காலந்தான் தன்னுடைய நிமேஷம், காஷ்ட்டை, முஹூர்த்தம், அஹோராத்ரம் தொடக்கமாக, பரார்த்தமீறாகவுண்டான விசேஷ வ்யவஹாரத்துக்கு

ஹேதுவான நிமேஷோந்மேஷங்கள், ஆதித்யகதி தொடக்கமான அவச்சேதங்களோடே ஸம்பந்தித்திருக்கும். ஆகையாலே க்ஷணலவாதிபேத வ்யவஹாரமுண்டாகிறதென்று சொல்லுவதும் ஒரு பக்ஷமுண்டிறே. இதுவிறே தத்வத்ரய விவரணத்தில் ஆச்சான்பிள்ளை ப்ராதாந்யேந அருளிச்செய்தது. அந்த பக்ஷத்தில் உபய விபூதியிலும் காலஸ்வரூபம் ஏகரூபமாயிருக்குமாகையாலே, "பரமபதத்தில் நித்யம், இங்கு அநித்யம்" என்கிறவிது சொல்லப்போகாது. ஆகையால் இது பரிணாம பக்ஷத்தை அவலம்பித்துச் சிலர் சொன்னதென்று கொள்ளவேணும். நம்முடைய தர்சந ஸ்த்தாநங்களிலே இங்ஙனேயும் சிலரருளிச் செய்கையாலே அத்தையும் தர்சிப்பித்தருளினாராயிற்று.

**விளக்கம் -** இப்படி காலத்திற்கு மாறுபாடு கொள்ளாமல், ஒரே போன்றுள்ள தன்மையைக் கொண்டு, இவ்விதமாக உள்ள காலமானது தனது நிமேஷம், காஷ்டை, முகூர்த்தம், அஹோராத்ரம் என்பது தொடக்கமாக பரார்த்தம் முடிய உள்ளதான சிறப்பான விவகாரங்களுக்குக் காரணமாக உள்ள நிமேஷங்கள், சூரியனின் பாதை போன்றுவற்றுடன் தொடர்பு கொண்டதாக உள்ளது. எனவே "சிறிய காலம், பெரிய காலம்" என்பது போன்ற வேறுபாடுகள் உள்ளதாகச் சிலர் கூறுவர். இதனையே தத்வத்ரய விவரணத்தில் ஸ்வாமி ஆச்சான்பிள்ளை முதலில் அருளிச்செய்தார். அந்தக் கருத்தில், இரண்டு விபூதிகளிலும் காலமானது ஒரே போன்று காணப்படும் என்பதால், "பரமபதத்தில் நித்யம், இந்த உலகத்தில் அநித்யம்" என்று கூற இயலாமல் போகும். எனவே இந்த க்கருத்தானது, மாற்றம் அடையும் தன்மைகள் காரணமாக ஒரு சிலர் கூறியதாகக் கொள்ளவேண்டும். நம்முடைய தர்சனத்தில் உள்ளவர்களில் சிலர் இவ்விதம் கூறியதால், அதனையும் எடுத்துக் கொண்டு இங்கு உரைத்தார் என்று கருத்து.

125. சிலர் காலத்தையில்லை யென்றார்கள்.

**வ்யாக்யானம் -** காலந்தன்னை யில்லையென்று பௌத்தாதிகள் சொல்லுகையாலே, (சிலர் காலத்தை யில்லை யென்றார்கள்) என்கிறார்.

**விளக்கம் -** பௌத்தர்கள் போன்ற சிலர் "காலம் என்பது இல்லை" என்று கூறுவதால், "சிலர் காலத்தை இல்லை என்றார்கள்" என்கிறார்.

126. ப்ரத்யக்ஷத்தாலும் ஆகமத்தாலும் ஸித்திக்கையாலே அது சொல்லவொண்ணாது.

**அவதாரிகை -** அத்தை நிராகரிக்கிறார்.

**விளக்கம் -** அவர்களுடைய கருத்தைத் தள்ளுகிறார்.

**வ்யாக்யானம் -** (ப்ரத்யக்ஷத்தாலும்) இத்யாதியாலே. ப்ரத்யக்ஷமாவது, ஸ்தாவர ஜங்கமாத்மகமான ஸமஸ்த பதார்த்தமும் கால க்ருத பரிணாமமாகவே காணப்படுகிறவிது. ஆகமமாவது ச்ருத்யாதிகள். "கலா முஹூர்த்தா: காஷ்டாச்சாஹோராத்ராச்ச ஸர்வச:", "மதுச்ச மாதவச்ச வாஸந்திகா வ்ருதூ, சுக்ரச்ச சுசிச்ச க்ரைஷ்மா வ்ருதூ" என்று காலபரிணாம விசேஷங்களான கலை காஷ்டை முஹூர்த்தம் அஹோராத்ரங்கள் ருது விசேஷங்களைச் சொல்லாநின்றதிறே ச்ருதி. "கால ஸ்வரூபம் விஷ்ணோச்ச யந்மயோக்தம் தவாநக:" இத்யாதியாலே ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே இதுதான் விஸ்தரேண சொல்லப்பட்டதிறே. புராணாந்தரங்களிலும் இதிஹாஸாதிகளிலும் இப்படி கண்டு கொள்வது. இதுக்கென்னவே நிர்மிதமாய், அத்யயநாதி காலநியமங்களை ப்ரதிபாதிக்கிற ஜ்யோதிச்சாஸ்த்ரத்தை வேதத்துக்கு த்ருஷ்டியாகச் சொல்லாநின்றதிறே. அந்த சாஸ்த்ரந்தன்னில், "இன்ன காலத்திலே யின்னதுண்டாம்" என்று சொன்னால் அது ப்ரத்யக்ஷிக்கலாயிரா நின்றதிறே. ஆகையால், ப்ரத்யக்ஷத்தாலும் ஆகமத்தாலும் இப்படி ஸித்திக்கையாலே கால அபாவம் சொல்லவொண்ணாதென்கை.

**விளக்கம் -** அவர்களுடைய கருத்தைத் தள்ளுகிறார். இங்கு ப்ரத்யக்ஷம் என்றால், "தாவரங்கள் மற்றும் அசையும் பொருள்கள் ஆகிய அனைத்தும், காலத்தால் ஏற்படும் மாற்றங்களை அடைவதாகவே காணப்படுகின்றன" என்பதைக் குறிப்பதாகும். ஆகமம் என்பது ச்ருதிகள் போன்றவை ஆகும். தை. (2-1-8) - கலா முஹூர்த்தா: காஷ்டாச்சாஹோராத்ராச்ச ஸர்வச: - கலை, முஹூர்த்தம், காஷ்டை, அஹோராத்ரம் போன்ற அனைத்தும் – என்றும், யஜுஷி (4) - மதுச்ச மாதவச்ச வாஸந்திகா வ்ருதூ, சுக்ரச்ச சுசிச்ச க்ரைஷ்மா வ்ருதூ – சித்திரையும் வைகாசியும் வஸந்த ருதுக்கள், ஆனியும் ஆடியும் க்ரீஷ்ம ருதுக்கள் - என்றும் உள்ள வாக்கியங்களில், காலத்தின் பரிணாமங்களாகிய கலை, காஷ்டை, முஹூர்த்தம், அஹோராத்ரங்கள், ருதுக்கள் ஆகியவற்றை ச்ருதி கூறியது காண்க. ஸ்ரீவிபு. (1-3-6) – கால ஸ்வரூபம் விஷ்ணோச்ச

யந்மயோக்தம் தவாநக: - விஷ்ணுவின் கால ஸ்வரூபம் என்னால் விரிவாகக் கூறப்பட்டது – என்பது போன்ற பகுதியில், காலம் குறித்துக் கூறப்பட்டது. மற்ற புராணங்களிலும் இதிஹாஸங்களிலும் இது போன்றே கூறப்பட்டது. இத்தகைய காலம் குறித்து உரைப்பதற்காகவே ஏற்பட்டதும், அத்யயனம் போன்ற காலத்தின் முறைகளை வெளிப்படுத்துவதும் ஆகிய ஜோதிஷ சாஸ்த்ரமானது, வேதத்தைக் காண்பதற்கு உதவும் கண்கள் என்றே கூறுகிறார்கள். அத்தகைய ஜோதிஷ சாஸ்த்ரத்தில், “இன்ன காலத்தில் இது உண்டாகும்” என்று கூறப்பட்டால், அது கண்களால் காணலாம்படி அல்லவோ உள்ளது? எனவே ப்ரத்யக்ஷம் மற்றும் ஆகமம் ஆகியவற்றால் இவ்விதம் அறியப்படுவதால், காலத்தை “இல்லை” என்று கூற இயலாது.

127. பலரும் திக்கென்று தனியேயொரு த்ரவ்யமுண்டென்றார்கள்.

**வ்யாக்யானம் -** வைசேஷிகாதிகள், ப்ருதிவ்யாதிகளோபாதி திக்கென்றும் தனியேயொரு த்ரவ்யமுண்டென்று சொல்லுகையாலே (பலரும் திக்கென்று தனியேயொரு த்ரவ்யமுண் டென்றார்கள்) என்கிறார். “த்ரவ்யாணி ப்ருதிவ்யப் தேஜோ வாய்வாகாச காலதிகாத்ம மநாமஸி நவைவ” என்றிறே அவர்கள் சொல்லுவது. “பூராபோ ஜ்யோதிரநிலோ நப: காலஸ் ததா திச: ஆத்மா மந இதி ப்ராஹுர் த்ரவ்யாணி நவ தத்வித:” என்றானிறே வரதராஜன்.

**விளக்கம் -** வைசேஷிகங்கள் முதலான சிலர், ப்ருதிவி போன்று திக்குகள் என்பதான தனியான ஒரு த்ரவ்யம் உள்ளது என்று கூறுவதால், இந்தச் சூர்ணையை அருளிச் செய்கிறார். தர்க்க ஸங்க்ரஹத்தில் - த்ரவ்யாணி ப்ருதிவ்யப் தேஜோ வாய்வாகாச காலதிகாத்ம மநாமஸி நவைவ - த்ரவ்யங்கள் என்பவை ப்ருதிவி, நீர், அக்னி, வாயு, ஆகாசம், காலம், திசை, ஆத்மா, மனம் என்னும் ஒன்பது - என்று அவர்கள் கூறுகிறார்கள். அதாவது, “பூராபோ ஜ்யோதிரநிலோ நப: காலஸ் ததா திச: ஆத்மா மந இதி ப்ராஹுர் த்ரவ்யாணி நவ தத்வித: - பூமி, நீர், அக்னி, வாயு, ஆகாசம், காலம், அது போன்றே திசைகள், ஆத்மா மற்றும் மனம் என்பதாக ஒன்பது த்ரவ்யங்கள் உள்ளன என அவற்றைக் குறித்து அறிந்தவர்கள் கூறுகிறார்கள் – என்று அந்த மதத்தைச் சார்ந்த வரதராஜன் கூறினார்.

128. பல ஹேதுக்களாலும், ஆகாசாதிகளிலே அந்தர்ப்பூதமாகையாலே அதுவுஞ்சேராது.

**அவதாரிகை -** அத்தை நிராகரிக்கிறார்.

**விளக்கம் -** அவர்களுடைய கருத்தைத் தள்ளுகிறார்.

**வ்யாக்யானம் -** (பல ஹேதுக்களாலும்) இத்யாதியாலே. அதாவது நாலு பர் நாலு திக்கிலும் நின்றால், நால்வர்க்கும் நடுவான ப்ரதேசம் ஒருவனுக்குக் கிழக்காய், ஒருவனுக்கு மேற்காய், ஒருவனுக்கு வடக்காய், ஒருவனுக்குத் தெற்காய்த் தோற்றாநின்றதிறே. அதுக்கடி, த்ரவ்யமன்றிக்கே ப்ரதியோக்யாநுகுண கல்பநாகமாகை. நால்வர்க்கு நடுவேயிருக்கிற ப்ருதிவ்யாதிகள் த்ரவ்யமாகையாலே, இப்படி விப்ரதிபத்தி விஷயமாகிறதில்லையிறே. இனித்தான், ஆதித்யன் உதிக்கிறவிடம் கிழக்காகவும், அவன் அஸ்தமிக்கிறவிடம் மேற்காகவுமிறே கொள்ளுகிறது. அதுதான் மஹாமேருவுக்கு நாலு பார்ச்சவத்திலும் பேதித்திறே இருப்பது. ஆகையாலேயிறே நாலு பார்ச்வத்திலு முள்ளவர்களுக்கு மஹாமேரு வடக்காயிருக்கிறது. "நைவாஸ்தமயமரீக்கஸ்ய நோதயஸ் ஸர்வதாஸத: உதயாஸ்தமயாக்க்யா ஹி தர்சநாதர்சநம் ரவே: ஸர்வேஷாம் த்வீப வர்ஷாணாம் மேருருத்தரதோ யத:" என்று இதுதான் ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே சொல்லப்பட்டது. இப்படி பல ஹேதுக்களாலும ஆகாசாதிகளிலே அந்தர்பூதமாய், தனக்கென்னவொரு த்ரவ்ய வ்யவஸ்தையில்லாமையாலே திக்கென்று ஒரு த்ரவ்யமுண்டென்கிறவதுவும் சேராதென்கை. "ஆகாசாதி" என்கிற ஆதி சப்தத்தாலே பூமியைச் சொல்லுகிறது. இவற்றிலே, திக்கு அந்தர்பூதமாகையாவது, ஸூர்யனுடைய உதயாதிகளுக்கு ஈடாக இவற்றுக்குள்ளே திக்விபாகத்தைக் கல்பித்துக் கொள்ளுகிற தொழியப் பிரித்துக் காணலாவதொரு வஸ்துவின்றிக்கேயிருக்கை. "அதுவும் சேரா"தென்றது, முன்பேயுமொரு பக்ஷத்தை நிஷேதிக்கையாலே ஸமுச்சயம்.

**விளக்கம் -** நான்கு நபர்கள் நான்கு திசைகளில் நிற்பதாக வைப்போம். அவர்களுக்கு நடுவில் உள்ள பகுதியானது ஒருவனுக்குக் கிழக்காகவும், ஒருவனுக்கு மேற்காகவும், ஒருவனுக்குத் தெற்காகவும், ஒருவனுக்கு வடக்காகவும் புலப்படும் அல்லவோ? இதன் காரணம் என்ன? அந்தந்த திசைகளானவை த்ரவ்யம் என்று இல்லாமல், அவரவர்களுக்கு ஏற்படும் கற்பனை மட்டுமே ஆகும். நான்கு நபர்களுக்கு நடுவில் உள்ள பகுதியான

ப்ருத்வீ முதலானவை த்ரவ்யம் என்பதால், இவ்விதம் கற்பனையாக அறிவதற்கான விஷயமாக அவை இருப்பது கிடையாது. மேலும் சூரியன் எந்த இடத்தில் உதிக்கிறானோ அதுவே கிழக்கு என்றும், அவன் மறையும் இடமானது மேற்கு என்றும் அல்லவோ கொள்ளப்படுகிறது? அத்தகைய கிழக்கு மற்றும் மேற்கு என்பதான திசைகள், மஹா மேருவிற்கு நான்கு புறத்திலும் சூழ்ந்துள்ளன. எனவேதான் நான்கு புறத்திலும் உள்ளவர்களுக்கு மேருவானது வடக்காக உள்ளது. ஸ்ரீவிபு - நைவாஸ்தமயமரீக்கஸ்ய நோதயஸ் ஸர்வதாஸத: உதயாஸ்தமயாக்க்யா ஹி தர்சநாதர்சநம் ரவே: ஸர்வேஷாம் த்வீப வர்ஷாணாம் மேருருத்தரதோ யத: - எப்போதும் உள்ளதான சூரியனுக்கு உதயம் மற்றும் அஸ்தமனம் இல்லை. சூரியனைக் காண்பது மற்றும் காண இயலாமல் போவது என்னும் விளைவாக மட்டுமே உதயம், அஸ்தமனம் என்று காண்கிறார்கள். அனைத்து த்வீபங்களுக்கும் மேருவானது வடக்காக உள்ளது - என்று கூறப்பட்டது. இப்படியாக பல காரணங்களாலும், ஆகாசம் போன்றவற்றில் திசைகள் அடங்கிவிடுவதால், தங்களுக்கு என எந்த ஒரு த்ரவ்ய நிலையும் அவற்றுக்கு இல்லை என்பதால், திசைகள் என்பதான ஒரு த்ரவ்யம் உள்ளது என்று கூற இயலாது. “ஆசாசாதி” என்பதில் உள்ள “ஆதி” என்பதன் மூலம் பூமியானது கூறப்படுகிறது. இவற்றில் திசைகள் உள்ளடங்கி இருப்பது எப்படி? சூரியனுடைய உதயம் மற்றும் அஸ்தனம் என்பவற்றுக்கு ஈடாக, இந்தத் திசைகளுக்குள் வேறுபாடுகளைக் கற்பனையாகக் கொள்ளுகிற நிலை மட்டுமே உள்ளது அல்லாமல், இவற்றைப் பிரித்துக் காண்பிக்கும் வஸ்து ஏதும் இல்லை. சூர்ணையில் உள்ள “அதுவும் சேராது” என்பதன் பொருள், “முன்பே ஒரு கருத்தைத் தள்ளிய காரணத்தால், அதனையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்” என்பதாகும்.

### 129. சிலர் ஆவரணாபாவம் ஆகாசமென்றார்கள்.

**அவதாரிகை** – ப்ருதிவ்யாதி சதுஷ்டத்வோபாதி ஆகாசத்தையும் பாவ ரூப பதார்த்தமாகக் கொள்ளாதே, ஆவரணாபாவ ரூபமாகக் கொள்ளுகிற பௌத்த மதத்தை அருளிச் செய்கிறார்.

**விளக்கம் -** பூமி முதலான நான்கு பூதங்கள் போன்றே ஆகாசத்தையும் இருக்கின்ற ஒரு பொருளாகக் கொள்ளாமல், மறைக்கக்கூடிய பொருளாக, இல்லாத தன்மையுடன் கூடியதாகக் கொள்ளும் பௌத்த மதத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (சிலர் ஆவரணாபாவம் ஆகாசமென்றார்கள்) என்று. "ஆவ்ரியதே அநேந" என்கிற கரண வ்யுத்பத்தியாலே, ஆவரணங்களாவன ஸ்த்தூல பதார்த்தங்களான ப்ருதிவ்யாதிகளாய், அவற்றினுடைய அபாவமே ஆகாச சப்த வாச்யமல்லது, இது ஆகாசம் என்று காட்டலாம்படி பாவ ரூபமானதொரு பதார்த்தமன்று என்கை. "ந ச ப்ருதிவ்யாதி அபாவமாத்ரமாகாச இதி வக்தும் சக்யம்" என்றிறே பாஷ்யகாரர் அருளிச்செய்தது.

**விளக்கம் -** "ஆவ்ரியதே அநேந - இதனால் மறைக்கப்பட்டுள்ளது" என்பதான செயப்படுபொருளாக உள்ளதால், மறைக்கப்படும் தம்மை கொண்டவையான ஸ்தூலமான பொருள்களாக உள்ள பூமி முதலானவைகளாக, அவற்றின் இல்லாமை என்பதே ஆகாசம் என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது அல்லாமல், "இதுவே ஆகாசம்" என்று காண்பிக்கலாம்படியான இருக்கின்ற பொருள் அல்ல என்பதே அவர்களுடைய கருத்தாகும் [குறிப்பு: இங்கு ஆகாசம் என்னும் சொல்லானது, "எதுவும் இல்லாத வெற்றிடம்" என்னும் பொருளைத் தருவதாக அவர்கள் கூறுகிறார்கள்]. ஸ்ரீபாஷ்யத்தில் (2-2-23) – "ந ச ப்ருதிவ்யாதி அபாவமாத்ரமாகாச இதி வக்தும் சக்யம் - பூமி முதலானவற்றின் இல்லாமை என்பதே ஆகாசம் என்று கூற இயலாது – என பாஷ்யகாரர் அருளிச்செய்தார்.

130. பாவரூபேண தோற்றுகையாலே அதுவுஞ்சேராது.

**அவதாரிகை -** அத்தை நிராகரிக்கிறார்.

**விளக்கம் -** கடந்த சூர்ணையில் காண்பிக்கப்பட்ட பௌத்த மத கருத்தைத் தள்ளுகிறார்.

**வ்யாக்யானம் -** (பாவரூபேண) இத்யாதியாலே. அதாவது பாவ ரூபத்வேந அங்கீகரிக்கப்பட்ட ப்ருதிவ்யாதிகளோபாதி "அத்ர ச்யேந பததி, அத்ர க்ருத்ர: பததி" என்று ச்யேநாதிகளுடைய பதநத்துக்கு தேசமாய்க் கொண்டு, ஆகாசமும் பாவ ரூபேண தோற்றுகையாலே, இத்தை ஆவரணாபாவ ரூபமாகச் சொல்லுகிற அது சேராதென்கை. "அதுவும்" என்று நிஷித்த ஸமுச்சயம். இதுதன்னை, "ஆகாசே சாவிசேஷாத்" என்கிற ஸூத்ரத்திலே, "ஆகாசே ச நிருபாக்ய்யதா ந யுக்தா, பாவ ரூபத்வே நாப்யுபகத

ப்ருதிவ்யாதிவத் ஆகாசஸ்யாப்யபாதித ப்ரதீதி ஸித்தத்வாவிசேஷாத்; ப்ரதீயதே ஹ்யாகாசோத்ர ச்யேந: பதத்யத்ர க்ருத்ர: பத்தி இதி ச்யேநாதிபதந்தே சத்வேந" என்று தொடங்கி பாஷ்யகாரர் விஸ்தரேண அருளிச் செய்தார்.

**விளக்கம் -** இருக்கின்ற பொருள்களாக ஏற்கப்பட்ட பூமி முதலானவை போன்று, "அத்ர சயேந பததி, அத்ர க்ருத்ர: பததி - இந்த ஆகாசத்தில் பறவை பறக்கின்றது, இங்கு கழுகு பறக்கின்றது" என்பதாக, பறவைகள் போன்றவை பறப்பதற்கு இடமாகக் கொண்டு, ஆகாசமும் இருக்கின்ற ஒரு பொருளாகவே புலப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட ஆகாசத்தை, இல்லாத ஒரு பொருளாகக் கூறுவது பொருத்தம் இல்லை. சூர்ணையில் உள்ள "அதுவும்" என்பது, இந்தப் பொருளிலும் இவ்விதம் கூறுவது சேராது என்று உணர்த்த வந்தது ஆகும். இதனை ப்ர. ஸூ. (2-2-33) - ஆகாசே சாவிசேஷாத் - ஆகாச விஷயத்திலும் (பௌத்தர்களின் வாதம்) பொருந்தாது, அங்கும் வேற்றுமை இல்லை என்பதால் - என்ற ஸூத்ரத்தில், "ஆகாசே ச நிருபாக்க்யதா ந யுக்தா, பாவ ரூபத்வே நாப்யுபகத ப்ருதிவ்யாதிவத் ஆகாசஸ்யாப்யபாதித ப்ரதீதி ஸித்தத்வாவிசேஷாத்; ப்ரதீயதே ஹ்யாகாசோத்ர ச்யேந: பதத்யத்ர க்ருத்ர: பத்தி இதி ச்யேநாதிபதந்தே சத்வேந - பூமி முதலானவை போல ஆகாசமும் இருக்கின்ற பொருளாக நீங்கள் ஒப்புக்கொள்வதால், பூமி போன்றவை எவ்விதம் ப்ரத்யக்ஷத்தால் உணரப்படுவதன் காரணமாக வேறு எதனாலும் மறுக்கப்பட இயலாமல் உள்ளதோ, அதே போன்று எந்த வேறுபாடும் இன்றி ஆகாசமும் எதனாலும் மறுக்கப்படாமல் உள்ளது. அத்ர ச்யேந: பததி, அத்ர க்ருத்ர: - அங்கு கழுகு பறக்கிறது, அங்கு பருந்து - என்று கூறுவதற்கு ஏற்ப, கழுகு முதலானவை பறக்கும் இடமாக ஆகாசம் உள்ளது" என்பது தொடக்கமாக பாஷ்யகாரர் விரிவாக அருளிச்செய்தார்.

131. வேறே சிலர் இதுதன்னை நித்யம் நிரவயவம் விபு அப்ரத்யக்ஷம் என்றார்கள்.

**அவதாரிகை -** இனி, ஆகாசத்துக்கு நித்யத்வ நிரவயவத்வ விபுத்வ அப்ரத்யக்ஷத்வங்கள் கொள்ளுகிற நையாயிக வைசேஷிக மதத்தை அருளிச் செயகிறார் (வேறே சிலர்) என்று தொடங்கி.

**விளக்கம் -** அடுத்து ஆகாசத்திற்குக் நித்யமாக உள்ல தன்மை, அவயவம் அற்ற தன்மை, எங்கும் நிறைந்துள்ள தன்மை, கண்களால் காண இயலாத தன்மைபோன்ற பல வற்றையும் கூறுகின்ற நையாயிக வைசேஷிக மதங்களுடைய கருத்தைக் கூறுகிறார்.

**சூர்ணை விளக்கம் -** ஒரு சிலர் ஆகாயத்தை நித்யமானது, அவயவம் இல்லாதது, எங்கும் நிறைந்தது, கண்களால் காண இயலாதது என்று கூறுகிறார்கள்.

132. பூதாதியிலே பிறக்கையாலும், அஹங்காராதிகளிலில்லாமையாலும், கண்ணுக்கு விஷயமாகையாலும் அவை நாலுஞ் சேராது.

**அவதாரிகை -** அது தன்னை நிராகரிக்கிறார்.

**விளக்கம் -** கடந்த சூர்ணையில் காண்பிக்கப்பட்ட கருத்தைத் தள்ளுகிறார்.

**வ்யாக்யானம் -** (பூதாதியிலே பிறக்கையாலும்) இத்யாதியாலே. அதாவது பூதாதி ஸம்ஜ்ஞகமான தாமஸ அஹங்காரத்திலே உத்பந்நமாகையாலும், ஒன்றிலே நின்றும் உத்பந்நமானதொன்றுக்கு ஸாவயவத்வம ஸித்தமாகையாலும், நித்யம் நிரவயவமென்கிற விரண்டுஞ் சேராது. (பூதாதியிலே பிறக்கையாலும்) என்றது, சப்த தந்மாத்ரத்தினுடைய ஸ்தூலாவஸ்தையாகையாலே அதுக்கும் இதுக்குமுண்டான ஐக்யத்தைப் பற்ற. இனி, விபுவாகில் ஸஸ்வகதமாக வேணுமிறே. ஸ்வகாரணமான அஹங்காராதிகளில் இதுக்கு வ்யாப்தியில்லாமையாலே அதுவும் சேராது. பஞ்சீகரண ப்ரயுக்தமான ரூபவத்த்வத்தாலே கண்ணுக்கு விஷயமாகையாலே அப்ரத்யக்ஷமென்கையும் சேராது. "ஆகாசம் கறுத்துத் தோற்றுகிறதும் அத்தாலே" என்றாரிறே கீழே; இது தன்னை "அண்டாந்தர் வர்த்திநச் சாகாசஸ்ய த்ரிவருத் கரணோபதேச ப்ரதர்சித பஞ்சீகரணேந ரூபவத்தவாச் சாக்ஷுஷத்வேப்யவிரோத:" என்று பாஷ்யகாரருமருளிச் செய்தார்.

**விளக்கம் -** ஆகாசமானது பூதாதி என அறியப்படுவதாகிய தாமஸ அஹங்காரத்திலிருந்து உற்பத்தி ஆவதாலும், ஒன்றுலிருந்து உற்பத்தி ஆகும் மற்றொரு பொருளுக்கு உறுப்புகள் என்பது உண்டாவதாலும், "ஆகாசமானது நித்யமானது, அவயவம் அற்றது" என்று கூற இயலாது. "பூதாதியில் பிறக்கையாலும்" என்று ஏன் கூறவேண்டும் என்பதற்கு விடை

அளிக்கிறார்; ஆகாசமானது சப்த தந்மாத்ரையின் ஸ்தூலமான வடிவமாக உள்ளதால், பூதாதிக்கும் இதற்கும் உள்ள ஒற்றுமை காரணமாக உரைத்தார். அடுத்து, எங்கும் நிறைந்த பொருள் என்றால், அனைத்து இடங்களில் பரவி நிற்கவேண்டும் அல்லவோ? ஆனால் ஆகாசமானது தன்னை உற்பத்தி செய்த அஹங்காரம் போன்ற வஸ்துக்களில் நிறைந்திருப்பதில்லை என்பதால், "எங்கும் நிறைந்த தன்மை" என்பது ஆகாசத்திற்குச் சேராது. பஞ்சீகரணம் என்பதன் விளைவாக, அனைத்து பூதங்களிலும் ஆகாசம் கலந்துள்ளதால், கண்களுக்குப் புலப்படும்படியாகவே உள்ளது; ஆகவே "ஆகாசமானது கண்களுக்குப் புலப்படாதது" என்பதும் பொருந்தது. சூர்ணை (117) - ஆகாசம் கறுத்துத் தோற்றுகிறதும் அத்தாலே - என்று இவரே கூறினார் அல்லவோ? இதனை ஸ்ரீபாஷ்யம் (2-2-23) – அண்டாந்தர் வர்த்திநச் சாகாசஸ்ய த்ரிவருத் கரணோபதேச ப்ரதர்சித பஞ்சீகரணேந ரூபவத்தவாச் சாக்ஷுஷத்வேப்யவிரோத: - அண்டத்திற்குள் உள்ள ஆகாசத்திற்கு த்ரிவ்ருத்கரணம் கூறப்பட்டு, தொடர்ந்து பஞ்சீகரணம் மூலம் ரூபம் உள்ளதாக உபதேசிக்கப்படுவதால், அதனைக் கண்களால் காண இயலும் என்று கூறுவதில் விரோதம் இல்லை - என்பதாக பாஷ்யகாரரும் அருளிச்செய்தார்.

133. த்வகிந்த்ரியத்தாலே தோற்றுகையாலே, வாயு அப்ரத்யக்ஷமென்கிற அதுவுஞ் சேராது.

**அவதாரிகை** - வாயுவும் ப்ரத்யக்ஷமன்று; ஸ்பர்சாநுமேயமென்றிறே அவர்கள் சொல்லுவது; அத்தையும் நிராகரிக்கிறார் (த்வகிந்த்ரியத்தாலே) என்று தொடங்கி.

**விளக்கம் -** "வாயுவும் கண்களால் காண இயலாத ஒன்றாகும். அதனைத் தீண்டுதல் என்ற அனுபவம் மூலம் மட்டுமே அறியலாம்" என்று அந்த மதத்தினர் கூறுகிறார்கள். அதனையும் தள்ளுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஜ்ஞாநேந்த்ரியங்களிலே ஏதேனுமொன்றுக்கு கோசரமானபோதே ப்ரத்யக்ஷத்வம் ஸித்தமாகையாலே, த்வக் இந்த்ரியத்தாலே தோற்றுகிற வாயுவை அப்ரத்யக்ஷமென்னவொண்ணாது என்கை.

**விளக்கம் -** ஞான இந்த்ரியங்களில் ஏதேனும் ஒன்றால் மட்டுமே ஒரு வஸ்துவை அறிய இயலும் என்றால், ப்ரத்யக்ஷமாகப் புலப்படும் தன்மை தேறுகிறது. ஆகவே, தீண்டுதல் என்ற புலனால் அறியப்படும் வாயுவை ப்ரத்யக்ஷ ப்ரமாணத்திற்கு இலக்காகாத ஒன்றாகக் கூற இயலாது.

134. தேஜஸ்ஸு பௌமாதி பேதத்தாலே பஹுவிதம்.

**அவதாரிகை -** இனி பரஸ்பர விலக்ஷண ஸ்வபாவங்களான பூத விசேஷங்களில் ஜ்ஞாதவ்ய அம்சங்களை அருளிச் செய்கிறார்.

**விளக்கம் -** அடுத்து, ஒன்றுக்கொன்று வேறுபட்ட சிறப்பான இயல்பைக் கொண்டதாக உள்ள பஞ்சபூதங்களில் காணப்படும் அறியப்படவேண்டிய அம்சங்களை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, பௌமம், திவ்யம், ஔதர்யம், ஆகரஜம் என்கிற பேதத்தாலே அநேக விதமாயிருக்குமென்கை. பார்த்திவ மாத்ரேந்தநமான தேஜஸ்ஸு பௌமம், அதாவது தீபாதி. ஜல மாத்ரேந்தநமான தேஜஸ்ஸு திவ்யம், அதாவது ஆதித்யாதி. பார்த்திவ ஜலேந்தநமான தேஜஸ்ஸு ஔதர்யம், அதாவது ஜாடராக்நி. நிரிந்தநமான தேஜஸ்ஸு ஆகரஜம், அதாவது ஸுவர்ணாதி.

**விளக்கம் -** அக்னியானது பௌமம், திவ்யம், ஔதர்யம் மற்றும் ஆகரஜம் என்பது போன்று வேறுபாடுகளால் பலவிதமாக உள்ளது. பஞ்சீகரணத்தால் உண்டாக்கப்பட்ட மண்ணின் மூலமாக மட்டுமே கிடைக்கும் ஒளியானது பௌமம் எனப்படும்; அதாவது தீபம் முதலானவை. நீரிலிருந்து மட்டுமே கிடைக்கின்ற ஒளியானது திவ்யம் எனப்படும்; அதாவது சூரியன் போன்றவை. மண்ணிலிருந்தும், நீரிலிருந்தும் கிடைக்கும் ஒளியானது ஔதர்யம் எனப்படும்; அதாவது ஜாடராக்னி போன்றவை. பாறைகள் மூலமாகக் கிடைக்கும் ஒளியாது ஆகரஜம் எனப்படும்; அதாவது ஸுவர்ணம் போன்றவை.

135. அதில் ஆதித்யாதி தேஜஸ்ஸு ஸ்திரம், தீபாதி தேஜஸ்ஸு அஸ்திரம்.

**அவதாரிகை -** இதில் ஸ்த்திர அஸ்த்திர விபாகம் பண்ணுகிறார் (அதில் ஆதித்யாதி) என்று தொடங்கி.

**விளக்கம்** -இவற்றில் நிலையாக இருத்தல், நிலையின்றி இருத்தல் என்பதான வேறுபாடுகளை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** சிரகால வர்த்தித்வத்தாலே ஆதித்யாதி தேஜஸ்ஸு ஸ்த்திரமென்கிறது. க்ஷிப்ர விநாசித்வத்தாலே தீபாதி தேஜஸ்ஸு அஸ்த்திரம் என்கிறது.

**விளக்கம் -** நீண்டகாலம் நிலையாக உள்ளதால் சூரியன் முதலான தேஜஸ் என்பவை நிலையானவை ஆகிறது. ஒவ்வொரு நொடியும் அழிவதால், தீபங்களுடைய தேஜஸ் போன்றவை நிலையற்றவை ஆகிறது.

136. தேஜஸ்ஸுக்கு நிறம் சிவப்பு, ஸ்பர்சம் ஔஷ்ண்யம்.

**வ்யாக்யானம் –** (தேஜஸ்ஸுக்கு நிறம் சிவப்பு) இத்தாலே, தேஜ: பததார்த்தங்களில் வர்ண பேதம் பதார்த்தாந்தர ஸம்ஸர்கஜம் என்கை. (ஸ்பர்சம் ஔஷ்ண்யம்) இத்தால், உஷ்ண ஸ்பர்சம், சீத ஸ்பர்சம், அநுஷ்ண சீத ஸ்பர்சம் என்கிற த்ரிவித ஸ்பர்சத்திலும் இதுக்கு ஸ்பர்சம், ஔஷ்ண்யமென்கை. இதுதான் தேஜ பதார்த்தங்களான ஸுவர்ணாதிகளில் பலவத் ஸஜாதீய த்ரவ்யங்களாலே அபிபூதமாகையாலே தோன்றாது.

**விளக்கம் -** (தேஜஸ்ஸுக்கு நிறம் சிவப்பு) – ஒளியை உண்டாக்கும் பதார்த்தங்களில் காணப்படும் நிற வேறுபாடுகள் போன்றவை, அந்தந்த பதார்த்தங்களில் சேர்ந்துள்ள மற்ற பொருள்களால் ஏற்படுபவை ஆகும் எனப்பட்டது. (ஸ்பர்சம் ஔஷ்ண்யம்) - உஷ்ணமான தீண்டுதல், குளிர்ந்த தீண்டுதல் மற்றும் உஷ்ணமும் குளிரும் இல்லாத தீண்டுதல் ஆகிய மூன்றில், தேஜஸ்ஸுக்கு உஷ்ணமான தீண்டுதல் உள்ளது. ஆனால் இத்தகைய உஷ்ணமான தீண்டுதல் என்பது, ஒளிரும் பொருள்களான தங்கம்

போன்றவற்றில், மற்ற பல பொருள்களுடைய சேர்த்தி காரணமாக வெளிப்படாமல் உள்ளது.

137. ஜலத்துக்கு நிறம் வெளுப்பு, ஸ்பர்சம் சைத்யம், ரஸம் மாதுர்யம்.

**வ்யாக்யானம் -** (ஜலத்துக்கு நிறம் வெளுப்பு) இதுக்கு ஸ்வாபாவிக வர்ணமிது. வர்ண பேதம் வந்தவிடம் ஔபாதிகம். (ஸ்பர்சம் சைத்யம்) இத்தால், த்ரிவித ஸ்பர்சத்திலும் சைத்யம் இதுக்குள்ளதென்கை. ஆகையால் இதுக்கு ஸ்பர்ச பேதமுண்டாகிறதும் அந்ய ஸம்ஸர்கத்தாலே. (ரஸம் மாதுர்யம்) இத்தால் இதுக்கு ஸ்வாபாவிக ரஸமிது, ரஸாந்தராபத்தி ஸம்ஸர்கஜமென்கை.

**விளக்கம் -** (ஜலத்துக்கு நிறம் வெளுப்பு) - நீருக்கு வெண்மை என்பது இயல்பான நிறம் ஆகும். நீருக்கு உள்ள பலவிதமான நிறங்கள், அதற்கு வந்து சேர்ந்தவை ஆகும். (ஸ்பர்சம் சைத்யம்) - மூன்றுவிதமான தீண்டுதல்களில் இதற்கு உரியது குளிர்ச்சி ஆகும். இத்தகைய தீண்டுதல் தன்மையில் வேறுபாடு ஏற்படுவதற்குக் காரணம், மற்ற பொருள்களுடைய சேர்த்தியால் ஆகும். (ரஸம் மாதுர்யம்) இதற்கு உரிய சுவை இனிமை ஆகும். இத்தகைய சுவையில் வேறுபாடு ஏற்படுவதற்குக் காரணம், மற்ற பொருள்களுடைய சேர்த்தியால் ஆகும்.

138. பூமிக்கு நிறமும் ரஸமும் பஹுவிதம்.

**வ்யாக்யானம் -** அதாவது லோகத்தில் காணப்படுகிற நானாவித வர்ண ரஸங்களுக்கெல்லாம் உத்பத்தி ஸ்தாநமிது என்கை.

**விளக்கம் -** பூமியின் நிறமும் சுவையும் பலவிதமாக உள்ளது. உலகத்தில் உள்ள பலவிதமான நிறங்கள் மற்றும் சுவைகள் ஏற்படக் காரணமாக உள்ள இடம் பூமியே ஆகிறது.

139. ஸ்பர்சம் இதுக்கும் வாயுவுக்குமநுஷ்ணாசீதம்.

**வ்யாக்யானம் -** அதாவது த்ரிவித ஸ்பர்சத்திலும் வைத்துக்கொண்டு இவற்றுக்கு ஸ்பர்சம் இதுவென்கை. ஆகையால், இவற்றிலும் காதாசித்கமாகக் காணப்படுகிற ஸ்பர்ச பேதமும் ஔபாதிகம்.

**விளக்கம் -** மூன்றுவிதமான தீண்டுதல்களில், பூமிக்கு வாயுவிற்கும் உஷ்ணம் மற்றும் குளிர்ச்சி ஆகியவை அற்ற தன்மைகளே உள்ளன. இவற்றுக்குச் சில நேரங்களில் ஏற்படும் தீண்டுதல் மாற்றங்கள் அனைத்தும் வந்து சேர்ந்தவை ஆகும்.

140. இப்படி அசித்து மூன்றுபடிப்பட்டிருக்கும்.

**வ்யாக்யானம் -** இப்படியென்று ஸிம்ஹாவ லோகந ந்யாயத்தாலே, முன்பு அருளிச்செய்தவற்றையெல்லாம் கடாக்ஷித்து அநுபாஷித்துக் கொண்டு, அசித் தத்வோபந்யாஸத்தை நிகமித்தாராயிற்று.

**விளக்கம் -** சிங்கம் ஒன்று நடக்கும்போது திரும்பிப் பார்ப்பது போன்று, முன்பு தாம் அருளிச்செய்த அனைத்தையும் மீண்டும் நோக்குபவராக, அவற்றை மீண்டும் உரைத்து, அசித் தத்வம் குறித்த விளக்கங்களை நிறைவு செய்கிறார்.

**வ்யாக்யானம் –** ஆக, ப்ரதமத்திலே "அசித்து ஜ்ஞாந சூந்யமாய் விகாராஸ்பதமாயிருக்கும்" என்று அசித்தினுடைய லக்ஷணத்தைச் சொல்லி; அநந்தரம், அதுதான் சுத்தஸத்வயாதி பேதேந த்ரிவிதமாயிருக்கும்படியைச் சொல்லி; உத்தேச க்ரமத்திலே ப்ரதமம் சுத்த ஸத்வமாகிற அசித்தினுடைய ப்ரகாரத்தைச் சொல்லி; ததநந்தரம், மிச்ரஸத்வமாகிற அசித் விசேஷம் இன்னதென்றும், அதுதான் சதுர்விம்சதி தத்வமாயிருக்குமென்றும், அதில் ப்ரதம தத்வம் இன்னதென்றும், அந்த தத்வத்தினுடைய அவஸ்த்தா விசேஷங்க ளிருக்கும்படியையும், அதில் நின்றும் தத்வாந்தரங்கள் உத்பந்நமாகைக்கு ஹேது அதினுடைய குணவைஷம்யமென்றும், அந்த குணங்கள் தான் இன்னதென்றும், அவை தானதுக்கு அவிநாபூதங்களாய், அதினுடைய அவஸ்த்தா பேதங்களாலே அநுத்பூதங் களாயும் உத்பூதங்களாயுமிருக்குமென்றும், அவைதான கார்யானுமேயங்களென்றும்,

அவற்றினுடைய வைஷம்ய ப்ரயுக்தமான மஹதாதி தத்வோத்பத்தி க்ரமத்தையுஞ் சொல்லி,

**விளக்கம் -** முதலில், சூர்ணை (77) – அசித்து ஜ்ஞாந சூந்யமாய் விகாராஸ்பதமாயிருக்கும் - என்பது தொடங்கி அசித்தின் லக்ஷணங்களைக் கூறினார். அடுத்து, அசித்தானது சுத்தஸத்வம் போன்ற வேறுபாடுகள் காரணமாக மூன்றாக உள்ளதைக் கூறினார்; தாம் உரைக்க வந்த வரிசையில் முதலில் சுத்தஸத்வமாக உள்ள அசித்தின் விதத்தை உரைத்தார். அதன் பின்னர், மிச்ரஸத்வமாக உள்ள அசித்தின் சிறப்பு இன்னது என்றும், அது இருபத்துநான்கு விதமாக உள்ள தத்வமாக உள்ளது என்றும், அதில் முதல் தத்வம் இன்னது என்றும், அந்த முதல் தத்வத்தின் நிலைகளுடைய சிறப்புகள் உள்ள விதங்கள் குறித்தும், அந்த முதல் தத்வத்திலிருந்து மற்ற தத்வங்கள் அனைத்தும் உற்பத்தி ஆவதற்குக் காரணம் அதன் குணங்களில் உள்ள ஏற்றத்தாழ்வுகளே ஆகும் என்றும், அந்தக் குணங்கள் இன்னது என்றும், அவை ஒன்றை விட்டு ஒன்று பிரியாமல் உள்ளன என்றும், அதனுடைய நிலை மாறுதல்கள் காரணமாகக் கண்களுக்குப் புலப்பட்டும் புலப்படாமலும் உள்ளன என்றும், அவை கார்யங்களாக ஆவதற்கு ஏற்றவை என்றும், அவற்றின் ஏற்றத்தாழ்வால் உண்டாகின்ற மஹத் போன்ற தத்வங்களுடைய வரிசையையும் கூறினார்.

**வ்யாக்யானம் –** அநந்தரம், இப்படி யுத்பந்நங்களான தத்வங்களினுடைய ஸமுதாய கார்யமான அண்டோத்பத்தியையும், அந்தவண்டத்துக்குள்ளில் ஸமஷ்டி புருஷ சதுர்முகோத்பத்தியையும், ஈச்வரன் ஸமஷ்டி வ்யஷ்டி பதார்த்தங்களை அத்வாரகமாகவும் ஸத்வாரகமாகவும் நின்று ஸ்ருஷ்டிக்கும்படியையுஞ் சொல்லி, அநந்தரம் அண்டங்களினுடைய பஹுத்வத்தையும், அவற்றினுடைய கட்டளையையும், அவைதான் ஈச்வரனுக்கு லீலோபகரணங்களென்னுமத்தையும், அவற்றினுடையவுத்பத்தி ப்ரகாரத் தையுஞ் சொல்லி,

**விளக்கம் -** அதன் பின்னர் இவ்விதம் உற்பத்தி ஆகிய தத்வங்களுடைய கூட்டு கார்யமாக உள்ள அண்டத்தின் உற்பத்தியையும், அந்த அண்டத்திற்குள் அனைத்து புருஷர்களுடைய தொகுத்த வடிவமான நான்முகனுடைய உற்பத்தியையும், ஈச்வரன் அனைத்து பொருள்களையும் நான்முகன் மூலமாகப் படைத்தல் மற்றும் தானே படைத்தல் ஆகியவை குறித்தும் உரைத்தார். அடுத்து அண்டங்கள் பலவாக உள்ளதையும், அவற்றினுடைய

அளவுகளையும், அவை ஈச்வரனுக்கு விளையாட்டுக் கருவிகளாக உள்ளதையும், அவற்றின் உற்பத்தி விதங்களையும் கூறினார்.

**வ்யாக்யானம்** – அநந்தரம், ஆகாசாதி பூதங்களுக்குத் தனித்தனியேயுண்டான விநியோகத்தையும், ஜ்ஞாந கர்மேந்த்ரியங்களுக்கும் உபயாத்மகமான மநஸ்ஸுக்கு முண்டான வ்ருத்தி பேதத்தையும், ஆகாசாதிகளுக்கு சப்தாதிகள் ப்ரதிநியத குணங்களா யிருக்கும்படியையும், அவற்றுக்கு குணவிநிமயம் வருகைக்கு ஹேதுவையும், குணாதிக்யத்துக்கு ஹேதுவையுஞ் சொல்லி; இப்படி மிச்ர ஸதத்தினுடைய ப்ரகாரத்தை விஸ்தரேண உபபாதித்து,

**விளக்கம்** - அடுத்து ஆகாசம் முதலான பூதங்களுடைய தனித்தனியான பயன்களையும், ஞானேந்த்ரியங்கள் மற்றும் கர்மேந்த்ரியங்கள் ஆகிய இரண்டிற்கும் பொதுவாக உள்ள மனதிற்கு உள்ளதான செயல்பாட்டு வேறுபாடுகளையும் கூறினார். அடுத்து ஆகாசம் போன்ற பூதங்களுக்கு சப்தம் போன்றதான தனித்தனி குணங்கள் உள்ளதையும், அவற்றுக்கு மற்றவற்றின் குணச்சேர்க்கை ஏற்படுவதன் காரணத்தையும், அந்தந்த பூதங்களுக்கு அந்தந்த குணங்கள் ஓங்கி இருப்பதற்கான காரணத்தையும் அருளிச் செய்தார். இவ்விதம் மிச்ரஸத்வத்தின் விதங்களை மிகவும் விரிவாக அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** – அநந்தரம், இதினுடைய பரிணாமங்களுக்கு ஹேதுவாயிருந்துள்ள ஸத்வசூந்யமாகிற அசித் விசேஷத்தையும் ஸங்க்ரஹேண சொல்லி; அநந்தரம், ஏதத் பூர்வோக்தமான அசித் த்வயத்தினுடைய விநியோக ப்ரகாரத்தையும், அசித த்ரயத்தினுடைய பரிணாமங்களையுஞ் சொல்லி; ஏதத் தர்சநைக தேசிகர்களுடைய கால விஷய ப்ரதிபத்தி பேதத்தையும் காட்டி; அநந்தரம், கீழ்ச் சொல்லப்பட்டவற்றில் பாஹ்ய குத்ருஷ்டிகளுடைய விப்ரதிபத்தி ப்ரகாரங்களையும், அவைதான் அயுக்தமென்னு மிடத்தையுஞ் சொல்லி; அநந்தரம், பரஸ்பர விலக்ஷணமான பூத விசேஷங்களில் ஜ்ஞாதவ்யாம்சங்களையும் தர்சிப்பித்து; இப்படி, அசித் த்ரயத்தினுடைய ப்ரகாரத்தையு மருளிச்செய்து தலைக்கட்டினார்.

**விளக்கம் -** அடுத்து, மிச்ரஸத்வத்தின் மாற்றங்களுக்குக் காரணமாக உள்ள ஸத்வசூந்யம் என்னும் அசித் வகை குறித்து சுருக்கமாக அருளிச்செய்தார். இவ்விதம் முன்பு கூறப்பட்ட இரண்டு அசித்துக்கள் எவ்விதம் உபயோகம் ஆகின்றன என்பதையும், மூன்றுவிதமான அசித்துக்களுடைய மாற்றங்கள் குறித்தும் உரைத்தார். இவ்விதமாக உள்ள நம்முடைய தர்சனத்தில் உள்ள சில ஆசார்யர்கள், காலத்வம் குறித்து கருத்து வேறுபாடு கொண்டதை உரைத்தார். அடுத்து, கீழே கூறப்பட்டவற்றில், வேதங்களுக்கு விரோதமாகக் கருத்து உரைப்பவர்களுடைய முரண்பட்ட வாதங்களைக் கூறினார்; அவை யுக்திக்குப் பொருந்தாது என்பதையும் கூறினார். அடுத்து, ஒன்றுக்கொன்று சிறப்பாகக் காணப்படும் பூதங்களில் உள்ள அறியப்படவேண்டிய அம்சங்களை உரைத்தார். இப்படியாக மூன்று வகையான அசித் தத்வங்களுடைய தன்மைகளை உரைத்து, இந்தப் பகுதியை நிறைவு செய்தார்.

## ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த தத்வத்ரயத்தில்

## அசித் ப்ரகரணம் ஸம்பூர்ணம்

திருவரங்கச்செல்வனார் திருவடிகளே தஞ்சம்

தஞ்சம் அடைந்த நம் இராமாநுசன் திருவடிகளே தஞ்சம்

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:



ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

# தத்வ த்ரயம்

## (ஈச்வர ப்ரகரணம்)

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச்செய்த
வ்யாக்யானம்
(மூலம், எளிய தமிழ்நடை)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

**அவதாரிகை -** இப்படி சிதசித்ரூபமான தத்வ த்வயத்தினுடையவும் ஸ்வரூப ஸ்வபாவ விசேஷங்களை ஸுவ்யக்தமாம்படி அருளிச்செய்து, அநந்தரம், "க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக:" என்கிறபடியே, ததுபய நியந்தாவான ஈச்வரனுடைய ஸ்வரூபாதிகளை ஸம்சய விபர்யயமற அருளிச்செய்கிறார்.

**விளக்கம் -**இவ்விதமாக சித் மற்றும் அசித் ஆகிய இரண்டு தத்வங்களுடைய ஸ்வரூபம் மற்றும் இயல்புகள் ஆகியவற்றின் சிறப்புகளை தெளிவாக அருளிச்செய்தார். அடுத்து, ச்வே. (1-10) - க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக: - க்ஷரம் போன்ற பலவற்றுக்கும் ஈச்வரனாகிய தேவன் ஒருவனே - என்பதற்கு ஏற்ப சித் மற்றும் அசித் ஆகிய இரண்டிற்கும் எஜமானனாக உள்ள ஈச்வரனுடைய ஸ்வரூபம் முதலானவற்றை, எந்தவிதமான சந்தேகமும் மாறுபாடுகளும் இன்றி அருளிச்செய்கிறார்.

141. ஈச்வரன், அகிலஹேயப்ரதயநீகாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாய், ஜ்ஞாந சக்த்யாதி கல்யாணகுணகண பூஷிதனாய், ஸகல ஜகத் ஸர்க்க ஸ்திதி ஸம்ஹார கர்த்தாவாய், "ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தி ஜ்ஞாநி" என்கிற சதுர்விதே புருஷர்களுக்கும் ஆச்ரயணீயனாய், தர்மார்த்த காம மோக்ஷாக்ய சதுர்வித பலப்ரதனாய், விலக்ஷண விக்ரஹ யுக்தனாய், லக்ஷ்மீ பூமி நீளா நாயகனாயிருக்கும்.

**அவதாரிகை -** அதில் ப்ரதம சூர்ணையாலே, ஈச்வரத்வம் அஸாதாரண தர்மதயா வஸ்துவுக்கு நிரூபகமாயிருக்கையாலே, ஈச்வரன் என்றே வஸ்துவை நிர்தேசித்து, தத் ஸ்வரூபாதி வைலக்ஷண்யத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார். அதில், ப்ரதமத்திலே குணாதிகளுக்கும் ஆதார பூதமான ஸ்வரூப வைலக்ஷண்யத்தை யருளிச்செய்கிறார்.

**விளக்கம் -** ஈச்வர தத்வத்தை விளக்கத் தொடங்கி, அதில் முதல் சூர்ணையில் "ஈச்வரத்தன்மை" என்பது, வேறு யாருக்கும் பொதுவாக இல்லாத தர்மம் கொண்ட வஸ்துவை நிருபிக்கும் வகையில் உள்ளதால், "ஈச்வரன்" என்று அந்த வஸ்துவை உறுதியாக்கி, அதன் ஸ்வரூபம் போன்ற சிறப்புகளைச் சுருக்கமாக அருளிச்செய்கிறார்.

தொடக்கத்தில் அவனுடைய குணங்கள் போன்ற அனைத்திற்கும் ஆதாரமாக உள்ள ஸ்வரூபத்தின் சிறப்பை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (அகில ஹேய ப்ரதய நீக அநந்த ஜ்ஞாந ஆநந்த ஏக ஸ்வரூபனாய்) என்று. அதாவது, ஸமஸ்த ஹேய ப்ரதிபடமாய், த்ரிவித பரிச்சேத ரஹிதமாய், ஸ்வயம்ப்ரகாசத்வ ஸுகரூபத்வமே வடிவான ஸ்வரூபத்தையுடையவனாயென்கை. "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம", "விஜ்ஞாநம் ப்ரஹ்ம", "ஆநந்தோ ப்ரஹ்ம" என்னக்கடவதிறே. "அகிலஹேய ப்ரத்யநீக கல்யாணைகதா நஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷணாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூப" என்றிறே எம்பெருமானார் அருளிச்செய்தது. அப்படியே இவருமருளிச் செய்கிறார். ஆனால், கல்யாணைகதாநத்வமும், ஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷணத்வமும் இவரருளிச் செய்யாதொழிவானென்? என்னில், ஹேய ப்ரத்யநீகதை புக்கவிடத்தே கல்யாணைகதாநத்வம் வருமென்னுமத்தைப் பற்றவும், ஆநந்தரூபத்வம் சொல்லுகையாலே தன்னடையே ஸித்திக்குமென்னுமத்தைப் பற்றவும், கல்யாணைகதாநத்வம் அருளிச்செய்திலர். ஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷணத்வம் உபயலிங்க விசிஷ்டத்வ ப்ரயுக்தமாகையாலே, அர்த்தாதுக்தமென்று அருளிச்செய்திலர்.

**விளக்கம் -** (அகில ஹேய ப்ரதய நீக அநந்த ஜ்ஞாந ஆநந்த ஏக ஸ்வரூபனாய்) - அனைத்து தாழ்வுகளுக்கும் எதிர்த்தட்டாகவும், மூன்றுவிதமான எல்லைகளும் அற்றவனாகவும் [இடம், பொருள், காலம்], தானாகவே தன்னை வெளிப்படுத்த வல்லவனாகவும், ஆனந்தரூப ஸ்வரூபம் கொண்டவனாகவும் உள்ளான். தை. (2-1-1) - ஸத்யம் ஞானம் அநந்தம் ப்ரஹ்ம - ப்ரஹ்மமனது மாற்றம் அற்றது, தானே வெளிப்பட வல்லது, எல்லை அற்றது - என்றும், தை. (3-5) – விஜ்ஞானம் ப்ரஹ்ம - விஜ்ஞானத்தை ப்ரஹ்மம் என்று அறியவேண்டும் – என்றும், தை. (3-6-1) – ஆநந்தோ ப்ரஹ்ம: - ப்ரஹ்மம் ஆனந்தமயமானது - என்றும் கூறப்பட்டது அல்லவோ? சரணாகதி கத்யத்தில் - அகிலஹேய ப்ரத்யநீக கல்யாணைகதா நஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷணாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூப - அனைத்துவிதமான தாழ்வுகளுக்கும் எதிர்த்தட்டாகவும், அனைத்து கல்யாணகுணங்களுக்கும் இருப்பிடமாகவும், தன்னைத் தவிர்த்து உள்ள மற்ற அனைத்து வஸ்துக்களையும் விட வேறுபட்ட எல்லையற்ற ஞானமும் ஆனந்தமும் ஸ்வரூபமாகக் கொண்டவன் - என்று எம்பெருமானார் அருளிச்செய்தார். அது போன்று இங்கு ஸ்வாமி பிள்ளைலோகாசார்யரும் அருளிச்செய்கிறார். ஆனால் இங்கு, "கல்யாண குணங்களின் இருப்பிடம், மற்ற அனைத்து வஸ்துக்களைக் காட்டிலும் மேன்மையான

சிறப்பு” ஆகியவற்றை இவர் அருளிச்செய்யாமல் விடுத்தது ஏன்? “அனைத்து தாழ்வுகளுக்கும் எதிர்தட்டாக உள்ள தன்மை” என்பது உள்ளபோது, “அனைத்து கல்யாண குணங்களுடைய இருப்பிடம்” என்பது தானாகவே வெளிப்படும்;மேலும், “ஆனந்தம்” என்பதைக் கூறுவதால், “கல்யாண குணங்களுக்கு இருப்பிடம்” என்பதைத் தனியே இங்கு கூறவில்லை. “அனைத்து தாழ்வுகளுக்கும் எதிர்தட்டாக உள்ள தன்மை, அனைத்து கல்யாண குணங்களுடைய இருப்பிடம்” ஆகிய இரண்டு அடையாளங்களும், “மற்ற அனைத்து வஸ்துக்களைக் காட்டிலும் மேன்மையான சிறப்பு” என்னும் கருத்தை வெளிப்படுத்தவல்லது என்பதால் அதனைத் தனித்துக் கூறவில்லை.

**வ்யாக்யானம் -** (ஜ்ஞாந சக்த்யாதி கல்யாணகுணகண பூஷிதனாய்) ஆதி சப்தத்தாலே குண சூர்ணையில் எம்பெருமானாரருளிச்செய்த குணங்களையெல்லாம் சொல்லுகிறது. குணங்களுக்கு கல்யாணத்வமாவது, ஆச்ரிதர்க்குப் பரமபோக்யமாயிருக்கை. கண சப்தம் ஸமூஹவாசி. பூஷிதனாகையாவது, இவற்றாலே அலங்க்ருதனாயிருக்கை. திவ்யமங்கள விக்ரஹத்துக்கு திவ்யாபரணங்கள்போலேயாயிற்று, திவ்யாத்ம ஸ்வரூபத்துக்கு குணங்கள் ஔஜ்ஜ்வல்யகரமாயிக்கும்படி. இத்தால், “யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்”, “பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பல க்ரியாச்ச”, “ஸமஸ்த கல்யாணகுணாத்மகோஸௌ” என்கிற குணகண யோகத்தை அருளிச்செய்தாராயிற்று.

**விளக்கம் -** (ஜ்ஞாந சக்த்யாதி கல்யாணகுணகண பூஷிதனாய்) – ”சக்த்யாதி” என்பதில் உள்ள “ஆதி” என்பதன் மூலம், கத்யத்தில் உள்ள குணங்கள் குறித்த சூர்ணையில், காணப்படுவதான எம்பெருமானார் அருளிச்செய்த, அனைத்து குணங்களும் கூறப்பட்டன. குணங்களுக்குக் கல்யாணத்தன்மை என்பது, அடியார்களுக்கு மிகவும் இனிமையாக இருத்தல் ஆகிறது. “கண” என்பது கூட்டமாக இருப்பதைக் கூறுகிறது. “பூஷிதன்” என்பது, இந்த குணங்களால் அலங்கரிக்கப்பட்டவனாக இருத்தல். திவ்யமங்கள விக்ரஹத்திற்கு திவ்யமான ஆபரணங்கள் எவ்விதம் உள்ளனவோ அதே போன்று, திவ்ய ஆத்ம ஸ்வரூபத்திற்கு இந்தக் குணங்கள் அனைத்தும் ஒளி வீசும்படியாக உள்ளன. இதன் மூலம் முண். (1-1-9) – ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் - அனைத்தையும் அறிந்தவன், அனைத்தையும் உணர்ந்தவன் – என்றும், ச்வே. (6-8) - பராஸ்ய சக்தி: விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பலக்ரியா ச – அவனுடைய சக்தியானது பலவிதமாகவும், ஞானம் பலம் மற்றும் செய்கைகளை இயல்பாகவே கொண்டதாகவும் உள்ளது – என்றும், ஸ்ரீவிபு.

(6-5-84) - ஸமஸ்த கல்யாணகுணாத்மகோஸௌ - அனைத்து கல்யாணகுணங்களும் பொருந்தியவன் - என்றும் உள்ளதற்கு ஏற்ப, குணங்களுடைய சேர்க்கையை அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** (ஸகல ஜகத் ஸர்க்க ஸ்திதி ஸம்ஹார கர்த்தாவாய்) ஜகச் சப்தத்தாலே, கார்ய வஸ்துவைச் சொல்லுகிறது. ஸகல சப்தத்தாலே ஸமஷ்டி வ்யஷ்டி ரூபமான ஸமஸ்த பதார்த்தங்களையும் சொல்லுகிறது. ஸர்க்கமாவது ஸ்ருஷ்டி இதுதான் ஸத்வாரக அத்வாரக ரூபேண த்விவிதையாயிருக்கும். ஸ்திதியாவது ரக்ஷணம்; இதுவும் பாஹ்யாப்யந்தர ரூபேண த்விவிதமாயிருக்கும். ஸம்ஹாரமாவது அழிக்கை; இதுவும் ஸத்வாரக அத்வாரக ரூபேண த்விவிதமாயிருக்கும். இவையெல்லாம் மேல் இவர் உபபாதிக்கிறவிடத்திலே காணலாம். "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே | யேந ஜாதாநி ஜீவந்தி | யத் ப்ரயந்த்யபி ஸம்விசந்தி | தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்ம" இத்யாதி ச்ருதிகளாலே இவனுடைய ஸகல ஜகத் ஸர்காதிகள் சொல்லப்படா நின்றதிறே. இத்தால் கீழ்ச் சொன்ன குண விசிஷ்டனானவிவனுடைய வ்யாபார விசேஷங்களை அருளிச்செய்தாராயிற்று.

**விளக்கம் -** (ஸகல ஜகத் ஸர்க்க ஸ்திதி ஸம்ஹார கர்த்தாவாய்) - "ஜகத்" என்பதன் மூலம் அனைத்து கார்யப்பொருள்களும் கூறப்பட்டன. "ஸகல" என்பதால், தொகுத்ததாகவும் தனித்தனியே உள்ளதாகவும் காணப்படும் அனைத்து பதார்த்தங்களும் கூறப்பட்டன. "ஸர்க்கம்" என்றால் ஸ்ருஷ்டி; ஸ்ருஷ்டியானது தன் மூலம் நேரடியாகவோ அல்லது நான்முகன் முதலானோர் மூலமாகவோ என இரண்டுவிதமாக உள்ளதாகும். "ஸ்திதி" என்பது காத்தல்; இது வெளிப்படையாக நின்றும், அந்தர்யாமியாக நின்றும் என்பதாக இரண்டுவிதமாக உள்ளது. "ஸம்ஹாரம்" என்பது அழித்தல்; இதுவும், தன் மூலமாகவோ அல்லது ருத்ரன் போன்றவர்கள் மூலமாகவோ என இரண்டுவிதமாக உள்ளது. இவை அனைத்தும் இவர் இனி அருளிச்செய்ய இருக்கின்ற சூர்ணைகளில் காணப்பட உள்ளன. தை. (3-1-1) - யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே | யேந ஜாதாநி ஜீவந்தி | யத் ப்ரயந்த்யபி ஸம்விசந்தி | தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்ம - யாரிடமிருந்து அனைத்தும் பிறந்தனவோ, பிறந்த பின்னர் யாரிடம் வசிக்கின்றனவோ, யாரிடம் சென்று லயிக்கின்றனவோ, அதனையே அறிய விரும்புவாயாக; அதுவே ப்ரஹ்மம் – என்பது போன்ற ச்ருதி வாக்கியங்கள் மூலம் இவன் அனைத்து ஜகத்தையும் படைத்தல்

போன்றவை கூறப்பட்டன. இதன் மூலம் முன்பு கூறப்பட்டதாகிய, குணங்களுடன் கூடிய ஸர்வேச்வரனுடைய செயல்களின் சிறப்புகளை அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** (ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ என்கிற சதுர்வித புருஷர்களுக்கும் ஆச்ரயணீயனாய்) - ஆர்த்தனாவன், முன்புண்டான ஐச்வர்யத்தையிழந்து அது பெற வேணுமென்று ஆசைப்படுமவன்; ஜிஜ்ஞாஸுவாகிறான், ஜ்ஞாந ஸ்வரூபனான ஆத்மாவை அநுபவிக்க ஆசைப்படும் கேவலன்; அர்த்தார்த்தியாகிறான், அபூர்வமாக ஐச்வர்யத்தை ஆசைப்படுமவன்; ஜ்ஞாநியாகிறான், பரமபுருஷார்த்தமான பகவத் ப்ராப்தியை ஆசைப்படுமவன். "ஆர்த்த : ப்ரதிஷ்டாஹீந: ப்ரஷ்டைச்வர்ய புநஸ் தத் ப்ராப்தி காம:, அர்த்தார்த்தீ அப்ராப்தைச்வர்யதயா ஐச்வர்ய காம:, தயோர் முகபேத மாத்ரம், ஐச்வர்ய விஷய தயா ஏக ஏவாதிகார:, ஜிஜ்ஞாஸு: ப்ரக்ருதி வியுக்தாத்ம ஸ்வரூபாவாப்தீச்சு:, ஜ்ஞாநமேவாஸ்ய ஸ்வரூபமிதி ஜிஜ்ஞாஸுரித்யுக்தம், ஜ்ஞாநீ ச "இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்" இத்யாதிநா அபிஹித பகவச் சேஷதைகரஸாத்ம ஸ்வரூபவித், ப்ரக்ருதி வியுக்த கேவலாத்மந்ய பர்யவஸ்ய ந பகவந்தம் ப்ரேப்ஸுர் பகவந்தமேவ பரம ப்ராப்யம் மந்வாந:" என்று சதுர்விதாதிகார வேஷத்தையும், ஸ்ரீகீதாபாஷ்யத்திலே அருளிச்செய்தாரிறே. இந்த சதுர்வித புருஷ ஸமாச்ரயணீயத்வத்தை "சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந! ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப" என்றும், "சதுர்விதா மம ஜநா பக்தா ஏவ ஹி தே ச்ருதா: ! ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ சேதி ப்ருதக் ப்ருதக்" என்றும் தானே அருளிச் செய்தானிறே. இத்தால், ஜகத்காரணபூதனாகக் கீழ்ச் சொல்லப்பட்டவனுடைய ஸர்வஸமாச்ரயணீயத்வத்தை அருளிச்செய்தாராயிற்று.

**விளக்கம் -** (ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ என்கிற சதுர்வித புருஷர்களுக்கும் ஆச்ரயணீயனாய்) - ஆர்த்தன் என்பவன், முன்பு தனக்கு இருந்த ஐச்வர்யத்தை இழந்து, அதனை மீண்டும் பெறவேண்டும் என்ற ஆசை கொண்டவன் ஆவான். ஜிஜ்ஞாஸு என்பவன், ஞான ஸ்வரூபனாக உள்ள ஆத்மாவை அனுபவிக்கவேண்டும் என்று மட்டுமே ஆசை கொண்டவன் ஆவான். அர்த்தார்த்தி என்பவன், இதுவரை தன்னிடம் இல்லாத ஐச்வர்யத்தை விரும்புபவன் ஆவான். ஞானி என்பவன், உயர்ந்த புருஷார்த்தமாகிய "பகவானை அடைதல்" என்பதை விரும்புபவன் ஆவான். கீதாபாஷ்யத்தில் (7-16) – ஆர்த்த : ப்ரதிஷ்டாஹீந: ப்ரஷ்டைச்வர்ய புநஸ் தத் ப்ராப்தி காம:, அர்த்தார்த்தீ

அப்ராப்தைச்வர்யதயா ஐச்வர்ய காம:, தயோர் முகபேத மாத்ரம், ஐச்வர்ய விஷய தயா ஏக ஏவாதிகார:, ஜிஜ்ஞாஸு: ப்ரக்ருதி வியுக்தாத்ம ஸ்வரூபாவாப்தீச்சு:, ஜ்ஞாநமேவாஸ்ய ஸ்வரூபமிதி ஜிஜ்ஞாஸுரித்யுக்தம், ஜ்ஞாநீ ச "இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்" இத்யாதிநா அபிஹித பகவச் சேஷைதைகரஸாத்ம ஸ்வரூபவித், ப்ரக்ருதி வியுக்த கேவலாத்மந்ய பர்யவஸ்ய ந பகவந்தம் ப்ரேப்ஸுர் பகவந்தமேவ பரம ப்ராப்யம் மந்வாந: - ஆர்த்த என்பது வாழ்க்கையில் தனது நிலையை இழந்து, செல்வம் இழந்து, அதனை மீண்டும் பெற எண்ணுபவர்களைக் குறிக்கும். அர்த்தார்த்தீ என்பவன் புதியதாக மேலும் செல்வம் பெற விரும்புபவன் ஆவான். இவனும் கடந்த பிரிவினனும், செல்வத்தை மட்டுமே அடிப்படையான எண்ணமாகக் கொண்டுள்ளதால், இவர்களுக்கு இடையே எந்த வேறுபாடும் இல்லை. ஜிஜ்ஞாஸு என்பவன், ஆத்மாவின் உண்மையான தன்மையை அறிய விரும்புவன்; அதனை ப்ரக்ருதியை விட மாறுபட்ட ஒன்று என்பதாக அறிந்து மேலும் ஞானம் பெற விருப்பம் கொண்டவன் ஆவான். இவன் ஞானத்தை விரும்புபவன் என்று ஏன் கூறப்படுகிறான் என்றால், இவன் அறிய விரும்பும் ஆத்மாவின் ஸ்வரூபம் ஞானமாக உள்ளதால் ஆகும். ஞானி என்பவன், ஆத்மாவைப் பற்றி உணர்ந்ததால், ஆத்மாவின் மகிழ்வு என்பது பரம்பொருளுக்கு அடிமையாக உள்ளதன் மூலம் மட்டுமே உண்டாகும் என்று உணர்ந்தவன் ஆவான். இவன், முன்பு கூறப்பட்ட கீதை (7-5) – இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம் – அசேதந ப்ரக்ருதியைக் காட்டிலும் மேலானது எனது சேதந ப்ரக்ருதி - என்று கூறப்பட்ட ஞானம் கொண்டவன் ஆவான். இவன், "ஆத்மா வேறு, ப்ரக்ருதி வேறு" என்று அறிவதுடன் மட்டுமே அல்லாமல், பகவானையே பெற விரும்புகிறான். அவன் உணர்வது, "பரம்பொருளை அடைதலே உயர்ந்த இலக்கு" என்பதாகும் - என்று நான்குவிதமானவர்கள் குறித்து அருளிச்செய்தார் அல்லவோ? இந்த நான்கு விதமானவர்களும் பகவானை அடைதல் குறித்து கீதை (7-16) - சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந! ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப – அர்ஜுனா! எனது பக்தர்கள் நான்குவிதமானவர்கள்; அவர்கள் ஆர்த்தர்கள், ஜிஜ்நாஸு, அர்த்தார்த்தீ மற்றும் ஞானி என்பவர்கள் ஆவர் – என்றும், என்றும், மஹாபாரதம் மோக்ஷதர்மத்தில் – சதுர்விதா மம ஜநா பக்தா ஏவ ஹி தே ச்ருதா: ! ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ சேதி ப்ருதக் ப்ருதக் - அர்ஜுனா! எனது பக்தர்கள் நான்குவிதமானவர்கள்; அவர்கள் ஆர்த்தர்கள், ஜிஜ்நாஸு, அர்த்தார்த்தீ மற்றும் ஞானி என தனித்தனியாக உரைக்கப்படுகிறார்கள் - என்றும் தானே அருளிச்செய்தான்

அல்லவோ? இதன் மூலம், இந்த ஜகத்தின் காரணமாகக் கூறப்பட்ட ஸர்வேச்வரனுடைய "அனைவராலும் அடையப்படும் தன்மை" என்பதை அருளிச்செய்தார் என்றானது.

**வ்யாக்யானம் -** (தர்மார்த்த காம மோக்ஷாக்க்ய சதுர்வித பலப்ரதனாய்) "தர்மார்த்த காம மோக்ஷாக்க்ய புருஷார்த்த உதாஹ்ருத:" என்று புருஷார்த்தம் சதுர்விதமாயிறே இருப்பது. தர்மமாவது இஷ்டாபூர்த்தங்கள்; இஷ்டமாவது யாகாதி; பூர்த்தமாவது வாதாடி; அர்த்தமாவது ஸுவர்ண ரஜதாதிகள்; காமமாவது ஐஹிக பாரலௌகிக போக்ய பதார்த்தாநுபவ ஸுகம்; மோக்ஷமாவது ஆத்மாநுபவ பகவதநுபவங்கள். இவற்றில், தர்மம், ஸாதநதயா புருஷார்த்தமாயிருக்கும்; அர்த்தம், ஸாதநதயாவும், ஸ்வயமாயும் புருஷார்த்தமாயிருக்கும்; காமமோக்ஷங்களிரண்டும், ஸ்வயம் புருஷார்த்தமாயிருக்கும். ஏவம்விதமான சதுர்வித பலங்களையும அதிகாராநுகுணமாகக் கொடுக்குமவனா யென்கை. இத்தால், ஸர்வ ஸமாச்ரயணீயனான இவனுடைய ஸகல பலப்ரதத்வத்தையும் அருளிச்செய்தாராயிற்று. "தேவேந்த்ரஸ் த்ரிபுவநமர்த்தமேகபிங்கஸ் ஸர்வர்த்திம் த்ரிபுவநபாஞ்ச கார்த்தவீர்ய:, வைதேஹ: பரமபதம் ப்ரஸாத்ய விஷ்ணும் ஸம்ப்ராப்தஸ் ஸகலபல ப்ரோடிஹி விஷ்ணு:" என்னக்கடவதிறே.

**விளக்கம் -** (தர்மார்த்த காம மோக்ஷாக்க்ய சதுர்வித பலப்ரதனாய்) - மஹாபாரதம் மோக்ஷபர்வம் - தர்மார்த்த காம மோக்ஷாக்க்ய புருஷார்த்த உதாஹ்ருத: – தர்மம், பொருள், இன்பம் மற்றும் மோக்ஷம் எனபதாக உள்ள புருஷார்த்தங்கள் – என்பதற்கு ஏற்ப, புருஷார்த்தங்கள் நான்குவிதமாக உள்ளன. தர்மம் என்றால் இஷ்டாபூர்த்தங்கள் ஆகும்; இஷ்டம் என்பது யாகம் போன்றவை, பூர்த்தம் என்பது குளங்கள் வெட்டுதல் போன்றவை ஆகும்; அர்த்தம் என்றால் ஸ்வர்ணம், வெள்ளி போன்றவை; காமம் என்பது இந்த லோகத்திலும் அந்த லோகத்திலும் உள்ள இன்பம் தரும் பொருள்களை அனுபவிக்கும்போது ஏற்படும் சுக அனுபவம்; மோக்ஷம் என்றால் ஆத்ம அனுபவம் மற்றும் பகவத் அனுபவம் ஆகும். இவற்றில் தர்மம் என்பது ஒரு வஸ்துவைப் பெறுவதற்கான சாதனமாக உள்ளதால் புருஷார்த்தமாக இருக்கிறது. அர்த்தம் என்பது ஒரு வஸ்துவைப் பெறுவதற்கான சாதனமாக உள்ளதாலும், தானாகவே பயன் அளிப்பதாலும் புருஷார்த்தமாக இருக்கிறது. காமம் மற்றும் மோக்ஷம் ஆகிய இரண்டும், தங்களுக்குத் தாங்களே புருஷார்த்தங்களாக உள்ளன. இப்படிப்பட்ட நான்குவிதமான பலன்களையும், அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்ப அளிப்பவன் அவனே ஆகிறான்.

இதன் மூலம், அனைத்தும் அண்டக்கூடியபடி உள்ள அவனுடைய, "அனைத்து பலன்களையும் அளிக்கவல்ல தன்மை" என்பதை அருளிச்செய்தார். மாங்கல்ய ஸ்தவத்தில் - தேவேந்த்ரஸ் த்ரிபுவநமர்த்தமேகபிங்கஸ் ஸர்வர்த்திம் த்ரிபுவநபாஞ்ச கார்த்தவீர்ய:, வைதேஹ: பரமபதம் ப்ரஸாத்ய விஷ்ணும் ஸம்ப்ராப்தஸ் ஸகலபல ப்ரோடிஹி விஷ்ணு - தேவேந்த்ரன் மூன்று புவநங்களையும், கார்த்தவீர்யன் மூன்று லோகங்களில் உள்ள அனைத்தையும், வைதேஹ அரசன் பரமபதத்தையும் அடைந்தனர்; இப்படியாக இவர்கள் விஷ்ணுவை அடைந்தனர்; அனைத்தையும் அளிக்கவல்லவன் அவனே என்பதால் ஆகும் - என்பது காண்க.

**வ்யாக்யானம் -** (விலக்ஷண விக்ரஹ யுக்தனாய்) அதாவது, "விக்ரஹந்தான், ஸ்வரூப குணங்களிலுங்காட்டில் அத்யந்த அபிமதமாய்" என்று தொடங்கி, மேலருளிச் செய்கிற வைலக்ஷண்யத்தையுடைய விக்ரஹத்தோடே கூடியிருக்குமவனாயென்கை. "நீலதோயத மத்யஸ்த்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா" இத்யாதியிலே, விக்ரஹ வைலக்ஷண்யம் ச்ருதி ப்ரஸித்தம். "ஸ்வாபிமதாநுரூபைகரூபாசிந்த்ய திவ்யாத்புத நித்ய நிரவத்ய நிரதிசயௌஜ்ஜ்வல்ய ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யநந்த குண நிதி திவ்யரூப!" என்று திவ்ய மங்கள விக்ரஹ வைலக்ஷண்யத்தை அருளிச்செய்தாரிறே எம்பெருமானார். இத்தால, கீழ்ச்சொன்ன ஸ்வரூப குணங்களுக்கு ப்ரகாசகமாய், ஜகத்காரணத்வத்துக்கும் ஸர்வஸமாச்ரயணீயத்வத்துக்கும், ஸர்வ பலப்ரதத்வத்துக்கும் ஏகாத்தமான திவ்ய விக்ரஹ யோகத்தை யருளிச்செய்தாராயிற்று.

**விளக்கம் -** (விலக்ஷண விக்ரஹ யுக்தனாய்) – சூர்ணை (181) – விக்ரஹந்தான், ஸ்வரூப குணங்களிலுங்காட்டில் அத்யந்த அபிமதமாய் - என்பது தொடங்கி இவர் அருளிச்செய்ய உள்ள மிகுந்த சிறப்புடன் கூடிய திருமேனியைக் கொண்டவன் என்று கருத்து. தைத். ( 2-11) - நீலதோயத மத்யஸ்த்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா - கருமையான மேகத்தின் நடுவில் உள்ள மின்னல் போன்ற ஒளியுடன் கூடியது – என்பதற்கு ஏற்ப இவனுடைய திருமேனியின் மிகுந்த சிறப்பானது ச்ருதியில் வெளிப்படுகிறது. இவனுடைய திருமேனியின் மிகுந்த சிறப்பை கத்யத்தில், "ஸ்வ அபிமத அநுருபைகரூப அசிந்த்ய திவ்ய அத்புத நித்ய நிரவத்ய நிரதிசய ஔஜ்ஜ்வல்ய ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாதி அநந்த குண நிதி திவ்யரூப - தனக்கு விருப்பமாகவும், தனது அனுபவத்திற்கு ஏற்றதாகவும், சிந்தனைக்கு எட்டாதபடியும், திவ்யமானதும், வியக்க

வைப்பதும், எப்போதும் உள்ளதும், தோஷம் அற்றதும், எல்லையற்ற ஒளி பொருந்தியதும், அழகாகவும், நறுமணம் கொண்டதும், மென்மையானதும், லாவண்யம் கொண்டதும், இளமையுடன் கூடியதும், இப்படியாக எண்ணற்ற குணங்களின் புதையலாக உள்ள திவ்யமான ரூபம்" என்று எம்பெருமானார் அருளிச்செய்தார். இதன் மூலமாக, இதுவரை கூறப்பட்ட ஸ்வரூப குணங்களை வெளிப்படுத்துவதும், இந்த ஜகத்திற்குக் காரணமாக உள்ளதும், அனைத்தும் அண்டுவதற்கு ஏற்றபடியாக உள்ளதும், அனைத்து பலன்களையும் அளிக்கவல்ல தன்மை கொண்டதும் ஆகிய ஒரே வஸ்துவாகிய திவ்யமங்கள திருமேனியுடன் அவனுக்கு உள்ள சேர்க்கை கூறப்பட்டது.

**வ்யாக்யானம் -** (லக்ஷ்மீ பூமி நீளா நாயகனாயிருக்கும்) அதாவது, "உனக்கேற்கும்" எனனும்படியான வைலக்ஷண்யத்தையுடையளாய், சேதநர்க்கு புருஷகாரபூதையாயும், ப்ராப்யையாயுமிருக்கும் ப்ரதான மஹிஷியான பெரியபிராட்டியார்க்கும், அவளோடொக்கச் சொல்லலாம்படியிருக்கும் பூமி நீளைகளான மற்றையிரண்டு பிராட்டிமார்க்கும் அநுரூப நாயகனாயிருக்குமென்கை. "ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" என்று லக்ஷ்மீ பூமிகளிருவரையும் வேதபுருஷன் சொன்னவிது, நீளைக்கும் உபலக்ஷணம். "வைகுண்டேது பரேலோகே ஶ்ரீஸஹாயோ ஜநார்த்தந:, உபாப்யாம் பூமி நீளாப்யாம் ஸேவித: பரமேச்வர:" என்னக்கடவதிறே. "ஸ்வாபிமத நித்ய நிரவத்யாநுரூப ஸ்வரூப ரூப குண விபவைச்வர்ய சீலாத்யநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாணகுணகண ஶ்ரீவல்லப! ஏவம்பூத பூமி நீளா நாயக!" என்றிறே எம்பெருமானார் அருளிச்செய்தது. இத்தால், கீழ்ச்சொன்ன விக்ரஹ வைலக்ஷண்யம், காட்டிலெரித்த நிலாவாகாதபடி அநுபவிக்கக் கடவரான பிராட்டிமாரோட்டைச் சேர்த்தியை யருளிச்செய்தாராயிற்று.

**விளக்கம் -** (லக்ஷ்மீ பூமி நீளா நாயகனாயிருக்கும்) - அதாவது திருவாய்மொழி (10-10-6) – உனக்கு ஏற்கும் - என்பதற்கு ஏற்ப மிகுந்த சிறப்பைக் கொண்டவளாகவும், சேதநர்களுக்காக எம்பெருமானிடம் சிபாரிசு செய்பவளாகவும், அடையப்பட வேண்டியவளாக உள்ளவளும், முதன்மையான பிராட்டியாக இருப்பவளும் ஆகிய பெரியபிராட்டியாருக்கும்; அவளுடன் சேர்த்துக் கூறலாம்படியாக உள்ள பூமாதேவி மற்றும் நீளாதேவி என்பவர்களாகிய மற்ற இரண்டும் பிராட்டிமார்களுக்கும் ஏற்றவனாக அவன் உள்ளான். யஜுஷு - ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ - உனக்கு பூமியும் திருமகளும் பத்னிகள் – என்று கூறப்பட்ட வேதவாக்கியமானது, மஹாலக்ஷ்மி மற்றும்

பூமாதேவி ஆகிய இவருடன் நீளாதேவியையும் சேர்த்தே கூறப்பட்டதாகிறது. வைகுண்டேது பரேலோகே ஶ்ரீஸஹாயோ ஜநார்த்தந:, உபாப்யாம் பூமி நீளாப்யாம் ஸேவித: பரமேச்வர: – ஸ்ரீவைகுண்டம் என்ற உயர்ந்த இடத்தில் மஹாலக்ஷ்மியுடன் கூடியவனாக உள்ளான்; இங்கு பூமாதேவி மற்றும் நீளாதேவியுடன் சேர்ந்தபடி உள்ள அந்த பரமேச்வரன் வணங்கப்படுகிறான் - என்பது காண்க. கத்யத்தில், “ஸ்வ அபிமத நித்ய நிரவத்ய அநுரூப ஸ்வரூப ரூப குண விபவ ஐச்வர்ய சீலாதி அநவதிக அதிசய அஸங்க்யேய கல்யாண குண கண ஸ்ரீவல்லப! ஏவம்பூத பூமி நீளா நாயக! - உனக்கு ஏற்றபடியான ஸ்வரூபம், நித்யமாக உள்ள நிலை, தோஷம் ஏதும் இல்லாத நிலை, உனக்கு ஏற்ற ரூபம், குணம், செல்வம், ஐச்வர்யம், சீலம் போன்றதான எண்ணற்ற எல்லையற்ற கல்யாணகுணங்களைக் கொண்ட மஹாலக்ஷ்மியின் நாயகனே! இப்படியாக உள்ள பூமாதேவி மற்றும் நீளாதேவியின் நாயகனே”, என்று எம்பெருமானார் அருளிச்செய்தார். இதன் மூலம் இதுவரை கூறப்பட்ட திவ்யமங்கள திருமேனியின் மிகுந்த சிறப்பானது காட்டில் வீசுகின்ற நிலவின் ஒளி போன்று வீணாகப் போகாமல், சேர்ந்து நின்று அனுபவிக்கத்தக்கபடி உள்ள பிராட்டிகளின் சேர்த்தியைக் கூறினார் என்றாயிற்று.

**அவதாரிகை** - இப்படி உக்தமான ஸ்வரூபாதிகளை விஸ்தரேண உபபாதித்தருளுகிறார் மேல். அதில் ப்ரதமத்திலே “அகில ஹேய ப்ரத்யநீகாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாய்” என்றவிதில், அகிலஹேய ப்ரத்யநீகத்வத்தை உபபாதிக்கிறார் (அகிலஹேய ப்ரத்யநீகனாகையாவது” என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் கூறப்பட்டதாகிய பகவத் ஸ்வரூபம் போன்றவற்றை விரிவாக அருளிச்செய்ய உள்ளார். அதில் முதலில், சூர்ணை (141) - அகில ஹேய ப்ரத்யநீகாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாய் - என்ற பகுதியில் உள்ள “அனைத்து தாழ்வுகளுக்கும் எதிர்த்தட்டாக உள்ள தன்மை” என்பதை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

142. அகில ஹேய ப்ரத்யநீகனாகையாவது, தமஸ்ஸுக்குத் தேஜஸ்ஸு போலேயும், ஸர்ப்பத்துக்கு கருடனைப் போலேயும், விகாராதி தோஷங்களுக்கு ப்ரதிபடனாயிருக்கை.

**வ்யாக்யானம்** – ஹேயமாவது தோஷம். அகிலஹேயமென்கையாலே, த்ரிவித சேதநா சேதந தோஷங்களையும் சொல்லுகிறது. “த்ரிவித சேதநாசேதந தோஷமும் ஈச்வரனுக்கு வாராது” என்று இது தன்னை வ்யக்தமாக மேலே யருளிச்செய்கிறாரிறே. (தமஸ்ஸுக்கு

தேஜஸ்ஸு போலேயும், ஸர்ப்பத்துக்கு கருடனைப் போலேயும்) என்றது, தமஸ்ஸுக்கு தேஜஸ்ஸு ப்ரதிபடமாயிருக்குமாபோலேயும், ஸர்ப்பத்துக்கு கருடன் ப்ரதிபடனாயிருக்குமா போலேயும் என்கை. (விகாராதி தோஷங்கள்) என்கிறவிடத்தில் விகார சப்தத்தாலே, த்ரிவித அசித்தினுடையவும் பரிணாமத்தைச் சொல்லுகிறது. ஆதி சப்தத்தாலே பத்த சேதநருடைய அஜ்ஞா துக்கங்களையும், முக்தருடைய சேறு தோய்த்துக் கழுவினாரைப்போலே ப்ரக்ருதி ஸம்ஸ்ருஷ்டராய் விடுபட்டவாகாரத்தையும், நித்யருடைய பரிச்சிந்ந ஸ்வரூபத்வ பாரதந்த்ரியங்களையும் சொல்லுகிறது. பாரதந்த்ர்யம் தோஷமோ? என்னில், புருஷனுக்கு ஸ்தநோத்பேதம்போலே, ஸ்வதந்த்ரனுக்கு தோஷமென்கை. இத்தோஷங்களுக்கு ப்ரதிபடமாயிருக்கையாவது, தான் மாறாயிருக்கை. ப்ரதிபடமென்கையாலே "ஆத்மா ஜ்ஞாநமயோமல:" என்கிறபடியே ஸ்வரூப நிபந்தநமாக மல ஸம்பந்தமில்லையேயாகிலும், உபாதி நிபந்தநமான மல ஸம்பந்தத்துக்கு யோக்யமான ஆத்மஸ்வரூபத்திற்காட்டில் பகவத்ஸ்வரூபத்துக்கு வாசி தோற்றுகிறது. "தத் ப்ரஹ்ம பரமம் நித்யமஜமக்ஷயமவ்யயம் ஏக ஸ்வரூபந்து ஸதா ஹேயாபாவாச்ச நிர்மலம்", "ஸமஸ்த ஹேய ரஹிதம் விஷ்ண்வாக்ய்யம் பரமம் பதம்", "அவிகாராய சுத்தாய நித்யாய பரமாத்மநே" என்னக்கடவதிறே.

**விளக்கம்** - ஹேயம் என்றால் தோஷம் அல்லது தாழ்வுகள் அல்லது குற்றம். "அகிலஹேயம்" என்பதன் மூலம் மூன்றுவிதமான சேதந தோஷங்களும், மூன்றுவிதமான அசேதந தோஷங்களும் கூறப்பட்டன. சூர்ணை (145) - த்ரிவித சேதநாசேதந தோஷமும் ஈச்வரனுக்கு வாராது - என்று இதனை தெளிவாக அருளிச்செய்ய உள்ளார். (தமஸ்ஸுக்கு தேஜஸ்ஸு போலேயும், ஸர்ப்பத்துக்கு கருடனைப் போலேயும்) – தமஸ் என்பதான இருளுக்கு ஒளியானது விரோதமாக உள்ளது போன்றும், ஸர்ப்பத்திற்குக் கருடன் விரோதமாக உள்ல்ளது போன்றும். (விகாராதி தோஷங்கள்) - இதில் உள்ள "விகாரம்" என்பதன் மூலம், மூன்றுவிதமான அசித் வஸ்துக்களுடைய மாற்றங்கள் கூறப்பட்டன; இதில் உள்ல "ஆதி" என்பதன் மூலம், "ஸம்ஸாரத்தில் உள்ள பத்த சேதநர்களுடைய அறியாமை துன்பங்கள், சேற்றிலிருந்து கழுவப்பட்டது போன்றுள்ள முக்தர்களுடைய ப்ரக்ருதி ஸம்பந்தத்திலிருந்து விடுபட்ட நிலை, நித்யர்களுடைய அளவுடன் கூடிய ஸ்வரூபம் மற்றும் அவர்கள் ஸர்வேச்ரனிடம் வசப்பட்டுள்ள நிலை" ஆகியவை கூறப்பட்டன. ஆனால் "வசப்படுதல்" என்பது தோஷம் ஆகுமோ என்றால், புருஷனுக்கு ஸ்தனங்கள் ஏற்படுவது போன்று, சுதந்திரமான ஒருவனுக்குத் தோஷமே ஆகும்.

அத்தகைய தோஷங்களுக்கு எதிர்தட்டாக இருத்தல் என்பது, மாறாமல் உள்ல நிலையாகும். "தோஷங்களுக்கு எதிர்த்தட்டாக உள்ள தன்மை" என்பதன் மூலம் உணர்த்தப்படுவது என்ன? ஸ்ரீவிபு. (6-7-22) – ஆத்மா ஜ்ஞாநமயோமல: - ஆத்மா ஞான ஸ்வரூபன், தோஷம் அற்றவன் - என்தற்கு ஏற்ப ஆத்மாவிற்கு ஸ்வரூபத்தின் விளைவாக ஏற்படக்கூடிய தோஷம் ஏதும் இல்லை என்றாலும், ஒரு சில காரணங்களால் உண்டாகவல்ல தோஷ ஸம்பந்தம் ஏற்படக்கூடும்; ஆனால் இத்தகைய நிலையானது பகவத் ஸ்வரூபத்திற்கு இல்லை என்ற வேறுபாடு இங்கு உணர்த்தப்படுகிறது. ஸ்ரீவிபு. (1-2-15) – தத் ப்ரஹ்ம பரமம் நித்யம் அஜம் அக்ஷயம் அவ்யயம் ஏக ஸ்வரூபம் து ஸதா ஹே அபாவாத் ச நிர்மலம் - எந்த ஒன்று எப்போதும் உள்ளதாகவும், பிறப்பற்றதாகவும், அழிவற்றதாகவும், மாற்றம் அற்றதாகவும், ஒரே போன்று உள்ளதாகவும், எந்த ஒரு நிலையிலும் தாழ்வு இன்றி உள்ளதாகவும், தோஷம் இல்லாததாகவும் உள்ளதோ அதுவே ப்ரஹ்மம் - என்றும், ஸ்ரீவிபு - ஸமஸ்த ஹேய ரஹிதம் விஷ்ண்வாக்யம் பரமம் பதம் - விஷ்ணு என்ற பெயர் கொண்ட உயர்ந்த இடமானது எந்தவிதமான தாழ்வுகளும் அற்றது - என்றும், ஸ்ரீவிபு – அவிகாராய சுத்தாய நித்யாய பரமாத்மநே – குற்றம் அற்றவனாகவும், தூய்மையானவனாகவும், எப்போதும் உள்ளவனாகவும் இருக்கின்ற பரமாத்மா - என்றும் கூறப்பட்டது காண்க.

**வ்யாக்யானம்** – "ஹேய ப்ரத்யநீகத்வமாவது, ஆச்ரிதருடைய ஹேய நிராஸகத்வத்துக்கு அடியான ஹேய ப்ரதிபடத்வமென்னவுமாம்" என்னுமொரு யோஜனையுமுண்டிறே. கத்ய வ்யாக்யாநங்களிலே நஞ்சீயர், ஆச்சான்பிள்ளை முதலான ஆசார்யர்களருளிச் செய்தது. (ஸர்ப்பத்துக்கு கருடனைப் போலேயும்) என்கிற த்ருஷடாந்தத்தாலே, அதுவும் இவ்விடத்துக்கு அர்த்தமானாலோ? என்னில், "விகாராதி தோஷங்களுக்கு ப்ரதிபடமாயிருக்கை" என்கையாலே, இவ்விடத்தில் இவர்க்கது விவக்ஷிதமன்று.

**விளக்கம்** - "ஹேயப்ரத்யநீகத்வம்" என்பதற்கு "அடியார்களுடைய தாழ்வுகளைப் போக்குவதற்குக் காரணமாக உள்ளதான, தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாக உள்ள தன்மை" என்றும் பொருள் கொள்ளலாம்; இப்படியாக அல்லவோ கத்ய வ்யாக்யானத்தில் ஸ்வாமி நஞ்ஜீயரும் ஆச்சான்பிள்ளையும் அருளிச்செய்தனர் என்று கேட்கலாம். "ஸர்ப்பத்துக்கு கருடனைப் போலேயும்" என்ற உதாரணம் மூலம் அத்தகைய கருத்தை இங்கும் ஏற்கலாம் அல்லவோ என்று கேட்கலாம். ஆனால் மாற்றங்கள் என்பது போன்ற தோஷங்களுக்கு

எதிர்த்தட்டாக உள்ள தன்மை என்பதே இங்கு கூறப்படுவதால்,இவர்க்கு இந்தக் கருத்து இல்லை என்றாகிறது.

143. அநந்தனாகையாவது நித்யனாய், சேதநாசேதநங்களுக்கு வ்யாபகனாய், அந்தர்யாமியாயிருக்கை.

**அவதாரிகை** – அநந்தரம், அநந்தத்வத்தை யுபபாதிக்கிறார் (அநந்தனாகையாவது) என்று தொடங்கி.

**விளக்கம்** - அடுத்ததாக, எல்லையற்ற அல்லது அளவிட இயலாத தன்மையை விளக்குகிறர்.

**வ்யாக்யானம்** - அநந்தத்வமாவது தேசத: காலதோ வஸ்துதச்ச அபரிச்சேத்யத்வம்; விபுத்வாத் தேச பரிச்சேத ராஹித்யம்; நித்யத்வாத் கால பரிச்சேத ராஹித்யம், ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களுக்கும ப்ரகாரியாயிருக்கையாலும், தனக்கு ப்ரகார்யந்தரமில்லாதபடி நிற்கையாலும், ஸத்ருச வஸ்து அபாவத்தாலே வஸ்து பரிச்சேத ராஹித்யம்; அத்தை அருளிச்செய்கிறார் “நித்யனாய், சேதநாசேதநங்களுக்கு வ்யாபகனாய், அந்தர்யாமியாயிருக்கை” என்று.

**விளக்கம்** -“அநந்தமாக உள்ள தன்மை” என்பதால் “இடம், காலம் மற்றும் பொருள்” ஆகியவற்றால் அளவுபடுத்தப்படாமல் உள்ள நிலை கூறப்பட்டது. “எங்கும் உள்ள தன்மை” என்பதன் மூலம், இடம் என்பதால் அளவுபடுத்தப்படாமலும்; “எப்போதும் உள்ள தன்மை” என்பதன் மூலம், காலத்தால் அளவுபடுத்தப்படாமலும்; தன்னைத் தவிர உள்ள மற்ற அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளதாலும், தனக்கு ஓர் ஆத்மா என மற்றொரு வஸ்து இல்லாததாலும், தனக்கு நிகரான வஸ்து இன்றி உள்ளதாலும், வஸ்துவைக் கொண்டு அளவுபடுத்தப்படாமலும் உள்ள தன்மைகள் வெளிப்படுகின்றன. இதனையே “நித்யனாய், சேதநாசேதநங்களுக்கு வ்யாபகனாய், அந்தர்யாமியாயிருக்கை” என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** இத்தால், நித்யனாகையாலே “இன்ன காலத்திலுள்ளான், காலந்தரத்தில் இல்லை”யென்கிற கால பரிச்சேதமின்றியிலே; ஸகல சேதநாசேதநங்களுக்கும் வ்யாபகனாய்க் கொண்டு விபுவாயிருக்கையாலே, “இன்ன தேசத்திலுள்ளான், தேசாந்தரத்திலில்லை”யென்கிற தேச பரிச்சேதமின்றியிலே; ஸர்வாந்தர்யாமியாகையாலே ஸர்வத்துக்கும் தான் ப்ரகாரியாய், தனக்கு ப்ரகார்யந்தரமில்லாதபடியிருக்கையாலே, இன்ன வஸ்து போலேயென்கிற வஸ்து பரிச்சேதமுமின்றியிலே யிருக்கையென்றதாயிற்று. “நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம்”, “அந்த: ப்ரவிஷ்டச் சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா”, “யஸ்யாத்மா சரீரம், யஸ்ய ப்ருதிவீ சரீரம்”, “ந தத் ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே” என்னக்கடவதிறே.

**விளக்கம் -** நித்யமாக உள்ளதால், “இன்ன காலத்தில் உள்ளான், வேறு ஒரு காலத்தில் இல்லை” என்பதான காலத்தால் அளவுபடுதல் இல்லை என்றாயிற்று. அனைத்து சேதந அசேதநங்களிலும் இவன் நிறைந்துள்ளதால், “எங்கும் உள்ளவன்” என்ற நிலை காரன்ணமாக, “இன்ன இடத்தில் உள்ளான், வேறு ஓர் இடத்தில் இல்லை” என்பதான இடத்தால் அளவுபடுதல் இல்லை என்றாயிற்று. அனைத்திற்கும் அந்தர்யாமியாக உள்ளதால், அனைத்திற்கும் தான் ஆத்மாவாகவும், தனக்கென்று எந்த ஒரு நியமிப்பவனும் இல்லை என்பவனாகவும் உள்ளதால் “இன்ன பொருள் போன்று உள்ளான்” என்பதான பொருள் மூலம் அளவுபடுதல் இல்லை என்றாயிற்று. முண். (1-1-6) – நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் - நித்யமாகவும், எங்கும் உள்ளவனாகவும், எப்போதும் உள்ளவனாகவும் – என்றும், தை. ஆர. (3-11) - அந்த: ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம் – அனைவருக்கும் உள்ளே புகுந்து, அனைத்தையும் நியமித்தபடி – என்றும், ப்ரு. (3-7-22) - யஸ்யாத்மா சரீரம், யஸ்ய ப்ருதிவீ சரீரம் – யாருக்கு இந்த ஆத்மா சரீரமோ, யாருக்கு இந்த ப்ருதிவீ சரீரமோ – என்றும், ச்வே. (6-8) - ந தத் ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே - அவனுக்குச் சமமாகவோ விஞ்சியதாகவோ எதுவும் காணப்படவில்லை – என்றும் கூறப்பட்டது.

144. அந்தர்யாமியானால் தோஷங்கள் வாராதோ வென்னில்;

**பொருள் -** அந்தர்யாமியாக இருந்தால் தோஷங்கள் ஏற்படாதோ?

**அவதாரிகை** - இவற்றோடு தானொட்டற்றிருக்கையன்றிக்கே, அந்தர்யாமிதயா அவஸ்திதனாயிருக்குமாகில், தத்கத தோஷங்கள் வாராதோ? என்கிற சங்கையை அநுவதிக்கிறார் "அந்தர்யாமியானால் தோஷங்கள்வென்னில்" என்று.

**விளக்கம் -** இத்தகைய சித் மற்றும் அசித் வஸ்துக்களுடன் ஸர்வேச்வரன் ஒட்டாமல் உள்ளான் என்ற நிலை இன்றி, அவற்றின் அந்தர்யாமியாக உள்ளான் என்னும்போது, அவற்றின் தோஷங்கள் அவனுக்கு ஏற்படாதோ என்ற சந்தேகத்தைத் தானே எழுப்பிக் கொள்கிறார்.

145. சரீரகதங்களான பால்யாதிகள் ஜீவாத்மாவுக்கு வாராதாப்போலே, த்ரிவித சேதநாசேதந தோஷமும் ஈச்வரனுக்கு வாராது.

**அவதாரிகை** - அத்தைப் பரிஹரிக்கிறார் "சரீரகதங்களான" என்று தொடங்கி.

**விளக்கம் -** அந்தச் சந்தேகத்தை விலக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இந்த சரீரத்தை அதிஷ்ட்டித்து ஸ்வாதீநமாக நிர்வஹித்துக் கொண்டிரா நிற்கச் செய்தேயும, தத்கதமான பால்ய யௌவநாதி விகாரங்கள் ததந்தர் வர்த்தியான ஜீவாத்மாவுக்கு வாராதாப் போலே, த்ரிவித சேதநாசேதநங்களுக்கும் அந்தர்யாமியாய், இவற்றை சரீரமாகக் கொண்டு இரா நிற்கச் செய்தேயும், தத்கத தோஷம் ஈச்வரனுக்கு வாராது என்கை. "ஆவி சேருயிரினுள்ளாலாதுமோர் பற்றிலாத பாவனையதனைக் கூடிலவனையுங் கூடலாமே" என்றிறே ஆழ்வாருமருளிச்செய்தது. சரீரியான ஜீவாத்மாவுக்கு சரீரகதங்களான பால்யாதிகள் வந்ததில்லையேயாகிலும், சரீர ஸம்பந்த நிபந்தநமாக துக்க அஜ்ஞாநாதிகள் வருகிறவோபாதி, சரீர பூதமான விவற்றோட்டை ஸம்பநதத்தாலே இவனுக்குமிங்ஙனே சில தோஷங்கள் வாராதோ? என்னில்; வாராது, அதுக்கடி ப்ரவேச ஹேது விசேஷம்; இவனைப் போலே கர்மமடியாகவன்றிக்கே, அநுக்ரஹமடியாகவிறே அவனுக்கு இவற்றில் ப்ரவேசமிருப்பது. "அநச்நந்நந்ய:", "ஏஷ ஸர்வ பூதாந்தராத்மா அபஹதபாப்மா", "விஷ்ணவே ஸர்வ ஜிஷ்ணவே" என்னா நின்றதிறே.

**விளக்கம் -** ஒரு ஜீவாத்மா இந்த உடலைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டு தனது உடைமையாக வைத்து நியமித்தபடி உள்ளான். ஆயினும் சரீரத்திற்கு ஏற்படுகின்ற குழந்தைப் பருவம், வாலிபப் பருவம் போன்ற பலவிதமான மாற்றங்கள், அதன் உள்ளே இருக்கின்ற ஜீவாத்மாவிற்கு ஏற்படுவதில்லை. இதனைப் போன்றே, மூன்றுவிதமான சேதந அசேதங்களுக்கு அந்தர்யாமியாக ஸர்வேச்ரன் உள்ளபோதிலும், அவற்றைத் தனது சரீரமாகக் கொண்டுள்ளபோதிலும், அந்தந்த வஸ்துக்களுடைய தோஷங்கள், அவனைப் பற்றாது என்று கருத்து. திருவாய்மொழி (3-4-10) – ஆவி சேர் உயிரின் உள்ளால் ஆதும் ஓர் பற்றிலாத பாவனை அதனைக் கூடில் அவனையுங் கூடலாமே - என்று அல்லவோ ஆழ்வார் அருளிச்செய்தார்? “சரீரத்தைக் கொண்டவனாகிய ஜீவாத்மாவிற்கு, அந்தச் சரீரத்தில் ஏற்படுகின்ற குழந்தைப்பருவம் போன்ற மாற்றங்கள் ஏதும் ஏற்படுவதில்லை; ஆயினும், சரீரத்தின் ஸம்பந்தம் காரணமாக, துக்கம் மற்றும் அஜ்ஞானம் போன்றவை ஏற்படுகின்றன; இதே போன்று தனது சரீரங்களான இவற்றுடன் கொண்ட ஸம்பந்தம் காரணமாக, இத்தகைய தோஷங்கள் ஸர்வேச்வரனுக்கு ஏற்படாதோ?”, என்று கேட்கலாம்; இதற்கு விடை அளிக்கிறார். உண்டாகாது; இதன் காரணம், அந்தந்த சரீரங்களில் இவன் புகுந்து நிற்பதன் காரணத்தில் உள்ள சிறப்பே ஆகும். ஜீவாத்மாவைப் போன்று கர்மம் காரணமாக இவன் இவற்றில் புகுந்து நிற்பதில்லை. தனது கருனை காரணமாகவே இவன் இவ்விதம் உள்ளான். ச்வே. (4-6) - அநச்நந்நந்யோ - பிரிக்க முடியாத இரண்டு பறவைகள் - என்றும், ஸுபால. (7-1) - ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா -அவன் அனைத்து பூதங்களுடைய ஆத்மா ஆவான்; பாபங்கள் ஏதும் அற்றவனான் - என்றும், ஸ்ரீவிபு. (1-2-1) – விஷ்ணவே ஸர்வ ஜிஷ்ணவே - அனைவரையும் வெல்பவன் விஷ்ணு - என்றும் கூறியது காண்க.

146. ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாகையாவது, ஆநந்தரூப ஜ்ஞாநனாயிருக்கை.

**அவதாரிகை -** அநந்தரம், ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபத்வத்தை உபபாதிக்கிறார் “ஜ்ஞாநாநந்த” இத்யாதியாலே.

**விளக்கம் -** அடுத்து, ஞானம் மற்றும் ஆனந்தம் ஆகியவற்றை ஸ்வரூபமாகக் கொண்ட தன்மையைஅருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** ஜ்ஞாநாநந்தங்களையே ஸ்வரூபமாகவுடையனாயிருக்கை என்று, சப்தத்துக்கு அர்த்தம் சொல்லவேண்டியிருக்க, ஜ்ஞாநமென்றும் ஆநந்தமென்றும் பிரித்துச் சொல்ல, இரண்டவஸ்த்தையின்றிக்கே ஜ்ஞாநமே ஸ்வரூபமாய், அதுதான் அநுகூலமா யிருக்கை ஆனந்தமாகையாலே, ஆநந்தரூப ஜ்ஞாநனாயிருக்கை என்றருளிச் செய்கிறார். "அநுகூல ஜ்ஞாநமே ஸ்வரூபமாயிருக்க ஜ்ஞாநாநந்தங்களென்று பிரித்துச் சொல்லுகிறது, இரண்டுமுண்டாகைக்காக", என்றிறே இவர்தாமிட்டருளின கத்யவ்யாக்யாநத்திலே யருளிச்செய்தது.

**விளக்கம் -** ஞான ஆனந்தங்களையே தனது ஸ்வரூபமாக்கிக் கொண்டவன் என்பதாக இதனை ஒரு சொல்லாகவே கொண்டு பொருள் உரைக்கவேண்டும்; அதாவது "ஞானம் மற்றும் ஆனந்தம்" என்று இரண்டாகப் பிரித்துப் பொருள் கொள்ளவேண்டிய நிலை இன்றி, ஞானமே ஸ்வரூபமாக, அத்தகைய ஞானமானது ஏற்புடையதாக உள்ளதால் ஆனந்தமாகவும் உள்ளதால், "ஆனந்தரூப ஞானம் கொண்டவனாக உள்ளான்" என்று அருளிச்செய்கிறார். இவர் கத்ய வ்யாக்யானத்தில், "அநுகூல ஜ்ஞாநமே ஸ்வரூபமாயிருக்க ஜ்ஞாநாநந்தங்களென்று பிரித்துச் சொல்லுகிறது, இரண்டும் உண்டாகைக்காக - அநுகூலஞானம் என்பதே ஸ்வரூபமாக உள்ளது; ஆயினும் ஞானம் மற்றும் ஆனந்தம் என்று ஏன் பிரித்துக் கூறப்பட்டது என்றால், இரண்டும் உள்ளது என்று உணர்த்தவே ஆகும்", என்று அருளிச்செய்தது காணலாம்.

147. அதாவது, கட்டடங்கவநுகூலமாய், ப்ரகாசமுமாயிருக்கை.

**அவதாரிகை –** "ஆநந்தரூப ஜ்ஞாநனாயிருக்கை" என்றது தன்னை உபபாதிக்கிறார், "அதாவது" இத்யாதியாலே.

**விளக்கம் -** கடந்த சூர்ணையை மேலும் விளக்குகிறார்.

**வ்யாக்யானம் –** கட்டடங்கவென்றது, ஸ்வரூபமுள்ள பரப்பெங்கும் என்றபடி. இத்தால், ஸ்வரூபத்தில் அநநுகூலமாயாதல், அப்ரகாசமாயாதலிருக்குமிட மில்லையென்கை. ஜ்ஞாநாநந்த ஏக ஸ்வரூபனென்றவிதில் ஏக சப்தார்த்தமிதுவிறே. அநுகூலத்வமாவது, ஆஹ்லாதகரத்வம். ப்ரகாசத்வமாவது, ஸ்வயம்ப்ரகாசத்வம். "அநந்யாதீந

ப்ரகாசத்வாஹ்லாதகரத்வ ரூப ஜ்ஞாநமேவ யஸ்ய ஸ்வரூபம், ஸ ஹி ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூப” என்னக்கடவதிறே.

**விளக்கம்** - “கட்டங்க” என்றால், “அவனுடைய ஸ்வரூபம் உள்ள அனைத்திலும்” என்பதாகப் பொருள். இதன் மூலம் ஸ்வரூபத்தில் ஏற்புடைய தன்மை இல்லாமல் உள்ளது அல்லது ப்ரகாகம் இன்றி உள்ளது என்பதான நிலைகள் இல்லை என்று கூறப்பட்டது. “ஜ்ஞாநாநந்த ஏக ஸ்ரூபன்” என்பதில் உள்ள “ஏகம்” என்பதற்கு இதுவே கருத்தாகிறது. “ஏற்புடைய தன்மை” என்றால், “இன்பம் அளிக்கவல்லதாக உள்ளது” என்பதாகும். “ப்ரகாசிக்கும் தன்மை” என்றால், “தானே ஒளிர்தல்” என்பதாகும். ஸ்ரீவிபு. – அநந்ய அதீந ப்ரகாசத்வ ஆஹ்லாதகரத்வ ரூப ஜ்ஞாநம் ஏவ யஸ்ய ஸ்வரூபம், ஸ ஹி ஜ்ஞாநாநந்த ஏக ஸ்வரூப - வேறு ஒன்றை அண்டி நிற்காத ப்ரகாசத்தன்மை மற்றும் இன்பமாக உள்ள ஞானம் ஆகியவை யாருக்கு ஸ்வரூபமோ, அவன் ஞான ஆநந்தத்தை ஸ்வரூபமாகக் கொண்டவன் - என்பது காண்க.

148. இவனுடைய ஜ்ஞாந சக்த்யாதி கல்யாணகுணங்கள் நித்யங்களாய், நிஸ்ஸீமங்களாய், நிஸ்ஸங்க்யங்களாய், நிருபாதிகங்களாய், நிர்த்தோஷங்களாய், ஸமாநாதிக ரஹிதங்களாயிருக்கும்.

**அவதாரிகை** - இப்படி, ஸ்வரூப வைலக்ஷண்யத்தை யுபபாதித்த வநந்தரம், ஸ்வரூபாச்ரிதமான குணங்களினுடைய வைலக்ஷண்யத்தை யருளிச்செய்கிறார் “இவனுடைய ஜ்ஞாந சக்த்யாதி கல்யாணகுணங்கள்” என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக ஸர்வேச்வரனுடைய ஸ்வரூப மேன்மையை விரிவாக அருளிச்செய்த பின்னர், அத்தகைய ஸ்வரூபத்தை அண்டி நிற்கும் குணங்களுடைய மேன்மையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ஆதிசப்தத்தாலே, பல ஐச்வர்ய வீர்ய தேஜஸ்ஸுக்களும், வாத்ஸல்யாதிகளும், சௌர்யாதிகளுமாகிற குணவிசேஷங்களெல்லாவற்றையும் சொல்லுகிறது. (நித்யங்களாகையாவது) உத்பத்தி விநாச ரஹிதங்களாயிருக்கை. ஸ்வரூபாநுபந்திகளாகையாலே, யாவதாச்ரய பாவிகளாயிருக்குமிறே. “த இமே ஸத்யா:

காமா:” என்று குணங்களினுடைய நித்யத்வம் ச்ருதிஸித்தம். “காம்யந்த இதி காமா: கல்யாணகுணா: த இமே ஸத்யா: நித்யா இத்யர்த்த:” என்றிறே இந்த ச்ருதிக்கர்த்தம். “ஈறில வண்புகழ்” என்றாரிறே ஆழ்வார்.

**விளக்கம் -** “சக்த்யாதி” என்பதில் உள்ள “ஆதி” என்பதன் மூலம் பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் போன்றவையும், வாத்ஸல்யம் போன்றவையும், சௌர்யம் போன்றவையும் என பல குணங்களுடைய சிறப்புகள் அனைத்தும் கூறப்பட்டன. (நித்யங்களாய்) – நித்யங்கள் என்றால், உற்பத்தி மற்றும் அழிவு அற்ற தன்மை. இத்தகைய குணங்கள் அனைத்தும் அவனுடைய ஸ்வரூபத்தை அண்டியபடி உள்ளதால், எப்போதும் உள்ளவை என்றாகின்றன. சாந்தோக்ய உபநிஷத் - த இமே ஸத்யா: காமா: - அவை ஸத்யமாகவும், எப்போதும் விரும்பப்படுபவையாகவும் உள்ளவை ஆகும் – என்பதாக, ச்ருதிகளில் குணங்களுடைய நித்யமான தன்மை கூறப்பட்டது. “காம்யந்த இதி காமா: கல்யாணகுணா: த இமே ஸத்யா: நித்யா இத்யர்த்த: - விரும்பப்படுவதால் காமம் என்று அந்தக் குணங்கள் கூறப்பட்டன. அவை ஸத்யம் என்பதன் மூலம், எப்போதும் உள்ளவை என்று கூறப்பட்டது – என்பதாகவே இந்த ச்ருதிக்குப் பொருள் கொள்ளவேண்டும். திருவாய்மொழி (1-2-10) – ஈறில வண்புகழ் - என்று ஆழ்வார் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** (நிஸ்ஸீமங்களாகையாவது) ஒரொன்றே அவதி காணவொண்ணா திருக்கை. “யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ” என்று, மீண்டுவிட்டதிறே ஆநந்தகுணத்தையெல்லை காணப்புக்க வேதம். இது, ஆநந்தகுண மொன்றிலுமன்றிறே; குணங்களெல்லாம் இப்படியேயிறே இருப்பது. “உபர்யுபர்யப்ஜபுவோபி பூருஷாந் ப்ரகல்ப்ய தே யே சதமித்யநுக்ரமாத், கிரஸ் த்வதேகைக குணாவதீப்ஸயா ஸதா ஸ்த்திதா நோத்யமதோதிசேரதே” என்னக்கடவதிறே. “உயர் நலம்” என்றிறே ஆழ்வாரும் அருளிச்செய்தது.

**விளக்கம் -** (நிஸ்ஸீமங்களாய்) - அந்த ஒவ்வொரு குணமும் எல்லையற்றதாகவே உள்ளது. தை. (2-8) – யதோ வாசோ நிவர்த்தந்தே | அப்ராப்ய மநஸா ஸஹ – அவனுடைய ஆனந்தத்தை அளவிட இயலாதபடி வாக்கும் மனமும் திரும்பின – என்பதாக அவை திரும்பின அல்லவோ? ஆனந்த குணத்தின் எல்லை காணச் சென்ற வேதத்தின் நிலை இதுவாகும். ஆனால் இத்தகைய நிலையானது, ஆனந்த குணம் ஒன்றில் மட்டுமே அல்ல;

அனைத்து குணங்களும் இவ்விதமாகவே உள்ளன. ஸ்தோத்ரரத்னம் (19) – உபரி உபரி அப்ஜபுவி: அபி பூருஷாந் ப்ரகல்ப்ய தே யே சதம் இதி அநுக்ரமாத் கிரஸ் த்வத் ஏகைக குண அவதி ஈப்ஸயா ஸதா ஸ்த்திதா: ந உந்யமத: அதிசேரதே – வேத வாக்கியங்கள் மேலும் மேலும் நான்முகன் போன்றவர்களை மனிதர்களாகக் கற்பனை செய்து, "இதை விட நூறு மடங்கு, இதை விட நூறு மடங்கு" என்று அடுக்கிக் கொண்டே செல்கின்றன; அவை உனது ஒவ்வொரு குணத்தின் எல்லையைக் காண்வேண்டும் என்ற ஆர்வத்தில் உள்ளன. எனவே அவை தொடக்க எல்லையைக் கடந்து அப்பால் செல்வதில்லை - என்பது காண்க. திருவாய்மொழி (1-1-1) – உயர் நலம் - என்பதாக ஆழ்வார் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - (நிஸ்ஸங்க்யங்களாகையாவது) இப்படிப்பட்ட குணங்கள்தான் எண்ணிறந்திருக்கை. "யதா ரத்நாநி ஜலதேர ஸங்க்யேயாநி புத்ரக, ததா குணா ஹ்யநந்தஸய அஸங்க்யேயா மஹாத்மந:", "வர்ஷாயுதைர் யஸ்ய குணா நசக்யா வக்தும் ஸமேதைரபி ஸர்வலோகை: மஹாத்மநச் சங்கசக்ராஸிபாணே: விஷ்ணோ ஜிஷ்ணோ வஸுதேவாத்மஜஸ்ய", "சதுர்முகாயுர்யதி கோபிவக்தா பவேந் நர: க்வாபி விசுத்தசேதா: ஸதே குணா நாமயுதைகமம்சம் வதேந் ந வா தேவவர ப்ரஸீத", "நஹி தஸ்ய குணாஸ் ஸர்வே ஸர்வைர் முநிகணைரபி, வக்தும் சக்யா வியுக்தஸ்ய ஸத்வாத்யைரகிலைர் குணை:" என்னக் கடவதிறே. "எண்ணில் தொல்புகழ்" என்றாரிறே ஆழ்வாரும். "யேஷ்வே கஸ்ய குணஸ்ய விப்ருடபி வை லோகோத்தரம் ஸ்வாச்ரயம் குர்யாத் தாத்ருச வைபவைரகணிதைர் நிஸ்ஸீம பூமாந்விதை: நித்யைர் திவ்யகுணைஸ் ததோதிக சுபத்வை காஸ்பத ஆத்மாச்ரயை: இத்தம் ஸுந்தரபாஹும் அஸ்மி சரணம் யாதோ வநாதரீச்வரம்" என்கிற ச்லோகத்திலே குணங்களினுடைய நித்ய நிஸ்ஸீம நிஸ்ஸங்க்யத்வங்களை யருளிச் செய்தாரிறே ஆழ்வான்.

**விளக்கம்** - (நிஸ்ஸங்க்யங்களாய்) - இப்படிப்பட்ட குணங்கள், எண்ணற்றவையாக உள்ளன. யதா ரத்நாநி ஜலதேர ஸங்க்யேயாநி புத்ரக, ததா குணா ஹ்யநந்தஸய அஸங்க்யேயா மஹாத்மந: – ஸமுத்ரத்தில் உள்ள இரத்தினங்களுடைய எண்ணிக்கை எவ்விதம் எண்ண இயலாதபடி உள்ளனவோ அதே போன்று மஹாத்மாவாகிய அவனுடைய குணங்களும் எண்ணற்றவையாக உள்ளன – என்றும், மஹாபாரதம் - வர்ஷாயுதைர் யஸ்ய குணா நசக்யா வக்தும் ஸமேதைரபி ஸர்வலோகை: மஹாத்மநச் சங்கசக்ராஸிபாணே: விஷ்ணோ ஜிஷ்ணோ வஸுதேவாத்மஜஸ்ய - பரமாத்மாவும், சங்கு சக்கரம் வாள் போன்றவற்றைத் தனது திருக்கரங்களில் கொண்டவனும், வெற்றி

நிறைந்தவனும், வஸுதேவருடைய புத்ரனும், எங்கும் நிறைந்துள்ளவனும் ஆகிய விஷ்ணுவின் கல்யாணகுணங்களை, அனைத்து லோகத்தில் உள்ள அனைவரும் சேர்ந்து நின்று துதித்தாலும், பதினாயிரம் ஆண்டுகள் கடந்தாலும் துதிப்பதற்கு இயலாது - என்றும், வராஹபுராணம் - சதுர்முகாயுர்யதி கோபிவக்தா பவேந் நர: க்வாபி விசுத்தசேதா: ஸதே குணா நாமயுதைகமம்சம் வதேந் ந வா தேவவர ப்ரஸீத - நான்முகனுடைய ஆயுள் கொண்டவனும், கோடிக்கணக்கான நாக்குகள் கொண்டவனும், மிகுந்த தூய்மையாக உள்ளவனும் ஆகிய ஒருவன், உமது குணங்களில் பதினாயிரத்தில் ஒரு பகுதியையாவது கூறி முடிப்பானோ என்று அறியமாட்டான் – என்றும், நஹி தஸ்ய குணாஸ் ஸர்வே ஸர்வைர் முநிகணைரபி, வக்தும் சக்யா வியுக்தஸ்ய ஸத்வாத்யைரகிலைர் குணை: - அனைத்து குணங்களால் நிறைந்து விளங்கும் பரமாத்மாவின் அனைத்து குணங்களையும் முனிவர்கள் கூட்டத்தாலும் முழுமையாகக் கூற இயலாது - என்றும் கூறப்பட்டது அலல்வோ? திருவாய்மொழி (3-3-5) – எண்ணில் தொல்புகழ் – என்று ஆழ்வார் அருளிச்செய்தார். ஸ்வாமி கூரத்தாழ்வன் ஸுந்தரபாஹு ஸ்தவத்தில் (26) - யேஷ்வே கஸ்ய குணஸ்ய விப்ருடபி வை லோகோத்தரம் ஸ்வாச்ரயம் குர்யாத் தாத்ருச வைபவைரகணிதைர் நிஸ்ஸீம பூமாந்விதை: நித்யைர் திவ்யகுணைஸ் ததோதிக சுபத்வை காஸ்பத ஆத்மாச்ரயை: இத்தம் ஸுந்தரபாஹும் அஸ்மி சரணம் யாதோ வநாதரீச்வரம் – ஸர்வேச்வரனுடைய குணங்களில் ஒவ்வொரு குணத்தின் ஒரு சிறிய பாகம் கூட, வாக்கால் முழுமையாக உரைக்க இயலாதபடி உள்ளதாகும்; அந்தக் குணங்கள் தங்களுடைய பகுதியின் ஒரு சிறிய அளவில் மட்டுமே அவனுடன் ஸம்பந்தம் கொண்டதாக இருந்தாலும், தங்களுடைய இருப்பிடமான அவனை வெளிப்படுத்தவல்ல திறன் கொண்டதாகவே உள்ளன; இப்படிப்பட்ட குணங்கள் எண்ணற்றவை ஆகும்; அவை நித்யமாகவும் உள்ளன; இப்படிப்பட்டவனும், திருமாலிருஞ்சோலையில் அழகான திருத்தோள்கள் கொண்டவனும் ஆகிய கள்ளழகரை நான் சரணம் அழைகிறேன் - என்றார்; இந்த ச்லோகத்தில் அவனுடைய குணங்களின் நித்யமாக உள்ள தன்மை, எல்லையற்ற தன்மை மற்றும் எண்ணற்ற தன்மை ஆகிய பலவற்றையும் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** – (நிருபாதிகங்களாகையாவது) பரதந்த்ர வஸ்து கதங்களாகையாலே, ஸ்வோதயாதிகளிலே ஈச்வர இச்சையாகிற உபாதியையபேக்ஷித்திருக்கும் சேதந குணங்கள் போலன்றிக்கே, ஸ்வாபாவிகங்களாயிருக்கை. ஸ்ரீபாஷ்யத்தில், "ஸ்வபாவதோ நிரஸ்த நிகிலதோஷாநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாணகுணகண புருஷோத்தமோபி கீயதே" என்கிறவிடத்துக்கு வ்யாக்க்யாநம் பண்ணுகிற ச்ருதப்ரகாசிகாகாரர்,

அநவதிகாதிசய பதத்தாலே நித்யஸித்தரை வ்யாவர்த்திக்கிறதென்று முந்துறவொரு யோஜநை பண்ணி, “அநுஷக்தேந ஸ்வபாவத இதி பதேநவா நித்யஸித்த்வ்யாவ்ருத்தி: தேஷாம் தாத்ருச குணகத்வம் ஹி பகவந் நித்யேச்சாதீநம்” எனறு அநந்தர யோஜநையிலே யிவ்வர்த்தத்தை யருளிச் செய்தாரிறே. “ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பல க்ரியாச” என்று குணங்களினுடைய ஸ்வாபாவிகத்வத்தை ச்ருதி சொல்லா நின்றதிறே. இந்த ச்ருதியில் க்ரியையென்கிறது நியமநத்தை. “பராஸ்யேதி ஜ்ஞாந சக்த்யாதீநாம் ஸ்வாபாவிகத்வ முக்தம், க்ரியா நியமநம்” என்றே இதுக்கும் ச்ருதப்ரகாசிகாகாரர் வ்யாக்க்யாநம் பண்ணிற்று.

**விளக்கம் -** (நிருபாதிகங்களாய்) – ஸர்வேச்வரனுக்கு பரவசப்பட்ட வஸ்துக்கள் என்பதால், நம்முடைய பிறப்பு இருப்பு போன்றவற்றில் நாம் ஸர்வேச்வரனுடைய இச்சையை எப்போதும் எதிர்பார்த்தபடி உள்ளோம். இப்படிப்பட்ட சேதந குணங்கள் போன்று அல்லாமல், இந்தக் குணங்கள் இவனிடம் இயல்பாகவே உள்ளவை ஆகும். ஸ்ரீபாஷ்யத்தில் உள்ள, “ஸ்வபாவதோ நிரஸ்த நிகிலதோஷ: அநவதிகாதிசய அஸங்க்யேய கல்யாணகுணகண: புருஷோத்தம: அபி தீயதே – இயல்பாகவே தோஷங்கள் ஏதும் அற்றவனும், அளவிட இயலாத உயர்ந்த எண்ணற்ற இனிமையான மங்களகரமான குணங்களைக் கூட்டமாக உடையவனும் ஆகிய புருஷோத்தமனே ப்ரஹ்மம் என்ற பதத்தால் கூறப்படுகிறான்”, என்ற இடத்திற்கு பாஷ்யம் இட்ட ச்ருதிப்ரகாசிகாசார்யர், ‘அநவதிக அதிசய - எல்லையற்ற வியப்பு” என்பதன் மூலம், நித்யஸூரிகள் வேறுபடுத்தப்படுகின்றனர் என்று முதலில் உரைத்து, பின்னர் ச்ருதப்ரகாசிகையில் “அநுஷக்தேந ஸ்வபாவத இதி பதேநவா நித்யஸித்த்வ்யாவ்ருத்தி: தேஷாம் தாத்ருச குணகத்வம் ஹி பகவந் நித்யேச்சாதீநம் - பின்னர் இணைக்கப்பட்ட ஸ்வபாவத என்ற பதம் மூலம் நித்யஸூரிகள் வேறுபடுத்தப்பட்டு கூறப்படுகின்றனர்; அவர்களுக்கு அத்தகைய குணங்கள் உள்ளதற்கு பகவானுடைய விருப்பமே காரணமாக உள்ளது” என்று வேறு ஒரு விதத்தில் இத்தகைய வேறுபாட்டை விளக்கினார். ச்வேதாஸ்வதரத்தில் – ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பல க்ரியா ச - ப்ரஹ்மத்திற்கு ஞானம், பலம் மற்றும் செய்கை ஆகியவை இயல்பாகவே உள்ளது – எனப்பட்டது; இந்த ச்ருதியில் உள்ள “க்ரியா” என்பது செய்தலைக் குறிக்கும் - என்றது காண்க. இதனையும் ச்ருதிப்ப்ரகாசிகையில், “பராஸ்யேதி ஜ்ஞாந சக்த்யாதீநாம் ஸ்வாபாவிகத்வ முக்தம், க்ரியா நியமநம் – ஞானம், சக்தி போன்ற பலவும் இயல்பாகவே உள்ளது; க்ரியை என்பது நியமித்தல்” என்பதாக ச்ருதிப்ரகாசிகாகாரர் வ்யாக்யானம் செய்தருளினார்.

**வ்யாக்யானம்** – நிர்தோஷங்களாகையாவது, ஹேய குண ஸமஸர்கமாகிற தோஷமின்றிக்கேயிருக்கை. “அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யும் விசோக: விஜிகத்ஸ: அபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:”, “ஸத்வாதயோ ந ஸந்தீசே யத்ர ச ப்ராக்ருதா குணா:”, “ஜ்ஞாந சக்தி பலைச்வர்ய வீர்ய தேஜாம்ஸ்யசேஷத | பகவச் சப்தவாச்யாநி விநா ஹேயை: குணாதிபி:”, “தேஜோ பலைச்வர்யமஹாவபோதஸு வீர்ய சக்த்யாதி குணைகராசி | பர: பராணாம் ஸகலா நயத்ர க்லேசாதயஸ்ஸந்தி பராவரேசே” என்கிறபடியே, ஆச்ரயம் ஹேயப்ரத்யநீகமாகையாலே, இவற்றுக்கு ஹேய குண ஸம்ஸர்க தோஷாபததிக்கு யோக்யதையில்லையிறே.

**விளக்கம்** - (நிர்தோஷங்களாய்) - தாழ்ந்த குணங்களுடைய சேர்க்கை என்பதான குற்றம் இன்றி இருத்தல். சாந். (8-1-5) – அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யும் விசோக: விஜிகத்ஸ: அபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: - பாபங்கள் அற்றவன், வயோதிகம் அற்றவன், மரணம் அற்றவன், சோகம் அற்றவன், பசி மற்றும் தாகம் அற்றவன், விருப்பங்களை அடையப்பெற்றவன், ஸத்யஸங்கல்பன் – என்றும், ஸத்வாதயோ ந ஸந்தீசே யத்ர ச ப்ராக்ருதா குணா: - அனைவரையும் நியமிக்கின்ற பகவானிடம், ஸத்வம் போன்ற ப்ரக்ருதி குணங்கள் இல்லை - என்றும், ஸ்ரீவிபு. (6-5-79) - ஜ்ஞாந சக்தி பலைச்வர்ய வீர்ய தேஜாம்ஸ்யசேஷத | பகவச் சப்தவாச்யாநி விநா ஹேயை: குணாதிபி: - ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம் மற்றும் தேஜஸ் போன்ற குணங்கள் அனைத்தும் பகவான் என்ற சொல்லால் கூறப்படுகிறது; இதில் தாழ்ந்தது ஏதும் இல்லை – என்றும், ஸ்ரீவிபு. (6-5-85) - தேஜோ பலைச்வர்யமஹாவபோதஸு வீர்ய சக்த்யாதி குணைகராசி | பர: பராணாம் ஸகலா நயத்ர க்லேசாதயஸ்ஸந்தி பராவரேசே - தேஜஸ், பலம், ஐச்வர்யம், ஞானம், வீர்யம், சக்தி என்பதான அனைத்து குணங்களுக்கும் இருப்பிடமாகவும், நான்முகன் போன்ற அனைவரையும் விட உயர்ந்தவனாகவும் உள்ள அவனிடம், துன்பம் போன்ற எந்தத் தாழ்வும் இல்லை - என்றும் கூறப்பட்டதற்கு ஏற்ப, “ஆச்ரயம்” என்பது தாழ்வுக்கு எதிர்தட்டாகவும் உள்ளதால், இந்தக் குணங்களுக்கு எந்தவிதமான தாழ்வுடனும் ஸம்பந்தம் என்பது இல்லை.

**வ்யாக்யானம்** – ஸமாநாதிக ரஹிதங்களாகையாவது, சேதநாந்தர குணங்களை ஸமமாகவும், ஈச்வர குணங்களை அதிகமாகவுமுடைத்தாயிருக்கும் சேதந குணங்கள் போலன்றிக்கே, தனக்கொத்ததும் மிக்கதுமின்றிக்கேயிருக்கை. “ந தத் ஸமச்சாப்யதிகச்ச

த்ருச்யதே” என்கிற ஸமாதிகதரித்ர வஸதுவை ஆச்ரயமாகவுடையவையாகையாலே, இவையும் ஸமாநாதிக ரஹிதங்களாயிருக்குமிறே. “தோஷ உபதா அவதி ஸம அதிசயாந ஸங்க்யா நிர்லேப மங்கலகுண ஓக துகா: ஷட் ஏதா: ஜ்ஞான ஐச்வரீ சகா வீர்ய பல அர்ச்சிஷ த்வாம் ரங்கேச பாஸ: இவ ரத்நம் அநர்க்கயந்தி” என்கிற ச்லோகத்திலே இவையித்தனையும் பட்டரருளிச்செய்தாரிறே.

**விளக்கம்** - (ஸமாநாதிக ரஹிதங்களாயிருக்கும்) – மற்ற சேதநர்களுடைய அனைத்து குணங்களும் சமமாகவும், ஈச்வரனுடைய குணங்கள் அதிகமாகவும் உள்ளது போன்ற சேதநர்களுடைய குணங்கள் போன்று அல்லாமல், தனக்கு நிகரானதும் அதிகமானதும் என ஏதும் இல்லாமல் உள்ள நிலை. ச்வேதாஸ்வதரத்தில் - ந தத் ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே - அவனுக்குச் சமமாகவும் அதிகமாகவும் ஏதும் காணப்படவில்லை – என்பதான நிகரும் அதிகமாகவும் உள்ள வஸ்துவை இருப்பிடமாகக் கொண்டதால், இந்த குணங்களும் தங்களுக்கு நிகரானவையும் அதிகமானதும் ஏதும் இல்லாதவையாக உள்ளன. ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் ( 2-27) - தோஷ உபதா அவதி ஸம அதிசயாந ஸங்க்யா நிர்லேப மங்கலகுண ஓக துகா: ஷட் ஏதா: ஜ்ஞான ஐச்வரீ சகா வீர்ய பல அர்ச்சிஷ த்வாம் ரங்கேச பாஸ: இவ ரத்நம் அநர்க்கயந்தி - திருவரங்கனே! உன்னுடைய குணங்களான ஞானம், ஐச்வர்யம், சக்தி, வீர்யம், பலம் மற்றும் தேஜஸ் ஆகியவை செய்வது என்னவென்றால் – குற்றம் அற்றவையும், குறைபாடுகள் அற்றவையும், எல்லை இல்லாதவையும், ஒப்பு இல்லாதவையும், இதனைவிட உயர்ந்தது வேறு இல்லாதவையும், எண்ணிக்கை அற்றவையும் ஆகிய எண்ணற்ற பல திருக்கல்யாண குணங்களின் கூட்டத்தை எப்போதும் சுரந்தபடி உள்ளன. ஒரு இரத்தினக் கல்லை அதன் ஒளியானது எவ்விதம் அனைவருக்கும் காட்டித் தந்து, அதனை மேன்மை அடையச் செய்யுமோ அது போன்று இந்தக் குணங்கள் உன்னை அனைவருக்கும் காட்டித் தருகின்றன - என்பதாக உள்ள ச்லோகத்தில் இவை அனைத்தையும் ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்தார் அல்லவோ?

149. இவற்றில் வாத்ஸல்யாதிகளுக்கு விஷயம் அநுகூலர், சௌர்யாதிகளுக்கு விஷயம் ப்ரதிகூலர், இவற்றுக்குக் காரணமான ஜ்ஞாந சக்த்யாதிகளுக்கு எல்லாரும் விஷயம்.

**அவதாரிகை** - இப்படியிருந்துள்ள குணங்கள் தான் மூன்றுவகைப்பட்டி ருக்கையாலே அம்மூன்றுவகைக்கும் விஷயங்களை வகுத்து அருளிச்செய்கிறார் “இவற்றில்” என்று தொடங்கி.

**விளக்கம் -** இப்படியாக அவனுடைய குணங்கள் மூன்றுவகையாக உள்ளதால், அந்தந்த மூன்று வகைகளுக்கும் உள்ள விஷயங்களைப் பிரித்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (வாத்ஸல்யாதிகள்) என்கிற ஆதிசப்தத்தாலே, ஸௌசீல்ய ஸௌலப்ய மார்தவார்ஜவாதிகளான குணவிசேஷங்களெல்லாவற்றையும் சொல்லுகிறது. விஷயம் அநுகூலரென்றது, ஆச்ரிதரென்றபடி. (சௌர்யாதிகளுக்கு) என்கிற ஆதிசப்தத்தாலே பராக்ரமத்தைச் சொல்லுகிறது. விஷயம் ப்ரதிகூலரென்றது, ஆச்ரித விரோதிகளென்றபடி. "த்விஷதந்நம் ந போக்தவ்யம் த்விஷதந்நம் நைவ போஜயேத் பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்டவா:" என்று ஆச்ரித விரோதிகள் தனக்கு சத்ருக்களென்று அருளிச்செய்தானிறே. (இவற்றுக்குக் காரணமான ஜ்ஞாந சக்த்யாதிகள்) என்கிறவிதில், ஆதி சப்தத்தாலே, பல ஐச்வர்ய வீர்ய தேஜஸ்ஸுக்களைச் சொல்லுகிறது. வாத்ஸல்யாதிகளுக்கும் சௌர்யாதிகளுக்கும் ஜ்ஞாந சக்த்யாதிகள் காரணமாகையாவது, "ப்ரக்ருஷ்டம் விஜ்ஞாநம் பலமதுலமைச்வர்யமகிலம் விமர்யாதம் வீர்யம் வரத பரமா சக்திரபி ச பரம் தேஜச்சேதி ப்ரவர குண ஷட்கம் ப்ரதமஜம் குணா நாம நிஸ்ஸீம நாம கண நவிகுணா நாம ப்ரஸவபூ:" என்றும், "மங்கள குணளகதுகாஷ்ஷடேதா:" என்றும் சொல்லுகிறபடியே, அவற்றுக்கு ஊற்றுவாயாயிருக்கை. அவைதான் வஸ்தூத்கர்ஷாபாதக ஷாட்குண்யாயத்த குணபாவமாயிறே இருப்பது. "எம்பெருமானுடைய திவ்யாத்ம குணங்களாவன: ஜ்ஞாந சக்த்யாதி ஷட்குணங்களும், அதிலே பிறந்த ஸௌசீல்யாதிகளும்" என்கிற விவ்வாக்யத்துக்கு அர்த்தமெழுதுகிறவளவில், "அதிலே பிறக்கையாவது வஸ்தூத்கர்ஷாபாதக ஷாட்குண்யாயத்த குணபாவமாகை" என்றிறே விவரணத்தில் ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தது.

**விளக்கம் -** (வாத்ஸல்யாதிகளுக்கு) - இதில் உள்ள "ஆதி – முதலான" என்பதன் மூலம், "சௌசீல்யம், ஸௌலப்யம், மார்தவம், ஆர்ஜவம்" போன்ற பல குண சிறப்புகள் அனைத்தையும் கூறுகிறார். (விஷயம் அநுகூலர்) – அடியார்கள் என்று பொருள். (சௌர்யாதிகளுக்கு) - இதில் உள்ள "ஆதி" என்பது, பராக்ரமத்தைக் கூறியதாகும். (விஷயம் ப்ரதிகூலர்) - அடியார்களுடைய விரோதிகள். மஹாபாரதம் உத்யோகபர்வம் (74-27) – த்விஷத் அந்நம் ந போக்தவ்யம் த்விஷத் அந்நம் நைவ போஜயேத் | பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்டவா: - விரோதிகள் அளிக்கும் உணவை உண்ணக்கூடாது, பகைவர்களுக்கு நாம் உண்ணும்படி உணவு அளிக்கக்கூடாது. அரசனே! பாண்டவர்களுடைய புத்திரர்களை நீ விரோதியாகக் காண்கிறாய்; அவர்கள்

எனது உயிர் ஆவார்கள் - என்று, அடியார்களுடைய விரோதிகளைத் தனது விரோதிகளாகக் கொண்டான் அல்லவோ? (இவற்றுக்குக் காரணமான ஜ்ஞாந சக்த்யாதிகள்) - இதில் உள்ள “ஆதி” சப்தமானது “பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ்” ஆகியவற்றைக் கூறுவதாகும். வாத்ஸல்யம் முதலானவற்றுக்கும், சௌர்யம் முதலானவற்றுக்கும் ஞானம் மற்றும் சக்தி ஆகியவை காரணமாக உள்ளன என்றார். அவை எவ்விதம் காரணமாக உள்ளன என்பதற்கு விடை அளிக்கிறார். ஸ்ரீவரதராஜ ஸ்தவம் (95) - ப்ரக்ருஷ்டம் விஜ்ஞாநம் பலமதுலமைச்வர்யமகிலம் விமர்யாதம் வீர்யம் வரத பரமா சக்திரபி ச பரம் தேஜச்சேதி ப்ரவர குண ஷட்கம் ப்ரதமஜம் குணா நாம நிஸ்ஸீம நாம கண நவிகுணா நாம ப்ரஸவபூ: - வரதா! உயர்ந்த ஞானம், ஈடில்லா ஆற்றல், அனைத்து செல்வங்கள், எல்லையற்ற வீர்யம், உயர்ந்த சக்தி, பலம் போன்றதான இவை அனைத்தும், உயர்ந்த வஸ்துவிடம் உள்ள அனைத்துவிமான குணங்களிலும், முதன்மையான ஆறு குணங்களுக்கு - என்றும், ஸ்ரீரங்கராஜ ஸ்தவம் (2-27) – மங்கலகுண ஓக துகா: ஷட் ஏதா: - உன்னுடைய குணங்களான ஞானம், ஐச்வர்யம், சக்தி, வீர்யம், பலம் மற்றும் தேஜஸ் ஆகியவை செய்வது என்னவென்றால் – குற்றம் அற்றவையும், குறைபாடுகள் அற்றவையும், எல்லை இல்லாதவையும், ஒப்பு இல்லாதவையும், இதனைவிட உயர்ந்தது வேறு இல்லாதவையும், எண்ணிக்கை அற்றவையும் ஆகிய எண்ணற்ற பல திருக்கல்யாண குணங்களின் கூட்டத்தை எப்போதும் சுரந்தபடி உள்ளன - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அவற்றுக்குப் பிறப்பிடமாக உள்ளதால் ஆகும். அத்தகைய ஆறு குணங்கள், அந்த உயர்ந்த வஸ்துவிற்கு மிகுந்த ஏற்றத்தை ஏற்படுத்தக்கூடியவையாக உள்ளன. “எம்பெருமானுடைய திவ்யாத்ம குணங்களாவன: ஜ்ஞாந சக்த்யாதி ஷட்குணங்களும், அதிலே பிறந்த ஸௌசீல்யாதிகளும்” என்றுள்ள வாக்கியத்திற்கான விளக்கத்தை அருளிச்செய்யும்போது, “அந்தக் குணங்களில் பிறத்தல் என்பது, வஸ்துவிற்கு உயர்வை ஏற்படுத்தக்கூடிய ஆறு குணங்களின் ஊற்றுவாயாக இருத்தல் ஆகும்” என்று ஸ்வாமி ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** இந்த குண ஷட்கத்திலும் வைத்துக்கொண்டு, ஜ்ஞாநமாவது “அஜடம் ஸ்வாத்ம ஸம்போதி நித்யம் ஸர்வாவகாஹநம் ஜ்ஞாநம் நாமகுணம் ப்ராஹு: ப்ரதமம் குணசிந்தகா” என்கிறபடியே, என்றுமொக்க ஸர்வவிஷய ப்ரகாசகமுமாய், ஸ்வப்ரகாசமுமான குண விசேஷம். சக்தியாவது, “ஜகத் ப்ரக்ருதிபாவோ யஸ்ஸா சக்தி: பரிகீர்த்திதா:” என்கிற ஜகத் ப்ரக்ருதி பாவமாதல், அகடிதகடநா ஸாமார்த்யமாதல். பலமாவது, “ச்ரமஹாநிஸ்து யா தஸ்ய ஸததம் குர்வதோ ஜகத், பலம் நாம குணஸ்தஸ்ய

கதிதோ குண சிந்தகை:” என்கிற ஜகத்காரணத்வ ப்ரயுக்தமான ச்ரமமின்றியிலே யொழிகையாதல், “பலம் தாரண ஸாமர்த்த்யம்” என்கிற ஸமஸ்த வஸ்து தாரண ஸாமர்த்த்யமாதல்.

**விளக்கம் -** இந்த ஆறு குணங்களில், ஞானம் என்பது, அஜடம் ஸ்வாத்ம ஸம்போதி நித்யம் ஸர்வாவகாஹநம் ஜ்ஞாநம் நாமகுணம் ப்ராஹு: ப்ரதமம் குணசிந்தகா – ஜடப்பொருள் அல்லாததாகவும், தானே வெளிப்படுவதாகவும், தானே தன்னை உணர்த்துவதாகவும், எப்போதும் உள்ளதுமாக, அனைத்தையும் வெளிப்படுத்துவதாகவும் உள்ளது - என்பதற்கு ஏற்ப, எப்போதும் அனைத்தையும் வெளிப்படுத்துவதாகவும், தானே தன்னை வெளிப்படுத்துவதாகவும் உள்ள குணச் சிறப்பாகும். சக்தி என்பது, ஜகத் ப்ரக்ருதிபாவோ யஸ்ஸா சக்தி: பரிகீர்த்திதா: - இந்த ஜகத்தின் உற்பத்திக்கு காரணமாக உள்ளது எதுவோ அதுவே சக்தி எனப்படுகிறது - என்பதற்கு ஏற்ப, ஜகத்தின் உற்பத்திக்கும், மற்ற எதனாலும் செய்ய முடியாதவற்றைச் செய்ய இயலும் திறனுக்கும் பெயராகும். பலம் என்பது, ச்ரமஹாநிஸ்து யா தஸ்ய ஸததம் குர்வதோ ஜகத், பலம் நாம குணஸ்தஸ்ய கதிதோ குண சிந்தகை: - ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் அந்த உயர்ந்த வஸ்துவிற்கு எப்போதும் சிரமம் இன்றி உள்ள தன்மை எதுவோ அதுவே பலம் ஆகும் – என்பதற்கு ஏற்ப, ஜகத்காரணமாக உள்ள வஸ்துவிற்கு சிரமம் ஏற்படாமல் இருத்தல் ஆகும். மேலும், பலம் தாரண ஸாமர்த்த்யம் - பலம் என்பது அனைத்தையும் தாங்குதல் - என்பதற்கு ஏற்ப, அனைத்து வஸ்துக்களையும் தாங்கும் ஸாமர்த்யம் ஆகும்.

**வ்யாக்யானம்** – ஐச்வர்யமாவது, “கர்த்ருத்வம் நாம யத் தஸ்ய ஸ்வாதந்த்ரிய பரிப்ரும்ஹிதம், ஐச்வர்யம் நாம தத் ப்ரோக்தம் குண தத்வார்த்த சிந்தகை:” என்கிற கர்த்ருத்வ லக்ஷணமான ஸ்வாதந்த்ர்யமாதல், ஸமஸ்த வஸ்து நியமந ஸாமர்த்த்யமாதல். வீர்யமாவது, “தஸ்யோபாதாநபாவேபி விகார விரஹோ ஹி ய: வீர்யம் நாம குணஸ்ஸோயமச்யுதத்வாபரா ஹ்வய:” என்று ஜகதுபாதாநமாகா நிற்கச் செய்தேயும், ஸ்வரூப விகாரமின்றியிலேயொழியும்படியான அவிகாரதை. தேஜஸ்ஸாவது, “ஸஹகார்ய நபேக்ஷா யா தத் தேஜஸ் ஸமுதாஹ்ருதம்” என்கிற ஸஹகாரி நைரபேக்ஷ்யமாதல், பராபிபவந ஸாமர்த்த்யமாதல். இவற்றுக்கு எல்லாரும் விஷயமாகையாவது, அநுகூல ரக்ஷணாதிகளும், ப்ரதிகூல நிரஸநாதிகளும், ஜ்ஞாந சக்த்யாதி விசிஷ்டனாய்க் கொண்டு நிர்வஹிக்க வேண்டுகையாலே இவற்றுக்கு ஸர்வரும் விஷயமாயிருக்கை.

**விளக்கம் -** ஐச்வர்யம் என்பது, கர்த்ருத்வம் நாம யத் தஸ்ய ஸ்வாதந்த்ரிய பரிப்ரும்ஹிதம், ஐச்வர்யம் நாம தத் ப்ரோக்தம் குண தத்வார்த்த சிந்தகை: - அந்த உயர்ந்த வஸ்துவிற்கு சுதந்திரமாகச் செயல் புரியும் எந்த ஒரு குணம் உள்ளதோ அதுவே ஐச்வர்யம் என்பதாகும் - என்பதற்கு ஏற்ப, அனைத்து செயல்களையும் செய்வதற்கு அடையாளமாக உள்ள சுதந்திரம் மற்றும் அனைத்தையும் நியமனம் செய்யும் திறன் ஆகியவை ஆகும். வீர்யம் என்பது, தஸ்ய உபாதாந பாவேபி விகார விரஹோ ஹி ய: வீர்யம் நாம குணஸ்ஸோயம் அச்யுதத்வாபரா ஹ்வய: – அந்த அச்சுதன் ஜகத்தின் உபாதானக்காரணமாக உள்ளபோதிலும், அவன் மாற்றம் அடையாமல் உள்ளதற்கு உறுப்பாக எந்த ஒரு குணம் உள்ளதோ, அதுவே வீர்யம் எனப்படுகிறது - என்பதற்கு ஏற்ப, இந்த ஜகத்தின் உபாதானக்காரணமாக உள்ளபோதிலும், எந்தவிதமான மாற்றமும் அடையாமல் உள்ள தன்மையாகும். தேஜஸ் என்பது, “ஸஹகார்ய நபேக்ஷா யா தத் தேஜஸ் ஸமுதாஹ்ருதம் - துணைப்பொருள்களின் உதவி இன்றி இருத்தலுக்குக் காரணமான தன்மையானது, தேஜஸ் ஆகிறது - என்பதற்கு ஏற்ப, மற்ற எந்த உதவியும் எதிர்பாராமல் இருத்தல் மற்றும் விரோதிகளை எளிதாக வெல்லுதல் என்பதாகும். இவை அனைத்திற்கும், அனைவரும் இலக்காக இருத்தல் என்பது “தகுந்த செயல்கள் செய்வதன் மூலம் காப்பாற்றப்படுதல், தகாத செயல்கள் மூலம் தண்டிக்கப்படுதல்” என்பதன் மூலம் ஆகும். ஞானம் மற்றும் சக்தி போன்ற பல சிறப்புகளைக் கொண்டவன் என்பதால், அனைவரையும் தக்கபடி நியமனம் செய்யவேண்டும் என்பதால், அந்தக் குணங்களுக்கு அனைவரும் இலக்காக உள்ளனர்.

150. ஜ்ஞாநம் அஜ்ஞர்க்கு; சக்தி அசக்தர்க்கு; க்ஷமை ஸாபராதர்க்கு; க்ருபை துக்கிகளுக்கு; வாத்ஸல்யம் ஸதோஷர்க்கு; சீலம் மந்தர்க்கு; ஆர்ஜவம் குடிலர்க்கு; ஸௌஹார்த்தம் துஷ்டஹ்ருதயர்க்கு; மார்த்தவம் விச்லேஷ பீருக்களுக்கு; ஸௌலப்யம் காண ஆசைப்பட்டவர்களுக்கு. இப்படி எங்கும் கண்டுகொள்வது.

**அவதாரிகை -** இப்படி குணங்களை மூன்றுவகையாக்கி, அவற்றுக்கு விஷயங்களை தர்சிப்பித்தவளவன்றிக்கே, குணங்களுக்கு ப்ரத்யேகம் விஷய நியமமுண்டாகையாலே, அத்தையும் தர்சிப்பிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, கீழெடுத்த குணங்களிலே சிலவற்றுக்குத் தனித்தனியே விஷயங்களை தர்சிப்பிக்கிறார் (ஜ்ஞாநம் அஜ்ஞர்க்கு) என்று தொடங்கி.

**விளக்கம் -** இவ்விதம் குணங்களை மூன்றுவிதமாக உரைத்து, அந்தந்த குணங்களுக்கு இலக்காக உள்ள விஷயங்களை விளக்கிய பின்னர், "அந்தந்த குணங்கள் ஒவ்வொன்றுக்கும் இலக்காக இப்படிப்பட்ட விஷயம் உள்ளது" என்ற விதிமுறை உள்ளதால், அதனையும் விளக்கவேண்டும் என்று திருவுள்ளம் பற்றினார். ஆகவே இதுவரை கூறிய குணங்களில் சில குணங்களுக்கு இலக்காக உள்ள விஷயங்களைத் தனித்தனியே அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** ஜ்ஞாநமாவது சேதநருடைய ஹிதாஹித நிரூபணத்துக்கு உறுப்பான குணம்; ஆகையாலே, "க்வாஹமத்யந்த துர்புத்தி: க்வசாத்மஹித வீக்ஷணம், யத்திதம் மமதேவேச ததாஜ்ஞாபய மாதவ" என்கிறபடியே, ஸ்வஹிதாஹித நிரூபணாதிகளில் அஜ்ஞராயிருக்குமவர்களுக்குறுப்பா யிருக்குமென்கை. (சக்தி அசக்தர்க்கு) என்றது; சக்தியாவது அகடிதகடநா ஸாமர்த்த்யம்; ஆகையாலே ஸ்வ இஷ்ட அநிஷ்ட ப்ராப்தி பரிஹாரங்களில் அசக்தராயிருக்குமவர்களுடைய கார்யஸித்திக்கு உறுப்பாயிருக்கு மென்கை. (க்ஷமை ஸாபராதர்க்கு) என்றது; க்ஷமையாவது அபராத ஸஹத்வம்; ஆகையாலே "அஹமஸ்ம்யாபராதாநாமாலய:" என்கிறபடியே அபராத ஸஹிதராகத் தங்களையநுஸந்தித்திருப்பார்க்கு உறுப்பாயிருக்குமென்கை. "க்ஷமா ஸாபராதேநுதாபி ந்யுபேயா கதம் ஸாபராதேபி த்ருப்தே மயி ஸ்யாத்" என்றிறே பட்டரருளிச்செய்தது.

**விளக்கம் -** (ஜ்ஞாநம் அஜ்ஞர்க்கு) - சேதநர்களுக்கு ஏற்ற நன்மை மற்றும் தீமை ஆகியவற்றை அவர்களுக்கு உணர்த்துவதற்கு உறுப்பாக உள்ள குணமாக ஞானம் உள்ளது. ஜிதந்தே ஸ்தோத்ரம் – க்வாஹமத்யந்த துர்புத்தி: க்வசாத்மஹித வீக்ஷணம், யத்திதம் மமதேவேச ததாஜ்ஞாபய மாதவ - எத்தகைய ஞானமும் இல்லாத நான் எனது ஆத்மாவிற்கு ஏற்ற நன்மையை எவ்விதம் காண்பேன்? தேவர்களின் தலைவனே! மாதவனே! எனக்கு எது நன்மையோ அதனை நீயே கட்டளை இடவேண்டும் – என்பதற்கு ஏற்ப, தங்களுக்கு ஏற்ற நன்மை மற்றும் தீமை ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் அறியாமை கொண்டவர்களுக்கு, ஞானமானது ஏற்ற குணமாக உள்ளது. (சக்தி அசக்தர்க்கு) - சக்தி என்பது "யாராலும் செய்ய இயலாத செயலைச் செய்யும் சாமர்த்யம்" ஆகும். எனவே தங்களுக்கு விருப்பமானது மற்றும் விருப்பம் அற்று ஆகியவற்றை அடைவதற்கும் விலக்குவதற்கும் ஏற்ற செயல்களைச் செய்வதற்குச் சக்தி அற்றவர்களாக உள்ளவர்களுக்குத் தகுந்த கார்யம் செய்து கொடுப்பதற்கான உறுப்பாக சக்தி உள்ளது. (க்ஷமை ஸாபராதர்க்கு) - க்ஷமை என்றால் குற்றங்களைப் பொறுத்துக் கொள்வதாகும். எனவே அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் – அஹம் அஸ்மி அபராதாநம் ஆலய: - குற்றங்களுடைய இருப்பிடமாகவே நான் உள்ளேன் - என்பதற்கு ஏற்ப, "மன்னிக்க

இயலாதபடியான குற்றங்களைச் செய்தவன்" என்று தங்களை எண்ணுபவர்களுக்கு ஏற்ற குணமாக இது உள்ளது. ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் (2-96) – க்ஷமா ஸாபராதே அநுதாபிநி உபேயா கதம் ஸாபராதே அபி த்ருப்தே மயி ஸ்யாத் - திருவரங்கா! உன்னுடைய பொறுமை என்னும் குணமானது எப்படிப்பட்ட தவறுகளைச் செய்தபோதிலும், "தவறு செய்துவிட்டோம்", என்று வருந்தக் கூடியவனிடம் மட்டுமே செல்வதாகும். இவ்விதம் உள்ளபோது, பல குற்றங்களைச் செய்த பின்னரும், அதனைக் குறித்து வருந்தாமல் உள்ள என் போன்றவர்கள் குறித்து அந்தப் பொறுமை என்னும் குணமானது எப்படி ஏற்படும் - என்று அல்லவோ ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்தார்?

**வ்யாக்யானம்** - (க்ருபை துக்கிகளுக்கு) என்றது; க்ருபையாவது பரதுக்கா ஸஹிஷ்ணுத்வம்; ஆகையாலே "ஆவாரார் துணை யென்றலை நீர்க்கடலுளழுந்தும் நாவாய்போல, பிறவிக்கடலுள் நின்று துளங்குகை" முதலான துக்கமுடையவர்களுக்கு உறுப்பாயிருக்குமென்கை. "தயா பரவ்யஸநஹரா பவவ்யதா ஸுகாயதே மம ததஹம் தயாதிக:" என்று அருளிச்செய்தாரிறே பட்டர். (வாத்ஸல்யம் ஸதோஷர்க்கு) என்றது; வாத்ஸல்யமாவது அன்றீன்ற கன்றினுடம்பின் வழுவையாதரித்து புஜிக்கும் தேநுவைப்போலே ஆச்ரிதருடைய தோஷங்களை போக்யமாகக் கொள்ளுவதொரு குணம்; ஆகையாலே, அவித்யாகாமாதி தோஷ ஸஹிதராகத் தங்களையநுஸந்திப்பார்க்கு உறுப்பாயிருக்குமென்கை.

**விளக்கம்** - (க்ருபை துக்கிகளுக்கு) - க்ருபை என்பது, மற்றவர்களுடைய துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாத தன்மை ஆகும். எனவே, திருவாய்மொழி (5-1-9) - ஆவார் ஆர் துணை என்று அலை நீர்க் கடலுள் அழுந்தும் நாவாய் போல், பிறவிக்கடலுள் நின்று நான் துளங்க - என்பது போன்ற துக்கம் உடையவர்களுக்கு உதவும் குணமாக க்ருபையானது உள்ளது. ஸ்ரீரங்கராஜ ஸ்த்வத்தில் (2-98) - தயா பர வ்யஸந ஹரா பவவ்யதா ஸுகாயதே மம தத் அஹம் தயாதிக: – திருக்கல்யாண குணங்களின் இருப்பிடமாக உள்ள பெரியபெருமாளே! உன்னுடைய தயை என்னும் குணம் அனைவரது துன்பங்களையும் நீக்கவல்லதாக உள்ளது – என்று பட்டர் அருளிச்செய்தார் அல்லவோ? (வாத்ஸல்யம் ஸதோஷர்க்கு) - வாத்ஸல்யம் என்பது "அன்று பிறந்த கன்றுக்குட்டியின் உடலில் உள்ள அனைத்து அழுக்குகளையும் தான் உண்ணும் பசு போன்று, அடியார்களுடைய குற்றங்களை இனிமையாகவே ஏற்றுக்கொள்ளுதல்" என்ற குணம் ஆகும். எனவே "அறியாமை, கர்மங்களால் சூழப்பட்டவன்" என்று தங்களை எண்ணிக் கொள்பவர்களுக்கு இந்தக் குணம் உதவுவதாக இருக்கிறது.

**வ்யாக்யானம் -** (சீலம் மந்தர்க்கு) என்றது; சீலமாவது, பெரியவன் தாழந்தவர்களோடே புரையறக் கலக்கும் ஸ்வாபாவம். ஆகையாலே, தங்களுடைய தண்மையையநு ஸந்தித்திருப்பார்க்கு உறுப்பாயிருக்குமென்கை (ஆர்ஜவம் குடிலர்க்கு) என்றது; ஆர்ஜவமாவது கரணத்ரயத்தாலும் செவ்வியனாயிருக்கை; ஆகையாலே, தங்களுடைய கரணத்ரய கௌடில்யத்தை நினைத்திருப்பார்க்கு உறுப்பாயிருக்குமென்கை.

**விளக்கம் -** (சீலம் மந்தர்க்கு) - சீலம் என்றால் உயர்ந்த நிலையில் உள்ள ஒருவன் தாழ்ந்தவர்களிடம் சரிசமமாகக் கலந்து பழகும் குணம் ஆகும். எனவே தங்களுடைய தாழ்வையே எண்ணியபடி உள்ளவர்களுக்கு இந்தக் குணம் உதவுகிறது. (ஆர்ஜவம் குடிலர்க்கு) - ஆர்ஜவம் என்றால் "மனம், சொல், செயல்" என்பதான மூன்று கரணங்களால் செய்யப்படும் அனைத்தும் ஒரே போன்று இருத்தல் ஆகும். எனவே தங்களுடைய இந்த மூன்றிலும் ஒரே போன்ற நிலையில் இல்லாமல் உள்ளோம் என்று எண்ணுபவர்களுக்கு உதவும் குணமாக இது உள்ளது.

**வ்யாக்யானம் -** (ஸௌஹார்தம் துஷ்ட ஹ்ருதயர்க்கு) என்றது; ஸௌஹார்தமாவது, எப்போதும் நன்மையைச் சிந்தித்திருக்கும் ஸ்வபாவம்; ஆகையாலே, ஸர்வகாலமும் தீமையையே சிந்தித்திருக்கும் துஷ்டஹ்ருதயராகத் தங்களையநுஸந்தித்திருப்பார்க்கு உறுப்பாயிருக்குமென்கை. (மார்தவம் விச்லேஷ பீருக்களுக்கு) என்றது; மார்தவமாவது, ஆச்ரித விரஹம் பொறுக்கமாட்டாத மென்மையாகையாலே தன்னுடைய விச்லேஷத்தில் பயமுடையவர்களுக்கு உறுப்பாயிருக்குமென்கை. (ஸௌலப்யம் காணவாசைப்பட்டவர் களுக்கு) என்றது; ஸௌலப்யமாவது, அதீந்த்ரியமான விக்ரஹத்தைக் கண்ணுக் கிலக்காம்படி பண்ணுகை; ஆகையாலே, தன்னைக் காணவேணுமென்று ஆசைப்பட்டவர்களுக்கு உறுப்பாயிருக்குமென்கை.

**விளக்கம் -** (ஸௌஹார்தம் துஷ்ட ஹ்ருதயர்க்கு) ஸௌஹார்த்தம் என்றால் எப்போதும் நன்மையைச் சிந்தித்தபடி உள்ள இயல்பாகும். ஆகவே, எப்போதும் தீமையை மட்டுமே எண்ணியபடி இருந்து, துஷ்ட இதயம் கொண்டவராகத் தங்களை எண்ணுபவர்களுக்கு இந்தக் குணம் உதவுகிறது. (மார்தவம் விச்லேஷ பீருக்களுக்கு) - மார்தவம் என்றால், தன்னை அடைந்த அடியார்களுடைய பிரிவைப் பொறுக்க இயலாத மேன்மைக்குணம் ஆகும். ஆகவே ஸர்வேச்வரனாகிய தன்னைப் பிரிந்திருப்பது குறித்து அச்சம் அடைபவர்களுக்கு இந்தக் குணம் உதவுகிறது. (ஸௌலப்யம் காணவாசைப்பட்டவர் களுக்கு) - இந்த்ரியங்களுக்குப் புலப்படாத ஸர்வேச்வரனுடைய திருமேனியை

இந்த்ரியங்களால் உணரும்படியாகச் செய்யவல்ல குணம் ஆகும். எனவே, தன்னைக் காணவேண்டும் என்று ஆசை கொள்பவர்களுக்கு உதவும் குணமாக இது உள்ளது.

**வ்யாக்யானம்** – இத்தால், இவனுடைய ஜ்ஞாநத்தில் அபேக்ஷையுள்ளது, தந்தாமுடைய ஹிதாஹித நிரூபணத்தில் அறிவில்லாதவர்களுக்காகையாலே, ஜ்ஞாநம் அஜ்ஞர்க்கா யிருக்கும். இவனுடைய சக்தியில் அபேக்ஷையுள்ளது, ஸ்வேஷ்ட அநிஷ்ட ப்ராப்தி பரிஹாரத்தில் அசக்தராயிருப்பாருக்காகையாலே, சக்தி அசக்தர்க்காயிருக்கும். பொறையில்ல் அபேக்ஷையுள்ளது, அபராதமுடையார்க்காகையாலே, க்ஷமை ஸாபராதர்க்காயிருக்கும். ஐயோவென்று இரங்க வேண்டுவது, நோவு பட்டவர்க்காகையாலே, க்ருபை துக்கிகளுக்காயிருக்கும். தோஷத்தை போக்யமாகக் கொள்ள வேண்டுவது, தோஷவான்களுக்காகையாலே, வாத்ஸல்யம் ஸதோஷர்க்கா யிருக்கும். தண்மை பாராதே புரையறக் கலக்க வேணடுவது, தாழ்ந்தவர்கள் விஷயத்திலே யாகையாலே, சீலம் மந்தர்க்காயிருக்கும்.

**விளக்கம் -** ஆகவே, தங்கள் தங்கள் நன்மை மற்றும் தீமை குறித்துச் சரிவர அறிய இயலாதவர்களுக்கு இவனுடைய ஞானம் என்ற குணத்தில் விருப்பம் உள்ளதால், ஞானமானது அறியாமை நிரம்பியவர்களுக்காக உள்ளது. தங்களுடைய விருப்பம் நிறைவேறுதல் மற்றும் விருப்பம் இன்மை விலகுதல் ஆகியவை குறித்து சக்தி இன்றி உள்ளவர்களுக்கு, இவனுடைய சக்தியில் விருப்பம் உள்ளதால், இத்தகைய சக்தி என்ற குணமானது, சக்தி அற்றவர்களுக்காக உள்ளது என்றாகிறது. குற்றம் நிறைந்தவர்களுக்கு, ஸர்வேச்வரனுடைய பொறுத்துக் கொள்ளும் தன்மையில் விருப்பம் உள்ளதால், க்ஷமை என்ற குணமானது, குற்றம் செய்தவர்களுக்காகவே உள்ளது. மிகுந்த துன்பத்தில் உள்ளவர்களுக்கு, அவன் இரக்கம் கொள்ளவேண்டும் என்ற விருப்பம் உள்ளதால், க்ருபையானது, துக்கம் கொண்டவர்களுக்காகவே உள்ளது. தோஷம் நிறைந்தவர்களுக்கு, அத்தகைய தோஷத்தையும் அவன் இனிமையாகக் கொள்ளவேண்டும் என்ற விருப்பம் உள்ளதால், வாத்ஸல்யமானது, தோஷம் நிறைந்தவர்களுக்காக உள்ளது. அறிவில் தாழ்ந்தவர்களுக்கு, ஸர்வேச்வரன் தங்களுடைய தாழ்வை நோக்காமல் தங்களுடன் சரிசமமாகக் கலந்து பழகவேண்டும் என்ற விருப்பம் உள்ளதால், சீலமானது அறிவில் தாழ்ந்தவர்களுக்காக உள்ளது.

**வ்யாக்யானம் -** கரண த்ரயத்தாலும் செவ்வியனாய்க் கொண்டு தன்னையமைத்துப் பரிமாற வேணடுவது, செவ்வைக்கேடர் விஷயத்திலாகையாலே, ஆர்ஜவம் குடிலர்க்கா யிருக்கும். தானெப்போதும் நன்மை சிந்திக்க வேண்டுவது, தந்தாமுக்குத் தீமைகளைச் சிந்திக்கும் தீமனத்தர் விஷயத்திலாகையாலே, ஸௌஹார்தம் துஷ்ட ஹ்ருதயர்க்கா யிருக்கும். விரஹம் பொறாத மென்மை வெண்டுவது, விரஹத்துக்கு அஞ்சுவார் திறத்திலாகையாலே, மார்தவம் விச்லேஷ பீருக்களுக்காயிருக்கும். அதீந்த்ரியமான விக்ரஹத்தைக் கண்ணுக்கு இலக்காக்க வேண்டுவது அவ்வடிவைக் காண்கையில் ஆசையுடையவர்களுக்காகையாலே, ஸௌலப்யம் காண வாசைப்படடவர்களுக்கா யிருக்கும் என்று குணங்களினுடைய விஷய ப்ரதி நியத்த்வத்தை தர்சிப்பித்தாராயிற்று. (இப்படியெங்கும் கண்டுகொள்வது) என்றது, கீழ்ச்சொன்ன ப்ரகாரத்திலே அநுக்தமான குணங்களெல்லாவற்றுக்கும் ப்ரதயேகம் விஷயங்களை தர்சித்துக்கொள்வது என்றபடி.

**விளக்கம் -** மனம், சொல் மற்றும் செயல் ஆகிய மூன்றாலும் ஒரே போன்று, சிறந்தவனாகத் தன்னை அனைவரிடமும் பரிமாறுதல் என்பது, இத்தகைய சிறந்த தன்மை இல்லாதவர்களுக்காக உள்ளதால், ஆர்ஜவம் என்ற இந்தக் குணமானது, அத்தகைய தன்மை இல்லாதவர்களுக்காக உள்ளது. ஸர்வேச்வரனாகிய தான் எப்போதும் நன்மையை மட்டுமே எண்ணியபடி இருத்தல் என்பது, எப்போதும் அவரவர்கள் தங்களுக்குத் தீமையை மட்டுமே சிந்தித்தபடி உள்ள மனம் கொண்டவர்களுக்காக உள்ளதால், ஸௌஹார்த்தம் என்ற குணமானது, தீயமனம் கொண்டவர்களுக்காக உள்ளது. பிரிவைப் பொறுத்துக் கொள்ளாத மென்மை என்பது, எம்பெருமானை விட்டுப் பிரிய நேரிடுமோ என்ற அச்சம் கொள்பவர்களுக்காக உள்ளதால், மார்தவம் என்ற குணமானது, பிரிவில் அச்சம் கொள்பவர்களுக்காக உள்ளது. இந்த்ரியங்களால் அறிய இயலாத திருமேனியைக் கண்களால் காண இயலும்படிச் செய்தல் என்பது, அப்படிப்பட்ட திருமேனியைக் காணவேண்டும் என்று ஆசை உள்ளவர்களுக்காக என்பதால், ஸௌலப்யம் என்று குணமானது, காண ஆசை கொண்டவர்களுக்காக உள்ளது. இபடியாக ஸர்வேச்வரனுடைய குணங்களின் தன்மையை அருளிச்செய்தார் என்றாகிறது. (இப்படி எங்கும் கண்டு கொள்வது) - இதுவரை கூறப்பட்ட விதத்தில், இதுவரை கூறப்படாத குணங்களுக்கு, அவற்றுக்கான விஷயங்களை அறிந்து கொள்ளவேண்டும் என்பதாகிறது.

151. இப்படி ஈச்வரன் கல்யாணகுணங்களோடே கூடியிருக்கையாலே, பிறர் நோவு கண்டால், “ஐயோ!” என்றிரங்கி அவர்களுக் கெப்போதுமொக்க நன்மையைச் சிந்தித்து, தனக்கேயாயிருத்தல், தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருத்தல் செய்யாதே, நிலாத்தென்றல் சந்தநம் தண்ணீர்போலே பிறர்க்கேயாய், தன்னை ஆச்ரயித்தவர்கள்பக்கல் ஜன்ம ஜ்ஞாந வ்ருத்தங்களாலுண்டான நிகர்ஷம் பாராதே, தாங்களும் பிறரும் தஞ்சமல்லாதபோது தான் தஞ்சமாய், ஸாந்தீபநி புத்ரனையும் வைதிகன் புத்ரர்களையும் மீட்டுக்கொண்டு வந்தாப்போலே அரியன செய்தும், அவர்களபேக்ஷிதங்களைத் தலைக்கட்டியும், அவர்களுக்கு த்ருவபதம் போலே பண்டில்லாதவற்றையு முண்டாக்கியும், தந்தாம் ஸ்வம் தாந்தரம் விநியோகம் கொண்டாப்போலேயிருக்கத் தன்னையும் தன்னுடைமையையும் வழங்கி, அவர்கள் கார்யம் தலைக்கட்டினால் தான் க்ருதக்ருத்யனாய், தான் செய்த நன்மைகளொன்றையும் நினையாதே அவர்கள் செய்த ஸுக்ருத லவத்தையே நினைத்து, அநாதிகாலம் வாஸிதங்களான ரஸங்களை மறக்கும்படி யெல்லா தசையிலும் இனியனாய், பார்யா புத்ரர்கள் குற்றங்களைக் காணாக்கண்ணிட்டிருக்கும் புருஷனைப்போலே அவர்கள் குற்றங்களைத் திருவுள்ளத்தால் நினையாதே குற்றங்களைப் பெரியபிராட்டியார் காட்டினாலும் அவளோடே மறு தலைத்துத் திண்ணியனாய் நின்று ரக்ஷித்து, காமிநியுடைய அழுக்கு உகக்கும காமுகனைப் போலே அவர்கள் தோஷங்களை போக்யமாகக்கொண்டு, அவர்கள் பக்கல கரணத்ரயத்தாலும் செவ்வியனாய், பிரிந்தால் அவர்கள் வ்யஸநம் குளப்படியென்னும்படி தான் ஈடுபட்டு, அவர்களுக்குப் பாங்காகத் தன்னைத் தாழவிட்டு, அவர்களுக்குக் கட்டவு மடிக்கவுமாம்படி யெளியனாய், அன்றீன்ற கன்றுக்குத் தாயிரங்கி முன்னணைக் கன்றையும் புல்லிட வந்தவர்களையும் கொம்பிலும் குளம்பிலும் ஏற்குமாபோலே பெரியபிராட்டியாரையும் ஸூரிகளையும விட்டு ஸ்நேஹித்துக்கொண்டு போரும்.

**அவதாரிகை -** ஏவம்பூதகுண விசிஷ்டனாகையாலே, ஈச்வரன் ஆச்ரித விஷயத்தில் பரிமாறிப் போரும்படிகளை விஸ்தரேணவொரு சூர்ணையாலேயருளிச்செய்கிறார் மேல்.

**விளக்கம் -** இப்படிப்பட்ட கல்யாணகுணங்களுடன் கூடியவனாக உள்ளதால், ஈச்வரன் தனது அடியார்கள் விஷயத்தில் செய்து வரும் உதவிகளை, விரிவாக ஒரு சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** இப்படியென்று, கீழுக்தமான குணயோக ப்ரகாரத்தைப் பராமாசிக்கிறது. (கல்யாண குணங்களோடே கூடியிருக்கையாலே) என்று குணயோகத்தை ஹேதுவாக வருளிச்செய்தது, மேற்சொல்லுகிற பரிமாற்றங்களெல்லாம் ஒரோ குணகார்யமென்று தோற்றுகைக்காக. (பிறர் நோவு கண்டால் "ஐயோ!" என்று இரங்கி) இது க்ருபா கார்யம். பிறர் நோவு கண்டால் "ஐயோ!" என்று ஈடுபடுகிறது, பர துக்காஸஹிஷ்ணுவாகை யாலேயிறே. (அவர்களுக்கு எப்போதுமொக்க நன்மையைச் சிந்தித்து) இது ஸௌஹார்த கார்யம். எப்போதுமொக்கவென்றது, இவர்கள் அறிந்த காலத்தோடு அறியாத காலத்தோடு வாசியற ஸர்வகாலத்திலுமென்றபடி. ஆச்ரித ஸர்வ மங்களாந்வேஷண பரனாயிருக்கிறது, ஸௌஹார்தத்தாலேயிறே. (தனக்கேயாயிருத்தல் தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருத்தல் செய்யாதே, நிலா தென்றல் சந்தநம் தண்ணீர்போலே பிறர்க்கேயாய்) இது, ஆச்ரித பாரதந்த்ரிய கார்யம். ஸ்வார்த்தபரனாயேயிருத்தல், ஸ்வார்த்த பரார்த்தங்கள் இரண்டுக்கும் பொதுவாயிருத்தல் செய்கையன்றிக்கே, சந்த்ரிகாதி பதார்த்தங்கள் போலே, பரார்த்ததைக வேஷனாயிருக்கிறது பாரதந்த்ரியத்தாலேயிறே. (தன்னையாச்ரயித்தவர்கள் பக்கல் ஜந்ம ஜ்ஞாந வ்ருத்தங்களால் உண்டான நிகர்ஷம் பாராதே) இது, ஸாம்ய குண கார்யம். ஆச்ரிதர்பக்கல் ஜந்மாதிகளால் உண்டான தண்மை பாராமல் பரிமாறுகிறது, "ஸமோஹம் ஸர்வபூதேஷு" என்கிறபடியே ஜந்மாதிகளால் உத்க்ருஷ்டரோடு அபக்ருஷ்டரோடு வாசியற ஆச்ரயணீயத்வே ஸமனாயிருக்கும் ஸ்வபாவத்தாலேயிறே.

**விளக்கம் -** (இப்படி) - இதுவரை கூறப்பட்டதான "ஸர்வேச்வரனுடன் அவனுடைய கல்யாண குணங்கள் சேர்ந்துள்ள விதம்" என்பதைக் கூறுகிறார். (கல்யாண குணங்களோடே கூடியிருக்கையாலே) – இப்படிப்பட்ட குணங்கள் சேர்ந்தபடி உள்ளதற்கான காரணத்தை ஏன் அருளிச்செய்தார் என்றால், இனி கூறப்போகின்ற விஷயங்களில், ஒவ்வொன்றும் ஒவ்வொரு குணத்தின் கார்யம் என்று உணர்த்தவே ஆகும். (பிறர் நோவு கண்டால் "ஐயோ!" என்று இரங்கி) - இது க்ருபையின் செயலாகும். மற்றவர்களுடைய துன்பத்தைக் காணும்போது அவர்களிடம் ஆழ்ந்த இரக்கம் கொள்ளும் ஈடுபாடு என்பது, மற்றவர்கள் துக்கத்தை பொறுத்துக் கொள்ள இயலாத தன்மையால் அல்லவோ? (அவர்களுக்கு எப்போதுமொக்க நன்மையைச் சிந்தித்து) - இது நன்மையின் செயலாகும்; அதாவது ஸௌஹார்த குணத்தின் செயலாகும். (எப்போதும் ஒக்க) - இவர்கள் தன்னைக் குறித்து நன்றாக அறிந்த காலம், ஏதும் அறியாத காலம் என்பதான வேறுபாடு இன்றி, அனைத்து காலங்களிலும் என்று கருத்து. தனது அடியார்களுக்கு

அனைத்துவிதமான மங்களங்களும் உண்டாகவேண்டும் என்று எண்ணியபடி உள்ள தன்மையானது, ஸௌஹார்தம் காரணமாகவே ஆகும். (தனக்கேயாயிருத்தல் தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருத்தல் செய்யாதே, நிலா தென்றல் சந்தநம் தண்ணீர்போலே பிறர்க்கேயாய்) - இது அடியார்களுக்கு வசப்பட்டிருக்கும் தன்மையின் செயல்கள் ஆகும். சுயநலமாக இருத்தல், சுயநலம் மற்றும் பொதுநலம் என்றிருத்தல் என்பதாக இரண்டிற்கும் பொதுவாக இருத்தல் என இல்லாமல், தென்றல் காற்று முதலானவை போன்று, மற்றவர்களுக்காகவே இருத்தல் என்பது மற்றவர்களுள் வசப்பட்டுள்ள தன்மை காரணமாகவே ஆகும். (தன்னையாச்ரயித்தவர்கள் பக்கல் ஜந்ம ஜ்ஞாந வ்ருத்தங்களால் உண்டான நிகர்ஷம் பாராதே) - அடியார்களிடம் காணப்படும் பிறவி ஏற்றத்தாழ்வுகள் குறித்து ஆராயாமல் உதவுதல் என்பது, கீதை (9-29) - ஸமோஹம் ஸர்வபூதேஷு – அனைத்து உயிர்களிடத்தும் நான் சமமாகவே உள்ளேன் – என்று கூறுவதற்கு ஏற்ப, பிறவிகளில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்பதான வேறுபாடு இன்றி, அடைவதற்குச் சமமாக இருத்தல் என்பது இந்தத் தன்மையால் ஆகும்.

**வ்யாக்யானம்** – (தாங்களும் பிறரும் தஞ்சமல்லாதபோது தான் தஞ்சமாய்) இது அசரண்யசரண்யத்வ கார்யம். தாங்களும் தங்களுக்கு ரக்ஷகரன்று, பிறரும் தங்களுக்கு ரக்ஷகரன்று என்று கைவாங்கின தசையில், தான் ரக்ஷகனாகிறது "பற்றிலார் பற்ற நின்றானா"கையாலேயிறே.

**விளக்கம்** - (தாங்களும் பிறரும் தஞ்சமல்லாதபோது தான் தஞ்சமாய்) இது தஞ்சம் புகுவதற்கு ஏற்ற இடம் அல்லாத அனைவருக்கும் சரணம் புகத்தக்க இடமாக உள்ள தன்மை. தாங்களும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள இயலாது, மற்றவர்களாலும் தங்களைக் காப்பாற்ற இயலாது என்று கைவிட்ட நிலையில், தான் ரக்ஷகனாக நிற்கும் தன்மை என்பது, திருவாய்மொழி (7-2-2) – பற்றிலார் பற்ற நின்றான் – என்பதால் அல்லவோ?

**வ்யாக்யானம்** - (ஸாந்தீபநி புத்ரனையும், வைதிகன் புத்ரர்களையும் மீட்டுக் கொண்டு வந்தாப் போலே அரியன செய்தும் அவர்களபேக்ஷிதங்களைத் தலைக்கட்டியும்) இது, ஸத்யகாமத்வ கார்யம். "மாதவத்தோன் புத்திரன்போய் மறி கடல்வாய் மாண்டானை" என்கிறபடியே நெடுங்காலத்திலே கடல் கொண்டு போன ஸாந்தீபநி புத்ரனையும், "பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகளை நால்வரையும்" என்கிறபடியே

ஜநித்தபோதே, "என்னுடை மனைவி காதல்மக்களைப் பயத்தலும் காணாள்" என்கிறபடியே பெற்ற தாயும் தர்சிக்கப்பெறாதபடி நாய்ச்சிமார், தங்கள் ஸ்வாதந்த்ர்யத்தாலே யழைப்பிக்க, "தப்பின பிள்ளைகளை" என்கிறபடியே கைதப்பிப் போய் சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதியிலே கிடந்த வைதிகன் புத்ரர்களையும், "உருவுருவே கொடுத்தான்" என்றும், "உடலொடுங் கொண்டு கொடுத்தவனை" என்றுஞ் சொல்லுகிறபடியே அவ்வவ ரூபங்களோடே மீட்டுக்கொடுவந்து கொடுத்தாப்போலே துஷ்கரங்களைச் செய்தும் ஆச்ரிதர் அபேக்ஷிதங்களைத் தலைக்கட்டுகிறது, "ஆச்ரித ரக்ஷண விஷயோ மநோரத: காம: ஸ: ப்ரதிஹதோ அபவதீதி ஸத்யகாம:" என்கிற ஸத்யகாமனாகையாலேயிறே. "ஸத்யகாமனாகையாவது, ஸாந்தீபநி புத்ரனைக் கொண்டு வந்தாப்போலே ஸகல அபேக்ஷிதங்களும் முடிக்கவல்லனாகை" என்றே நடுவிற்றிருவீதிப் பிள்ளை பட்டர் தத்வத்ரயத்திலே யருளிச்செய்தது.

**விளக்கம் -** (ஸாந்தீபநி புத்ரனையும், வைதிகன் புத்ரர்களையும் மீட்டுக் கொண்டு வந்தாப் போலே அரியன செய்தும் அவர்களபேக்ஷிதங்களைத் தலைக்கட்டியும்) - இது விருப்பங்கள் நிச்சயமாக நிறைவே(ற்)றும் தன்மை, அதாவது ஸத்யகாம தன்மை. பெரியாழ்வார் திருமொழி (4-8-1) - மாதவத்தோன் புத்திரன்போய் மறி கடல்வாய் மாண்டானை - என்பதற்கு ஏற்ப முன்பு ஸமுத்ரத்தால் கொண்டு செல்லப்பட்ட ஸாந்தீபநி முனிவரின் புத்ரனையும், பெரியாழ்வார் திருமொழி (4-8-2) – பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகளை நால்வரையும் - என்பதற்கு ஏற்ப பிறந்த உடனேயே பெரியாழ்வார் திருமொழி (5-8-8) - என்னுடை மனைவி காதல்மக்களைப் பயத்தலும் காணாள் - என்பதற்கு ஏற்ப குழந்தை பிறந்த உடனேயே அதன் தாய் காண இயலாதபடி, பரமபதத்தில் உள்ள நாச்சிமார்கள் தங்களுடைய சுதந்திரத்தால் அவைகளை தங்களிடம் அழைத்துச் செல்ல, பெரியதிருமொழி (1-6-7) - தப்பின பிள்ளைகளை – என்பதற்கு ஏற்ப கைதப்பிச் சென்று சுடரொளியாய் நின்ற தன்னுடைய ஜோதியான பரமபதத்தில் இருந்த வைதிகனுடைய புத்திரர்களையும்; பெரியாழ்வார் திருமொழி (4-8-1) - உருவுருவே கொடுத்தான் – என்றும், திருவாய்மொழி (3-10-5) - உடலொடும் கொண்டு கொடுத்தவனை – என்றும் கூறுவதற்கு ஏற்ப, அவரவர்களுடைய ரூபங்களுடன் மீட்டுக் கொண்டு வந்து அளித்தது போன்று, செய்வதற்கு அரிய செயல்களைச் செய்து அடியார்களுடைய விருப்பங்களை முடித்து வைக்கிறான். இது, "ஆச்ரித ரக்ஷண விஷயோ மநோரத: காம: ஸ: ப்ரதிஹதோ அபவதீதி ஸத்யகாம: - அடியார்களைக் காப்பாற்றுதல் என்னும் எண்ணமானது காமம் எனப்படும்; அத்தகைய காமம் என்பது தடையின்றி உள்ளது என்பதால், ஸத்யகாமன் எனப்படுகிறான்" என்பதற்கு ஏற்ப ஸத்யகாமனாக

உள்ளதால் ஆகும். நடுவில்திருவீதிப்பிள்ளை பட்டர் தத்வத்ரயத்தில், "ஸத்யகாமனாகையாவது, ஸாந்தீபநி புத்ரனைக் கொண்டு வந்தாப்போலே ஸகல அபேக்ஷிதங்களும் முடிக்கவல்லனாகை – ஸாந்தீபநியின் புத்திரனை மீண்டும் கொண்டு வந்தது போன்று அனைத்து விருப்பங்களையும் முடிக்கவல்லவன் என்பதே ஸத்யகாமனா இருத்தல் ஆகும்" என்று அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** (அவர்களுக்கு த்ருவபதம்போலே பண்டில்லாதவற்றையு முண்டாக்கியும்) இது, ஸத்யஸங்கலபத்வ கார்யம். உதாநபாத புரனான த்ருவனுக்கு, ஸ்வர்கத்தினுடைய ஊர்த்வாவதியிலே அபூர்வமாயிருப்பதொரு பதம் கல்பித்துக் கொடுத்தாப்போலே ஆச்ரிதர்க்குப் பண்டில்லாதவற்றையு முண்டாக்குகிறது, அபூர்வ போக்யங்களை ஸ்ருஷ்டிக்கவல்ல அமோக ஸங்கலபனாகையாலேயிறே. "ஸத்யஸங்கல்பனாகையாவது, த்ருவ பதம்போலே பண்டில்லாதவற்றையு முண்டாக்கவல்லனாகை" என்று இதுவும் பட்டர் தாமே யருளிச்செய்தாரிறே.

**விளக்கம் -** (அவர்களுக்கு த்ருவபதம்போலே பண்டில்லாதவற்றையுமுண்டாக்கியும்) - இது, தனது எண்ணங்கள் அனைத்தும் எந்தத் தடையும் இன்றி முடியும் தன்மையாகும்; அதாவது ஸத்யஸங்கல்பத்வம் ஆகும். உத்தாநபாதன் என்பவனுடைய புத்திரனாகிய துருவனுக்கு, ஸ்வர்க்கத்தின் மேல் எல்லையில், இதுவரை படைக்கப்படாத ஒரு அற்புதமான இடம் அமைத்துக் கொடுத்தது போன்று, இதுவரை இல்லாத ஒன்றை அடியார்களுக்காக உண்டாக்கித் தருதல் என்பது, இதுவரை காணாத இன்பங்களைப் படைக்கவல்ல மிகப் பெரிய ஸங்கல்பம் கொண்டவன் என்பதால் ஆகும். இதனை நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டர், "ஸத்யஸங்கல்பனாகையாவது, த்ருவ பதம் போலே பண்டில்லாதவற்றையு முண்டாக்கவல்லனாகை - ஸத்யஸங்கல்ப தன்மை என்பது, துருவ இடம் போன்று, முன்பு இல்லாதவற்றை உண்டாக்கவல்லவன் ஆகும்" என்றார்.

**வ்யாக்யானம் -** (தம் தாம் ஸ்வம் தாம் தாம் விநியோகங் கொண்டாப் போலேயிருக்கத் தன்னையும் தன்னுடைமையையும் வழங்கி) இது, ஔதார்ய கார்யம். "வரத ஸகலமேதத் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த" என்கிறபடியே தங்களுடைமையைத் தாங்கள் விநியோகங் கொளளுமாபோலே விநியோகங் கொள்ளலாம்படி. ஆத்ம ஆத்மீயங்களை ஆச்ரிதர்க்குக் கொடுக்கிறது, கொடுத்தோம் என்னுமபிமாநம் தன்னெஞ்சில் இல்லாதபடியாகவும் கொள்ளுமவர்களுக்கு ப்ரத்யுபகாரந் தேடி நெஞ்சாறல்பட வேண்டாதபடியாகவும் கொடுக்கும் பரம உதாரனாகையாலேயிறே.

**விளக்கம் -** (தம் தாம் ஸ்வம் தாம் தாம் விநியோகங் கொண்டாப் போலேயிருக்கத் தன்னையும் தன்னுடைமையையும் வழங்கி) - இது வள்ளல் தன்மை; அதாவது ஔதார்யம் ஆகும். ஸ்ரீவரதராஜஸ்தவம் (63) - வரத ஸகலமேதத் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த – வரதா! இங்கு உள்ள அனைத்து இனிமையான பொருள்களையும் உனது அடியார்களுக்காக உண்டாக்கினாய் - என்பதற்கு ஏறப, தங்களுக்கு உரிமையான பொருள்களைத் தாங்கள் எவ்விதம் வேண்டுமானாலும் பயன்படுத்துவது போன்று, ஆத்மாவையும் அதனைச் சார்ந்தவற்றையும் அடியார்களுக்கு அளிக்கிறான்; இந்தத் தன்மையானது, இவ்விதம் அளிக்கும்போது, "இதனை அளித்தோம்" என்று எண்ணாமலும், அதனைப் பெற்றவர்களுக்கும் "இதனைப் பெறுவதற்கு நமக்கு எந்தவிதமான கைம்மாறும் இல்லையே" என வருந்தாதபடியாகவும் அளிப்பது, அவனுடைய வாத்ஸல்ய தன்மை காரணமாகவே ஆகும்.

**வ்யாக்யானம் -** (அவர்கள் கார்யம் தலைக்கட்டினால், தான் க்ருதக்ருத்யனாய்) இது, க்ருதிதவ கார்யம். ஆச்ரிதர் கார்யம் தலைக்கட்டினால், அவர்கள் க்ருதக்ருத்யராகை யன்றிக்கே, "அபிஷிச்ய ச லங்காயாம்" இத்யாதிப்படியே தான் க்ருதக்ருத்யனாகிறது, ஆச்ரித ரக்ஷணம் பெற்றால் பேறு தன்னதாயிருக்கும் ஸ்வபாவத்தாலேயிறே. "க்ருதியாகையாவது ஆச்ரிதருடையவபேக்ஷிதம் பூர்ணமானால் தான் க்ருதக்ருத்யனாகை" என்றிறே பட்டரும் அருளிச்செய்தது.

**விளக்கம் -** (அவர்கள் கார்யம் தலைக்கட்டினால், தான் க்ருதக்ருத்யனாய்) - இது செய்து முடிக்க வேண்டியவற்றைச் செய்து முடிக்கும் தன்மை ஆகும். அடியார்களுடைய செயல்கள் நிறைவேறப் பெற்றால், அவர்கள் தங்களுடைய "செய்யவேண்டிய செயல் செய்யப்பட்டதாயிற்று" என்று எண்ணுவதற்குப் பதிலாக, பாலகாண்டம் - அபிஷிச்ய ச லங்காயாம் - அரக்கர்களுக்கு அரசனாக இலங்கையில் - என்பதற்கு ஏற்ப, தான் செய்ய வேண்டிய செயலைச் செய்து முடித்த நிலையில் உள்ளான்; இத்தகைய எண்ணம் ஏன் ஏற்படுகிறது என்றால், அடியார்கள் காப்பாற்றப் பெற்றால், அந்தப் பேறானது தன்னுடையதாக இருக்கும் என்று எண்ணும் இயல்பால் ஆகும். நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டர், "க்ருதியாகையாவது ஆச்ரிதருடைய அபேக்ஷிதம் பூர்ணமானால் தான் க்ருதக்ருத்யனாகை – அடியார்களுடைய விருப்பமானது

நிறைவேறினால் மட்டுமே தனது செய்யவேண்டிய செயல் நிறைவேறியதாக எண்ணுதல் இந்தக் குணம் ஆகும்", என்று அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** (தான் செய்த நன்மைகளொன்றையும் நினையாதே அவர்கள் செய்த ஸுக்ருதலவத்தையே நினைத்து) இது, க்ருதஜ்ஞதா கார்யம். தன் திறத்திலேயொரு சரணோக்தி முதலான ஸுக்ருத லேசத்தைப பண்ணினால் அவர்களுக்குத் தான் எல்லா நன்மைகளுஞ் செய்தாலும் அவற்றையொன்றையும் நினையாதே, அவர்கள் செய்த ஸுக்ருதலவத்தையே நினைத்திருக்கிறது, செய்த நன்றி அறியுமவனாகையாலேயிறே. "க்ருதஜ்ஞனாகையாவது, ஆச்ரிதருடைய ஸுக்ருதலவத்தை யொன்றையுமே நினைத்து தான் செய்த நன்மைகளொன்றும் பாராதேயிருக்கை" என்று இதுவும் பட்டரருளிச் செய்தார்.

**விளக்கம் -** (தான் செய்த நன்மைகளொன்றையும் நினையாதே அவர்கள் செய்த ஸுக்ருதலவத்தையே நினைத்து) – இது, செய்த நன்றியை எண்ணியபடி உள்ள தன்மை ஆகும். தன்னிடம் வந்து "சரணம் புகுந்தேன்" என்பது முதலான புண்ணிய செயல்களைச் செய்தால், அவர்களுக்கு ஏற்ற அனைத்து நன்மைகளையும் செய்து கொடுத்து, ஆயினும் அவற்றை எண்ணிப் பார்க்காமல், அவர்கள் செய்த அந்த புண்ணியத்தை மட்டுமே எண்ணியபடி இருத்தல் என்பது செய்ந்நன்றி அறியும் தன்மை கொண்டவன் என்பதால் ஆகும். நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டர், "க்ருதஜ்ஞனாகையாவது, ஆச்ரிதருடைய ஸுக்ருதலவத்தை யொன்றையுமே நினைத்து தான் செய்த நன்மைகளொன்றும் பாராதேயிருக்கை – அடியார்கள் செய்த புண்ணிய செயலை மட்டுமே நினைத்து, தான் அவர்களுக்குச் செய்த நன்மையை ஆராயாமல் இருத்தல்" என்று அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் –** (அநாதிகாலம் வாஸிதங்களான ரஸங்களை மறக்கும்படி யெல்லா தசையிலும் இனியனாய்) இது மாதுர்ய கார்யம். அநாதிகாலமே பிடித்துக் கொளுந்திக் கிடக்கிற ப்ராக்ருத விஷய ரஸங்களை விஸ்மரிக்கும்படி ஸர்வாவஸ்தையிலும் இனியனாகிறது, "ஸர்வரஸ:" என்கிறபடியே, நிரதிசய போக்யனாயிருக்கையாலேயிறே.

**விளக்கம் -** (அநாதிகாலம் வாஸிதங்களான ரஸங்களை மறக்கும்படி யெல்லா தசையிலும் இனியனாய்) - இது இனிமையின் செயலாகும். எல்லையற்ற காலமாக ஆத்மாவைப் பற்றியபடி உள்ள புலன் விஷயங்களின் சுவையை மறந்து போகும்படியாக, அனைத்து நிலைகளிலும் இனிமையானவனாக உள்ளான்; இது, சாந்தோக்யத்தில் - ஸர்வரஸ: -

அனைத்து சுவைகளும் ப்ரஹ்மமே – என்பதற்கு ஏற்ப, எல்லையற்ற இன்பம் உள்ளவனாக இருப்பதால் ஆகும்.

**வ்யாக்யானம் -** (பார்யா புத்ராதிகள் குற்றங்களைக் காணாக்கண்ணிட்டிருக்கும் புருஷனைப் போலே அவர்கள் குற்றங்களைத் திருவுள்ளத்தாலே நினையாதே) இது, சாதுர்ய கார்யம். பார்யா புத்ராதிகளோடே கூடி வர்த்திப்பானொரு புருஷன் அவர்கள் செய்கிற குற்றங்களைக் கண்டிருக்கச் செய்தேயும் காணாதாரைப் போலே யிருக்குமாப்போலே, ஆச்ரிதர் செய்த குற்றங்களைக் கண்டிருக்கச் செய்தேயும் திருவுள்ளத்தால் நினையாதிருக்கிறது, ஆச்ரித தோஷங்களைத் தெரியாதபடி மறைக்கவலல சதுரனாகையாலேயிறே. (குற்றங்களைப் பெரியபிராட்டியார் காட்டினாலும் அவளோடே மறுதலைத்துத் திண்ணியனாய் நின்று ரக்ஷித்து) இது, ஸ்த்தைர்ய கார்யம். சொன்னது செய்ய வேண்டும்படி தனக்கு அபிமதையாய், சேதநர் குற்றங்களைப் பொறுப்பித்துச் சேரவிடும் பெரியபிராட்டியார், "தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல்" என்கிறபடியே குற்றங்களைக் காட்டினாலும், "என்னடியாரது செய்யார், செய்தாரேல் நன்று செய்தார்" என்று, அவளோடே மறுதலைத்து நிச்சலனாய் நின்று ரக்ஷிக்கிறது ஸ்த்திர ஸ்வபாவனாகையாலேயிறே.

**விளக்கம் -** (பார்யா புத்ராதிகள் குற்றங்களைக் காணாக்கண்ணிட்டிருக்கும் புருஷனைப் போலே அவர்கள் குற்றங்களைத் திருவுள்ளத்தாலே நினையாதே) - இது சாதுர்ய குணத்தின் செயலாகும். மனைவி மற்றும் குழந்தைகளுடன் சேர்ந்து வாழும் ஒருவன், அவர்கள் செய்யும் குற்றங்களை நோக்கினாலும், அவற்றைக் காணாமல் இருப்பது போன்று, அடியார்கள் செய்யும் குற்றங்களைக் காணநேரிட்டாலும், அவற்றைத் தனது திருவுள்ளத்தால் சிந்திக்காமல் உள்ளான்; இது அடியார்களுடைய குற்றங்களை வெளியில் தெரியாதபடி மறைக்கவல்ல திறன் கொண்டவன் என்பதால் ஆகும். (குற்றங்களைப் பெரியபிராட்டியார் காட்டினாலும் அவளோடே மறுதலைத்துத் திண்ணியனாய் நின்று ரக்ஷித்து) - இது தைர்யத்தின் செயலாகும். "அவள் கூறுவதைச் செய்யவேண்டும்" என்பதற்கு ஏற்றபடி தனக்கு மிகவும் ப்ரியமானவளாக, சேதநர்களுடைய குற்றங்களை மன்னித்து, தன்னிடம் சேரும்படியாகச் செய்யும் பெரியபிராட்டியார், பெரியாழ்வார் திருமொழி (4-9-2) – தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் - என்பதற்கு ஏற்ப சேதநர்களுடைய தோஷங்களைச் சுட்டிக் காண்பித்தாலும் கூட, பெரியாழ்வார் திருமொழி (4-9-2) - என்னடியாரது செய்யார், செய்தாரேல் நன்று செய்தார் - என்பதற்கு ஏற்ப

அவளுடைய கூற்றையும் மறுத்து, உறுதியாக நின்று, அடியார்களைக் காப்பாறுதல் என்பது, இத்தகைய உறுதியான இயல்பு கொண்டதால் ஆகும்.

**வ்யாக்யானம் -** (காமிநியுடைய அழுக்கு உகக்கும் காமுகனைப்போலே அவர்கள் தோஷங்களை போக்யமாகக் கொண்டு) இது ப்ரணயித்வ கார்யம். காமிநி விஷயத்தில் ப்ராவண்யத்தாலே யவளுடம்பிலழுக்கை விரும்பும் காமுகனைப்போலே, ஆச்ரிதரானவர்களுடைய ப்ரக்ருதி ஸம்பந்ததாதி தோஷங்களை போக்யமாகக் கொள்ளுகிறது பரமப்ரணயியாகையாலேயிறே.

**விளக்கம் -** (காமிநியுடைய அழுக்கு உகக்கும் காமுகனைப்போலே அவர்கள் தோஷங்களை போக்யமாகக் கொண்டு) - இது காதலுடைய செயலாகும். தான் விரும்பும் ஒரு பெண்ணின் சரீரத்தில் உள்ள அழுக்கையும் விரும்பும் காமுகன் போன்று, அடியார்களுக்கு ப்ரக்ருதி ஸம்பந்தம் காரணமாக ஏற்படும் தோஷங்களையும் கூட இனிமையாக கொள்ளும் நிலையானது, அவர்களிடம் உள்ள மிகுந்த அன்பு காரணமாக அல்லவோ?

**வ்யாக்யானம் -** (அவர்கள்பக்கல் கரண த்ரயத்தாலும் செவ்வியனாய்) இது, ஆர்ஜவ கார்யம். மநோவாக்காயங்கள் மூன்றிலும் செவ்வைக் கேடராயிருக்குமவர்கள் பக்கலிலே, நீரேறாமேடுகளிலே விரகாலே நீரேற்றுவாரைபபோலே தன்னையமைத்து த்ரிவித கரணங்களாலும் செவ்வியனாய்ப் போருகிறது, ருஜு ஸ்பாவனாகையாலேயிறே. (பிரிந்தால் அவர்கள் வ்யஸநம் குளப்படியென்னும்படி தான் ஈடுபட்டு) இது மார்தவ கார்யம். “ஊர்த்வம் மாஸாந் ந ஜீவிஷ்யே” என்றால், “ந ஜீவேயம் க்ஷணமபி” எனகிறபடியே தன்னைப் பிரிந்தால் ஆச்ரிதர்படும் வ்யஸநம், கடல் போன்ற தன் வ்யஸநத்துக்கு ஒரு குளப்படி மாத்ரமென்னும்படி தான் க்லேசப்படுகிறது, ஆச்ரித விரஹம் பொறுக்கமாட்டாத மென்மையாலேயிறே.

**விளக்கம் -** (அவர்கள்பக்கல் கரண த்ரயத்தாலும் செவ்வியனாய்) - இது நேர்மை குணத்தின் செயல் ஆகும். மனம், வாக்கு, சரீர செயல் ஆகிய மூன்றிலும் ஒழுக்கக் கேடு கொண்டபடி உள்ளவர்களிடம், நீரை ஏற்ற முடியாத மேட்டுப்பாங்கான பகுதிகளில் தகுந்த வழிகளைக் கொண்டு நீரை ஏற்றுவது போன்று தன்னை அமைத்துக்கொண்டு, மூன்றுவிதமான கரணங்களாலும் சீராக உள்ளான் என்பது நேர்மையான இயல்பால்

அல்லவோ? (பிரிந்தால் அவர்கள் வ்யஸநம் குளப்படியென்னும்படி தான் ஈடுபட்டு) - இது மென்மை குணத்தின் செயல்பாடு ஆகும். ஸுந்தரகாண்டம் (38-10) - ஊர்த்வம் மாஸாந் ந ஜீவிஷ்யே – இராமனைப் பிரிந்து நான் ஒரு மாதத்திற்கு மேல் வாழ மாட்டேன் – என்று அவள் கூறினால், ஸுந்தரகாண்டத்தில் - ந ஜீவேயம் க்ஷணமபி – அவளைப் பிரிந்து நான் ஒரு நொடியும் இருக்கமாட்டேன் – என்று இராமன் கூறுவதற்கு ஏற்ப, தன்னை விட்டு அடியார்கள் பிரிய நேரிட்டால் அவர்களுக்கு ஏற்படும் துன்பமானது, அவர்களைப் பிரிய நேர்ந்தால் தனக்கு ஏற்படும் துன்பக்கடலின் ஒரு சிறிய பகுதி மட்டுமே என்பதற்கு அவன் துயரம் அடைகிறான்; இது, தனது அடியார்களுடைய பிரிவைப் பொறுக்க இயலாத மென்மையான இயல்பால் அல்லவோ?

**வ்யாக்யானம் -** (அவர்களுக்குப் பாங்காகத் தன்னைத் தாழவிட்டு) இது, ஸௌசீல்ய கார்யம். ஜந்மாதிகளால் தண்ணியராயிருக்குமவர்களுக்கு அநுகூலமாக ஸர்வேச்வரன், ஸர்வோத்க்ருஷ்டனான தன்னைத் தாழவிடுகிறது சீலவத்தையாலேயிறே. (அவர்களுக்குக் கட்டவும் அடிக்கவுமாம்படி யெளியனாய்) இது, ஸௌலப்ய கார்யம். அவதார தசையிலே நவநீத சௌர்ய வ்யாஜத்தாலே "சிக்கென வார்த்தடிப்ப" என்கிறபடியே, யசோதாதிகளுக்குக் கட்டவும் அடிக்கவும் ஆம்படி யெளியனாயிற்றது, "எளிவரு மியல்வின" னாகையாலேயிறே.

**விளக்கம் -** (அவர்களுக்குப் பாங்காகத் தன்னைத் தாழவிட்டு) – இது, உயர்வு தாழ்வு ஆராயாமல் பழகும் குணத்தின் செயலாகும். பிறப்பு போன்ற பலவற்றாலும் தாழ்வாக உள்ளவர்கள் விஷயத்தில், தான் மிகவும் உயர்ந்தவன் என்றபோதிலும், தாழ்வாக இறங்கி வந்து நிற்பது என்பது இத்தகைய சீல குணத்தால் அல்லவோ? (அவர்களுக்குக் கட்டவும் அடிக்கவுமாம்படி யெளியனாய்) – இது எளிமைக் குணத்தின் செயலாகும். க்ருஷ்ணனாக அவதாரம் செய்தபோது வெண்ணெய் களவு செய்து, சிறிய திருமடலில் - சிக்கென வார்த்தடிப்ப – என்று கூறுவதற்கு ஏற்ப, யசோதை முதலானவர்கள் கட்டுவதற்கும், அடிப்பதற்கும் ஏற்றபடி எளியவனாக நின்றான்; இது திருவாய்மொழி (1-3-2) – எளிவரும் இயல்வினன் – என்பதால் ஆகும்.

**வ்யாக்யானம் -** (அன்றீன்ற கன்றுக்குத் தாயிரங்கி முன்னணைக் கன்றையும் புல்லிட வந்தவர்களையும் கொம்பிலும் குளம்பிலுமேற்குமா போலே, பெரியபிராட்டியாரையும் ஸூரிகளையும் விட்டு ஸ்நேஹித்துக் கொண்டு போரும்) இது, வாத்ஸல்ய கார்யம்.

அன்று தான் பெற்ற கன்றுக்குத் தாயான பசுவிரங்கி முன்பு தான் ஸ்நேஹித்துக் கொண்டு போந்த முன்னணைக் கன்றையும் தனக்கு போக்யமான புல்லிட வந்தவர்களையும் உட்பட மூசிக் கொம்பிலே கோத்தெடுப்பது குளம்பாலே மிதிப்பதாமாப்போலே, பரிரம்பணாதி போகோபகாரிகையான பெரியபிராட்டியாரையும் முன்பு ஸ்நேஹ விஷயமாய்ப் போந்த நித்யஸூரிகளையும் தள்ளிவிட்டு, இன்று ஆச்ரயித்தவர்களை ஸ்நேஹித்துக் கொண்டு போருகிறது, வத்ஸலனாகையாலேயிறே.

**விளக்கம்** - (அன்றீன்ற கன்றுக்குத் தாயிரங்கி முன்னணைக் கன்றையும் புல்லிட வந்தவர்களையும் கொம்பிலும் குளம்பிலுமேற்குமா போலே, பெரியபிராட்டியாரையும் ஸூரிகளையும் விட்டு ஸ்நேஹித்துக் கொண்டு போரும்) - இது கன்றிடம் பசுமாடு காண்பிக்கும் தாய்ப்பாச குணம் காரணமாக ஆகும். அப்போது ஈந்த கன்றிடம் இரக்கம் கொள்ளும் தாய்ப்பசு, முன்பு தான் ஈன்ற முதல் கன்றையும், தனக்கு உணவு அளிக்க வந்தவர்களையும் கூட கொம்பால் முட்ட முயல்வது, தனது குளம்பால் மிதிப்பது போன்ற செயல்களைச் செய்கிறது; இது போன்று, தன்னை தழுவிக் கொள்ளுதல் போன்றவற்றைச் செய்யும் பெரியபிராட்டியார், முன்பு மிகுந்த நட்புடன் நின்ற நித்யஸூரிகள் போன்றவர்களையும் கூடத் தள்ளி, இப்போது தன்னிடம் வந்து சரணம் புகுந்தவர்களைச் சிநேகித்தபடி இருத்தல் என்பது, வாத்ஸல்ய குணம் கொண்டவனாக உள்ளதால் ஆகும்.

**அவதாரிகை** – ஆக, “ஜ்ஞாந சக்தயாதி கல்யாண குணகண பூஷிதனாய்” என்றத்தை விஸ்தரேண உபபாதித்தாராய் நின்றார் கீழ்; அநந்தரம், “ஸகல ஜகத் ஸர்க்க ஸ்திதி ஸம்ஹார கர்த்தாவாய்” என்றத்தை விஸ்தரேண உபபாதிப்பதாக வுபக்ரமிக்கிறார் (இவனே ஸகல ஜகத்துக்கும் காரணபூதன்) என்று.

**விளக்கம்** - ஆக, சூர்ணை (141) - ஜ்ஞாந சக்தயாதி கல்யாண குணகண பூஷிதனாய் - என்பதை இதுவரை விரிவாக விளக்கியபடி இருந்தார். அடுத்து, சூர்ணை (141) - ஸகல ஜகத் ஸர்க்க ஸ்திதி ஸம்ஹார கர்த்தாவாய் - என்பதை விரிவாக விளக்குவதற்குத் தொடக்குகிறார்

152. இவனே ஸகல ஜகத்துக்கும் காரணபூதன்.

**வ்யாக்யானம் –** “இவன்” என்று கீழ்ச்சொன்ன விலக்ஷண ஸ்வரூப குண விசிஷ்டனான ஈச்வரனைப் பராமர்சிக்கிறது; அவதாரணத்தாலே, ஜகத்காரணத்வத்தினுடைய அந்யயோக வ்யவச்சேதம் பண்ணுகிறது. வேதாந்தத்திலே, “ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்” என்று சாந்தோக்யத்திலும், “ப்ரஹ்ம வா இதமேகமேவாக்ர ஆஸீத்” என்று வாஜஸநேயகத்திலும், “ஆத்மா வா இதமேகமேவாக்ர ஆஸீத்” என்று ஐதரேயகத்திலும் ஸத் ப்ரஹ்மாத்மரூப ஸாமாந்ய சப்தங்களாலே சொல்லப்பட்ட காரணவஸ்துவேது? என்னுமாகாங்க்ஷையிலே, கதிஸாமாந்ய ந்யாயத்தாலே “ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்” என்று மஹோபநிஷத்திலே விசேஷிக்கப்பட்ட நாராயணனே ஜகத் காரணபூதனாக நிச்சயித்திருக்கும் பரமவைதிகராகையாலே, (இவனே) என்று ஸாவதாரணமாக வருளிச்செய்கிறார். (ஸகல ஜகத்துக்கும் காரணபூதன்) என்றது ஸமஷ்டி, வ்யஷ்டி ரூப ஸமஸ்த கார்யங்களுக்கும் காரணபூதனென்றபடி. இத்தால், ஸமந்வயமும், அவிரோதமும், ஸாதநமும், பலமும் ஆகிற அர்த்த சதுஷ்டயத்தையும் அடைவே ப்ரதிபாதிக்கிற உத்தரமீமாம்ஸையில் அத்யாய சதுஷ்டயத்திலும் வைத்துக்கொண்டு, “அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா” என்று ஜிஜ்ஞாஸ்யமாகச் சொல்லப்பட்ட ப்ரஹ்மத்துக்கு லக்ஷணமாக “ஜந்மாத்யஸ்ய யத:” என்று ஜகத்காரணத்வத்தைச் சொல்லி, அதினுடைய அயோக அந்யயோக வ்யவச்சேத முகத்தாலே, ஜகத்காரண வஸ்து ப்ரதிபாதக ஸகல வேதாந்த வாக்யங்களுக்கும், ப்ரஹ்மணி ஸம்யக் அந்வயத்தை ப்ரதிபாதித்த ப்ரதமாத்யாயத்தின் அர்த்தத்தை யருளிச்செய்தாராயிற்று.

**விளக்கம் -** “இவன்” என்று, முன்பு கூறப்பட்ட மேன்மையுடைய ஸ்வரூப குணங்களைக் கொண்டவனாகிய ஈச்வரனைக் கூறுகிறார். “இவனே” என்பதில் உள்ள ஏவகாரம் மூலம், இத்தகைய ஜகத்காரணப் பொருளின் அந்யயோக வ்யவச்சேதம் செய்கிறார் [“ஒரு பொருள் அல்லது ஒரு தன்மை பல இடங்களிலும் உள்ளது” என்று கூறுபவர்களை நோக்கி, “அந்தப் பொருள் அல்லது தன்மை ஓர் இடத்தில் மட்டுமே உள்ளது” என்று நிரூபிப்பதாகும். உதாரணமாக “ஜகத்திற்கு பலவும் காரணம்” என்று கூறுபவர்களிடம் “ஜகத்திற்கு ப்ரஹ்மம் மட்டுமே காரணம்” என்று நிரூபிப்பதே அந்யயோக வ்யவச்சேதம் ஆகும்]. வேதாந்தங்களில், சாந்தோக்யத்தில் – ஸத் ஏவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத் – குழந்தாய்! தொடக்கத்தில் ஸத் என்பது மட்டுமே இருந்தது - என்றும், ப்ருஹத்தில் - ப்ரஹ்ம வா இதம் ஏகம் ஏவ அக்ர ஆஸீத் - தொடக்கத்தில் ப்ரஹ்மம் என்பது மட்டுமே இருந்தது – என்றும், ஐதரேயகத்தில் - ஆத்வா வா இதம் ஏகம் ஏவ அக்ர ஆஸீத் தொடக்கத்தில் ஆத்மா என்பது மட்டுமே இருந்தது – என்றும் உள்ள வாக்கியங்களில்,

“ஸத், ப்ரஹ்ம, ஆத்மா” என்பது போன்ற பொதுவான பதங்களால் கூறப்பட்ட காரண வஸ்து எது என்று சந்தேகத்தில், சொற்களில் போக்கு அமைந்துள்ள ந்யாயத்தால், மஹாநாராயண உபநிஷத்தில் உள்ள - ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் – நாராயணன் மட்டுமே இருந்தான் – என்று சிறப்பாகக் கூறப்பட்ட நாராயணனே ஜகத்காரணப் பொருள் ஆவான் என்று உறுதிபட நிச்சயித்துள்ள பரமவைதிகர் என்பதால், “இவனே” என்று சூர்ணையில், ஏவகாரத்தில் அருளிச்செய்கிறார். (ஸகல ஜகத்துக்கும் காரணபூதன்) - என்பதன் மூலம் தனித்தனியான வஸ்துக்கள் மற்றும் தொகுத்த வஸ்துக்கள் என்பதாக உள்ள அனைத்திற்கும் இவனே காரணம் ஆகிறான் என்பதையும் கூறுகிறார். இதன் மூலம் ப்ரஹ்மஸூத்ரத்தில் ஸமந்வயம், அவிரோதம், ஸாதநம் மற்றும் பலம் ஆகிய நான்கு விஷயங்களையும் முற்றிலுமாக உரைக்கின்ற உத்தரமீமாம்ஸையில் உள்ள நான்கு அத்யாயங்களையும் வைத்துக்கொண்டு, ப்ர. ஸூ. (1-1-1) – அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸ - அதன் பின்னர் ஆகவே ப்ரஹ்மத்தை அறிவதில் ஆர்வம் - என்பதாக அறியப்படுவதில் ஆர்வம் கொண்ட வஸ்துவாகக் கூறப்பட்ட ப்ரஹ்மத்திற்கு, ப்ர. ஸூ. (1-1-2) - ஜந்மாத்யஸ்ய யத: - என்பதான ஜகத்காரணமாக உள்ள தன்மையைக் கூறி, அத்தகைய ப்ரஹ்மத்தின் அயோக அந்யயோக வ்யவச்சேதம் [“ஓர் இடத்தில் ஒரு பொருள் அல்லது ஒரு தன்மை இல்லை” என்று கூறுபவர்களை நோக்கி, “அங்கு அந்தப் பொருள் அல்லது தன்மை உள்ளது” என்று நிரூபிப்பதாகும். உதாரணமாக “ப்ரஹ்மம் ஜகத்காரணம் இல்லை” என்று கூறுபவர்களிடம் “ப்ரஹ்மமே ஜகத்காரணம் ஆகும்” என்று நிரூபித்தலே அயோக அந்யயோக வ்யவச்சேதம் ஆகும்] என்பதன் மூலம், ஜகத்காரண வஸ்துவை வெளிப்படுத்தும் அனைத்து வேதாந்த வாக்கியங்களுக்கும், ப்ரஹ்மத்தின் பெருமையை வெளிப்படுத்தும் முதல் அத்யாயத்தின் அர்த்தத்தை வெளிப்படுத்தினார் என்றாயிற்று.

## 153. சிலர் பரமாணுவைக் காரணமென்றார்கள்.

**அவதாரிகை –** அவிரோத ப்ரதிபாதகமான த்விதீயாத்யாயத்திற்படியே ப்ரஹ்ம காரணத்வ விரோதியான பரமாணு காரணவாதிகளை நிராகரிக்கிறார் (சிலர் பரமாணுவை காரணமென்றார்கள்) என்று தொடங்கி.

**விளக்கம் -** விரோதி வாதங்களை விலக்குவதாக உள்ள இரண்டாவது அத்யாத்தின்படி, ப்ரஹ்மமே ஜகத்காரணம் என்பதற்கு விரோதமாகப் பொருள் கூறுவதான, பரமாணுவே ஜகத்காரணம் என்னும் வாதங்களை இங்கு தள்ளுகிறார்.

**வ்யாக்யானம் -** சிலரென்று பௌத்த ஆர்ஹத வைசேஷிகாதிகளைச் சொல்லுகிறது. இதில் பௌத்த ஆர்ஹதர்க்கு கேவல பரமாணுக்களே ஜகத்காரணமாக மதமாயிருக்கும்; வைசேஷிகாதிகளுக்கு பரமாணுக்கள் உபாதாநகாரணமாய், ஆநுமாநிகேச்வரன் நிமித்த காரணமாக மதமாயிருக்கும். இவர்களில் பௌத்த வைசேஷிகாதிகள், பார்த்திவாப்யதைஜஸவாயவீயங்களென்று, பரமாணுக்களை சதுர்விதமாகக் கொள்ளுவர்கள்; ஆர்ஹதர் ஏகரூபமாகக் கொள்ளுவர்கள். இங்ஙனே சில விசேஷங்கள் உண்டானாலும், பரமாணு காரணத்வ அங்கீகாரம் எல்லார்க்கும் ஒத்திருக்கையாலே சிலரென்று ஸமுச்சித்ய உபாதாநம் பண்ணுகிறார்.

**விளக்கம் -** "சிலர்" என்பதன் மூலம் பௌத்தர்கள், ஜைனர்கள் மற்றும் வைசேஷிகர்கள் போன்றவர்கள் கூறப்படுகிறார்கள். இதில் பௌத்தர்கள் மற்றும் ஜைனர்கள் ஆகியவர்களுக்கு, "பரமாணுக்களே ஜகத்காரணம்" என்பதே கருத்தாக உள்ளது. வைசேஷிகர்கள் பரமாணுக்களே ஜகத்தின் உபாதானக்காரணம் என்றும், அநுமானத்தால் கற்பிக்கப்பட்ட ஈச்வரனே ஜகத்தின் நிமித்தகாரணம் என்றும் கூறுவர். இவர்களில் பௌத்தர்கள் மற்றும் வைசேஷிகர்கள் ஆகிய இருவரும் பூமி, நீர், அக்னி மற்றும் வாயு ஆகியற்றைப் பரமாணுக்களாக நான்குவிதங்களாகக் கொள்வர். ஜைனர்கள் ஒரேவிதமாகக் கொள்வர். இப்படியாக ஒரு சில விசேஷங்கள் உள்ளது என்றாலும், பரமாணுக்களே ஜகத்காரணம் என்பதை ஒரே போன்று இவர்கள் ஏற்றதால், "சிலர்" என்று ஒன்றாகக் கூட்டி உரைக்கிறார்.

154. பரமாணுவில் ப்ரமாணமில்லாமையாலும் ச்ருதி விரோதத்தாலும் அது சேராது.

**அவதாரிகை -** இவர்கள் மஹீ மஹீதராதி ஸகலகார்யங்களும் பரமாணு பரிணாமமென்றிறே சொல்லுவது; அந்த பக்ஷத்தை நிராகரிக்கிறார்.

**விளக்கம் -** இவர்கள், பூமி மற்றும் மலை போன்ற அனைத்து கார்யப்பொருள்களும் பரமாணுவின் மாற்றங்களால் ஏற்பட்டவை என்றே கூறுகிறாரகள். அந்தக் கருத்தைத் தள்ளுகிறார்.

**வ்யாக்யானம் -** (பரமாணுவில் ப்ரமாணமில்லாமையாலும் ச்ருதி விரோதத்தாலும் அது சேராது) என்று. அதாவது, ஜகத்காரணதயா அங்கீகரிக்கப்படுகிற பரமாணுக்கள் ப்ரதயக்ஷ ஸித்தமுமன்றியே ஆகமஸித்தமுமன்றியே அநுமாநத்தாலே ஸாதிக்கப் பார்க்கில், அது ஆகம விருத்தமான அர்த்தத்தை ஸாதிக்கமாட்டாமையாலே, அநுமாந ஸித்தமுமன்றியேயிருக்கையாலே, பரமாணு ஸத்பாவத்தில ஒரு ப்ரமாணமும் இல்லாமையாலும், ஈச்வரனே ஜகத்காரணம் என்கிற ச்ருதிக்கு விரோதமாகையாலும், பரமாணுக்கள் ஜகத்காரணம் என்றவது சேராதென்கை.

**விளக்கம் -** ஜகத்காரணமாக இவர்கள் கூறுகின்ற பரமாணுக்கள், ப்ரத்யக்ஷமாகக் காணக்கூடியவை அல்ல; ஆகமத்தால் புலப்படுவதும் இல்லை. அனுமானத்தாலும் நிரூபிக்க இல்லாத ஒன்றாகும்; காரணம், ஆகமத்திற்கு விரோதமான விஷயத்தை அனுமானம் நிரூபிக்காது. அநுமானத்தாலும் நிரூபிக்க இயலாது என்பதால், பரமாணுவின் இருப்பு என்பதற்கு எந்தவிமான ப்ரமாணமும் இல்லை என்பதாலும், இது "ஈச்வரனே ஜகத்காரணம்" என்ற ச்ருதிகளுக்கு முரணாக உள்ளதாலும், பரமாணுக்களே ஜகத்காரணம் என்ற கருத்து பொருந்தாது.

155. காபிலர் ப்ரதாநம் காரணமென்றார்கள்.

**அவதாரிகை -** அநந்தரம் ஜகத்துக்கு ப்ரக்ருதியே ஸ்வதந்த்ரகாரணம் என்று சொல்லுகிற காபிலமதத்தை நிராகரிக்கைக்காக அத்தை உத்க்ஷேபிக்கிறார் (காபிலர் ப்ரதாநம் காரணமென்றார்கள்) என்று.

**விளக்கம் -** அடுத்து, "ப்ரக்ருதியே ஜகத்தின் சுதந்திரமான காரணப்பொருள்" என்று கூறும் கபில மதத்தைத் தள்ளுவதற்காக, முதலில் அதன் கருத்தை உரைக்கிறார்.

**வ்யாக்யானம் -** காபிலரென்கிறது கபில மத நிஷ்ட்டரான ஸாங்க்யரை. ம்ருதாத்மகமான கடத்துககு ம்ருத த்ரவயமே காரணமாகிறாப்போலே ஸத்வ ரஜஸ் தமோமய ஸுக துக்க மோஹாத்மகமான ஜகத்துக்கும் குணத்ரயங்களினுடைய ஸாம்ய ரூபமான ப்ரதாநமே ஸ்வதந்த்ரமான காரணம். ததிபாவேந பரிணமியா நிற்கும் பயஸ்ஸுக்கு அநந்யாபேக்ஷமாக ஆத்யபரிஸ்பந்தம் முதலான பரிணாம பரம்பரை ஸ்வத ஏவ கூடுகிறாப்போலேயும் மேகவிமுக்தமாய், ஏக ரஸமாயிருக்கிற ஜலத்துக்கு நாரிகேள தால சூத கபித்த நிம்ப திந்த்ரிண்யாதி விசித்ர ரஸ ரூபேண பரிணாம ப்ரவ்ருத்தி

காணப்படுகிறாப் போலேயும், பரிணாம ஸ்வபாவமாய் ப்ரதிஸர்காவஸ்த்தையில் ஸத்ருச பரிணாமமுமாயிருந்த ப்ரதாநத்துக்கு அநந்யாதிஷ்ட்டிதமாகவே ஸர்காவஸ்தையில் குண வைஷம்ய நிமித்தமான விசித்ர பரிணாமம் கூடுமாகையாலே ப்ரக்ருதியே ஸ்வதந்த்ரமாய்க் கொண்டு ஜகத்காரணமாகிறதென்றிறே அவர்கள் சொல்லுவது.

**விளக்கம் -** "காபிலர்" என்பது கபில மதத்தைப் பின்பற்றும் ஸாங்க்யர்கள் ஆவர். மண் ரூபமாக உள்ள பானைக்கு மண்ணே காரணம் என்பது போன்று, ஸத்வம் ரஜஸ் மற்றும் தமஸ் ஆகியவற்றால் இன்பதுன்பங்களையும் மயக்கத்தையும் உள்ளடக்கிய ஜகத்திற்கு, மூன்று குணங்களுடைய சம வடிவமாக உள்ள ப்ரதானமே, சுதந்திரமான காரணம் ஆகும். தயிராக மாற்றம் அடைகின்ற பாலானது மற்ற எதனையும் எதிர்பாராமல், காலம் மாறுவதன் மூலம் ஏற்படுகின்ற, தனது முதல் நிலையிலேயே திரிந்து போதல் முதலான மாற்றங்களை அடைகிறது; மேகம் பொழிகின்ற ஒரே சுவை கொண்ட நீரானது தேங்காய், மாம்பழம், விளாம்பழம், வேப்பம்பழம், புளியம்பழம் போன்றவற்றுடைய விசித்ரமான சாறு என்பதான மாற்றம் அடைகிறது; இது போன்று மாற்றம் அடைதல் என்பதையே தனது இயல்பாகக்கொண்டதும், ஒவ்வொரு ஸ்ருஷ்டியிலும் ஒரே போன்று மாற்றங்கள் கொண்டதும் ஆகிய ப்ரதானத்திற்கு, மற்றொன்றின் ஸம்பந்தம் இன்றி, ஸ்ருஷ்டி நேரத்தில், குணங்களில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு காரணமாக, விசித்ரமான மாற்றங்கள் ஏற்படுகிறது. ஆகவே ப்ரக்ருதியே சுதந்திரமாக இருந்தபடி ஜகத் காரணமாக உள்ளது என்பதே அவர்கள் கருத்தாகும்.

156. ப்ரதாநம் அசேதநமாகையாலும், ஈச்வரன் அதிஷ்டியாதபோது பரிணமிக்க மாட்டாமையாலும், ஸ்ருஷ்டி ஸம்ஹார வ்யவஸ்தை கூடாமையாலும் அதுவும் சேராது.

**அவதாரிகை -** அத்தை நிராகரிக்கிறார் (ப்ரதாநம் அசேதனமாகையாலும்) என்று தொடங்கி.

**விளக்கம் -** மேலே கூறப்பட்ட கருத்தை நிராகரிக்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, விசித்ர ஜகதாகாரேண பரிணமிப்போமென்றிருக்கைக்கு யோக்யதையில்லாதபடி ப்ரதாநம் சைத்நயரஹிதமான வஸ்துவாகையாலும்; "ப்ரக்ருதிம் புருஷஞ்சைவ ப்ரவிச்யாத்மேச்சயா ஹரி: க்ஷோபயாமாஸ ஸம்ப்ராப்தே ஸர்க காலே வ்யயாவ்யயௌ" என்கிறபடியே ஈச்வரன் அதிஷ்டித்தபோதேயொழிய பரிணமிக்க

மாட்டாமையாலும்; தததிஷ்ட்டாநமொழிய பரிணமிக்குமாகில், ஸர்வகாலமும் ஸ்ருஷ்டியேயாய்ச் செல்லுமதொழிய ஸம்ஹ்ருதமாய்க் கிடக்கையென்னுமது கூடாமையாலே காலபேதேந வருகிற ஸ்ருஷ்டி ஸம்ஹார வ்யவஸ்த்தை கூடாமையாலும்; ப்ரதாநம் காரணமென்கிறவதுவும் சேராதென்கை. (அதுவும்) என்று பூர்வோக்த பரமாணு காரணவாதத்தை ஸமுச்சயிக்கிறது.

**விளக்கம் -** ப்ரதானமானது "விசித்ரமான ஜகத்ரூபமாக நாம் மாறுதல் அடைவோம்" என்று சிந்திக்கும் தகுதி இல்லாதபடியான அறிவற்ற வஸ்துவாக உள்ளதாலும்; ஸ்ரீவிபு. (1-2-31) - ப்ரக்ருதிம் புருஷஞ்சைவ ப்ரவிச்யாத்மேச்சயா ஹரி: க்ஷோபயாமாஸ ஸம்ப்ராப்தே ஸர்க காலே வ்யயாவ்யயௌ - ஸ்ருஷ்டியின்போது அழிவு மற்றும் அதன் இல்லாமை ஆகிய தன்மைகளைக் கொண்டதான முறையே ப்ரக்ருதியையும் ஜீவாத்மாவையும் விஷ்ணு கலக்கினார் - என்று கூறுவதற்கு ஏற்ப, ஈச்வரன் அண்டி நின்று உதவாதபோது ப்ரக்ருதி எந்தவிதமான மாற்றங்களையும் அடையாது என்பதாலும்; இவ்விதம் அவனுடைய செய்கையின்றி மாற்றம் அடையும் என்றால், அனைத்து காலங்களிலும் ஸ்ருஷ்டி நடந்தபடியே இருக்கும் அல்லாமல், எதுவும் அழியும் நிலை ஏற்படாது என்பதால், காலத்தின் மாற்றத்தால் ஏற்படக்கூடிய ஸ்ருஷ்டி மற்றும் ஸம்ஹார நிலைகள் உண்டாகாமல் போகும் என்பதாலும்; ப்ரதானமானது ஜகத்காரணம் என்பது பொருந்தாது. "அதுவும்" என்பதில் உள்ள உம்மைத்தொகை மூலம், "பரமாணுக்கள் ஜகத்காரணம்" என்று முன்னர் கூறப்பட்ட வாதம் தள்ளப்பட்டது.

157. சேதநனும் காரணமாக மாட்டான்.

**அவதாரிகை -** இப்படி அசேதநமான ப்ரதாநத்தை ஜகத்காரணமாகக் கொள்ளுகிற பக்ஷத்தை நிராகரித்தவநந்தரம் சேதநனை ஜகத்காரணமாகக் கொள்ளும் பாசுபதாதி மதத்தை நிராகரிக்கிறார் (சேதநனும் காரணமாக மாட்டான்) என்று.

**விளக்கம் -** இப்படியாக, அசேதநமாக உள்ள ப்ரக்ருதியை ஜகத்காரணமாகக் கொள்ளும் கருத்தை நிராகரித்த பின்னர், சேதநனை ஜகத்காரணமாகக் கொள்ளும் பாசுபத மதத்தை நிராகரிக்கிறார்.

**வ்யாக்யானம் -** அசப்தத்தாலே, கீழ்ச்சொன்ன சேதநத்தை ஸமுச்சயிக்கிறது. ஆகம ஸித்த ஈச்வரன் நிமித்தகாரணமென்றும், ஆநுமாநிகேச்வரன் நிமித்தகாரணமென்றும், பாசுபத வைசேஷிகாதிகள் சொல்லுகிற ருத்ரன், சேதநரிலே அந்யதமனிறே. "ஹிரண்யகர்ப்பஸ் ஸமவாதர்த்ததாகரே" இத்யாதி வாக்யங்களைக் கொண்டு சேதநரிலே அந்யதமனான ப்ரஹ்மாவையும் ஜகத்காரணமாகச் சொல்லுவாருமுண்டிறே. அவையெல்லாவற்றையும் திருவுள்ளம் பற்றியிறே (சேதநனும்) என்று, பொதுவிலே அருளிச்செய்தது. (காரணமாக மாட்டான்) என்றது காரணமாக க்ஷமன் அல்லன் என்றபடி.

**விளக்கம் -**"சேதநனும்" என்பதில் உள்ள உம்மைத்தொகை மூலம், முன்பு கூறப்பட்ட சேதநன் குறித்த வாதத்தைச் சேர்க்கிறார். ஆகமதத்தில் கூறப்பட்ட சிவன் ஜகத்தின் நிமித்தகாரணம் என்றும், அனுமானத்தால் கூறப்படும் ஈச்வரன் ஜகத்தின் நிமித்தகாரணம் என்றும் பசுபத மற்றும் வைசேஷிகர்கள் முறையே கூறுகிறார்கள். பசுபதி மதத்தில் கூறப்பட்ட ருத்ரன், சேதந வகுப்பைச் சேர்ந்தவன் அல்லவோ? "ஹிரண்யகர்ப்பஸ் ஸமவாதர்த்ததாகரே - ஸ்ருஷ்டிக்கு முன்பு ஜீவர்கள் கூட்டத்தைத் தன் உள்ளே வைத்திருந்த ஹிரண்யகர்ப்பன்" என்பது போன்ற வாக்கியங்கள் மூலம், சேதநர்களில் ஒருவனாகிய நான்முகனையும் ஜகத்காரணமாகச் சிலர் கூறுவர் அல்லவோ? இவை அனைத்தையும் தனது திருவுள்ளத்தில் நன்கு ஆராய்ந்து, "சேதநனும்" என்று பொதுவாக அருளிச்செய்தார். "காரணமாக மாட்டான்" என்பதன் மூலம் "காரணமாக இயலாதவன்" என்பதைக் கூறுகிறார்.

158. கர்ம பரதந்த்ரனுமாய் துக்கியுமாயிருக்கையாலே.

**அவதாரிகை -** எத்தாலே? என்ன அருளிச்செய்கிறார் (கர்மபரதந்த்ரனுமாய்) என்று தொடங்கி.

**விளக்கம் -** ஏன் சேதநன் ஜகத்காரணமாக மாட்டான் என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, அஸங்குசித ஜ்ஞாந சக்திகனாய்க்கொண்டு தான் நினைத்தபடி யொன்றுஞ்செய்ய க்ஷமனல்லாதபடி கர்மாதீநனுமாய் ஆநந்தியாய்க்கொண்டு ஜகத்வ்யாபாரத்திலே மூளுகைக்கு யோக்யதையில்லாதபடி துக்கியுமாயிருக்கையாலே யென்கை. "அபஹதபாப்மா" என்கிறபடியே, அகர்மவச்யனுமாய், (ஆநந்தமய:) என்கிறபடியே நிரதிசய ஆநந்தியுமாயிருக்குமவனுக்கிறே அப்ரதிஹத ஜ்ஞாநசக்திகனாய்

மந: ப்ரீதியுடையவன் பண்ணும் ஜகத்வ்யாபாரங்கூடுவது; "ப்ரஹ்மாத்யாஸ் ஸகலாதேவா மநுஷ்யா: பசவஸ் ததா, விஷ்ணோ மாயாமஹா வர்த்தமோஹாந்ததம ஸாவ்ருதா: ஆப்ரஹமஸ்தம்ப பர்யந்தா ஜகதந்தர் வ்யவஸ்திதா:, ப்ராணிந: கர்ம ஜநித ஸம்ஸார வசவர்த்திந:" என்கிறபடியே காமவச்யருமாய், "தத: க்ரோத பரீதேந ஸம்ரக்த நயநேந ச வாமாங்குஷ்டநகாக்ரேண சிந்நம் தஸ்ய சிரோ மயா, யஸ்மாதநபராதஸ்ய சிரச்சிந்நம் த்வயா மம, தஸ்மாச் சாப ஸமாவிஷ்ட கபாலீ த்வம் பவிஷ்யஸி" என்கிறபடியே, தலையறுப்பாரும் அறுப்புண்பாருமாய்க்கொண்டு துக்கிகளுமாயிருப்பார்க்கு ஜகத் ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரம் கூடாதிறே.

**விளக்கம்** - அதாவது, சுருங்கியுள்ள ஞானம் மற்றும் சக்தி ஆகியவற்றைக் கொண்டவனாக, தான் எண்ணியபடி எதனையும் செய்ய இயலாதபடி உள்ளவனாக, கர்ம வசப்பட்டவனாக, ஆனந்தம் நிறைந்தவனாக உள்ளபோதிலும், ஜகத்தை ஸ்ருஷ்டித்தல் போன்றவற்றில் ஈடுபடத் தகுதி அற்றவனாக, துக்கத்தில் உள்ளவனாக இருப்பதால், சேதநன் ஜகத்காரணமாக மாட்டான். சாந்தோக்யத்தில் – அபஹதபாப்மா - பாபங்கள் அற்றவன் – என்பதற்கு ஏற்ற உள்ளவனாகவும், கர்மவசப்படாதபடி உள்ளவனாகவும், ஆநந்தமய: - எல்லையில்லாத ஆனந்தம் நிறைந்தவன் – என்பதற்கு ஏற்ப எல்லையில்லாத ஆனந்தம் உள்ளளவனாகவும் இருக்கும் ஒருவனுக்கு மட்டுமே, "தடையில்லாத ஞானம் உள்ளவனும், சக்தி நிறைந்தவனும், மனதில் எப்போதும் மகிழ்ச்சி நிறைந்தவனும்" ஆகிய ஒருவன் செய்யும் ஜகத் ஸ்ருஷ்டி போன்றவை கைகூடும்? விஷ்ணு தர்மத்தில் - ப்ரஹ்மாத்யாஸ் ஸகலாதேவா மநுஷ்யா: பசவஸ் ததா, விஷ்ணோ மாயாமஹா வர்த்தமோஹாந்ததம ஸாவ்ருதா: ஆப்ரஹமஸ்தம்ப பர்யந்தா ஜகதந்தர் வ்யவஸ்திதா:, ப்ராணிந: கர்ம ஜநித ஸம்ஸார வசவர்த்திந: - நான்முகன் உள்ளிட்ட விஷ்ணுவின் மஹாமாயை என்ற மோகத்தில் ஆழ்த்தப்பட்டு, அறியாமை என்ற இருளில் உள்ளனர்; இந்த உலகத்தில் உள்ள நான்முகன் தொடங்கி புல்பூண்டு முடிய உள்ள அனைத்தும் அவரவர்கள் செய்யும் கர்மங்களுக்கு ஏற்ப ஸம்ஸாரத்தில் உள்ளனர் – என்பதற்கு ஏற்ப கர்மவசப்பட்டவர்களும்; மத்ஸ்யபுராணம் – தத: க்ரோத பரீதேந ஸம்ரக்த நயநேந ச வாமாங்குஷ்டநகாக்ரேண சிந்நம் தஸ்ய சிரோ மயா, யஸ்மாதநபராதஸ்ய சிரச்சிந்நம் த்வயா மம, தஸ்மாச் சாப ஸமாவிஷ்ட கபாலீ த்வம் பவிஷ்யஸி – அதன் பின்னர் கோபத்தால் சிவந்த கண்கள் கொண்டவனும் ஆகிய என்னால் (ருத்ரன்), எனது இடதுகை கட்டைவிரல் நுனி நகத்தால், எனது தந்தையாகிய நான்முகனுடைய தலை வெட்டப்பட்டது; எந்தக் காரணத்தால் எந்தவிதமான தவறும் செய்யாமல் இருந்த எனது

(நான்முகன்) தலையானது உன்னால் (ருத்ரன்) அறுக்கப்பட்டதோ, அதன் விளைவாக நீ சாபம் நிறைந்தவனாக, மண்டை ஓட்டைக் கையில் ஏந்தியபடி இருக்கப் போகிறாய் - என்பதற்கு ஏற்ப, தலையை அறுப்பவர் மற்றும் தலை வெட்டப்பட்டவர் என்பதான துக்கங்களுடன் உள்ளவர்களும் ஆகிய இவர்களுக்கு ஜகத்தை ஸ்ருஷ்டித்தல் போன்றவை ஏற்படாது.

159. ஆகையால் ஈச்வரனே ஜகத்துக்குக் காரணம்.

**அவதாரிகை** – ஆக, இப்படி விரோதி பரிஹாரங்களைப் பண்ணி, ப்ரதிஜ்ஞாநுகுணமாக நிகமிக்கிறார் (ஆகையால் ஈச்வரனே ஜகத்துக்குக் காரணம்) என்று.

**விளக்கம்** - ஆக, இப்படியாக “ஸர்வேச்வரனே ஜகத்காரணம்” என்பதற்கு விரோதமாக உரைக்கும் கருத்துக்களுக்குச் சமாதானம் உரைத்து, தான் முன்பு செய்த ப்ரதிஜ்ஞைக்கு ஏற்றபடி முடிக்கிறார்.

**வ்யாக்யானம்** - ஆகையால் என்றது, சேதநாசேதநங்கள் இரண்டும் காரணமன்றிக்கே யொழிகையாலே யென்கை.

**விளக்கம்** - “ஆகையால்” என்று கூறுவது ஏன்? முன்பு கூறப்பட்ட சேதநர்கள் மற்றும் அசேதநமான ப்ரக்ருதி ஆகிய இருவரும் ஜகத்காரணம் இல்லை என்று தள்ளப்படுவதால், இவ்விதம் கூறுகிறார்.

160. இவன் காரணமாகிறது, அவித்யா கர்ம பரநியோகாதிகளாலன்றிக்கே ஸ்வேச்சையாலே.

**அவதாரிகை** - லோகத்திலே அவித்யா கர்ம நிபந்தநமாகவும் பரநியோக நிபந்தநமாகவும் காரணமாகையுண்டாகையாலே அவற்றைக் கழித்து, இவனுடைய காரணத்வ ஹேதுவை அருளிச்செய்கிறார் (இவன் காரணமாகிறது) என்று தொடங்கி.

**விளக்கம் -** இந்த லோகத்தில், அவித்யையானது கர்மம் காரணமாகவும், மற்றவர்களுக்கு வசப்படுதல் காரணமாகவும் உண்டாகிறது. அவற்றை விலக்கி, இவனுடைய ஜகத்காரணத்திற்கான காரணத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அவித்யா கர்ம நிபந்தநமான காரணத்வம் ஸகல ஜந்து ஸாதாரணம். அதாவது, லோகத்தில் ஒன்றுக்கொன்று உத்பாதகமாய்க் கொண்டு வருகிற காரணத்வம், வைஷயிக ஸுகப்ராவண்ய ஹேதுவான அஜ்ஞாநத்தாலும் காமத்தாலுமிறே. அதில், சாஸ்த்ரவச்யமானவற்றினுடைய உத்பாதகத்வம் கர்ம ப்ரதாநமாயிருக்கும்; அல்லாதது அவித்யா ப்ரதாநமாயிருக்கும் இரண்டும், ஒன்றையொன்று விட்டிராது அதிகாரி புருஷர்களான ப்ரஹ்மாதிகளுடைய காரணத்வம் பரநியோக ப்ரதாநமாயிருக்கும். "ப்ராஜாபத்யம் த்வயா காம பூர்வம் மயி நிவேசிதம்", "ஏதௌ த்வௌ புருஷ ச்ரேஷ்டௌ ப்ரஸாத க்ரோதஜௌ ஸம்ருதௌ, ததா தர்சித பந்த்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹார காரகௌ" இத்யாதிகளிலே கண்டு கொள்வது. "ஆதி" சப்தத்தால், இவர்க்கு விவக்ஷிதம் "அவர்ஜநீயமான ரோகமோ" என்று நடுவிற்றிருவீதிப்பிள்ளை பட்டர் அருளிச்செய்ததா மித்தனை. "அந்த ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்கள், எம்பெருமானுக்கு அவித்யா கர்ம நிபந்தநமோ? அன்றிக்கே, அவர்ஜநீயமாயிருப்பதொரு (ரோ) ராகமோ? இல்லையாகில், பரப்ரேரிதனாய்க் கொணடு செய்கிறானா?" என்றிறே அவர் சங்காவாக்யத்தில் அருளிச் செய்தது. இவற்றாலன்றிக்கே ஸ்வேச்சையாலே என்றது "நிரவத்யம் நிரஞ்ஜநம்", "அபஹதபாப்மா", "ந தஸ்யேசே கச்சந" என்கிறபடியே அவித்யாதி தோஷ ப்ரதிபடனாய், தனக்கொரு நியாமகரின்றிக்கேயிருப்பானொருவனாகையாலே, தன்னிச்சையொழிய ஹேத்வந்தரமில்லையென்றபடி. "அசிதவிசேஷிதாந் ப்ரளயஸீமநி ஸம்ஸரத: கரணகளேபரைர் கடயிதும் தயமாநமநா:, வரத நிஜேச்சயைவ பரவாநகரோ: ப்ரக்ருதிம் மஹதபிமாந பூதகரணாவளி கோரகிணீம்", "ப்ரளய ஸமய ஸுப்தம் ஸ்வம் சரீரைகதேசம் வரத சிதசிதாக்யம் ஸ்வேச்சயா விஸ்த்ருணாந:, கசிதமிவ கலாபம் சித்ரமாதத்யதூந்வந் அநுசிகிநி சிகீவ க்ரீடஸி ஸ்ரீஸமக்ஷம்" என்றிறே பட்டரருளிச்செய்தது.

**விளக்கம் -** அறியாமைக்கு, "கர்மம் காரணமாகவே அறியாமை உண்டாகும்" என்னும் தன்மை என்பது அனைத்து உயிர்களுக்கும் பொதுவானதே ஆகும். அதாவது, இந்த லோகத்தில் உள்ள அனைத்தும் ஒன்றை ஒன்று உற்பத்தி செய்வதாக உள்ளது; ஆகவே ஒன்றுக்கு ஒன்று காரணமாக உள்ளன; இப்படியாக இவற்றுக்கு ஏற்படுகின்ற

“காரணமாக உள்ள தன்மை” என்பது, புலன்களின் சுகத்திற்குக் காரணமாக உள்ள அறிவற்ற தன்மையாலும், கர்மத்தாலும் ஆகும். இவற்றில் சாஸ்த்ரங்களுக்கு உட்பட்டு ஏற்படக்கூடிய உற்பத்தியானது, கர்மம் காரணமாக இருக்கும். இவ்விதம் அல்லாதது, அறிவற்ற தன்மையால் இருக்கும். இவை ஒன்றை ஒன்று விடாமல் இருப்பதாகும். அதிகாரி புருஷர்களாக உள்ள நான்முகன் ஆகியவர்களுக்கு உள்ள “காரணமாக உள்ள தன்மை” என்பது மற்றவர்களுடைய கட்டளைக்கு உட்பட்டு இருக்கும். ப்ராஜாபத்யம் த்வயா காம பூர்வம் மயி நிவேசிதம் - ப்ரஜாபதி என்னும் பதவியானது முன்பு ஒரு காலத்தில் உன்னால் எனக்கு அளிக்கப்பட்டது - என்றும், ஏதௌ த்வௌ புருஷ ச்ரேஷ்ட்டௌ ப்ரஸாத க்ரோதஜௌ ஸம்ருதௌ, ததா தர்சித பந்த்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹார காரகௌ - தேவர்களில் உயர்ந்தவர்களாகவும், ஸர்வேச்வரனுடைய அருள் மற்றும் கோபம் ஆகியவற்றால் உண்டானவர்களாகவும் உள்ள நான்முகன் மற்றும் ருத்ரன் ஆகியவர்கள், அவனால் காண்பிக்கப்பட்ட ஸ்ருஷ்டி மற்றும் ஸம்ஹாரம் ஆகிய வழியில் ஈடுபட்டு நிற்பதைக் காணலாம் - என்றும் கூறப்பட்டது காண்க. “நியோகாதி” என்பதில் உள்ள “ஆதி - முதலான” என்பது, இவருடைய கருத்தானது, “விடமுடியாத ஆசையாக இருக்குமோ” என்று உரைப்பதாக நடுவில்திருவீதிப்பிள்ளை பட்டர் அருளிச்செய்வார். மேலும் அவர், “ஸ்ருஷ்டி முதலான கர்மங்களைப் பகவான் செய்வது அறிவற்ற தன்மை மற்றும் கர்மங்களின் பந்தம் காரணமாகவா? அல்லது தவிர்க்க முடியாத ஆசையா? அல்லது வேறு ஒருவன் ஏவியபடி உள்ளபோது இவன் செய்கிறானா?” என்ற சந்தேகங்களை எழுப்பிக் கொண்டு, இவற்றுக்குச் சமாதானம் கூறுகிறார். “இவை எதனாலும் அல்ல, தனது ஆசையால் அவன் செய்கிறான்” என்று நடுவில்திருவீதிப் பிள்ளைபட்டர் அருளிச்செய்தார். இதன் காரணம் என்ன? ச்வே. - நிரவத்யம் நிரஞ்ஜநம் – அழிவற்றவன், தோஷம் அற்றவன் - என்றும், அபஹதபாப்மா – பாபம் அற்றவன் - என்றும், ந தஸ்யேசே கச்சந – பரமாத்மாவிற்கு ஈச்வரனாக உள்ளவன் யாரும் இல்லை - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அறிவற்ற தன்மை போன்றவற்றுக்கு எதிர்த்தட்டாக இருந்தபடி, தன்னை அடக்கி ஆள்பவர்கள் யாரும் இல்லாதபடி உள்ளதால், தனது ஆசை அல்லாமல், ஸ்ருஷ்டி போன்றவற்றுக்கு வேறு எந்தக்காரணமும் இல்லை. இதனை ஸ்வாமி பராசரபட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (2-41) - அசித் அவிசேஷிதாந் ப்ரளயஸீமநி ஸம்ஸரத: கரணகளேபரை: கடயிதும் தயமாந மநா: வரத! நிஜ இச்சயா ஏவ பரவாந் அகரோ: ப்ரக்ருதிம் மஹத் அபிமாந பூத கரண ஆவளி கோரகிணீம் - மோக்ஷ வரம் அளிக்கும் பெரியபெருமாளே! ப்ரளயத்தின்போது, சேதனங்கள் அனைத்தும், அசித் வஸ்துக்களுடன் எந்தவிதமான வேறுபாடும் காண இயலாமல், ஒன்றாகவே கிடந்தன. இவற்றைக் கண்டு உனது மனம் இரங்கியது. இந்தச் சேதனங்களை, அவற்றின் உடல் மற்றும் இந்த்ரியங்களுடன் சேர்க்க நீ திருவுள்ளம் கொண்டாய். இதற்கான ஸங்கல்பம்

கொண்டவனாக, உனது இச்சைக்கு மட்டுமே வசப்பட்டவனாக ப்ரக்ருதி, மஹத், அஹங்காரம், பஞ்சபூதங்கள், இந்த்ரியங்கள் போன்றவற்றை வரிசையாக அரும்பும்படிச் செய்தாய் – என்றும், (2-44) - ப்ரளய ஸமய ஸுப்தம் ஸ்வம் சரீர ஏக தேசம் வரத! சித் அசித் ஆக்யம் ஸ்வ இச்சயா விஸ்த்ருணாந: கசிதம் இவ கலாபம் சித்ரம் ஆதத்ய தூந்வந் அநுசிகிநி சிகீ இவ க்ரீடஸி ஸ்ரீஸமக்ஷம் – மோக்ஷ வரம் அளிக்கும் பெரியபெருமாளே! ப்ரளய காலத்தில் உனது திருமேனியில் அனைத்து சேதனங்களும் அசேதனங்களும் ஒடுங்கி நின்றன. உனது திருமேனியும் அவையும் ஒன்றே எனத் தோன்றுவது போல் நின்றன. இதனை உனது ஸங்கல்பம் மூலமாக, அனைத்து உலகங்களும் உனது திருமேனியில் நிற்பதைப் பெரியபிராட்டியிடம் நீ காண்பித்தாய். இது எப்படி உள்ளது என்றால் – பெண் மயிலின் முன்பாக ஆண் மயிலானது, பல நிறங்களுடன் கூடிய தனது அழகான தோகையை, விண்ணை முட்டும் அளவிற்கு விரித்து நின்று உதறுவது போன்று உள்ளது – என்றும் கூறியது காண்க.

161. ஸ்வஸங்கல்பத்தாலே செய்கையாலே இதுதான் வருத்தமற்றிருக்கும்.

**அவதாரிகை** - இப்படி இச்சையாலேயானாலும் இதுதான் ஆயாஸ ரூபமாயிருக்குமோ என்ன அருளிச்செய்கிறார் (ஸ்வஸங்கல்பத்தாலே செய்கையாலே இதுதான் வருத்தமற்றிருக்கும்) என்று.

**விளக்கம்** - இப்படியாக ஸர்வேச்வரனுடைய இச்சை என்பதாகவே உள்ளபோதிலும், அது அரிதாக இருக்குமோ என்பதற்கு விடை அளிக்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, யத்நரூபமான காயிகவ்யாபாரத்தாலன்றிக்கே, அயத்நமான மாநஸ வ்யாபாரரூப ஸங்கல்பத்தாலே செய்கையாலே இந்த ஜகத் ஸ்ருஷ்டி ரூப வ்யாபாரந்தான் அவனுக்கு அநாயாஸமாயிருக்குமென்கை. "ஸோகாமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி", "மநஸைவ ஜகத் ஸ்ருஷ்டிம் ஸம்ஹாரஞ்ச கரோதி ய: தஸ்யாரிபக்ஷக்ஷபணே கியாநுத்யமவிஸ்தர:", "நினைந்தவெல்லாப் பொருள்களுக்கும் வித்தாய் முதலிற் சிதையாமே மனஞ்செய் ஞானத்துன் பெருமை" என்னக்கடவதிறே.

**விளக்கம்** - அதாவது, செயல்படுவதாக உள்ள சரீரம் மூலம் அல்லாமல், மனம் மூலம் செய்யப்படும் ஸங்கல்பத்தால் செய்வதால், ஜகத் ஸ்ருஷ்டி முதலான வடிவில் உள்ள அவனுடைய செய்கைகள் அனைத்தும் அவனுக்கு எளிதாகவே இருக்கும். தைத். (2-6) - ஸோகாமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி – நான் பலவாகக் கடவேன் என்று ஸங்கல்பம் செய்து படைத்து - என்றும், ஸ்ரீவிபு. (5-22-15) - மநஸைவ ஜகத் ஸ்ருஷ்டிம் ஸம்ஹாரஞ்ச

கரோதி ய: தஸ்யாரிபக்ஷக்ஷபணே கியாநுத்யமவிஸ்தர: - எந்த ஒரு ஸர்வேச்வரன் தனது மனத்தின் நினைவு மூலம் மட்டுமே ஜகத்தை ஸ்ருஷ்டித்தல் மற்றும் ஸம்ஹாரம் செய்தல் ஆகியவற்றைப் புரிகிறானோ அவனுக்கு விரோதிகளை அழிக்கும் செயலில் உள்ள முயற்சிதான் எத்தனை, மிகவும் அற்பமே - என்றும், திருவாய்மொழி (1-5-2) - நினைந்தவெல்லாப் பொருள்களுக்கும் வித்தாய் முதலிற் சிதையாமே மனஞ்செய் ஞானத்துன் பெருமை – என்றும் கூறுவது காண்க.

162. இதுக்கு ப்ரயோஜநம் கேவல லீலை.

**அவதாரிகை** – அநாயாஸமாயிருந்ததேயாகிலும், அவாப்த ஸமஸ்தகாமதயா பரிபூர்ணனாயிருககிறவனுக்கு இந்த வ்யாபாரத்தால் ப்ரயோஜநமென்? என்ன, அருளிச்செய்கிறார் (இதுக்கு ப்ரயோஜநம் கேவலலீலை) என்று.

**விளக்கம் -** ஜகத்ஸ்ருஷ்டி போன்றவை அவனுக்கு மிகவும் எளிதாக உள்ளபோதிலும், தனது விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறப் பெற்றவனும் பரிபூர்ணமாக உள்ளவனும் ஆகிய அவனுக்கு, இத்தகைய செயல்களால் என்ன பயன் உள்ளது என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, இந்த ஜகத் ஸ்ருஷ்டி ரூப வ்யாபாரத்துக்கு ப்ரயோஜநம் வெறும் லீலையென்றபடி. லீலையாவது தாதாத்விக ரஸமொழிய காலாந்தரத்தில் வருவதொரு பலத்தைக் கணிசியாமல் பண்ணும் வ்யாபாரமேயாகிலும், (இதுக்கு ப்ரயோஜநம்) என்று ஸ்ருஷ்டி ரூப வ்யாபாரத்துக்கு ப்ரயோஜநமாகச் சொல்லுகையாலே தாதாத்விக ரஸ மாத்ரத்தைச் சொல்லிற்றாகக் கடவது. இந்த ஸ்ருஷ்டி ரூப வ்யாபாரந்தான், ஸார்வபௌமரான ராஜாக்களுக்கு த்யூதாதிகள் போலேயும் பாலர்க்கு மணற்கொட்டகம் போலேயும் தாதாத்விக ரஸமாயிருப்பதொன்றிறே இவனுக்கு. இத்தால் “லோகவத்து லீலா கைவல்யம்” என்கிற ஸூத்ரார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று. “க்ரீடதோ பாலகஸ்யேவ சேஷ்டாம் தஸ்ய நிசாமய” என்று ஸ்ரீபராசர பகவானும், “அப்ரமேயோ நியோஜ்யச்ச யத்ர காம கமோ வசீ, மோததே பகவாந் பூதைர் பால: க்ரீடநகைரிவ” என்று ஸ்ரீவேதவ்யாஸ பகவானும, “நளிர் மாமலருந்தி வீட்டைப் பண்ணி விளையாடும் விமலன்”, “இன்புறுமிவ விளையாட்டுடையான்” எனறு அபியுக்தரும், இவனுடைய ஜகத் வ்யாபாரத்துக்கு ப்ரயோஜநம் லீலையாகவே சொன்னார்களிறே.

**விளக்கம் -** ஜகத் ஸ்ருஷ்டி என்பதாக உள்ள செயல்களுடைய பயன் என்பது வெறும் விளையாட்டிற்கு உதவியாக இருத்தலே ஆகும். விளையாட்டு என்பது அந்த நேரத்தில் ஏற்படும் இன்பம் அல்லாமல், மற்றொரு காலத்தில் உண்டாகக்கூடிய பயனைக் கருத்தில் கொள்ளாமல் உள்ளதே ஆகும். ஆனாலும் இந்த விளையாட்டிற்கு, ஜகத் ஸ்ருஷ்டி போன்றவை பயனாக உள்ளன என்று கூறுவதால், அப்போது உண்டாகக்கூடிய விளையாட்டு இன்பமே கூறப்பட்டதாகிறது. இத்தகைய ஸ்ருஷ்டி முதலான செயல்கள், அரசர்களுக்கு சூதாட்டம் போன்றும், சிறுவர்களுக்கு மணல் வீடு கட்டுவது போன்றும், இவனுக்கு ஏற்ற விளையாட்டாக உள்ளது. இதன் மூலம் ப்ர. ஸூ. (2-1-33) - லோகவத்து லீலா கைவல்யம் – என்ற ஸூத்ரத்தின் பொருளைக் கூறினார். இப்படியாக இவன் ஸ்ருஷ்டி முதலான செயல்களில் ஈடுபடுவதல் என்பது விளையாட்டிற்காகவே ஆகும் என்பதை ஸ்ரீபராசரபகவான் ஸ்ரீவிபு. (1-2-18) – க்ரீடதோ பாலகஸ்யேவ சேஷ்டாம் தஸ்ய நிசாமய – விளையாடும் சிறுவர்கள் செயல் போன்று அவனுடைய செயல்கள் உள்ளன - என்றும், ஸ்ரீவிபு. (1-2-20) - அப்ரமேயோ நியோஜ்யச்ச யத்ர காம கமோ வசீ, மோததே பகவாந் பூதைர் பால: க்ரீடநகைரிவ - அளவிட இயலாதபடியும், அனைத்துவிதமான இன்பங்களை அடைந்தபடியும், அனைவரையும் வசப்படுத்தியபடியும் உள்ள பகவான், எந்த ஒரு லீலைக்கு உபயோகமான உலகத்தில், பஞ்சபூதம் போன்றவற்றைக் கொண்டு, சிறுவர்கள் பந்து விளையாடுவது போன்று விளையாடுகிறானோ – என்றும், நாச். (14-9) – நளிர் மாமலருந்தி வீட்டைப் பண்ணி விளையாடும் விமலன் - என்றும், திருவாய்மொழி (3-10-7) – இன்புறுமிவ விளையாட்டுடையான் - என்றும் கூறுவது காண்க.

**வ்யாக்யானம் -** ஆனால், "சென்று சென்றாகிலும் கண்டு சன்மம் கழிப்பானெண்ணி யொன்றி யொன்றி யுலகம் படைத்தான்" என்றும், "உய்யவுலகு படைத்து" என்றும், "விசித்ரா தேஹ ஸம்பத்திரீச்வராய நிவேதிதும, பூர்வமேவ க்ருதா பரஹ்மந் ஹஸ்தபாதாதி ஸம்யுதா" என்றும், "மாயவன்றன்னை வணங்க வைத்த கரணமிவை" என்றும், "அசிதவிசேஷிதாந் ப்ரளய ஸீமநி ஸம்ஸரத: கரணகளேபரைர் கடயிதும் தயமாந மநா:" என்றும் சேதநருடைய உஜ்ஜீவநம் ப்ரயோஜநமாக ஜகத் ஸ்ருஷ்டி பண்ணினான் என்று சொல்லுகிற இவ்வசநங்களுக்கு வையர்த்த்யம் வாராதோ? என்னில்; வாராது. எங்ஙனே? என்னில், உபய ப்ரயோஜநமுமுண்டாயிருக்கச் செய்தேயும், லீலையே ப்ரயோஜநம் என்றவிது, ப்ராசுர்யத்தைப் பற்றச் சொன்னவித்தனையாகையாலே. "ரூப ப்ரகார பரிணாம க்ருத்வ்யவஸ்த்தம் விச்வம் விபர்யஸிது மந்யதஸச்ச கர்த்தும், க்ஷாம்யந் ஸ்வபாவ நியமம் கிமுதீக்ஷஸே த்வம் ஸ்வாதந்த்ர்யமைச்வரமபர்யநு யோஜ்யமாஹு:"

என்கிறபடியே, நினைத்தபடி செய்யவல்ல சக்திமானாகையாலே, ஸகலாத்மாக்களையும் யுகபதேவ முக்தராக்கவல்லனாயிருக்கச் செய்தேயும் ஸ்வாதீந ஸ்வரூப ஸ்த்தித்யாதிகரான ஆத்மாக்களை கர்மத்தை வ்யாஜீகரித்துக் கைகழியவிட்டு சாஸ்த்ர மர்யாதையிலே வரவர அங்கீகரிப்பனென்று இருக்கிறது, லீலா ரஸேச்சையாலேயிறே. லீலா விபூதியென்றிறே இது தனக்கு நிரூபகம். ஆகையாலே, இவ்விபூதியில லீலையே ப்ரசுர ப்ரயோஜநமாய்ச் செல்லுகையாலே, ஸூத்ரகாராதிகளெல்லாரும், ஸ்ருஷ்டி ப்ரயோஜனம் லீலையேயாகச் சொல்லுகையாலே இவரும் (கேவலலீலை) என்று அருளிச் செய்தாராயிற்று.

**விளக்கம்** - ஆனால் இவ்விதம் விளையாட்டிற்காகவே ஜகத் ஸ்ருஷ்டி செய்கிறான் என்றால், சேதநர்கள் பிழைப்பதற்காகவே ஜகத் ஸ்ருஷ்டி செய்வதாகக் கூறும் பின் வரும் வாக்கியங்கள், பயனின்றிப் போகாதோ? அவையாவன திருவாய்மொழி (3-9-10) – சென்று சென்றாகிலும் கண்டு சன்மம் கழிப்பானெண்ணி யொன்றி யொன்றி யுலகம் படைத்தான் – என்றும், பெரியாழ்வார் திருமொழி (1-6-1) - உய்யவுலகு படைத்து - என்றும், விசித்ரா தேஹ ஸம்பத்திரீச்வராய நிவேதிதும, பூர்வமேவ க்ருதா பரஹ்மந் ஹஸ்தபாதாதி ஸம்யுதா – தன்னை வணங்கி வழிபடுவதற்காகவே கை கால் என்பதான விசித்ரமான இந்தச் சரீரம் ப்ரஹ்மத்தால் முன்னர் படைக்கப்பட்டது - என்றும், இராமாநுச நூற்றந்தாதி (67) - மாயவன்றன்னை வணங்க வைத்த கரணமிவை - என்றும், ஸ்ரீரங்கராஜ ஸ்தவம் (2-41) – அசித் அவிசேஷிதாந் ப்ரளயஸீமநி ஸம்ஸரத: கரணகளேபரை: கடயிதும் தயமாந மநா: வரத! நிஜ இச்சயா ஏவ பரவாந் அகரோ: ப்ரக்ருதிம் மஹத் அபிமாந பூத கரண ஆவளி கோரகிணீம் - மோக்ஷ வரம் அளிக்கும் பெரியபெருமாளே! ப்ரளயத்தின்போது, சேதனங்கள் அனைத்தும், அசித் வஸ்துக்களுடன் எந்தவிதமான வேறுபாடும் காண இயலாமல், ஒன்றாகவே கிடந்தன. இவற்றைக் கண்டு உனது மனம் இரங்கியது. இந்தச் சேதனங்களை, அவற்றின் உடல் மற்றும் இந்த்ரியங்களுடன் சேர்க்க நீ திருவுள்ளம் கொண்டாய். இதற்கான ஸங்கல்பம் கொண்டவனாக, உனது இச்சைக்கு மட்டுமே வசப்பட்டவனாக – ப்ரக்ருதி, மஹத், அஹங்காரம், பஞ்சபூதங்கள், இந்த்ரியங்கள் போன்றவற்றை வரிசையாக அரும்பும்படிச் செய்தாய் - என்றும் உள்ளவை ஆகும். இந்த முரண்பாடு ஏற்படாது. ஏன்? இரண்டுவிதமான பயன்களும் உள்ளதாலும், விளையட்டிற்காகவே செய்வதாகக் கூறப்படும் கருத்தானது இன்றியமையாத விஷயத்தைக் கூறுவதாலும் ஆகும். ஸ்ரீவைகுண்டஸ்தவம் (55) - ரூப ப்ரகார பரிணாம க்ருத்வ்யவஸ்த்தம் விச்வம் விபர்யஸிது மந்யதஸச்ச கர்த்தும், க்ஷாம்யந் ஸ்வபாவ நியமம் கிமுதீக்ஷஸே த்வம் ஸ்வாதந்த்ர்யமைச்வரமபர்யநு யோஜ்யமாஹு: - இன்ன வஸ்துவின் ஸ்வரூப பரிணாமம் இன்னது, இன்ன வஸ்துவின் ஸ்வபாவ பரிணாமம் இன்னது என்பதான வரையறை

கொண்டுள்ள சேதநம் மற்றும் அசேதநம் ஆகியவற்றைக் கொண்டதான அனைத்து ப்ரபஞ்சங்களையும் விபரீதமாக மாற்றுவதற்கும், அஸத்தாக உள்ளதை ஸத்தாக மாற்றுவதற்கும் சக்தி கொண்ட நீ, ஒவ்வொரு ஸ்வபாவத்தையும் ஏன் நியமிக்கிறாய்? உனது சுதந்திரமானது எல்லயற்றது என்பதால் ஆகும் - என்பது காண்க; இதன்படி தான் எண்ணியதைச் செய்யவல்லவனாக உள்ளதால், அனைத்து ஆத்மாக்களையும் ஒரே நேரத்தில் முக்தி பெறச்செய்யும் திறன் கொன்டவனாக உள்ளபோதிலும், "தாங்கள் தங்களுடைய வசத்தில், தங்களுடைய இருப்பு மற்றும் ஸ்வரூபத்தைக் கொண்டுள்ளோம்" என்று எண்ணியுள்ள ஆத்மாக்களை, கர்மத்தை ஒரு வாய்ப்பாகக் கொண்டு கைகழிய விட்டு, அவர்கள் சாஸ்த்ரங்களுடைய வரம்பிற்குள் வரும்போது ஏற்றுக் கொள்ளுதல் என்பது, லீலையில் உள்ள இச்சையால் ஆகும். "லீலைக்கான லோகம்" என்று அல்லவோ இந்த உலகின் பெயராக உள்ளது? எனவே இந்த விபூதியின் லீலை என்பதையே இன்றியமையாத ஒன்றாகக் கூறுவதால், ஸூத்ரகாரர்கள் அனைவரும் ஸ்ருஷ்டியின் பயன் என்பது அவனுடைய லீலைக்காக இருத்தலே ஆகும் என்பதை ஏற்பதால், இவரும் அவ்விதமே கூறுகிறார்.

163. ஆனால், ஸம்ஹாரத்தில் லீலை குலையாதோ வென்னில்.

**அவதாரிகை -** இப்படி ஜகத்ஸ்ருஷ்டி பண்ணுகிறது லீலார்த்தமாகவாகில், ஸம்ஹார தசையில் லீலை குலையாதோ? என்கிற சங்கையை அநுவதிக்கிறார் (ஆனால், ஸம்ஹாரத்தில் லீலை குலையாதோ? என்னில்) என்று.

**விளக்கம் -** இவ்விதம் ஸ்ருஷ்டி என்பது லீலைக்காகவே உள்ளது என்று கூறினால், ஸம்ஹார நிலையில் இப்படிப்பட்ட லீலையானது குறையாதோ என்ற சந்தேகத்தை எழுப்பிக் கொள்கிறார்.

164. ஸம்ஹாரந்தானும் லீலையாகையாலே குலையாது.

**அவதாரிகை -** அத்தைப் பரிஹரிக்கிறார் (ஸம்ஹாரந்தானும் லீலையாகையாலே குலையாது) என்று.

**விளக்கம் -** அந்த சந்தேகத்தை விலக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கொட்டகமிட்டு விளையாடுகிற பாலர்க்கு, இட்ட கொட்டகந்தன்னை மீளவழித்துப் பொகடுகிறது தானும் லீலையாயிருக்குமாபோலே, இவற்றை ஸம்ஹரிக்கைதானும் ஸ்ருஷ்டியோபாதி லீலையாயிருக்கையாலே, அப்போதும் லீலை குலையாது என்றபடி. "அகில புவந ஜந்மஸ்த்தேம பங்காதி லீலே" என்றும், "நிகில ஜகதுதய விபவ லய லீல" என்றும், ஸ்ருஷ்டியோபாதி ஸம்ஹாரத்தையும் அவனுக்கு லீலையாக அருளிச்செய்தாரிறே எம்பெருமானார். ஆக இதுக்குக் கீழ், ஈச்வரனே ஜகத்துக்குக் காரணமென்றும்; இவன் காரணமாகிறது ஹேத்வந்தரங்களாலன்று, ஸ்வேச்சையாலேயென்றும்; ஸங்கல்ப மாத்ராவக்ல்பதமாகையாலே இதுதான் அநாயாஸமாயிருக்குமென்றும்; இது தனக்கு ப்ரயோஜநம் லீலையென்றும் சொல்லி நின்றது.

**விளக்கம் -** அதாவது, மணல் வீடு கட்டி விளையாடும் சிறுவர்களுக்குத் தாங்கள் கட்டிய மணல் வீட்டை அழிப்பதும், பின்னர் மீண்டும் உண்டாக்குவதும் என்பது, விளையாட்டிற்காகவே உள்ளது. இதனைப் போன்றே ஸம்ஹாரமும் ஸ்ருஷ்டி போன்று லீலையாக உள்ளதால், அந்த நேரத்தில் லீலை மாறாது என்று கருத்து. ஸ்ரீபாஷ்யம் மங்கள ச்லோகம் – அகில புவந ஜந்மஸ்த்தேம பங்காதி லீலே - அனைத்து உலகின் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றை ஒரு லீலையாகக் கொண்டு - என்றும், நிகில ஜகதுதய விபவ லய லீல - அனைத்து உலகின் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றை ஒரு லீலையாகக் கொண்டவனே – என்றும், ஸ்ருஷ்டி போன்று ஸம்ஹாரத்தையும் அவனுக்கு ஒரு லீலையாகவே எம்பெருமானார் அருளிச்செய்தார். ஆகவே, இதற்கு முன்பாக, அனைத்து ஜகத்திற்கும் ஈச்வரனே காரணமாக உள்ளான் என்பது, மற்ற காரணங்களால் அல்ல, தனது இச்சையால் மட்டுமே என்றும்; ஸங்கல்பத்தை கொண்டு மட்டுமே இது நடைபெறுவதால், மிகவும் எளிதாகவே அவனுக்கு உள்ளது என்றும்; இதன் பயன் என்பது லீலைக்காக மட்டுமே என்றும் கூறப்பட்டது.

165. இவன்தானே ஜகத்தாய்ப் பரிணமிக்கையாலே உபாதாநமுமாயிருக்கும்.

**அவதாரிகை** - இனி, இவனுக்கு ஜகத்தைப் பற்ற உண்டான காரணத்வம் கட படாதிகளைப் பற்ற குலாலாதிகளுக்குண்டான காரணத்வம் போலே நிமித்தத்வ மாத்ரமோ? என்கிற சங்கையிலே உபாதாநகாரணமும் இவனே என்னுமத்தை அருளிச்செய்கிறார் (இவன் தானே) யென்று தொடங்கி.

**விளக்கம் -** பானை மற்றும் துணி போன்றவற்றுக்கு நிமித்தகாரணமாக குயவர்கள் போன்றவர்கள் உள்ளனர். இது போன்று இவனுக்கு ஜகத்காரணமாக உள்ள தன்மை என்பது நிமித்தகாரணமாக மட்டுமே ஆகுமோ என்பதற்கு விடை அளிக்கிறார். அதாவது இவனே உபாதானக்காரணமும் ஆவான் என்கிறார்.

**வ்யாக்யானம் -** லோகத்தில், கார்யோத்பத்தியில் காரணம் நிமித்த உபாதாந ஸஹகாரி ரூபேண த்ரிவிதமாயிருக்கும் இதில், நிமித்தகாரணமாவது, உபாதாநமான வஸ்துவை கார்யரூபேண விகரிப்பிக்கும் கர்த்ருவஸ்து. உபாதாந காரணமாவது, கார்யரூபேண விகரிக்கைக்கு யோக்யமான வஸ்து. ஸஹகாரி காரணமாவது, கார்ய உத்பத்திக்கு உபகரணமான வஸ்து. கடபடாதிகளுக்கு குலால குவிந்தாதிகள் நிமித்தமாய், மருத்தந்த்வாதிகள் உபாதாநமாய், தண்ட சக்ரவேமாதிகள் ஸஹகாரியாயிருக்கும். இங்ஙனன்றிக்கே ஜகத்ரூப கார்ய உத்பத்தியில் ஈச்வரனே த்ரிவித காரணமுமாயிருக்கும். எங்ஙனே? என்னில், "பஹு ஸ்யாம்" என்கிற ஸங்கல்ப விசிஷ்டனாய்க் கொண்டு நிமித்தகாரணனாயும், நாம ரூப விபாக அநர்ஹமாம்படி தன்னுடனே கூடிக்கிடக்கிற ஸூக்ஷ்ம சித்சித விசிஷ்டனாய்க் கொண்டு உபாதாந காரணமாயும், ஜ்ஞாந சக்த்யாதி விசிஷ்டனாய்க் கொண்டு ஸஹகாரி காரணமாயும் இருக்கும். ஆகையாலே உபாதாந காரணமும இவனேயென்கிறார். (இவன்) என்று, கீழ் நிமித்தகாரணமாகச் சொன்ன ஈச்வரனைப் பராமர்சிக்கிறது. சித அசித்துக்கள் இரண்டும அப்ருதக் ஸித்த விசேஷணமாய்க் கொண்டு, தான் என்கிற சொல்லுக்குள்ளே அந்தர்ப்பூதமாம்படி யிருக்கையாலே, (தானே ஜகத்தாய் பரிணமிக்கையாலே) என்கிறார். (உபாதாநமுமாயிருக்கும்) என்று கீழ்ச்சொன்ன நிமித்தகாரணத்வத்தோடே உபாதாந காரணத்வத்தையும ஸமுச்சயிக்கிறது.

**விளக்கம் -** இந்த உலகில் ஒரு பொருள் உண்டாவதற்கான காரணம் என்பது நிமித்த காரணம், உபாதான காரணம் மற்றும் ஸஹகாரி காரணம் என மூன்றுவிதமாக உள்ளன. இவற்றில் நிமித்தகாரணம் என்பது, உபாதானக்காரணமாக உள்ள வஸ்துவை, அதன் கார்யப்பொருளாக மாற்றிக் கொடுக்கின்ற செயலாற்றும் வஸ்துவாகும். உபாதானக் காரணம் என்பது, கார்யப்பொருளாக மாறுவதற்கான தகுதி கொண்ட வஸ்துவாகும். கார்யப் பொருளுடைய உற்பத்திற்கு உதவுகின்ற வஸ்துவானது, ஸஹகாரி காரணம் என்பதாகும். குடம் மற்றும் துணி ஆகியவற்றுக்கு முறையே குயவன் மற்றும் நெசவாளி ஆகியோர் நிமித்த காரணமாகவும், மண் மற்றும் பஞ்சு ஆகியவை உபாதானக்

காரணமாகவும், தடி மற்றும் சக்கரம் ஆகியவை ஸஹ்காரி காரணமாகவும் உள்ளன. ஜகத்ரூபமாக உள்ள கார்யத்தின் உற்பத்தியில் இந்த மூன்றுவிதமான காரணங்களாக ஈச்வரனே உள்ளான். எப்படி? சாந்தோக்யத்தில் "பஹு ஸ்யாம் - நான் பலவாகக் கடவேன்" என்று ஸங்கல்பம் செய்பவனாக உள்ளதால் நிமித்த காரணமாகிறான். பெயர் மற்றும் ரூபம் என்று பிரித்து அறியத் தகுதி இல்லாதபடி தன்னுடன் சேர்ந்து கிடக்கின்ற ஸூக்ஷ்மமான சித் மற்றும் அசித் ஆகியவற்றுடன் இணைந்து உபாதானக் காரணம் ஆகிறான். ஞானம் மற்றும் சக்தி போன்றவற்றுடன் கூடியுள்ளதால் ஸஹகாரி காரணம் ஆகிறான். எனவே உபாதானக்காரணமும் இவனே ஆவான் என்கிறார். (இவன்) - இதன் மூலம் கீழே நிமித்த காரணமாகக் கூறப்பட்ட ஈச்வரனையே மீண்டும் கூறுகிறார். சித் மற்றும் அசித் ஆகிய இரண்டும் அவனை விட்டுப் பிரியாத அடையாளமாகக் கொண்டு, "தான்" என்ற சொல்லிற்குள் இருப்பதால், "தானே ஜகத்தாய் பரிணமிக்கையாலே" என்கிறார். (உபாதாநமுமாயிருக்கும்) - முன்பு கூறிய நிமித்தகாரணத்துடன் உபாதானக் காரணத்தையும் சேர்க்கிறார்.

**வ்யாக்யானம் -** இத்தால் ப்ரஹ்மத்தினுடைய ஜகத் காரணத்வத்தை ப்ரதிபாதிக்கிற வேதாந்தஸூத்ரத்தில் நிமித்த காரணத்வத்தை ஸாதித்தவநந்தரம், "ப்ரக்ருதிச்ச ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தாநுபரோதாத்" என்று உபாதாந காரணத்வத்தையும் சொன்னாப்போலே இவரும் அருளிச்செய்தாராயிற்று. "ப்ரக்ருதிச்ச" என்றத்தையுட் கொண்டிறே இவரும் (உபாதாநமுமாயிருக்கும்) என்றது. அங்கு "ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தா நுபரோதாத்" என்று ஸாத்யம் முன்னாக ஸாதநத்தைச் சொல்லிற்று; இங்கு (இவன்தானே ஜகத்தாய் பரிணமிக்கையாலே) என்று ஸாதநம் முன்னாக ஸாத்யத்தைச் சொல்லிற்று. அங்கு "யேநாச்ருதம் ச்ருதம் பவதி அமதம் மதம் அவிஜ்ஞாதம் விஜ்ஞாதம் ஸ்யாத்" என்று ஏக விஜ்ஞாநேந ஸர்வ விஜ்ஞாந ப்ரதிஜ்ஞையாலும்,"யதா ஸோம்யைகேந ம்ருத் பிண்டேந ஸர்வம் ம்ருண்மயம் விஜ்ஞாதம் ஸ்யாத்" என்கிற ததுபபாதகமான த்ருஷ்டாந்தத்தாலும் ஏக வஸது பரிணாமம் ஜகத்து என்றிறே சொல்லிற்று. அந்த ஏக வஸ்துவாகிறது, ஸூக்ஷ்ம சிதசித விசிஷ்டமான ப்ரஹ்மமிறே. அத்தையிறே இவரும் (தானே) என்கிற சொல்லாலேயருளிச்செய்தது. ஆகையால், அந்த ஸூத்ரார்த்தமேயிது என்னத்தட்டில்லை. "ஏகமேவாத்விதீயம்", "ததாத்மாநம் ஸ்வயமகுருத", "ஸ்ருஷ்டௌ ஸ்ருஜதி சாத்மாநம் விஷ்ணு: பால்யஞ்ச பாதி ச உபஸம்ஹ்ரியதே சாந்தே ஸம்ஹர்த்தா ச ஸ்வயம் ப்ரபு:", "ஸ ஏவ ஸ்ருஜ்யஸ் ஸ ச ஸர்க்க கர்த்தா ஸ ஏவ பாத்யத்தி ச பால்யதே ச, ப்ரஹ்மாத்யவஸ்த்தாபிரசேஷ மூர்த்திர் விஷ்ணு வரிஷ்ட்டோ வரதோ வரேண்ய" இத்யாதிகளாலே இந்த நிமித்த உபாதாநயோரைக்யத்தை ச்ருதி ஸ்ம்ருதிகள் ஸுவ்யக்தமாகச் சொல்லா நின்றனவிறே.

**விளக்கம் -** அதாவது, ப்ரஹ்மத்தின் ஜகத்காரணத்தை விளக்குகின்ற ப்ரஹ்மஸூத்ரத்தில், நிமித்த காரணமாக மட்டுமே தன்மையை உணர்த்தும் ஸூத்ரத்தைத் தொடர்ந்து ப்ர. ஸூ (1-4-23) - ப்ரக்ருதி: ச ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்த அநுபரோதாத் - ப்ரஹ்மமே உபாதானக் காரணம் என்றால் மட்டுமே, உறுதிபட உரைக்கும் வாக்கியங்களும் உதாரணங்களும் முரண்படாமல் இருக்கும் - என்பதாக ப்ரஹ்மத்தின் உபாதானக் காரணமாக உள்ள தன்மை கூறப்பட்டது. இதனைப் போன்றே இவரும் இங்கு செய்கிறார். “ப்ரக்ருதிச்ச” என்பதை அடிப்படையாகக் கொண்டு இவரும் “உபாதானமாய் இருக்கும்” என்கிறார். ப்ரஹ்மஸூத்ரத்தில், “ப்ரதிஜ்ஞா” என்று, ஸாதிக்கப்படும் பொருளுக்கு முன்பாக ஸாதனம் கூறப்பட்டது. ஆனால் இங்கு, “இவன்” என்பதால், ஸாதனத்திற்கு முன்பாக ஸாதிக்கப்படும் பொருள் கூறப்பட்டதாகிறது. ப்ரஹ்மஸூத்ரத்தில், யேந அச்ருதம் ச்ருதம் பவதி அமதம் மதம் அவிஜ்ஞாதம் விஜ்ஞாதம் ஸ்யாத் - எந்த ஒன்றைக் குறித்துக் கேட்டப்பட்டால் கேட்கப்படாதவையும் கேட்டவை என்று ஆகிறதோ - என்பதாக “ஒன்றை அறிந்தால் அனைத்தையும் அறிந்ததாகும்” என்ற ப்ரதிஜ்ஞை உள்ளது; இத்தகைய ப்ரதிஜ்ஞையை வெளிப்படுத்துவதாக உள்ள சாந். (6-1-4, 5, 6) - யதா ஸோம்ய ஏகேந ம்ருத் பிண்டேந ஸர்வம் ம்ருண்மயம் விஜ்ஞாநம் ஸ்யாத் - குழந்தாய்! எவ்விதம் மண்ணைக் குறித்து அறிந்தால், மண்ணால் செய்யப்பட்ட அனைத்தையும் (அதாவது அவற்றின் தன்மைகள் குறித்து) அறிந்ததாகிறதோ - என்ற உதாரணம் உள்ளது; இவை மூலம், ஒரே வஸ்துவே ஜகத்தை பரிணாமம் அடைவது கூறப்பட்டது. இத்தகைய ஒரே வஸ்து என்பது சித் மற்றும் அசித் ஆகியவற்றைக் கொண்ட ப்ரஹ்மம் ஆகும். இதனையே இவரும் “தானே” என்று கூறினார். எனவே இந்தச் சூர்ணையானது, அந்த ப்ரஹ்ம ஸூத்ரத்தின் பொருள் ஆகும் என்று கூறக் குறையில்லை. சாந். (6-2-1) - ஸதேவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத் ஏகம் ஏவ அத்விதீயம் – இரண்டாவதாக ஏதும் இன்றி இருந்தது - என்றும், தைத். (2-7-7) – தத் ஆத்மாநம் ஸ்வயம் அகுருத – தன்னையே உபாதானமாகச் செய்தது - என்றும், ஸ்ரீவிபு. (1-12-67) - ஸ்ருஷ்டௌ ஸ்ருஜதி சாத்மாநம் விஷ்ணு: பால்யஞ்ச பாதி ச உபஸம்ஹ்ரியதே சாந்தே ஸம்ஹர்த்தா ச ஸ்வயம் ப்ரபு: - அந்த நாராயணன் நான்முகனாக நின்று படைக்கிறான், விஷ்ணுவாக இருந்து காக்கிறான், இறுதியில் அனைத்தையும் அழிக்கிறான், தானே அனைத்திற்கும் தலைவனாக உள்ளான் - என்றும், ஸ்ரீவிபு. (1-12-70) - ஸ ஏவ ஸ்ருஜ்யஸ் ஸ ச ஸர்க்க கர்த்தா ஸ ஏவ பாத்யத்தி ச பால்யதே ச, ப்ரஹ்மாத்யவஸ்த்தாபிரசேஷ மூர்த்திர் விஷ்ணு வரிஷ்ட்டோ வரதோ வரேண்ய - அவனே அனைத்தையும் ஸ்ருஷ்டிப்பவனாகவும்,

வரங்களை அளிப்பவனாகவும், அனைவராலும் அடையத்தக்கவனாகவும் உள்ளான்; படைக்கப்பட்ட அனைத்தும் விஷ்ணுவே ஆவான்; காப்பவனும் அழிப்பவனும் அவனே - என்றும் உள்ள பல வாக்கியங்கள் மூலம், நிமித்த காரணம் மற்றும் உபாதானக் காரணம் ஆகிய இரண்டும் ஒன்றே என்பதை ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் மிகவும் தெளிவாகக் கூறின.

166. ஆனால், நிர்விகாரனென்னும்படி யென்னென்னில்,

**அவதாரிகை -** இப்படி, தானே ஜகத்தாய் பரிணமிக்குமாகில் “நிர்குணம் நிரஞ்ஜநம்”, “நிஷ்களம் நிஷ்க்ரியம் சாந்தம்”, “ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம”, “அவிகாராய சுத்தாய” என்று இவனை நிர்விகாரனாகச் சொல்லும்படி யெங்ஙனே? என்கிற சங்கையை அநுவதிக்கிறார் (ஆனால் நிர்விகாரன் என்னும்படியென்? என்னில்) என்று.

**விளக்கம் -** ஆனால் இவ்விதம் அவனே ஜகத்தாக மாறி நிற்கிறான் என்றால், ஆத்ம. (68) - நிர்குணம் (குணம் அற்றது) … நிரஞ்ஜனம் (தோஷம் அற்றது) – என்றும், ச்வே (6-19) - நிஷ்கலம் (உருவம் அற்றது), நிஷ்க்ரியம் (செயல்கள் அற்றது), சாந்தம் (அமைதியானது) – என்றும், தை. (1-1) - ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் – ஸத்யம், ஞானம், எல்லையற்ற ப்ரஹ்மம் - என்றும், அவிகாராய சுத்தாய – மாற்றம் அடையாதவன் தூய்மையாவன் - என்றும் உள்ள வாக்கியங்கள், “இவனை மாற்றம் அற்றவன்” என்று கூறுவது எப்படி என்ற சந்தேகத்தை எழுப்பிக்கொள்கிறார். இதற்கான விடையை அடுத்த சூர்ணையில் கூறுகிறார்.

167. ஸ்வரூபத்துக்கு விகாரமில்லாமையாலே.

**அவதாரிகை -** அத்தைப் பரிஹரிக்கிறார் (ஸ்வரூபத்துக்கு) இத்யாதியாலே.

**விளக்கம் -** அந்த ஐயத்தை தீர்த்து வைக்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, சித் அசித் ரூப விசேஷண விசிஷ்டனான தானே ஜகத்தாய் பரிணமிக்குமிடத்தில விசேஷ்யமான ஸ்வரூபத்துக்கு விகாரமில்லாமையாலே நிர்விகாரன் என்னக் குறையில்லை யென்கை.

**விளக்கம் -** சித் மற்றும் அசித் ரூபமாக உள்ள வஸ்துக்களைத் தனது விசேஷணமாகக் கொண்டுள்ள தான், ஜகத்தாக மாறி நிற்கும்போது, அவற்றின் விசேஷ்யப் பொருளாக உள்ள தனது ஸ்வரூபத்திற்கு மாற்றம் இல்லை; ஆகவே இவன் மாற்றம் அடையாதவன் என்பதில் முரண்பாடு இல்லை.

168. ஆனால் பரிணாமமுண்டாம்படி யென்னென்னில்.

**அவதாரிகை -** ஸ்வருபத்துக்கு விகாரமில்லையாகில் "இவன்தானே ஜகத்தாய் பரிணமிக்கிறான்" என்ற பரிணாமம் இவனுக்குண்டாம்படி எங்ஙனே? என்கிற சங்கையை அநுவதிக்கிறார் (ஆனால் பரிணாமமுண்டாம்படி என்? என்னில்) என்று.

**விளக்கம் -** இவனுடைய ஸ்வரூபத்திற்கு மாற்றம் ஏற்படுவதில்லை என்றால், "இவன்தானே ஜகத்தாய் பரிணமிக்கிறான்" என்று கூறப்படும் மாற்றம் இவனுக்கு எப்படி உண்டாகிறது என்று சந்தேகத்தை எழுப்பிக் கொள்கிறார்.

169. விசிஷ்ட விசேஷண ஸத்வாரகமாக.

**அவதாரிகை -** அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார் (விசிஷ்ட விசேஷண ஸத்வாரகமாக) என்று.

**விளக்கம் -** கடந்த சூர்ணையில் எழுப்பிய சந்தேகத்திற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** "விசிஷிடஞ்ச தத் விசேஷணம் சேதி விசிஷ்ட விசேஷணம்" என்று, ப்ரதமம் கர்மதாரய ஸமாஸத்தைப் பண்ணி, "த்வாரேண ஸஹ வர்த்தத இதி ஸத்வாரகம்" எனறு அநந்தர பதத்தை பஹுவ்ரீஹித்து, (விசிஷ்ட விசேஷணேந ஸத்வாரகம் விசிஷ்ட விசேஷண ஸத்வாரகம்) என்று த்ருதீயா தத் புருஷனாக சப்தத்துக்கு வ்யுத்பத்தி பண்ணிக்கொள்வது. விசிஷடமாவது விசேஷ யுக்தமானதாய், விசிஷ்டமான விசேஷணமென்று, தண்ட குண்டலாதிகள் போலன்றிக்கே சரீர பூதமாகையாலே, ப்ருதக் ஸித்தயர்ஹமல்லாத விசேஷத்தை உடைத்தான சித் அசித் ரூப விசேஷணத்தைச் சொல்லுகிறது. அன்றிக்கே, விசிஷ்ட விசேஷணம் என்கிறவிதுக்கு சரீர பூதமாய்க்

கொண்டு, என்றுமொக்கத் தன்னோடே கூடியிருக்கிற விசேஷணமென்று பொருளாகவுமாம். அப்போதும் ப்ருதக்ஸித்தி அர்ஹமான தண்ட குண்டலாதிகளில் வ்யாவ்ருத்தி ஸித்திக்குமிறே. விசேஷணத்தாலே ஸத்வாரகமாகவென்றது இப்படி அப்ருதக் ஸித்தமான விசேஷணமாகிற ஹேதுவாலே த்வார ஸஹிதமாகவிவனுக்கு பரிணாமம் உண்டாகிறதென்கை. இத்தால், அப்ருதக் ஸித்தமான சித் அசித் ரூப விசேஷண த்வாரா இவனுக்கு பரிணாமம் உண்டாகிறது என்றதாயிற்று.

**விளக்கம்** - “விசிஷ்டஞ்ச தத் விசேஷணம் சேதி விசிஷ்ட விசேஷணம் - தனித்தன்மையுடன் அடையாளம் காண்பிக்கப்படும் பொருள் மற்றும் அடையாளம் என்பதே அடையாளத்துடன் கூடியுள்ள பொருள்” என்பதாக முதலில் பண்புத்தொகையாக உரைக்கிறார். அடுத்து, “ஸத்வாரகம்” என்பதை அன்மொழித்தொகை என்பதாகக் கொண்டு, “த்வாரேண ஸஹ வர்த்தத இதி ஸத்வாரகம் - மற்றவற்றுடன் சேர்ந்து நிற்பது என்பது ஸத்வாரகம்” என்று உரைக்கிறார்; அதாவது இங்கு, “விசேஷணத்துடன் கூடியுள்ள ஸத்வாரகம்” என்று மூன்றாம் வேற்றுமையாகக் கொள்க. விசிஷ்டம் என்பது அடைகொளியுடன் கூடியுள்ளதாக, விசிஷ்டமான விசேஷணம். அதாவது “தடியை வைத்துள்ளவன் தண்டீ” என்றும், “குண்டலம் அணிந்தவன் குண்டலீ” என்றும் அடையாளம் காண்பிக்கப்படுவது போன்று அல்லாமல், சரீரம் உள்ளதால் தனியாகப் பிரிந்து நிற்பதற்குத் தகுதி அற்றதாக உள்ள சிறப்பு கொண்ட சித் மற்றும் அசித் வடிவத்தில் உள்ள அடையாளங்களைக் கூறுகிறார். அல்லது “விசிஷ்ட விசேஷணம்” என்பதற்கு, சித் மற்றும் அசித் ஆகியவற்றைச் சரீரமாகக் கொண்டு, எப்போதும் தன்னுடன் கூடியுள்ள நிலை என்றும் கூறலாம். அப்போதும், சரீரம் முதலானவற்றை விட, பிரிந்து அறிதலுக்குத் தகுதியாக உள்ள தடி மற்றும் குண்டலம் ஆகியவற்றிலிருந்து வேறுபாடு உண்டாகும் அல்லவோ? “விசேஷணத்தாலே ஸத்வாரகம்” - இவ்விதம் ப்ரஹ்மத்தை விட்டு அகலாதபடி உள்ள விசேஷணம் என்ற காரணத்தால், சித் மற்றும் அசித் ஆகியவை மூலமாக இவனுக்கு மாற்றம் ஏற்படுவதாகத் தோன்றுகிறது என்று கருத்து.

170. ஒரு சிலந்திக்குண்டான ஸ்வபாவம் ஸர்வசக்திக்குக் கூடாதொழியாதிறே.

**அவதாரிகை** - இப்படி ஸ்வரூபத்துக்கு விகாரமின்றிக்கேயிருக்க ஸ்வசரீரபூத விசேஷணத்வாரா கார்ய ஜாதத்துக்கெல்லாம் இவனே உபாதாநமாகை கூடுமோ? என்ன, அருளிச்செய்கிறார் (ஒரு சிலந்திக்குண்டான) என்று தொடங்கி.

**விளக்கம் -** இவ்விதம் ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபத்திற்கு மாற்றம் ஏதும் இல்லை என்னும்போது, தனது சரீரமாக உள்ள விசேஷணங்கள் மூலம் உண்டாகும் அனைத்து கார்யப் பொருள்களுக்கும் இவனே உபாதானக்காரணமாக உள்ளான் என்பது எப்படிப் பொருந்தும் என்பதற்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, அல்பசக்திகமான சிலந்திக்கு ஸ்வரூபவிகாரமின்றிக்கே யிருக்கச் செய்தே, ஸ்வசரீரபூத விசேஷண முகத்தாலே தந்துஜாதமான கார்ய ஜாதத்துக்குத்தான் உபாதானமாம்படியுண்டான ஸ்வபாவம், "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே" எனறு ஓதப்படுகிற ஸர்வசக்திக்குக் கூடாதொழியாதிறே என்கை. "யதோர்ணநாபிஸ் ஸ்ருஜதே க்ருஹணதே ச", "ஊர்ணநாபிர் யதா ஸ்ருஷ்ட்வா ஸ்வயம் தத் க்ரஸதே புந: ததா ஸ்ருஷ்ட்வேதமகிலம் ஸ்வயம் தத் க்ரஸதே ஹரி:" என்னக்கடவதிறே. "கார்யே அநந்தே ஸ்வ தநு முகத: த்வாம் உபாதாநம் ஆஹு: ஸா தே சக்தி: ஸுகரம் இதரத் ச இதி வேலாம் விலங்க்ய இச்சா யாவத் விஹரதி ஸதா ரங்கராஜ அநபேக்ஷா ஸா ஏவ ஐசாநாத் அதிசயகரீ ஸா ஊர்ணநாபௌ விபாவ்யா" என்றருளிச்செய்தாரிறே பட்டர். இப்படி, நிமித்தோபாதாந காரணத்வங்களைச் சொல்லி ஸஹகாரி காரணத்வம் சொலலா தொழிந்தது ஸர்வஜ்ஞத்வாதி குணயோகம் கீழே சொல்லுகையாலும், நிமித்த உபாதாநங்களுக்கு ஐக்யம் சொல்லுகையாலும், தன்னடையே ஸித்திக்கு மென்னுமத்தாலே, ஆகையிறே வேதாந்த ஸூத்ரத்திலும் இது விசேஷித்துச் சொல்லாதொழிந்தது.

**விளக்கம் -** அற்பமாக உள்ள ஒரு சிலந்திக்கு, தனது ஸ்வரூபத்தில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்றாலும், தனது சரீரம் மூலமாக எச்சில் வடிவில் உண்டாகும் வலை என்ற கார்யப்பொருளின் உற்பத்திக்கு உபாதானக்காரணமாக உள்ள நிலை ஏற்படுபடுகிறது. இப்படி உள்ளபோது, இத்தகைய இயல்பானது, ச்வே. (6-8) - பராஸ்ய சக்தி: விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பலக்ரியா ச – அவனுடைய சக்தியானது பலவிதமாகவும், ஞானம் பலம் மற்றும் செய்கைகளை இயல்பாகவே கொண்டதாகவும் உள்ளது - என்று ஓதப்படும் ஸர்வசக்தி கொண்ட வஸ்துவிற்கு ஏற்படாமல் இருக்குமோ? முண். (1-1-7) – யதோர்ணநாபி: ஸ்ருஜதே க்ருஹண்தே ச - எவ்விதம் சிலந்திப்பூச்சி தனது வலையை உண்டாக்கியும் உள்ளிழுத்துக் கொண்டும் செய்கிறதோ – என்றும், ஊர்ணநாபிர் யதா ஸ்ருஷ்ட்வா ஸ்வயம் தத் க்ரஸதே புந: ததா ஸ்ருஷ்ட்வேதமகிலம் ஸ்வயம் தத் க்ரஸதே ஹரி: - சிலந்தியான்து எவ்விதம் தானே தனது வலையை ஏற்படுத்தி,

அந்த வலையைத் தானே எவ்விதம் விழுங்குகிறதோ அதே போன்று, இந்த உலகத்தை படைக்கும் ஸ்ரீஹரி, அதனைத் தானே விழுங்குகிறான் - என்றும் கூறியது காண்க. ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (2-31) – கார்யே அநந்தே ஸ்வ தநு முகத: த்வாம் உபாதாநம் ஆஹு: ஸா தே சக்தி: ஸுகரம் இதரத் ச இதி வேலாம் விலங்க்ய இச்சா யாவத் விஹரதி ஸதா ரங்கராஜ அநபேக்ஷா ஸா ஏவ ஐசாநாத் அதிசயகரீ ஸா ஊர்ணநாபௌ விபாவ்யா - ஸ்ரீரங்கநாதா! உனது ஸங்கல்பம் எப்படிப்பட்டது என்றால் – இந்தச் செயலைச் செய்ய இயலாது, இந்தச் செயலைச் செய்ய இயலும் என்னும் பேச்சுக்கே இடம் இல்லாமல் உள்ளதாகும்; எப்போதும், எங்கும் நிறைந்து, எதனையும் செய்து முடிப்பதாக உள்ளது. இத்தகைய உனது ஸங்கல்பம் என்பதே சக்தி என்று கூறப்படும் உனது குணமாக உள்ளது. இத்தகைய சக்தி காரணமாகவே, அனைத்தும் அறிந்தவர்கள் – எண்ணற்ற கார்ய வஸ்துக்களில், சேதனம் அசேதனம் ஆகியவற்றைச் சரீரமாகக் கொண்ட உன்னை, அனைத்திற்கும் உபாதானக் காரணம் என்று கூறுகின்றனர். ஆயினும் பாசுபத மதத்தின் வாதங்களை வீழ்த்துவது உனது இந்தச் சக்தி அல்லவோ? இதனை சிலந்தியிடமும் காணலாம் - என்று ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்தார். இவ்விதம் இந்த ஜகத்திற்கான நிமித்தகாரணம் மற்றும் உபாதானக்காரணம் ஆகியவற்றை உரைத்து, ஸஹகாரிகாரணம் என்னும் துணைக்காரணம் குறித்து கூறாமல் விட்டது ஏன்? காரணம், ஸர்வேச்வரனுடைய அனைத்தும் அறியும் தன்மை போன்றவற்றை முன்பே கூறியதாலும், நிமித்தகாரணம் மற்றும் உபாதானக்காரணம் ஆகியவை ஜகத்திற்கு ஒன்றாகவே உணர்த்தப்படுகிறது என்பதாலும், நிமித்தகாரணம் மற்றும் உபாதானக் காரணம் ஆகியவற்றை உரைக்கும்போது ஸஹகாரிகாரணமும் தானாகவே கூறப்பட்டதாகும் என்பதாலும், இதனை வேதாந்தஸூத்ரத்திலும் சிறப்பித்துக் கூறாமல் விடப்பட்டது.

171. ஈச்வரன் ஸ்ருஷ்டிக்கையாவது அசித்தைப் பரிணமிப்பிக்கையும், சேதநனுக்கு சரீரேந்த்ரியங்களைக் கொடுத்து ஜ்ஞாந விகாஸத்தைப் பண்ணுகையும்.

**அவதாரிகை -** ஆக ஈச்வரனே த்ரிவிதகாரணமும் என்னுமிடம் ஸாதித்தாராய் நின்றார் கீழ்; அநந்தரம் “அஜாமேகாம்”, “கௌநாத்யந்தவதீ”, “த்ரிகுணம் தஜ்ஜகத் யோநிரநாதிப்ரபவாப்யயம்”, “அஜோஹ்யேக:”, “ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீச நீசௌ”, “அஜோ நித்யச் சாச்வதோயம் புராண:” இத்யாதி ச்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லுகிறபடியே, நித்யமாயிருந்துள்ள அசித்தையும் சித்தையும் ஈச்வரன் ஸ்ருஷ்டிக்கையாவதுதான் ஏது? என்னுமாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (ஈச்வரன் ஸ்ருஷ்டிக்கையாவது) என்று தொடங்கி.

**விளக்கம் -** இதுவரை ஸர்வேச்வரனே ஜகத்தின் மூன்றுவிதமான காரணமுமாக உள்ளான் என்று நிரூபித்தார். அடுத்து, அஜாம் ஏகாம் – பிறப்பற்றதும் ஒன்றாக உள்ளதும் – என்றும், கௌநாத்யந்தவதீ - முதல் மற்றும் முடிவு அற்றது - என்றும், கொஔ- முதல் மற்றும் முடிவு அற்றது – என்றும், ஸ்ரீவிபு. (1-2-22) - த்ரிகுணம் தஜ்ஜகத் யோநிரநாதிப்ரபவாப்யயம் - மூன்று குணங்கள் கொண்டது, ஜகத்தின் காரணமாக உள்ளது, தோன்றுதல் அற்றது - என்றும், அஜோஹ்யேக: - பிறப்பற்ற ஒன்று - என்றும், ச்வே. (1-19) - ஜ்ஞா ஜ்ஞௌ த்வா அஜௌ ஈச அநீசௌ - அறிந்தவன், அறியாதவன் என்று இரண்டு பிறப்பற்றவர்கள் ஈசன், அநீசன் என்று கூறப்படுகிறார்கள் - என்றும், கட. (2-18) – அஜோ நித்ய: சாச்வத: அயம் புராண: - பிறப்பற்றவனாக, நித்யனாக, எப்போதும் உள்ளவனாக, பழையவனாக உள்ள இந்த ஆத்மா - என்றும் உள்ள பல ச்ருதி மற்றும் ஸ்ம்ருதி வாக்கியங்களில் கூறப்பட்டபடி, நித்யமாக உள்ள அசித் மற்றும் சித் ஆகியவற்றில், ஈச்வரன் ஸ்ருஷ்டிப்பது என்னும் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** கீழ் ஜகத்காரணபூதனாகச் சொல்லப்பட்டவீச்வரன் சேதநாசேதநாத்மகமான ஜகத்தை ஸ்ருஷ்டிக்கையாவது, "தம: பரே தேவ ஏகீ பவதி" என்கிறபடியே தன்னோடு அவிபக்தமாய்க் கிடந்து தமச்சப்த வாச்யமான அசித்தை, "ததஸ் ஸ்வயம்பூர் பகவாநவ்யக்தோ வ்யஞ்ஜயந்நிதம், மஹாபூதாதி வ்ருத்தௌஜா: ப்ராதுராஸீத் தமோநுத:" என்கிறபடியே ஸ்வப்ரேரண விசேஷத்தாலே ஸ்வஸ்மாத் விபக்தமாக்கி அநந்தரம், அக்ஷராவஸ்த்தமாக்கி, அது தன்னைப் பின்பு அவ்யக்தாவஸ்த்தமாக்கி, அத்தை வ்யக்த சப்த வாச்யமான ஸமஷ்டி வ்யஷ்டி ரூப ஸமஸ்த கார்யங்களுமாம்படி பரிணமிப்பிக்கையும், "அசித் விசேஷிதாந் ப்ரளய ஸீமநி ஸம்ஸரத:" என்கிறபடியே, கரணகளேபர விதுரனாய், போக மோக்ஷ சூந்யனாய், அசித் விசேஷிதனாய்க் கிடந்த சேதநனுக்கு போக ஸ்த்தாநமான சரீரத்தையும், போக உபகரணங்களான இந்த்ரியங்களையும் கொடுத்து, போக மோக்ஷ பாகித்வ அநர்ஹனாம்படி, முன்பு ஸங்குசிதமாய்க் கிடந்த ஜ்ஞாநத்தினுடைய விகாஸத்தைப் பண்ணுகையும் என்கை. "சேதநனுக்கு" என்றவிது, ஜாத்யேக வசநம்.

**விளக்கம் -** ஜகத் காரணமாகக் கூறப்பட்ட ஸர்வேச்வரன், சேதநம் மற்றும் அசேதநம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஜகத்தை ஸ்ருஷ்டித்தான் என்பது என்ன? தம: பரே தேவ ஏகீ பவதி - என்பதற்கு ஏற்ப தன்னுடன் பிரிக்க இயலாத நிலையில் உள்ளதும், "தமஸ்" என்பதால் கூறப்படுவதும் ஆகிய அசித்தை, மநு. (1-6) – தத: ஸ்வயம்பூ: பகவாந் அவ்யக்தோ வ்யஞ்ஜயந் இதம் | மஹாபூதாதி வ்ருத்தௌஜா: ப்ராதுராஸீத் தமோநுத: - ஸ்ருஷ்டி காலம் வந்தவுடன், ஸ்வயம்பூவாகிய நாராயணன், அதுவரை புலப்படாமலிருந்து, மிகுந்த ப்ரகாசத்துடன் வெளிப்பட்டான்; மிகுந்த தேஜஸ்ஸுடன் தனது கட்டுப்பாட்டில் உள்ள பஞ்சபூதங்களை, இருளை விரட்டும்விதமாக வெளிப்படுத்தினான் - என்பதற்கு ஏற்ப, தான் உட்புகுந்த சிறப்பு மூலம் தன்னிடமிருந்து பிரித்து, அடுத்து அதனை அக்ஷர நிலையை அடையும்படிச் செய்து, அதன் பின்னர் அதனை அவ்யக்த நிலையை அடையும்படிச் செய்து, அதன் பின்னர் அதனை "வ்யக்தம் – காணும்படி" என்பதாக உள்ள தனி மற்றும் தொகுத்த ரூபமாகப் பரிணாமம் செய்கிறான். மேலும் அசித் வஸ்துக்களைப் போன்று கிடந்த சேதனுக்கு, இன்பத்தை அனுபவிக்கவல்ல இடமான சரீரத்தையும், இன்பங்களை அனுபவிப்பதற்கான கருவிகளாகிய இந்த்ரியங்களையும் அளிக்கிறான். இதன் மூலம் சேதநனை இன்பம் மற்றும் மோக்ஷம் அடைவதற்கான தகுதியைப் பெறும்படிச் செய்கிறான். மேலும், முன்பு சுருக்கமாகக் கிடந்த ஞானத்திற்கு மலர்ச்சியையும் ஏற்படுத்துகிறான். "சேதநனுக்கு" என்பதான இதன் மூலம், சேதநர்களுக்கு மட்டும் செய்வதைக் கூறுகிறார்.

172. ஸ்திதிப்பிக்கையாவது ஸ்ருஷ்டமான வஸ்துக்களிலே பயிருக்கு நீர் நிலைபோலே, அநுகூலமாக ப்ரவேசித்து நின்று ஸர்வ ரக்ஷைகளையும் பண்ணுகை.

**அவதாரிகை -** அநந்தரம் ஸ்திதி ஸம்ஹாரங்களினுடைய ப்ரகாரங்களையும் அருளிச் செய்யவேணுமென்று திருவுள்ளம் பற்றி, ப்ரதமம் ஸ்திதியினுடைய ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் (ஸ்திதிப்பிக்கையாவது) என்று தொடங்கி.

**விளக்கம் -** அடுத்ததாக, உயிர்கள் நிற்பதற்குக் காரணமாக உள்ள காப்பாற்றும் தன்மை மற்றும் அவற்றை அழித்தல் ஆகிய விதங்களை அருளிச்செய்ய திருவுள்ளம் கொண்டார். முதலில் காப்பாற்றும் தன்மையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** "ஸ்திதிக்கையாவது" என்னாதே "ஸ்திதிப்பிக்கையாவது" என்றது, ஸ்திதியாவது ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்கள் போலே கர்த்ருகதமன்றிக்கே ரக்ஷணத்துக்கு

கர்மீபவிக்கிற வஸ்துகதமாயிருப்பதொன்றாகையாலே, ஸ்திதிப்பிக்கையே கர்த்ரு வ்யாபாரமாகையால். (ஸ்ருஷ்டமான) இத்யாதி. அதாவது, "தத் ஸ்ருஷ்ட்வா" என்கிறபடியே தன்னாலே ஸ்ருஷ்டமான வஸ்துக்களிலே பயிருக்கு ரக்ஷகமாய்க் கொண்டு அநுகூலமாய் நிற்கும் நீர் நிலைபோலே, "ததேவாநுப்ராவிசத்" என்கிறபடியே, தத் ரக்ஷணாநுகூலமாக உள்ளே ப்ரவேசித்து நின்று, தத் தத் வஸ்து அநுகுணமான ஸர்வ ரக்ஷைகளையும் பண்ணுகையென்கை. அநுப்ரவேச சப்தத்துக்கு அநுகூலதயா ப்ரவேசம் இவர்க்கிவ்விடத்தில் விவக்ஷிதம். இத்தால், ஸ்திதிப்பிக்கையாவது நிலைப்பிக்கை யாகையாலே தத் ரக்ஷணங்களைப் பண்ணுகையென்றதாயிற்று.

**விளக்கம்** - "ஸ்திதிக்கையாவது – இருத்தல் என்பது" என்று கூறாமல் "ஸ்திதிப்பிக்கையாவது - இருக்கும்படிச் செய்தல் என்பது" என்று ஏன் கூறினார்? "இருப்பு" என்பது ஸ்ருஷ்டி மற்றும் அழித்தல் போன்று செய்யும் செயல் என்பது அல்லாமல், காப்பாற்றுதலுக்கு ஏற்றபடியான பொருளாக உள்ளதைக் கூறுவதால், "இருக்கும்படி செய்தல்" என்பதே இங்கு அவன் செய்கின்ற செயல் என்றாகிறது. ஆகவே இவ்விதம் உரைத்தார். "தத் ஸ்ருஷ்ட்வா - அதனை ஸ்ருஷ்டித்து" என்பதற்கு ஏற்ப தன்னால் படைக்கப்பட்ட பொருள்களில், பயிரைக் காப்பாற்றுதலுக்கு ஏற்றபடி நிற்கும் நீர் நிலை போன்று, "தத் ஏவ அநுப்ராவிசத் - அவற்றில் புகுந்து" என்பதற்கு ஏற்ப, அவற்றைக் காப்பாற்றுவதற்குத் தகுதியாக அவற்றின் உள்ளே புகுந்து, அந்தந்த வஸ்துக்களுக்கு ஏற்றபடியான அனைத்து காப்பற்றும் செயல்களையும் செய்கிறான். "உள்ளே புகுதல்" என்பது, அவற்றுக்கு ஏற்றபடியான நன்மைகளைச் செய்யவே ஆகும் என்பதே இங்கு இவருடைய திருவுள்ளமாக உள்ளது. ஆகவே "இருக்கும்படிச் செய்தல்" என்பது "நிலைக்கும்படிச் செய்தல்" என்பதால், அந்தந்த காப்பாற்றும் செயலைச் செய்கிறான் என்றாகிறது.

173. ஸம்ஹரிக்கையாவது அவிநீதனான புத்ரனைப் பிதா விலங்கிட்டு வைக்குமாபோலே, விஷயாந்தரங்களில் கைவளருகிற கரணங்களைக் குலைத்திட்டு வைக்கை.

**அவதாரிகை** – அநந்தரம், ஸம்ஹார ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் (ஸம்ஹரிக்கை யாவது) என்று தொடங்கி.

**விளக்கம் -** அடுத்து அழிக்கும் செயல்களுடைய விதத்தைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, “விசித்ரா தேஹ ஸம்பத்தீரீச்வராய நிவேதிதும்” என்கிறபடியே ஸ்வஸமாச்ரயணத்தைப் பண்ணி, உஜ்ஜீவிக்கைக்கு உறுப்பாகத் தான் கொடுத்த கரணங்களைக் கொண்டு தன்னை வழிபடுகையன்றிக்கே பாஹ்ய விஷய ப்ரவணனாய்ப் போகப் புக்கவாறே, விதி நிஷேத வச்யனாய ஒடுங்கி வர்த்தியாமல், ஸ்வைரசாரியான புத்ரனை ஹிதபரனான பிதாவானவன் ஒரு வ்யாபாரார்ஹனல்லாதபடி விலங்கையிட்டு ஒடுக்கி வைக்குமாப்போலே தன்னையொழிந்த விஷயங்களிலே அதிப்ரவணமாய் நடக்கிற கரணங்களைக் குலைத்து ஒடுக்கியிட்டுவைக்கையென்கை.

**விளக்கம் -** “விசித்ரா தேஹ ஸம்பத்தீரீச்வராய நிவேதிதும் - விசித்ரமான அமைப்புடன் கூடிய இந்தச் சரீரத்தை அளித்தது என்பது ஈச்வரனை ஆராதிக்கவே ஆகும்” என்பதற்கு ஏற்ப, தன்னைச் சரணம் புகுந்து கரையேறுவதற்கு ஏற்றபடியாக, தான் அளித்த உடல் உறுப்புகளைக் கொண்டு தன்னை வழிபடுதல் போன்றவற்றைச் செய்யாமல், மற்ற விஷயங்களில் ஈடுபாடு கொண்டவர்களாக உள்ளதைக் காண்கிறான். தனக்கு விதிக்கப்பட்டவற்றைச் செய்து, அந்த விதிகளுக்கு வசப்பட்டு, மற்ற விஷயங்களிலிருந்து விலகி வாழாமல், தனது விருப்பப்படி தகாதவற்றைச் செய்தபடி உள்ள தனது புத்திரன் ஒருவனை, அவனுடைய நன்மையில் மட்டுமே கண்வைத்தபடி உள்ள ஒரு தந்தை, அவன் எந்தச் செயலையும் செய்ய இயலாதபடி விலங்கு இட்டு வைக்கிறான். இதனைப் போன்றே ஸர்வேச்வரனும், தன்னைத் தவிர்த்து மற்ற விஷயங்களில் மிகவும் ஈடுபாட்டுடன் உள்ள உடல் உறுப்புகளை ப்ரளயத்தின்போது அழிக்கிறான் என்று கருத்து.

174. இம்மூன்றும் தனித்தனியே நாலு ப்ரகாரமாயிருக்கும்.

**அவதாரிகை -** இனி இந்த ஸ்ருஷ்ட்யாதிகள், தான் ப்ரத்யேகம் சதுர்விதமா யிருக்கையாலே, அத்தையும் தர்சிப்பிக்கைக்காக அருளிச்செய்கிறார் (இம்மூன்றும் தனித்தனியே நாலு ப்ரகாரமாயிருக்கும்) என்று.

**விளக்கம் -** அடுத்து, இத்தகைய ஸ்ருஷ்டி போன்றவற்றில் ஸர்வேச்வரன் நான்குவிதமான உள்ளான் என்பதால், அதனை வெளிப்படுத்தத் திருவுள்ளம் கொண்டு அருளிச்செய்கிறார்.

175. ஸ்ருஷ்டியில், ப்ரஹ்மாவுக்கும் ப்ரஜாபதிகளுக்கும் காலத்திற்கும் ஸகல ஜந்துக்களுக்கும அந்தர்யாமியாய் ரஜோகுணத்தோடே கூடி ஸ்ருஷ்டிக்கும்.

**வ்யாக்யானம்** – "சதுர்விபாகஸ் ஸம்ஸ்ருஷ்டௌ சதுர்த்தா ஸம்ஸ்த்திதஸ் ஸ்த்திதௌ, ப்ரளயஞ்ச கரோத்யந்தே சதுர் பேதோ ஜநார்தந:" என்னக்கடவதிறே.

**விளக்கம்** - "சதுர்விபாகஸ் ஸம்ஸ்ருஷ்டௌ சதுர்த்தா ஸம்ஸ்த்திதஸ் ஸ்த்திதௌ, ப்ரளயஞ்ச கரோத்யந்தே சதுர் பேதோ ஜநார்தந: - ஜனார்த்தனன் ஸ்ருஷ்டியில் நான்குவிதமாகவும், காப்பதில் நான்குவிதமாகவும், அழிப்பதில் நான்குவிதமாகவும் உள்ளான்", என்பது காண்க.

**வ்யாக்யானம் -** (ஸ்ருஷ்டியில்) இத்யாதி. அதாவது, ஸ்ருஷ்டியில் வந்தால் சதுர்தச புவந ஸ்ரஷ்டாவாய், ஸமஷ்டி புருஷனான ப்ரஹ்மாவுக்கும், அவனாலே ஸ்ருஷ்டராய் நித்ய ஸ்ருஷ்டி கர்த்தாக்களான தச ப்ரஜாபதிகளுக்கும், ஸ்ருஷ்டிக்கு அபேக்ஷிதமான காலத்துக்கும், ஒன்றுக்கொன்று உத்பாதகங்களான ஸகல ஜந்துக்களுக்கும், தத் தத் ப்ரவ்ருத்திகளடையத் தன்பக்கலிலே பர்யவஸிக்கும்படி அந்தராத்மாவாய், ப்ரவருத்தி ஹேதுவான ரஜோ குண விசிஷ்டனாய்க் கொண்டு ஸ்ருஷ்டிக்குமென்கை. "ஏகேநாம்சேந ப்ரஹ்மாஸௌ பவத்ய வ்யக்த மூர்த்திமாந் மரீசி மிச்ரா: பதய: ப்ரஜாநாமந்யபாகத:, இத்தம் சதுர்த்தா ஸம்ஸ்ருஷ்டௌ வர்த்ததேஸௌ ரஜோ குண:", என்னக்கடவதிறே.

**விளக்கம்** - ஸ்ருஷ்டிக்கும்போது, பதினான்கு லோகங்களையும் படைப்பவனாக உள்ளான். அனைத்து ஆத்மாக்களுடைய தொகுத்த உருவமான நான்முகனுக்கும், அவனால் படைக்கப்பட்டவர்களாக எப்போதும் ஸ்ருஷ்டியில் ஈடுபட்டபடி உள்ள பத்து ப்ரஜாபதிகளுக்கும், ஸ்ருஷ்டிக்குத் தேவையாக உள்ளதான தகுந்த காலத்திற்கும், ஒன்றுக்கொன்று உற்பத்தி செய்தபடி உள்ள அனைத்து உயிர்களுக்கும், இவை அனைத்தின் செயல்கள் அனைத்தும் தன்னில் வந்து முடியும்படியாக அவற்றின் உள்ளே ஆத்மாவாக உள்ளான். இவை அனைத்தும் செயலாற்றுவதற்குக் காரணமாக உள்ள ரஜோகுணத்துடன் நின்று அனைத்தையும் ஸ்ருஷ்டிக்கிறான். ஸ்ரீவிபு. (1-22-25) – ஏகேந அம்சேந ப்ரஹ்மாஸௌ பவத்ய வ்யக்த மூர்த்திமாந் மரீசி மிச்ரா: பதய: ப்ரஜாநாம் அந்யபாகத:, இத்தம் சதுர்த்தா ஸம்ஸ்ருஷ்டௌ வர்த்ததேஸௌ ரஜோ குண: – அனைத்து உயிர்களுக்குள் வசிக்கின்ற ஸர்வேச்வரனாகிய ஜனார்த்தனன், தனது ஒரு சிறு

அம்சத்திலிருந்து நான்முகனுக்கு அந்தர்யாமியாக நின்று அனைத்தையும் படைக்கிறான்; வேறு ஒரு அம்சத்தின் பகுதி மூலம் ப்ரஜாபதிகளான மரீசி போன்றவர்களுக்கு அந்தர்யாமியாக நின்று ஸ்ருஷ்டிக்கிறான்; ஜனார்த்தன் தனது மூன்றாவது அம்சமாகக் காலமாகவும், அடுத்து ஓர் அம்சமாக அனைத்து ஜீவராசிகளுடைய அந்தர்யாமியாகவும் இருந்து, ரஜோகுணத்துடன் கூடியவனாக, தனது ஸ்ருஷ்டியில் நான்குவிதங்களாக நின்று படைக்கிறான் - என்பது காண்க.

176. ஸ்திதியில், விஷ்ணவாதி ரூபேண அவதரித்து, மந்வாதிமுகேந சாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்து, நல்வழி காட்டி, காலத்துக்கும் ஸகல பூதங்களுக்கும் அந்தர்யாமியாய், ஸத்வகுணத்தோடே கூடி ஸ்திதிப்பிக்கும்.

**வ்யாக்யானம் -** (ஸ்த்திதியில்) இத்யாதி. அதாவது, ஸ்த்திதியில் வந்தால், "மத்யே விரிஞ்ச கிரிசம் ப்ரதமாவதார:" என்கிற விஷ்ணு அவதாரம் தொடக்கமாக, "ஸுர நர திரச்சாமவதரந்", "எந்நின்ற யோநியுமாய்ப் பிறந்தாய்" என்கிறபடியே, அநேக அவதாரங்களைப் பண்ணி, "யத் வை கிஞ்ச மநுரவதத் தத் பேஷஜம்" என்று ஆப்ததமனாக ச்ருதி ப்ரஸித்தனான மநு முதலான யாஜ்ஞவல்க்ய பராசர வால்மீகி சௌநகாதிகள் முகேந ஸ்ம்ருதீதிஹாஸ புராண ரூப சாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்து, சேதநர் அபதே ப்ரவ்ருத்தராகாமல் ஈடேறுகைக்கு உறுப்பான நல்வழிகளை தர்சிப்பித்து, ரக்ஷணோபயோகியான காலத்துக்கும்; லோகத்தில் ஒன்றுக்கொன்று ரக்ஷகமான ஸர்வ பூதங்களுக்கும்; தத் தத் ப்ரவ்ருத்திகள் தன்னதாம்படி அந்தராத்மாவாய், ஜ்ஞாந ப்ரகாசாதி ஹேதுவான ஸத்வ குண விசிஷ்டனாய்க் கொண்டு ஸ்த்திதிப்பிக்கும் என்கை. "ஏகாம்சேந ஸ்த்திதோ விஷ்ணு: கரோதி பரிபாலநம், மந்வாதி ரூபீ சாந்யேந காலரூபோபரேண ச ஸர்வ பூதேஷு சாந்யேந ஸம்ஸ்த்தித: குருதே ஸ்த்திதிம், ஸத்வம் குணம் ஸமாச்ரித்ய ஜகத: புருஷோத்தம:" என்னக்கடவதிறே. புராணத்தில் "ஏகாம்சேந ஸ்த்திதோ விஷ்ணு:" என்று விஷ்ணு அவதாரமொன்றையும் சொன்னது, அவதாராந்தரங்களுக்கும் உபலக்ஷண மென்று கொள்ளவேணும், (விஷ்ண்வாதி ரூபேண அவதரித்து) என்று இவர் அருளிச்செய்கையாலே.

**விளக்கம் -** அனைத்தையும் காப்பாற்றி, அவற்றை "இருக்கும்படிச் செய்தல்" என்ற செயலில், ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-51) - மத்யே விரிஞ்ச கிரிசம் ப்ரதமாவதார: - நான்முகன் மற்றும் ருத்ரன் ஆகியோருக்கு நடுவில் முதல் அவதாரம் எடுத்து - என்று விஷ்ணு

அவதாரம் தொடக்கமாக, ஸ்ரீவரதராஜஸ்தவம் (17) - ஸுர நர திரச்சாமவதரந் - தேவர்கள், மனிதர்கள், விலங்குகள் போன்ற பலவற்றிலும் அவதரித்து – என்றும், திருவிருத்தம் (1) - எந்நின்ற யோநியுமாய்ப் பிறந்தாய் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்துவிதமான அவதாரங்களையும் செய்கிறான். “யத் வை கிஞ்ச மநுரவதத் தத் பேஷஜம் - மனு எதனைக் கூறினாரோ அது மருந்து போன்றது” என்பதற்கு ஏற்ப அனைவராலும் நம்பத்தகுந்தபடி உள்ள வேதத்தின் மூலம் அறியப்படும் மனு போன்றவர் தொடங்கி, “யாஜ்ஞவல்க்யர், பராசரர், வால்மீகி, சௌநகர்” என்பது போன்ற பலர் மூலமாக “ஸ்ம்ருதி, இதிகாசம், புராணம்” என்பதான வடிவில் உள்ள சாஸ்த்ரங்களை வெளிப்படுத்துகிறான். சேதநர்கள் தவறான பாதையில் சென்று விடாமல் கரையேறுவதற்கு ஏற்றபடியான நற்பாதைகளைக் காண்பிக்கிறான். அனைத்தையும் காப்பாற்றுவதற்குத் தனக்குப் பயன்படும் காலம், உலகில் ஒன்றுக்கொன்று காப்பாற்றியபடி உள்ளதான அனைத்து உயிர்கள் மற்றும் அவற்றில் செயல்பாடுகள் ஆகியவற்றுக்கு அந்தர்யாமியாக நிற்கிறான். ஞானம் மற்றும் ப்ரகாசம் ஆகியவற்றுக்குக் காரணமாக உள்ள ஸத்வகுணத்துடன் கூடி நின்று அனைத்தையும் காப்பாற்றியபடி உள்ளான். ஸ்ரீவிபு. (1-22, 26, 27, 28) – ஏக அம்சேந ஸ்த்திதோ விஷ்ணு: கரோதி பரிபாலநம், மந்வாதி ரூபீ ச அந்யேந காலரூபோபரேண ச ஸர்வ பூதேஷு ச அந்யேந ஸம்ஸ்த்தித: குருதே ஸ்த்திதிம், ஸத்வம் குணம் ஸமாச்ரித்ய ஜகத: புருஷோத்தம: - விஷ்ணு, தனது ஒரு அம்சம் மூலம் அனைத்தையும் காப்பாற்றி பரிபாலனம் செய்கிறான். மற்றொரு அம்சம் மூலமாக மனு போன்ற மற்றவர்களுக்கு அந்தர்யாமியாக நின்றும், வேறு ஓர் அம்சம் மூலமாகக் காலமாகவும், வேறு ஓர் அம்சத்திலிருந்து அனைத்து உயிர்களுக்கும் அந்தர்யாமியாக நின்று, ஸத்வ குணத்தில் இருந்தபடி, இந்த உலகைக் காப்பாற்றுதல் என்பதைச் செய்கிறான் - என்பது காண்க. ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் (1-22) – ஏக அம்சேந ஸ்த்திதோ விஷ்ணு: - தனது ஒரு அம்சம் மூலம் விஷ்ணு – என்று கூறப்பட்டதன் மூலம், விஷ்ணு அவதாரம் மட்டுமே கூறப்பட்டது என்பதல்ல; இதன் மூலம் அனைத்து அவதாரங்களையும் கூறியதாகவே கொள்ள வேண்டும்; காரணம் சூர்ணையில் “விஷ்ண்வாதி ரூபேண அவதரித்து” என்று இவர் அருளிச்செய்ததால் ஆகும்.

177. ஸம்ஹாரத்தில் ருத்ரனுக்கும் அக்ந்யந்தகாதிகளுக்கும், காலத்துக்கும் ஸகல பூதங்களுக்கும் அந்தர்யாமியாய், தமோகுணத்தோடே கூடி ஸம்ஹரிக்கும்.

**வ்யாக்யானம் -** (ஸம்ஹாரத்தில் இத்யாதி) அதாவது, ஸம்ஹாரத்தில் வந்தால் ஸம்ஹர்த்தாக்களில் தலையான ருத்ரனுக்கும், அவாந்தர ஸம்ஹர்த்தாக்களான அக்நி அந்தகாதிகளுக்கும், ஸம்ஹார உபயோகியான காலத்துக்கும், ஒன்றுக்கொன்று நாசகமான ஸகல பூதங்களுக்கும், தத் தத் ப்ரவ்ருத்திகளெல்லாம் தன்னதாம்படி அந்தராத்மாவாய், கண்பாராமல் செய்கைக்கு உறுப்பான தமோகுண விசிஷ்டனாய்க் கொண்டு ஸம்ஹரிக்குமென்கை. "ஆச்ரித்ய தமஸோ வ்ருத்திமந்தகாலே ததா ப்ரபு:, ருத்ர ஸ்வரூபோ பகவாதேகாம்சேந பவத்யஜ:; அக்ந்யந்தகாதி ரூபேண பாகேநாந்யேந வர்த்ததே, காலஸ்வரூபோ பாகோந்யஸ் ஸர்வபூதாநி சாபர:, விநாசம் குர்வதஸ் தஸ்ய சதுர்த்தைவ மஹாத்மந:" என்னக்கடவதிறே. ஸ்ருஷ்ட்யாதிகளில், சதுர்விபாகஞ் சொல்லுகிறவிடத்தில் அம்ச சப்தத்தாலே ப்ரஹ்மாதிகளைச சொல்லிற்று; அவர்கள் அவனுககு ப்ரகாரபூதராகையாலே யென்னுமிடத்தை அநந்தரம் "ப்ரஹ்மா தக்ஷாதய: காலஸ் ததைவாகில ஜந்தவ:, விபூதயோ ஹரேரேதா ஜகதஸ் ஸ்ருஷ்டி ஹேதவ:, விஷ்ணுர் மந்வாதய: காலஸ் ஸர்வபூதாநி ச த்விஜ, ஸ்த்திதேர் நிமித்த பூதஸ்ய விஷ்ணோரேதா விபூதய: ருத்ர: காலாந்தகாத்யாச்ச ஸமஸ்தாச்சைவ ஜந்தவ:, சதுர்த்தா ப்ரளயே ஹ்யேதா ஜநார்தந விபூதய:" என்று மூன்று ச்லோகத்திலே ஸ்புடமாக ப்ரதிபாதித்தானிறே ஸ்ரீபராசரபகவான். இத்தை நினைத்திறே இவரும் (அந்தர்யாமியாய்) என்று அருளிச்செய்தது. "விஷ்ணுமந்வாதய:" என்கிற ச்லோகத்தில் விஷ்ணுவையும் விபூதியாகச் சொன்னவிது, அவதார ப்ரயுக்தமான விக்ரஹ பரமாகக் கடவது.

**விளக்கம் -** ஸம்ஹாரம் என்ற நிலையில், அழிப்பவர்களில் தலைவனாக உள்ள ருத்ரன், நடுவில் அழிப்பவர்களாக உள்ள அக்னி மற்றும் யமன் போன்றவர்கள், ஸம்ஹாரத்தில் பயன்படும் காலம், ஒன்றுக்கொன்று அழித்துக்கொள்ளும் அனைத்து உயிர்கள் என்றுள்ள அனைவருடைய செயல்பாடுகளும் ஸர்வேச்வரனாகிய தன்னுடையதே ஆகும் என்று கூறலாம்படியாக அவர்களுக்கு அந்தர்யாமியாக நிற்கிறான். கண்பாராமல் செய்யும் செயல்களுக்குக் காரணமாக உள்ள தேஜோ குணத்தைக் கைக்கொண்டு ஸம்ஸாரம் செய்கிறான். ஸ்ரீவிபு. (1-22, 31) - ஆச்ரித்ய தமஸோ வ்ருத்திம் அந்தகாலே ததா ப்ரபு:, ருத்ர ஸ்வரூபோ பகவாத் ஏக அம்சேந பவத்யஜ:; அக்நி அந்தகாதி ரூபேண பாகேந அந்யேந வர்த்ததே, காலஸ்வரூபோ பாகோந்யஸ் ஸர்வபூதாநி ச அபர:, விநாசம் குர்வதஸ் தஸ்ய சதுர்த்தைவ மஹாத்மந: – ஜகத்தை அழிக்கும் நேரத்தில் மஹாவிஷ்ணு தமோகுணத்தின் செயலை அடைந்து, தனது ஒரு அம்சத்தால் ருத்ரன் ஆகிறான். ஒரு அம்சத்தால் அக்னியாக மாறுகிறான். ஒரு அம்சத்தால் காலம் ஆகிறான். மற்றொரு

அம்சத்தால் அனைத்து உயிர்களிலும் நின்று அழிக்கிறான். இப்படியாக நான்கு வகையான அழித்தல் என்பதைப் பரமாத்மா செய்கிறான் - என்பது காண்க. ஸ்ருஷ்டி காலத்தில் நான்கு விதங்கள் கூறியபோது, "அம்சம்" என்பதன் மூலம் நான்முகன் போன்றவர்களைக் கூறினார். அவர்கள் அனைவரும் அவனுடைய சரீரங்களாக உள்ளதால், இவ்விதம் ஸ்ருஷ்டிப்பதை ஸ்ரீவிபு, "ப்ரஹ்மா தக்ஷாதய: காலஸ் ததைவாகில ஜந்தவ:, விபூதயோ ஹரேரேதா ஜகதஸ் ஸ்ருஷ்டி ஹேதவ:, விஷ்ணுர் மந்வாதய: காலஸ் ஸர்வபூதாநி ச த்விஜ, ஸ்த்திதேர் நிமித்த பூதஸ்ய விஷ்ணோரேதா விபூதய: ருத்ர: காலாந்தகாத்யாச்ச ஸமஸ்தாச்சைவ ஜந்தவ:, சதுர்த்தா ப்ரளயே ஹ்யேதா ஜநார்தந விபூதய: - ஜகத்தின் ஸ்ருஷ்டிக்குக் காரணமாக உள்ள நான்முகனும், தக்ஷ ப்ரஜாபதிகளும், காலமும், அனைத்து உயிர்களும் என்ற பலவும் ஸ்ரீஹரியின் விபூதிகள் ஆகும். அந்தணரே! விஷ்ணு, மனு, காலம், அனைத்து உயிர்கள் என்ற இவை அனைத்தும் காக்கும் தொழிலில் ஈடுபடும்போது, அவற்றுக்குக் காரணமாக உள்ள விஷ்ணுவின் விபூதிகளாகத் திகழ்கின்றன. ருத்ரன், காலம், யமன், அனைத்து உயிர்கள் போன்றவை ப்ரளய காலத்தில் ஸர்வேச்வரனுடைய விபூதி ஆகும்" என்றுள்ள மூன்று ச்லோகங்களில் ஸ்ரீபராசரர் தெளிவாக அருளிச்செய்தார். இதனைக் கருத்தில் கொண்டுதான் இவரும் "அந்தர்யாமியாய்" என்று அருளிச்செய்தார். மேலே உள்ல ச்லோகத்தில், "விஷ்ணு மந்வாதய: – விஷ்ணு, மனு தொடக்கமாக" என்று விஷ்ணுவையும் விபூதியாகக் கூறியது ஏனென்றால், அவதாரத்தில் விஷ்ணுவாக நின்றதால் ஆகும்.

178. சிலரை ஸுகிகளாகவும் சிலரை துக்கிகளாகவும் ஸ்ருஷ்டித்தால் ஈச்வரனுக்கு வைஷம்ய நைர்க்ருண்யங்கள் வாராதோவென்னில்;

**அவதாரிகை** - இனி, விஷம ஸ்ருஷ்டியடியாக மந்தமதிகளுக்கு உண்டாகக் கடவ சங்கையைப் பரிஹரிக்கைக்காக ப்ரதமம் தத் விஷய சங்கையை அநுவதிக்கிறார் (சிலரை) என்று தொடங்கி.

**விளக்கம்** - அடுத்து, ஸ்ருஷ்டியில் சில குறைகள் உள்ளதாகத் தாழ்ந்த புத்தி கொண்டவர்களுக்கு ஏற்படக்கூடிய சந்தேகத்தை நீக்குவதற்காக, முதலில், அந்த விஷயத்தில் ஏற்படக்கூடிய சந்தேகத்தை உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸ்ருஷ்டிக்கிறவளவில் ஸர்வ ஆத்மாக்களையும் ஏகப்ரகாரமாக வன்றிக்கே, தேவமநுஷ்யாதி விபாகேந, சிலவாத்மாக்களை ஸுகிகளாகவும், சிலவாத்மாக்களை துக்கிகளாகவும் ஸ்ருஷ்டித்தால், ஸர்வஸமனாய், பரமதயாவானா யிருக்கும் ஈச்வரனுக்கு, எல்லாரளவிலும் ஒத்திராமையாகிற வைஷம்யமும், துக்கிகளாக ஸ்ருஷடிக்கையாலே பரதுக்காஸஹிஷ்ணுத்வ ரூபையான க்ருபையில்லாமையும் வாராதோ? என்கிறதாகில் என்கை.

**விளக்கம்** - ஸ்ருஷ்டியின்போது அனைத்து உயிர்களையும் ஒரே போன்று அல்லாமல், தேவர்கள் மனிதர்கள் என்பதான வேறுபாடுகளுடன் கூடியதாக, ஒரு சிலரை சுகம் உள்ளவர்களாகவும், ஒரு சிலரை துக்கம் கொண்டவர்களாகவும் ஸ்ருஷ்டித்தால், "அனைவருக்கும் சமமாக உள்ளவன், மிகுந்த தயை கொண்டவன்" என்பவனாக உள்ள ஸர்வேச்வரனுக்கு, "அனைவருடைய விஷயத்திலும் ஒரே போன்று இல்லாத தன்மை" என்பதான ஏற்றத்தாழ்வு ஏற்படலாம். அல்லது, துக்கம் நிறைந்தவர்களை ஸ்ருஷ்டிப்பதால் "மற்றவர்கள் அடையும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள இயலாமை என்பதான க்ருபை இல்லாதவன்" என்னும் நிலையும் ஏற்படலாம் அல்லவோ?

179. கர்மமடியாகச் செய்கையாலும், மண் தின்ற ப்ரஜையை நாக்கிலே குறியிட்டு அஞ்சப் பண்ணும் மாதாவைப்போலே ஹித பரனாய்ச் செய்கையாலும் வாராது.

**அவதாரிகை** - அத்தைப் பரிஹரிக்கிறார் (கர்மமடியாக) என்று தொடங்கி.

**விளக்கம்** - அந்த ஐயத்தை நீக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சிலரை ஸுகிகளாகவும், சிலரை துக்கிகளாகவும் ஸ்ருஷ்டிக்கிறவிது, விஷம ஸ்ருஷ்டிக்குறுப்பான சேதநருடைய கர்மமடியாகச் செய்கையாலும்; துக்கிகளாக ஸ்ருஷ்டிக்கிறவிது, தனக்கு ரோககரமான மண்ணை விரும்பித் தின்ற ப்ரஜையை, மேலே தின்னாதபடி நாக்கிலே குறியிட்டு மண் தின்ன பயப்படும்படி பண்ணும் ஹிதபரையான மாதாவைப் போலே இவர்கள் மேல் துக்க ஹேதுவான கர்மங்களைப் பண்ண அஞ்சும்படி ஹிதபரனாய்ச் செய்கையாலும், வைஷம்ய நைர்க்க்ருண்யங்களிரண்டும் இவனுக்கு வாராதென்கை. இத்தால், "வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்" என்கிற வேதாந்தஸூத்ரார்த்தத்தை அருளிச்

செய்தாராயிற்று. "நிம்நோந்நதம் ச கருணம் ச ஜகத் விசித்ரம் கர்ம வ்யபேக்ஷ்ய ஸ்ருஜத: தவ ரங்கசேஷிந் வைஷம்ய நிர்க்ருணதயோ: ந கலு ப்ரஸக்தி: தத் ப்ரஹ்மஸூத்ர ஸசிவா: ச்ருதய: க்ருணந்தி" என்று இதுதன்னை பட்டரும் அருளிச் செய்தாரிறே.

**விளக்கம்** - ஒரு சிலரை சுகம் உள்ளவர்களாகவும், ஒரு சிலரை துக்கம் நிறைந்தவர்களாகவும் ஸ்ருஷ்டித்தல் என்பது, அந்தந்த ஸ்ருஷ்டிக்கு ஏற்றபடியான அவரவர்களுடைய கர்மத்தின் அடிப்படையில் உள்ளது. தனக்கு நோய் உண்டாக்கவல்ல மண்ணை விரும்பி உண்கின்ற சிறு குழந்தையானது மீண்டும் அவ்விதம் மண்ணை உண்பதில் அச்சம் கொள்ளும்விதமாக தாயானவள் அதன் நாக்கில் சிறிய சூடு வைக்கிறாள். அதனைப் போன்றே, சேதநர்கள் தங்களுக்கு துக்கம் ஏற்படக் காரணமாக உள்ள கர்மங்களை செய்ய அச்சம் கொள்ளும்படியாக அவர்களுக்கு நன்மையைச் செய்பவனாக, துக்கத்தை அளிக்கிறான். ஆகவே, ஏற்றத்தாழ்வு கொண்டவன் மற்றும் க்ருபை இல்லாதவன் என்ற இரண்டு தோஷங்களும் இவனுக்கு ஏற்படுவதில்லை. இதன் மூலம், ப்ர. ஸூ. (2-1-34) - வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத் - என்ற வேதாந்தஸூத்ரத்தின் பொருளை அருளிச்செய்தார் என்றானது. இதனை ஸ்வாமி பராசர பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (2-42) – நிம்நோந்நதம் ச கருணம் ச ஜகத் விசித்ரம் கர்ம வ்யபேக்ஷ்ய ஸ்ருஜத: தவ ரங்கசேஷிந் வைஷம்ய நிர்க்ருணதயோ: ந கலு ப்ரஸக்தி: தத் ப்ரஹ்மஸூத்ர ஸசிவா: ச்ருதய: க்ருணந்தி - திருவரங்கனே! ஜீவன்களின் பலவகையான கர்ம பலன்களுக்கு ஏற்றபடி, இந்த உலகத்தில் உள்ளவற்றை ஏற்றத்தாழ்வுகளுடன் நீ ஸ்ருஷ்டிக்கிறாய். இதனைப் பார்க்கும்போது நீ பாரபட்சமாக நடப்பதாகவும், கருணை இல்லாமல் இருப்பதாகவும் சந்தேகம் எழக்கூடும். இந்த ஐயத்திற்கு அவசியமே இல்லை என்னும் கருத்தை, ப்ரஹ்மஸூத்திரத்தைத் துணையாக உடைய உபநிஷத்துக்கள் தெளிவாகவே கூறுகின்றன - என்று அருளிச்செய்தார்.

180. இவன்தான், "முந்நீர் ஞாலம் படைத்த என் முகில்வண்ணன்" என்கிறபடியே ஸவிக்ரஹனாய்க் கொண்டு ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணும்.

**அவதாரிகை** - ஆக, "ஸகல ஜகத் ஸ்ர்க்க ஸ்த்திதி ஸம்ஹார கர்த்தாவாய்" என்றத்தை உபபாதித்தாராய் நின்றார் கீழ். அநந்தரம், "விலக்ஷண விக்ரஹ யுக்தனாய்" என்றத்தை உபபாதிப்பதாக உபக்ரமிக்கிறார் (இவன்றான்) என்று தொடங்கி.

**விளக்கம் -** ஆக, சூர்ணை (141) - ஸகல ஜகத் ஸ்ர்க்க ஸ்த்திதி ஸம்ஹார கர்த்தாவாய் - என்பதை இதுவரை விளக்கினார். அடுத்து சூர்ணை (141) – விலக்ஷண விக்ரஹ யுக்தனாய் – என்பதை விளக்கத் திருவுள்ளம் கொண்டவராகத் தொடங்குகிறார்.

**வ்யாக்யானம் -** நடுவு சொன்ன, ஆர்த்தாதி சதுர்வித புருஷ ஸமாச்ரயணீயத்வமும், தர்மாதி சதுர்வித பலப்ரதத்வமுமாகிற இவையிரண்டையும் உபபாதியாதொழிவானென்? என்னில்; "காரணந்து த்யேய:", "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்" இத்யாதியிற் சொல்லுகிறபடியே காரணவஸ்துவே உபாஸ்யமும் ஆச்ரயணீயமுமாகையாலே காரணத்வம சொன்னபோதே "சதுர்விதா பஜந்தே மாம்" என்கிற சதுர்வித புருஷ ஸமாச்ரயணீயத்வமும், "பலமத உபபத்தே" என்கிறபடியே பல ப்ரதத்வ ஹேதுவான ஸர்வ சக்தி யோகம் கீழே உக்தமாகையாலே, தர்மாதி சதுர்வித பலப்ரதத்வமும் அர்த்தாத் உக்தமென்னும் நினைவாலும், அவற்றில் உபபாதநீயாம்சம் மிகவுமில்லாமையாலும் ததுபபாதநம் பண்ணிற்றிலர்; ஆகையாலே கீழ்ச்சொன்ன காரணத்வத்தோடே விக்ரஹ யோகத்துக்கு அந்வயத்தைச் சொல்லிக்கொண்டு கிளருகிறார். இவன்றான் "முந்நீர் ஞாலம் படைத்தவென் முகில்வண்ணனே" என்கிறபடியே, ஸவிக்ரஹனாய்க் கொண்டு ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணும் என்று. அதாவது, இப்படி ஜகத் ஸர்காதி கர்த்தாவாகச் சொல்லப்பட்டவிவன்தான் எனக்காக, ஆற்றுநீர் ஊற்றுநீர் வர்ஷ ஜலமென்று மூன்று வகைப்பட்ட நீரையுடைத்தான ஸமுத்ரத்தோடே கூடின ஜகத்தை ஸ்ருஷ்டித்த வர்ஷுக வலாஹகம் போலேயிருக்கிற வடிவையுடையவனேயென்று ஆழ்வாருடைய திவ்ய ப்ரபந்தத்திற் சொல்லுகிறபடியே விக்ரஹ ஸஹிதனாய்க் கொண்டு ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் மூன்றையும் பண்ணுமென்கை. "முகில்வண்ணன்" என்கிறவிது, ஔதார்ய குண பரமாக வ்யாக்ய்யாதாக்கள் பலரும் வ்யாக்ய்யாநம் பண்ணினார்களேயாகிலும், விக்ரஹபரமாக இவரருளிச்செய்கையாலே இங்ஙனுமொரு யோஜனையுண்டென்று கொள்ளவேணும். ஒன்றுக்குப் பல யோஜனையுமுண்டாயிறே இருப்பது.

**விளக்கம் -** சூர்ணை (141) என்பதன் நடுவில் கூறப்பட்டதான "ஆர்த்தர்கள் என்னும் நான்குவிதமான புருஷர்கள் தன்னை வந்தடையும் தன்மை கொண்டவனாக உள்ளான்" என்பதையும், "தர்மம் போன்றதான நான்குவிதமான பலனை அளிப்பவனாக உள்ளான்" என்பதையும் விரிவாக உரைக்காமல் விடுத்தது ஏன்? இதற்கு விடை அளிக்கிறார். தைத்திரீயத்தில், "காரணம் து த்யேய: – காரணப்பொருளே த்யானிக்கத்தக்கது" என்றும், ச்வேதாஸ்வதர உபநிஷத்தில் "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் – எந்த நான்முகனை

அனைத்திற்கும் முன்பாகப் படைத்தானோ" என்றும் கூறுவதற்கு ஏற்ப, காரணப்பொருள் என்பதே ஆராதிக்கத்தக்கதாகவும் அடையத்தக்க இடமாகவும் உள்ளதால் ஆகும். அனைத்திற்கும் காரணமாக உள்ள தன்மையைக் கூறிய நேரத்திலேயே, கீதை (7-16) - சதுர்விதா பஜந்தே மாம் - நான்குவிதமான புருஷர்கள் என்னை ஆராதிக்கிறார்கள் – என்பதற்கு ஏற்ப, "தன்னை வந்தடையும் தன்மை" என்பது கூறப்பட்டதாகிறது. ப்ர. ஸூ. (3-2-27) – பலமத உபபத்தே - அவனிடமிருந்தே பலன் கிட்டுகிறது – என்பதாகக் கூறப்பட்ட, தர்மம் காரணமாக உள்ள "அனைத்து சக்திகளும் கொண்டவன்" என்பதும் முன்பே கூறப்படுகிறது. ஆகவே இவற்றை விரிவாக உரைப்பதற்கு ஏதும் இல்லை என்பதால், விரிவாகக் கூறவில்லை. எனவே முதலில் கூறப்பட்ட "காரணப் பொருளாக உள்ளான்" என்பதுடன், "அழகான திருமேனியின் சேர்க்கை" என்பதைச் சேர்த்துக் கொண்டு உரைக்கிறார். அதாவது இவன், திருவாய்மொழி (3-2-1) - முந்நீர் ஞாலம் படைத்த என் முகில்வண்ணனே - என்பதற்கு ஏற்ப, திருமேனியுடன் கூடியவனாக நின்று ஸ்ருஷ்டி முதலானவற்றைச் செய்கிறான். அதாவது, "இவ்விதம் ஜகத் முதலானவற்றைப் படைக்கிறான் என்று கூறப்படும் இந்த ஸர்வேச்வரன், ஆற்று நீர் ஊற்றுநீர் மழைநீர் என்பதான மூன்றுவிதமான நீரைக் கொண்ட ஸமுத்திரத்துடன் கூடிய இந்த ஜகத்தை, மழைமேகம் போன்ற திருமேனியுடன் கூடியவனாக, எனக்காகப் படைத்தான்" என்பதே நம்மாழ்வாருடைய திருவுள்ளமாக இருக்கிறது. இதில் கூறப்பட்டபடி திருமேனியுடன் கூடியவனாக, "ஸ்ருஷ்டி , ஸ்திதி, ஸம்ஹாரம்" ஆகியவற்றைச் செய்கிறான் என்று கருத்து. திருவாய்மொழி (3-2-1) – முகில்வண்ணன் – என்பதற்கு, "தாராள குணம் கொண்டவன்" என்பதாகப் பலர் வ்யாக்யானம் செய்தபோதிலும், திருமேனியை உணர்த்துவதாக நம்மாழ்வார் கொள்வதால், இப்படியும் ஒரு கருத்து உள்ளதாகவே ஏற்கவேண்டும். ஒரு சொல்லிற்குப் பல பயன்கள் உள்ளது அல்லவோ?

181. விக்ரஹம்தான் ஸ்வரூப குணங்களிலுங் காட்டில் அத்யந்தாபிமதமாய், ஸ்வாநுரூபமாய், நித்யமாய், ஏகரூபமாய், சுத்தஸத்வாத்மகமாய், சேதந தேஹம்போலே ஜ்ஞானமயமான ஸ்வரூபத்தை மறைக்கையன்றிக்கே மாணிக்கச் செப்பிலே பொன்னையிட்டு வைத்தாப்போலேயிருக்க பொன்னுருவான திவ்யாத்ம ஸ்வரூபத்துக்கு ப்ரகாசகமாய், நிரவதிக தேஜோரூபமாய், ஸௌகுமார்யாதி கல்யாணகுணகண நிதியாய், யோகி த்யேயமாய், ஸகல ஜந மோஹநமாய், ஸமஸ்த போக வைராக்ய ஜநகமாய், நித்யமுக்தானுபாவ்யமாய், "வாசத்தடம்"போலே ஸகல தாப ஹரமாய், அநந்தாவதார கந்தமாய், ஸர்வ ரக்ஷகமாய், ஸர்வாபாச்ரயமாய், அஸ்த்ர பூஷண பூஷிதமாயிருக்கும்.

**அவதாரிகை -** இனி இந்த விக்ரஹத்தினுடைய வைலக்ஷண்யத்தையொரு சூர்ணையாலே விஸ்தரேண உபபாதிக்கிறார் (விக்ரஹந்தான்) என்று தொடங்கி.

**விளக்கம் -** ஸர்வேச்வரனுடைய திருமேனியின் மேன்மையை ஒரு சூர்ணை மூலம் விரிவாக உரைக்கிறார்.

**வ்யாக்யானம் -** ஸ்வரூப குணங்களிலுங்காட்டில் அத்யந்த அபிமதமாகையாவது, ஆநந்தமயமான ஸ்வரூபமும் ஆநந்தாவஹமான குணங்களும் போலன்றியே நிரதிசயாநந்தா வஹமாயிருக்கையாலே, அவற்றிற் காட்டிலும் மிகவுமபிதமாயிருக்கை. "இச்சாக்ரு ஹீதாபிமதோரு தேஹ:" என்னக்கடவதிறே. (ஸ்வாநுரூபமாகை) ஆவது அநநுரூபமாயிருக்கச் செய்தேயும் அபிமதமாயிருக்குமவை போலன்றிக்கே தனக்கு அநுரூபமாயிருக்கை. (நித்யமாகை) ஆவது ஸ்வரூப குணங்களோபாதி அநாதி நிதநமா யிருக்கை. லோகத்தில் அவயவிகளுக்கு அநித்யத்வம் காண்கையாலே, இதுக்கும் அவயவித்வேந அநித்யத்வம் வாராதோ? என்னில்; வாராது. எங்குமொக்க அவயவ ஸம்பந்த மாத்ரமல்ல அநித்யத்வ ஹேது; அவயவ ஆரப்தத்வம். அவயவ ஸம்பந்த மாத்ரமே அநித்யத்வ ஹேதுவாமாகில் கரசரணாத்யவயவ ஸம்பந்தமுண்டான வாத்மாவுக்கும் விநாசம் வரவேணும்; இங்கு அப்படி அவயவாரப்தத்வத்தில் ப்ரமாணமில்லாமையாலே, இது கரசரணாத் யவயவ யோகியாகா நிற்கச் செய்தேயும் நித்யமாயேயிருக்கும் என்று, இப்படி விவரணத்திலே ஆச்சான்பிள்ளை அருளிச் செய்தாரிறே.

**விளக்கம் -** திருமேனியானது, ஸ்வரூபம் மற்றும் குணங்கள் ஆகியவற்றைக் காட்டிலும் மிகவும் விரும்பக்கூடியதாக உள்ளது என்பது ஏன்? திருமேனியானது, ஆனந்தமயமான ஸ்வரூபம் மற்றும் ஆனந்தத்தை அளிக்கவல்ல குணங்கள் போன்று அல்லாமல், எல்லையற்ற ஆனந்தமயமாக உள்ளதால், அவற்றைக் காட்டிலும் விரும்பத்தக்கதாக உள்ளது. ஸ்ரீவிபு. (6-5-84) – இச்சாக்ரு ஹீதாபிமதோரு தேஹ: - தனது விருப்பத்தால் எடுத்துக்கொண்ட திருமேனி - என்பது காண்க. (ஸ்வாநுரூபமாக இருத்தல்) - ஒரு சிலருடைய சரீரமானது ஏற்கத்தகாததாக உள்ளபோதிலும், விரும்பத்தக்கதாகவே இருக்கும். இவை போன்று அல்லாமல் இவனுடைய திருமேனியானது ஏற்கத்தக்கதாகவும் உள்ளது. (நித்யமாக இருத்தல்) - அதாவது அவனுடைய ஸ்வரூபம் மற்றும் குணங்கள் போன்று தொடக்கம் மற்றும் முடிவு அற்றதாக, எப்போதும் இருப்பதாகும், ஆனால் இந்த

உலகில் உடல் உறுப்புகளுடன் கூடிய சரீரங்களுக்கு “எப்போதும் உள்ள நிலை” என்பது காணப்படுவதில்லை; இதே போன்று ஸர்வேச்வரனுடைய திருமேனியும், உடல் உறுப்புகளுடன் கூடியதாக உள்ளதால் “நித்யம் அல்லாத தன்மை” என்பது ஏற்படாதோ என்றால், “ஏற்படாது” என்கிறார். தத்வத்ரய விவரணத்தில் ஆச்சான்பிள்ளை, “எங்குமொக்க அவயவ ஸம்பந்த மாத்ரமல்ல அநித்யத்வ ஹேது; அவயவ ஆரப்தத்வம். அவயவ ஸம்பந்த மாத்ரமே அநித்யத்வ ஹேதுவாமாகில் கரசரணாத்யவயவ ஸம்பந்தமுண்டான வாத்மாவுக்கும் விநாசம் வரவேணும்; இங்கு அப்படி அவயவாரப்தத்வத்தில் ப்ரமாணமில்லாமையாலே, இது கரசரணாத் யவயவ யோகியாகா நிற்கச் செய்தேயும் நித்யமாயேயிருக்கும் – உடல் உறுப்புக்களுடைய ஸம்பந்தமானது, எப்போதும் ஒரே போன்று, நித்யம் அல்லாத தன்மைக்குக் காரணமாக இருப்பதில்லை. சரீர ஸம்பந்தம் மட்டுமே அழிவின் காரணம் என்றால், சரீர ஸம்பந்தம் கொண்ட ஆத்மாவிற்கும் அழிவு ஏற்படவேண்டும். ஸர்வேச்வரனுடைய திருமேனியானது, உடல் உறுப்புகளுடன் ஸம்பந்தம் கொண்டது என்று கூறுவதற்கு ப்ரமாணம் இல்லை. ஆகவே அவனுடைய திருமேனியானது கை மற்றும் கால் ஆகியவற்றுடன் கூடியதாக உள்ளபோதிலும், எப்போதும் இருப்பதாகவே உள்ளது” என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (ஏகரூபமாகை) ஆவது, வ்ருத்தி க்ஷயாதி விகார ரஹிதமாயிருக்கை “ஸதைக ரூப ரூபாய” என்னக்கடவதிறே (சுத்தஸத்வாத்மகமாகை) ஆவது குணாந்தர ஸம்ஸர்கமில்லாத ஸத்வத்துக்கு ஆச்ரயமாயிருக்கிற அப்ராக்ருத த்ரவ்யமே வடிவாயிருக்கை. “ந தஸ்ய ப்ராக்ருதாமூர்த்தி:” என்னக் கடவதிறே. (சேதந தேஹம் போலே) இத்யாதி. (பொன்னுருவான திவ்யாத்ம ஸ்வரூபத்துக்கு ப்ரகாசகமாகை) ஆவது சுத்தஸத்வாத்மகமாகையாலே குணத்ரய ஆச்ரயமான சேதந தேஹம்போலே ஜ்ஞாநமயமாகையாலே; தேஜோரூபமான ஸ்வரூபத்தைப் புறந்தோற்றாதபடி மறைக்கையின்றிக்கே மாணிக்யத்தைச் செப்பாகச் சமைத்து அதிலே பொன்னையிட்டு வைத்தால் உள்ளிருக்கிற பொன்னை அது புறமபே நிழலெழும்படி தோற்றுவிக்குமாப் போலே “எண்ணும் பொன்னுருவாய்” என்கிறபடியே, ஸ்ப்ருஹணீயமாகையாலே, பொன்னுருவென்று சொல்லப்படுமதான திவ்யாத்ம ஸ்வரூபத்துக்குத் தான் ப்ரகாசகமாயிருக்கை.

**விளக்கம் -** (ஏக ரூபமாக இருத்தல்) – வளர்த்தல் மற்றும் தேய்தல் என்பது போன்று மாற்றங்கள் இல்லாமல் உள்ளது. “ஸதைக ரூப ரூபாய - ஒரே போன்று உள்ள ரூபம்” என்று கூறியது காண்க. (சுத்த ஸத்வாத்மகம்) - ஸத்வம் அல்லாத மற்ற குணங்களாகிய

ரஜஸ் மற்றும் தமஸ் ஆகியவற்றின் ஸம்பந்தம் இல்லாத ஸத்வத்திற்கு இருப்பிடமாக உள்ளதும், இந்த உலகில் காணப்படாத த்ரவ்யமாக உள்ளதும் ஆகிய வடிவமாக இருத்தல். மஹாபாரதம் - "ந தஸ்ய ப்ராக்ருதாமூர்த்தி: - இந்த உலகில் காணப்படாத திருமேனி - என்பது காண்க. (சேதந தேஹம்போலே ஜ்ஞானமயமான ஸ்வரூபத்தை மறைக்கையன்றிக்கே மாணிக்கச் செப்பிலே பொன்னையிட்டு வைத்தாப்போலேயிருக்க பொன்னுருவான திவ்யாத்ம ஸ்வரூபத்துக்கு ப்ரகாசகமாக இருத்தல்) - மூன்று குணங்களுக்கு இருப்பிடமாக உள்ளதான சேதநர்களுடைய சரீரம் போன்று ஞானமயமான உள்ளபோதிலும், சுத்த ஸத்வமயமாக உள்ளதால், தேஜோ ரூபமாக உள்ள தனது ஸ்வரூபத்தை வெளியில் காண்பிக்காமல் மறைத்தல் என்பது செய்யாமல், மாணிக்கத்தைச் செப்பாகச் சமைத்து அதில் தங்கத்தை வைத்தால், உள்ளே இருக்கின்ற பொன்னை அது காண்பிப்பது போன்று, திருநெடுந்தாண்டகம் (1) – எண்ணும் பொன் உருவாய் – என்பதற்கு ஏற்ப விரும்பத்தக்கதாக திருமேனி உள்ளதால், "பொன் உருவம்" என்று கூறப்படும் அந்தத் திருமேனியானது ப்ரகாசமாக உள்ளது.

**வ்யாக்யானம் -** (நிரவதிக தேஜோ ரூபமாகை) ஆவது நித்ய முக்த விக்ரஹங்களும் இதுவும் ஏக ஜாதீய த்ரவ்யமாயிக்கச்செய்தே, ஏக ஜாதீய த்ரவ்யாத்மகமான கத்யோத சரீர தேஜஸ்ஸிற்காட்டில் ஆதித்ய சரீரத்திற்குண்டான தேஜோதிசயம் போலே இவை ஸாவதிக தேஜஸ்ஸாம்படி தான் நிரவதிக தேஜஸ்ஸை வடிவாகவுடைத்தாயிருக்கை. (ஸௌகுமார்யாதி கல்யாணகுண கண நிதியாகை) ஆவது ஸௌகுமார்யம், ஸௌந்தர்யம், லாவண்யம், ஸௌகந்த்யம், யௌவனம் முதலான கல்யாண குண ஸமூஹத்துக்குக் கொள்கலமாயிருக்கை. "ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யநந்த குண நிதி திவ்ய ரூப" என்று எம்பெருமானாரருளிச் செய்தாரிறே.

**விளக்கம் -** (நிரவதிக தேஜோ ரூபமாக இருத்தல்) - நித்யஸூரிகள் மற்றும் முக்தர்கள் ஆகியவர்களுடைய சரீரங்களும், ஸர்வேச்வரனுடைய திருமேனியும் ஒரே திரவியமாக உள்ளன; மின்னலுடைய ஒளியும், சூரியனுடைய ஒளியும் ஒரே திரவியமாக உள்ளபோதிலும், சூரியனுடைய சரீரத்தில் உள்ள ஒளிக்கு மேன்மை உள்ளது; இதனைப் போன்று அவர்களுடைய சரீரத்தில் உள்ள தேஜஸ்ஸானது அளவுடன் கூடியதாகவும், தனது தேஜஸ்ஸானது அளவற்றதாகவும் உள்ளான். (ஸௌகுமார்யாதி கல்யாண குண கண நிதியாக இருத்தல்) – மென்மை, அழகு, திருமேனியின் உள்ளும்புறமும் ஒரே போன்று இனிமை, நறுமணம், இளமை என்பது போன்ற பலவிதமான திருக்கல்யாண

குணங்களுடைய கூட்டத்திற்கு இருப்பிடமாக இருத்தல். கத்யத்தில் – ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யநந்த குண நிதி திவ்ய ரூப – என்று எம்பெருமானார் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** (யோகி த்யேயமாகை) ஆவது பகவத் த்யாந பரரான பரமயோகிகளுக்கு சுபாச்ரயமாய்க் கொண்டு எப்போதும் த்யாந விஷயமாயிருக்கை. "காசாந்யா த்வாம்ருதே தேவி ஸர்வ யஜ்ஞ மயம் வபு: அத்யாஸ்தே தேவதேவஸ்ய யோகி சிந்த்யம் கதாப்ருத:" என்று அஸாதாரண விக்ரஹமே யோகி சிந்த்யமாகச் சொல்லப்பட்டதிறே. (ஸகல ஜந மோஹநமாகை) ஆவது ஜ்ஞாநாஜ்ஞாந விபாகமற ஸகல ஜநங்களையும் ஸ்வ வைலக்ஷ்ணயத்தாலே பிச்சேற்றுமதாயிருக்கை. "பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்", "ஸர்வ ஸத்வம் நோஹர:", "கண்டவர்தம் மனம் வழங்கும்" என்னக்கடவதிறே.

**விளக்கம் -** (யோகி த்யேயமாக இருத்தல்) - பகவானை எப்போதும் த்யானித்தபடி உள்ள பரமயோகிகளுக்கு, சுபத்தின் இருப்பிடமாக இருந்தபடி, எப்போதும் த்யானத்திற்கான விஷயமாக இருத்தல். ஸ்ரீவிபு. (1-9-122) - காசாந்யா த்வாம்ருதே தேவி ஸர்வ யஜ்ஞ மயம் வபு: அத்யாஸ்தே தேவதேவஸ்ய யோகி சிந்த்யம் கதாப்ருத: - மஹாலக்ஷ்மியே! அனைத்து தேவர்களுக்கும் தேவனாக உள்ளவனும், கதையைத் தாங்கி நிற்பவனும், அனைத்து யோகிகளாலும் த்யானிக்கத்தக்கபடி உள்ள திருமேனி உள்ளவனும், யாகங்களின் வடிவான திருமேனி கொண்டவனும் ஆகிய அவனுடைய திருமேனியை, உன்னை அல்லாமல் யார் அடைவார்கள் - என்று அவனுக்கே உரிய திருமேனி மட்டுமே யோகிகளால் த்யானிக்கத்தக்கதாக கூறப்பட்டது அல்லவோ? (ஸகல ஜந மோஹநமாகை இருத்தல்) - ஞானம் உள்ளவர்கள் மற்றும் ஞானம் அற்றவர்கள் என்பதான வேறுபாடு இன்றி, அனைத்து உயிர்களையும் தனது மேன்மையால் மயக்கம் அடையும்படிச் செய்கிறான். அயோத்யாகாண்டம் (3-79) - பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம் - ஆண்களுடைய பார்வையையும் சித்தத்தையும் அபகரிக்கும் இராமன் – என்றும், ஸுந்தரகாண்டம் - ஸர்வ ஸத்வம் நோஹர: – அனைவருடைய மனதையும் அபகரிப்பவன் – என்றும், பெருமாள் திருமொழி (8-2) - கண்டவர்தம் மனம் வழங்கும் - என்றும் கூறுவது காண்க.

**வ்யாக்யானம் -** (ஸமஸ்த போக வைராக்ய ஜநகமாகை) ஆவது, தன் வைலக்ஷண்யத்தைக் கண்டவர்களுக்கு ஸ்வேதர ஸகல விஷயாநுபவத்திலும் ஆசையறுதியை விளைக்குமதாயிருக்கை; "பேரின்பமெல்லாம் துறந்தார் தொழுதாரத்தோள்" என்னக்கடவதிறே.

(நித்ய முக்த அநுபாவ்யமாகை) ஆவது, அபரிச்சிந்ந ஜ்ஞாநாதி குணகரான நித்யராலும் முக்தராலும் “ஸதா பச்யந்தி”ப்படியே அநவரதம் அநுபவிக்கப்படுமதாயிருக்கை. (வாசத் தடம் போலே ஸகல தாபஹரமாகை) ஆவது, “கண் கை கால் தூய செய்யமலர்களா” என்று தொடங்கி ஆழ்வார் வர்ணித்தபடியே திவ்ய அவயவங்களும் திருமேனியுமான சேர்த்தியாலே, பரப்பு மாறத் தாமரை பூத்துப் பரிமளம் அலையெறியா நிற்பதொரு தடாகம் போலேயிருக்கையாலே, தன்னைக் கிட்டினவர்களுடைய ஸாம்ஸாரிக விவித தாபத்தோடு விரஹ தாபத்தோடு வாசியற ஸகல தாபத்தையும போக்குமதாயிருக்கை.

**விளக்கம்** - (அனைத்து இன்பமான விஷயங்களிலும் வைராக்யம் பிறத்தல்) - தனது திருமேனியுடைய மிகுதியான மேன்மையைக் கண்டவர்களுக்குத் தன்னைத் தவிர உள்ள மற்ற அனைத்து விஷயங்களால் ஏற்படும் அனுபவங்களில் உள்ள உறுதியைத் தவிர்ப்பான். இரண்டாம் திருவந்தாதி (42) – பேரின்பம் எல்லாம் துறந்தார் தொழுதாரத்தோள் - என்பது காண்க. (நித்யர்கள் முக்தர்கள் ஆகியவர்களால் அனுபவிக்கும்படி இருத்தல்) - எல்லையற்ற ஞானம் போன்ற குணங்கள் மிகுந்தவர்களாகிய நித்யஸூரிகள் மற்றும் முக்தர்களால், சாந்தோக்யத்தில் – ஸதா பச்யந்தி - எப்போதும் நோக்கியபடி உள்ளனர் - என்பதற்கு ஏற்ப, எப்போதும் அனுபவிக்கப்படுபவனாக உள்ள நிலை. (தாமரைக்குளம் போன்று அனைத்து துன்பங்களையும் நீக்குதல்) - திருவாய்மொழி (8-5-1) - கண் கை கால் தூய செய்யமலர்களா - என்று தொடங்கி நம்மாழ்வார் வர்ணித்தபடி, திவ்யமான திருமேனியின் உறுப்புகள் மற்றும் திருமேனி என்றுள்ள சேர்த்தி காரணமாக, நீர்நிலை என்பதே தெரியாதபடி தாமரைகள் மலர்ந்து பரிமளம் வீசியபடி உள்ள ஒரு குளம் போன்று, தன்னை வந்து அடைந்தவர்களுடைய பலவிதமான ஸம்ஸாரத்துன்பம் மற்றும் தன்னைப் பிரிந்து வாடுதல் என்னும் துன்பம் என்னும் வேறுபாடு இன்றி, அனைத்துவிதமான துன்பங்களையும் போக்குவதாக உள்ள திருமேனி.

**வ்யாக்யானம்** - (அநந்தாவதார கந்தமாகை) ஆவது, “அஜாயமாநோ பஹுதா விஜாயதே”, “பஹூநி மே வ்யதீதாநி” என்று சொல்லப்படுகிற அஸங்க்யாதமான அவதாரங்களும் அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்த்தாநத்தை இதர ஸஜாதீயமாக்கிக் கொண்டு தீபாநுத்பந்ந ப்ரதீபம் போலே வருகிறவையாகையாலே அவையெல்லாவற்றுக்கும் மூலமாயிருக்கை, “ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்ட்டாய ஸம்பவாமி”, “கல்பே கல்பே ஜாயமாநஸ ஸ்வமூர்த்யா”, “ஆதியஞ் சோதியுருவையங்கு வைத்திங்குப் பிறந்த” என்னக்கடவதிறே. (ஸர்வ ரக்ஷகமாகை) ஆவது, ஐச்வார்யார்த்திகளோடு கேவலரோடு பகவச்சரணார்த்திகளில்

உபாஸகரோடு, ப்ரபந்நரோடு அநுபவ கைங்கர்ய பரரான நித்ய முக்தரோடு வாசியற ஸர்வருடையவும் அநிஷ்ட நிவ்ருத்தி, இஷ்ட ப்ராப்திகளைப் பண்ணுவது திவ்யமங்கள விக்ரஹோபேதனாய்க் கொண்டாகையாலே, எல்லாருக்கும் ரக்ஷகமாயிருக்கை.

**விளக்கம் -** (அநந்தாவதார கந்தமாகை) – "அஜாயமாநோ பஹுதா விஜாயதே – பிறப்பற்ற அவன் பலவிதமாகப் பிறக்கிறான்" என்றும், கீதை (4-5) - பஹூநி மே வ்யதீதாநி – எனதும் உனதும் பல பிறவிகள் சென்றுள்ளன - என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ள எண்ணற்ற அவதாரங்கள்; இவை அனைத்தும், பரமபதத்தில் உள்ள தனது திருமேனியை மற்ற ஜாதியை போன்று மாற்றிக்கொண்டு, தீபத்தில் ஏற்றப்பட்ட மற்ற தீபங்கள் போன்று வருவதாக உள்ளதால், அவை அனைத்திற்கும், மூல திருமேனியாக உள்ள நிலை. கீதை (4-6) - ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்ட்டாய ஸம்பவாமி - எனது திருமேனியை எடுத்தபடி இங்கு அவதரிக்கிறேன் - என்றும், மஹாபாரதம் - கல்பே கல்பே ஜாயமாநஸ - கல்பங்கள் தோறும் எனது திருமேனியுடன் நான் அவதரிக்கிறேன் – என்றும், திருவாய்மொழி (4-5-5) – ஆதி அம் சோதியுருவை அங்கு வைத்து இங்குப் பிறந்த - என்றும் கூறுவது காண்க. (அனைத்திற்கும் ரக்ஷகமாக இருத்தல்) - ஐச்வர்யத்தை மட்டுமே வேண்டுபவர்கள், ஆத்ம அனுபவத்தை மட்டுமே வேண்டுபவர்க்ள், பகவானைச் சரணம் புகும் உபாஸகர்கள், பகவானுடைய திருவடிகளில் சரணாகதி அடைந்தவர்கள், எப்போதும் அவனுடைய கைங்கர்ய அனுபவத்தை அடைந்தபடி உள்ள நித்யர்கள் மற்றும் முக்தர்கள் என்பதான வேறுபாடுகள் இன்றி, அனைவருடைய தடைகள் நீக்குதல் மற்றும் விருப்பங்களை நிறைவேற்றிக் கொடுத்தல் போன்றவற்றைச் செய்தல் என்பது திருமேனியை வைத்துக் கொண்டே ஆகும் என்பதால், திருமேனி அனைவருக்கும் காப்பாற்றும் ஒன்றாக உள்ளது.

**வ்யாக்யானம் -** (ஸர்வாச்ரயமாகை ) ஆவது, உபய விபூதிக்கும் ஆச்ரமாயிருக்கை. (அஸ்த்ர பூஷண பூஷிதமாகை) ஆவது, கீழ்ச் சொன்ன ஸர்வாச்ரயத்வ ஸூசகமாம்படி அஸ்த்ர பூஷணாத்யாயத்திற் சொல்லுகிறபடியே, விபூத்யபிமாநிகளான திவ்யாயுதங்களாலும் திவ்யாபரணங்களாலும் அலங்க்ருதமாயிருக்கை. "ஆத்மாநமஸ்ய ஜகதோ நிர்லேபமகுணாமலம், பிபர்த்தி கௌஸ்துபமணிம் ஸ்வரூபம் பகவாந் ஹரி: ஸ்ரீவத்ஸ ஸம்ஸ்த்தாநதரமநந்தேச ஸமாச்ரிதம், ப்ரதாநம் புத்திரப்யாஸ்தே கதாரூபேண மாதவே, பூதாதிமிந்த்ரியாதிஞ்ச த்விதாஹங்காரமீச்வர: பிபர்த்தி சங்க்க ரூபேண சார்ங்க ரூபேண ச ஸ்த்திதம், சல ஸ்வரூப மத்யந்த ஜவேநாந்தரிதா நிலம் சக்ர ஸ்வரூபஞ்ச மநோ தத்தே விஷ்ணு: கரேஸ்த்திதம், பஞ்சரூபாது யாமாலா வைஜயந்தீ கதாப்ருத: ஸா

பூதஹேது ஸங்காதோ பூத மாலாச வை த்விஜ, யாநீந்த்ரிய விசேஷாணி புத்தி கர்மாத்மகாநிவை சர ரூபாண்ய சேஷாணிதாநி தத்தே ஜநார்தந: பிபர்த்தி யச்சாஸிரத்நம் அச்யுதோதயந்த நிர்மலம், வித்யாமயந்து தத் ஜ்ஞாநம் வித்யாச மம ஸம்ஸ்த்திதம்” என்னக் கடவதிறே.

**விளக்கம்** - (அனைவராலும் அண்டும்படி உள்ளது) - இரண்டு விபூதிகளில் உள்ள அனைவராலும் அடையப்படுவதாக திருமேனி உள்ளது. (ஆயுதங்கள் மற்றும் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டபடி இருத்தல்) - இங்கு கூறப்பட்டதான “அனைவராலும் அண்டும்படி இருத்தல்” என்பது மறைமுகமாக வெளிப்படும்படியாக, ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் உள்ள ஆயுதங்கள் மற்றும் ஆபரணங்கள் குறித்து உரைக்கும் அத்யாயத்தில் கூறப்பட்டபடியாக, அபிமான தேவதைகளாக உள்ள திவ்யமான ஆயுதங்கள் மற்றும் திவ்யமான ஆபணங்களால் அலங்கரிக்கப்பட்டபடி இருத்தல். ஸ்ரீவிபு. (1-22, 67 முதல் 74) – ஆத்மாநமஸ்ய ஜகதோ நிர்லேபமகுணாமலம், பிபர்த்தி கௌஸ்துபமணிம் ஸ்வரூபம் பகவாந் ஹரி: ஸ்ரீவத்ஸ ஸம்ஸ்த்தாநதரமநந்தேச ஸமாச்ரிதம், ப்ரதாநம் புத்திரப்யாஸ்தே கதாரூபேண மாதவே, பூதாதிமிந்த்ரியாதிஞ்ச த்விதாஹங்காரமீச்வர: பிபர்த்தி சங்க்க ரூபேண சார்ங்க ரூபேண ச ஸ்த்திதம், சல ஸ்வரூப மத்யந்த ஜவேநாந்தரிதா நிலம் சக்ர ஸ்வரூபஞ்ச மநோ தத்தே விஷ்ணு: கரேஸ்த்திதம், பஞ்சரூபாது யாமாலா வைஜயந்தீ கதாப்ருத: ஸா பூதஹேது ஸங்காதோ பூத மாலாச வை த்விஜ, யாநீந்த்ரிய விசேஷாணி புத்தி கர்மாத்மகாநிவை சர ரூபாண்ய சேஷாணிதாநி தத்தே ஜநார்தந: பிபர்த்தி யச்சாஸிரத்நம் அச்யுதோதயந்த நிர்மலம், வித்யாமயந்து தத் ஜ்ஞாநம் வித்யாச மம ஸம்ஸ்த்திதம் – இயல்பாகவே துன்பம் ஏதும் இல்லாதவர்களும், தாழ்ந்த குணம் அற்றவர்களும், தோஷம் அற்றவர்களும் ஆகிய ஜீவாத்மாக்களை, ஸ்ரீஹரி தனது கௌஸ்துபமணி போன்று ஏற்கிறான்; ஸ்ரீவத்ஸம் என்று மருவானது ஆதிசேஷனில் உள்ள ஸ்ரீஹரியால் தரிக்கப்பட்டது; புத்தியானது, கதை ரூபத்தில் மாதவனால் தரிக்கப்பட்டது; தாமஸ அஹங்காரம் மற்றும் ஸாத்விக அஹங்காரம் ஆகியவை, சங்கு மற்றும் சக்ரம் என்றும், சார்ங்கம் என்ற வில் ரூபமாகவும் உள்ளன; ஸஞ்சலமான இயல்பில் வாயுவையும் மிஞ்சுகின்ற மனமானது, சக்கரமாகத் தரிக்கப்பட்டது. வைஜயந்தியானது தந்மாத்ரையாக உள்ளது; பஞ்சபூதங்களும் இந்த்ரியங்களும் அம்பு ரூபமாக உள்ளன; கட்கம் என்ற வாளானது ஞானமாக உள்ளது - என்பது காண்க.

182. ஈச்வர ஸ்வரூபந்தான், பரத்வம் வ்யூஹம் விபவம் அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரமென்று அஞ்சு ப்ரகாரத்தோடே கூடியிருக்கும்.

**வ்யாக்யானம்** – ஆக, (விலக்ஷண விக்ரஹ யுக்தனாய்) என்றத்தையுபபாதித்தார் கீழ். அநந்தரம் இந்த விக்ரஹயோக ப்ரயுக்தமான ஈச்வரனுடைய பரத்வாதி பஞ்ச ப்ரகாரத்தையும் தனித்தனியே ஸுவ்யக்தமாக தர்சிப்பிக்க வேணுமென்று திருவுள்ளம் பற்றி ப்ரதமம் அது தன்னையுத்க்ஷேபிக்கிறார்.

**விளக்கம் -** சூர்ணை (141) - விலக்ஷண விக்ரஹ யுக்தனாய் - என்று கூறியதை கடந்த சூர்ணையில் விரிவாக அருளிச்செய்தார். அடுத்து, இத்தகைய திருமேனியுடன் சேர்வதால் வெளிப்படுவதான ஈச்வரனுடைய பரம் முதலான ஐந்து விதங்களையும், தனித்தனியாக விரிவாக அருளிச்செய்ய திருவுள்ளம் கொண்டு, அதனைத் தொடங்குகிறார்.

**வ்யாக்யானம்** – "லக்ஷ்மீ பூமீ நிளா நாயகனாய்" என்றத்தையும் உபபாதித்துவிட்டு, பின்னையிது சொல்லாதொழிவானென்? என்னில், அதில் உபபாதிக்க வேண்டுவது பணி இல்லாமையாலும், "வைகுண்டேது பரேலோகே ஸ்ரீ ஸஹாயோ ஜநார்தந:, உபாப்யாம் பூமி நீளாப்யாம் ஸேவித பரமேச்வர:" என்கையாலே, மேல் சொல்லுகிற பரத்வத்திலே அர்த்தாதுக்தமாம் என்னுமத்தைப் பற்றவும் தனித்து உபபாதித்திலர். ஆகையால் விரோதமில்லை. (ஈச்வர ஸ்வரூபம்) என்கிறவிடத்தில், ஸ்வரூப சப்தத்தாலே சொல்லுகிறது ஸ்வாஸாதாரண விக்ரஹத்தையாதல், விக்ரஹ விசிஷ்டமான ஸ்வரூபந் தன்னையாதல், ஸங்க்ரஹேண இட்டருளின மற்றையிரண்டு தத்வத்ரயப்படியிலும் ஒரு படியிலே, "திருமேனியும் அஞ்சுபடியாயிருக்கும். அதாவது பரத்வமும், வ்யூஹமும், அந்தர்யாமித்வமும், விபவமும், அர்ச்சாவதாரமும்" என்றும், மற்றைப்படியிலே, "ஈச்வர ஸ்வரூபம் ஹேய ப்ரதிபடமாய்" என்று தொடங்கி "பத்நீ பரிஜந விசிஷ்டமாய் இருக்கும்" என்றத்தை யுபபாதித்த வநந்தரம், "இதுதான் அஞ்சுபடியாயிருக்கும்" என்றும், "இதம்" சப்தத்தாலே ப்ரக்ருதமான ஈச்வர ஸ்வரூபத்தைப் பராமர்சித்து, அதுதான் பரத்வாதி ரூபேண பஞ்ச ப்ரகாரமாயிருக்குமென்றும் இவர் தாமேயருளிச் செய்கையாலே. இப்படி, பரத்வாதி பஞ்சப்ரகார விசிஷ்டனாயிருப்பன் என்னுமிடத்தை, "மம ப்ரகாரா: பஞ்சேதி ப்ராஹு: வேதாந்த பாரகா:, பரோ வ்யூஹச்ச விபவோ நியந்தா ஸர்வதேஹிநாம், அர்ச்சாவதாரச்ச ததா தயாலு: புருஷாக்ருதி:, இத்யேவம் பஞ்சதா ப்ராஹு: மாம்

வேதாந்தவிதோஜநா:” என்று விஷ்வக்ஸேன ஸம்ஹிதையிலே தானே அருளிச் செய்தானிறே.

**விளக்கம்** - சூர்ணை (141) - லக்ஷ்மீ பூமீ நிளா நாயகனாய் - என்று கூறினார். ஆனால் அதனை ஏன் விளக்கவில்லை என்று கேட்கலாம். அதனை விளக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதாலும்; “வைகுண்டேது பரேலோகே ஸ்ரீஸஹாயோ ஜநார்த்தந:, உபாப்யாம் பூமி நீளாப்யாம் ஸேவித: பரமேச்வர: – ஸ்ரீவைகுண்டம் என்ற உயர்ந்த இடத்தில் மஹாலக்ஷ்மியுடன் கூடியவனாக உள்ளான்; இங்கு பூமாதேவி மற்றும் நீளாதேவியுடன் சேர்ந்தபடி உள்ள அந்த பரமேச்வரன் வணங்கப்படுகிறான்” என்று கூறப்படுவதால், அடுத்து உரைக்கவுள்ள பரத்வம் குறித்த விளக்கத்தில் இதுவும் அடங்கி உள்ளதாலும், “லக்ஷ்மீ பூமீ நிளா நாயகனாய்” என்பது குறித்து தனியாக விளக்கவில்லை. ஆகவே இங்கு முரண்பாடு ஏதும் இல்லை. (ஈச்வர ஸ்வரூபம்) - இங்குள்ள “ஸ்வரூபம்” என்பதன் மூலம், அவனுக்கே உரிய திருமேனியை உரைப்பதாகவும் கொள்ளலாம் அல்லது திருமேனியால் சிறப்புற்ற ஸ்வரூபத்தைக் கூறுவதாகவும் கொள்ளலாம். இதற்கு முன்பு சுருக்கமாக இரண்டு நூல்களை இவரே அருளிச்செய்தார். அவற்றில் ஒன்றில், “திருமேனியும் அஞ்சுபடியாயிருக்கும். அதாவது பரத்வமும், வ்யூஹமும், அந்தர்யாமித்வமும், விபவமும், அர்ச்சாவதாரமும் - திருமேனியானது பரத்வம், வ்யூஹம், அந்தர்யாமி, விபவம், அர்ச்சாவதாரம் என ஐந்துவிதமாக உள்ளது” என்றும், மற்றொன்றில் “ஈச்வர ஸ்வரூபம் ஹேய ப்ரதிபடமாய் - ஈச்வர ஸ்வரூபமானது அனைத்து தாழ்வுகளுக்கும் எதிர்த்தட்டாக” என்று தொடங்கி, “பத்நீ பரிஜந விசிஷ்டமாய் இருக்கும் - பத்னி மற்றும் மற்ற பரிவாரங்களால் சிறப்புற்று இருக்கும்” என்றும் அருளிச்செய்தார்; இவ்விதம் தொடங்கி, “இதுதான் - இது ஐந்துவிதமாக உள்ளது” என்றார். இங்குள்ள “இது” என்பதன் மூலம், அடுத்துள்ள ஈச்வர ஸ்வரூபத்தை உணர்த்தி, அத்தகைய ஸ்வருபமானது பரத்வம் என்பதாக உள்ளதை இவரே அருளிச்செய்தார். இவ்விதம் அவன் ஐந்துவிதமாக உள்ளதை விஷ்வக்ஸேந ஸம்ஹிதையில் – மம ப்ரகாரா: பஞ்சேதி ப்ராஹுர் வேதாந்த பாரகா:, பரோ வ்யூஹச்ச விபவோ நியந்தா ஸர்வதேஹிநாம், அர்ச்சாவதாரச்ச ததா தயாலு: புருஷாக்ருதி:, இத்யேவம் பஞ்சதா ப்ராஹுர் மாம் வேதாந்தவிதோஜநா: - எனது நிலைகள் ஐந்தாக உள்ளதாக வேதாந்தம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள். வேதாந்தம் அறிந்த சான்றோர்கள் பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி மற்றும் அர்ச்சை என்று உரைக்கிறார்கள் - என்று அவனே அருளிச்செய்தான் அல்லவோ?

183. அதில் பரத்வமாவது, அகாலகால்யமான "நலமந்தமில்லதோர் நாட்"டிலே நித்யமுக்தர்க்கு போக்யனாய்க் கொண்டெழுந்தருளியிருக்குமிருப்பு.

**அவதாரிகை -** இனி, இந்த அஞ்சு ப்ரகாரத்தையும் அடைவே உபபாதிக்கக்கோலி, ப்ரதமம் பரத்வத்தை உபபாதிக்கிறார் (அதில் பரத்வமாவது) என்று தொடங்கி.

**விளக்கம் -**அடுத்த இந்த ஐந்து விதங்களையும் முறையாக விளக்க எண்ணி, முதலில் பரத்வத்தை விளக்குகிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, அவையைந்திலும் வைத்துக் கொண்டு பரத்வமாவது "ந காலஸ் தத்ரவை ப்ரபு" என்றும், "கலாமுஹூர்த்தாதி மயச்ச கால: ந யத் விபூதே: பரிணாம ஹேது:" என்றும், "யா வை நஜாது பரிணாம பதாஸ்பதம் ஸா காலாதிகாதவ பரா மஹதீ விபூதி:" என்றும், "யத் காலாத் அபசேளிமம்" என்றும் சொல்லுகிறபடியே, காலக்ருத பரிணாமமில்லாத தேசமாகையாலே, கால கால்யமன்றிக்கேயிருப்பதாய், "நலமந்தமில்ல தோர் நாடு" என்னும்படி ஆநந்தம் அளவிறந்து அத்விதீயமாயிருக்கிற ஸ்ரீவைகுண்டத்திலே "யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்தி தேவா:", "யத்ரர்ஷய: ப்ரதமஜா யே புராணா:" என்றும், "அயர்வருமமரர்கள்" என்றும் சொல்லுகிறபடியே, நித்யாஸங்குசித ஜ்ஞாநராயிருந்துள்ள அநந்த கருட விஷ்வக்ஸேனாதிகளான நித்யஸூரிகளுக்கும், "ஸூர்யகோடி ப்ரதீகாசா: பூர்ணேந்த்வயுத ஸந்நிபா:, யஸ்மிந் பதே விராஜந்தே முக்தாஸ் ஸம்ஸார பந்த்தனை" என்கிறபடியே நிவ்ருத்த ஸம்ஸாரராய், அஸங்குசித ஜ்ஞாநரான முக்தர்க்கும் அநுபவ விஷயபூதனாய்க் கொண்டு எழுந்தருளியிருக்கும் இருப்பென்கை. "வைகுண்ட்டேது பரே லோகே நித்யத்வேந வ்யவஸ்திதம், பச்யந்திச் ஸதாதேவம் நேத்ரைர் ஜ்ஞாநேந வாமரா:" என்னக்கடவதிறே.

**விளக்கம் -** அவை ஐந்தில் பரத்வம் என்பது மஹாபாரதம் - ந காலஸ் தத்ரவை ப்ரபு - அங்கு காலம் ஆட்சி செய்வதில்லை – என்றும், கலாமுஹூர்த்தாதி மயச்ச கால: ந யத் விபூதே: பரிணாம ஹேது: – கலை, முஹூர்த்தம் என்பதாக உரைக்கவல்ல காலமானது அந்த விபூதியில் மாற்றங்களுக்கான காரணமாக இருப்பதில்லை - என்றும், யா வை நஜாது பரிணாம பதாஸ்பதம் ஸா காலாதிகாதவ பரா மஹதீ விபூதி: – எந்த ஒரு இடமானது பரிணாமங்களுக்கு இடம் அல்லாமல் உள்ளதோ, எந்த உனது உயர்ந்த விபூதியானது காலத்தைக் கடந்து உள்ளதோ – என்றும், யத் காலாத் அபசேளிமம் - எது

காலத்தால் மாற்றம் அடையாததோ – என்றும் கூறுவதற்கு ஏற்ப, மாற்றங்கள் ஏதும் இல்லாத இடமாக உள்ளதால், காலத்தால் ஏதும் செய்ய இயலாதபடி உள்ளதாகவும்; திருவாய்மொழி (2-8-4) - நலம் அந்தம் இல்லதோர் நாடு - என்பதற்கு ஏற்ப ஆனந்தமானது அளவில்லாமல், இதனைப் போன்று வேறு ஒன்று இல்லாமல் உள்ளதாகவும்; இப்படியாக உள்ள ஸ்ரீவைகுண்டத்தில், புருஷஸூக்தம் – யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்தி தேவா: - எங்கு தொடக்கம் முதலாகவே நித்யஸூரீகள் கைங்கர்யம் செய்தபடி உள்ளனரோ – என்றும், யஜுர்வேதம் - யத்ரர்ஷய: ப்ரதமஜா யே புராணா: - எங்கு ருஷிகளும் நித்யஸூரிகளும் தொடக்கம் முதலாகவே – என்றும், திருவாய்மொழி (1-1-1) – அயர்வருமமரர்கள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, எப்போதும் சுருக்கம் அற்ற ஞானம் கொண்ட ஆதிசேஷன் கருடன் விஷ்வக்ஸேநர் போன்ற நித்யஸூரிகளுக்கும், லக்ஷ்மீதந்த்ரம் - ஸூர்யகோடி ப்ரதீகாசா: பூர்ணேந்த்வயுத ஸந்நிபா:, யஸ்மிந் பதே விராஜந்தே முக்தாஸ் ஸம்ஸார பந்த்தனை – கோடி சூரியர்கள் போன்றவர்களும் முழு நிலவைப் போன்றவர்களும் ஆகிய முக்தர்கள் வெகு ப்ரகாசத்துடன் உள்ளனரோ - என்று கூறுவதற்கு ஏற்ப ஸம்ஸாரத்தை விட்டவர்களாக சுருக்கம் அற்ற ஞானம் கொன்டவர்களாக உள்ள முக்தர்களுக்கும் எப்போதும் அனுபவிக்கத்தக்கபடியாக எழுந்தருளியுள்ள நிலை ஆகும். வைகுண்ட்டேது பரே லோகே நித்யத்வேந வ்யவஸ்திதம், பச்யந்திச் ஸதாதேவம் நேத்ரைர் ஜ்ஞாநேந வாமரா: - ஸ்ரீவைகுண்டம் என்ற பெயர் கொண்ட உயர்ந்த இடத்தில் எப்போதும் உள்ளவனாகிய அவனை, நித்யஸூரிகள் தங்கள் கண்கள் மற்றும் ஞானக்கண் கொண்டு எப்போதும் நோக்கியபடி உள்ளனர் – என்பது காண்க.

184. வ்யூஹமாவது, ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரார்த்தமாகவும், ஸம்ஸாரி ஸம்ரக்ஷணார்த்தமாகவும், உபாஸகாநுக்ரஹார்த்தமாகவும், ஸங்கர்ஷண ப்ரத்யும்நாநிருத்த ரூபேண நிற்கும் நிலை.

**அவதாரிகை -** அநந்தரம், வ்யூஹத்தை உபபாதிக்கிறார் (வ்யூஹமாவது) என்று தொடங்கி.

**விளக்கம் -** அடுத்து வ்யூஹத்தை விளக்குகிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, வ்யூஹத்துக்கு விநியோகம் லீலாவிபூதியிலேயாகையாலே, இவ்விபூதியினுடைய ஸ்ருஷ்டியென்ன ஸ்த்திதியென்ன ஸம்ஹாரமென்ன, இவற்றை நிர்வஹிக்கைக்காகவும், புபுக்ஷுக்களான ஸம்ஸாரிகளை அநிஷ்ட நிவ்ருத்த்யாதிகளைப்

பண்ணி ரக்ஷிக்கைக்காகவும், முமுக்ஷுக்களாய் உபாஸிக்குமவர்களுக்கு ஸம்ஸார நிவ்ருத்தி பூர்வமாகத் தன்னை வந்து ப்ராபிகைக்கு உடலான அநுக்ரஹத்தைப் பண்ணுகைக்கு உடலாகைக்காகவும், ஸங்கர்ஷண ப்ரத்யும்ன அநிருத்தர்களாய்க் கொண்டு நிற்கும் நிலை, வ்யூஹமாவது என்கை. இதில், இன்ன வ்யூஹத்தாலே யின்னது செய்யுமென்னுமிடம், மேல் உபபாதநத்திலே கண்டு கொள்வது. "சதுர்விதஸ் ஸ பகவாந் முமுக்ஷுணாம் ஹிதாய வை, அந்யேஷாமபிலோகாநாம் ஸ்ருஷ்டி ஸ்த்தித்யந்த ஸித்தயே" என்றும், "ஆநந்த்யாத் தவஸேனாதே! வ்யூஹ ஆதயோ மயேரித:, அநாதி காமவச்யாநாம் ஸம்ஸாரே பத்தாமத:" என்று தொடங்கி, "உபாஸகாநுக்ரஹார்த்தம் ஜகதோ ரக்ஷணாய ச" என்றும், "ஆவிராஸீத் பகவத: பஞ்சாயுத பரிஷ்க்ருத:, ருக்மாபஸ்ஸோயமமஸ் ஸர்வ சாஸ்த்ரேஷு சப்தித:; ஸோயம் ப்ரத்யும்ந நாம்நாபூத் ததேகாந்த வபுர்தர:; ஸோயம் ஸங்கர்ஷணாக்கயோபூத் ததேகாந்த வபுர்தர:, இந்தர நீலப்ரதீகாச ஏஷ சாஸ்த்ரேஷு சப்தித:, ததோ நாம்நா அநிருத்தோயம் ஸ்வயமே வாபவந் முநே; ததேகாந்த வபுர்யுக்தஸ் தாதாத்விக கந ப்ரப:" என்றும் பகவச் சாஸ்த்ரத்திலே ஸ்ருஷ்ட்யாதிகளும் ஸம்ஸாரி ஸம்ரக்ஷணமும் உபாஸக அநுக்ரஹமுமாகிற வ்யூஹ க்ருதயங்களும், ஸங்கர்ஷணாதி வ்யூஹங்களும் சொல்லப்பட்டதிறே. "சதுர்விதஸ் ஸ பகவாந்" என்கிறவிடத்தில், சதுர்விதமாகச் சொல்லிற்று வாஸுதேவரையும் கூட்டுகையாலே.

**விளக்கம் -** வ்யூஹத்தின் பயன் என்பது லீலாவிபூதியில் உள்ளது. இந்த உலகில் ஸ்ருஷ்டி, இருப்பு மற்றும் அழிவு ஆகியவற்றை நியமிப்பதற்காகவும்; இன்பங்களை அனுபவித்தபடி உள்ள ஸம்ஸாரிகளுடைய விருப்பம் அற்றவற்றை விலக்கி அவர்களைக் காப்பதற்காகவும்; மோக்ஷத்தில் விருப்பம் கொண்டவர்களாக உபாஸனை செய்பவர்களுக்கு ஸம்ஸாரத்தை முதலில் விலக்கி, அதன் பின்னர் அவர்கள் தன்னை வந்தடைவதற்கு ஏற்றபடியான அனுக்ரஹத்தைத் செய்ய ஏதுவாகவும்; ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்பவர்களாக நிற்கும் நிலையே வ்யூஹம் ஆகும். இவற்றில் "இந்த வ்யூஹம் இந்தச் செயலைச் செய்யும்" என்பதை அடுத்து கூற உள்ள இடத்தில் அறியலாம். விஷ்வக்ஸேந ஸம்ஹிதையில் - சதுர்விதஸ் ஸ பகவாந் முமுக்ஷுணாம் ஹிதாய வை, அந்யேஷாமபிலோகாநாம் ஸ்ருஷ்டி ஸ்த்தித்யந்த ஸித்தயே - முமுக்ஷுக்களுடைய நன்மைக்காகவும், தன்னைக் காட்டிலும் வேறாக உள்ள லோகத்தின் ஸ்ருஷ்டி இருப்பு மற்றும் ஸம்ஹாரம் ஆகியவற்றுக்காகவும், பகவான் நான்கு விதமாக உள்ளான் - என்றும்; ஆநந்த்யாத் தவஸேனாதே! வ்யூஹ ஆதயோ மயேரித:, அநாதி காமவச்யாநாம் ஸம்ஸாரே பத்தாமத: - விஷ்வக்ஸேநரே! வ்யூஹம் குறித்து உமக்கு

முதலில் கூறப்பட்டது. எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள கர்மத்திற்கு வசப்பட்டபடி இருக்கும் ஸம்ஸாரத்தில் நீடிப்பவர்களையும் – என்று தொடங்கி, உபாஸகாநுக்ரஹார்த்தம் ஜகதோ ரக்ஷணாய ச – உபாஸனை செய்தபடி உள்ளவர்களையும் காப்பதற்காக - என்றும்; ஆவிராஸீத் பகவத: பஞ்சாயுத பரிஷ்க்ருத:, ருக்மாபஸ்ஸோயமமஸ் ஸர்வ சாஸ்த்ரேஷு சப்தித:; ஸோயம் ப்ரத்யும்ந நாம்நாபூத் ததேகாந்த வபுர்தர:; ஸோயம் ஸங்கர்ஷணாக்கயோபூத் ததேகாந்த வபுர்தர:, இந்தர நீலப்ரதீகாச ஏஷ சாஸ்த்ரேஷு சப்தித:, ததோ நாம்நா அநிருத்தோயம் ஸ்வயமே வாபவந் முநே; ததேகாந்த வபுர்யுக்தஸ் தாதாத்விக கந ப்ரப: - வ்யூஹங்கள் என்னைப் போன்று ஒளி வீசியபடியும், குற்றங்கள் ஏதும் இல்லாமல், அனைத்து சாஸ்த்ரங்களிலும் கூறப்பட்டபடியும், ஐந்து ஆயுதம் கொண்டபடியும் கூறப்பட்டனர். பரவாஸுதேவனிடமிருந்து வெளிப்பட்ட ப்ரதியும்நன், அந்தத் திருநாமத்திற்கு ஏற்றபடி உள்ளான்; ப்ரத்யும்நனிடமிருந்து வெளிப்பட்ட ஸங்கர்ஷணன், இந்த்ர நீல நிறம் கொண்டபடி உள்ளான். ஸங்கர்ஷணனிடமிருந்து, மேகம் போன்று நிறம் கொண்ட அநிருத்தன் வெளிப்பட்டான் - என்றும் பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் ஸ்ருஷ்டி குறித்தும், ஸம்ஸாரிகளைக் காப்பது குறித்தும், உபாஸகர்களுக்கு அனுக்ரஹம் செய்வது குறித்தும் உள்ள வ்யூஹங்களுடைய செயல்பாடுகள் மற்றும் ஸங்கர்ஷணன் போன்று வ்யூஹங்கள் குறித்தும் உரைக்கப்பட்டது அல்லவோ? மேலே “சதுர்விதஸ் ஸ பகவான் – பகவான் நான்கு விதங்களில்” என்று கூறப்பட்ட இடத்தில், வாஸுதேவனையும் கூறியதாகக் கொள்க.

185. பரத்வத்தில் ஜ்ஞாநாதிகளாறும் பூர்ணமாயிருக்கும், வ்யூஹத்தில் இவ்விரண்டு குணம் ப்ரகடமாயிருக்கும்.

**அவதாரிகை** - இந்த பரவ்யூஹங்களுக்குத் தன்னில் விசேஷமேது? என்ன, அருளிச் செய்கிறார் (பரத்வத்தில்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படிப்பட்ட பரவாஸுதேவனுக்கும், மற்ற மூன்று வ்யூஹங்களுக்கும் உள்ள சிறப்பு என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “ஸம்பூர்ண ஷட்குணஸ் தேஷு வாஸுதேவோ ஜகத்பதி:” என்றும், “பூர்ணஸ்திமித ஷாட்குண்யோ நிஸ்தரங்கார்ணவோபம:, ஷண்ணாம்

யுகபதுந்மேஷாத்குணாநாம் ஸ்வ ப்ரசோதிதாத், அநந்த ஏவ பகவாந் வாஸுதேவஸ் ஸநாதந:" என்றும் சொல்லுகிறபடியே, வாஸுதேவ ரூபமான பரத்வத்தில் ஜ்ஞாந பல ஐச்வர்ய வீர்ய சக்தி தேஜஸ்ஸுக்களாகிற ஆறு குணங்களும பரிபூர்ணமாயிருக்கும். ஸங்கர்ஷணாதி ரூபமான வ்யூஹத்தில், "தத்ர தத்ராவசிஷ்டம் யத் குணநாம் த்வியுகம் முநே, அநுவ்ருத்திம் பஜத்யேவ தத்ர தத்ர யதாததம்" என்கிறபடியே, அவசிஷ்டமான குணசதுஷ்டயமும் தத்ரதத்ராநுவ்ருத்தமாய் நிற்கச் செய்தேயும், அதிகரித்த காரியங்களுக்கு அநுகுணமான இவ்விரண்டு குணமே ப்ரகாசமாயிருக்குமெனகை. "குணை: ஷட்பிஸ் த்வேதை: ப்ரதமதா மூர்த்திஸ் தவ பபௌ ததஸ் திஸ்ரஸ் தேஷாம் த்ரியுக யுகளைர் ஹி த்ரிபிரபு: வ்யவஸ்த்தா யா சைஷா நநு வரத ஸாவிஷ்க்ருதிவசாத் பவாந் ஸர்வத்ரைவ த்வகணித மஹா மங்களகுண:" என்று, இது தன்னை ஆழ்வானருளிச் செய்தாறே.

**விளக்கம்** - அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை - ஸம்பூர்ண ஷட்குணஸ் தேஷு வாஸுதேவோ ஜகத்பதி: - இந்த ஜகத்தின் பதியாகிய வாஸுதேவன், ஆறு குணங்களைப் பரிபூர்ணமாகக் கொண்டுள்ளான் - என்றும், பூர்ணஸ்திமித ஷாட்குண்யோ நிஸ்தரங்கார்ணவோபம:, ஷண்ணாம் யுகபதுந்மேஷாத்குணாநாம் ஸ்வ ப்ரசோதிதாத், அநந்த ஏவ பகவாந் வாஸுதேவஸ் ஸநாதந: – தனக்குள் எப்போதும் ப்ரகாசித்தபடி உள்ளதான ஆறு குணங்களும் ஒரே நேரத்தில் விரிந்தபடி உள்ளதால், அலையற்ற கடல் கலங்காமல் உள்ளது போன்று முழுமையான கலங்காத ஆறு குணங்கள் கொண்டவனாக பகவான் வாஸுதேவன் எப்போதும் உள்ளான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, வாஸுதேவ ரூபமாக உள்ள பரத்வத்தில் "ஞானம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ்" ஆகிய ஆறு குணங்களும் பரிபூர்ணமாக உள்ளன. ஸங்கர்ஷணன் போன்ற மற்ற வ்யூஹங்களில் "தத்ர தத்ராவசிஷ்டம் யத் குணநாம் த்வியுகம் முநே, அநுவ்ருத்திம் பஜத்யேவ தத்ர தத்ர யதாததம் – அந்தந்த மூர்த்திகளிடம் அவரவர்களுக்குள்ள இரண்டு இரண்டு குணங்கள் மீறாமல் உள்ளன - என்பதற்கு ஏற்ப ஒவ்வொரு வ்யூஹத்திலும் இரண்டு குணங்கள் என்னும் அடிப்படையில், அந்தந்த வ்யூஹத்தின் முக்கியமான இரண்டு குணங்கள் மட்டும் அல்லாமல், மீதம் உள்ள நான்கு குணங்களும் காணப்பட்டாலும். அந்தந்த வ்யூஹத்தின் முதன்மையான இரண்டு குணங்கள் மட்டுமே ப்ரகாசமாக உள்ளன [அதாவது, ஸங்கர்ஷணனிடம் இரண்டு குணங்கள் மட்டுமே ப்ரதானமாக உள்ளன. ஆனாலும், மற்ற நான்கு குணங்களும் அவனிடம் பொருந்தி உள்ளன]. ஸ்ரீவரதராஜ ஸ்தவத்தில் (16) கூரத்தாழ்வான் - குணை: ஷட்பிஸ் த்வேதை: ப்ரதமதா மூர்த்திஸ் தவ பபௌ ததஸ் திஸ்ரஸ் தேஷாம் த்ரியுக யுகளைர் ஹி த்ரிபிரபு: வ்யவஸ்த்தா யா சைஷா நநு வரத ஸாவிஷ்க்ருதிவசாத் பவாந் ஸர்வத்ரைவ த்வகணித மஹா மங்களகுண: - வரதா! உனது முதலாவதான பரவாஸுதேவ மூர்த்தியானது ஆறு குணங்களாலும் ப்ரகாசம் அடைந்தது;

அதன் பின்னர் உள்ள மற்ற மூன்று வ்யூஹங்கள், அந்தந்த வ்யூஹங்களுக்கு ஏற்ப உள்ள இரண்டு குணங்களுடன் ப்ரகாசித்தன. ஆனால் நீ எப்போதும் எண்ணற்ற பெரிய மங்கள குணம் கொண்டவன் ஆவாய் அல்லவோ - என்றார்.

186. அதில் ஸங்கர்ஷணர், ஜ்ஞாந பலங்களிரண்டோடுங்கூடி ஜீவ தத்வத்தை யதிஷ்டித்து, அத்தை ப்ரக்ருதியில நின்றும் விவேகித்து, ப்ரத்யும்நாவஸ்த்தையையும் பஜித்து, சாஸ்த்ர ப்ரவர்த்தநத்தையும் ஜகத் ஸம்ஹாரத்தையும் பண்ணக் கடவராயிருப்பர்.

**அவதாரிகை -** இனி இந்த ஸங்கர்ஷணாதிகள் மூவர் பக்கலிலும் ப்ரகாசிக்கிற குண விசேஷங்களையும், இவர்கள்தான் இன்ன க்ருத்யங்களுக்குக் கடவராயிருப்பர்க ளென்னுமத்தையும் தனித்தனியே அருளிச் செய்யவேணுமென்று திருவுள்ளம் பற்றி, ப்ரதமம் ஸங்கர்ஷணர்படியை அருளிச் செய்கிறார் (அதில் ஸங்கர்ஷணர்) என்று தொடங்கி.

**விளக்கம் -** அடுத்து, ஸங்கர்ஷணன் முதலான மூவரிடத்திலும் வெளிப்படும் குணச் சிறப்புக்களையும், இவர்கள் இத்தகைய செயல்கள் செய்யக்கடவர்களாக உள்ளனர் என்பதையும் தனித்தனியே அருளிச்செய்ய திருவுள்ளம் கொண்டார். ஆகவே முதலில் ஸங்கர்ஷணனுடைய விதத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, வ்யூஹ த்ரயத்திலும் வைத்துக்கொண்டு ஸங்கர்ஷணர் “தத்ர ஜ்ஞாந பலத்வந்த்வாத் ரூபம் ஸாங்கர்ஷணம் ஹரே” என்றும், “பகவாநச்யுதோபீத்தம் ஷட்குணோந ஸமேதித:; பல ஜ்ஞாநௌ குணௌ தஸ்ய ஸ்ப்புடௌ கார்ய வசாந் முநே” என்றும் சொல்லுகிறபடியே, ஸர்வ குணங்களுமுண்டாயிருக்கச் செய்தேயும் கார்யாநு குணமாக ஜ்ஞாந பலங்களிரண்டோடுங் கூடி, “ஸோயம் ஸமஸ்த ஜீவாநாம் அதிஷ்ட்டா த்ருதயா ஸ்த்தித:” என்றும், “ஸங்கர்ஷணஸ் து தேவேசோ ஜகத் ஸ்ரஷ்டுமநாஸ் தத:, ஜீவ தத்வமதிஷ்ட்டாய ப்ரக்ருதேஸ்து விவிச்ய தத்” என்றும் சொல்லுகிறபடியே, ப்ரக்ருதிக்குள்ளே மயங்கிக் கிடக்கிற ஜீவ தத்வத்தை அதிஷ்டித்து, அந்த அதிஷ்ட்டாந விசேஷத்தாலே இத்தை ப்ரக்ருதியில் நின்றும், நாம ரூப விசேஷம் தோற்றும்படி விவேகித்து, “விவேகாநந்தரம் தேவ: ப்ரத்யும்நத்வமவாப ஸ:” என்றும், “ஸோயம் ப்ரத்யும்ந நாமாபூத் ததேகாந்தவபுர்த்தர:” என்றும் சொல்லுகிறபடியே ப்ரத்யும்நாவஸ்த் தையையும் பஜித்து, “சாஸ்த்ர ப்ரவர்த்தநஞ்சாபி ஸம்ஹாரஞ்சைவ தேஹிநாம்” என்றும்,

“பலேந ஹரதீதம் ஸகுணேந நிகிலம் முநே, ஜ்ஞாநேந தநுதே சாஸ்த்ரம் ஸர்வஸித்தாந்த கோசரம்; வேதசாஸ்த்ரமிதிக்க்யாதம் பாஞ்சராத்ரம் விசேஷத:” என்றும் சொல்லுகிறபடியே, வேதாதி சாஸ்த்ர ப்ரவர்த்தநத்தையும், ஜகத் ஸம்ஹாரத்தையும் பண்ணக் கடவராயிருப்பரென்கை.

**விளக்கம் -** மூன்று வ்யூஹங்களில் உள்ள ஸங்கர்ஷணன், விஷ்வக்ஸேந ஸம்ஹிதை - தத்ர ஜ்ஞாந பலத்வந்த்வாத் ரூபம் ஸாங்கர்ஷணம் ஹரே - ஸ்ரீஹரியின் ரூபமாகிய ஸங்கர்ஷண வடிவமானது, ஞானம் மற்றும் பலம் ஆகியவற்றைக் கொண்டது - என்றும், பாஞ்சராத்ரம் – பகவாந் அச்யுதோபீத்தம் ஷட்குணேந ஸமேதித:; பல ஜ்ஞாநௌ குணௌ தஸ்ய ஸ்ப்புடௌ கார்ய வசாந் முநே - பகவானாகிய அச்சுதன் ஆறு குணங்கள் கொண்டவனாக உள்ளபோதிலும், ஸங்கர்ஷணனாக உள்ளபோது ஞானம் மற்றும் பலம் ஆகிய குணங்கள் கொண்டு செயலாற்றுகிறான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, பகவானுக்கு அனைத்து குணங்களும் உள்ளபோதிலும், கார்யங்கள் செய்வதற்கு ஏற்றபடி ஞானம் மற்றும் பலம் ஆகிய இரண்டு குணங்களும் கூடியவனாக ஸங்கர்ஷணனாக உள்ளான். மேலும், ஸோயம் ஸமஸ்த ஜீவாநாம் அதிஷ்ட்டா த்ருதயா ஸ்த்தித: – இத்தகைய ஸங்கர்ஷணன், அனைத்து ஜீவர்களுக்கும் இருப்பிடமாக உள்ளான் - என்றும், ஸங்கர்ஷணஸ் து தேவேசோ ஜகத் ஸ்ரஷ்டுமநாஸ் தத:, ஜீவ தத்வமதிஷ்ட்டாய ப்ரக்ருதேஸ்து விவிச்ய தத் - தேவர்களை ஆண்டபடி உள்ள ஸங்கர்ஷணன், இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிக்கவேண்டும் என்று தீர்மானித்து, ஜீவாத்மாக்களில் புகுந்து, ப்ரக்ருதியில் மயங்கியபடி உள்ள ஜீவாத்மாக்களுக்கு பெயர் மற்றும் ரூபம் அளித்து - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ப்ரக்ருதிக்குள் மயங்கிக் கிடக்கும் ஜீவாத்மாக்களில் புகுந்து, அத்தகைய சிறப்பால் அவர்கள் ப்ரக்ருதியிலிருந்து பிரித்து எடுத்து, அவர்களுக்குத் தனித்தனி பெயர் மற்றும் ரூபம் ஆகிய சிறப்புகள் தோன்றும்படிச் செய்கிறான். மேலும், விவேகாநந்தரம் தேவ: ப்ரத்யும்நத்வமவாப ஸ: – இவ்விதம் பிரித்த பின்னர் ஸங்கர்ஷணனாகிய அவன், ப்ரத்யும்நன் ரூபத்தை அடைகிறான் - என்றும், ஸோயம் ப்ரத்யும்ந நாமாபூத் ததேகாந்தவபுர்த்தர: - இப்படியாக ப்ரத்யும்ந நாமத்தை அடைந்து - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ப்ரத்யும்நன் நிலையை அடைகிறான். அடுத்து, சாஸ்த்ர ப்ரவர்த்தநஞ்சாபி ஸம்ஹாரஞ்சைவ தேஹிநாம் – சாஸ்த்ரங்களை வெளிப்படுத்தல் மற்றும் ஸம்ஹாரம் என்பதைச் செய்தல் - என்றும், பலேந ஹரதீதம் ஸகுணேந நிகிலம் முநே, ஜ்ஞாநேந தநுதே சாஸ்த்ரம் ஸர்வ ஸித்தாந்த கோசரம்; வேதசாஸ்த்ரம் இதிக்க்யாதம் பாஞ்சராத்ரம் விசேஷத: - பலம் என்பதைக் கொண்டு ஸம்ஹாரம் செய்கிறான், சாஸ்த்ரம்

என்பதான அனைத்து வேதாந்தங்களையும் தன்னுள் அடக்கிய பாஞ்சராத்ரத்தை ஞானம் மூலம் வெளியிடுகிறான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, வேதம் தொடங்கியுள்ள அனைத்து சாஸ்த்ரங்களையும் வெளியிடுதல் மற்றும் ஜகத்தை ஸம்ஹாரம் செய்தல் ஆகியவற்றை ஸங்கர்ஷணன் செய்கிறான்.

187. ப்ரத்யும்நர், ஐச்வர்ய வீர்யங்களிரண்டோடும் கூடி மனஸ் தத்வத்தையதிஷ்டித்து, தர்மோபதேசத்தையும், மநு சதுஷ்டயம் தொடக்கமான சுத்தவர்க்க ஸ்ருஷ்டியையும் பண்ணக்கடவராயிருப்பர்.

**அவதாரிகை -** அநந்தரம் ப்ரத்யும்நர் படியை அருளிச்செய்கிறார் (ப்ரத்யும்நர்) என்று தொடங்கி.

**விளக்கம் -** அடுத்து ப்ரத்யும்நனுடைய விதத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, ப்ரத்யும்நர் "ஐச்வர்ய வீர்ய ஸம்பேதாத் ரூபம் ப்ராத்யுமந முச்யதே" என்றும், "பூர்ண ஷட்குண ஏவாயம அச்யுதோபி மஹாமுநே, குணைவைச்வர்ய வீர்யாக்க்யௌ ஸ்புடௌ தஸ்ய விசேஷத:" என்றும் சொல்லுகிறபடியே, ஸகல குணங்களுமுண்டாயிருக்கச் செய்தேயும், கார்யாநுகுணமாக விசேஷேண ஸ்ப்புடங்களா யிருக்கிற ஐச்வர்ய வீர்யங்களோடே கூடி, "மநஸோயமதிஷ்ட்டாதா மநோமய இதீரித:" என்கிறபடியே, ஜ்ஞாந ப்ரஸரண த்வாரமான மநஸ் தத்வத்தை அதிஷ்டித்து, "ஐச்வர்யேண குணேநாஸௌ ஸ்ருஜதே தச்சராசரம், வீர்யேண ஸர்வதர்மாணி ப்ரவர்த்தயதி ஸர்வச:" என்கிறபடியே, சாஸ்த்ரார்த்தாநுஷ்ட்டாந ரூபமான தர்மங்களினுடைய உபதேசத்தையும், "மநூநாம் ஸர்கமகரோத் முக பாஹூருபாதத:, சதுர்ணாம் ப்ராஹ்மணாதீநாம் ஸர்க த்வாரம் ஜகத்பதி:, த்விஜ யுக்மம் க்ஷத்ர யுக்மம் வைச்ய யுக்மம் ததைவ ச, மிதுநஞ்ச சதுர்த்தஸ்ய ஏதந்மநு சதுஷ்டயம்; மநுப்யோ மாநவசதம் ஸ்த்ரீபும் மிதுநதோ பவேத்; ஏகைகம் வர்ண பேதேநதேப்யோ மாநவ மாநவா ஸஹஸா:, ஸம்பபூவுச்ச ஸ்த்ரீபும் மிதுநதஸ் ததா; மநுஷ்யாச்ச ததஸ் தேப்ய: ப்ராதுஷ்யுர் வீதமத்ஸரா: ஏதே ஹி சுத்தஸத்வஸ்தா: தேஹாந்தம் நாந்யயாஜிந:, நிராசீ: கர்மகரணாந் மாமேவ ப்ராப்நுவந்தி தே; த்ரய்யந்தேஷு ச நிஷ்ணாதா த்வாதசாத்யாத்ம சித்தகா:, வ்யூஹா நிவ்ருத்திம் ஸததம் குர்வதே தே ஜகத்பதே: த்ருதீயேந ஜகத் தாத்ரா நிர்மிதா மநஸா ஸ்வயம், குண ப்ரதாந யோகே ச நிஷ்ட்டிதா: புருஷர்ஷப: இத்யேஷ சுத்த

ஸர்கோயம் கணேச தவ கீர்த்தித:" என்று விஷ்வக்ஸேந ஸம்ஹிதையிற் சொல்லுகிறபடியே முக பாஹூருபாதஜராய், மிதுநமாயிருக்கிற ப்ராஹ்மணாதி மநு சதுஷ்டயம் தொடக்கமாக இந்த மநுக்கள் பக்கலிலே நின்றும் மிதுநங்களாய்க் கொண்டு, தனித்தனியே வர்ண பேதேந உண்டான மாநவ சதமும், அப்படியே ஸ்த்ரீபும் மிதுனங்களாய்க் கொண்டு அந்த மாநவா பக்கலிலே நின்றும உண்டான மாநவரும், அவர்கள் பக்கலிலே நின்றுமுண்டான மநுஷ்யருமாய்க் கொண்டு, நிர்மத்ஸரராய், சுத்தஸத்வஸ்த்தராய், தேஹாந்த மந்யயாஜிகளன்றிக்கே, பலாபிஸந்தி ரஹிதராய்க் கொண்டு, பகவத் ஸமாராதந ரூபமான கர்மத்தை அநுஷ்ட்டியா நிற்பாராய், வேதாந்தத்திலே நிஷ்ணாதராய், த்வாதசாக்ஷரமுகேந அத்யாத்ம சிந்தகராய், ஸர்வேச்வரனுடைய வ்யூஹாநுவ்ருத்தியை எப்போதும் பண்ணா நின்றுகொண்டு, பகவத் ப்ராப்தியைப் பண்ணா நிற்கும் சுத்த வர்க்கத்தினுடைய ஸ்ருஷ்டியையும் பண்ணக் கடவராயிருப்பரென்கை.

**விளக்கம் -** விஷ்வக்ஸேந ஸம்ஹிதையில் – ஐச்வர்ய வீர்ய ஸம்பேதாத் ரூபம் ப்ராத்யுமந முச்யதே - ஐச்வர்யம் மற்றும் வீர்யம் ஆகியவற்றின் சேர்க்கையுடன் கூடிய ரூபமானது ப்ரத்யும்நம் என்று கூறப்படுகிறது - என்றும், பூர்ண ஷட்குண ஏவாயம அச்யுதோபி மஹாமுநே, குணவைச்வர்ய வீர்யாக்க்யௌ ஸ்புடௌ தஸ்ய விசேஷத: - அச்சுதனாகிய ப்ரத்யும்நன் ஆறு குணங்களைப் பரிபூர்ணமாகக் கொண்டபோதிலும், ஐச்வர்யம் மற்றும் வீர்யம் ஆகியவை சிறப்பாக உள்ளன - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ப்ரத்யும்நன் அனைத்து குணங்களுடன் கூடியவனாக உள்ளபோதிலும், தனது கார்யங்களுக்கு ஏற்றபடியாக உள்ள சிறப்பான குணங்களாகிய ஐச்வர்யம் மற்றும் வீர்யம் ஆகியவற்றுடன் உள்ளான். மநஸோயமதிஷ்ட்டாதா மநோமய இதீரித: - ஜீவாத்மாவின் மனதில் நிற்பவன் – என்பதற்கு ஏற்ப, ஞானமானது ஸஞ்சாரம் செய்கின்ற வாசலாக உள்ள மனதின் உள்ளே புகுந்து நிற்கிறான். அடுத்து, ஐச்வர்யேண குணேநாஸௌ ஸ்ருஜதே தச்சராசரம், வீர்யேண ஸர்வதர்மாணி ப்ரவர்த்தயதி ஸர்வச: - அசையும் மற்றும் அசையாப்பொருள்கள் நிறைந்த இந்த அனைத்தையும் ஐச்வர்யம் என்னும் குணத்துடன் கூடி நின்று ஸ்ருஷ்டித்து, வீர்யம் என்ற குணத்தின் மூலம் அனைத்து தர்மங்களையும் உபதேசிக்கிறான் - என்பதற்கு ஏற்ப, சாஸ்த்ரங்களைக் கடைப்பிடிப்பதற்கு ஏற்றபடி உள்ளதான தர்மங்களை உபதேசிக்கிறான். அடுத்து விஷ்வக்ஸேந ஸம்ஹிதையில் - மநூநாம் ஸர்கமகரோத் முக பாஹூருபாதத:, சதுர்ணாம் ப்ராஹ்மணாதீநாம் ஸர்க த்வாரம் ஜகத்பதி:, த்விஜ யுக்மம் க்ஷத்ர யுக்மம் வைச்ய யுக்மம் ததைவ ச, மிதுநஞ்ச சதுர்த்தஸ்ய ஏதந்மநு சதுஷ்டயம்;

மநுப்யோ மாநவசதம் ஸ்த்ரீபும் மிதுநதோ பவேத்; ஏகைகம் வர்ண பேதேநதேப்யோ மாநவ மாநவா ஸஹஸா:, ஸம்பபூவுச்ச ஸ்த்ரீபும் மிதுநதஸ் ததா; மநுஷ்யாச்ச ததஸ் தேப்ய: ப்ராதுஷ்யுர் வீதமத்ஸரா: ஏதே ஹி சுத்தஸத்வஸ்தா: தேஹாந்தம் நாந்யயாஜிந:, நிராசீ: கர்மகரணாந் மாமேவ ப்ராப்நுவந்தி தே; த்ரய்யந்தேஷு ச நிஷ்ணாதா த்வாதசாத்யாத்ம சித்தகா:, வ்யூஹா நிவ்ருத்திம் ஸததம் குர்வதே தே ஜகத்பதே: த்ருதீயேந ஜகத் தாத்ரா நிர்மிதா மநஸா ஸ்வயம், குண ப்ரதாந யோகே ச நிஷ்ட்டிதா: புருஷர்ஷப: இத்யேஷ சுத்த ஸர்கோயம் கணேச தவ கீர்த்தித: – நான்காக உள்ள அந்தணர்கள் போன்றவர்களுடைய ஸ்ருஷ்டிக்குக் காரணமாக உள்ளவனும், ஜகத்தின் பதியாக உள்ளவனும் (ஆகிய ப்ரத்யும்நன்), தனது “முகம், தோள், தொடை, கால்கள்” ஆகியவற்றிலிருந்து மனுக்களைப் படைத்தான்; இந்த ஆண் பெண் என்பதான மனுக்களிலிருந்து, நூறு மனுக்கள் ஏற்பட்டனர். அந்தந்த மனுக்களிலிருந்து தனித்தனியான பிரிவுகளில் ஆண் மற்றும் பெண் என்பதாகப் பல மனுக்கள் தோன்றினர். அந்த மனுக்களிலிருந்து மனிதர்கள் தோன்றினர். அந்த மனிதர்கள் சுத்தஸத்வ குணம் கொண்டவர்களாக, சரீரம் விழும் காலம் முடிய வேறு யாரையும் குறித்து யாகம் செய்யாதவர்களாக, பலனில் விருப்பம் இல்லாத ஸத் கர்மங்களை மட்டுமே செய்வதில் நோக்கம் கொண்டவர்களாக உள்ளதால் என்னையே அடைகிறார்கள். பன்னிரண்டு எழுத்துக்கள் கொண்ட “ஓம் நமோ பகவதே வாஸுதேவாய” என்பதன் மூலம் பரமாத்மாவைக் கூறும் சாஸ்த்ரத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட அவர்கள், அனைத்து காலங்களிலும் மஹாலக்ஷ்மியின் நாயகனும், ஜகத் பதியுமாகிற வ்யூஹங்களுக்கு அடிமையாக உள்ளனர். உலகைத் தாங்கி நிற்கும் நான்கு வ்யூஹங்களில், மூன்றாவதாக உள்ள ப்ரத்யும்நனால் யோக நிஷ்டையில் ஈடுபடுத்தப்பட்டு, இவர்கள் அனைவரும் அவனால் தனது மனம் மூலம் படைக்கப்பட்டனர். இப்படியாக ஸ்ருஷ்டி குறித்து உனக்கு உரைக்கப்பட்டது - என்று கூறப்பட்டபடி, பகவானுடைய “முகம் தோள், தொடை” ஆகியவற்றில் பிறந்தவர்கலாக, ஆண் மற்றும் பெண் என்பதாக உள்ள அந்தணன் முதலான நான்கு பிறவிகளில் தோன்றிய மனுக்கள்; அந்த மனுக்களிடமிருந்து ஆண் பெண் என நான்கு வர்ணபேதங்களுடன் கூடிய மனுக்கள்; அந்த மனுக்களிடமிருந்து தோன்றிய மனிதர்கள்; அந்த மனிதர்கள் அனைவரும் எந்தவிதமான சச்சரவுகளும் இன்றி, சுத்தஸத்வ குணம் கொண்டவர்களாக, தேகம் விழும்வரை வேறு யாருக்கும் யாகம் செய்யாதவர்களாக, பலனில் விருப்பம் இன்றி பகவத் ஆராதனை என்பதாகவே கர்மங்களை இயற்றி, வேதாந்தத்தில் நிலை நின்று, பன்னிரண்டு எழுத்துக்கள் கொண்டு

பரமாத்மாவை த்யானித்து, ஸர்வேச்வரனுடைய வ்யூஹங்களை எப்போதும் எண்ணியபடி, பகவானை அடைகிறார்கள் என்பதாக ஸ்ருஷ்டியைச் செய்பவன் ப்ரத்யும்நன் ஆவான்.

188. அநிருத்தர், சக்தி தேஜஸ்ஸுக்ளிரண்டோடுங்கூடி ரக்ஷணத்துக்கும், தத்வ ஜ்ஞாந ப்ரதானத்துக்கும் கால ஸ்ருஷ்டிக்கும், மிச்ர ஸ்ருஷ்டிக்கும் கடவராயிருப்பர்.

**அவதாரிகை** – அநந்தரம், அநிருத்தர்படியை அருளிச்செய்கிறார் (அநிருத்தர்) என்று தொடங்கி.

**விளக்கம் -** அடுத்து அநிருத்தனுடைய விதத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அநிருத்தர் "சக்தி தேஜஸ் ஸமுத்கர்ஷாத் அநிருத்த தநுர் ஹரே:" என்றும், "புருஷோபி மஹாத்யக்ஷ: பூர்ண ஷட்குண உச்யதே, சக்தி தேஜௌ குணௌ தஸ்ய ஸ்புடா கார்யவசாந் முநே" என்றும் சொல்லுகிறபடியே, ஸர்வகுணங்களும் உண்டாயிருக்கச் செய்தேயும், கார்யாநுகுணமான சக்தி தேஜஸ்ஸுக்களோடே கூடி "சக்த்யா ஜகதிதம் ஸர்வமநந்தாண்ட நிரந்தரம், பிபர்த்தி பாதி ச ஹரிர் மணிஸாநுரிவாணுகம், தேஜஸா நிகிலம் தத்வம் ஜ்ஞாபயத்யாத்மநோ முநே" என்கிறபடியே, ஜகத் ரக்ஷணத்துக்கும்; உஜ்ஜீவந ஹேதுவான தத்வ ஜ்ஞாந ப்ரதாநத்துக்கும்; த்ருடி முதலாக த்விபரார்த்த பர்யந்தமாக உண்டான கால ஸ்ருஷ்டிக்கும் "துரீயோயம் ஜகந்நாதோ ப்ரஹ்மாணமஸ்ருஜத் புந: முக பாஹூருபஜ் ஜாதோ ப்ரஹ்மண பரமேஷ்டிந:, சதுர்விதோ பூத ஸர்கஸ்தேந ஸ்ருஷ்டஸ் ஸ்வயம்புவா ப்ராஹ்மணாத்யாஸ் ததா வரணா ரஜ: ப்ராசுர்யதோ பவந், த்ரயீமார்கேஷு நிஷ்ணாதா: பலவாதே ரமந்திதே, தேவாதீநேவ மந்வாநா ந ச மாம் மேநிரே ஸ்வத:, தம: ப்ராயாஸ் த்விமே கேசித்மம நிந்தாம் ப்ரகுர்வதே, ஆராத்யஞ்ச நியந்தாரம் ந ஜாநந்த: பரஸ்பரம், ஸல்லாபம் குர்வதோ வ்யக்ர வேத வாதேஷு நிஷ்ட்டிதா:, மாம் ந ஜாநந்தி மோஹேந மயி பக்தி பராங்முகா:, ஸ்வர்காதிஷு ரமந்தயேதே அவஸாநே பதந்தி தே, காமத்மாநோ மஹாபாக ஜரா மரண யோகிந:, ப்லவந்த்யேதே த்விஜா மோஹாத் தேஹி ஸம்ஸார வர்த்மநி இத்யேஷ மிச்ர ஸர்கஸ்து கணேச தவ கீர்த்தித:" என்று விஷ்வக்ஸேந ஸம்ஹிதையிற் சொல்லுகிறபடியே, ப்ரஹ்மாவினுடைய முக பாஹூ ருப ஜாதராய், ப்ராஹ்மணாதி வர்ணராய், ரஜ ப்ரசுரராய், பூர்வபாகமார்க நிஷ்ணாதராய், பலவாதத்திலே ரமியா நிற்பராய், ஈசவரனையொழிய

தேவாதிகளையே ஆராத்யராக நினைத்து அதிலே சிலர் தம: ப்ரசுரராய், பகவந் நிந்தையைப் பண்ணி ஆராத்யனாய் நியந்தாவாயிருக்கிற அவனையறியாமல் வ்யகரமான வேதவாதங்களிலே மநஸ்ஸை வைத்து ஒருவர்க்கொருவர் அவற்றை ஸல்லாபித்துக் கொண்டு, ஆகையாலே, பகவத் ஜ்ஞாந பக்திகளில் அந்வயமன்றிக்கே, ஸ்வர்காதிகளிலே ரமியா நின்றுகொண்டு, ஸ்வகர்ம பலாவஸாநத்திலே அத: பதிதது காம விஷயமான மநஸ்ஸையுடையராய் ஜரா மரணங்களையடைந்து, ஸம்ஸார மார்க காமிகளாய்த் திரியுமவர்களாகிற மிச்ர வர்க்கத்தினுடைய ஸ்ருஷ்டியையும் பண்ணக் கடவராயிருப்பரென்கை.

**விளக்கம்** -விஷ்வக்ஸேந ஸம்ஹிதையில், சக்தி தேஜஸ் ஸமுத்கர்ஷாத் அநிருத்த தநுர் ஹரே: - ஸ்ரீஹரியின் அநிருத்த திருமேனியானது சக்தி மற்றும் தேஜஸ் ஆகியவற்றை உயர்ந்து கொண்டதாகும் – என்றும், புருஷோபி மஹாத்யக்ஷ: பூர்ண ஷட்குண உச்யதே, சக்தி தேஜௌ குணௌ தஸ்ய ஸ்புடா கார்யவசாந் முநே - மிகவும் உயர்ந்த புருஷன், ஆறு குணங்களையும் பரிபூர்ணமாகக் கொண்டவனாக உள்ளான், அவற்றில் சக்தி மற்றும் தேஜஸ் ஆகிய இரண்டும் காரியங்களுக்கு உறுப்பாக உள்ளன - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அநிருத்தன் அனைத்து குணங்களுடன் கூடியவனாக உள்ளபோதிலும், கார்யத்திற்கு ஏற்றபடி உள்ள சக்தி மற்றும் தேஜஸ் ஆகியவற்றைக் கொண்டுள்ளான். மேலும், சக்த்யா ஜகதிதம் ஸர்வமநந்தாண்ட நிரந்தரம், பிபர்த்தி பாதி ச ஹரிர் மணிஸாநுரிவாணுகம், தேஜஸா நிகிலம் தத்வம் ஜ்ஞாபயத்யாத்மநோ முநே - எல்லை இல்லாதபடி உள்ள அண்டங்களால் நெருக்கப்பட்டுள்ள இந்த லோகங்களை ஸ்ரீஹரியானவன், மாணிக்க மலையின் தாழ்வரையானது அணுவைத் தாங்குவது போன்று, அனைத்து தத்வங்களையும் காக்கிறான் - என்று கூறுவதற்கு ஏற்ப, ஜகத்தைக் காத்தல் மற்றும் ஜகத்தானது கரையேற அவசியமாக உள்ள தத்வஞானம் ஏற்படவும் காரணமாகவும், விநாடி தொடக்கமாக த்விபரார்த்தம் முடிய உள்ள காலத்தின் ஸ்ருஷ்டிக்குக் காரணமாகவும் உள்ளான், மேலும் விஷ்வஸேந ஸம்ஹிதையில் – துரீயோயம் ஜகந்நாதோ ப்ரஹ்மாணமஸ்ருஜத் புந: முக பாஹூருபஜ் ஜாதோ ப்ரஹ்மண பரமேஷ்டிந:, சதுர்விதோ பூத ஸர்கஸ்தேந ஸ்ருஷ்டஸ் ஸ்வயம்புவா ப்ராஹ்மணாத்யாஸ் ததா வரணா ரஜ: ப்ராசுர்யதோ பவந், த்ரயீமார்கேஷு நிஷ்ணாதா: பலவாதே ரமந்திதே, தேவாதீநேவ மந்வாநா ந ச மாம் மேநிரே ஸ்வத:, தம: ப்ராயாஸ் த்விமே கேசித்மம நிந்தாம் ப்ரகுர்வதே, ஆராத்யஞ்ச நியந்தாரம் ந ஜாநந்த: பரஸ்பரம், ஸல்லாபம் குர்வதோ வ்யக்ர வேத வாதேஷு நிஷ்ட்டிதா:, மாம் ந ஜாநந்தி மோஹேந மயி பக்தி பராங்முகா:, ஸ்வர்காதிஷு ரமந்தயேதே அவஸாநே பதந்தி தே, காமத்மாநோ மஹாபாக ஜரா மரண

யோகிந:, ப்லவந்த்யேதே த்விஜா மோஹாத் தேஹி ஸம்ஸார வர்த்மநி இத்யேஷ மிச்ர ஸர்கஸ்து கணேச தவ கீர்த்தித: - நான்காவதாக உள்ள ஜகந்நாதனாகிய அநிருத்தன், மீண்டும் நான்முகனைப் படைத்தான். பரமேஷ்டி என்ற பெயர் கொண்ட அந்த நான்முகனுடை முகம், தோள், தொடை மற்றும் கால் ஆகியவற்றிலிருந்து அந்த நான்முகனால் நான்குவிதமான உயிர்கள் படைக்கப்பட்டன. அவர்கள் அந்தணர்கள் முதலான நால்வரும் ரஜோ குணம் மிக்கவர்களாக இருந்தனர். வேதமார்க்கங்களில் நிஷ்டை கொண்டவராகவும், இன்பம் என்ற பயனில் நாட்டம் கொண்டவர்களாகவும், இருந்தனர். யுகத்தின் முடிவில் அழியும் தன்மை கொண்ட தேவர்களை ஆராதித்து, என்னை எண்ணாமால் உள்ளனர். ஒரு சிலர், தாமஸ குணம் நிறைந்தவர்களாக, என்னைப் பகைக்கிறார்கள். ஆராதிக்கப்பட வேண்டியவனும், அனைத்தையும் ஆள்பவனும் ஆகிய என்னை அறியாமல் உள்ளனர். தங்களில் ஒருவரை ஒருவர் என்னை இழந்து பேசியபடியும், கொடிய மனம் கொண்டவர்களாக உள்ளனர். வேதவாக்கியங்களுக்கு நேரடியாக உள்ள பொருளை விடுத்து, அவசியம் அற்ற வாதங்களால் பொருள் உரைக்கிறார்கள். இவர்களுடைய அறியாமை காரணமாக என்னிடம் பக்தி இன்றி, ஸ்வர்கத்தில் இன்பம் விழைகிறார்கள். இப்படியாக அந்தணர்கள் காமத்தில் மனம் கொண்டவர்களாக, பிறப்பு மற்றும் இறப்பு என்பதை அடைந்து தங்களுடைய மயக்கத்தால் ஸம்ஸாரத்தில் உள்ளனர். இப்படியாக உள்ள பாபபுண்ணியம் கலந்த படைப்பு குறித்து, கணங்களின் நாதனாகிய உனக்கு உரைக்கப்பட்டது - என்று கூறப்பட்டபடி, நான்முகனுடைய “முகம், தோள் மற்றும் தொடை ஆகியவற்றில் பிறந்தவர்களாகவும், அந்தணன் முதலான வர்ணங்களில் உள்ளவராகவும், ரஜஸ் நிறைந்தவர்களாகவும், வேதத்தின் பூர்வ பாகமான கர்மத்தில் நாட்டம் உள்ளவர்களாகவும், பலனில் விருப்பம் கொண்டவராகவும், ஈச்வரனைத் தவிர உண்மையற்ற தேவர்களையே ஆராதிக்கத் தக்கவர்களாக எண்ணுபவர்களாகவும், ஒரு சிலர் தாமஸம் நிறைந்து பகவானை நிந்திப்பவராகவும், ஆராதிக்கத் தக்கவனும் அனைத்தையும் நியமிப்பவனாகவும் உள்ள அவனை அறியாமல் குதர்க்கமான வேத வாதங்களில் மனதை வைப்பவராகவும், ஒருவருக்கொருவர் அந்த வாதங்களில் சச்ச்சரவு செய்பவராகவும், இதன் விளைவாக பகவத் ஞானம் மற்றும் பக்தி இன்றி ஸ்வர்கம் போன்றவற்றை எண்ணுபவராகவும், ஸ்வர்கத்தின் பலனை அனுபவிக்கும் காலம் கழிந்த பின்னர் பூமியில் பிறந்து காம விஷயமாக மனம் கொண்டவராகவும், பிறப்பு மற்றும் இறப்பு என்பதை அடைந்து ஸம்ஸாரத்தில் எப்போதும் விருப்பம் கொண்டவராகவும் அலைகின்ற பாபம் மற்றும் புண்ணிய கர்மங்கள் கலந்து நிற்கும் ஸ்ருஷ்டியை அநிருத்தன் செய்கிறான்.

**வ்யாக்யானம் -** (அண்டத்தையும் அண்ட காரணங்களையும் தானே யுண்டாக்கும். அண்டத்துக்கு உட்பட்ட வஸ்துக்களை சேதநர்க்கு அந்தர்யாமியாய் நின்று உண்டாக்கும்) என்று; ஸமஷ்டி ஸ்ருஷ்டியெல்லாம் அத்வாரகமாகவும், வ்யஷ்டி ஸ்ருஷ்டி எல்லாம் ஸத்வாரகமாகவும், இவர்தாம் கீழ் அருளிச்செய்கையாலும்; "இவ்வண்டத்திலே பத்தாத்ம ஸமஷ்டி பூதனான ப்ரஹ்மாவுக்கும், இதுக்குக் கீழ் ஸ்வஸங்கல்பத்தாலே எம்பெருமான்றானே ஸ்ருஷ்டித்தருளும். இதுக்குமேல் ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாய் நின்று ஸ்ருஷ்டித்தருளும்" என்று ஆச்சான்பிள்ளை யருளிச்செய்கையாலும்; வ்யஷ்டி ஸ்ருஷ்டியெல்லாம் ஸத்வாரகமாகவே கொள்ளவேண்டுமாகையாலே, ப்ரதயும்ந க்ருத்யமாகச் சொன்ன சுத்தவர்க ஸ்ருஷ்டி அத்வாரகம், அநிருத்த க்ருத்யமாகச் சொன்ன மிச்ரவர்க ஸ்ருஷ்டி ஸத்வாரகம் என்னவொண்ணாது. ஆகையால் சுத்தவர்க ஸ்ருஷ்டியும், மிச்ரவர்க ஸ்ருஷ்டியும் ஸத்வாரக ஸ்ருஷ்டிதன்னிலே, சேதநருடைய கர்ம விசேஷ ப்ரயுக்தமான ஸங்கல்ப விசேஷத்தாலேயாகக் கடவது.

**விளக்கம் -** (அண்டத்தையும் அண்ட காரணங்களையும் தானே யுண்டாக்கும். அண்டத்துக்கு உட்பட்ட வஸ்துக்களை சேதநர்க்கு அந்தர்யாமியாய் நின்று உண்டாக்கும்) - தொகுத்ததாக உள்ள ஸூக்ஷ்ம ஸ்ருஷ்டி அனைத்தையும் அவன் தன் மூலமாகவும், தனித்தனியாக உள்ள ஸ்ருஷ்டிகள் அனைத்தையும் மற்றவர்கள் மூலமாகவும் நிகழ்த்துவதாக இவர் முன்பே உள்ள சூர்ணையில் அருளிச்செய்ததாலும்; "இவ்வண்டத்திலே பத்தாத்ம ஸமஷ்டி பூதனான ப்ரஹ்மாவுக்கும், இதுக்குக் கீழ் ஸ்வஸங்கல்பத்தாலே எம்பெருமான்றானே ஸ்ருஷ்டித்தருளும். இதுக்குமேல் ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாய் நின்று ஸ்ருஷ்டித்தருளும் - இந்த அண்டத்தில் உள்ள பந்தப்பட்ட ஜீவாத்மாக்களின் தொகுத்த ஸ்ருஷ்டியாக உள்ள நான்முகனுக்குக் கீழே உள்ள அனைத்தையும் ஸர்வேச்வரன் தனது ஸங்கல்பத்தால் தானே ஸ்ருஷ்டிக்கிறான். நான்முகனுக்கு மேலே உள்ள அனைத்தையும் அவனுடைய அந்தர்யாமியாக நின்று படைக்கிறான்" என்று ஆச்சான்பிள்ளை அருளிச்செய்ததாலும்; தொகுத்த ஸ்ருஷ்டி மற்றும் தனியாக உள்ள ஸ்ருஷ்டிகளை மற்றவர்கள் மூலமாகவே செய்வதற்காகக் கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக்கொண்டு, "சுத்த வர்க்க படைப்பை ப்ரத்யும்நன் செய்கிறான், இது தன் மூலம் செய்யும் படைப்பாகும். பாப புண்ணியம் கலந்த படைப்பை அநிருத்தன் செய்கிறான், இது மற்றவர்கள் மூலம் செய்யும் படைப்பாகும்", என்று கூற முடியாது. எனவே சுத்த வர்க்க ஸ்ருஷ்டி மற்றும் பாபபுண்ணியம் கலந்த வர்க்கத்தின் ஸ்ருஷ்டி ஆகிய இரண்டுமே ஆத்மாக்களின் கர்ம அடிப்படையில், ஸர்வேச்வரனுடைய ஸங்கல்பத்தால், மற்றவர்களால் செய்யப்படுவதை அறியவேண்டும்.

**வ்யாக்யானம் -** இந்த சுத்தவர்க ஸ்ருஷ்டியும், மிச்ரவர்க ஸ்ருஷ்டியும் எம்பெருமான்தானே அருளிச்செய்யக் கேட்டவநந்தரம், "பகவந் தேவதேவேச ஸர்வஜ்ஞ! பரமேச்வர! கிமேஷ பவிதா ஸ்ருஷ்டோ மிச்ரஸர்கோ ஜகத்பதே! சுத்த ஸ்ருஷ்டிம் விஹாயைஷாம் நிர்தய: புருஷோத்தம!" என்று ஸேநை முதலியார் கேட்க, "விஹாய சுத்த ஸரீகஞ்ச மிச்ரஸர்கஸ்ய காரணம் ச்ருணுஷ்வ கணநாத த்வம் தயாலுர் நிர்தயோ ந ச ஸர்வஜ்ஞோஹம் நஸந்தேஹஸ் ததாபி ச ஸ்ருஜாம்யஹம், அநாத்ய வித்யா ஸம்முஷ்டசேமுஷீகாந் நராநிஹ, வீக்ஷ்யாஜ்ஞாந ப்ரஸங்கம் து நிஷித்த கரணம் ததா, விஹிதாகரணஞ்சாபி வீக்ஷ்யைஷாமபராதகாந், மிச்ர ஸர்கம் கரோம்யேவ ப்ரஹ்மணா பரமேஷ்டிநா; ஏவம் ஸுக்ருதலேசேந சுத்தஸர்கம் கரோமி ச; மநு ப்ரமுக ஸர்கோ யச்சுத்த ஸர்கோ மயேரித: சுத்த ஸத்வ மயாஸ் ஸர்வே மத் பக்தி நிரதாஸ் ஸதா, மமார்ச்சந பராஸ் ஸர்வே மத்த்யாந பரிப்ரும்ஹிதா:, நமஸ்யந்தோ மஹாபாக மஹாத்மாநோ ஜிதேந்த்ரியா:; பக்த்யா பரமயா சைவ பரபத்த்யாவா மஹாமுநே, ப்ராப்யம் வைகுண்டமாஸாத்ய ந நிவர்த்தந்தி தேவ்யயா:, ஏவம் ஸர்வேஷு குர்வத்ஸு மாநவேஷு முமுக்ஷுஷு ஸ்ருஷ்டிக்ஷயோ மஹாநாஸீத்நாரகீ பூஸ் த்ருணாவ்ருதா, இதி ஜ்ஞாத்வா மிச்ர ஸர்க க்ரியதே லீலயா மயா" என்று பகவான்தானே அருளிச்செய்கையாலே.

**விளக்கம் -** இப்படியாக சுத்த வர்க்க ஸ்ருஷ்டி மற்றும் பாப புண்ணியம் கலந்த ஸ்ருஷ்டி ஆகிய இரண்டையும் ஸர்வேச்வரன் தானே செய்வதாகக் கூறியதைக் கேட்ட பின்னர் ஸேனைமுதலியார், "பகவந் தேவதேவேச ஸர்வஜ்ஞ! பரமேச்வர! கிமேஷ பவிதா ஸ்ருஷ்டோ மிச்ரஸர்கோ ஜகத்பதே! சுத்த ஸ்ருஷ்டிம் விஹாயைஷாம் நிர்தய: புருஷோத்தம! - அனைத்து தேவர்களுக்கும் ஈசனே! பகவானே! அனைத்தும் அறிந்தவனே! பரமேச்வரனே! ஜகத்தின் பதியே! பாப புண்ணியம் இரண்டையும் கலந்த படைப்பு ஏன் செய்யப்பட்டது? தயை இன்றி இவற்றைச் செய்யாமல், சுத்த ஸ்ருஷ்டியாக ஏன் செய்யப்படவில்லை?", என்றார். இதற்கு பகவான், "விஹாய சுத்த ஸரீகஞ்ச மிச்ரஸர்கஸ்ய காரணம் ச்ருணுஷ்வ கணநாத த்வம் தயாலுர் நிர்தயோ ந ச ஸர்வஜ்ஞோஹம் நஸந்தேஹஸ் ததாபி ச ஸ்ருஜாம்யஹம், அநாத்ய வித்யா ஸம்முஷ்டசேமுஷீகாந் நராநிஹ, வீக்ஷ்யாஜ்ஞாந ப்ரஸங்கம் து நிஷித்த கரணம் ததா, விஹிதாகரணஞ்சாபி வீக்ஷ்யைஷாமபராதகாந், மிச்ர ஸர்கம் கரோம்யேவ ப்ரஹ்மணா பரமேஷ்டிநா; ஏவம் ஸுக்ருதலேசேந சுத்தஸர்கம் கரோமி ச; மநு ப்ரமுக ஸர்கோ யச்சுத்த ஸர்கோ மயேரித: சுத்த ஸத்வ மயாஸ் ஸர்வே மத் பக்தி நிரதாஸ் ஸதா, மமார்ச்சந பராஸ்

ஸர்வே மத்த்யாந பரிப்ரும்ஹிதா:, நமஸ்யந்தோ மஹாபாக மஹாத்மாநோ ஜிதேந்த்ரியா:; பக்த்யா பரமயா சைவ பரபத்த்யாவா மஹாமுநே, ப்ராப்யம் வைகுண்டமாஸாத்ய ந நிவர்த்தந்தி தேவ்யயா:, ஏவம் ஸர்வேஷு குர்வத்ஸூ மாநவேஷு முமுக்ஷுஷு ஸ்ருஷ்டிக்ஷயோ மஹாநாஸீத்நாரகீ பூஸ் த்ருணாவ்ருதா, இதி ஜ்ஞாத்வா மிச்ர ஸர்க க்ரியதே லீலயா மயா - நித்யஸூரிகள் முதலான கூட்டத்தின் நாதனே! சுத்த வர்க்கத்தின் ஸ்ருஷ்டி நீங்கலாக உள்ள பாப புண்ணியங்கள் கலந்த வர்க்கத்தின் ஸ்ருஷ்டி குறித்து நீ கேட்பாயாக. நான் தயை நிறைந்தவனே ஆவேன், கருணை இல்லாதவன் அல்லன். அனைத்தும் அறிந்தவன் ஆவேன். ஆயினும், எல்லையற்ற காலமாக அறியாமையால் அபகரிக்கப்பட்ட பொய்யான அறிவு கொண்ட இவர்களை நான் இங்கு படைக்கிறேன். இவர்களுக்கு இவ்விதம் அறியாமை ஏற்பட்டபடி உள்ளது; மேலும் சாஸ்த்ரங்களில் தடுக்கப்பட்டதைச் செய்தல் மற்றும் விதிக்கப்பட்டதைச் செய்யாமல் இருத்தல் என்பதாக உள்ளனர். இதனைப் பார்த்து நான், நான்முகன் மூலமாக பாப புண்ணியங்கள் கலந்த வர்க்க ஸ்ருஷ்டியைச் செய்கிறேன். புண்ணியங்களின் பயனாக உள்ள சுத்த வர்க்கத்தைப் படைக்கிறேன். மனு போன்றவர்களுடைய ஸ்ருஷ்டியானது, சுத்த வர்க்க ஸ்ருஷ்டி என்றாகிறது. அனைத்து மனிதர்களும் சுத்த ஸத்வ குணம் கொண்டவராகவும், எப்போதும் என்னிடம் பக்தி கொண்டவராகவும், என்னை ஆராதிப்பவராகவும், என்னையே த்யானித்தபடி உள்ளவராகவும், இந்த்ரியங்களை அடக்குபவராகவும் உள்ளபோது, பக்தி மூலமாகவோ ப்ரபத்தி மூலமாகவோ அல்லது பரபக்தி மூலமாகவோ அடையக் கூடியதான ஸ்ரீவைகுண்டத்தை அடைந்து, இந்த ஸம்ஸாரத்திற்கு மீண்டும் திரும்ப மாட்டனர். இவ்விதம் அனைவருக்கும் மோக்ஷத்தில் ஆசை ஏற்படும்படி, அவர்களுடைய சம்மதம் இன்றி நான் செய்தால், இந்த உலகில் ஸ்ருஷ்டியின் விகிதம் மாறுபடும். நரகமானது, புல்லுக்குச் சமமாகிவிடும். இதனால்தான் நான் அவரவர்களுடைய வினைகளுக்கு ஏற்ப, எனது விளையாட்டின் காரணமாக, பாப புண்ணியம் கலந்த ஸ்ருஷ்டியைச் செய்கிறேன்", என்று பகவான் அருளிச்செய்தான்.

189. விபவம், அநந்தமாய் கௌண முக்க்ய பேதத்தாலே பேதித்திருக்கும்.

**அவதாரிகை -** ஆக, வ்யூஹத்தின்படியை உபபாதித்தாராய் நின்றார் கீழ், அநந்தரம் விபவத்தின்படியை விஸ்தரேண உபபாதிக்கிறார் மேல் (விபவம் அனந்தமாய் என்று தொடங்கி).

**விளக்கம் -** இதுவரை வ்யூஹத்தின் விதங்களை விளக்கினார். அடுத்து விபவங்களின் விதங்களை விரிவாக உரைக்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, "விபவோபி ததா அனந்தோ த்விதைவ பரிகீர்த்யதே, கௌண முக்க்யவிபாகேந சாஸ்த்ரேஷு ச ஹரேர் முநே" என்றும், "ப்ராதுர்ப்பாவோ த்விதா ப்ரோக்தோ கௌண முக்க்ய விபேதத:" என்றும் சொலலுகிறபடியே, விபவமானது, பரிகணித்துத் தலைக்கட்டப் போகாதபடி அனந்தமாய், கௌண முக்க்யமாகிற பேதத்தாலே இரண்டு வகையாகப் பிரிந்திருக்குமென்கை விபவமாவது, இதர ஸஜாதீயமாய்க் கொண்டு ஆவிர்ப்பவிக்கை. இதில் கௌணமென்றது அவரமென்றபடி; முக்க்யமென்றது ச்ரேஷ்டமென்றபடி. கௌணமாவது, ஆவேசாவதாரம்; முக்க்யமாவது, ஸாக்ஷாதவதாரம். ஆவேசந்தான் ஸ்வரூபாவேசமென்றும், சக்த்யாவேசமென்றும் த்விவிதமாயிருக்கும். அதில் ஸ்வரூபாவேசமாவது, ஸ்வம்மான ரூபத்தாலே ஆவேசிக்கை. அதாவது பரசுராமாதிகளான சேதநருடைய சரீரங்களிலே தன்னுடைய அஸாதாரண விக்ரஹத்தோடே ஆவேசித்து நிற்கை. சக்த்யாவேசமாவது, காரிய காலத்திலே விதிசிவாதிகளான சேதநர் பக்கலிலே சக்தி மாத்ரத்தாலே ஸ்புரித்து நிற்கை.

**விளக்கம் -** விஷ்வக்ஸேந ஸம்ஹிதையில் – விபவோபி ததா அனந்தோ த்விதைவ பரிகீர்த்யதே, கௌண முக்க்யவிபாகேந சாஸ்த்ரேஷு ச ஹரேர் முநே – முனிவரே! எண்ணற்ற விபவங்களானவை, இரண்டுவிதமாக உள்ளன; ஸ்ரீஹரியின் விபவங்கள் இவ்விதம் மறைமுகமான முக்கியம் கொண்டவை மற்றும் நேரடியான முக்கியமானவை என்று சாஸ்த்ரங்களில் கூறப்பட்டன - என்றும், ப்ராதுர்ப்பாவோ த்விதா ப்ரோக்தோ கௌண முக்க்ய விபேதத: - நேரடியான முக்கியமானவை மற்றும் மறைமுகமான முக்கியம் கொண்டவை என்னும் இரண்டு விதமாக உள்ளன - என்றும் கூறுவதற்கு ஏற்ப, விபவம் என்பது, எண்ணி முடிக்க இயலாதபடி எண்ணற்றதாக, நேரடியான முக்கியமானவை மற்றும் மறைமுகமான முக்கியம் கொண்டவை என்பதாக இரண்டு விதமாக உள்ளது. விபவம் என்பது இந்த உலகில் உள்ள உயிரினங்களுடைய குலங்களில் தோன்றுதல் ஆகும். இதில், மறைமுகமான முக்கியம் கொண்டவை என்பது தாழ்ந்தது, நேரடியான முக்கியம் என்பது உயர்ந்தது ஆகும். மறைமுகமான முக்கியம் கொண்டவை என்பது ஆவேசம், நேரடியான முக்கியமானது நேரடியாக உள்ளது ஆகும். ஆவேசம் என்பது ஸ்வரூபம் மற்றும் சக்தி என்ற இரண்டு விதமாக உள்ளதாகும். ஸ்வரூப ஆவேசம் என்பது, தனது ரூபத்துடன் சேர்ந்து ஆவேசிப்பது ஆகும். சக்தி ஆவேசம் என்பது, அந்தந்த காரியம்

நடப்பதற்காக நான்முகன், சிவன் போன்ற சேதநர்களிடம் தனது சக்தியை மட்டும் செலுத்தி வெளிப்படுத்தல் ஆகும்.

190. மநுஷ்யத்வம், திர்யக்த்வம், ஸ்தாவரத்வம் போலே, கௌணத்வமும் இச்சையாலே வந்தது; ஸ்வரூபேண அன்று.

**அவதாரிகை** – இனி, முக்க்ய விபவத்தோடு கௌண விபவத்துக்குண்டான ஸாம்ய வைஷம்யங்களை யருளிச்செய்கிறார் (மநுஷ்யத்வம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - அடுத்து, முக்கியமான விபவம் மற்றும் முக்கியம் அல்லாத விபவம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள ஒப்புமை மற்றும் ஏற்றத்தாழ்வுகளை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “மதிச்சயா ஹி கௌணத்வம் மாநுஷ்யமிவசேச்சயா, ஸூகரத்வஞ்ச மத்ஸ்யத்வம் நாரஸிம்ஹத்வமேவச, யதாவா தண்டகாரண்யே குப்ஜாம்ரத்வம் மமேச்சயா, யதா வாஜிமுகத்வஞ்ச மம ஸங்கல்பதோ பவேத், ஸேநாபதே! மமேச்சாதோ கௌணத்வம் ந ச கர்மணா” என்கிறபடியே, ராமக்ருஷ்ணத்வாதியான மநுஷ்யத்வம், மத்ஸ்ய கூர்மத்வாதியான திர்யக்த்வம், குப்ஜாம்ரத்வமாகிற ஸ்தாவரத்வம் ஆகிறவிவை இச்சையாலேயானாப்போலே, ஆவேச ரூபமான கௌணத்வமும் இச்சையாலே வந்ததென்னுமாகாரமொக்கும். அப்ராக்ருதமாயிருந்துள்ள ஸ்வாஸாதாரண விக்ரஹத்தோடே வந்ததன்றென்கை. உபாத்த வசனங்கள் இச்சையாலே வந்ததென்கிற மாத்ரத்தைச் சொல்லிற்றேயாகிலும், கௌணத்வமாவது மநுஷ்யத்வாதிகள்போலே, அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்தானத்தை இதர ஸஜாதீயமாக்கிக் கொண்டு அவதரித்ததல்லாமையாலே ஸ்வரூபேண வந்ததன்றென்னுமிடமும் ஸித்தமிறே.

**விளக்கம்** - அதாவது, ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதையில் – மத் இச்சயா ஹி கௌணத்வம் மாநுஷ்யம் இவ ச இச்சயா, ஸூகரத்வம் ச மத்ஸ்யத்வம் நாரஸிம்ஹத்வம் ஏவ ச, யதாவா தண்டகாரண்யே குப்ஜாம்ரத்வம் மம இச்சயா, யதா வாஜிமுகத்வம் ச மம ஸங்கல்பதோ பவேத், ஸேநாபதே! மம இச்சாதோ கௌணத்வம் ந ச கர்மணா - எனது இச்சையால் முக்கியம் அல்லாத விபவங்களும் ஏற்படுகின்றன. இராமன் என்பது போன்ற மனித வடிவில் உள்ள அவதாரங்கள் எனது இச்சையால் ஏற்பட்டன; இதே போன்று வராகம்,

மீன், நரசிம்ஹம், தண்டவனத்தில் குட்டையான மாமரம் போன்றவையும் எனது இச்சையால் ஏற்பட்டன; இது போன்றே குதிரை முகமாக எனது ஸங்கக்பத்தால் அவதரிக்கிறேன். ஸேநை நாதரே! ஆகவே முக்கியம் அல்லாத விபவங்களும் எனது விருப்பத்தால் அல்லவோ ஏற்பட்டன? கர்மங்கள் காரணமாக அல்ல – என்பதற்கு ஏற்ப, இராமன் மற்றும் க்ருஷ்ணன் என்பதான மனித அவதாரங்கள், மீன் மற்றும் பன்றி என்பது போன்ற விலங்கு வடிவங்கள், குட்டையான மாமரம் போன்ற தாவர வடிவங்கள் போன்ற பலவும் அவனுடைய விருப்பத்தால் ஏற்பட்டன; இவை போன்று ஆவேச ரூபமாக உள்ள முக்கியம் அல்லாத அவதாரம் அவனது இச்சையால் ஏற்பட்டன என்பது பொருந்தும். ஆனால் இவை அனைத்தும் இந்த உலகில் காண இயலாதபடியும், அவனுக்கே உரிய திருமேனி கொண்டபடியும் வந்தவை அல்ல. இதுவரை கூறுப்பட்ட கருத்துக்கள் பலவும், முக்கியம் அல்லாத விபவங்கள் அனைத்தும், அவனுடைய இச்சையால் ஏற்பட்டன என்பதை மட்டுமே கூறின; ஆனால், இவை அனைத்தும், மனித அவதாரம் என்பவை போன்று, இந்த உலகில் காணமுடியாத திருமேனி, மற்ற பிறவிகளுக்கு ஒற்றுமையாகக் காணலாம்படியாக வந்தவை அல்ல; ஆகவே இவை அனைத்தும் அவனுடைய ஸ்வரூபத்துடன் அவதரித்தவை அல்ல என்பது தேறுகிறது.

191. அதில், அப்ராக்ருத விக்ரஹங்களுமாய், அஜஹத் ஸ்வபாவ விபவங்களுமாய், தீபாதுத்பந்ந ப்ரதீபம் போலேயிருக்கக் கடவதான முக்ய ப்ராதுர்ப்பாவங்களெல்லாம் முமுக்ஷுக்களுக்கு உபாஸ்யங்களாயிருக்கும்.

**அவதாரிகை** – இன்னமும், உபாஸ்யத்வ அநுபாஸ்யத்வ கதநமுகத்தாலும், உபயத்துக்குமுண்டான விசேஷத்தை தர்சிப்பிப்பதாகத் திருவுள்ளம் பற்றி, ப்ரதமம் முக்ய விபவத்தினுடைய உபாஸ்யத்வத்தை ஸஹேதுகமாக அருளிச்செய்கிறார் (அதில்) என்று தொடங்கி.

**விளக்கம் -** மேலும், உபாஸிக்கத்தக்கவை மற்றும் உபாஸிக்கத்தகாதவை என்பதைக் கூறுவதன் மூலமும், முக்கியமான விபவம் மற்றும் முக்கியம் அல்லாத விபவம் என்ற இரண்டிற்கும் உள்ள சிறப்புகளை உணர்த்துவதாகத் திருவுள்ளம் கொண்டு, முதலில் முக்கியமாக உள்ள விபவங்களுடைய உபாஸிக்கத்தக்க தன்மையை காரணத்துடன் கூறுகிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, உபயவிதமான விபவத்திலும் வைத்துக்கொண்டு, "ப்ராதுர்ப்பா வாஸ்து முக்க்யாயே மதம்சத்வாத் விசேஷத:, அஜஹத் ஸ்வபாவ விபவா திவ்யா: ப்ராக்ருத விக்ரஹா, தீபாத் தீபா இவோத்பந்நா ஜகதோ ரக்ஷணாய தே, அர்ச்சயா ஏவஹி ஸேநேச ஸம்ஸ்ருத்யுத்தரணாயதே, முக்க்யா உபாஸ்யாஸ் ஸேநேச, அநர்ச்ச்யாந் இதராந் விது:" என்கிறபடியே, "ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்திங்குப் பிறந்த"தாகையாலே அப்ராக்ருத விக்ரஹங்களுமாய், "அஜோபி ஸந் அவ்யயாத்மா பூதாநாமீச்வரோபி ஸந்" என்கையாலே விடாதேயிருந்துள்ள அஜத்வ அவயயத்வ ஸர்வேச்வரத்வாதியான ஸ்வபாவ விபவங்களையுடையவையுமாய், அத ஏவ தீபத்தில் நின்றும் உத்பந்நமான ப்ரதீபம், ஸ்வகாரணமான தீபத்தினுடைய ஸ்வபாவத்தையுடையதா யிருக்குமாப்போலே, ஸ்வகாரண துல்ய ஸ்வபாவமாயிருக்கிற முக்க்ய ப்ராதுர்ப்பாவங்களெல்லாம் முமுக்ஷுக்களுக்கு உபாஸ்யங்களாயிருக்குமென்கை.

**விளக்கம் -** அதாவது, முக்கியமான விபவம் மற்றும் முக்கியம் அல்லாத விபவம் என்ற இரண்டையும் நோக்கும்போது, ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதை - ப்ராதுர்ப்பா வாஸ்து முக்க்யாயே மதம்சத்வாத் விசேஷத:, அஜஹத் ஸ்வபாவ விபவா திவ்யா: ப்ராக்ருத விக்ரஹா, தீபாத் தீபா இவோத்பந்நா ஜகதோ ரக்ஷணாய தே, அர்ச்சயா ஏவஹி ஸேநேச ஸம்ஸ்ருத்யுத்தரணாயதே, முக்க்யா உபாஸ்யாஸ் ஸேநேச, அநர்ச்ச்யாந் இதராந் விது: - எந்தெந்த அவதாரம் சிறப்பான எனது அம்சத்தைப் பெற்றுள்ளனவோ அவை முக்கியமானவையே ஆகும். விட இயலாத இயல்புகள், வைபவங்கள், திவ்யமான சிறப்புகள், இந்த உலகில் காண இயலாத திருமேனி போன்றவற்றுடன் கூடியபடி, தூபத்திலிருந்து எழுகின்ற தீபம் போன்று ப்ரகாசிக்கும் அத்தகைய அவதாரங்கள், இந்த ஜகத்தின் காத்தலுக்காக ஆகின்றன. ஸேநைநாதனே! ஸம்ஸாரம் என்ற ஸமுத்ரத்தைத் தாண்டுவதற்காக, அவை ஆராதிக்கத்தக்கவை ஆகும். முக்கியமான அவதாரங்கள் ஆராதிக்கத்தக்கவை, மற்றவை ஆராதிக்கத்தக்கவை அல்ல - என்பதற்கு ஏற்ப, திருவாய்மொழி (3-5-3) - ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்திங்குப் பிறந்த - என்பதாக இங்கு அவதரிப்பதால், கீதை (4-6) – அஜோபி ஸந் அவ்யயாத்மா பூதாநாமீச்வரோபி ஸந் - பிறப்பற்றவனாகவும், அழிவற்றவனாகவும், அனைத்திற்கும் ஈச்வரனாக இருந்தாலும், நான் இங்கு அவதரிக்கிறேன் - என்பதால், கைவிட இயலாத பிறப்பற்ற தன்மை, அழிவற்ற தன்மை, ஸர்வேச்வரனாக உள்ள இயல்பு போன்றவற்றைக் கொண்டவையாக, தீபத்திலிருந்து புறப்பட்ட ஒளியானது தனக்குக் காரணமான தீப ரூபத்தின் தன்மைகளை விடாமல் உள்ளது போன்று, தனக்குக் காரணமான பரம்பொருளுடைய தன்மையை

ஒட்டியபடியே உள்ள முக்கிய விபவங்கள் அனைத்தும், மோக்ஷத்தில் விருப்பம் கொண்டவர்களால் உபாஸிக்கப்பட வேண்டியவை ஆகும்.

192. விதி சிவ பாவக வயாஸ ஜாமதக்ந்யார்ஜுந வித்தேசாதிகளாகிற கௌண ப்ராதுர்ப்பாவங்களெல்லாம் அஹங்கார யுக்த ஜீவர்களை யதிஷ்டித்து நிற்கையாலே, முமுக்ஷுக்களுக்கு அநுபாஸ்யங்கள்.

**அவதாரிகை** – அநந்தரம், கௌண விபவத்தினுடைய அநுபாஸ்யத்வத்தை ஸஹேதுகமாக வருளிச்செய்கிறார் (விதிசிவ) இத்யாதியாலே.

**விளக்கம்** - அடுத்து, முக்கியம் அல்லாத விபவங்களுடைய, உபாஸிக்கத்தகுந்ததாக இல்லாத தன்மையை, அவற்றின் காரணத்துடன் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, “அநர்ச்ச்யாநபி வக்ஷ்யாமி ப்ராதுர்ப்பாவாந் யதாக்ரமம், சதுர்முகஸ் து பகவாந் ஸ்ருஷ்டி கார்யே நியோஜித:; சங்கராக்யோ மஹாருத்ரஸ் ஸம்ஹாரே விநியோஜித:, மோஹநாக்கயஸ் ததா புத்தோ வ்யாஸச்சைவ மஹாந்ருஷி:, வேதாநாம் வ்யஸநே தத்ர தேவேந விநியோஜித:, அர்ஜுநோ தந்விநாம் ச்ரேஷ்ட்டோ ஜாமதக்ந்யோ மஹாந்ருஷி:, வஸூநாம் பாவகச்சாபி வித்தேசச்ச ததைவ ச, ஏவமாத்யாஸ் து ஸேநேச! ப்ராதுர்ப்பாவைரதிஷ்டிநா:, ஜீவாத்மாநஸ் ஸர்வ ஏதே நோபாஸ்திர் வைஷ்ணவீ ஹி ஸா, ஆவிஷ்டமாத்ராஸ் தே ஸர்வே கார்யார்த்தமமிதத்யுதே, அநர்ச்ச்யாஸ் ஸர்வ ஏவைதே விருத்தவாந் மஹாமதே, அஹங்க்ருதியுதாச் சேமே ஜீவமிச்ரா ஹ்யதிஷ்டிதா:” என்கிறபடியே, ஸ்ருஷ்டிகர்த்தாவான ப்ரஹ்மாவும், ஸம்ஹார கர்த்தாக்களான சிவ பாவகர்களும், வேதங்களை வ்யஸித்த வ்யாஸனும், துஷ்ட க்ஷத்ரிய நிரஸநம் பண்ணின ஜமதக்நி புத்ரனான பரசுராமனும், “அகார்ய சிந்தா ஸமகாலமேவ ப்ராதுர்ப்பவம் சாபதர: புரஸ்தாத்” என்கிறபடியே, சாபதரனாய்க் கொண்டு ஜகத்தை ரக்ஷித்துக் கொண்டு போந்த கார்த்தவீரியார்ஜுநனும், ஔதார்ய ப்ரதாநனான வித்தேசனும், ஆதி சப்தத்தாலே க்ரோட க்ருதரான ககுத்ஸ்த முசுகுந்த ப்ரப்ருதிகளுமாகிற கௌண ப்ராதுர்ப்பாவங்களெல்லாம், ஸ்வாதந்த்ர்ய ரூபமான அஹங்கார யுக்தரான ஜீவர்களை கார்யார்த்தமாக ஆவேச முகேந அதிஷ்ட்டித்து நிற்கையாலே, புபுக்ஷுக்களாயிருப்பார்க்கொழிய முமுக்ஷுக்களுக்கு உபாஸ்யங்களன்றென்கை.

(வ்யாஸ ஜாமதக்ந்யர்ஜுந) என்கிறவிடத்தில் அர்ஜுநனென்றது பாண்டு புத்ரனான அர்ஜுநனையாகவுமாம், அவனையும் ஆவேசாவதாரமாக இதிஹாஸாதிகளிலே சொல்லுகையாலே.

**விளக்கம்** - ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதையில் – அநர்ச்ச்யாநபி வக்ஷ்யாமி ப்ராதுர்ப்பாவாந் யதாக்ரமம், சதுர்முகஸ் து பகவாந் ஸ்ருஷ்டி கார்யே நியோஜித:; சங்கராக்க்யோ மஹாருத்ரஸ் ஸம்ஹாரே விநியோஜித:, மோஹநாக்கயஸ் ததா புத்தோ வ்யாஸச்சைவ மஹாந்ருஷி:, வேதாநாம் வ்யஸநே தத்ர தேவேந விநியோஜித:, அர்ஜுநோ தந்விநாம் ச்ரேஷ்ட்டோ ஜாமதக்ந்யோ மஹாந்ருஷி:, வஸூநாம் பாவகச்சாபி வித்தேசச்ச ததைவ ச, ஏவமாத்யாஸ் து ஸேநேச! ப்ராதுர்ப்பாவைரதிஷ்டிநா:, ஜீவாத்மாநஸ் ஸர்வ ஏதே நோபாஸ்திர் வைஷ்ணவீ ஹி ஸா, ஆவிஷ்டமாத்ராஸ் தே ஸர்வே கார்யார்த்தமமிதத்யுதே, அநர்ச்ச்யாஸ் ஸர்வ ஏவைதே விருத்தவாந் மஹாமதே, அஹங்க்ருதியுதாச் சேமே ஜீவமிச்ரா ஹ்யதிஷ்டிதா: – அர்ச்சனை செய்யத்தகாதபடி உள்ள அவதாரங்கள் குறித்து நான் (ஸர்வேச்வரன்) வரிசையாகக் கூறுகிறேன். ஸ்ருஷ்டிப்பதற்காக நியமிக்கப்பட்ட நான்முகன், அழிக்கும் பணியில் நியமிக்கப்பட்ட ருத்ரனாகிய சங்கரன், மயக்கும் தொழிலில் நியமிக்கப்பட்ட புத்தர், வேதங்களைச் சரியாகப் பிரிப்பதற்காக நியமிக்கப்பட்ட வ்யாஸர், வில் தொழிலில் சிறந்த கார்த்தவீர்யார்ஜுனன், ஜமதக்னியின் புத்திரனாகிய பரசுராமன், வஸுக்களில் அக்னி மற்றும் குபேரன் ஆகிய அனைவரும் ஆவேச அவதாரங்களால் அதிஷ்டானம் செய்யப்பட்டவர்கள் ஆவர். ஸேனை நாதரே! இவர்கள் அனைவருமே விஷ்ணுவாகிய என்னால் வ்யாபிக்கப்பட்ட ஜீவாத்மாக்கள் என்பதால், இவர்களை அர்ச்சிக்கக்கூடாது. சிறந்த புத்தி கொண்டவரே! இவர்கள் ஒரு குறிப்பிட்ட செயலுக்காக என்னால் ஆவேசிக்கப்பட்டவர்கள் ஆவர். இவர்கள் அஹங்காரம் கொண்ட ஜீவர்களாக உள்ளதால், ஆராதிக்கத்தக்கவர்கள் அல்லர் – என்று கூறுவதற்கு ஏற்ப, நான்முகன் போன்றவர்களும், வேதங்களைப் பிரித்த வ்யாசரும், துஷ்ட அரசர்களை அழித்த பரசுராமனும், "அகார்ய சிந்தா ஸமகாலமேவ ப்ராதுர்ப்பவம் சாபதர: புரஸ்தாத் - தகாத செயலைச் செய்யப் போகிறோம் என்று என்ணிய உடனேயே அவர்கள் முன்பாக வில்லை ஏந்தி அடக்குவதற்காகத் தோன்றுபவன் – என்பதற்கு ஏற்ப உள்ள இந்த ஜகத்தைக் காத்தபடி உள்ள கார்த்தவீர்யார்ஜுனன், தாராள குணம் கொண்ட குபேரனும், சூர்ணையில் உள்ள "ஆதி - தொடக்கமான" என்பதால் கூறப்பட்ட காகுத்தன் மற்றும் முசுகுந்தன் போன்ற முக்கியம் அல்லாத பல அவதாரங்கள் ஆவர்; இவ்விதமாக, தாங்கள் சுதந்திரமானவர்கள்

என்ற சிந்தனை வடிவமாக உள்ள அஹங்காரத்தைக் கொண்ட ஜீவாத்மாக்களை, ஒரு செயலுக்காக ஆவேச முகமாக ஸர்வேச்வரன் வ்யாபித்து நிற்கிறான். ஆகவே இன்பத்தை நாடுபவர்கள் அல்லாமல் மோக்ஷத்தை விரும்புபவர்களால், இவர்கள் உபாசிக்கத் தக்கவர்கள் அல்லர். (வ்யாஸ ஜாமதக்நி அர்ஜுந) – இந்த இடத்தில் கூறப்பட்ட அர்ஜுனன், “பாண்டு புத்திரனாகிய அர்ஜுனன்” என்று கூறுவதாகவும் கொள்ளலாம்; காரணம், இதிஹாஸங்களில் அவனும் ஆவேச அவதாரமாகக் கூறப்படுவதால் ஆகும்.

**வ்யாக்யானம் -** இந்த கௌண ப்ராதுர்ப்பாவ அநுபாஸ்யத்வந்தான், “ப்ரஹ்ம ருத்ரரார்ஜுந வ்யாஸ ஸஹஸ்ரகர பார்க்கவா:, ககுத்ஸ்தாத்ரேய கபில புத்தாத்யா யே ஸஹஸ்ரச:, சக்த்யாவேசாவதாராஸ் து விஷ்ணோஸ் தத்கால விக்ரஹா:, அநுபாஸ்யா முமுக்ஷுணாம் யதேந்த்ராக்ந்யாதி தேவதா:” என்று ஸம்ஹிதாந்தரத்திலும் சொல்லப்பட்டதிறே. உபாத்த வசனங்களில் புத்தமுநியையும் ஆவேசாவதாரங்களில் ஒன்றாகச் சொன்னவிது, “மாவுருவில் கள்ளவேடம்” என்று ஸ்வேந ரூபேண அவதரித்ததாகச் சொன்ன நம் ஆசார்யர்கள் வசனத்தோடு விருத்தமன்றோவென்னில், கல்ப பேதத்தாலே அப்படியும் செய்யக் கூடுமாகையாலே விருத்தமன்று. ஜாமதக்ந்யன் ஸ்வரூபாவேசாவதாரமாயிருக்க, சக்த்யாவேசங்களோடே ஸஹபடித்தது, ஸ்வரூபேண ஆவேசிக்கிறது சக்தி விசேஷத்தாலேயாகையாலே என்று நியமித்துக் கொள்வது.

**விளக்கம் -** இத்தகைய முக்கியம் அல்லாத அவதாரங்களை உபாஸனை செய்தல் கூடாது என்பதை, “ப்ரஹ்ம ருத்ர அர்ஜுந வ்யாஸ ஸஹஸ்ரகர பார்க்கவா:, ககுத்ஸ்த ஆத்ரேய கபில புத்தாத்யா யே ஸஹஸ்ரச:, சக்தி ஆவேச அவதாராஸ் து விஷ்ணோஸ் தத்கால விக்ரஹா:, அநுபாஸ்யா முமுக்ஷுணாம் யத் இந்த்ர அக்நி ஆதி தேவதா: - நான்முகன், ருத்ரன், அர்ஜுனன், வ்யாசர், சூரியன், பரசுராமன், காகுத்தன், ஆத்ரேயன், கபிலர், புத்தர் போன்ற பலரும்; சிறப்பான சக்தி கொண்ட பலரும்; அந்தந்த காலத்தில், அந்தந்த செயலுக்காக மட்டுமே விஷ்ணுவின் சக்தியால் ஆவேசிக்கப்பட்ட அவதாரங்கள் ஆவர். இவர்கள், இந்த்ரன் மற்றும் அக்னி முதலான தேவர்களைப் போன்று, மோக்ஷத்தில் விருப்பம் கொண்டவர்களால் உபாஸிக்கத்தக்கவர்கள் அல்லர்” என்று மற்ற ஸம்ஹிதைகளில் கூறப்பட்டது. ஆனால், கடந்த வாக்கியத்தில் புத்த முனியை ஆவேச அவதாரங்களில் ஒன்றாகக் கூறப்பட்டது என்பது, ஆசார்யஹ்ருதயத்தில் (2-90) – மாவுருவில் கள்ளவேடம் - என்று ஸர்வேச்வரனே இப்படியாக அவதரித்ததாக நம்முடைய ஆசார்யர்கள் உரைத்த கருத்துடன் முரண்படும் அல்லவோ என்று கேட்கலாம். கல்ப வேற்றுமை காரணமாக இவ்விதம் செய்யக்கூடும் என்பதால் முரண்பாடு இல்லை.

ஜமதக்னியின் புத்திரனாகிய பரசுராமன், ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபத்தால் ஆவேசம் பெற்ற அவதாரமாக உள்ளபோதிலும், சக்தி ஆவேசத்துடன் சேர்த்துக் கூறப்பட்டது ஏனென்றால், "ஸ்வரூபத்தால் ஆவேசித்தல் என்பது, சக்தியின் சிறப்பு காரணமாகவே ஆகும்", என்பதால் ஆகும்.

193. நித்யோதித சாந்தோதிதாதி பேதமும், ஜாக்ரத் ஸம்ஜ்ஞாதியான சாதுராத்ம்யமும், கேசவாதி மூர்த்யந்தரமும், ஷட்த்ரிம்சத் பேத பிந்நமான பத்மநாபாதி விபவமும், உபேந்த்ர த்ரிவிக்ரம ததிபக்த ஹயக்ரீவ நரநாராயண ஹரி க்ருஷ்ண மத்ஸ்ய கூர்ம வராஹாத்யவதார விசேஷங்களும, அவற்றினுடைய புஜாயுத வர்ண க்ருத்ய ஸ்தாநாதி பேதங்களும், துர்வதரங்களுமாய், குஹ்யதமங்களுமாயிருக்கையாலே சொல்லுகிறிலோம்.

**அவதாரிகை –** ஆக, விபவங்களினுடைய ஆநந்த்யத்தையும், அதில் கௌண முக்க்ய விபாகத்தையும், அந்த கௌணமுக்க்யங்களுக்குண்டான பரஸ்பர விசேஷத்தையும் அருளிச் செய்தார் கீழ். அநந்தரம், கீழ்ச் சொன்ன பரவ்யூஹங்களிலும் முக்க்ய விபவங்களிலுமுண்டான அவாந்தரபிதைகளும், அவற்றினுடைய புஜாயுத வர்ணாதி பேதங்களும் சொல்லவேண்டியிருக்கச் செய்தேயும் சொல்லாமைக்கு ஹேதுவையருளிச் செய்கிறார் (நித்யோதித) இத்யாதியாலே.

**விளக்கம் -** விபவங்களுடைய எண்ணற்ற தன்மைகள், அவற்றில் உள்ள முக்கியம் மற்றும் முக்கியம் அல்லாத வேறுபாடுகள், முக்கியம் மற்றும் முக்கியம் அல்லாதவை குறித்துள்ள சிறப்புகள் போன்ற பலவற்றையும் இதுவரை அருளிச்செய்தார். அடுத்து, இதுவரை கூறப்பட்ட பரம், வ்யூஹங்கள் மற்றும் முக்கியமான விபவங்கள் ஆகியவற்றில் உள்ள உட்பிரிவுகள், அவற்றில் காணப்படும் "திருக்கரங்கள், ஆயுதங்கள், நிறம்" போன்ற வேறுபாடுகள் முதலியவற்றைக் கூறவேண்டும் என்றாலும், அவற்றைக் கூறாமல் விடுத்தமைக்கான காரணத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** நித்யோதித சாந்தோதிதாதி பேதமாவது, "நித்யோதிதாத் ஸம்பபூவ ததா சாந்தோதிதோ ஹரி:" இத்யாதியிற் சொல்லுகிறபடியே நித்யமுக்தாநுபாவ்யராய் நித்யோதித ஸம்ஜ்ஞகராயிருக்கிற பரவாஸுதேவரும், அவர்பக்கலில் நின்றும் உத்பந்நராய், ஸங்கர்ஷண வ்யூஹ காரணமாய், சாந்தோதித ஸம்ஜ்ஞகராயிருக்கிற வ்யூஹ வாஸுதேவரும் முதலான வாஸுதேவ மூர்த்தியில் பேதமும். வ்யூஹங்கள்

நாலென்றும் மூன்றென்றும் சாஸ்த்ரங்களிலே சொல்லும். “நாலுமுண்டாயிருக்க மூன்றென்கிறது, வ்யூஹ வாஸுதேவ ரூபத்துக்குப் பரரூபத்திற் காட்டில் அநுஸந்தேய குண பேதமில்லாமையாலே” என்று அபியுக்தர் சொல்லுகையாலே, இவர் கீழ் வ்யூஹ த்ரயமென்றருளிச் செய்ததுக்கும் இங்கு வ்யூஹ வாஸுதேவருண்டாக வருளிச் செய்ததுக்கும் விரோதமில்லை.

**விளக்கம்** - (நித்யோதித சாந்தோதிதாதி பேதமும்) – இந்த வேறுபாடு என்ன? ஸம்ஹிதையில், “நித்யோதிதாத் ஸம்பபூவ ததா சாந்தோதிதோ ஹரி: - நித்யோதிதர் என்ற திருநாமம் கொண்ட பரவாஸுதேவரிடமிருந்து சாந்தோதிதர் என்னும் வ்யூஹ ஸ்ரீஹரி தோன்றினார்” என்பது போன்ற வரியில் கூறப்பட்டபடி, முக்தர்களால் எப்போதும் அனுபவிக்கப்பட்டபடி உள்ள நித்யோதிதர் என்று அறியப்படும் பரவாஸுதேவரும்; அவரிடமிருந்து தோன்றிய ஸங்கர்ஷணன் என்னும் வ்யூஹத்திற்குக் காரணமாக உள்ளவரும், சாந்தோதிதர் என்று அறியப்படும் வ்யூஹ வாஸுதேவரும்; இப்படியாக வாஸுதேவ மூர்த்தியில் உள்ள வேறுபாடு இங்கு கூறப்படுகிறது. வ்யூஹங்களானவை நான்கு என்றும், மூன்று என்றும் சாஸ்த்ரங்களில் கூறப்பட்டது. “நாலும் உண்டாயிருக்க மூன்றென்கிறது, வ்யூஹ வாஸுதேவ ரூபத்துக்குப் பரரூபத்திற் காட்டில் அநுஸந்தேய குண பேதமில்லாமையாலே - வ்யூஹங்கள் நான்கு உள்ளபோது, மூன்று எனக் கூறப்பட்டது ஏனென்றால், வ்யூஹ வாஸுதேவ ரூபத்திற்கு, பரவாஸுதேவ ரூபத்தைக் காட்டிலும் தனித்து எண்ணியபடி உபாஸிக்கக் குண வேறுபாடு இல்லை என்பதால் ஆகும்” என்று கூறுவது போன்று, இவர் மூன்று வ்யூஹங்கள் என்று அருளிச் செய்ததற்கும், வ்யூஹ வாஸுதேவன் என்று அருளிச்செய்ததற்கும் விரோதம் இல்லை.

**வ்யாக்யானம்** - (ஜாக்ரத் ஸம்ஜ்ஞாதியான சாதுராத்ம்யம்) ஆவது, சாந்தோதிதோத்பத்தி சொன்னவநந்தரம், “சாதுராத்ம்யம் அதோ பிண்டம் க்ருபயா பரமேஷ்ட்டிந:, உபாஸகாநுக்ரஹார்த்தம் ய: பரச்சேதி கீர்த்யதே; சாந்தோதிதாத் ப்ரவ்ருத்தஞ்ச சாதுராத்ம்ய த்ரயம் ததா உபாஸகாநுக்ரஹார்த்தம் ஸேநேச மம ததபுந:; ஸுஷுப்தி ஸ்வப்ந ஸம்ஜ்ஞம் யத் ஜாக்ரத் ஸம்ஜ்ஞம் ததாபரம்; சாதுர்மாஸ்யம் மஹாபாக பஞ்சமம் பாரமேச்வரம்” என்றும், “ஆத்யோ வ்யூஹோ மயா ப்ரோக்தோ ஹ்யபரம் த்ரிதயம் ச்ருணு, உபாஸகாநுக்ரஹார்த்தம் ஸ்வப்நாதிபத ஸம்ஸ்திதம்; ஸ்வபநாத்யவஸ்தா பேதஸ் து த்யாயிநாம் கேதசாந்தயே, தத் தத் பதஸ்த தேவாநாம் தந்நிவ்ருத்த்யர்த்தமேவ ச, ஸ்வப்நாத்யவஸ்த ஜீவாநாம் அதிஷ்ட்டாதார ஏவ தே; கர்மாத்மநாஞ்ச ஸேநேச! தத்

பதஸ்தோ மமேச்சய:, உபாஸ்யோஹம் மஹாபாக பத பேத ப்ரயோஜநம்" என்றுஞ் சொல்லுகிறபடியே, உபாஸகாநுக்ரஹார்த்தமாகத் தன் க்ருபையாலே பணணினதாய், த்யாயிகளுடைய கேதசாந்தியின் பொருட்டும், தத் தத் பதஸ்த ஜீவர்களுக்கு தந்நிவ்ருத்தியின் பொருட்டுமாய், தத்ததவஸ்த ஜீவர்களுக்கு அதிஷ்டாத்ருதவேந தத் பதஸ்தனாய்க் கொண்டு, கர்மவச்யரான சேநர்க்கு உபாஸ்யனாகையே பத பேத ப்ரயோஜனமுமாய்க் கொண்டு வ்யூஹ சதுஷ்டயத்திலும் ப்ரத்யேகமுண்டான ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி துரீய ஸம்ஜ்ஞகமான நாலுவடிவையுமுடையனாயிருக்கை.

**விளக்கம் -** (ஜாக்ரத் ஸம்ஜ்ஞாதியான சாதுராத்ம்யம்) – ஜாக்ரத் முதலானவை நான்காக அறியப்படுவது எப்படி, ஏன்? சாந்தோதித உற்பத்தி குறித்து உரைத்த பின்னர், "சாதுராத்ம்யம் அதோ பிண்டம் க்ருபயா பரமேஷ்ட்டிந:, உபாஸக அநுக்ரஹார்த்தம் ய: பரச்சேதி கீர்த்யதே; சாந்தோதிதாத் ப்ரவ்ருத்தஞ்ச சாதுராத்ம்ய த்ரயம் ததா உபாஸக அநுக்ரஹார்த்தம் ஸேநேச மம ததபுந:; ஸுஷுப்தி ஸ்வப்ந ஸம்ஜ்ஞம் யத் ஜாக்ரத் ஸம்ஜ்ஞம் ததாபரம்; சாதுர்மாஸ்யம் மஹாபாக பஞ்சமம் பாரமேச்வரம் - இப்படி உள்ளபோதிலும் பரமபுருஷனுடைய க்ருபையால் நான்கு விதமாயிற்று. எந்த ஒன்று, தன்னை த்யானம் செய்பவர்களுடைய விஷயத்தில் ஏற்பட்ட கருணையைக் காரணமாகக் கொண்டு ஆயிற்றோ அதுவே பரம் என்று கூறப்பட்டது. என்னுடைய நான்காக உள்ள தன்மை எதுவென்றால், சாந்தோதிதம் என்பதிலிருந்து உண்டான மூன்று முன்றாக உள்ள நான்குவிதமான வ்யூஹங்கள் ஆகும். எவை ஆழ்ந்த உறக்கம், கனவு போன்ற பெயர்கள் கொண்டதாக, விழிப்பு என்ற நிலையைக் கொண்டதாக, துரீயம் என்ற நான்காவது நிலையையும் கொண்டதாக உள்ளனவோ அவை சாதுராத்ம்யம் ஆகின்றன. இப்படியாக பரமேச்வரனுடைய தொடர்பு என்பது ஐந்தாக உள்ளன" என்றும், "ஆத்யோ வ்யூஹோ மயா ப்ரோக்தோ ஹ்யபரம் த்ரிதயம் ச்ருணு, உபாஸக அநுக்ரஹார்த்தம் ஸ்வப்நாதிபத ஸம்ஸ்திதம்; ஸ்வபநாதி அவஸ்தா பேதஸ் து த்யாயிநாம் கேதசாந்தயே, தத் தத் பதஸ்த தேவாநாம் தந்நிவ்ருத்த்யர்த்தம் ஏவ ச, ஸ்வப்நாதி அவஸ்த ஜீவாநாம் அதிஷ்ட்டாதார ஏவ தே; கர்மாத்மநாம் ச ஸேநேச! தத் பதஸ்தோ மமேச்சய:, உபாஸ்யோஹம் மஹாபாக பத பேத ப்ரயோஜநம் - தொடக்கத்தில் உள்ள வ்யூஹம் குறித்து உமக்கு என்னால் கூறப்பட்டது. அடுத்த மூன்று குறித்துக் கூறக் கேட்பாயாக. உபாஸகர்களுக்கு அனுக்ரஹம் செய்வதன் காரணமாக கனவு முதலான பதத்தில் உள்ள வேறுபாடுகள் எவை என்றால், கனவு முதலான நிலைகளானவை த்யானம் செய்பவர்களுடைய சாந்திக்காகவும், அந்தந்த நிலைகளில் உள்ள ஜீவாத்மாக்களுக்கு அந்தந்த நிலைகளை

நீங்குவதற்காகவும் உள்ளவை ஆகிறது. அத்தகைய நான்கு நிலைகளில் உள்ள மூன்று, கனவு போன்ற நிலைகளில் உள்ள ஜீவாத்மாக்களுக்கு இருப்பிடமாக உள்ளன. அந்தந்த நிலைகளில் உள்ள வேறுபாடுக்களுக்குப் பயன் என்னவென்றால், கர்மத்தையே இயல்பாகக் கொண்டுள்ள ஜீவாத்மாக்களுக்கு, எனது விருப்பத்தின் விளைவாக அந்தந்த நிலையில் நான் உபாஸிக்கத்தக்கவனாக இருத்தலே ஆகும்" என்றும் கூறுவதற்கு ஏற்ப, உபாஸகர்களுக்கு அனுக்ரஹம் செய்வதற்காகத் தனது க்ருபையால் செய்ததாய்; தன்னைத் த்யானம் செய்பவர்களுடைய அமைதியின் பொருட்டும், அந்தந்த நிலைகலில் உள்ள ஜீவாத்மாக்கள் அந்தந்த நிலையிலிருந்து வெளியே வருவதற்கு என்பதாய்; அந்தந்த நிலைகளில் உள்ள ஜீவாத்மாக்களுக்கு அந்தந்த நிலையில் புகுந்து அவரவர்களுக்கு இருப்பிடமாக இருந்தபடி, கர்மத்தின் வழி நடக்கும் சேதநர்களுக்கு உபாஸித்தபடி உள்ளதால் அந்தந்த நிலைகளுக்கு பயன் ஏற்படும்படியாக இருத்தல் என்பதே நான்காகிறது.

**வ்யாக்யானம்** – (கேசவாதி மூர்த்யந்தரம்) ஆவது, "ஏததந்தர்க்கதாஸ் ஸர்வே மூர்த்யந்த ரஸமாஹ்வயா:, கேசவாத்யா த்வாதச ச லலாடாதிஷு நிஷ்டிதா:, சரீர ரக்ஷகாஸ் ஸர்வே த்யாயிநாம் தாபசாந்தயே" என்றும், "கேசவாத்யம் த்ரயம் தத்ர வாஸுதேவாத் விபாவ்யதே, ஸங்கர்ஷணாச்ச கோவிந்த பூர்வம் த்ரிதயமத்புதம் த்ரிவிக்ரமாத்யம் த்ரிதயம் ப்ரத்யும்நாத் உதிதம் முநே! ஹ்ருஷீகேசாதிகம் தத்வத அநிருத்தாந் மஹாமுநே" என்றும் சொல்லுகிறபடியே, லலாடாதிகளிலே நின்று சரீர ரக்ஷணத்தைப் பண்ணா நின்று கொண்டு, த்யாயிகளினுடைய தாபசாந்தியின் பொருட்டாயிருப்பதாய், வ்யூஹ சதுஷ்டயத்திலும் ஓரொன்றிலே மும்மூன்றாக உத்பந்நமாய், மூர்த்யந்தர ஸமாஹ்வயமாயிருக்கிற கேசவாதி வ்யூஹாந்தரம்.

**விளக்கம்** -(கேசவாதி மூர்த்யந்தரம்) - "ஏதத் அந்தர்க்கதாஸ் ஸர்வே மூர்த்யந்த ரஸமாஹ்வயா:, கேசவாத்யா த்வாதச ச லலாடாதிஷு நிஷ்டிதா:, சரீர ரக்ஷகாஸ் ஸர்வே த்யாயிநாம் தாபசாந்தயே – கேசவன் தொடக்கமாக உள்ள பன்னிரண்டு வ்யூஹ மூர்த்திகள், நெற்றி தொடக்கமாக பின் கழுத்து முடிய உள்ள இடங்களில் உள்ள வ்யூஹ மூர்த்திகள் ஆவர். அவர்கள் அனைவரும் தங்களை த்யானிப்பவர்களுடைய துன்பங்களைப் போக்கி, அவர்களுடைய சரீரங்களைக் காக்கிறார்கள்" என்றும், "கேசவாத்யம் த்ரயம் தத்ர வாஸுதேவாத் விபாவ்யதே, ஸங்கர்ஷணாச்ச கோவிந்த பூர்வம் த்ரிதயமத்புதம் த்ரிவிக்ரமாத்யம் த்ரிதயம் ப்ரத்யும்நாத் உதிதம் முநே! ஹ்ருஷீகேசாதிகம்

தத்வத அநிருத்தாந் மஹாமுநே - கேசவன், மாதவன், நாராயணன் ஆகிய மூவரும் வாஸுதேவனிடமிருந்தும்; கோவிந்தன், விஷ்ணு, மதுஸூதனன் ஆகிய மூவரும் ஸங்கர்ஷணனிடமிருந்தும்; த்ரிவிக்ரமன், மாதவன், ஸ்ரீதரன் ஆகிய மூவரும் ப்ரத்யும்நனிடமிருந்தும்; இருடீகேசன், பத்மநாபன், தாமோதரன் ஆகிய மூவரும் அநிருத்தனிடமிருந்தும் உண்டானவர்கள்" என்றும் கூறுவதற்கு ஏற்ப, நெற்றி முதலான இடங்களில் இருந்தபடி தங்களை த்யானிப்பவர்களுடைய சரீரங்களைக் காப்பாற்றிக் கொண்டு, அவர்களுடைய துன்பங்களைப் போக்குவதற்காக உள்ளவர்களும், நான்கு வ்யூஹங்கள் ஒவ்வொன்றிலும் மூன்றுமூன்றாக உற்பத்தி ஆனவர்களும், கேசவன் தொடக்கமாக உள்ள வ்யூஹங்கள் ஆவார்.

**வ்யாக்யானம் -** (ஷட்த்ரிம்சத் பேத பிந்நமான பத்மநாபாதி விபவம்) ஆவது, "பத்மநாபாதிகாஸ் ஸர்வே வைபவீயாஸ் ததைவ ச, ஷட்தரிம்சத் ஸங்க்யா ஸங்க்யாதா: ப்ராதாந்யேந கணேச்வர!, ஷட்த்ரிம்சத் பேத பிந்நாஸ் தே பத்மநாபாதிகாஸ் ஸுரா:, அநிருத்தாத் ஸமுத்பந்நா தீபாத் தீப இவேச்வரா:" என்கிறபடியே தீபாத் தீபாந்தரம்போலே, அநிருத்தாத் உத்பந்நங்களாய், ப்ரதாநங்களாய், ஷட்த்ரிம்சத் பேதத்தாலே பிந்நங்களாயிருக்கிற பத்மநாபாத்யவதார விசேஷங்கள். இந்த பத்மநாபாதிகள்தான், "விபவா: பத்மநாபாத்யா: த்ரிம்சச்ச நவசைவ ஹி பத்மநாபோ த்ருவோநந்த: சக்த்யாத்மா மதுஸூதந:, வித்யாதிதேவ: கபிலோ விச்வரூபோ விஹங்கம:, க்ரோடாத்மா படபாவக்த்ரோ தர்மோ வாகீச்வரஸ் ததா, ஏகாம்போநிதிசாயீ ச பகவாந் கமலேச்வர:, வராஹோ நரஸிம்ஹச்ச பீயூஷாஹரணஸ் ததா, ஸ்ரீபதிர்பகவாந் தேவ: காந்தாத்மா அம்ருத தாரக:; ராஹுஜித் காலநேமிக்ந: பாரிஜாதஹரஸ் ததா, லோகநாதஸ் து சாந்தாத்மா தத்தாத்ரேயோ மஹாப்ரபு:, ந்யக்ரோதசாயீ பகவாந் ஏகச்ருங்க தநுஸ் ததா, தேவோ வாமந தேஹஸ் து ஸர்வவ்யாபீ த்ரிவிக்ரம:, நரோ நாராயணச்சைவ ஹரி: க்ருஷ்ணஸ் ததைவச, ஜ்வலத் பரசுத்ர்க் ராமோ ராமச்சாந்யச் சதுர்க்கதி:, வேதவித் பகவாந் கல்கீ பாதாளசயித: ப்ரபு:, த்ரிம்சச்ச நவசைவைதே பத்மநாபதயோ மதா:" என்று முப்பத்தொன்பதாக அஹிர்புத்ந்ய ஸம்ஹிதாதிகளிலே சொல்லிற்றேயாகிலும், விஷ்வக்ஸேந ஸம்ஹிதையிலே முப்பத்தாறாகச் சொல்லியிருக்கையாலே, இவர் ஷட்த்ரிம்சத் பேத பிந்நமென்றதில் குறையில்லை. இனி அந்த முப்பத்தொன்பதிலே மூன்றைக் குறைத்துக் கொள்ளுகையிறேயுள்ளது; அவையாவன கபில தத்தாத்ரேய பரசுராம ரூபமான ஆவேசாவதாரங்கள்.

**விளக்கம் -** “ஷட்த்ரிம்சத் பேத பிந்நமான பத்மநாபாதி விபவம் - பத்மநாபன் தொடக்கமாக உள்ள முப்பத்து ஆறு பிரிவுகளுடன் கூடிய விபவங்கள் எவை?”. இதற்கு விடை அருளிச்செய்கிறார். விஷ்வக்ஸேந ஸம்ஹிதையில், “பத்மநாபாதிகாஸ் ஸர்வே வைபவீயாஸ் ததைவ ச, ஷட்தரிம்சத் ஸங்க்யா ஸங்க்யாதா: ப்ராதாந்யேந கணேச்வர!, ஷட்த்ரிம்சத் பேத பிந்நாஸ் தே பத்மநாபாதிகாஸ் ஸுரா:, அநிருத்தாத் ஸமுத்பந்நா தீபாத் தீப இவேச்வரா: - பத்மநாபன் தொடக்கமாக உள்ளவையும், முப்பத்து ஆறு என்று கணக்கிடும்படி உள்ளவையும் ஆகிய அனைத்தும் விபவங்களுடைய ஸம்பந்தம் கொண்டவை ஆகும். விஷ்வக்ஸேனரே! முப்பத்து ஆறு பிரிவுகளில் வேறுபட்டுள்ள பத்மநாபன் தொடக்கமாக உள்ள அந்த மூர்த்திகள், ஒரு தீபத்திலிருந்து வெளிவரும் மற்றும் தீபங்கள் போன்று, அநிருத்தனிடமிருந்து வெளிப்பட்டவை ஆகும்” என்பதற்கு ஏற்ப, ஒரு தீபத்திலிருந்து உற்பத்தி ஆன மற்ற தீபங்கள் போன்று, அநிருத்தனிடமிருந்து உற்பத்தி ஆனவையாக, முதன்மையானவையாக, முப்பது ஆறு விதங்களில் வேறுபட்டுள்ள பத்மநாபன் போன்ற அவதாரச் சிறப்புகள் ஆகும். இந்தப் பத்மநாபன் முதலான மூர்த்திகள் குறித்து உரைக்கிறார். அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் – விபவா: பத்மநாபாத்யா: த்ரிம்சச்ச நவசைவ ஹி பத்மநாபோ த்ருவோநந்த: சக்த்யாத்மா மதுஸூதந:, வித்யாதிதேவ: கபிலோ விச்வரூபோ விஹங்கம:, க்ரோடாத்மா படபாவக்த்ரோ தர்மோ வாகீச்வரஸ் ததா, ஏகாம்போநிதிசாயீ ச பகவாந் கமலேச்வர:, வராஹோ நரஸிம்ஹச்ச பீயூஷாஹரணஸ் ததா, ஸ்ரீபதிர்பகவாந் தேவ: காந்தாத்மா அம்ருத தாரக:; ராஹுஜித் காலநேமிக்ந: பாரிஜாதஹரஸ் ததா, லோகநாதஸ் து சாந்தாத்மா தத்தாத்ரேயோ மஹாப்ரபு:, ந்யக்ரோதசாயீ பகவாந் ஏகச்ருங்க தநுஸ் ததா, தேவோ வாமந தேஹஸ் து ஸர்வவ்யாபீ த்ரிவிக்ரம:, நரோ நாராயணச்சைவ ஹரி: க்ருஷ்ணஸ் ததைவச, ஜ்வலத் பரசுத்ர்க் ராமோ ராமச்சாந்யச் சதுர்க்கதி:, வேதவித் பகவாந் கல்கீ பாதாளசயித: ப்ரபு:, த்ரிம்சச்ச நவசைவைதே பத்மநாபதயோ மதா: - பத்மநாபன் முதலான விபவங்கள் முப்பது ஒன்பது உள்ளன. இவை பத்மநாபன், துருவன், அநந்தன், சக்தி கொண்ட மதுஸூதனன், வித்யைகளுக்கு அதிதேவதையான கபிலன், விச்வரூபன், க்ரோடாத்மன், படபாவக்த்ரன், தர்மன், வாகீசன், திருப்பாற்கடலில் பள்ளி கொண்டவனும் பகவானும் ஆகிய மஹாலக்ஷ்மியின் நாயகன், வராஹன், நரஸிம்ஹன், அம்ருதத்தைக் கொண்டவன், ஸ்ரீயின் நாதன், மனதைக் கவருபவனும் அமிருதம் ஏந்தியவனும் ஆகிய தந்வந்திரி, ராகுவை வென்றவன், காலநேமியை அழித்தவன், பாரிஜாத மரத்தைக் கொண்டு வந்தவன், லோகநாதன், சாந்தமாக உள்ளவன், தத்தாத்ரேயன், ஆலிலையில் துயில்பவன், பகவானான ஒற்றைக் கொம்பு கொண்டவன்,

தேவனாகிய வாமநன், எங்கும் வ்யாபித்துள்ள த்ரிவிக்ரமன், நரன், நாராயணன், ஸ்ரீஹரி, க்ருஷ்ணன், ஒளி வீசும் கோடாலியைக் கொண்ட இராமன், நான்குவிதமான நடை கொண்ட இராமன், வேதங்களை அறிந்த பகவான் கல்கி, பாதாளத்தில் சயனிக்கும் பகவான் என்பதாக, பத்மநாபன் தொடக்கமாக உள்ளவர்கள் முப்பது ஒன்பது - என்று முப்பத்து ஒன்பதாக கூறப்பட்டது. இவ்விதம் இங்கு முப்பத்து ஒன்பது என்று இருந்தாலும், விஷ்வக்ஸேந ஸம்ஹிதையில் முப்பத்து ஆறு என்பதாகவே கூறப்பட்டதால், இவை முப்பத்து ஆறு விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளன என்று கூறுவதில் தவறில்லை. அப்படியானால் அந்த முப்பத்து ஒன்பதில், மூன்றைக் குறைக்கவேண்டும் என்றாகிறது. அவையாவன கபிலர், தத்தாத்ரேயர் மற்றும் பரசுராமன் என்பதான ஆவேச ரூபங்கள் ஆகின்றன.

**வ்யாக்யானம் -** (உபேந்த்ர த்ரிவிக்ரம ததிபக்த ஹயக்ரீவ நரநாராயண ஹரிக்ருஷ்ண மத்ஸ்ய கூர்ம வராஹாத்யவதார விசேஷங்கள்) ஆவன, அவதார கந்தமாகையாலே ஸர்வாவதாரங்களுக்கும் அநிருத்தரே காரணமாகச் சொல்லிற்றேயாகிலும், முன்பு சொன்ன பத்மநாபாதிகளிலே ஸஹபடிதங்களானவற்றிலே பூர்வோத்பந்ந விபவத்தில் நின்றும் விபவாந்தரங்களாக உத்பந்நங்க ளானவையுமுண்டென்னு மிடத்தை தர்சிப்பிக்கை முதலான சில ப்ரயோஜனங்களைப் பற்ற "பூர்வோத்பந்நாத் வைபவீயாத் ப்ராதுர்ப்பூதா மஹேச்வரா:, ப்ராதுர்ப்பாவாந்தராந் வித்திதாந் கணேச்வர! முக்க்யத:, உபேந்த்ராச்ச யதா முக்க்யா: த்ரிவிக்ரம தநுர் ஹரி:, ததிபக்தச்ச தேவேசோ தர்வீஹஸ்தோம்ருதப்ரத:, க்ருஷ்ணாச்ச மத்ஸ்யரூபஸ் ஸ்யாத் மத்ஸ்யாத் ஹயசிரோ யதா, நரோ நாராயணச்சைவ ஹரி க்ருஷ்ணஸ் ததைவச" என்று பிரித்தெடுத்துச் சொல்லப்பட்ட இந்திரனுக்குத் துணையாயிருந்து ஜகத் ரக்ஷணம் பண்ணுகிற உபேந்த்ராவதாரமும், எல்லை நடப்பாரைப் போலே லோகத்தையளந்து அவனிழந்த ஐச்வர்யத்தைக் கொடுத்த த்ரிவிக்ரமாவதாரமும், அவனுக்கு அம்ருத ப்ரதாநார்த்தமாகக் கொண்ட ததிபக்தாவதாரமும், வேத ப்ரதாநார்த்தமாகக் கொண்ட ஹயக்ரீவாவதாரமும், சிஷ்யாச்சார்ய ரூபேண நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டருளின நரநாராயணாவதாரங்களும், அவர்களோடொக்க தர்ம தேவதை பக்கலிலே பிறந்து லோகரக்ஷணம் பண்ணின ஹரியும் க்ருஷ்ணனுமான அவதாரங்களும், ப்ரளயரக்ஷணம் மந்தராதாரத்வம் பூம்யுத்தரணமாகிற இவற்றோடே வித்யாப்ரதானங்கள் பண்ணின மத்ஸ்ய கூர்ம வராஹாவதாரங்களும். ஆதி சப்தத்தாலே க்ரோடீ க்ருதங்களான நரஸிம்ஹ கல்க்யவதாரம் தொடக்கமானவையும்.

**விளக்கம் -** (உபேந்த்ர த்ரிவிக்ரம ததிபக்த ஹயக்ரீவ நரநாராயண ஹரிக்ருஷ்ண மத்ஸ்ய கூர்ம வராஹாத்யவதார விசேஷங்கள்) "உபேந்த்ரன், த்ரிவிக்ரமன் போன்ற அவதாரச் சிறப்புகள் என்ன?" என்பதற்கு விடை அளிக்கிறார். அவதாரங்கள் அனைத்திற்கும் மூலமாக உள்ளதால், அனைத்து அவதாரங்களுக்கும் காரணமாக அநிருத்தனே கூறப்பட்ட போதிலும், முன்பு உரைக்கப்பட்ட பத்மநாபன் போன்றவற்றுடன் சேர்த்துப் படிக்கப்பட்டவற்றில், "முதலில் உண்டான விபவங்களிலிருந்து வேறு விபவங்கள் உற்பத்தி ஆயின என்பதை உணர்த்துவதற்காக" என்பது போன்று சில பயன்களுக்காக இவை கூறப்பட்டன என்று கொள்ளவேண்டும். விஷ்வக்ஸேன ஸம்ஹிதையில், "பூர்வ் உத்பந்நாத் வைபவீயாத் ப்ராதுர்ப்பூதா மஹேச்வரா:, ப்ராதுர்ப்பாவாந்தராந் வித்திதாந் கணேச்வர! முக்க்யத:, உபேந்த்ராச்ச யதா முக்க்யா: த்ரிவிக்ரம தநுர் ஹரி:, ததிபக்தச்ச தேவேசோ தர்வீஹஸ்த அம்ருதப்ரத:, க்ருஷ்ணாச்ச மத்ஸ்யரூபஸ் ஸ்யாத் மத்ஸ்யாத் ஹயசிரோ யதா, நரோ நாராயணச்சைவ ஹரி க்ருஷ்ணஸ் ததைவச – முதலில் உண்டான விபவத்திலிருந்து எந்த மஹேச்வரர்கள் உண்டானார்களோ அத்தகைய முக்கியமான அவதாரங்களை, நித்யஸூரியின் கூட்டத் தலைவரான நீவிர் அறிவீராக. உபேந்த்ரனுடமிருந்து த்ரிவிக்ரமனாகிய ஸ்ரீஹரியும், தேவனாகவும் அகப்பையைக் கையில் கொண்டவனும், அமிர்தத்தை அளிப்பவனும் ஆகிய ததிபக்தன்; க்ருஷ்ணனிடமிருந்து மீனாக அவதரித்தவன் ஆகியோர் எவ்விதம் முக்கியமாக ஆகிறார்களோ, மீன் அவதாரத்தைக் காட்டிலும் ஹயக்ரீவ அவதாரம் எவ்விதம் முக்கியமாக ஆகிறதோ, அது போன்று நரனும், நாராயணனும், ஸ்ரீஹரியும் , க்ருஷ்ணனும் முக்கியமாக ஆகிறார்கள்", என்று கூறப்பட்டது. இப்படியாகப் பிரித்து எடுத்து உரைக்கப்பட்ட இந்த்ரனுக்கும் துணையாக இருந்தபடி இந்த ஜகத்தைக் காப்பாற்றும் உபேந்த்ர அவதாரம்; எல்லையில் நடப்பவர்கள் போன்று இந்த லோகத்தை அளந்து, அவன் இழந்த ஐச்வர்யங்களைப் பெற்றுக் கொடுத்த த்ரிவிக்ரம அவதாரம்; இந்த்ரனுக்கு அமிர்தம் அளிப்பதற்காக எடுத்துக் கொண்ட ததிபக்தன் என்ற அவதாரம்; வேதங்களை வெளியிடுவதற்காக எடுத்த ஹயக்ரீவ அவதாரம்; சிஷ்யன் மற்றும் ஆசார்யன் என்பதான ரூபங்களில் நின்று திருமந்திரம் வெளியிட்டு அருளிய நரநாராயண அவதாரங்கள்; அவர்களுடன் தர்மதேவதையின் பக்கம் பிறந்து, லோகத்தைக் காத்தல் என்பதைச் செய்தருளிய ஸ்ரீஹரி மற்றும் க்ருஷ்ண அவதாரங்கள்; ப்ரளயத்திலிருந்து காப்பாற்றியது, மந்தார மலையை நிலை நிறுத்தியது, பூமியை வெளிக் கொணர்ந்தது ஆகிய செய்கைகளுடன் வித்யைகளை அளித்த மத்ஸ்யம், கூர்மம், மற்றும் வராஹ அவதாரங்கள்

இங்கு கூறப்பட்டன. இங்குள்ள “ஆதி” என்பதன் மூலம் நரஸிம்ஹன் மற்றும் கல்கி போன்ற அவதாரங்களும் கூறப்படுகின்றன.

**வ்யாக்யானம் -** (அவற்றினுடைய புஜாயுத வர்ண க்ருதய ஸ்தாநாதி பேதங்கள்) ஆவன, கீழ்ச் சொல்லப்பட்ட பர வ்யூஹ விபவங்களாகிற அவற்றினுடைய “புஜாயுதாநாம் நியமஸ் தத்ரதத்ரேச்சயா மம, ஜாக்ரத் ஸம்ஜ்ஞே சாதுராத்ம்யே ததத் புஜச்சதுஷ்டயம். சாந்தோதிதாஸ்து த்விபுஜா: ஸ்வப்நாத்யா கணநாயக! தேவோ ஜகந்நாதோ வாஸுதேவோ ஜகத்பதி:. சதுர்ப்புஜச் ச்யாமளாங்க: பரமே வ்யோம்நி நிஷ்டித:. நித்யோதிதச் சாந்ததநுராஸ்தே வ்யோம்நி ஷட் குண:. சாந்தோதிதச் சாந்தவபுர் த்விபுஜ: புருஷாக்ருதி:” என்றும், “கேசவாத்யா குணாத்யக்ஷ மூர்த்யந்தர ஸமாஹ்வயா:, உபாஸகாநாம் ஸேநேச! புக்தி முக்தி பல ப்ரதா:; ஸர்வே சதுர்ப்புஜா ஜ்ஞேயா: பத்ம சங்காதி தாரகா:, தத்தச் சாஸ்த்ரேஷு ச ஜ்ஞேயா லாஞ்சநாபரணாதய:. சதுச்சக்ரதரம் மாம் து ஸ்ம்ருத்வா ஜாம்பூநத ப்ரபம், சதுச் சங்கதரம் தேவம் நீல ஜீமூத ஸந்நிபம் இந்த்ர நீல நிபச்யாமம் சதுர்ஹஸ்தைர் கதாதரம், சதுர்ப்புஜ தநுஷ்மந்தம் சந்த்ரபா ஸத்ருசத்யுதிம். சதுர்ஹலதரம் தேவம் பத்ம கிஞ்ஜல்க ஸந்நிபம். முஸலாஸ்த்ரம் மஹாவிஷ்ணும் அரவிந்தாபமேவ ச, கட்கபாணிம் சதுர்ஹஸ்தம் அக்நி ஸந்நிப தேஜஸம், சதுர்வஜ்ரதரம் தேவம் தருணாதித்ய ஸந்நிபம், பட்டஸாயுத ஹஸ்தஞ்ச புண்டரீகாபமேவ ச. சதுர்ப்பிர் முத்கரதரம் புஜைர் வித்யுத ஸமத்யுதிம் பஞ்சாயுததரம் மாஞ்ச ஸஹஸ்ராம்சு ஸமப்ரபம். பாச ஹஸ்ததரம் தேவம் பாலார்க்கசத ஸந்நிபம்” என்றுமித்யாதிகளாலே சொல்லப்படுகிற புஜ பேதங்களும், வர்ண பேதங்களும், இந்த வ்யூஹ பேத விபவ பேதங்களுக்கெல்லாம் ப்ரத்யேகமுண்டான க்ருத்ய பேதங்களும், ஆமோதாதிகளும் அயோத்யா மதுராதிகளுமாய்க் கொண்டு வ்யூஹ விபவங்களுக்கு ப்ரத்யேகமுண்டான ஸ்தாந பேதங்களும், ஆதி சப்தத்தாலே க்ரோடீ க்ருதங்களான பூஷண வஸ்த்ராதி பேதங்களும். (துரவதரங்களுமாய் குஹ்யதமங்களுமாயிருக்கையாலே சொல்லுகிறிலோம்) என்றது, இவையெல்லாம் சொன்னாலும் ஒருவர்க்கு புத்தி பண்ணவுமரிதாய் அவதார ரஹஸ்யங்களாகையாலே, மிகவும் குஹ்யமுமாயிருக்கையாலே, சொல்லுகிறோமில்லை யென்கை.

**விளக்கம் -** (அவற்றினுடைய புஜாயுத வர்ண க்ருதய ஸ்தாநாதி பேதங்கள்) - அந்த விபவங்களின் திருத்தோள்கள், ஆயுதங்கள் போன்றவற்றில் உள்ள வேறுபாடுகள் எவை என்பதற்கு அடுத்து விடை அளிக்கிறார். ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதை - புஜாயுதாநாம் நியமஸ் தத்ரதத்ரேச்சயா மம, ஜாக்ரத் ஸம்ஜ்ஞே சாதுராத்ம்யே ததத் புஜச்சதுஷ்டயம்.

சாந்தோதிதாஸ்து த்விபுஜா: ஸ்வப்நாத்யா கணநாயக! தேவோ ஜகந்நாதோ வாஸுதேவோ ஜகத்பதி:. சதுர்ப்புஜச் ச்யாமளாங்க: பரமே வ்யோம்நி நிஷ்டித:. நித்யோதிதச் சாந்ததநுராஸ்தே வ்யோம்நி ஷட் குண:. சாந்தோதிதச் சாந்தவபுர் த்விபுஜ: புருஷாக்ருதி: – அந்த விபவங்களுடைய புஜங்கள், ஆயுதங்கள், அவற்றின் செயல்பாடுகள் போன்ற பலவும் எனது விருப்பத்தால் நிகழ்கின்றன. விழிப்பு நிலை என்பதாக உள்ள நான்கு நிலைகளாக, நான்கு விதமாக உள்ள மூர்த்திகளுக்கு நான்கு தோள்கள் உள்ளன. கனவு மற்றும் ஆழ்ந்த உறக்கம் என்பதாக உள்ள நிலைகளுக்குத் தேவதையாக உள்ள வாஸுதேவன் போன்றவர்களுக்கு இரண்டு திருத்தோள்கள் உள்ளன. ஆதிதேவனாகவும், ஜகத்தின் பதியாகவும், வாஸுதேவனாகவும் உள்ள ஜகத்பதிக்கு நான்கு திருத்தோள்கள் மற்றும் நீலநிறம் ஆகியவை உள்ளன; இவன் பரமபதத்தில் உள்ளான்; ஆறு குணங்கள் கொண்ட அவன் சாந்தமான திருமேனியுடன் அந்த இடத்தில் உள்ளான். சாந்தோதிதன் எனப்படும் வ்யூஹ வாஸுதேவன், சாந்தமான திருமேனியுடன் இரண்டு திருத்தோள்கள் கொண்டவனாக உள்ளான் - என்றும், ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதையில் – கேசவாத்யா குணாத்யக்ஷ மூர்த்யந்தர ஸமாஹ்வயா:, உபாஸகாநாம் ஸேநேச! புக்தி முக்தி பல ப்ரதா:; ஸர்வே சதுர்ப்புஜா ஜ்ஞேயா: பத்ம சங்காதி தாரகா:, தத்தச் சாஸ்த்ரேஷு ச ஜ்ஞேயா லாஞ்சநாபரணாதய:. சதுச்சக்ரதரம் மாம் து ஸ்ம்ருத்வா ஜாம்பூநத ப்ரபம், சதுச் சங்கதரம் தேவம் நீல ஜீமூத ஸந்நிபம் இந்த்ர நீல நிபச்யாமம் சதுர்ஹஸ்தைர் கதாதரம், சதுர்ப்புஜ தநுஷ்மந்தம் சந்த்ரபா ஸத்ருசத்யுதிம். சதுர்ஹலதரம் தேவம் பத்ம கிஞ்ஜல்க ஸந்நிபம். முஸலாஸ்த்ரம் மஹாவிஷ்ணும் அரவிந்தாபமேவ ச, கட்கபாணிம் சதுர்ஹஸ்தம் அக்நி ஸந்நிப தேஜஸம், சதுர்வஜ்ரதரம் தேவம் தருணாதித்ய ஸந்நிபம், பட்டஸாயுத ஹஸ்தஞ்ச புண்டரீகாபமேவ ச. சதுர்ப்பிர் முத்கரதரம் புஜைர் வித்யுத ஸமத்யுதிம் பஞ்சாயுததரம் மாஞ்ச ஸஹஸ்ராம்சு ஸமப்ரபம். பாச ஹஸ்ததரம் தேவம் பாலார்க்கசத ஸந்நிபம் - மூர்த்யந்தரம் என்று கூறப்படும் கேசவன் முதலான பன்னிரண்டு வ்யூஹங்கள், தங்களை உபாஸிப்பவர்களுக்கு புத்தியும் மோக்ஷமும் அளிப்பார்கள். அனைத்து மூர்த்திகளும் நான்கு திருக்கரங்களுடன், தாமரை சங்கு முதலானவற்றைக் கொண்டவர்களாக உள்ளதை அறியவேண்டும். இவர்களுடைய அடையாளம் மற்றும் ஆபரணம் குறித்து அந்தந்த சாஸ்த்ரங்களில் அறியலாம். நான்கு சக்கரங்கள் கொண்டவராக, பொன்னிற ஒளியுடன் உள்ளவராகவும் (கேசவன்), நான்கு சங்குகள் ஏந்தி, ஒளிவீசும் கருமையான மேகம் போன்று உள்ளவராகவும் (நாராயணன்); நான்கு கதைகள் ஏந்தி, இந்த்ர நீலக்கல் போன்று உள்ளவராகவும் (மாதவன்); நான்கு திருக்கரங்களில் வில்லை ஏந்தி, சந்த்ரன் போன்று ஒளி வீசுபவராகவும் (விஷ்ணு); நான்கு உலக்கைகள் ஏந்தி, தாமரையின் ஒளியை வீசுபவராகவும் (மதுஸூதனன்); நான்கு திருக்கரங்களிலும் வாளை ஏந்தி

அக்னியின் ஒளியுடன் நிற்பவராகவும் (த்ரிவிக்ரமன்); நான்கு திருக்கரங்களிலும் வஜ்ராயுதம் ஏந்தி, இளஞ்சூரியன் போன்று ஒளிர்பவராகவும் (வாமநன்); நான்கு திருக்கரங்களிலும் ஈட்டிகளை ஏந்தி, வெண்மையான தாமரை நிறம் கொண்டவராகவும் (ஸ்ரீதரன்); நான்கு திருக்கரங்களிலும் சாட்டைகளை ஏந்தியவராகவும் (ஹ்ருஷீகேசன்); நான்கு திருக்கரங்களிலும் பட்டஸம் என்ற ஆயுதம் ஏந்தி, மின்னல் போன்று ஒளிர்பவராகவும் (பத்மநாபன்); நான்கு திருத்தோள்களிலும் பாசக்கயிற்றை ஏந்தி, இளஞ்சூரிய நிறம் கொண்டவராகவும் (தாமோதரன்) என்னை எண்ணுவீராக - என்றும் உள்ள வாக்கியங்களில் கூறப்படும் திருத்தோள்களில் உள்ள வேறுபாடுகள், நிறங்களில் உள்ள வேறுபாடுகள், இத்தகைய வ்யூஹ வேறுபாடுகள் மற்றும் விபவ வேறுபாடுகள் ஆகிய ஒவ்வொரு மூர்த்திக்கும் தனித்தனியாக உள்ளதான செயல்பாடு வேறுபாடுகள் மற்றும் அயோத்யா மதுரா முதலானவை தொடக்கமாக உள்ளதான வ்யூஹ விபவங்களுடைய இருப்பிட வேறுபாடுகளும் இங்கு கூறப்பட்டதாகவே கொள்ள வேண்டும். இங்குள்ள “ஆதி” என்பதன் மூலம் ஆபரணங்கள், ஆடைகள், ஆயுதங்கள் ஆகிய வேறுபாடுகள் கூறபட்டன. (துரவதரங்களுமாய் குஹ்யதமங்களுமா யிருக்கையாலே சொல்லுகிறிலோம்) - என்பதன் மூலம், இவை அனைத்தும் கூறப்பட்ட போதிலும், யாராலும் எண்ணுவதற்கு அரிதாக உள்ள அவதார ரஹஸ்யங்களாக இவை உள்ளதால், மிகவும் இரகசியமாக உள்ளதால், கூறப்படவில்லை என்கிறார்.

194. அவதாரஙகளுக்கு ஹேது இச்சை.

**அவதாரிகை -** லோகத்தில் ஜன்மங்களுக்கு ஹேது கர்மமாயன்றே இருப்பது; இவனுடைய அவதாரங்களுக்கு ஹேது ஏதென்னவருளிச் செய்கிறார் (அவதாரங்களுக்கு ஹேது இச்சை) என்று.

**விளக்கம் -** இந்த லோகத்தில் ஒரு பிறவி எடுத்தல் என்பதற்குக் காரணமாக, கர்மமே உள்ளது. இவனுடைய அவதாரங்களுக்குக் காரணமாக உள்ளது என்ன என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது “பஹுதா விஜாயதே”, “பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி”, “பல பிறப்பாய்”, “எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்”, “மனிசரும் மற்றும் முற்றுமாய் மாயப்பிறவி பிறந்த” என்னும்படி பஹுவிதமாகச் சொல்லப்படுகிற இவனுடைய

அவதாரங்களுக்கு ஹேது, “இப்படியவதரிப்போம்” என்னும் ஸ்வேச்சையொழிய ஹேத்வந்தரமில்லை யென்கை. “ஸம்பவாமி ஆத்மமாயயா” என்று தானே யருளிச் செய்தானிறே; “ஆத்மமாயயா” என்றது, “ஆத்மேச்சயா” என்றபடி; “மாயா வயுநம் ஜ்ஞாநம்” என்று மாயா சப்தம் ஜ்ஞாந வாசியாகையாலே, இச்சா ரூபமான ஜ்ஞானத்தைச் சொல்லுகிறது; “இச்சா க்ருஹீதாபிமதோரு தேஹ” என்னக் கடவதிறே.

**விளக்கம்** - “பஹுதா விஜாயதே – பலவிதமாகப் பிறக்கிறான்” என்றும், கீதை (4-5) – பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி - எனக்குப் பல ஜன்மங்கள் கழிந்தன – என்றும், திருவாய்மொழி (1-3-2) – பல பிறப்பாய் - என்றும், திருவிருத்தம் (1) - எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் – என்றும், திருவாய்மொழி (3-5-6) – மனிசரும் மற்றும் முற்றுமாய் மாயப்பிறவி பிறந்த - என்றும் பலவிதமாகக் கூறப்படுவதான இவனுடைய அவதாரங்களுக்கான காரணம், “இப்படியாக நான் அவதரிப்பேன்” என்ற இச்சை அல்லாமல், வேறு ஏதும் இல்லை. கீதை (4-6) - ஸம்பவாமி ஆத்மமாயயா - எனது இச்சையால் அவதரிக்கிறேன் - என்று தானே உரைத்தான் அல்லவோ? இங்கு “ஆத்ம மாயயா” என்றால் “ஆத்ம இச்சயா” என்று பொருள்; அதாவது “மாயா வயுநம் ஜ்ஞாநம் - மாயா, வயுநம், ஞானம் ஆகிய சொற்கள் ஞானத்தைக் குறிக்கும்” என்பதற்கு ஏற்ப “மாயா” என்ற பதமானது ஞானத்தைக் குறிப்பதால், இச்சை என்ற வடிவில் உள்ள ஞானம் என்று கருத்து. “இச்சா க்ருஹீதாபிமதோரு தேஹ - எனது இச்சையால் நான் பல சரீரங்களை எடுக்கிறேன்” என்பது காண்க.

**வ்யாக்யானம் –** “இயம் வையூஹீ வை ஸ்திதி ரத கிலேச்சாவிஹ்ருதயே விபூதீநாம் மத்யே ஸுர நர திரச்சாம் அவதரந், ஸஜாதீயஸ் தேஷாமிதிது விபவாக்க்யாமபி பஜந் கரீச! த்வம் பூர்ணோ வரகுணகணைஸ் தாந ஸ்தகயஸி” என்றும், “ஏவம் ஸ்திதே த்வதுபஸம்ச்ரயணாப்யுபாயோ மாநேந கேநசித அலப்ஸ்யத நோப லப்தும், நோசேத் அமர்த்ய மநுஜாதிஷு யோநிஷு த்வம் இச்சா விஹார விதிநா ஸமவாதரிஷ்ய:” என்றும் அவதார ஹேது இச்சையென்னுமிடத்தை ஆழ்வான் விசதமாகவருளிச் செய்தாரிறே.

**விளக்கம்** - ஸ்ரீவரதராஜஸ்தவத்தில் - இயம் வையூஹீ வை ஸ்திதி ரத கிலேச்சாவிஹ்ருதயே விபூதீநாம் மத்யே ஸுர நர திரச்சாம் அவதரந், ஸஜாதீயஸ் தேஷாமிதிது விபவாக்க்யாமபி பஜந் கரீச! த்வம் பூர்ணோ வரகுணகணைஸ் தாந ஸ்தகயஸி - வரதா! உனது இந்த நிலையானது வ்யூஹத்தைப் பற்றியே உள்ளது. நீ

விரும்பும் விதமாக, உனது விளையாட்டின் காரணமாக, உனது லோகத்தில் தேவர்கள் மனிதர்கள் விலங்குகள் ஆகியோருடைய நடுவில் அவதரிக்கும் நீ, விபவ அவதாரம் என்ற பெயர் பெறுகிறாய். பூர்ணமான குணங்கள் கொண்டவனாக நீ உள்ளபோதிலும், அந்த மனிதர் விலங்குகள் ஆகியவற்றின் நடுவில் உள்ளதால், அத்தகைய உயர்ந்த குணங்களை மறைத்துக் கொள்கிறாய் - என்றும், அதிமாநிஷஸ்தவத்தில் - ஏவம் ஸ்திதே த்வதுபஸம்ச்ரயணாப்யுபாயோ மாநேந கேநசித அலப்ஸ்யத நோப லப்தும், நோசேத் அமர்த்ய மநுஜாதிஷு யோநிஷு த்வம் இச்சா விஹார விதிநா ஸமவாதரிஷ்ய: - நீ இந்த்ரியங்களுக்குப் புலப்படாதவன் ஆவாய். ஆனால் உனது இச்சையால் இங்கு ஸஞ்சரிக்கும்போது தேவர்கள், மனிதர்கள், தாவரங்கள் என்பது போன்று பிறவிகளில் நீ அவதரிக்காமல் இருந்திருந்தால், உன்னை அடையும் வழியை அறிதல் என்பது இயலாமல் போகும் – என்றும் உள்ள இடங்களில், அவனுடைய அவதாரத்திற்கான காரணம் என்பது, அவனுடைய இச்சையே ஆகும் என்று கூரத்தாழ்வான் விரிவாக அருளிச்செய்தார்.

## 195. பலம் ஸாது பரித்ராணாதி த்ரயம்.

**வ்யாக்யானம்** – அதாவது, "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம், தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்று அவன் தானருளிச் செய்தபடியே, தன் பக்கல் ப்ரேம யுக்தராய், தன்னுடைய அநுபவமொழிய க்ஷணகாலமும் செல்லாதே, தன்னைக் காணவேணுமென்று ஆசைப்பட்டிருக்கும் ஸாது ஜநங்களைத் தன்னுடைய ரூப சேஷ்டித அவலோகந ஆலாபந்தாந முகேந ரக்ஷிக்கையும், தத் விரோதிகளான துஷ்க்ருத்துக்களை நசிப்பிக்கையும், தன்னுடைய ஆராதந ரூபமாய் க்ஷீணமாய்க் கிடக்கிற வைதிக தர்மத்தை ஆராத்யனான தன் ஸ்வரூபத்தை தர்சிப்பித்து ஸ்தாபிக்கையுமாகிற இம்மூன்றுமே பலமென்கை. "ஸாதவ உக்த லக்ஷண தர்மசீலா வைஷ்ணவாக்ரேஸரா மத் ஸமாச்ரயணே ப்ரவ்ருத்தா: மந்நாம கர்ம ஸ்வரூபாணாம் வாங் மநஸா கோசரதயா மத் தர்சநேந விநா ஆத்மதாரண போஷணாதிகம் அல்பமாநா: க்ஷணமாத்ர காலம் கல்ப ஸஹஸ்ரம் மந்வாநா: பரசிதில ஸர்வகாத்ரா பவேயுரிதி மத் ஸ்வரூப சேஷ்டிதாவ லோகந ஆலாபநாதி தாநேந தேஷாம் பரித்ராணாய தத் விபரீதாநாம் விநாசாய ச க்ஷீணஸ்ய வைதிகஸ்ய தர்மஸ்ய மதாராதந ரூபஸ்ய ஆராத்ய ஸ்வரூப தர்சநேந ஸ்தாபநாய ச யுகே யுகே ஸம்பவாமி; க்ருத த்ரேதாதி யுக விசேஷ நியமோபி நாஸ்தீத்யர்த்த:" என்றிறே இந்த ச்லோகத்துக்கு அர்த்தம் பாஷ்யகாரர் அருளிச்செய்தது. "யே பக்தா பவதேக போக

மநஸோ நந்யாத்ம ஸஞ்ஜீவநா: தத் ஸம்ச்லேஷண தத் விரோதி நிதநாத்யர்த்தம் வநாத்ரீச்வர!, யதவாதரஸ் ஸுர நராத் யாகார திவ்யாக்ருதிஸ் தேநைவ த்ரிதசைர் நரைச்ச ஸுகரம் ஸ்வப்ரார்த்தித ப்ரார்த்தநம்" என்றிறே ஆழ்வானுமருளிச் செய்தது.

**விளக்கம்** - அவதாரங்களுடைய பலன் என்ன என்பதை, கீதை (4-8) – பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம், தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே - ஸாதுக்களைக் காப்பாற்றுவதற்கும், தீயவர்களை அழிப்பதற்கும், தர்மத்தை நிலை நாட்டுவதற்கும் நான் ஒவ்வொரு யுகத்திலும் அவதரிக்கிறேன் - என்று அவனே அருளிச்செய்கிறான். தன்னிடம் எப்போதும் காதல் கொண்டு, தன்னுடைய அனுபவம் என்பது இல்லாமல் ஒரு நொடிப்பொழுது கூட கழிக்க இயலாமல், தன்னைக் காணவேண்டும் என்ற ஆசை கொண்டுள்ள ஸாதுக்களை, தன்னுடைய "ரூபம், லீலைகள் கடாக்ஷம், இனிய பேச்சு" என்பதன் மூலம் காப்பாற்றுதல்; தனது அடியார்களுடைய விரோதிகளாக உள்ளவர்களை அழித்தல்; தனது ஆராதனை என்பதாக உள்ளவையும், அழிந்து போகும் நிலையில் உள்ளவையும் ஆகிய வேதமார்க்கத்தை, அவற்றால் ஆராதிக்கப்படுபவனாகிய தனது ஸ்வரூபத்தைக் காண்பித்து மீண்டும் நிலை நாட்டுதல் என்பதான மூன்றுமே அவதாரங்களுடைய பயன் ஆகும். இந்த ச்லோகத்திற்கு பாஷ்யகாரர், "ஸாதவ உக்த லக்ஷண தர்மசீலா வைஷ்ணவாக்ரேஸரா மத் ஸமாச்ரயணே ப்ரவ்ருத்தா: மந்நாம கர்ம ஸ்வரூபாணாம் வாங் மநஸா கோசரதயா மத் தர்சநேந விநா ஆத்மதாரண போஷணாதிகம் அல்பமாநா: க்ஷணமாத்ர காலம் கல்ப ஸஹஸ்ரம் மந்வாநா: பரசிதில ஸர்வகாத்ரா பவேயுரிதி மத் ஸ்வரூப சேஷ்டிதாவ லோகந ஆலாபநாதி தாநேந தேஷாம் பரித்ராணாய தத் விபரீதாநாம் விநாசாய ச க்ஷீணஸ்ய வைதிகஸ்ய தர்மஸ்ய மதாராதந ரூபஸ்ய ஆராத்ய ஸ்வரூப தர்சநேந ஸ்தாபநாய ச யுகே யுகே ஸம்பவாமி; க்ருத த்ரேதாதி யுக விசேஷ நியமோபி நாஸ்தீத்யர்த்த: - ஸாது என்பது நல்லவர்கள், தர்ம சீலர்கள் ஆகியோரைக் குறிக்கும். அப்பதமானது, என்னைச் சரணம் புகுந்த வைஷ்ணவர்களைக் குறிக்கும். என்னுடைய திருநாமம், லீலைகள் மற்றும் ரூபம் போன்றவை வாக்கிற்கு மனதிற்கும் எட்டாதவை ஆகும். ஆயினும் இவர்கள் அனைத்திலும் என்னைக் காண்பவர்களாக, என்னைக் காணாமல் உள்ளபோது மனம் வருந்தி இருப்பவர்கள் ஆவர். நான் இல்லாத ஒரு நொடிப்பொழுதும் கூட இவர்களுக்கு ஆயிரம் கல்பகாலம் போன்றதாகும். என்னை விட்டுப் பிரிய நேரிடும் என்றால், தங்களுடைய ஒவ்வொரு உடல் உறுப்பும் சோர்வதாகவே எண்ணுவார்கள். ஆகவே இவர்களுக்கு எனது உருவத்தைக் காண்பிப்பதற்காகவும், என்னுடன் இவர்கள் பழகுவதற்காகவும், இவர்களைக் காப்பதற்காகவும் நான் தேவனாகவும் மனிதர்களாகவும் பிறவி எடுக்கிறேன். மிகவும் பாபம் நிறைந்த செயலாகிய, எனது அடியார்களை

அவமதித்தல் போன்றவற்றைச் செய்யும் விரோதிகளை அழிப்பதற்காகவும், எனது உபாஸனையாகிய வேத தர்மங்களைக் காப்பாற்றவும் நான் அவதரிக்கிறேன். மேலும் என்னைக் கண்டு அனைவரும் வணங்குவதற்காகவும் நான் தோன்றுகிறேன். நான் பிறப்பதற்கு க்ருதயுகம், த்ரேதாயுகம் என்பது போன்ற கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை" என்று அருளிச்செய்தார். ஸ்வாமி கூரத்தாழ்வானும் ஸுந்தரபாஹு ஸ்தவத்தில் (86) – யே பக்தா பவதேக போக மநஸோ நந்யாத்ம ஸஞ்ஜீவநா: தத் ஸம்ச்லேஷண தத் விரோதி நிதநாத்யர்த்தம் வநாத்ரீச்வர!, யதவாதரஸ் ஸுர நராத் யாகார திவ்யாக்ருதிஸ் தேஹைவ த்ரிதசைர் நரைச்ச ஸுகரம் ஸ்வப்ரார்த்தித ப்ரார்த்தநம் - திருமாலிருஞ்சோலை என்ற வனத்தின் ஈச்வரனே! தங்களுடைய ஆத்ம நலத்தைப் பெரிதும் பொருட்படுத்தாமல், உன்னுடைய சேர்த்தி மற்றும் அணைத்தல் ஆகியவற்றை மட்டுமே விரும்பும் மனம் கொண்ட அடியார்கள் யார் உள்ளனரோ, அந்தப் பக்தர்களுடன் சேர்ந்து இருத்தல், அவர்களுடைய விரோதிகளை அழித்தல் போன்ற காரணங்களுக்காக, அண்டத்தின் நடுவில் தேவன் மனிதன் விலங்கு என்பது போன்ற திவ்யமான திருமேனியுடன் நீ அவதரித்தாய்; இந்தக் காரணத்தால், தேவர்களாலும் மனிதர்களாலும் செய்யவேண்டிய ப்ரார்த்தனையானது சுலபமாக உள்ளது- என்றதும் காண்க.

196. பல ப்ரமாணங்களிலும் ப்ருகு சாபாதிகளாலே பிறந்தானென்கையாலே, அவதாரங்களுக்கு ஹேது கர்மமாக வேண்டாவோ வென்னில்.

**அவதாரிகை -** அவதாரம் ஐச்சமென்றறியாதே கர்மநிபந்தநமாக நினைத்து மந்த மதிகள் பண்ணும ப்ரச்நத்தை யநுவதிக்கிறார் (பல ப்ரமாணங்களிலும்) என்று தொடங்கி.

**விளக்கம் -** அவதாரங்கள் அனைத்தும் அவனுடைய இச்சையால் ஏற்படுகிறது என்பதை அறியாமல், கர்மம் காரணமாகவே அவை அவனுக்கு ஏற்படுகிறது என்று சில மந்த புத்தி கொண்டவர்கள் எழுப்பும் கேள்வியை தானே எழுப்பிக்கொள்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது இதிஹாஸ புராண ரூபமான பல ப்ரமாணங்களிலும் "பதி வ்ரதா தர்ம பரா ஹதா யே ந மம ப்ரியா, ஸ து ப்ரியா விரஹித: சிர காலம் பவிஷ்யதி" என்றாப்போலே யுண்டான ப்ருகு சாபம் முதலானவற்றாலே பிறந்தானாகச் சொல்லுகையாலே அவதார ஹேது இச்சையன்றிக்கே கர்மமாக வேண்டாவோ? என்னிலென்கை.

**விளக்கம் -** இதிகாசம் மற்றும் புராணம் என்னும் வடிவில் உள்ள ப்ரமாணங்களில், “பதி வ்ரதா தர்ம பரா ஹதா யே ந மம ப்ரியா, ஸ து ப்ரியா விரஹித: சிர காலம் பவிஷ்யதி - (ப்ருகு முனிவர் உத்தரகாண்டத்தில் கூறுவது) – பதி வ்ரதையாகவும், தர்ம வழியில் நின்றவளும் ஆகிய எனது ப்ரியமான மனைவி யாரால் கொல்லப்பட்டாளோ, அவன் பல காலம் தனது மனைவியைப் பிரிந்து நிற்பான்” என்று கூறப்பட்டது போன்று, ப்ருகு முனிவருடைய சாபம் முதலானவை மூலமே இராமன் பிறந்தான் என்றே ஆகிறது; இதனால், அவதாரங்களுக்குக் காரணம் கர்மம் அன்றி அவனுடைய இச்சை அல்ல என்று கூறவேண்டாமா?

197. அவைதன்னிலே, சாபம் வ்யாஜம் அவதாரம் ஐச்சமென்று பரிஹரித்தது.

**அவதாரிகை -** அதுக்கு உத்தரமருளிச்செய்கிறார் (அவை தன்னிலே) என்று தொடங்கி.

**விளக்கம் -** அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது, “தபஸாராதிதோ தேவோ ஹ்யபிரவீத் பக்தவத்ஸல:, லோகாநாம் ஸம்ப்ரியார்த்தம் து சாபம் தம் க்ருஹ்யமுக்தவாந்” என்று உத்தர ஸ்ரீராமாயணத்திலும், “ஸர்வாவதர்த்தேஷு வை விஷ்ணோர் ஜநநம் ஸ்வேச்சயைவ து, ஜாகாஸ்த்ரச்சலேநைவ ஸ்வேச்சயா கமநம் ஹரே:, த்விஜ சாபச்சலேநைவம் அவதீர்ணோபி லீலயா” என்று லைங்கபுராணாதிகளிலும் சொல்லுகையாலே, ப்ருகு சாபாதிகளாலே பிறந்தானென்கிறவவை தன்னிலே, சாபம் வ்யாஜமாத்ரம், அவதாரம் இச்சா க்ருஹீதமென்று பரிஹரித்ததென்கை.

**விளக்கம் -** அதாவது, உத்தர இராமாயணத்தில் – தபஸாராதிதோ தேவோ ஹ்யப்ரவீத் பக்தவத்ஸல:, லோகாநாம் ஸம்ப்ரியார்த்தம் து சாபம் தம் க்ருஹ்யமுக்தவாந் - தவத்தின் மூலம் ஆராதிக்கப்படுபவனாகவும், அடியார்களுக்கு எளியவனாகவும் உள்ள அந்த தேவதேவன், “அந்தச் சாபமானது லோகங்களுடைய நன்மைக்காக நம்மால் ஏற்றுக் கொள்ளத்தக்கது”, என்றான் – என்றும், லைங்க புராணத்தில் - ஸர்வாவதர்த்தேஷு வை விஷ்ணோர் ஜநநம் ஸ்வேச்சயைவ து, ஜாகாஸ்த்ரச்சலேநைவ ஸ்வேச்சயா கமநம் ஹரே:, த்விஜ சாபச்சலேநைவம் அவதீர்ணோபி லீலயா - மஹாவிஷ்ணுவின் அனைத்து

அவதாரங்களும் அவனது விருப்பத்தால், சாபம் என்பது போன்றவற்றால் உண்டானாலும், விஷ்ணுவிற்கு ஒரு வேடனுடைய அம்பானது இந்த உலகிலிருந்து பரமபதம் திரும்புவதற்கு ஒரு காரணமாக மட்டுமே அமைகிறது - என்றும் கூறப்பட்டது. ஆலவே ப்ருகுவின் சாபத்தால் இராமனாகப் பிறந்தான் என்று கூறப்படும் கருத்துக்களில் உள்ள சாபம் என்பது, அவன் இந்த லோகத்தில் அவதாரம் செய்வதற்கு ஒரு வாய்ப்பாக உள்ள காரணம் மட்டுமே ஆகும். அவன் தனது விருப்பத்தால் மட்டுமே அவதாரங்களை எடுக்கிறான்.

198. அந்தர்யாமித்வமாவது, அந்த: ப்ரவிச்ய நியந்தாவாயிருக்கை.

**அவதாரிகை** - ஆகவிப்படி விபவத்தை உபபாதித்தவனந்தரம் அந்தர்யாமித்வத்தை யுபபாதிக்கிறார் (அந்தர்யாமித்வமாவது) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக விபவ அவதாரங்களைக் குறித்து விரிவாக உரைத்த பின்னர், அந்தர்யாமியாக உள்ள தன்மையை விரிவாக விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது “ய ஆத்மாநமந்தரோ யமயதி”, “அந்த: ப்ரவிஷ்டச்சாஸ்தா ஜநாநாம்”, “சாஸ்தா விஷ்ணுரசேஷஸ்ய ஜகதோ யோ ஹ்ருதி ஸ்தித:” இத்யாதிகளில் சொல்லுகிறபடியே சேதநருடையவுள்ளே ப்ரவேசித்து ஸகல ப்ரவ்ருத்திகளுக்கும் நியந்தாவாயிருக்கை அந்தர்யாமித்வமாவதென்கை.

**விளக்கம்** - அதாவது, ப்ரு. (3-7-22) - ய ஆத்மாநம் அந்தரோ யமயதி – யார் ஆத்மாவின் உள்ளிருந்து நியமிக்கிறானோ – என்றும், தை. ஆர. (3-11) - அந்த: ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம் – அனைவருக்கும் உள்ளே புகுந்து, அனைத்தையும் நியமித்தபடி - என்றும், ஸ்ரீவிபு. (4-1-17) - சாஸ்தா விஷ்ணு: அசேஷஸ்ய ஜகதோ யோ ஹ்ருதி ஸ்தித: - அனைத்து ஜகத்தின் இதயத்தில் உள்ள விஷ்ணு அனைத்தையும் நியமிக்கிறான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அனைத்து சேதநர்களுக்குள்ளும் புகுந்து, அவர்களுடைய அனைத்து விதமான செயல்களுக்கும் எஜமானனாக இருத்தல் என்பதே அந்தர்யாமி தன்மை ஆகிறது.

199. ஸ்வர்க்க நரக ப்ரவேசாதி ஸர்வாவஸ்த்தைகளிலும் ஸகல சேதநர்க்கும் துணையாய், அவர்களை விடாதே நிற்கிற நிலைக்கு மேலே சுபாச்ரயமான திருமேனியோடே கூடிக் கொண்டு அவர்களுக்கு த்யேயனாகைக்காகவும், அவர்களை ரக்ஷிக்கைக்காகவும், பந்து பூதனாய்க் கொண்டு ஹ்ருதய கமலத்திலேயெழுந்தருளியிருக்குமிருப்பு.

**அவதாரிகை -** இதுதான் ஆத்மாவினுள்ளே தன் ஸ்வரூபத்தாலே வ்யாபித்து நின்று நியமிக்குமதும், ஸவிக்ரஹனாய்க் கொண்டு ஹ்ருதயத்திலே வ்யாபித்திருந்து நியமிக்குமதுமாய்க் கொண்டு, த்விவிதமாயிருக்கையாலே, உபயத்தையுமருளிச் செய்கிறார் (ஸ்வர்க்க நரக ப்ரவேசாதி என்று தொடங்கி).

**விளக்கம் -** இத்தகைய அந்தர்யாமி நிலை என்பது ஆத்மாவிற்குள் தனது ஸ்வரூபத்தால் பரவி நின்று நியமிப்பதாகவும், திருமேனியுடன் சேர்ந்தபடி நின்று அவர்களுடைய இதயத்தில் பரவி நின்று நியமிப்பதாகவும் உள்ளதுஆ .க, இப்படி இரண்டுவிதமாக உள்ளதால், அவை இரண்டைக் குறித்தும் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, “அந்தர்யாமி ஸ்வரூபஞ்ச ஸர்வேஷாம் பந்துவத் ஸ்திதம்” என்று தொடங்கி, “ஸ்வர்க்க நரக ப்ரவேசேபி பந்துராத்மாஹி கேசவ:” என்று சொன்னபடியே, புண்ய நிபந்தநமாக ஸ்வர்க்கத்தை ப்ரவேசிக்கையும், பாப நிபந்தனமாக நரகத்தை ப்ரவேசிக்கையும், உபய நிபந்தநமாக கர்ப்பத்தை ப்ரவேசிக்கையும் முதலான எல்லா அவஸ்தைகளிலும், எல்லாச் சேதநர்க்கும் இராமட மூட்டுவாரைப்போலே உள்ளே பதிகிடந்து ஸத்தையே பிடித்து நோக்கிக் கொண்டு போருகையாலே துணையாய், அவர்களை ஒருகாலும் விடாதே அந்தராத்மாவாய் நிற்கிற நிலைக்குமேலே “அங்குஷ்ட மாத்ர புருஷோ ஜ்யோதிரிவாதூமக” என்றும், “நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா” என்று மித்யாதிகளிற் சொல்லுகிறபடியே, ஜ்யோதீரூபமாய் ச்யாமளமான தன்னை முட்டாக்கிடும்படி “செம்பொனே” திகழுகிற புகராலே நீல தோயதத்தை விழுங்கின வித்யுலேகை போலேயிருக்கையாலே பாஹ்ய விஷய ப்ரவணமான மநஸ்ஸை அதில் நின்று பற்றறுத்துத் தன் பக்கலிலே ப்ரவணமாக்கிக் கொள்ளும்படி சுபாச்ரயமான திருமேனியோடே அந்த சேதநர்க்கு த்யான ருசி பிறந்தபோது த்யேயனாகைக்காகவும், புத்த்யாதிகளுக்கு நியாமகனாய்க் கொண்டு அவர்களை ரக்ஷிக்கைக்காகவும், நாராயணத்வ ப்ரயுக்தமான குடல் துடக்காலே பந்து பூதனாய்க் கொண்டு “பத்ம கோச ப்ரதீகாசம் ஹ்ருதயஞ் சாப்யதோமுகம்” என்கிற ஹ்ருதயத்திலே யெழுந்தருளி

யிருக்குமிருப்பென்கை. அந்தராத்மதையை முதலிற்சொல்லி அதுக்குமேலே ஸவிக்ரஹனாய்க் கொண்டு ஹ்ருதய கமலத்திலிருக்குமிருப்பைச் சொல்லித் தலைக்கட்டிற்று விக்ரஹ யோக ப்ரயுக்தமான பரத்வாதிகளைச் சொல்லி வருகிற ப்ரகரணமாகையாலே.

**விளக்கம்** - அதாவது, "அந்தர்யாமி ஸ்வரூபஞ்ச ஸர்வேஷாம் பந்துவத் ஸ்திதம் - அந்தர்யாமி ஸ்வரூபமானது அனைத்திற்கும் உறவினர் போன்று உள்ளது" என்று தொடங்கி, "ஸ்வர்க்க நரக ப்ரவேசேபி பந்துராத்மாஹி கேசவ: - ஜீவாத்மாக்கள் ஸ்வர்கம் சென்றாலும், நரகம் புகுந்தாலும் அவர்களுக்குள் புகுந்து உறவினன் போன்று எப்போதும் கேசவன் உள்ளான்" என்று கூறுவதற்கு ஏற்ப, புண்ணியத்தின் விளைவாக ஸ்வர்க்கம் புகுதலும், பாபத்தின் காரணமாக நரகம் புகுதலும், அந்த இரண்டின் காரணமாக கர்ப்பத்தில் புகுதலும் என்பதான அனைத்து நிலைகளிலும், அனைத்து சேதநர்களுக்கும், தந்தையிடம் கோபித்துக்கொண்டு சத்திரம் சென்று தங்கியுள்ள புத்திரனுக்கு, அவன் அறியாமல் யார் மூலமாகவே தந்தை உணவு அனுப்புவது போன்று, ஒவ்வொரு சேதநர்க்கும் உள்ளே இருந்தபடி, அவர்களுடைய இருப்பு என்பதையே உறுதியாக நோக்கியபடி உள்ளதால் அவர்களுக்குத் துணையாக அந்தர்யாமி நிலை உள்ளது. இவ்விதம் அவர்களை ஒருபோதும் விடாமல் அந்தராத்மாவாக நிற்கும் நிலை மட்டும் அல்லாமல், கட. (2-4-13) – அங்குஷ்ட மாத்ர புருஷோ ஜ்யோதிரிவாதூமக - கட்டை விரல் அளவுள்ள புருஷன் அனைவருடைய இதயத்திலும், புகை இல்லாத ஜ்யோதியாக உள்ளான் – என்றும், தை. (2-11) - "நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா - அனைத்து ஜீவாத்மாக்களின் உள்ளிலும், நீல மேகம் போன்ற அவன், மின்னல் கொடி போன்று அமர்ந்துள்ளான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஜ்யோதி ரூபமாக, நீல நிறத்தில் உள்ள உள்ள தன்னை முழுவதுமாக நிறையும் விதத்தில், திருவாய்மொழி (1-10-9) – செம்பொனே - என்பதற்கு ஏற்ப உள்ள மகிழ்வு காரணமக, நீல இரத்தினத்தை விழுங்கிய மின்னல் போன்று உள்ளான். ஆகவே மற்ற விஷயங்களில் அலையும் மனத்தை, அவற்றிடம் உள்ள பற்றுதல்களை அறுத்து, தனது பக்கம் காதல் கொள்ளும்படியாக, மங்களகரமாக இருப்பிடமாக உள்ள திருமேனியுடன், அந்தச் சேநர்களுக்கு த்யான ருசி ஏற்படும்போது அவர்களால் த்யானிக்கப்படும் பொருளாக நிற்பதற்காகவும், அவர்களுடைய புத்தி போன்றவற்றை நியமிப்பவனாகவும் உள்ளதால் அவர்களைக் காப்பாற்றுவதற்காகவும், அவர்களுடைய உறவினன் என்பதை உணர்த்தவல்ல நாராயணன் என்ற பதம் மூலம் உணர்த்தப்படுபவனாக அவர்களுடைய உறவினனாக

உள்ளதால், “பத்ம கோச ப்ரதீகாசம் ஹ்ருதயஞ் சாப்யதோமுகம் - கவிழ்த்த தாமரை மொட்டு போன்றுள்ள இதயத்தில்” என்பதற்கு ஏற்ப, இதயத்தில் எழுந்தருளியுள்ள நிலையே அந்தர்யாமி நிலையாகும். அவன் தனது திருமேனியுடன கூடியுள்ள நிலையான பரத்வம் போன்ற பல நிலைகளைக் கூறும் இடமாக உள்ளதால், இங்கு அந்தர்யாமியாக உள்ளதை முதலில் உரைத்து, தொடர்ந்து திருமேனியுடன் உள்ளதை உரைத்து, இதயம் என்ற தாமரையில் உள்ளதைக் கூறி முடித்தார்.

200. அர்ச்சாவதாரமாவது, “தமருகந்ததெவ்வுருவம் அவ்வுருவம்” என்கிறபடியே சேதநர்க்கு அபிமதமான த்ரவ்யத்திலே விபவ விசேஷங்கள் போலன்றிக்கே, தேச காலாதிகாரி நியமமில்லாதபடி ஸந்நிதி பண்ணி, அபராதங்களைக் காணாக்கண்ணிட்டு, அர்ச்சக பரதந்த்ரமான ஸமஸ்த வ்யாபாரங்களையு முடையனாய்க் கொண்டு, கோயில்களிலும் க்ருஹங்களிலும் எழுந்ததருளி நிற்கும் நிலை.

**அவதாரிகை** - ஆக அந்தர்யாமித்வத்தை உபபாதித்தாராய் நின்றார் கீழ்; அனந்தரம் அர்ச்சாவதாரத்தையுபபாதிக்கிறார் (அர்ச்சாவதாரமாவது) என்று தொடங்கி.

**விளக்கம்** - இதுவரை அந்தர்யாமியாக உள்ள தன்மையை விவரித்தார். அடுத்து, அர்ச்சாவதாரமாக உள்ள நிலையை விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, “தமருகந்ததெவ்வுருவமவ்வுருவந்தானே” என்கிறபடியே, ஆச்ரிதர் யாதொன்றைத் தனக்குத் திருமேனியாகக கோலினார்கள் அத்தையே தனக்கு வடிவாகக் கொள்ளுமென்கிறபடியே, ஆச்ரிதரான சேதநர்க்கு அபிமதமான ஸ்வர்ண ரஜதாதி சிலா பர்யந்தமான ஏதேனுமொரு த்ரவ்யத்திலே, அயோத்யா மதுராதி தேச நியமமென்ன, பதினோராயிரம் ஸம்வத்ஸரம் நூறு ஸம்வத்ஸரமென்ன றாப் போலேயுண்டான கால நியமமென்ன, தசரத வஸுதேவாதிகளென்றாப்போலே சில அதிகாரி நியமமென்ன, இவற்றையுடைத்தாய்க் கொண்டு ஸந்நிதி பண்ணின ராம க்ருஷ்ணாதி விபவ விசேஷங்கள் போலன்றிக்கே, “பௌம நிகேதநேஷ்வபி குடீகுஞ்ஜேஷு” என்கிறபடியே ஒரு தேச நியமமில்லாதபடியாகவும், அர்ச்சகனுடைய அபேக்ஷா காலமொழியத் தனக்கென்றொரு கால நியமமில்லாதபடியாகவும், ருசியுடையாரெல்லார்க்குமாகையாலே இன்னாரென்பதொரு அதிகாரி நியமமில்லாதபடியாகவும் ஸந்நிதி பண்ணி, “ஸர்வஸஹிஷ்ணு:” என்கிறபடியே

ஸஹிஷ்ணுவாகையாலே அவர்கள் செய்யுமபராதங்களைக் காணாக்கண்ணிட்டு, "அர்ச்சக பராதீநாகிலாத்ம ஸ்திதி:" என்கிறபடியே அர்ச்சக பரதந்த்ரமான ஸ்நாநாசநாதிகளான ஸமஸ்த வ்யாபாரங்களையுமுடையனாய்க் கொண்டு எழுந்தருளி நிற்கும் நிலை அர்ச்சாவதாரமாவதென்கை. "அர்ச்சா பூஜா ப்ரதிமயோ:" என்கையாலே, அர்ச்சா சப்தம் ப்ரதிமாவாசி.

**விளக்கம்** - முதல் திருவந்தாதி (44) – தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே - என்பதற்கு ஏற்ப, எந்த ஒன்றைத் தனது அடியார்கள் தனக்குத் திருமேனியாக இருக்கவேண்டும் என்று விரும்பிக் கேட்கிறார்களோ, அதனையே தன்னுடைய வடிவமாகக் கொள்கிறான். அதாவது தனக்கு அடியார்களாக உள்ள சேதநர்களுக்கு விருப்பமான தங்கம், வெள்ளி, கல் போன்ற ஏதேனும் ஒரு பொருளில் நிலைக்கிறான்; அயோத்தி மற்றும் மதுரா என்பது போன்ற இடங்களில், பதினோராயிரம் அல்லது நூறு வருடம் என்பது போன்ற கால அளவுகளில், தசரதன் மற்றும் வஸுதேவன் என்பது போன்ற அதிகாரிகளிடத்தில் வந்து தோன்றிய இராமன் மற்றும் க்ருஷ்ணன் என்பதான விபவங்கள் போன்று அல்லாமல், ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-74) - பௌம நிகேதநேஷ்வபி குடீகுஞ்ஜேஷு – இந்தப் பூமியில் உள்ள கோயில்கள், வீடுகள், ஆச்ரமங்கள் - என்பதற்கு ஏற்ப எந்த ஒரு இடக் கட்டுப்பாடுகளும் இன்றி; அர்ச்சகர் விரும்பும் காலம் அல்லாமல் தனக்கென்று எந்த ஒரு காலக் கட்டுபாடும் இன்றி; தன் மீது ருசி கொண்ட அனைவருக்கும் தன்னை அமைத்துக் கொள்வதால், இன்ன அதிகாரி என்பது போன்று கட்டுப்பாடுகள் இன்றி அர்ச்சையில் அருகில் வந்து நிற்கிறான். "ஸர்வஸஹிஷ்ணு: - அனைத்தையும் பொறுப்பவன்" என்பதற்கு ஏற்ப, அனைத்தையும் பொறுப்பதால், அவர்கள் செய்யும் தவறுகளைக் கண்டும் காணாமல் விடுகிறான். "அர்ச்சக பராதீநாகிலாத்ம ஸ்திதி: – அர்ச்சகர்களுடைய வசப்பட்டு நிற்கிறான்" என்பதற்கு ஏற்ப, அர்ச்சகர்களுக்கு வசப்பட்டவனாக நீராடிக் கொள்ளுதல் மற்றும் உணவை ஏற்றல் என்பது போன்ற அனைத்துவிதமான செயல்களையும் செய்தபடி எழுந்தருளியுள்ளான். இதுவே அர்ச்சாவதார நிலையாகும். "அர்ச்சா பூஜா ப்ரதிமயோ: - அர்ச்சை என்பது பூஜை மற்றும் விக்ரஹம் ஆகியவற்றைக் குறிக்கும்" என்பதால், அர்ச்சையானது விக்ரஹ ரூபமாகிறது.

201. ருசி ஜநகத்வமும், சுபாச்ரயத்வமும், அசேஷ லோக சரண்யத்வமும், அநுபாவ்யத்வமுமெல்லாம் அர்ச்சாவதாரத்திலே பரிபூர்ணம்.

**அவதாரிகை -** இவ்வர்ச்சாவதாரத்தினுடைய ருசி ஜநகத்வாதி குண பூர்த்தியையருளிச்செய்கிறார் (ருசி ஜநகத்வமும்) என்று தொடங்கி.

**விளக்கம் -** அர்ச்சாவதாரமானது ருசியை ஏற்படுத்துதல் என்பது போன்று குணங்களைக் கொண்டுள்ளதை அடுத்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, சாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணாதே விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப் போரும் சேதநருக்குத் தன்னுடைய ரூபௌதார்ய குணங்களாலே வைமுக்க்யத்தை மாற்றித் தன்பக்கலிலே ருசியை ஜநிப்பிக்கையும், ருசி பிறந்தவனந்தரம் தன்னை பஜிக்குமவர்களுக்குக் கண்ணுக்கும் நெஞ்சுக்குமினிதாம்படி சுபாச்ரயமாயிருக்கையும, அவ்வளவன்றிக்கே தன்னையே உபாயமாக ஸ்வீகரிக்குமளவில் குணாகுண நிரூபணம் பண்ணாதே ஸகல லோகங்களிலுள்ளவர்களுக்கும் சரணவரணார்ஹமாயிருக்கையும், உபாயமான மாத்ரமாய் ஒரு தேச விசேஷத்திலே போனால் அநுபாவ்யமாம்படி யிருக்கையன்றிக்கே வைலக்ஷண்யத்தில் வாசியறிந்தவர்களுக்கு “என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே” என்னும்படி அநுபாவ்யமாம்படியிருக்கையுமாகிற இவையெல்லாம் அர்ச்சாவதாரத்திலே பரிபூர்ணமாயிருக்குமென்கை. “ஸுரூபாம் ப்ரதிமாம் விஷ்ணோ: ப்ரஸந்நவதநேக்ஷணாம், க்ருத்வாத்மந: ப்ரீதிகரீம் ஸுவர்ண ரஜதாதிபி:, தாமர்ச்சயேத் தாம் ப்ரணமேத் தாம் பஜேத் தாம் விசிந்தயேத், விசத்யபாஸ்த தோஷஸ்து தாமேவ ப்ரஹ்மரூபிணீம்” என்று இவ்வர்ச்சாவதாரத்தில் ஆச்ரிதர் உகந்ததொரு த்ரவயத்தைத் தனக்குத் திருமேனியாகக் கொண்டு அவர்களுக்கு உபாஸ்யனுமாய் ப்ராப்யனுமாயிருக்கு மென்னுமிடம் ஸ்ரீசௌநக பகவானாலும் சொல்லப்பட்டதிறே.

**விளக்கம் -** சாஸ்த்ரங்களில் உள்ள விதிகள் மூலம் திருத்த இயலாமல் சேதநர்கள், தாழ்ந்த உலக விஷயங்களில் ஆழமான ஈடுபாடு கொள்கிறார்கள். அவர்களுக்குத் தகுந்த தனது திருமேனி அழகு மற்றும் தாராள குணம் ஆகியவற்றின் மூலம், அந்த விஷயங்களில் வெறுப்பு ஏற்படும்படியாக மாற்றி, தன்னிடம் ஆழ்ந்த ருசியை ஏற்படுத்துகிறான். அத்தகைய ருசி பிறந்தவுடன் தன்னை வணங்கியபடி உள்ள அவர்களுக்கு, அவர்களுடைய கண்ணிற்கும் நெஞ்சத்திற்கும் இனியவனாக உள்ள விதத்தில் மங்களகரமான இடமாக உள்ளான். அது மட்டும் அல்லாமல், தன்னை மட்டுமே

உபாயமாகக் கொள்பவர்களை ஏற்கும்போது, அவர்களுடைய குணம் மற்றும் குணம் அற்ற தன்மை ஆகியவற்றை ஆராயாமல், அனைத்து லோகத்தில் உள்ளவர்களும் தனது திருவடியைப் பற்றும் விதத்தில் உள்ளான். உபாயமாக உள்ளபோது, பரமபதம் சென்றால் மட்டுமே தன்னை அனுபவிக்க இயலும் என்ற நிலை இல்லாமல், தனது மேன்மையை அறிந்தவர்களுக்கு அமலனாதிபிரான் (10) - என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே - என்பதற்கு ஏற்ப இங்கேயே அனுபவிக்கும்படிச் செய்கிறான். இவை அனைத்தும் அர்ச்சாவதாரத்தில் பரிபூர்ணமாக இருக்கும்படியாக உள்ளான். சௌநக ஸ்ம்ருதியில் - ஸ்வரூபாம் ப்ரதிமாம் விஷ்ணோ: ப்ரஸந்நவதநேக்ஷணாம், க்ருத்வாத்மந: ப்ரீதிகரீம் ஸுவர்ண ரஜதாதிபி:, தாமர்ச்சயேத் தாம் ப்ரணமேத் தாம் பஜேத் தாம் விசிந்தயேத், விசத்யபாஸ்த தோஷஸ்து தாமேவ ப்ரஹ்மரூபிணீம் - தனக்கு எப்போதும் மகிழ்ச்சி அளிக்கும் விஷ்ணுவின் விக்ரஹத்தை தங்கம் மற்றும் வெள்ளி கொண்டு, மலர்ந்த முகம் மற்றும் அழகான கண்கள் கொண்டதாக அமைக்கவேண்டும். அதனையே எப்போதும் வணங்கி பூஜிக்கவேண்டும். அதனையே எப்போதும் சிந்திக்கவேண்டும். இவ்விதம் செய்பவன் தனது அனைத்து தோஷங்களையும் விட்டவனாக ப்ரஹ்மத்தை அடைகிறான் - என்பதாக, இந்த அர்ச்சாவதாரத்தில், தனது அடியார்கள் விரும்பியபடி உள்ள ஒரு பொருளைத் தனக்குத் திருமேனியாகக் கொண்டு, அவர்களால் உபாஸிக்கப்படுபவனாகவும் அடையப்படுபவனாகவும் உள்ளான் என்பதை ஸ்ரீசௌநக பகவானும் அருளிச்செய்தார்.

202. ஸ்வஸ்வாமி பாவத்தை மாறாடிக்கொண்டு அஜ்ஞரைப் போலேயும், அசக்தரைப் போலேயும், அஸ்வதந்த்ரரைப் போலேயும் இருக்கச் செய்தேயும், அபார காருண்ய பரவசனாய்க் கொண்டு ஸர்வாபேக்ஷிதங்களையும் கொடுத்தருளும்.

**அவதாரிகை -** இன்னமும் இவ்வர்ச்சாவதார குணாதிசயத்தை அருளிச் செய்யா நின்று கொண்டு, இப் ப்ரபந்தத்தைத் தலைக் கட்டியருளுகிறார் (ஸ்வஸ்வாமி பாவத்தை) என்று தொடங்கி.

**விளக்கம் -** மேலும், இந்த அர்ச்சாவதாரத்தின் குணங்களுடைய மிகுதியை அருளிச்செய்து, இந்த “தத்வ த்ரயம்” என்ற நூலை நிறைவு செய்கிறார் .

**வ்யாக்யானம் –** அதாவது, “ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமி த்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்” என்கிறபடியே சேதனனுக்கு ஸ்வத்வமும் தனக்கு ஸ்வாமித்வமும் வ்யவஸ்திதமா யிருக்க இவன் தன்னுடைமைகளோடொக்கத் தன்னையும் ஸஹபடிக்கும்படி ஸ்வாமித்வம்

இவன் பக்கலிலும் ஸ்வத்வம் தன் பக்கலிலுமாகத் தன்னிசசையாலே மாறாடிக் கொண்டு "யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்", "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே", "ந தஸ்யேசே கச்சந" என்றும், "ஸர்வேச்வரஸ் ஸர்வத்ருக் ஸர்வவேத்தா ஸமஸ்தசக்தி: பரமேச்வராக்ய:" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாய் நிரங்குச ஸ்வதந்த்ரனா யிருக்கிற தன்னை அமைத்துக கொண்டு, தன் காரியமும் பிறர் காரியமுமறியமாட்டாத அஜ்ஞரைப் போலேயும், தன்னைத் தான் ரக்ஷிக்கமாட்டாத அசக்தரைப் போலேயும், தனக்கென்னவொரு முதன்மையில்லாத அஸ்வதந்த்ரரைப் போலேயும் இராநிற்கச் செய்தேயும், விமுகரையுமுட்பட விடமாட்டாதபடி கரைபுரண்டு செல்லுகிற காருண்ய மிட்ட வழக்காய்க் கொண்டு, நேத்ர புத்ர விதரணம் முதலாக மோக்ஷ தான பர்யந்தமாக யதாதிகாரம் சேதநருடைய ஸகலாபேக்ஷிதங்களையும் கொடுத்தருளுமென்கை.

**விளக்கம்** - அதாவது விஷ்ணுதத்வத்தில் "ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமி த்வம் ப்ரஹ்மணி ஸ்திதம் - உடைமையாக உள்ள தன்மையானது ஜீவாத்மாவிற்கும், ஸ்வாமியாக உள்ள தன்மையானது ப்ரஹ்மத்திற்கும் உள்ளது" என்பதற்கு ஏற்ப, மற்றவர்களின் சொத்தாக உள்ள தன்மை சேதநனுக்கும், ஸர்வேஸ்வரனாகிய தனக்கு எஜமானனாக உள்ள தன்மையும் உறுதியாக உள்ளபோதிலும், ஸர்வேச்வரன் தன்னுடைய அனைத்து உடைமைகள் மற்றும் தன்னையும் சேர்த்து உரைக்கும்படி, ஸ்வாமியாக உள்ள தன்மையானது ஜீவாத்மாவிற்கும், சொத்தாக உள்ள தன்மையானது தன்னிடம் உள்ளதாகவும், தனது விருப்பத்தால் மாற்றி அமைத்து நிற்கிறான். முண். (1-1-9) – ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் - அனைத்தையும் அறிந்தவன், அனைத்தையும் உணர்ந்தவன் - என்றும், ச்வே. (6-8) - பராஸ்ய சக்தி: விவிதைவ ச்ரூயதே – அவனுடைய சக்தியானது பலவிதமாகவும் – என்றும், மஹா. நா. (1-8-10, 11) - ந தஸ்யேசே கச்சந - அவனை யாரும் கட்டுப்படுத்துவதில்லை - என்றும், ஸ்ரீவிபு. (6-5-86) - ஸர்வேச்வர: ஸர்வத்ருக் ஸர்வவேத்தா ஸமஸ்தசக்தி: பரமேச்வராக்ய: – அனைத்தையும் எப்போதும் அனைத்துவிதங்களிலும் ஆள்பவனாகவும், அனைத்து காலத்திலும் அனைத்தையும் ஒரே நேரத்தில் காண்பவனாகவும், அனைத்தும் பொருந்தியவனாகவும், அனைத்து சக்திகளும் கொண்டவனாகவும் உள்ளதால் பரமேச்வரன் என்று கூறப்படுகிறான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்தும் அறிந்தவனாக, அனைத்து சக்தியாக, யாரும் தடுக்காதபடி சுதந்திரமாக உள்ள தன்னை, இவ்விதம் மாற்றி அமைத்துக்கொண்டு, தனது செயல் மற்றும் அடுத்தவர் செயல் என எதனையும் அறியாதவன் போன்றும், தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள சக்தி இல்லாதவன் போன்றும், தனக்கென்று எந்த ஒரு

முக்கியத்வமும் இல்லாத சுதந்திரமற்றவன் போன்றும் நிற்கிறான். ஆனால், தன்னிடம் வெறுப்பைக் காண்பிப்பவர்களிடமும் கூட, அவர்கள் விடாமல், தனது கருணையானது அவர்களிடம் கரைபுரண்டு ஓடும்படிச் செய்கிறான். கண்ணை அளித்தல், புத்திரப்பேறு அளித்தல், செல்வம் கொடுத்தல் என்பது தொடங்கி, மோக்ஷம் முடிய உள்ள அனைத்தையும் அந்தந்த அதிகாரிகளுக்கு ஏற்றபடி, சேதநர்களுடைய அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றுகிறான்.

**வ்யாக்யானம்** – “அர்ச்சாவதாரஸ் ஸர்வேஷாம் பாந்தவோ பக்தவத்ஸல:, ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் மயி ச ஸ்திதம்” என்று அர்ச்சாவதாரமானது ஸர்வர்க்கும் பாந்தவமாய் பக்தவத்ஸலமாயிருக்கும். ஸ்வத்வமானது ஆத்மாவின் பக்கலிலும், ஸ்வாமித்வமானது என் பக்கலிலும் வ்யவஸ்திதமாயிருக்குமென்றும்; “இதி வ்யவஸ்திதே சாபி மமாயம் கேசவஸ் த்விதி, மமாயம் ராம இத்யேவ தேவ: பரசுலாஞ்சந:” என்றபடி சேஷித்வம் வ்யவஸ்திதமாயிருக்கச் செய்தேயும் என்னுடைய கேசவனென்றும், பரசுவை அடையாளமாகவுடைய தேவனான ராமன் என்னுடையவனென்றும்; “மமாயம் வாமநோ நாம நாரஸிம்ஹாக்ருதி வராஹவேஷோ பகவாந் நரோ நாராயணஸ் ததா” என்று என்னுடையவன் இந்த வாமனனானவன், ப்ரபுவான நரஸிம்ஹ ரூபியானவன், வராஹ வேஷத்தையுடைய பகவான், அப்படியே நரநாராயணன் என்றும்; “ததா க்ருஷ்ணச்ச ராமச்ச மமாயமிதி நிர்திசேத், மத்க்ராமவாஸீ பகவாந் மமைவேதி ச தீர் பவேத்” என்னும்படியே க்ருஷ்ணனும் ராமனும் என்னுடையவெனென்றுஞ் சொல்லா நிற்கும். என்னுடைய க்ராமத்திலிருக்கிற பகவான் என்னுடையவனென்றும் மமத்வ புத்தியுண்டாகா நிறகும்.

**விளக்கம்** - ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதை – அர்ச்சாவதாரஸ் ஸர்வேஷாம் பாந்தவோ பக்தவத்ஸல:, ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் மயி ச ஸ்திதம் - அர்ச்சாவதாரமானது அனைத்து பக்தர்களுக்கும் வாத்ஸல்யத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. ஆத்மாவிடம் உடைமை என்ற தன்மையும், என்னிடம் எஜமானனாக உள்ள தன்னையும் இருக்கிறது - என்பதற்கு ஏற்ப, அர்ச்சாவதாரமானது அனைவருக்கும் உறவாக, வாத்ஸல்யத்தை பக்தர்களிடம் கொண்டதாக உள்ளதாகும். சொத்தாக உள்ள தன்மை ஆத்மாவிடமும், சொத்தை உடையவனாக இருக்கும் தன்மை என்னிடமும் நிச்சயமாக இருக்கும் என்றும் எண்ண வைக்கும். ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதை - இதி வ்யவஸ்திதே சாபி மமாயம் கேசவஸ் த்விதி, மமாயம் ராம இத்யேவ தேவ: பரசுலாஞ்சந: - இவ்விதம் சொத்தாக இருத்தல் மற்றும் சொத்தை உடையவனாக இருத்தல் என்ற

வேறுபாடு உள்ளபோதிலும், கேசவன் என்ற சொத்து, கோடாலி ஏந்திய பரசுராமன் என்ற சொத்து - என்பதற்கு ஏற்ப எஜமானனாக உள்ள தன்மை பகவானிடம் நிலையாக உள்ளபோதிலும், “என்னுடைய கேசவன்” என்றும், “கோடாலியை அடையாளமாகக் கொண்ட தேவனாகிய பரசுராமன் என்னுடையவன்” என்றும் உரிமை கொண்டாட வைப்பதாகும். ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதை – மமாயம் வாமநோ நாம நாரஸிம்ஹாக்ருதி வராஹவேஷோ பகவாந் நரோ நாராயணஸ் ததா - வாமனன், ப்ரபுவாகிய நரஸிம்ஹமூர்த்தி, வராக ரூபம் கொண்டவன், அது போன்றே நரநாராயணன் – என்று, “இந்த வாமநன், ப்ரபுவான நரஸிம்ஹ ரூபம் கொண்டவன், வராஹ வேஷம் பூண்ட பகவான், அது போன்றே நரநாராயணன் என்னுடையவர்கள்” என்னும் உரிமை கொண்டாட வைப்பதாகும். ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதை - ததா க்ருஷ்ணச்ச ராமச்ச மமாயமிதி நிர்திசேத், மத்க்ராமவாஸீ பகவாந் மமைவேதி ச தீர் பவேத் - அது போன்றே க்ருஷ்ணனும், இராமனும் என்னுடையவர்கள் என்று கூறுவர், எனது ஊரில் உள்ள பகவான் என்னுடையவன் என்ற எண்ணம் ஏற்படும் – என்பதற்கு ஏற்ப “க்ருஷ்ணனும் இராமனும் என்னுடையவர்கள்” என்றும், “எனது கிராமத்தில் உள்ள பகவான் என்னுடையவன்” என்பதான “என்னுடையது” என்ற புத்தி ஏற்படும்.

**வ்யாக்யானம்** – “சிந்தயேச்ச ஜகந்நாதம் ஸ்வாமிநம் பரமார்த்தத:, அசக்தமஸ்வதந்தரஞ்ச ரக்ஷ்யஞ்சாபி ஜநார்தநம்” என்று பரமார்த்தத்தால் ஜகந்நாதனாய், ஸ்வாமியான ஜநார்த்தநனை அசக்தனாகவும், அஸ்வதந்தரனாகவும், ரக்ஷ்யபூதனாகவும் சிந்திப்பதுஞ் செய்யா நிற்கும். “ததிச்சயா மஹாதேஜா புங்க்தே வை பக்தவத்ஸல:, ஸ்நாநம் பாநம் ததா யாத்ராம் குருதே வை ஜகத்பதி” என்று பெரிய தேஜஸ்ஸையுடைய ஜகத்பதியானவன் பக்தனுக்கு வத்ஸலனாய்க் கொண்டு, அவன் இச்சித்தபோது அமுது செய்யா நிற்கும், அப்படியே ஸ்நானத்தையும் பானத்தையும் யாத்ரையையும் பண்ணா நிற்குமென்றும்;

**விளக்கம்** - ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதை – சிந்தயேச்ச ஜகந்நாதம் ஸ்வாமிநம் பரமார்த்தத:, அசக்தம் அஸ்வதந்தரம் ச ரக்ஷ்யஞ்சாபி ஜநார்தநம் – இயல்பாகவே ப்ரபுவாக, இந்த ஜகத்திற்கு நாதனாக, துன்பத்தை விலக்குபவனாக உள்ள அவனை சக்தியற்றவனாகவும், மற்றவர்கள் வசப்பட்டவனாகவும், அனைவரையும் காப்பாற்றத்தக்கவனாகவும் எண்ண வைக்கும் – என்பதற்கு ஏற்ப உண்மையாகவே உலகின் நாதனாக உள்ளவனும், எஜமானனும், துன்பத்தைப் போக்குபவனும் ஆகிய

அவனை சக்தி அற்றவன், மற்றவர்கள் வசப்பட்டவன், நம்மைப் பாதுகாப்பதற்கு ஏற்றவன் என்று எண்ண வைக்கும். ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதை – தத் இச்சயா மஹாதேஜா புங்க்தே வை பக்தவத்ஸல:, ஸ்நாநம் பாநம் ததா யாத்ராம் குருதே வை ஜகத்பதி - மிகுந்த தேஜஸ் கொண்டவனும், பக்தர்களிடம் வாத்ஸல்யம் கொண்டவனும், ஜகத்தின் பதியாக உள்ளவனும் ஆகிய பகவான், பக்தனுடைய விருப்பத்தால் உணவு ஏற்றல், நீராடுதல், நீர் பருகுதல், யாத்திரை செய்தல் ஆகியவற்றைச் செய்கிறான் - என்பதற்கு ஏற்ப, மிகுந்த தேஜஸ் கொண்ட ஜகத்பதியான அவன் பக்தர்களுக்கு வாத்ஸல்யத்தைக் காண்பித்தபடி, அவன் விருப்பத்திற்கு ஏற்ப உணவு உட்கொண்டு, நீராடி, பானம் பருகி, யாத்திரையும் செய்கிறான் என்பதாக அர்ச்சாவதாரம் உள்ளது.

**வ்யாக்யானம் -** "ஸ்வதந்த்ரஸ் ஸ ஜகந்நாதோபி அஸ்வதந்த்ரோ யதா ததா ஸர்வ சக்திர் ஜகத்தாதாபி அசக்த இவ சேஷ்ட தே" என்று ஸ்வதந்த்ரனாய் ஜகந்நாதனாயிருக்கச் செய்தேயும், அவன் யாதொருபடி அஸ்வதந்த்ரன் அப்படியாகா நிற்கும்; ஸர்வசக்தியாய், ஜகத்துக்கு ஸ்ரஷ்டாவாயிருக்கச் செய்தேயும், அசக்தரைப் போலே சேஷ்டியா நிற்குமென்றும், "ஸர்வாந் காமாந் ததத் ஸ்வாம்யபி அசக்த இவ லக்ஷ்யதே, அபராதாநபிஜ்ஞஸ் ஸந் ஸதைவ குருதே தயாம்" என்று, எல்லா காமங்களையுங் கொடா நின்று, ஸ்வாமியாயிரா நிற்கச் செய்தேயும், அசக்தரைப் போலே காணப்படா நிற்கும்.

**விளக்கம் -** ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதை - ஸ்வதந்த்ரஸ் ஸ ஜகந்நாதோபி அஸ்வதந்த்ரோ யதா ததா ஸர்வ சக்திர் ஜகத்தாதாபி அசக்த இவ சேஷ்ட தே - அந்த ஜகந்நாதன் ஸ்வதந்த்ரமானவன் என்றாலும், பக்தர்கள் விஷயத்தில் ஸ்வதந்த்ரம் இல்லாதவனாக உள்ளதைப் போன்று, அனைத்து சக்திகளையும் கொண்ட அர்ச்சாவதார எம்பெருமானும் சக்தியற்றவனாக நடப்பான் - என்பதற்கு ஏற்ப, ஸ்வதந்த்ரனாகவும் இந்த ஜகத்தின் நாதனாகவும் உள்ளபோதிலும், அவன் எவ்விதம் ஸ்வதந்த்ரம் அற்றவன் போன்று உள்ளானோ; அனைத்து சக்திகளையும் கொண்டவனாக, இந்த ஜகத்தைப் படைத்தவனாக உள்ளபோதிலும், சக்தியற்றவன் போன்று உள்ளானோ, அது போன்ற அர்ச்சையும் உள்ளது.

**வ்யாக்யானம் -** அபராதங்களில் அறிவிலனாகா நின்று கொண்டு எப்போதும் தயையைப் பண்ணா நிற்குமென்றும்; "அர்ச்சாவதார விஷயே மயாபி உத்தேசதஸ் ததா, உக்தா குணா ந சக்யந்தே வக்தும் வர்ஷ சதைரபி" என்று, அர்ச்சாவதார விஷயத்தில் என்னாலும்

சுருங்கச் சொல்லப்பட்டவத்தனை, குணங்களானவை நூறு வர்ஷங் கூடினாலும் சொல்ல சக்யங்களல்லவென்றும்; “ருதே ச மத் ப்ரஸாதாத் வா ஸ்வதோ ஜ்ஞாநாகமேந வா” என்று என்னுடைய ப்ரஸாதமொழிந்தாலும் ஸ்வதஸ் ஸித்தமான ஜ்ஞானமில்லாதபோதும் சொல்லமுடியாதென்றும்; “ஏவம் பஞ்சப்ரகாரோஹம் ஆத்மநாம் பத்தாம் அத:, பூர்வஸ்மாதபி பூர்வஸ்மாத் ஜ்யாயாம்ச சைவோத்தரோத்தர:” என்றிப்படி பர வ்யூஹாதி பஞ்சப்ரகாரனான நான், அத:பதிக்கிற ஆத்மாக்களுக்குப் பூர்வ பூர்வ ப்ரகாரங்களிற் காட்டில் உத்தரோத்தர ப்ரகாரத்தில் ஸௌலப்யத்தாலே ச்ரேஷ்டனாயிருப்பேனென்றும்; “ஸௌலப்யதோ ஜகத் ஸ்வாமீ ஸுலபோ ஹ்யுத்தரோத்தர:” என்று, ஜகத் ஸ்வாமியான நான் ஸௌலப்யத்தாலே மேலே மேலே ஸுலபனாயிருப்பனிறேயென்றும், “ஸர்வாதிசாயி ஷாட்குண்யம் ஸம்ஸ்திதம் மந்தர பிம்பயோ:, மந்த்ரே வாச்யாத்மநா நித்யம் பிம்பே து க்ருபயா ஸ்திதம்” என்று ஸர்வத்தையும் அதிசயிப்பதான ஷாட்குண்ய ரூபமானது, மந்த்ர பிம்பங்களிலே நிற்குமென்றும், மந்த்ரத்திலே வாச்யாத்மநா நிற்கும், பிம்பத்திலே க்ருபையாலே நிற்குமென்றும், இப்படி அர்ச்சாவதாரத்தினுடைய குணாதிக்யம் விஷ்வகஸேந ஸம்ஹிதையிலே ஸர்வேச்வரன் தன்னாலே அருளிச செய்யப்பட்டதிறே.

**விளக்கம் -** மேலும் அடியார்களுடைய அபராதங்கள் குறித்து அறியாதவன் போன்று எப்போதும் தயை செய்தபடியே அர்ச்சாவதாரம் உள்ளது. ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதை – அர்ச்சாவதார விஷயே மயாபி உத்தேசதஸ் ததா, உக்தா குணா ந சக்யந்தே வக்தும் வர்ஷ சதைரபி - அர்ச்சாவதாரம் குறித்து என்னால் இவ்விதமாகக் கூறப்பட்டது. இது போன்று நூறு வருடங்கள் கூறினாலும் அர்ச்சை குறித்து முழுவதும் கூறி முடிக்கும் சக்தி இல்லை - என்பதற்கு ஏற்ப, அர்ச்சாவதாரம் குறித்து என்னால் சுருக்கமாக உரைக்கப்பட்டது, அர்ச்சையின் குணங்கள் குறித்து நூறு வருடங்கள் உரைத்தாலும் கூறி முடிக்க இயலாது என்பதாக அர்ச்சை உள்ளது. ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதை – ருதே ச மத் ப்ரஸாதாத் வா ஸ்வதோ ஜ்ஞாநாகமேந வா - எனது கருணை இல்லை என்றாலும் இயல்பாகவே உள்ள ஞானத்தை விட்டு - என்பதற்கு ஏற்ப, எனது அருள் இல்லாது போனாலும் இயல்பாகவே ஏற்படும் ஞானம் இல்லாதபோது, அர்ச்சை குறித்து உரைக்க இயலாது. ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதை – ஏவம் பஞ்சப்ரகாரோஹம் ஆத்மநாம் பத்தாம் அத:, பூர்வஸ்மாதபி பூர்வஸ்மாத் ஜ்யாயாம்ச சைவோத்தரோத்தர: – இவ்விதம் ஐந்து நிலைகளில் உள்ள நான், பிறவி என்பதான ஸம்ஸாரத்தில் விழும் ஆத்மாக்களுக்கு, முன்னர் முன்னர் உள்ள நிலைகளைக் காட்டிலும், அடுத்த அடுத்த நிலைகளில் மேன்மேலும் சிறப்பாக உள்ளவன் - என்பதற்கு ஏற்ப, பரம் வ்யூஹம் என்பதான ஐந்து விதங்களில் உள்ள நான், ஸம்ஸாரத்தில்

விழுந்தபடி உள்ள ஆத்மாக்களுக்கு, முன்பு முன்பு உள்ள நிலைகளைக் காட்டிலும், அடுத்து அடுத்து வருகின்ற நிலைகளில் ஸௌலப்யத்தால் உயர்ந்து உயர்ந்து நிற்பேன் என்பதாக அர்ச்சை உயர்ந்து உள்ளது.

**வ்யாக்யானம்** – "ஆஸ்தாம் தே குணராசிவத் குண பரீவாஹ ஆத்மாநம் ஜந்மநாம் ஸங்க்யா பௌம நிகேத நேஷு அபி குடீ குஞ்சேஷு ரங்கேச்வர! அர்ச்ச்யஸ் ஸர்வஸஹிஷ்ணு: அர்ச்சக பராதீந அகில ஆத்ம ஸ்திதி: ப்ரீணீஷே ஹ்ருதயாலுபி: தவ ததச் சீலாத் ஜடீபூயதே" என்றும் அவதாரங்களை யருளிச்செய்தவனந்தரத்திலே அர்ச்சாவதார வைபவத்தை ஸங்க்ரஹேண ஒரு ச்லோகத்தாலே யருளிச்செய்தாரிறே பட்டர்.

**விளக்கம் -**ஆஸ்தாம் தே குணராசிவத் குண பரீவாஹ ஆத்மாநம் ஜந்மநாம் ஸங்க்யா பௌம நிகேத நேஷு அபி குடீ குஞ்சேஷு ரங்கேச்வர! அர்ச்ச்யஸ் ஸர்வஸஹிஷ்ணு: அர்ச்சக பராதீந அகில ஆத்ம ஸ்திதி: ப்ரீணீஷே ஹ்ருதயாலுபி: தவ ததச் சீலாத் ஜடீபூயதே - திருவரங்கனே! உன்னுடைய குணங்களின் எண்ணிக்கை எல்லையற்று உள்ளது. அந்தக் குணங்களை வெளிப்படுத்தும் விதமாக உள்ள உனது திருஅவதாரங்களின் எண்ணிக்கையும் எல்லையற்று உள்ளது. இவை ஒரு புறம் இருக்கட்டும் (இவற்றை நான் பெரிதாக எண்ணவில்லை). ஆனால் – இந்தப் பூமியில் உள்ள கோயில்கள், வீடுகள், ஆச்ரமங்கள் ஆகியவற்றில் ஆராதனை செய்யும்படியான அர்ச்சா விக்ரஹமாக, அனைத்தையும் பொறுத்துக் கொள்பவனாக, அர்ச்சகரால் ஸமர்பிக்கப்படும் அனைத்து நிலைகளையும் ஏற்றுக் கொள்பவனாக மகிழ்வுடன் உள்ளாயே (இதுவல்லவா சிறப்பு)! இப்படியாக உள்ள உனது சீல குணத்தில் ஈடுபடாதவர்களே இல்லை, அனைவரும் மயங்குகின்றனர் – என்று அனைத்து அவதாரங்களையும் அருளிச்செய்த பின்னர், அர்ச்சாவதாரத்தின் வைபவத்தை சுருக்கமாக ஒரு ச்லோகத்தில் ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - ஆக, ஈச்வரனுடைய ஸ்வரூப வைலக்ஷண்யத்தையும் அந்த ஸ்வரூபத்தையும் நிறம் பெறுத்தும் குண வைலக்ஷண்யத்தையும், அக்குணங்களடியாக அவன் பண்ணும் ஸ்ருஷ்டியாதி வ்யாபாரங்களையும், அப்படி காரண பூதனானவவனுடைய ஸர்வ பல ப்ரதத்வத்தையும் காரணத்வாத்யுபயோகியான விலக்ஷண விக்ரஹ யோகத்தையும், அந்த விக்ரஹ வைலக்ஷண்யாநுரூபமான லக்ஷ்மீ பூமி நீளா நாயகத்வத்தையும், அந்த விக்ரஹயோக ப்ரயுக்தமான பரத்வாதி பஞ்ச ப்ரகாரத்வத்தையும அருளிச் செய்து ஈச்வர தத்வத்தை நிகமித்தாராயிற்று.

**விளக்கம் -** ஆகவே ஈச்வரனுடைய ஸ்வரூப மேன்மையையும், அந்த ஸ்வரூபத்தையும் உயர்த்தியாக்கும் குணஙளின் மேன்மையையும், அந்தக் குணங்களின் காரணமாக அவன் செய்யும் ஸ்ருஷ்டி போன்ற செயல்களையும், இவ்விதம் அனைத்திற்கும் கரணமாக உள்ள அவனுடைய அனைத்து பலன்களையும் அளிக்கும் இயல்பையும், அந்தக் காரணத்தால் உபயோகப்படுகின்ற மேன்மையான திருமேனியின் சேர்க்கையையும், அந்தத் திருமேனியின் மேன்மைக்கு ஏற்றபடியான ரூபம் கொண்ட மஹாலக்ஷ்மி, பூதேவி, நீளாதேவி ஆகியோருடைய தன்மைகளையும், அந்தந்த திருமேனியுடன் சேர்தல் என்பதால் உண்டாகின்ற பரம் தொடக்கமான ஐந்து விதங்களையும் அருளிச்செய்தார். இப்படியாக ஈச்வர தத்த்வம் குறித்து உரைத்து முடித்தார்.

## ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த
## தத்வத்ரயத்தில்
## ஈச்வர ப்ரகரணம் ஸம்பூர்ணம்

# ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த
# தத்வ த்ரயம் ஸம்பூர்ணம்

திருவரங்கச்செல்வனார் திருவடிகளே தஞ்சம்

தஞ்சம் அடைந்த நம் இராமாநுசன் திருவடிகளே தஞ்சம்

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்